
சந்திரவதனா
1
எஸ்.பாலசுப்பிரமணியன்

சந்திரவதனா

ஒன்றாம் பாகம்

எஸ். பாலசுப்பிரமணியன்

அருந்ததி நிலையம்
19, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்,
சென்னை – 600 017.

சந்திரவதனா

சந்திரவதனாவைச் சந்திப்பதற்கு முன்...

தேவி இதழின் ஆசிரியர் அவர்கள் அடுத்த வரலாற்றுத் தொடர் பற்றி உரையாடுவதற்காகத் தனது இல்லத்திற்கு வருமாறு என்னை அழைத்திருந்தார்.

எண்ணற்ற வாசகர்களின் ஏகோபித்த பாராட்டு களைப் பெற்றிருந்த 'மோக மலர்', 'பொன் அந்தி' ஆகிய தொடர்களை விட இன்னும் அற்புதமாக அடுத்த தொடர் அமைய வேண்டும் என்ற ஆர்வத்தின் காரண மாக, தமிழக வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி இருவரும் விவாதித்தோம்.

முடிவாக பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மதுரை, தஞ்சை ஆகியவற்றைத் தலைநகர்களாகக் கொண்டிருந்த இரண்டு வல்லரசுகள், ஒரு பெண்ணிற்காக மோதிக் கொண்ட வரலாற்று நிகழ்ச்சி ஒன்று எங்கள் இருவரையும் ஈர்த்தது.

காதலுக்காக களம் புகுந்த கதையினைப் பாடாத காவியங்கள் உலகில் எந்த நாட்டிலும் இல்லை. அழகான ஒரு பெண்ணின் அங்கயற் கண்ணில் ஏற்பட்ட அசைவிற் காக, அடித்தளமே ஆட்டம் கண்டுபோன நாடுகள்தான் எத்தனை! உண்மைக் காதலை ஒத்துக்கொள்ளாமல் வறட்டுப் பிடிவாதத்திற்காக முட்டி, மோதி, போரில் சிக்கி, சிதறி, சின்னாபின்னமாகிப் போன சிற்றரசுகள் தான் எத்தனை, எத்தனை!

அப்படிப்பட்ட காதல் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதுதான் 'சந்திரவதனா'!

'சந்திரவதனா' பற்றிய சரித்திர குறிப்புகள் சற்று மேலோட்டமாக கிடைத்திருந்ததால், அதன் அடித்தளம் வரை சென்று ஆணிவேரைத் தொட்டுப் பார்க்க முயன்றேன்.

முதலில் கதை நடந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்த்து வரும்படி ஆசிரியர் அவர்கள் ஏற்பாடு செய்து உதவினார்.

மதுரைக்குச் சென்று சம்பந்தப்பட்ட இடங்களைப் பார்த்துவிட்டு, பிரபல அரசியல் தலைவர் மதுரை பழ. நெடுமாறன் அவர்களின் தந்தையும், தமிழறிஞருமான மதிப்பிற்குரிய திரு. பழனியப்பபிள்ளை அவர்களைச் சந்தித்துப் பேசினேன். காலஞ்சென்ற தமிழ்ப் பேரறிஞர் திரு. கார்மேகக்கோனார் அவர்களின் வாரிசுகளிடமிருந்து சில குறிப்புகள் கிடைக்குமா என்று முயன்று பார்த்தேன்

தஞ்சைக்கு அருகில் உள்ள பட்டீசுவரத்தில் இந்தக் கதையில் வர இருக்கும் ஒரு முக்கியமான பாத்திரத்தின் உருவச்சிலை இருப்பதை அறிந்து அங்கு சென்று பார்த்தேன். வல்லத்தில் மிச்சமிருக்கும் கோட்டையின் இடிபாடுகளையும் நேரில் சென்று பார்த்து மனம் உடைந்தேன்!

தஞ்சையில் 'சந்திரவதனா' சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரில் அழைத்துச் சென்றது மட்டுமின்றி. எனக்குத் தேவைப்படும் பல குறிப்புகளையும் தந்து உதவியவர் பிரபல கல்வெட்டுக் கலைஞர், தமிழக வரலாற்று அறிஞர், கரந்தையிலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் தமிழியல் புலத்திலும் பேராசிரியராகப் பணியாற்றியவரும், கண்ணகி கோட்டம்,

பூம்புகார் ஆகியவற்றை உலகுக்கு முதன் முதலாக ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காட்டியவருமான கணியனார் திரு. சி. கோவிந்தராசனார் அவர்கள்தான்.

சென்று வந்த பிறகு ஆசிரியரிடம் திரும்பவும் உரையாடினேன். 'சந்திரவதனா'வைத் தன் உயிரோட்டமான ஓவியங்கள் மூலம் வாசகர்களை மெய்மறக்கச் செய்ய இருக்கும் 'ஓவியச் செல்வர்' மணியம் செல்வன் அவர்களுடன் திரும்பவும் அதே இடங்களுக்குச் சென்று பார்த்து வந்தால் என் கற்பனைகளுக்கு அற்புதம் சேர்க்க வகை பிறக்கும் என்று ஆசிரியர் அவர்கள் மனமுவந்து சொன்னார்.

எனவே மணியம் செல்வன் அவர்களுடன் திரும்பவும் அதே இடங்களுக்குச் சென்று பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மறக்க முடியாத அனுபவங்கள்!

மணியம் செல்வன் அவர்களின் கலை ஆர்வத்தினையும், ஒரு சிறிய காதணியின் அமைப்பைப் பார்ப்பதற்காகக் கோபுரத்தில் கஷ்டப்பட்டு ஏறி, கால் கடுக்கப் பார்த்த அவரது அயராத உழைப்பையும் பார்த்து பிரமித்தேன். தலை அலங்காரம், ஆடை அணிகலன்கள், பல்வேறுவிதமான பின்னணிக் காட்சிகள் ஆகியவற்றிற்காக கோயில் சிற்பங்களிலும் அரண்மனைகளிலும் ஏகப்பட்ட புகைப்படங்களைச் சுட்டுத் தள்ளி இருக்கிறார். இவை அனைத்தும் 'சந்திரவதனா'வை மிளிர வைத்து, வாசகர் மனங்களைக் கொள்ளை கொண்டுவிடும்!

அடுத்தபடியாக, 'சந்திரவதனா' முழுமையான அழகுடன் பவனிவரத் தேவைப்படும் வரலாற்று குறிப்புகளைத் தேடும் பணியில் மூழ்கினேன். மதுரை மாவட்ட நூலகம். காந்தி மியூசியம் நூலகம் மட்டுமின்றி, சென்னைப் பல்கலைக்கழக நூலகம், கன்னிமாரா நூலகம், சென்னை ஆவணக்காப்பகம், அரசினர்

கீழ்த்திசை சுவடி நூலகம், இவை தவிர தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதிமகால் நூலகம் இவற்றில் பல நாட்கள் செலவழிக்கும்படி நேர்ந்தது.

மற்ற நூலகங்களில் தேடியும் கிடைக்காத பல அரிய குறிப்புகள், சரசுவதி மகால் நூலகத்தில் எனக்கு கிடைத்தன. இந்த நூலகம் இயங்கும் பாங்கும், அதன் அலுவலர்கள் எனக்கு இன்முகத்தோடு அளித்த உதவி களும் என்னால் மறக்க முடியாத ஒன்று !

தஞ்சையில் இந்த அரும்பணிகளுக்காக சிரமம் பாராது எனக்கு ஒத்துழைப்பு நல்கியது மட்டுமின்றி. தஞ்சை அரண்மனையில் தற்பொழுது இருக்கும் தஞ்சை இளவரசர் உயர்திரு. துளாஜேந்திர ராஜாபோஸ்லே சத்ரபதி அவர்களை நேரில் சந்தித்து உரையாடுவதற்கும் ஏற்பாடு செய்து உதவியவர் 'தேவி' 'மாலைமுரசு' நிருபரான திரு. துளசிராமன் அவர்கள் !

இவை அனைத்தும் கிடைத்த பிறகு வீரம் செறிந்த மென்மையான காதல் கதை ஒன்று எனக்குள் உருவானது. இதில் வர இருக்கும் கதாநாயகியான சந்திரவதனாவின் அழகு பற்றி எத்தனை எத்தனை சரித்திர ஆசிரியர்கள் வியந்து எழுதி இருக்கிறார்கள் !

அழகும் அறிவும் ஒன்று சேர அமைவது வெகு அபூர்வம் ! அப்படிப்பட்ட அபூர்வமான பெண்தான் இந்த 'சந்திரவதனா !' **'Not only (The Princess) was reported to be beautiful in person and at the same time possessed of extraodinary intelligence and good sense'** என்று **J. H. Nelson** குறிப்பிடுகிறார். **(Madura Country-Part III-Page No. 191&192.)**

'(The Princess) Whose beauty of Person and of mind had gained wide renown and a crowd of suitors' என்று **V. Rangachari** என்பவர் **The Indian Antiquary (1917)** என்ற புத்தகத்தில் (பக்.58) குறிப்பிடுகிறார்.

மிகப் பழமையான தெலுங்கு ஓலைச்சுவடிகளில் '(The Princess)... endowed with superior sense and great personal attractions' என்று குறிப்பிட்டுள்ளதாக மொழி பெயர்த்திருக்கின்றனர் (Oriental Historical Monuscripts-Vol II-William Taylor-Page No 191.)

இவை மட்டுமின்றி இந்தக் கதை நிகழ்ந்த காலத்தில் வெனிஸ் நகரத்தில் இருந்து இந்தியாவுக்கு வந்து, பல ஆண்டுகள் பாரத நாடு முழுவதும் சுற்றி தான் நேரில் கண்டவற்றை 'Storia Do Mogor' என்ற உலகப் புகழ் வாழ்ந்த புத்தகத்தில் எழுதியவரான 'Niccolao Manucci' என்பவர் தஞ்சைக்கு வந்திருந்து இளவரசியின் அழகினைப் பற்றி வியந்து தனது நூலில் 'The Prince of Tanjor had a daughter of rare beauty' என்று சொல்கிறார் (Vol III-Page No.99)

இப்படி அனைவராலும் புகழப்பட்ட பேரழகியான சந்திரவதனாவை என் கற்பனையில் உருவாக்கி, உங்கள் கரங்களில் தவழ விட இருக்கின்றேன்.

சந்திரவதனா

1

பொன் அந்தி சாய்ந்து, பூமிப் பந்தின் மீது மயக்கும் மாலைப் பொழுது- மனோகரமான மந்தஹாசத்துடன் தவழ்ந்து கொண்டிருந்தது.

காவிரியின் புனல் பாய்ந்து கரும்பெல்லாம் முத்து விளையும் கனகமணித் தஞ்சை எனப் புகழ் பெற்ற தஞ்சாவூர் மாநகரத்தின் மத்தியில் அமைந்திருந்தது அந்த மிகப் பெரிய அரண்மனை.

விஜயநகர சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்திக்கு மிக நெருங்கிய உறவினனும், அம்மன்னர் பரம்பரையின் வழிவந்தவனும், நாயக்க வம்சத்தைச் சேர்ந்தவனுமான விஜயராகவ நாயக்கன் கொலுவிருந்து கோலோச்சும் பிரமாண்டமான இந்த அரண்மனையின் உயர்ந்த மாடங்கள் மீது. தங்க முலாம் பூசியது போல மஞ்சள் வெயில் தகதகத்துக் கொண்டிருந்தது.

நாயக்கர் காலக் கட்டிடக் கலைக்கே உரிய உயர்ந்த பருமனான தூண்களும், ஓவியங்கள் வரையப் பெற்ற விதானங்களும். கதைச் சிற்பங்களும் நிறைந்த இந்த அரண்மனையின் இந்திரா மந்திர், இராம சௌதம், விஜயபவனம் எனப்படும் பூஜா மஹால் இவற்றைக் கடந்து, கட்டுக்காவல்களுடன் நிறைந்திருந்தது—அரண்மனை மகளிர் தங்கும் அந்தப்புரம்.

விஜயராகவ நாயக்கனின் விதவிதமான மனைவியர், அவர்கள் ஈன்றெடுத்த மகளிர், அவர்களது தோழியர்,

இவர்கள் அனைவருக்கும் குற்றேவல் புரியும் சேடியர் என்று அந்தப்புரத்தின் எந்தப்புறத்தில் பார்த்தாலும் இளம்பெண்கள். இந்தத் தங்க மேனித் தாரகைகளின் அங்கங்களை ஆரத்தழுவி வருவதனால்தானோ என்னவோ, அங்கு கொஞ்சி விளையாடும் தென்றலில் கூட குளிர் அதிகமாகக் கலந்திருந்தது.

வட்ட வடிவமாக அமைந்திருக்கும் வானுயர்ந்த மாடமாளிகைகளின், நட்ட நடுவாக அமைந்திருந்தது நறுமணம் கமழும் நந்தவனம். விண்ணை முட்டும் தேக்கு, தென்னை, பாக்கு மரங்களும், தண்ணிழல் அளிக்கும் வேங்கை, வேம்பு, கோங்கு, பூவரசு மரங்களும், சுகந்த மணம் கமழும் அகில், தேவதாரு போன்ற நெடிதுயர்ந்த மரங்கள் மட்டுமின்றி, நாசிக்கு நறுமணம் சேர்க்கும மல்லிகை, முல்லை, மனோரஞ்சிதம், இருவாட்சியோடு, பூஜைக்குத் தேவைப்படும் புத்தரளி, கொன்றை, சாமந்தி போன்ற மலர்ச் செடிகளும் நிறைந்து எழிலுற அமைக்கப் பட்டிருந்தது.

நந்தவனத்தின் நடுவணாக அமைந்திருந்தது நறுஞ் சுனையுடன் கூடிய தடாகம் ஒன்று. இயற்கையிலேயே இனிய நீரூற்றுடன் கூடிய அந்தத் தடாகத்தில் தாமரை, அல்லி, ஆம்பல் ஆகியவை நிறைந்து காணப்பட்டன. தடாகத்தைச் சுற்றிலும் வெண்பளிங்குக் கற்கள் பதிக்கப் பெற்று தடாகத்துத் தண்ணீர்தான் மேலெழுந்து விட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

அம்புலி அத்தான் வராததால் அல்லி மலர்கள் தங்கள் மொட்டுகளை அவிழ்க்காமல் முடங்கிக் கொண் டிருந்தன. ஆனால் தாமரை மலர்களோ, ஆதவன் இன்னும் வானத்தில் இருந்தும் தங்கள் முகங்களை கூம்பத் தொடங்கி விட்டன.

ஒருவேளை தடாகக் கரையில் இருக்கும் பளிங்குக் கல் மேடையில் அமர்ந்தவாறு அளவளாவிக் கொண்

டிருக்கும் ஆரணங்குகள் இருவரின் முக அழகு தங்களை விட விஞ்சி இருக்கிறதே என்ற ஆத்திரத்தினால் இருக்குமோ என்னவோ ?

வெண்பளிங்கு மேடையின் ஒரு புறத்தில் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் செல்ல மகளும், பட்டத்து ராணி காந்திமதியின் கடைக்குட்டிப் பெண்ணு மான இளவரசி சந்திரவதனாதேவி வீற்றிருந்தாள். பதினாறு வயது நிரம்பப் பெறாத அந்தப் பாவையின் அங்கங்களில் இளமையின் வசந்தம் எழிலுறத் ததும்பிக் கொண்டிருந்தது.

பெயருக்கேற்றபடி முகிலைக் கிழித்து வரும் முழு நிலவை எடுத்து வந்து முகமாக ஆக்கியது போல் ஒளி வீசும். மாசு மருவற்ற இன்னமும் குழந்தையின் சாயை மாறாத வதனம். முகத்தில் இரண்டு மீன்களை ஓட வைத்ததுபோல், காதளவு ஓடிய கரிய பெரிய கயல் விழிகள் பார்த்தவுடன் பிடித்துத் திருகத் தூண்டும் எடுப்பான கூர்மூக்கு. இவை கன்னங்களா ? இல்லை, கனித்த கொய்யாப் பழங்களா ? என்று பிரமிப்பு ஏற்படுத் தும் அழகிய கதுப்புகள், அவள் சிரிக்கும்பொழுது சிறிய நீர்ச்சுழி போல், குழி விழுந்து மறையும்.

தேனூறும் சிவந்த அதரங்களில் கீழுதடு மட்டும் சற்று பருத்து, கோவைப் பழத்தை ஒட்ட வைத்தது போல் காட்சி தரும். வரிசை தவறாமல் கோர்க்கப்பட்ட முல்லைப் பூக்களோ ? இல்லை முத்துப் பரல்களோ என்று வியக்க வைக்கும் பற்கள் தெரிய அவள் சிரிக்கும் சிரிப்பிற்கு இந்த உலகை மட்டுமல்ல, அந்த விண்ணுலகை யும் சேர்த்து விலையாகத் தரலாம்.

வெண்பளிங்குக் கழுத்தின் கீழே நன்றாகப் பழுத்த, இரண்டு பருத்த மாங்கனிகளைத் தன் சேலைக்குள் மறைத்து வைத்திருக்கிறாளோ என்று எண்ணத்

தோன்றும் அழகிய மார்புகள், எழுந்து நடந்தால் யானையின் மத்தகத்தைப் போன்று திமிறி நின்று எதிரே வருபவரை முட்டித் தகர்த்து விடுமோ என்ற பிரமையை எவருக்கும் ஏற்படுத்தும்.

வெண்டைப் பிஞ்சுகளை எடுத்து வந்து செம்பஞ்சுக் குழம்பில் முக்கி அவள் கையில் வைத்திருக்கிறானா? அவற்றை ஒடித்துப் பார்ப்போமா, இல்லை கடித்துப் பார்ப்போமா என்ற எண்ணத்தைத் தூண்டிவிடும் காந்தள் விரல்கள். மெலிந்து, ஒடுங்கிய இடுப்பு.

வீணையின் அடிப்புறத்தைப் போன்று உருண்டு திரண்டு இருந்த அவளது ஏற்றமிகு பின்னழகுகள் அழுந்தும்படி வீற்றிருந்ததற்கு அந்த வெண்பளிங்கு மேடை தவம் செய்திருக்க வேண்டும். மேடையின் கீழே உள்ள தரை மீது எழுந்த புற்களை வருடியவாறு இருக்கும் அவள் கால்களின் அழகு பற்றி மட்டும் ஒரு காவியமே படைக்கலாம்.

இளவரசி சந்திரவதனாவின் எதிரே உட்கார்ந்தவாறு பேசிக் கொண்டிருக்கும் இளம் பெண்ணிற்கு அவளை விட ஒரு சில ஆண்டுகள் வயது அதிகம் இருந்தாலும், இளமையின் பூரிப்பு அவளிடம் ஒருங்கே அமையப் பெற்றிருந்தது. அவள் அழகு— இளவரசியின் அழகுக்கு இணையாகச் சொல்ல முடியாவிட்டாலும், பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும்படியான வசிகரம் அவளிடம் இருந்தது.

அவள் பெயர் மதுரவாணி. தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் மதி அமைச்சரும், சங்கீதத்தில் வில்லவரும், வியாகரணம், தர்க்கம், வேதாந்தம், மீமாம்சம் உள்ளிட்ட சகல சாஸ்திரங்களையும் ஓதி உணர்ந்தவரும், அத்வைத வித்யாச்சார்யா, பரவாக்கிய பிரமாண பாராவாரஜ்ஞ என்பது போன்ற பல விருதுகளைப் பெற்றவருமான கோவிந்த தீட்சிதரின் கடைசி

மகள். பெயரைப் போலவே இனிய குரலும், சங்கீதத்தில் தேர்ச்சியும் பெற்றவள்.

மதுரவாணி இளவரசி சந்திரவதனாவை விட ஒருசில ஆண்டுகள் மூத்தவள் என்றாலும், சிறிய வயது முதலே இருவரும் ஒன்றாகப் பழகி வருவதால் நெருக்கமான தோழிகளைப் போல ஒருவரை ஒருவர் பேச்சில் சீண்டிய வாறு உட்கார்ந்திருந்தனர்.

"மதுரவாணி, இந்த அல்லி மலர்கள் விரிந்திருக்கும் அழகினைப் பார்த்தாயா? நாலைந்து மலர்களைப் பறித்தெடுத்து என் முகத்தோடு அணைத்துக்கொள்ள வேண்டும் போல் தோன்றுகிறது," என்றாள் சந்திர வதனா.

"ம்... இப்பொழுது மலர்களை அணைக்க வேண்டும் என்பாய். இன்னும் சற்று நாட்கள் கழிந்தால் மன்மத னைப் போல் ஒரு ஆடவனை அணைக்கத் துடிப்பாய்'' என்றாள் மதுரவாணி கேலியாய்.

"ச்சீ போடி! உனக்கு எப்பொழுதும் கிண்டல்தான்."

''உன் தமையன் இளவரசர் மன்னார்தாசன் இப் பொழுது எங்கே இருக்கிறார்?"

''சந்திரகிரியில் இருப்பதாக கடந்த மாதம் அங்கி ருந்து வந்த தூதுவன் கூறியதாக என் தந்தை சொன் னார்."

"தஞ்சையில் இருந்து அவர் கிளம்பிச் சென்று பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டதே! இன்னுமா அவர் கல்விப் பயிற்சி முடியவில்லை?"

''எல்லாப் பயிற்சிகளும் முடிந்து விட்டதாம். பெனு கொண்டா, தலைக்கோட்டை, விஜயநகரம் என்று சுற்றிக் கொண்டு கவிதைகளைத் திரட்டிக் கொண்டிருக்

கிறாராம். அது என் தந்தைக்குப் பிடிக்கவில்லை. கூடிய சீக்கிரம் இங்கு வரவழைத்து அரசாங்கப் பொறுப்புகளை அளிக்கப் போவதாகக் கூறினார்.''

''நானும் உன் தமையனாரும் என் தந்தையிடம் அட்சர அப்பியாசம் பயின்றோம். பிறகு வளர்ந்தவுடன் அவருக்குத் தனியாகச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்புறம் அவரைப் பார்க்கவில்லை இப்பொழுது எப்படி இருக்கிறாரோ ?"

"நானே அவரைப் பார்த்துப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இப்பொழுது வந்தால் என்னால் கூட அடையாளம் கண்டுகொள்ள முடியுமோ என்னவோ ?"

"நீண்ட நேரம் உட்கார்ந்ததினால் கால்கள் மரத்துப் போயிருக்கிறது வதனா. வா ! சற்று நேரம் நந்தவனத்திற்குள் உலாவிவிட்டு வரலாம்."

இருவரும் எழுந்து பூந்தோட்டம் வழியாக நடக்கத் தொடங்கினர். நடக்கும் பொழுது இருவர் இடைகளும் அசைந்து நாட்டியமாடின.

''ஏண்டி மதுரவாணி ! உன் தமையனார் வெங்கடேஸ்வர தீட்சிதர் சங்கீதத்தைப் பற்றி விளக்கமாக ஏதோ ஒரு நூல் எழுதி இருக்கிறாராமே ?"

''ஆமாமடி ! அதன் பெயர் சதுர்தண்டிப் பிரகாசிகா. நீ அதைப் படிக்கவில்லையா ?"

''எனக்கு அந்த அளவுக்குக் கல்வி ஞானம் இல்லையே! எனது தந்தை அதை மிகவும் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தார். அப்படி என்ன அந்த நூலில் உன் தமையன் எழுதி இருக்கிறார் ?"

"நமது சங்கீதத்தில் உள்ள இருபத்திரண்டு ஸ்வரங்களைப் பனிரெண்டாகக் குறைத்திருக்கிறார். விளக்கமாகச் சொல்லிக் காட்டவா ?"

''வேண்டாம் வாணி!''

"என் தமையனார் தொகுத்த மேளகர்த்தா ராகம் ஒன்றை இப்பொழுது இசைத்துக் காட்டட்டுமா?"

'வேண்டாமடி! சங்கீதத்தை ரசிக்கும் மனநிலை இல்லை. சோம்பலாக இருக்கிறது," என்று சொல்லியவாறு தனது இரு கைகளையும் உயர்த்திப் பிடித்து சோம்பலை நெட்டி முறித்தாள்.

அப்பொழுது அவளது இரண்டு மார்புகளும் மேலே எழுந்து, பிறகு தாழ்ந்து, ஒருமுறை குலுங்கிச் சிரித்தன. மதுரவாணி அவள் சோம்பல் முறித்த அழகினைச் சற்று ரசித்து, அவள் முக அழகைக் கூர்ந்து பார்த்தபடி நின்றாள்.

"என்னடி வைத்த கண் வாங்காமல் அப்படியே என்னைப் பார்க்கிறாய்?" என்றாள் சந்திரவதனா.

"நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் வதனா? நீ பெண்ணாக மலர்ந்து சில தினங்கள்தான் ஆகியிருக்கின்றன என்று சொன்னால் எவருமே நம்ப மாட்டார்கள் மறுபடியும் இப்படிச் சோம்பல் முறிக்காதே! வானத்தில் இருந்து இந்திராதி தேவர்கள் யாராவது பார்த்தால் உன்னைத் தூக்கிக்கொண்டு போய்விடுவார்கள்."

"மறுபடியும் ஆரம்பித்து விட்டாயா உன் கேலியை!"

''கேலி இல்லையடி! நிஜமாகத்தான் சொல்கிறேன் அற்புதமான உன் அழகுக்கு ஈடாக இந்தத் தஞ்சைத் தரணியில் யாருமே இல்லை. சந்திரகிரியில் அரசர்களும் விஜயநகரப் பேரரசில் கூட உனக்குப் பொருத்தமானவர் யாருமில்லை என்று கேள்விப்பட்டேன் ஆனால் எனக்குத் தெரிந்து வேறோர் இடத்தில் உன் அழகுக்கு ஏற்ற மணாளர் இருக்கிறார்."

"யாரடி அந்த மன்மதன்?" கேலியாகக் கேட்டாள் சந்திரவதனா.

"மதுரை மன்னர் சொக்கநாத நாயக்கன். அவரது அழகையும், வீரத்தையும் பற்றி நமது மக்களே வியந்து சொல்கிறார்கள்."

இதனைக் கேட்டவுடன் சந்திரவதனாவின் முகம் மாறியது. கோபத்தில் சற்றே சிவக்கத் தொடங்கியது.

"தயவு செய்து மதுரை அரசு சம்பந்தப்பட்ட எதையுமே என் காதில் போடாதே வாணி! உனக்குத் தெரியுமே எங்கள் இருவர் குடும்பத்திற்கும் எவ்வளவு காலமாக பகை இருக்கிறது என்று! மதுரை என்ற வார்த்தையைக் கேட்டாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது."

"இப்பொழுது அப்படித்தான் சொல்வாய்! சொக்கநாதன் அழகை நேரில் பார்த்து விட்டால் மயங்கிப் போய்விடுவாய்! சொல்ல முடியாது. அந்தச் சொக்கநாத நாயக்கன்தான் உன்னை இங்கிருந்து கொத்திக் கொண்டு போகப் போகிறாரோ என்னவோ?"

"அது மட்டும் ஒருநாளும் நடக்காது. அவர் எவ்வளவு அழகாக இருந்தால் எனக்கென்ன? அவர் என் காலடியில் விழுந்து கெஞ்சினால் கூட மணக்க சம்மதிக்க மாட்டேன். அந்த மனிதர் இங்கே வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போவது என்பது நடக்கவே நடக்காது. அந்த அளவுக்குத் தஞ்சையின் வீரம் இன்னும் தரம் தாழ்ந்து போகவில்லை. விடடி இந்த வெட்டிப் பேச்சை! எனக்குச் சோம்பல் அதிகமாக இருக்கிறது. வா. சற்று நேரம் பந்து விளையாடலாம்."

இருவரும் நந்தவனத்திற்குள் இருக்கும் பந்து விளையாடும் மைதானத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்கள்.

அதே நேரம்— தஞ்சை இளவரசி சந்திரவதனா தேவியின் எண்ணத்தை முற்றிலும் தகர்ப்பதற்கான ஆரம்ப கட்டங்கள் மதுரை மன்னனான சொக்கநாதநாயக்கனின் அரண்மனையில் நடைபெறத் தொடங்கி விட்டன என்பதை அந்தப் பேதைப் பெண் எப்படி அறிவாள் ?

நான்கு புறமும் எல்லை கட்டி, நடுவில் உள்ள புற்களை அழகாக செதுக்கி விட்டு, மரகதப் பாயினை விரித்து விட்டது போல் தோற்றமளிக்கும் அந்தப்புற மகளிர் பந்து விளையாடும் அந்த மைதானத்திற்குள் இரண்டு மயில்கள் வந்து உலாவுவது போல் சந்திரவதனாவும், மதுரவாணியும் நுழைந்தார்கள்.

சேடிப் பெண் ஒருத்தியிடம் பந்து கொண்டு வருமாறு இளவரசி ஆணையிட்டாள். சற்று நேரத்தில் பட்டு நூலால் பின்னப் பெற்ற பந்து ஒன்று அப்பாவையர்கள் வசம் வந்து சேர்ந்தது.

இன்னும் நான்கு பெண்களை வரச் சொல்லி, ஆறு பெண்களும் உற்சாகமாக பந்து விளையாடத் தொடங்கினார்கள்.

இந்தக் காட்சியினை அருகில் இருக்கும் பெரிய தூண் ஒன்றில் மறைந்தவாறு, ஒரு உருவம் கூர்ந்து பார்க்கத் தொடங்கியது.

2

காலை இளங்கதிரவன் தனது பொற்கிரணங்களை மதுரை மாநகரத்தின் மீது பரவத் தொடங்கினான். இத்தாலிய நாட்டு கட்டடக்கலை சிற்பி ஒருவன் வரைந்து கொடுத்த கட்டட அமைப்புத் திட்ட வரைவுப் படத்தின் படியே பிரமாண்டமாக எழுதப்பட்டதும்,

இந்து— முஸ்லிம்— காத்திக் சிற்ப முறை என்று ஷெனாய் அவர்களாலும், இந்தோசாரசெனிக் சிற்ப முறை என்று நெல்சன் அவர்களாலும் குறிப்பிடப்பட்டதும், பண்டைய கிரீஸ் நாட்டிலுள்ள தீப்ஸ் நகரத்தில் இருக்கும் நினைவுச் சின்னத்திற்கு இணையானது என்று புரோயன்சா பாத்ரியாரால் பாராட்டப் பெற்றதும், நாயக்க மன்னர் களிலேயே மிகவும் புகழ் வாய்ந்த திருமலை நாயக்கரால் சிறப்பாக கட்டி முடிக்கப் பெற்றதுமான திருமலை நாயக்கர் மஹால் எனப்படும் மதுரை மன்னனின் அரண்மனை சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது.

மஞ்சள் வெயில் அரண்மனையினுள் இருக்கும் மிகப் பெரிய தூண்களில் படர்ந்து மாயாஜாலம் பண்ணத் தொடங்கியது. அதனுள் பணிபுரியும் அத்தனை சேவகர் களும் தங்கள் பணிகளை ஏற்க பரபரப்பாக ஓடிவரத் தொடங்கினர்.

அரண்மனையின் முகப்பில் நவபத்கானா வாத்தியம் என்று அழைக்கப்பட்ட பதினெட்டு வாத்தியங்களை இசைக்கும் இசைக்கலைஞர்கள் வழக்கம் போல் காலை வேளையினை அறிவிக்கும் முனைப்பில் தங்கள் வாத்தியங் களை இசைக்கத் தொடங்கினர்.

சற்று நேரத்தில் மன்னனின் மெய்க்காவற் படையைச் சேர்ந்த வீரன் ஒருவன் சேணம் பூட்டப்பட்ட இரண்டு உயர் ஜாதிக் குதிரைகளைக் கொண்டு வந்து அரண்மனை வாசலில் தயாராக நிறுத்தி வைத்தான். அக்குதிரைகள் தங்கள் பிடரிகளைச் சிலிர்த்துக் கொண்டு, வாலைச் சுழற்றி மதர்ப்பாக நின்று கொண்டிருந்தன.

சுமார் ஒரு நாழிகை நேரம் கடந்த பிறகு அரண்மனை யின் உள்ளிருந்து திருமலைநாயக்கனின் பேரனும், மதுரைப் பகுதியின் தற்போதைய மன்னனுமான சொக்க நாத நாயக்கன் வெளிவரத் தொடங்கினான்.

சொக்கநாதனுக்கு சுமார் இருபத்தைந்து வயது இருக்கும். ஆறடி உயரமும், திரண்ட தோள்களும், விரிந்த மார்பும் பொருந்தியவனாக இருந்தான். நல்ல சிவந்த நிறம், ஆவாரம் பூக்களுக்கு மேலே தாமரை மலர்ந்தாற் போல் அழகான கவர்ச்சி நிறைந்த முகம், அளவாக முறுக்கி விடப்பட்ட மீசை. இருண்ட மேகமென கறுத்துக் கிடந்த தலைமுடியைச் சேர்த்து இறுக்கிக் கொண்டை போட்டிருந்தான்.

காதணியில் வைரமும், நெற்றியில் கஸ்தூரித் திலகமும் கதிரவன் ஒளியில் பளபளத்தன. அதிக அலங்காரம் இல்லாத ஆடை இடுப்பில் நீண்ட உடைவாள். காலிலே பாப்பாசு எனப்படும் செருப்பு.

சொக்கநாதன் அருகில் அவனது நண்பனும் படைத் தலைவனுமான வெங்கடகிருஷ்ணப்ப நாயக்கன் உடன் நடந்து வந்து கொண்டிருந்தான். வெங்கடகிருஷ்ணப் பனின் ஆடைகளும் சொக்கநாதன் பாணியிலேயே அமைந்திருந்தன.

சொக்கநாதன் அரண்மனை வாசலில் குதிரைகள் கட்டப்பட்டிருக்கும் இடத்திற்குப் பத்தடி தூரம் இருக்கும் பொழுது, குதிரைகளின் கடிவாளங்களை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கும் மெய்க்காவல் படை வீரனைப் பார்த்துத் தலை ஆட்டினான்.

மறு வினாடி அந்த வீரன் கடிவாளங்களை கீழே போட்டுவிட்டு, கையில் இருந்த சவுக்கால் குதிரைகளின் பின்புறத்தில் ஓங்கி அடித்தான். அடுத்த வினாடி இரண்டு குதிரைகளும் தறிகெட்டு ஓடத் தொடங்கின.

உடனே சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் புயற்காற்றைப் போல் அக்குதிரைகளின் பின்னால் ஓடினர். சற்று நேரத்தில் சொக்கநாதன் தன் குதிரையை நெருங்கி, அதன் சேணத்தைப் பற்றி ஓடும் குதிரை மீது

தாவி ஏறி அதன் கடிவாளத்தினை இறுகப் பிடித்து இழுத்தான்.

மறுவினாடி அந்தப் புரவி தன் ஓட்டத்தை நிறுத்தி முன்னங்கால்களை உயர்த்தி 'ஹிஹிஹி' என்று கனைத்தது அடுத்து— சில வினாடிகள் கழித்து வெங்கட கிருஷ்ணனும் அதே போன்று செய்து முடித்தான்.

"இன்றைக்கும் நான்தான் ஜெயித்தேன் வெங்கட கிருஷ்ணா!" என்றான் சொக்கநாதன், தன் நண்பனைப் பார்த்துக் கேலியாய்.

"என்றைக்கும் நீதான் ஜெயிக்க வேண்டும் சொக்க நாதா!" என்றான் பணிவாக.

இரண்டு குதிரைகளும் வைகை ஆற்றை நோக்கி மிதமான வேகத்தில் செல்லத் தொடங்கின. மாரிக்காலம் சமீபத்தில் முடிவு பெற்றிருந்ததால் வைகை நதியின் நீர் அதிக ஆழமின்றி அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

இருவரது புரவிகளும் ஆற்று நீரில் காலை வைத்தவுடன் இருவரும் அக்குதிரைகளின் வயிற்றில் உதைக்க, அவை நீரைக் கிழித்துக் கொண்டு 'சளார் சளார்' என்று நாலாபுறமும் தண்ணீர் தெறிக்க கணவேகத்தில் மறுகரைக்கு வந்து சேர்ந்தன

வையை வட ஆற்றின் கரையில் பிரம்மாண்டமாக எழுப்பபட்டிருந்த மாளிகையை நோக்கி செலுத்த ஆரம்பித்தார்கள்.

திருமலைநாயக்கன் காலத்தில் யானை, புலி, கரடி முதலிய விலங்குகளையும், மற்போர் வீரர்களையும் பொருத விட்டு, அக்காட்சியினைக் காண்பதற்காகக் கட்டப்பட்டதும், கோடைக்கால விடுதி என்ற பெயரில் 'தமுகமு' என்று தெலுங்கில் வழங்கப்பட்டு, பின்னர்

'தமுக்கம்' என்று மாறியதுமான அந்த மாபெரும் கட்டடம் தற்பொழுது போர்ப் பயிற்சிக் கூடமாக சொக்கநாதனால் மாற்றப்பட்டிருந்தது.

இருவரது புரவிகளும் பாய்ந்து வரும் வேகத்தைப் பார்த்து, தமுக்கத்தின் வாயிற்காப்போர் வருவது அரசன் என்று உணர்ந்து, அவசரமாகக் கதவுகளைத் திறந்து விட்டனர். வாயிலைக் கடந்து உள்ளிருக்கும் மைதானத்தில் குதிரைகள் நுழைந்ததும் இருவரும் ஓடும் குதிரையில் இருந்து நழுவி இறங்கினர்

மன்னன் இறங்கி விட்டான் என்பதை உணர்ந்த புரவி சற்று தூரம் ஓடி, வளைத்து திரும்பி, மறுபடியும் சொக்கநாதன் அருகில் வந்து நின்று, அவன் தோளோடு தன் முகத்தை வைத்து உரசியது. சொக்கநாதன் அதன் பிடரியைத் தட்டிக் கொடுத்தான்.

மாளிகையின் முன்புறம் இருந்த பரந்த மைதானத்தில் ஆங்காங்கு போர்ப் பயிற்சி செய்து கொண்டிருந்த வீரர்கள், தங்கள் ஆயுதங்களைத் தாழ்த்தி மன்னனுக்கு வணக்கம் கூறினர். அவர்களின் நடுவே வயதாகிவிட்ட போதிலும் கம்பீரம் குறையாச் சிங்கம் போல் நின்றிருந்த போர்க்கலையில் வித்தகரும், சொக்கநாதனின் ஆசிரியருமான நரசப்ப நாயக்கர் நின்று கொண்டிருந்தார்.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் அவரது கால்களைத் தொட்டு வணங்கினர்.

"சொக்கநாதா, உனது பயிற்சியின் நிறைவுநாள் இதுவென்று தீர்மானித்திருக்கிறேன். நீ கற்ற அனைத்து வித்தைகளையும் இன்று நீ செய்து காட்ட வேண்டும். தயார் நிலையில் இருக்கிறாயா?" என்றார் கம்பீரமான குரலில்.

''தங்கள் உத்தரவுப்படியே!" என்றான் பணிவாக.

முதலில் மல்யுத்தம். அடுத்து வாட்போர், தொடர்ந்து சிலம்பம் அனைத்திலும் வெற்றி வாகை சூடினான்.

மைதானத்தின் நடுவே ஓர் ஆசனத்தில் எட்டு குறுவாட்கள் வைக்கப்பட்டன. அதனைச் சுற்றி எண் திசைகளிலும் எட்டு பொம்மைகள் நிறுத்தி வைக்கப் பட்டன.

குறுவாட்கள் வைக்கப்பட்டிருந்த ஆசனத்தின் அருகே சொக்கநாதன் வந்து நின்றான். குருநாதர் தன்னருகே இருந்த மணியினை 'டணார்' என்று அடித்தார்.

மறு வினாடி சொக்கநாதனின் இரு கரங்களும் என்ன கரங்கள் எனச் செயல்படத் தொடங்கின. குறுவாளை எடுத்ததும் தெரியவில்லை. குறிபார்த்ததும் தெரிய வில்லை. வீசியதும் தெரியவில்லை. கண் இமைக்கும் நேரத்திற்குள் எட்டுத் திசைகளிலும் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த, எட்டு பொம்மைகளின் நெஞ்சிலும் குறுவாட்கள் ஆழமாகப் பாய்ந்திருந்தன. எல்லாரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அடுத்து மாளிகையின் மேன் மாடத்தில் வாழைக் குலை ஒன்று தொங்க விடப்பட்டது. அதற்கு சற்று கீழே தலைகீழ் 'ப' வடிவத்தில் இரும்புக் கம்பம் நடப் பட்டிருந்தது. அதற்குக் கீழ் யானை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

குருநாதர் சைகை செய்ததும், சொக்கநாதன் தனது குதிரையில் பாய்ந்து ஏறினான். புயலைப்போல் புரவியை மதகரி நிற்கும் இடம் நோக்கிச் செலுத்தினான். குதிரை யானையின் அருகே நெருங்கியது. சேணத்தின் மீது இருகால்களையும் வைத்து உட்கார்ந்து, அப்படியே எவ்வி யானையின் முதுகில் தாவிக் குதித்தான். அதே வேகத்தில்

இரும்பு கம்பத்தை தாவிப் பிடித்துத் தொங்கி, ஒரு தடவை ஊஞ்சலாடி, மாளிகையின் மேல் மாடத்தில் குதித்தான்

குதித்த வேகத்திலேயே இடையில் இருந்த வாளை உருவி. வாழைக்குலையை வெட்டி, ஒரு கரத்தில் பிடித்து, மறுபடியும் வாளை இடுப்பில் சொருகி, மாளிகையில் இருந்த கம்பத்தில் குதித்து, ஒரு கையால் அதனைப் பற்றி, மறுகையால் வாழைக் குலையுடன் ஊஞ்சலாடி, கீழிருக்கும் யானை மீது குதித்தான்

அதற்குள் அவனது குதிரை மைதானத்தை ஒரு சுற்றுச் சுற்றி மறுபடியும் யானையின் அருகே வருவதற்குச் சரியாக இருந்தது. சொக்கநாதன் தன் கையில் இருந்த வாழைக் குலையினை கெட்டியாகப் பிடித்தவாறு, குதிரையின் மீது குதித்து, மற்றொரு கையால் அதன் கடிவாளத்தைப் பிடித்து, தன் குருநாதர் இருக்கும் இடத்தருகே செலுத்தினான்.

குருநாதர் அருகே வந்ததும், குதிரையை நிறுத்தி இறங்கி தனது கரத்தில் இருந்த வாழைக் குலையை அவர் காலடியில் வைத்து வணங்கினான். வெங்கடகிருஷ்ணன் உட்பட அனைவரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

நரசப்பநாயக்கர் சொக்கநாதனின் தோளைப்பிடித்து நிறுத்தித் தட்டிக் கொடுத்தார்.

"சொக்கநாதா ! போர்க் கலையில் உன்னை வெல்ல இனி யாராலும் முடியாது. அர்த்த சாஸ்திரம் முதல், சுக்கிர நீதி வரை அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்து வித்தகனாகி இருக்கிறாய். இனி இருப்பது உளவுக்கலை மட்டும்தான்."

"தாங்கள் ஆணையிட்டால் அதனையும் சிரமேற் கொண்டு செய்து முடிக்கச் சித்தமாய் இருக்கிறேன் குருநாதரே!"

"நாடு இப்பொழுது இருக்கும் நிலையில் உன்னை மதுரையை விட்டு வெளியே செல்ல உன் அன்னையார் சம்மதிக்க மாட்டார். கூர்த்த மதியினைப் படைத்த உனக்கு உளவுக்கலை ஒன்றும் கடினமான காரியம் அன்று. ராஜபரிபாலனம் செய்யச் செய்ய உனக்குத் தானே வந்து விடும்."

"இருப்பினும் அதனை சிறப்பாகச் செய்து தங்கள் பாராட்டினைப் பெற வேண்டும் என்ற அவா எனக்குள் இருக்கிறது."

"உன்னை வெளியே அனுப்ப உன் தாய் பிடிவாதமாக மறுக்கிறார். அதனால் இனி பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு, குடிமக்களைக் காக்கும் மன்னனாய்க் கோலோச்ச வேண்டியது உன் கடமை. இன்றுடன் உன் பயிற்சிகள் அத்தனையும் முடிந்து விட்டன. என் ஆசிகள் !"

குருநாதர் ஆசிர்வதிக்க, சொக்கநாதன் தன்னுடைய காணிக்கைகளை ஒரு பொற்தட்டில் வைத்து அவர் காலடியில் சமர்ப்பித்தான்.

பின்னர் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் தங்கள் குதிரைகளில் ஏறி அரண்மனையை நோக்கித் திரும்ப ஆரம்பித்தனர்.

குதிரையை மெதுவாக நகர்த்தியவாறு, தீவிர சிந்தனையில் வரும் சொக்கநாதனை கூர்ந்து பார்த்தான் வெங்கடகிருஷ்ணன்.

"என்ன சொக்கநாதா, ஆழ்ந்த சிந்தனை ?"

"உளவுக்கலை ஒன்று மட்டும் மிச்சம் வைப்பானேன்? அதையும் செய்து முடித்தால் என்ன என்று யோசிக்கிறேன்."

''குருநாதர் வேண்டாம் என்கிறார். உன் அன்னையும் மறுக்கிறார். பிறகு எப்படிச் செய்வாய் ?"

''இவர்கள் இருவருக்கும் தெரியாமல் செய்து முடித்தால்...?"

''எப்படி ? என்ன செய்யப் போகிறாய்?''

''உளவுக் கலையிலேயே மிகச் சிறந்தது என்ன தெரியுமா ? பகைவன் நாட்டிற்குள் சென்று பகைவனுக்கு விருப்பமான ஒன்றை அவனறியாது கவர்ந்து வருவது தான். அப்படி ஒன்றைக் கவர்ந்து வந்து அதனை என் குருநாதருக்குக் காணிக்கை ஆக்கினால் தான் எனக்கு நிம்மதி.''

"அப்படி எந்தப் பகைவனது நாட்டிற்குச் செல்லப் போகிறாய் ?"

''உனக்குத்தான் தெரியுமே தஞ்சைக்கும், நமக்கும் எவ்வளவு காலமாகப் பகை என்று. தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருளைக் கவர்ந்து வர என் மனம் விழைகிறது நண்பா !"

''விஜயராகவனுக்கு விருப்பமான பொருள் என்ன வென்று தெரியுமா ?''

''தெரியவில்லை. அதனை அங்குச் சென்ற பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

"எனக்குத் தெரியும் "

''தெரியுமா ? சீக்கிரம் சொல். அது என்ன பொருள் ?"

''பொருளல்ல. பெண். விஜய ராகவ நாயக்கனின் செல்ல மகள் சந்திரவதனா. மிகவும் அழகானவளாம். புத்திசாலியாம்."

இதைக் கேட்டதும் சொக்கநாதன் முகம் கோபத்தில் சிவந்தது. ''விளையாட்டுப் பேச்சு வேண்டாம் வெங்கடகிருஷ்ணா! அவள் எவ்வளவு அழகியாக இருந்தாலும் எனக்குத் தேவையில்லை. எனது தாத்தா திருமலை நாயக்கர் தஞ்சை அரச வம்சத்தில் பெண் எடுத்து நடந்த சம்பவங்கள் உனக்குத் தெரியாததா? தஞ்சைப் பெண்கள் என்றாலே எனக்கு ஆத்திரம்தான் வருகிறது. திமிர் பிடித்தவர்கள்."

''சந்திரவதனா நல்ல பெண் என்று கேள்வி! ஒரு வேளை திமிர்பிடித்தவளாக இருந்தாலும் அவளை அடக்குவது உனக்கு ஒரு வகை வெற்றிதானே! யோசித்துப் பார் சொக்கநாதா! உன் தாத்தா காலத்திலேயே உங்களுக்குள் மண உறவு இருந்திருக்கிறது. அந்த வகையில் விஜய ராகவ நாயக்கன் உனக்கு மாமன் முறை வேண்டும். அவர் பெண்ணைக் கவர்ந்து வருவது ஒன்றும் தப்பில்லையே! அப்படி கவர்ந்து வந்து அவளை உன் அன்னையின் காலடியில் வைத்தால், உன் தாயும். பூசிப்பார். குருநாதரும் பாராட்டுவார். உளவுக் கலையில் தேர்ச்சி பெற்ற மாதிரியும் இருக்கும். உறவு முறை புதுப்பிக்கப் பட்ட து போலவும் இ ருக்கும்.''

''அது இந்த ஜென்மத்தில் நடக்காது. பகைவன் மகளைக் கவர்ந்து வந்தது தெரிந்தால் என் தாயே என்னைக் கொன்று விடுவார். எனது தாத்தாவிற்கு நடந்த சம்பவங்களை நினைத்தால் தஞ்சைப் பரம்பரையையே என் கையால் அழித்துவிட வேண்டும் போல் ஆத்திரமாக இருக்கிறது."

"சந்திரவதனாவை நேரில் பார்த்தால் நீயே மயங்கி விடுவாய்.''

''நிச்சயம் அப்படி நடக்காது. சரி சரி, விடு அந்தப் பேச்சை! கூடிய சீக்கிரம் நாம் இருவரும் தஞ்சைக்குச் செல்கிறோம். விஜயராகவ நாயக்கனின் விருப்பமான

பொருள் என்னவென்று அறிகிறோம். அதனைக் கொண்டு வந்து குருநாதர் காலடியில் சமர்ப்பிக்கிறோம்"

"தஞ்சை செல்ல உன் தாய் சம்மதிக்க வேண்டுமே?"

"அன்னையிடம் பொய் பகன்று, மதுரையை விட்டுச் செல்ல அனுமதி வாங்கிவிட்டால் போதும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

இருவரும் அரண்மனையை நெருங்கிய பொழுது ஆரவாரமான சப்தம் தூரத்தே கேட்டது. வாயிலில் இருந்த வாத்தியங்கள் உரத்த குரலில் பிளிற, பல்லக்கு ஒன்று அரண்மனைக்குள் நுழைவது தெரிந்தது. சொக்கநாதன் கூர்ந்து பார்த்தான்.

அதே நேரம் சிவிகையில் இருந்த திரை காற்றுக்குச் சற்றே விலக, அதனுள் அமர்ந்திருந்த இளம் பெண்ணைப் பார்த்ததும் சொக்கநாதன் இதயம் துணுக்குற்றது!

3

தஞ்சை அரண்மனை வளாகத்தினுள் இருக்கும் அந்தப்புரத்து நந்தவனத்திற்குள் அழகுற அமைந்திருக்கும் பந்தடி மைதானத்தில், தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கனின் செல்ல மகள் இளவரசி சந்திரவதனாவும், அமைச்சரான கோவிந்த தீட்சதரின் கடைக்குட்டிப் பெண்ணான மதுரவாணியும் தங்களுடன் அந்தப்புர மகளிர் நால்வரையும் சேர்த்துக் கொண்டு பந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

வைத்த அடி நோகுமோ, வைத்து எடுத்த அடி தரையில் பட்டதால் கன்றிப் போகுமோ என்று பார்க்கும்

இளைஞன் மனதைப் படாதபாடுபட வைக்கும் இளமைப் பருவத்தில் இருக்கும் அந்தப் பாவையர் பந்து விளையாடும்பொழுது கால்கள் நொந்துபடுமே என்ற கரிசனத்தில் மைதானம் முழுக்க புற்கள் வளர விட்டு, அதனை அழகாக ஒரே மட்டத்தில் செதுக்கி விட்டிருந்தனர்.

ஆறு இளம் பெண்களும் பந்து விளையாடுவதற்கு ஏற்றபடி தங்கள் சேலைகளை இறுக்கக் கட்டி முந்தானையை கவனமாக இடுப்பில் சொருகி இருந்தனர். அதனால் அவர்களது முன்னழகும், பின்னழகும் இறுக்க மாகப போர்த்தப்பட்டு கோணிப் பைக்குள் இறுக்கி அடைக்கப்பட்ட முயற்குட்டிகள் முட்டிக்கொண்டு வெளியே வரத்துடிக்கும் பாவனையை ஏற்படுத்தின.

ஒரு பெண் பந்தை வீசி எறிவதும், மற்றொருத்தி அதனைப் பிடிக்க முயல்வதும், இடையில் ஓர் அழகி அதனைத் தடுத்திட தாவிக் குதிப்பதுமாக இருந்தனர். இதனால் அவர்கள் கால்களில் அணிந்திருந்த சிலம்புகள், 'கலின், கலின்' என்று ஓசையையும், கையில் அணிந் திருந்த வளையல்கள் 'ஜலீர் ஜலீர்' என்ற ஓசையையும் இடைவிடாது ஏற்படுத்திக் கொண்டு இருந்தன.

இளவரசி சந்திரவதனா ஓடி ஓடிப் பந்தடித்துக் கொண்டு விளையாடினாள். பந்து அவளருகே நெருங்கிய மறுவினாடியே, அவள் கரம் மின்னல் எனப் பாய்ந்து அதனை மற்றொரு பெண் மீது கண்ணிமைப்பதற்குள் தட்டி எறிவதைப் பார்க்கும் பொழுது அவள் மனம் முந்தியதோ, விழி முந்தியதோ, இல்லை கரம் முந்தியதோ என்ற வியப்பை ஏற்படுத்தியது.

இதனை தூரத்தில் இருந்த தூணில் மறைந்தவாறு ஒரு உருவம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. அந்த உருவத்திற்கு வயது இருபத்தைந்திற்குள் இருக்கும்.

பருத்த தூணை இறுகத் தழுவி பதுங்கியவாறு, கன்னத்தைத் தூணோடு சேர்த்து வைத்துக்கொண்டு, கண்களை மட்டும் பந்தடி மைதானத்தின் மீது நிலைகுத்தி வைத்து பார்த்துக் கொண்டிருந்தது. அந்தக் கண்களில் காமம் கலந்திருந்தது.

இதனை அறியாது இளம் பெண்கள் அறுவரும் உற்சாகமாகப் பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். சிலம்புகள் புலம்பும் ஓசையும், வளைகளின் ஒலமும் மட்டுமின்றி, அந்தப் பெண்கள் உற்சாகத்துடன் எழுப்பும் குயிலோசையும் சேர்ந்து அந்த இடத்தையே கலகலப்பாக ஆக்கிக் கொண்டிருந்தன.

இளவரசி சந்திரவதனா தாவிக் குதிக்கும் பொழுதெல்லாம் முந்தானை சொருகிய அவளது சிற்றிடை பளபளத்து, நெளிந்து, வளைந்து நிமிர்ந்தது. அது மட்டுமல்ல- அவள் மார்புகள் ஒரு முறை உயர்ந்து, அவள் கால்கள் தரையில் பாவியதும் நன்றாகக் குலுங்கி 'எங்களை ஏன் இந்தப் பாடு படுத்துகிறாய்? என்று புலம்பின. அவள் ஓடினால்- அவை சுழன்று சுழன்று தலைகளை ஆட்டித் தத்தளித்தன.

அதைவிட, அவள் பின்னழகுகள் படும்பாடு இருக்கிறதே! மேலேறிச் சுழன்று சுழன்று கீழிறங்குவதும், சமயத்தில் முறைப்பதும், சில சமயம் குலுங்குவதுமாக இருந்தன.

ஒரு தடவை பந்தை அவள் கையில் வைத்துக் கொண்டு யாரிடம் போடலாம் என்று யோசித்து நின்ற காட்சியைப் பார்க்கும் பொழுது, அவள் பின்னழகில் இரண்டு பந்துகள், முன்னழகில் இரண்டு பந்துகள், கரத்தில் ஒரு பந்து என்று ஒரு செம்பில் ஐந்து பந்துகள் இருப்பது போன்றபிரமையை ஏற்படுத்தின.

இவ்வளவு காட்சிகளையும் தூண் மறைவில் பதுங்கி இருந்த உருவம் ஆசையுடன் பார்த்துக் கொண்டு

இருந்தது. கண்களில் காமமும், கடைவாயில் எச்சிலும் ஒழுகிக் கொண்டிருந்தன.

பந்து விளையாடிய பெண்கள் களைப்புற்று நீர் அருந்துவதற்காக சற்றே ஓய்வெடுத்தனர்.

அப்பொழுது மதுரவாணி, இளவரசியை தனியே அழைத்து காதுகளில் கிசுகிசுப்பான குரலில் சொன்னாள்:

"சந்திரவதனா! இப்பொழுது நீ பந்து விளையாடிய காட்சியை மட்டும் அவர் பார்த்து விட்டால், உன்னை ஒரு நிமிடம் கூட இந்த இடத்தில் வைத்திருக்க மாட்டார்"

"யாரைச் சொல்கிறாய்?"

"அவர்தான் மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன்."

மறுநிமிடம் சந்திரவதனாவின் முகவதனம் ஆத்திரத்தில் சிவக்கத் தொடங்கியது.

"வாணி! இனி ஒருமுறை அந்த மனிதரைப் பற்றிப் பேசினால் நான் கோபத்தில் என்ன செய்வேன் என்று எனக்கேத் தெரியாது. மதுரை என்ற வார்த்தையைக் கேட்டாலே எனக்கு ஆத்திரமும் வெறுப்பும் தான் வருகிறது. மனிதர்களா அவர்கள்? இரக்கமற்ற மிருகங்கள்!"

"சொக்கநாத நாயக்கனை நேரில் பார்த்தது கூட இல்லை. அப்படி இருக்கும் பொழுது அவர் பெயரைச் சொன்னாலே எதற்கு இவ்வளவு கோபப்படுகிறாய் வதனா? அவர் அப்படி உனக்கு என்ன கொடுமை செய்தார்?"

"அவர் செய்யாவிட்டால்- அவர் பாட்டனார் செய்யவில்லையா? திருமலைநாயக்கர் எனது அத்தை

அச்சுதரகுநாதம்மாவைக் குத்திக் கொன்றது உனக்கு நினைவில்லையா? மதுரை நாயக்கர் செய்த அந்தக் கொலை பாதகச் செயலை தஞ்சை நாயக்க வம்சம் பூண்டோடு அழியும் வரை மறக்கவே மறக்காது. மன்னிக்கவும் செய்யாது.''

"எந்தக் காலத்திலோ நடந்ததற்கு இன்னும் எதற்கு அவர்கள் மீது வன்மம் கொண்டுள்ளீர்கள்? பாட்டனார் செய்ததற்குப் பேரன் என்ன செய்வார்?''

"எதற்காக நீ அவர்களுக்காக இவ்வளவு பரிந்து பேசுகிறாய்? விளையாட்டுப் பேச்சென்றால் கூட இத்துடன் விட்டுவிடு! மதுரை மன்னனை நான் மணமுடிப்பது என்பது நடவாத காரியம். அதை நினைத்தாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. ஒரு வேளை என் தந்தை சம்மதித்தால் கூட நான் அவரை மணக்க சம்மதிக்கவே மாட்டேன். என் தந்தை என்னை விட அதிக வெறுப்பில் இருக்கிறார். அதனால் இந்த ஜென்மத்தில் அது நடக்காத செயல். இவ்வளவையும் மீறி அவர் என்னைச் சிறை எடுக்க நினைத்தால் அடுத்த வினாடியே என் உயிர் என்னை விட்டுப் பறந்து விடும்."

"இருந்தாலும்..."

"வாணி. போதும் இந்தப் பேச்சு! இத்துடன் நிறுத்திக் கொள். இனி நீ பேச்சை எடுத்தால், உன்னோடு எக்காலமும் நான் பேச மாட்டேன்" என்றாள் இளவரசி கோபமாக.

"விளையாட்டுக்குத்தானடி சொன்னேன். நீ இவ்வளவு தூரம் கோபித்துக் கொள்வாய் என்று நான் எதிர்பார்க்க வில்லை! இனி நான் அந்தப் பேச்சையே எடுக்க மாட்டேன், போதுமா தாயே! வா. பந்தாடத் தொடங்கலாம்!" என்று கேலியாய் கையெடுத்துக் கும்பிட்டாள்.

சந்திரவதனா அவள் கன்னத்தை இறுகப் பிடித்து நிமிண்டி விட்டு, அவள் கையுடன் கைகோர்த்து பந்தடி மைதானத்திற்குள் நடந்தாள்.

மறுபடியும் ஆறு பெண்களும் களத்தில் இறங்கிப் பந்து விளையாடத் தொடங்கினர். தூரத்துத் தூணில் மறைந்து இருந்த உருவம் அசையாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது ஒரு பெண் தட்டிவிட்ட பந்து, அந்தத் தூணிற்கு எதிரே சற்று தூரத்தில் போய் விழுந்தது, அதனை எடுப்பதற்காக சந்திரவதனாவே சென்றாள்.

பந்தினை குனிந்து எடுத்து நிமிர்ந்தபொழுது தூணின் மறைவில் ஒளிந்திருக்கும் உருவத்தைப் பார்த்து விட்டாள். மறுகணம் அவள் முகம் மாறத் தொடங்கியது.

பிறகு அந்தத் தூணின் பக்கம் திரும்பி கூடப் பார்க்காமல் பந்தை எடுத்துக் கொண்டு மைதானத்திற்கு வந்த சந்திரவதனா, மதுரவாணியைப் பார்த்துக் கண்களால் சைகை செய்தாள்

அவசரமாக அவளருகே வந்த மதுரவாணியின் காதில் கிசுகிசுத்தாள் உடனே தூண் பக்கமாகத் திரும்பிப் பார்க்க முயன்ற மதுரவாணியின் தலையை அவசரமாகத் திருப்பிச் சொன்னாள்.

"உடனே திரும்பிப் பார்க்காதேடி. அந்த உருவத்திற்குச் சந்தேகம் வந்து விடும். நான் சொல்வது மாதிரி செய்!"

மதுரவாணி தலையாட்டியவாறு மற்ற பெண்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அழைத்து அவர்களிடமும் இளவரசி சொன்ன விஷயத்தைக் கூறினாள். அனைவரும் தலையாட்டியவாறு மைதானத்திற்குள் மறுபடியும் நுழைந்தனர்.

முன்னர் விளையாடிய நிலையிலிருந்து அத்தனை பெண்களும் இடம் மாறி வேறு வேறு இடங்களில் போய் நிற்கத் தொடங்கினர். இளவரசி மட்டும் அந்த உருவம் மறைந்திருக்கும் தூணில் இருந்து பார்க்க முடியாத இடத்தில் வந்து நின்று கொண்டாள்.

மறுபடியும் அவர்கள் கலகலத்த குரலில் பந்து விளையாடத் தொடங்கினர். தூணின் பின்னால் ஒளிந்திருந்த அந்த உருவமோ பெண்கள் இடமாறி நிற்பதைப் பற்றி எள்ளளவும் ஐயமுறாது தொடர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. பந்து விளையாட்டில் இப்படி இடம் மாறி விளையாடுவது வழக்கம்தானே என்ற நினைப்பாகக் கூட இருக்கலாம்.

பெண்கள் தொடர்ந்து உற்சாகக் குரல் எழுப்பி விளையாட, இளவரசி மட்டும் சற்று நேரம் கழித்து அந்த இடத்திலிருந்து நழுவி மலர்ச் செடிகளினூடே மறைந்தவாறு, அந்த உருவம் மறைந்து இருக்கும் தூணை நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

இளம் பெண்கள் ஐவரும் இளவரசி தங்களுடன் இல்லாததை அறியாதவர்கள் போல ஆரவாரமாகக் குரல் எழுப்பியவாறு விளையாடிக் கொண்டிருந்தனர். உருவமும் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது.

இளவரசி இப்பொழுது தூணின் பின்புறமாக வந்து சேர்ந்தாள். அந்த உருவத்தின் பின்புறம் மட்டும் நன்றாகத் தெரிந்தது. முகம் தெரியவில்லை. அதன் இரு கைகளும் தூணைத் தழுவியபடி இருந்தன. விலை உயர்ந்த ஆடைகள் அணிந்து இருந்தான். இடுப்பில் இருந்த வாளின் பிடி முதுகுக்குப் பின்னால் துருத்திக் கொண்டிருந்தது.

இளவரசி ஓசை ஏற்படாதபடி அந்த உருவத்தை நோக்கி மெல்ல நடக்க ஆரம்பித்தாள். அந்த உருவம்

மட்டும் கவனமாக இருந்திருந்தால், பின்பக்கம் ஏற்படும் மெல்லிய அரவத்தையோ அல்லது தூணருகே படர்ந்திருந்த வெளிச்சத்தில் சற்று இருட்டு தட்டுப்படுவதையோ கவனித்திருக்கக்கூடும்.

மேலே எழும்பி வந்த பந்தினைத் தாவி அடிக்க முயன்ற ஒரு பெண்ணுக்கு, இடுப்பில் சொருகி இருந்த முந்தானை நழுவிவிட்டது. முந்தானை முழுக்கக் கீழே விழுந்து, அவள் ரவிக்கைக்குள் இருந்த மார்புகளின் முழுத்தோற்றமும் தெரிய உடன் விளையாடிய பெண்கள், 'யேய்' என்று கேலியாகக் குரல் எழுப்ப, அந்தப் பெண் அவசரமாக முந்தானையை எடுத்து மேலே போட்டுக் கொண்டு, வெட்கத்தில் முகத்தைக் கைகளுக்குள் புதைத்துக் கொண்டாள்.

காணக் கிடைக்காத இந்தக் காட்சியைக் கண்டு, புளகித்து, மெய்சிலிர்த்து, மெய்மறந்து நின்ற அந்த உருவத்தின் பின்னே வெகு அருகில் நின்றதையோ, அதன் இடுப்பில் இருந்த உடைவாளை நோக்கி இளவரசியின் கரம் நீண்டதையோ, அந்த உருவம் உணரக்கூடிய மன நிலையில் இல்லை.

இளவரசி கண் இமைப்பதற்குள் அந்த உருவத்தின் இடையில் இருந்த வாளை 'சரேல்' என்று உருவினாள். தன் உறையில் இருந்த வாள் தானாக உருவப் பட்டதைக் கேட்டவுடன் திடுக்கிட்டு. அந்த உருவம் திரும்பிப் பார்த்தது. மறுகணம் இளவரசியின் கரத்தில் இருந்த வாளின் முனை அதன் மார்பில் பதிந்தது.

அந்த உருவத்திற்கும் அதிர்ச்சி! அந்த உருவம் யார் என்பதை உணர்ந்த இளவரசிக்கும் அதிர்ச்சி! இருவரும் அதிர்ச்சியில் ஒருகணம் ஊமையாக நின்றிருந்தனர்,

அந்த உருவம்— தஞ்சை மன்னனின் படைத் தளபதியான ரங்கப்பநாயக்கனின் ஒரே மகன் அச்சுதப்பன்.

ஆறடிக்கும் மேலாக வளர்ந்த ஒல்லியான தேகம், கன்னங்கள் ஒட்டிப்போய், ஊசி போல் நீண்ட மீசையும், வரிசை தவறிய பற்களும், ஒடுங்கிய நாடியுடன்— ஒரு சாயலில் நாடகத்தில் வரும் கோமாளியைப் போலிருந்தான்.

அவன் யார் என்று தெரிந்ததும் அதிர்ச்சியில் இருந்து விடுபட்ட இளவரசி, அடுத்து அளவில்லாக் கோபத்திற்கு ஆளானாள்.

''அச்சுதப்பரே நீங்களா? அந்தப்புர மகளிர் ஆடுவதை இப்படி ஒளிந்திருந்து பார்க்க வெட்கமாக இல்லை?"

"ஹிஹி! நீ நன்றாகப் பந்து அடித்தாய்! கன்னத்தில் மண் ஒட்டி இருக்கிறது. துடைத்துக்கொள்! துணி எடுத்துத் தரட்டுமா? இல்லை துடைத்து விடட்டுமா?"

"நிறுத்துங்கள்! உங்களை இங்கு வர யார் அனுமதித்தது? அந்தப்புரத்துக் காவலன் அந்தி சாயும் நேரத்தில் உறங்கி விட்டானா?"

''இல்லை. அனுமதி பெற்றுத்தான் வந்தேன். என் தந்தை உன்னிடம் ஒரு செய்தி சொல்லிவிட்டு வரும்படி சொன்னார்."

"சேதி சொல்ல வேண்டியவர் நேரடியாக வந்து சொல்லி இருக்க வேண்டியதுதானே! அதை விடுத்து, தூணில் மறைந்தவாறு பெண்களை வேடிக்கை பார்ப்பது துப்புகெட்ட செயல் என்று புரியவில்லையா?"

"நானொன்றும் ஒளிந்திருந்து பார்க்கவில்லை. சேதி சொல்ல வந்தேன். நீ விளையாடிக் கொண்டிருந்தாய். சரி, அதை எதற்கு கெடுப்பானேன், நீ ஆடி முடித்த பிறகு சொல்லலாம் என்று காத்திருந்தேன். இதற்குப் போய் கோபப்படுகிறாயே! நான் உன் மேல் எவ்வளவு அன்பு

வைத்திருக்கிறேன்," என்றவாறு அவள் கன்னத்திலிருந்த மண்ணைத் தட்டிவிட முயன்றான்.

இளவரசி உடனே ஒதுங்கி, "தொடாதீர்கள்! செய்தியைச் சொல்லிவிட்டு இங்கிருந்து சீக்கிரமாகக் கிளம்புங்கள்!" என்றாள் எரிச்சலுடன்.

"இன்னும் ஒரு முகூர்த்த வேளை கடந்த பிறகு மன்னர் தனது மாளிகைக்கு வர இருக்கிறாராம். அப்பொழுது நீ சென்று அவசியம் அவரைக் காண வேண்டும் என்று உத்தரவிட்டார்."

"அவ்வளவுதானே! நீங்கள் சென்று வரலாம்."

"உனக்கு ஏதாவது உதவி வேண்டுமா சந்திரவதனா?"

"நீங்கள் இந்த இடத்தை விட்டு அகன்றால் அதுவே எனக்குப் பெரிய உதவி!" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

"என் மீது கோபமா?"

"கோபமில்லை. சந்தோஷம்! நீங்கள் போய் வரலாம்!" எரிச்சலுடன் சொன்னாள்.

"இன்னும் உன் கன்னத்தில் ஒட்டியுள்ள மண்ணைத் துடைக்காமல் இருக்கிறாயே! நான் துடைத்து விடட்டுமா?"

"அந்தக் கவலை உங்களுக்கு எதற்கு? அதை நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் கிளம்புங்கள்!"

"ஒரு விதத்தில் இந்த மண் ஒட்டி இருப்பது உனக்கு அழகாகத்தான் இருக்கிறது. இதைப்பற்றி கவிஞர்கள் ஏதோ சொல்வார்களே..."

"நீங்கள் இங்கிருந்து கிளம்பப் போகிறீர்களா? இல்லை. அந்தப் புரத்துக் காவலரை அழைக்கட்டுமா?"

"கோபப்படாதே! நானே செல்கிறேன்!"

அச்சுதப்பன் அங்கிருந்து நகரும் வரை பார்த்து விட்டு, அவன் கண்ணில் இருந்து மறைந்ததும் மறுபடியும் பந்தடி மைதானத்திற்குள் வந்தாள் இளவரசி.

அதே சமயம் மன்னரின் உத்தரவை இளவரசியிடம் சொல்லச் சொல்லி மகனை அனுப்பினோமே, அது என்ன ஆயிற்று என்று பார்த்து வருவோம் என்று தளவாய் ரங்கப்ப நாயக்கனே, அங்கு வர ஆரம்பித்தான்.

தந்தையும் தனயனும் சற்று நேரம் தனித்திருந்து பேசிக் கொண்டிருந்தனர். பிறகு அச்சுதப்பனை அனுப்பி விட்டு, ரங்கப்பநாயக்கன் மட்டும் இளவரசி இருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

அவன் வருவதை அறியாது இளவரசியும், மதுரவாணியும் உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தனர். அதைக் கேட்டதும் ரங்கப்பநாயக்கனின் முகம் ஆத்திரத்தில் சிவக்க ஆரம்பித்தது. அதனுடைய பின் விளைவுகள் இளவரசியின் வாழ்க்கைப் பாதையையே மாற்றி அமைக்கப் போகிறது என்று அந்தப் பேதைக்குத் தெரிந்து இருந்தால், அந்த விஷயத்தை அப்படி உரக்கப் பேசியிருக்க மாட்டாள்.

4

மதுரை அரண்மனையின் முகப்பிலே பல்லக்கு ஒன்று வந்து நின்றதையும், அதனைத் தொடர்ந்து பல்வேறு வகை வாத்தியங்கள் முழங்கியதையும் பார்த்து, சொக்கநாதன் தன் குதிரையின் கடிவாளத்தினைப்

பிடித்து இழுத்து நிறுத்தினான். வெங்கட கிருஷ்ணனும் தனது குதிரையை அவனருகே கொண்டு வந்தான்.

தொடர்ந்து பல்லக்கின் திரைச்சீலை காற்றில் விலகியதும். பல்லக்கினுள் இருந்த இளம் பெண்ணின் முகம் தெளிவாகத் தெரிந்ததை இருவரும் பார்த்தார்கள். ஒரு சில வினாடிகள் தான்! மறுபடியும் திரைச்சீலை பல்லக்கை நன்றாக மூடிக் கொண்டது.

மின்னல் ஒன்று பளிச்சென்று வெட்டி மறைந்தாற் போலிருந்தது. இந்தக் காட்சியைப் பார்த்த இருவரும் திகைத்துப் போய் நின்றனர்.

"சொக்கநாதா, யார் இந்தப் பெண்?" புரியாமல் கேட்டான் வெங்கடகிருஷ்ணன்.

"தெரியவில்லையேடா, பல்லக்கின் அலங்காரங் களையும், வாத்திய முழக்கங்களையும் வைத்துப் பார்க்கும் பொழுது அந்தச் சிவிகையில் இருப்பது அரச குடும்பத்தைச் சேர்ந்த பெண் என்பது மட்டும் புரிகிறது. யார் என்று தெரியவில்லை. ஒருவேளை பாளையக்காரர் யாராவது வந்திருக்கிறார்களோ என்னவோ?"

''அந்தப் பெண் மிக அழகாக இருக்கிறாள் சொக்க நாதா!"

''நீ அரண்மனைக்குச் சென்றதும் வைத்தியரைப் பார்ப்பது நல்லது என்று நினைக்கிறேன்."

''ஏன்? எனக்கென்ன?" குழப்பமாகக் கேட்டான் கிருஷ்ணன்.

''பார்க்கிற பெண்ணை எல்லாம் அழகாக இருக் கிறாள் என்று சொல்கிறாயே அதனால்தான்" என்றான் கேலியாய்.

''அப்படி வேறு எந்தப் பெண்ணையும் சொன்னதாக எனக்கு நினைவில்லையே!"

"சற்று நேரத்திற்கு முன் சொன்னதை மறந்து விட்டாயா? எவளோ தஞ்சை இளவரசி, பெயர் கூட சந்திரவதனாவோ என்னவோ சொன்னாயே?"

"யாரோ, எவரோ என்று விட்டு அத்தனை விஷயங்களையும் சரியாகச் சொல்கிறாயே! அப்படி யானால் தஞ்சை இளவரசி உன் மனதை உறுத்திக் கொண்டிருக்கிறாள் என்று புரிகிறது."

"சேச்சே! அவள் பெயரை என் வாயினால் சொல்வதற்குக் கூட எனக்கு வெறுப்பாக இருக்கிறது. என்னவோ அவள்தான் இந்த உலகத்திலேயே பெரிய அழகி என்று பிதற்றினாயே. இப்பொழுது சிவிகையில் செல்லும் இந்தப் பெண்ணும் அழகி என்கிறாயே என்று தான் கேட்டேன் போகிற போக்கைப் பார்த்தால் என் தாத்தா திருமலை மன்னர் கட்டிய நம் அரண்மனையின் தூண்களுக்கு சேலை உடுத்தி விட்டால் கூட அதையும் அழகியர் கூட்டம் என்று வியப்பாய் போலும்!"

"சொக்கநாதா, இப்பொழுது சிவிகையில் சென்ற பெண்ணின் முகத்தை நீயும் பார்த்தாய் அல்லவா? மறைக்காமல் உண்மை பேசு. இவள் அழகாக இருக் கிறாளா இல்லையா?"

"ம்... பரவாயில்லை. ஏதோ சுமாராக இருக்கிறாள்."

"இளவரசி சந்திரவதனாவின் அழகைப் பற்றி தஞ்சைக்குச் சென்று வந்த பலர் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். விஜயநகரப் பேரரசில் கூட அந்தப் பெண்ணை மணப்பதற்குப் போட்டி இருக்கிறது என்று கேள்விப்பட்டேன். இப்பொழுது சிவிகையில் செல்லும் பெண் நமது அரண்மனைக்குள் செல்வதால், இந்த அழகி நமக்கு மிகவும் வேண்டியவரின் மகளாக இருக்கலாம். இந்தப் பெண் தஞ்சை இளவரசியை விட அழகானவளாக இருந்திருந்தால் அதைப் பற்றிய செய்தி நிச்சயம் உனக்கு

எட்டியிருக்கும், எனக்கும் தெரிந்திருக்கும் அப்படி எதையும் நாம் கேள்விப்பட்டதில்லை. இதிலிருந்து தஞ்சை இளவரசி இவளை விட அழகானவள் என்பது மட்டும் நிச்சயம் !"

"தஞ்சை மன்னர்கள் பொய் பேசுவதில் சமர்த்தர்கள், தங்கள் மகளைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்லி இப்படி ஒரு புரளியைக் கிளப்பி விட்டிருக் கலாம். நேரில் பார்த்தால் குரூபியாகக் கூட இருக்கலாம் அந்தப் பெண் !"

"ஒருவேளை இப்படியும் இருக்குமோ ?"

"எப்படி ?"

"தஞ்சை இளவரசிதான் இப்பொழுது சிவிகையில் செல்கிறாளோ ?"

"பார்த்தாயா ! ஆரம்பித்து விட்டாயே உன் கேலிப் பேச்சை ! அவள் எதற்கு இங்கே வர வேண்டும் ?"

"உன்னுடைய அழகையும் வீரத்தையும் பற்றி அவள் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அதனால் உன்னை மணக்க வேண்டும் என்ற ஆசையில் ஓடி வந்திருக்கலாம் இல்லையா ?"

"இன்னொருதரம் இப்படி கேலி பண்ணினால் உன் மூக்கைத் திருகி எடுத்து விடுவேன்," என்றவாறு வெங்கட கிருஷ்ணனின் மூக்கைப் பலமாக திருகினான்.

"ஒருவேளை நிஜமாக அப்படி வந்தால் என்ன செய்வாய் ?"

"இது இந்த ஜென்மத்தில் நடக்காது. அவர்கள் குடும்பத்திலும், எங்கள் மீது கோபம் இருக்கிறது. அதனால் அவள் நிச்சயம் வரமாட்டாள். வந்தாலும் என் தாய் அவளை சேர்க்க மாட்டார். அப்படிச்

சேர்த்தாலும் அவளை மணமுடிக்க என் மனம் சம்மதிக்காது. சரி. விடு இந்தப் பேச்சை! நான் அவளைப் பற்றி என்னிடம் பேசாதே என்று சொல்லியதை மறந்து விட்டாயா?"

"நான் எங்கே அவள் பேச்சை எடுத்தேன்? நீதான் அவளைப் பற்றி ஆரம்பித்துக் கொடுத்தாய். இப்பொழுது என்னையே கோபிக்கிறாய்! உள்ளுக்குள் அவளைப் பற்றிய எண்ணம் உனக்கு இருக்கிறது என்று மட்டும் புரிகிறது."

"எந்தக் கழுதை எப்படி இருந்தால் எனக்கென்ன? இனி நானும் பேச மாட்டேன். நீயும் அவளைப் பற்றி என்னிடம் பேசக் கூடாது."

"இப்பொழுது சிவிகையில் செல்லும் பெண்ணைப் பற்றிப் பேசலாமா?"

"இவள் யார் என்றே தெரியவில்லையே! எதற்காக இங்கு வந்திருக்கிறாள் என்றும் தெரியவில்லை. வா, அரண்மனைக்குள் சென்று பார்க்கலாம்."

இருவரின் குதிரைகளும் அரண்மனையை நோக்கி வேகமாகப் பறக்க ஆரம்பித்தன.

அரண்மனைக்குள் நுழைந்ததும் வெங்கடகிருஷ்ணன் அவனிடமிருந்து விடைபெற்றுக் கொள்ள, சொக்கநாதன் தனது புரவியை மெய்க்காவலனிடம் கொடுத்துவிட்டு அந்தப்புரத்திற்குள் நுழைந்தான். கண்கள் அந்தப் பெண் வந்த சிவிகையைத் தேடின.

சற்று தூரத்தில் இருக்கும் தனது தாய் வையாம்பிகா தேவியின் மாளிகை வாசலருகே அந்தச் சிவிகை இறக்கி வைக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அங்கு சென்று பார்ப்பதற்கு அவனுக்குத் தயக்கமாக இருந்தது.

தன்னுடைய மாளிகைக்குச் சென்றான். போர்ப் பயிற்சியால் ஏற்பட்ட களைப்பு தீர நன்றாகக் குளித் தான். நறுமணம் கமழும் பூசு பொடிகளைத் தன் மேனி எங்கும் தூவினான். மன்னனுக்குரிய அலங்காரங்களைச் செய்து கொள்ள ஆரம்பித்தான்.

ஆனால் மனம் முழுவதும் சிவிகையில் பார்த்த பெண்ணைப் பற்றியே வட்டமிட்டுக் கொண்டிருந்தது. யார் அவள்? எதற்காக எனது அன்னையைப் பார்ப் பதற்கு வந்திருக்கிறாள்?

வெங்கடகிருஷ்ணன் சொன்ன மாதிரியே அழகாகத் தான் இருக்கிறாள்! இவளைவிட தஞ்சை இளவரசி அழகு என்கிறானே! அது உண்மையாக இருக்குமோ?

இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும்! தஞ்சைப் பெண்களே திமிர் பிடித்தவர்கள்! அதிலும் உண்மை யிலேயே அழகாக இருந்து விட்டால், அவள் திமிரை அளக்க எந்த நாழியாலும் முடியாது. அப்படிப்பட்ட பெண்ணை மணந்தால், அது எனது பாட்டனார் பட்ட பாட்டை விட அதிக வேதனையைத் தரும். அவளைப் பற்றியே நினைக்க வேண்டாம்.

ஆனால் தஞ்சைக்குச் செல்ல வேண்டும். விஜயராகவ நாயக்கனின் விருப்பமான பொருளைக் கவர்ந்து வந்து குருநாதர் காலடியில் வைத்து 'உளவுக் கலையிலும் உன்னை மிஞ்ச ஒருவராலும் முடியாது சொக்கநாதா' என்று அவர் வாயால் பாராட்டு பெற வேண்டும். எப்படி?

தஞ்சைக்கு செல்வதற்கு தாய் அனுமதி மறுப்பார். அதனால் அவரிடம் பொய்யுரைக்க வேண்டும். என்ன சொல்லலாம்?

சொக்கநாதன் இப்படி குழப்பத்தில் இருக்கும் பொழுது, அவனை அவன் தாய் அழைப்பதாக ஒரு தாதி வந்து சொன்னாள்.

சொக்கநாதன் தன் அலங்காரங்களை அவசரமாக முடித்துக் கொண்டு தன் தாயின் மாளிகையை நோக்கிச் சென்றான்.

மாளிகை வாயிலை நெருங்கியதுமே உள்ளிருந்து பேச்சுக் குரல் கேட்டது. ஒன்று அவனுடைய தாயார். மற்றொரு குரல் குயில் கூவுவதைப் போல் இனிமையாக இருக்கிறதே! யாராக இருக்கும்? ஒரு வேளை சிவிகையில் வந்த பெண்ணாக இருக்குமோ?

அவசரமாக உள்ளே நுழைந்தவன், தனது தாயுடன் பேசிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் திகைத்து விட்டான்.

அறையின் நடுவே அலங்காரமாக இருந்த மஞ்சத்தில் அவனது தாயார் வையாம்பிகாவின் அருகில் மிக நெருக்கமாக அமர்ந்தவாறு அந்தப் பெண் பேசிக் கொண்டிருந்தாள். சிவிகையில் வந்த அதே பெண்தான். சிவிகையில் பார்த்ததை விட, இவ்வளவு பக்கத்தில் பார்க்கும் பொழுது இன்னும் அழகாகத் தெரிகிறாள்.

அதே நேரம் சொக்கநாதன் உள்ளே நுழைவதைப் பார்த்தவுடன் அந்தப் பெண்ணின் முகத்தில் அதிர்ச்சியும் நாணமும் தெரிந்தன. அடுத்த கணம் அவசரமாக எழுந்து, பக்கத்தில் இருந்த அறைக்குள் ஓடி விட்டாள்.

வையாம்பிகா சிரித்தவாறு சொக்கநாதனைப் பார்த்து, "வா, மகனே! இப்படி உட்கார்!" என்றாள்.

சொக்கநாதன் உட்கார்ந்தவாறு, ''அழைத்தீர்களாமே?" என்றான்.

"ஆம். உனது பயிற்சிக் காலம் முடிந்து விட்டதாக உன் குருநாதர் சொன்னார்."

''ஒன்றே ஒன்று மட்டும் மீதி உள்ளது. அதனைப் பற்றிப் பேசுவதற்காக நானே தங்களைத் தேடி வரலாம் என்றிருந்தேன்.''

''அதனைப் பிறகு பேசிக் கொள்ளலாம். இனி நீ அரசாங்கப் பொறுப்புகளை ஏற்று நடத்துவதில் தடையில்லை என்று உன் குருநாதர் நேற்று என்னிடம் பேசிக் கொண்டிருந்தார். எனக்கும் வயதாகிக் கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் ஒரு நல்ல நாள் பார்த்து. பொறுப்புக்களை உன்னிடம் ஒப்படைத்து விட்டால் தான் எனக்கு நிம்மதி. அதற்கு முன் உனக்கு ஒரு பரிசு அளித்திட விரும்புகிறேன்.''

''பரிசா ? என்ன பரிசு ?''

''ஒரு அற்புதமான மாங்கனியை உனக்காக வரவழைத்திருக்கிறேன்.''

''வரவழைத்திருக்கிறீர்களா ? எங்கிருந்து ?''

''நமது மண்ணில் விளைந்த கனிதான். ஆனால் பருவத்திலேயே பறிக்கப்பட்டு, பழுக்கும் வரை சந்திரகிரியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டது. காலம் கனிந்ததும் உனக்காக வரச் சொன்னேன். இன்று காலைதான் வந்து சேர்ந்தது.''

''நீங்கள் சொல்வது ஒன்றும் புரியவில்லை.''

வையாம்பிகா சிரித்தவாறு, ''நீ இங்கு நுழைந்ததும் ஒரு அழகுப் பெண் உள்ளே ஓடி ஒளிந்து கொண்டாளே, அவள்தான் நான் சொன்ன கனி'' என்றாள்.

''நான் சரியாகப் பார்க்கவில்லை. யாரம்மா அந்தப் பெண் ?''

''நீ சிறு வயதில் பார்த்துப் பழகிய பெண்தான். நமது பழைய தளவாய் லிங்கநாயக்கர் இருந்தாரே. அவருடைய மகள் முத்துநகைதான் இந்தப் பெண்.''

அவளுடைய பெயர் அன்னமுத்து என்றுதானே என் நினைவு ?''

''பரவாயில்லையே ! பெயரைக் கூட நினைவில் வைத்திருக்கிறாயே ! அவளுக்கு இட்ட பெயர் அன்ன முத்துதான். சந்திரகிரியில் அவளை மங்கா என்று அழைத்தார்களாம். எனக்கு இரண்டுமே பிடிக்கவில்லை ! நமது தமிழ் மண்ணிற்கு ஏற்ப முத்துநகை என்று நான் கூப்பிடுகிறேன். அவளுடைய தந்தை இறந்த பிறகு, தாய் வழி சிற்றன்னை வீட்டில் வளர்ந்தாள். உரிய காலம் வந்ததும் நானே அழைத்துக் கொள்கிறேன். என்று சொல்லி இருந்தேன். இப்பொழுது காலமும் கனிந்து விட்டது, பெண்ணும் கனிந்து இருக்கிறாள். உனக்குப் பிடித்திருக்கிறதா ?''

''நான் அவளை சரியாகப் பார்க்ககூட இல்லையே ! நான் வந்ததும் உள்ளே ஓடி விட்டாள்.''

''நீ அவளை நன்றாகப் பார்க்க வேண்டும். அவ்வளவு தானே ! இதோ கூப்பிடுகிறேன். முத்துநகை ! இப்படி வாம்மா ! இன்னும் என்ன வெட்கம் ? மதுரைக்கு மன்னனாக இருந்தாலும் உனக்கு அத்தான்தானே. அதிலும் உன்னை மணந்துகொள்ளப் போகிறவன்! அவனிடம் என்ன வெட்கம் ? வாம்மா !''

உள்ளிருந்து பதிலே இல்லை. முத்துநகை முகத்தைக் கரங்களால் மூடிக் கொண்டு மஞ்சத்தில் சாய்ந் திருந்தவள். வெட்கத்தில் எழவே இல்லை.

வையாம்பிகா சற்று நேரம் யோசித்துவிட்டு, ''சரி சொக்கநாதா, அவள் மிகவும் வெட்கப்படுகிறாள் இங்கேதானே இருக்கப் போகிறாள். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம். நீ சென்று வா!'' என்றாள்.

உடனே எழப்போன சொக்கநாதன் கையைப் பிடித்து உட்கார வைத்து 'பேசாதே' என்று ஜாடை

காட்டினாள். ஒரு தாதியை அங்கிருந்து வெளியே செல்லுமாறு கண்களால் பணித்தாள். சற்று நேரம் அமைதியாக இருந்தாள். சொக்கநாதனுக்கு ஒன்றும் புரியவில்லை.

பிறகு வையாம்பிகா, உள்ளறையைப் பார்த்து. "முத்துநகை. சொக்கநாதன் போய்விட்டான். இனி வெளியில் வா. எனக்கு தாகமாக இருக்கிறது. அந்த அறையில் பழரசம் இருக்கிறது. அதனை ஒரு குவளையில் எடுத்துக் கொண்டு வா!" என்றாள்.

சற்று நேரத்தில் அங்கு பாத்திரங்கள் எடுக்கும் ஓசை கேட்டது. அடுத்த சில நிமிடங்களில் பழரசக்குவளையை ஏந்தியவாறு முத்துநகை வெளியே வரத் தொடங்கினாள். செம்பொன்னால் வார்த்து எடுக்கப்பட்ட சிலையைப் போல வந்த முத்துநகையின் முழு அழகைப் பார்த்து சொக்கநாதன் வியந்து போனான்.

அதே நேரம் அந்த அறையில் சில அடி தூரம் நடந்து வந்த முத்துநகை, சொக்கநாதன் இன்னும் அங்கு உட்கார்ந்திருப்பதைப் பார்த்துப் பதறி. தன் கையில் இருந்த பழரசக் குவளையை நழுவ விட்டாள்.

'டனார்' என்று அந்தக் குவளை கீழே விழுந்து, பழரச பானம் தரையில் சிதறி ஓடியது. அதை விட வேகத்தில் முத்துநகை நாணம் முந்த. அறைக்குள் ஓடிக் கதவைச் சாத்திக் கொண்டாள்.

வையாம்பிகாதேவி விழுந்து விழுந்து சிரித்தாள். பிறகு மகனைப் பார்த்து, "இப்பொழுது நன்றாகப் பார்த்துக் கொண்டாயா, சொக்கநாதா? இவளைத் தான் நீ மணக்கப்போகிறாய்!" என்றாள்.

"திருமணத்திற்கு இப்பொழுது என்னம்மா அவசரம்? எனது பயிற்சிக் காலம் முடிவடைந்தவுடன் ஒரு முக்கியமான சடங்கு ஒன்றைச் செய்த பிறகுதான்

அரசாங்கப் பொறுப்புக்களை ஏற்பது நல்லது என்று நமது குருநாதர் கூறினார்."

''அது என்ன சடங்கு !"

''தஞ்சாவூர் இருக்கிறதல்லவா. அதற்கு..."

''தஞ்சையா ! ஐயோ, மகனே ! தயவு செய்து அங்கே மட்டும் போகும் எண்ணத்தை அடியோடு மறந்துவிடு. விஜயராகவ நாயக்கன் நம் குடும்பத்தின் மீது தீராப் பகை கொண்டிருக்கிறான். உன் தாத்தா மீதுள்ள கோபத்தில் உன்னைக் கொன்றாலும் கொன்று விடுவான்."

"தஞ்சைக்குச் செல்லவில்லை. அம்மா ! தஞ்சைக்கு அருகே இருக்கும் திருவரங்கத்திற்குச் சென்று நமது குலதெய்வம் அரங்கநாதப் பெருமான் ஆசி பெற்ற பிறகு அரசாங்கப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வது சாஸ்திரப்படி சாலச் சிறந்தது என்றார், நமது குருநாதர்."

''நேற்று நான் பேசிக் கொண்டிருந்த பொழுது அப்படிச் சொல்லவில்லையே ?"

''இது வழக்கமான விஷயம்தானே என்ற நினைப்பில் சொல்லாமல் விட்டிருக்கலாம். ஆனால் என்னிடம் சொன்னார். சொல்லும் பொழுது நமது வெங்கட கிருஷ்ணனும் உடன் இருந்தான். உங்களுக்கு சந்தேகமாய் இருந்தால் அவனை அழைத்து வரட்டுமா ?"

''நீ சொன்னால் சரிதான். என்றைக்குச் செல்ல வேண்டும் ?''

''நாளை நல்ல நாளாக இருக்கிறது. நாளையே கிளம்பிச் செல்வது தான் உத்தமமானது என்று குருநாதர் கூறினார்."

''எத்தனை நாட்களில் திரும்பி வருவாய் ?''

''இரண்டு மாதம் ஆகலாம் என்று நினைக்கிறேன்.''

இதைக் கேட்டதும் வையாம்பிகா அதிர்ச்சியுற்று. ''இதோ இருக்கும் திருவரங்கம் சென்று வருவதற்கு இரண்டு மாதங்களா ? நீ சேவிக்கப் போகிறாயா ? இல்லை, அரங்கநாதனுக்கு புதிதாக கோயில் எழுப்பப் போகிறாயா ?'' என்றாள்.

''அம்மா, அரங்கநாதப் பெருமானிடம் ஆசி பெற்று விட்டு, அப்படியே திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல நினைக்கிறேன். தஞ்சைக்கு மிக அருகில் இருப்பதால், திருச்சிராப் பள்ளி கோட்டையின் மீது விஜயராகவ நாயக்கனுக்கு கண் இருக்கும். அதனால் அதன் பாதுகாப்பை பலப் படுத்திவிட்டு வா என்று குருநாதர்தான் கட்டளை இட்டார் அம்மா.''

இதனைக் கேட்ட பிறகு வையாம்பிகா சொன்ன விஷயங்கள் சொக்கநாதனுக்குக் கோபத்தையும், முத்து நகைக்கு அதிர்ச்சியையும் வரவழைத்தன. அதனால் முத்துநகை, சொக்கநாதனை தனிமையில் சந்திக்க முடிவு செய்தாள்.

5

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் தளவாயும் அவனுக்கு ஒருவகையில் உறவினனுமான, ரங்கப்ப நாயக்கன் அந்தப்புரத்தை நோக்கி விரைந்து வரத் தொடங்கினான்.

இளவரசி சந்திரவதனாவை இன்னும் ஒரு முகூர்த்த வேளை கடந்த பின்னர் மன்னரின் மாளிகைக்கு வரும்படி

ரங்கப்ப நாயக்கனிடமே மன்னர் பகர்ந்திருந்தார். ஆனால் வேண்டுமென்றே தான் நேரில் போகாது, தனது மகனை அந்தப்புரத்திற்குள் அனுப்பியது ரங்கப்பன் தான்.

ரங்கப்பனின் ஒரே மகனான அச்சுதனுக்கு ஆரம்பத்தில் இட்ட பெயர் ரங்கநாதன்தான். தந்தையின் பெயரையே மகனுக்கும் வைத்தால் கூப்பிடுவதற்கு வசதியாக இருக்காது என்ற நினைப்பில் அச்சுதப்பா என்று கூப்பிடத் தொடங்கி இன்று அதுவே பெயராக நிலைத்து விட்டது

ரங்கப்ப நாயக்கன் தஞ்சை மன்னனுக்கு மைத்துனன் முறை. அந்த வகையில் தனது மகன் அச்சுதப்பனுக்கு இளவரசி சந்திரவதனாவை மணமுடித்து விட வேண்டும் என்ற அவா அவனுக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது.

சமீபத்தில்தான் இளவரசி பருவம் எய்தி இருந்ததால் தனது மகன் அச்சுதப்பனும், அவளும் அடிக்கடி சந்தித்துப் பேசும்படியான ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தால், அவர்களுக்குள் எப்படியாவது காதல் மலருமே என்ற நினைப்பில்தான், அச்சுதப்பனை இப்பொழுது அந்தப் புரத்திற்குள் அனுப்பி இருந்தான். ''இளவரசியுடன் நெருங்கிப் பழகு" என்று மகனிடம் அடிக்கடி உபதேசம் செய்து கொண்டிருந்தான்.

மகனை அந்தப்புரத்திற்குள் அனுப்பிய சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் மனதில் சிறிய பயம் எழலாயிற்று அச்சுதப்பன் பிறவியில் இருந்தே சற்று மந்தபுத்தி உடையவன். இளவரசியை நேரில் பார்த்தவுடன் அவள் அழகில் மயங்கி ஏதேதோ பிதற்றிவிட்டு மன்னர் கூறிய செய்தியைச் சொல்லாமல் விட்டுவிடுவானோ ? அதனால் மன்னரின் கோபத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற பயம் அவனைப் பிசைந்தது.

அதனால் தானே நேரில் சென்று தெரிவிப்பது நல்லது. ஒருவேளை அச்சுதப்பனும் இளவரசியும் தனிமையில் சந்தித்தால் அவர்கள் நெருக்கம் எப்படி இருக்கிறது என்று மறைந்திருந்து பார்த்து கொள்ளலாமே என்ற நினைப்பு வேறு!

ரங்கப்பன் அந்தப்புரத்திற்குள் நுழைந்ததும், தன் மகன் வாசலை நோக்கி வருவதைப் பார்த்து வியந்தான்.

"என்ன அச்சுதப்பா, அதற்குள் திரும்பி விட்டாய்?" என்றான் மகனைப் பார்த்து.

"நீங்கள் சொன்ன சேதியை இளவரசியிடம் சொல்லி விட்டேன். வேலை முடிந்தது. திரும்பி விட்டேன்."

"மடையா! இதற்காகவா உன்னை அங்கு அனுப்பினேன்? இதைச் சொல்ல ஒரு தாதியை அனுப்பத் தெரியாதா எனக்கு? இளவரசியிடம் ஆர, அமர நிதானமாகப் பேசி கடைசியில் சேதியைச் சொல்லிவிட்டு மெதுவாக வரவேண்டியதுதானே!"

"நீங்கள் என்னை அனுப்பி எவ்வளவு நேரம் ஆயிற்று! இவ்வளவு நேரம் இளவரசியிடம்தான் பேசிக் கொண்டிருந்தேன். போதாதா?" என்று எரிச்சலுடன் கேட்டான்.

"இவ்வளவு நேரம் நீங்கள் இருவர் மட்டும் தனியாகவா பேசிக்கொண்டிருந்தீர்கள்?" என்று ஆவல் பொங்கக் கேட்டான்.

"ஆ... ஆமாம்" என்று சற்று தடுமாறி விட்டு, "நான் இங்கு வரும்பொழுது இளவரசி நாலைந்து பெண்களுடன் பந்து விளையாடிக் கொண்டிருந்தாள். அவள் விளையாடி விட்டு வரட்டுமே என்று சற்று நேரம் காத்திருந்தேன்."

"மன்னர் சொன்ன செய்தியைச் சொன்னாயா இல்லையா?"

"எதற்கு இப்படி கோபிக்கிறீர்கள்? அதைக் கூடவா சொல்லாமல் வந்திருப்பேன்? பெண்களாக விளையாடிக் கொண்டிருக்கிறார்களே என்ற வெட்கத்தில் ஒரு தூணருகே காத்திருந்தேன். அதே நேரம் இளவரசி என்னைப் பார்த்துவிட்டு, உடனே பந்து விளையாடுவதை நிறுத்திவிட்டு ஓடோடி வந்துவிட்டாள். என்னிடம் எவ்வளவு நேரம் கேலி செய்தாள் தெரியுமா? கடைசியாக அந்தச் செய்தியைக் கூறிவிட்டு இப்பொழுதுதான் வருகிறேன்."

"என்ன? இளவரசி உன்னுடன் கேலி செய்தாளா? நிஜமாகவா? எப்படி?" ஆவல் பொங்கக் கேட்டான்.

"போங்கள் தந்தையே! இதையெல்லாமா உங்களிடம் சொல்வது? இளவரசிக்கு குறும்பு அதிகம்! 'பெண்கள் விளையாடுவதைப் பார்த்து விட்டு ஆணாகிய நீங்கள் வெட்கப்பட்டு, இப்படித் தூணுக்கு அருகே ஒளிந்து கிடக்கலாமா? உரிமையோடு வந்து என்னைக் கூப்பிடுவது தானே' என்று என்னென்னவா சொல்லி கேலி பண்ணினாள்."

இதைக் கேட்டவுடன் ரங்கப்பனுக்கு நிம்மதி ஏற்பட்டது. இனி தன்னுடைய எண்ணம் எளிதாக நிறைவேறிவிடும் என்று மனதிற்குள் பூரிப்படையத் தொடங்கினான்.

"நீங்கள் சொன்ன பணியை ஒழுங்காக நிறைவேற்றி விட்டேன் இல்லையா? இனி நான் செல்லலாமா? காவற் கூடத்தில் என் நண்பர்கள் காத்துக்கிடப்பார்கள்."

"காவற்கூடத்திற்கு செல்வது சரி. மாலைக் கருக்கலில் நீ உனது நண்பர்களுடன் சேர்ந்து கள்குடிக்கப் போவதாக என் காதுகளில் விழுந்தது. அது நல்ல பழக்கம் இல்லையடா அச்சுதப்பா!"

''நானா ? கள் குடிக்கிறேனா...? ஹே... ஹே... ஹே...'' வலிந்து சிரித்தான். பிறகு, "எனக்கு அந்த வாசனையே பிடிக்காதே ! யார் இப்படி ஒரு பொய்யைத் தங்களிடம் பகன்றது ? சுாவற்கூடத்தில் யாராவது ஒரு குடிகார நண்பனிடம் பேசிக் கொண்டிருந்திருப்பேன். அவனை தூரத்தில் இருந்து யாராவது பார்த்துவிட்டு, நானும் அவனைப் போலவே குடித்து இருக்கிறேன் என்று நினைத்திருப்பான்."

"உன்னை, இந்த நாட்டிலேயே உயர்ந்த இடத்தில் உட்கார வைக்க நினைக்கிறேன். அதனைக் கெடுக்கும் படியான கெட்ட பழக்கங்களில் நீ ஈடுபடாமல் இருந்தால் சரி !"

''எனக்குத்தான் அந்தப் பழக்கம் இல்லை என்கிறேனே ! திரும்பத் திரும்ப ஏன் அதையே சொல்கிறீர்கள் ? நேரம் ஆகிறது. நான் போகட்டுமா ?" என்று சிடுசிடுத்தான்.

''சரி போய்வா !" என்றவன், அப்பொழுதுதான் தனது மகனை முழுமையாகப் பார்த்தான். உடனே திடுக்கிட்டான்.

இரண்டடி எடுத்து வைத்த தனது மகனை உடனே நிறுத்தினான்.

"அச்சுதப்பா, சற்று நில் !"

"என்னப்பா ?" எரிச்சலுடன் நின்றான்.

''இடுப்பில் இருந்த உன் உடையவாள் எங்கே ? உறை மட்டும் தொங்கிக் கொண்டிருக்கிறதே."

அப்பொழுதுதான் தன் உடைவாளை இளவரசியிடம் இருந்து திரும்ப வாங்கி வராததை உணர்ந்த அச்சுதப்பன்

ஒருகணம் திடுக்கிட்டான். பிறகு அவசரமாக முக பாவனையை மாற்றினான்.

"ஹி... ஹி... ஹி... அது ஒரு பெரிய கதை தந்தையே!" அசடு வழிய சிரித்தான்.

"ஒரு ஆண் மகன். அதிலும் போர் வீரன். அதைவிட அரச குலத்தைச் சேர்ந்தவன், தன் இடுப்பில் இருந்த வாளை தவற விட்டுவிட்டு வருவது உனக்கு கதையாகத் தெரிகிறதா?" கோபமாகக் கேட்டான்.

''நான் சொல்லி முடிப்பதற்குள் எதற்கு இவ்வளவு கோபப்படுகிறீர்கள் தந்தையே? நடந்தது முழுக்கக் கேட்டால், நீங்களே மகிழ்ச்சி அடைவீர்கள்."

"உடைவாள் தவறும்படி அப்படி என்ன நடந்தது?"

"உடைவாள் தவறவில்லை தந்தையே! உரிமையோடு என்னிடம் இருந்து எடுத்துக்கொள்ளப்பட்டது."

"புரியும்படியாகச் சொல்லடா, புத்திகெட்டவனே!''

"இப்படியெல்லாம் திட்டினால் நான் சொல்ல மாட்டேன்," என்றவாறு நகர முற்பட்டவனை அவசரமாகக் கையைப் பிடித்து நிறுத்தினான்.

"சரி... சரி, நடந்ததைச் சொல்!"

"இளவரசியும் நானும் தனிமையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோமா, அப்பொழுது அவள் என் இடுப்பில் இருக்கும் உடைவாளைப் பார்த்து வியந்தாள்."

"வியக்கும்படியாக உன் உடைவாளில் என்ன இருந்தது?''

"நீங்கள் பெரிய வீரர் என்று அந்தப்புரத்து பெண்கள் பலர் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள். உங்கள் வீரத்

திற்குப் பெருமை சேர்க்கும் உடைவாளைப் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. தயவு செய்து எடுத்துத் தாருங்கள் என்று நச்சரித்தாள்."

"பிறகு?'' ரங்கப்பனின் கண்களில் மகிழ்ச்சி தட்டுப் பட ஆரம்பித்தது.

"நான்தான் உடைவாளை உருவித் தந்தேன். அதனை தூக்கிப் பார்த்து 'அப்பப்பா என் இரு கைகளாலும் இதனைத் தூக்க முடியவில்லையே! இதனைத் தாங்கள் ஒரு கையால் எடுத்து எப்படித்தான் சுழற்றுகிறீர்களோ' என்று வியந்தாள். 'உங்கள் நினைவாக இந்த வாளை மட்டும் ஒரு சில நாட்கள் வைத்திருந்து விட்டு பிறகு தரு கிறேன்' என்றாள். நான் மறுத்தேன். பிடிவாதம் பிடிக்கத் தொடங்கினாள். சரி, வயதில் சிறியவள்! சிறு குழந்தையைப்போல் ஆசைப்படுகிறாளே என்று வேண்டா வெறுப்பாக நான்தான் கொடுத்துவிட்டு வருகி றேன். இது தவறா தந்தையே?"

"தவறே இல்லை. அவள் எது கேட்டாலும் கொடு!" என்றான் ரங்கப்ப நாயக்கன், மகிழ்ச்சி ததும்ப!

''சரி! நான் போகட்டுமா?"

"இளவரசியிடம் வேடிக்கையாகப் பேசிக் கொண்டி ருந்ததில் மன்னர் சொன்ன சேதியை மறந்து விட்டையா? கடைசியாக சொன்னாய் இல்லையா?"

''சொன்னேன்! சொன்னேன்! சொன்னேன்! திரும்பத் திரும்ப அதையே கேட்டு ஏன் நச்சரிக்கிறீர்கள்? உங்களுக்கு சந்தேகம் இருந்தால் இளவரசியிடம் போய் கேட்டுக் கொள்ளுங்களேன்" என்றவன், எரிச்சலுடன் நடக்க ஆரம்பித்தான்.

சற்று தூரம் நடந்தவன் திடீரென்று நின்று திரும்பி தனது தந்தையைப் பார்த்து, ''வாளைப் பற்றி நான் சொன்ன விஷயத்தை மட்டும் இளவரசியிடம் கேட்காதீர்

கள். 'நமக்குள் நடப்பதை எல்லாம் உங்கள் தந்தையிடம் சொல்ல வேண்டுமா' என்று என்னுடன் கோபித்துக் கொண்டு ஒரு வாரம் பேசமாட்டாள்" என்று சொல்லி விட்டு வேகமாக அந்தப்புரத்தை விட்டு வெளியேறத் தொடங்கினான்.

மகன் வெளியேறுவதையே பார்த்தவாறு நின்ற ரங்கப்பன் சற்று நேரம் யோசித்தான். அச்சுதப்பன் இவ்வளவு தூரம் சொல்வதைப் பார்த்தால், இளவரசியிடம் செய்தியைச் சொல்லி இருப்பான் இருந்தாலும் நாமும் ஒரு தடவை சொல்லிவிட்டால் நல்லது!

இந்த நினைப்பில் அந்தப்புரத்திற்குள் நுழைந்து இளவரசி இருக்கும் இடம் நோக்கி நகர்ந்தான் தளவாய் ரங்கப்ப நாயக்கன்.

வெறுங்கையுடன் சென்ற இளவரசி வீரவாளுடன் வருவதை வியப்புடன் பார்த்து தங்கள் ஆட்டத்தை நிறுத்தினார்கள் பந்தடிக்கும் அந்த பாவையர்கள்.

"என்னடி சந்திரவதனா, அந்த உருவத்தோடு சண்டை போட்டாயா? வாளுடன் வருகிறாயே! யார் அந்த எத்தன்?" என்றாள் மதுரவாணி.

''எத்தன் இல்லையடி, பித்தன்! நமது தளவாய் ரங்கப்பரின் புத்திரன் அச்சுதப்பன். என் தந்தை சொல்லி அனுப்பிய செய்தியைச் சொல்ல வந்திருக்கிறான். நாம் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றவுடன் பித்தம் தலைக்கேறி ஒளிந்திருந்து பார்த்திருக்கிறான்."

பிறகு இருவரும் அங்கிருந்த மற்ற பெண்களை கலைந்து செல்லுமாறு அனுப்பி விட்டு, நந்தவனத்திற்குள் வந்து ஒரு கல் மேடையில் உட்கார்ந்தனர்.

''இந்த வாள் எப்படி உன் கையில் வந்தது?" என்றாள் மதுரவாணி.

"உறையிலிருந்து வாள் உருவப்பட்டதைக் கூட உணர முடியாத அளவுக்கு பித்தம் தலைக்கேறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு என்னைப் பார்த்த வுடன் பித்துக்குளி மாதிரி ஏதேதோ உளறினான். வாளைத் திரும்ப வாங்கவேண்டும் என்ற உணர்வுகூட இல்லாமல் என்னையே திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டே போனான். இவன் எல்லாம் ஒரு வீரனா?'' எரிச்சலோடு சொன்னாள் சந்திரவதனா.

''அச்சுதப்பன் உனக்கு மாமன் முறையல்லவா! உன்னை மணக்கப் போகிறவன். உன் மீதுள்ள காதலில் சொக்கிப் போயிருப்பான்."

"அவனை மணக்க நான் ஒருநாளும் சம்மதிக்க மாட் டேன்.''

''அச்சுதப்பனுக்கு என்ன குறை? பனை மரத்தில் பாதி உயரம். ஆஜானுபாகுவான உடல், அழகான முகம், மிகச் சிறந்த வீரர்.''

''மதுரவாணி, நீ இப்பொழுதே நமது வைத்தியரைப் பார்ப்பது நல்லது."

"ஏன்? எனக்கென்ன வியாதி?"

"உன் சித்தத்தில் ஏதோ கோளாறு! பார்க்கிறவரை எல்லாம் அழகு என்கிறாய்! வீராதி வீரர் என்கிறாய்!"

"வேறு யாரைச் சொன்னேன்?"

"சற்று நேரத்திற்கு முன் சொன்னதை மறந்து விட் டாயா? எவனோ மதுரையில் இருக்கிறானாமே? பெயர் கூட... ம்... சொக்கநாதனோ என்னவோ? அவன் பெரிய வீரன். அழகிற் சிறந்தவன் என்று பிதற்றினாயே? மறந்து விட்டதா?"

"எனக்கு உண்மையிலேயே மறந்து விட்டது. நீதான் அவரை மறக்காமல் இருக்கிறாய். உன் மனம் மதுரை மன்னன் மீதுதான் வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது என்று இப்பொழுதுதானே தெரிகிறது."

"சேச்சே! இரக்கமற்ற பரம்பரையில் வந்தவனை நான் எதற்கு நினைத்துப் பார்க்க வேண்டும்? இனி அவனைப் பற்றி என்னிடம் பேசாதே!"

"நான் எங்கே பேசினேன். நீதான் பேச்சை ஆரம்பித்தாய்! இப்பொழுது என்னையே கோபிக்கிறாய்! உனக்கு உண்மையிலேயே அவரைப் பற்றிப் பேசவேண்டும் என்று உள்ளுக்குள் ஆசை இருக்கிறது இல்லையா?"

"வாணி, இனியும் அவனைப் பற்றி நீ பேச்செடுத்தால் எனக்குக் கோபம் வந்துவிடும்."

"சொக்கநாதனின் அழகையும், வீரத்தையும் பற்றி மதுரைக்குச் சென்று வந்த பலர் என்னிடம் வியந்து பேசி இருக்கிறார்கள்."

"விடுடி இந்தப் பேச்சை! எந்தப் பயல் எப்படி இருந்தால் எனக்கென்ன?"

முகத்தை கடூரமாக வைத்துக் கொண்டு வேறு புறமாகத் திருப்பிக் கொண்டாள் சந்திரவதனா! மதுரவாணி அவள் முகத்தை மறுபடியும் தனது பக்கமாகத் திருப்பி குறுநகை வீசி கூற ஆரம்பித்தாள்.

"கோபித்துக் கொள்ளாதே! இனி நீ கட்டாயப் படுத்தினால்கூட நான் மதுரை மன்னன் பேச்சையே எடுக்க மாட்டேன்! சரிதானா? கொஞ்சம் சிரியேன்."

சந்திரவதனா சிரித்தாள்.

"அச்சுதப்பன் உடைவாள் உன் கையில் எப்படி வந்தது என்று விவரமாகக் கூறு சந்திரவதனா! தூணருகே என்ன நடந்தது?"

மதுரவாணி இந்தக் கேள்வியை இளவரசியிடம் கேட்ட அதே நேரம், தளவாய் ரங்கப்ப நாயக்கன் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். 'அச்சுதப்பன்' என்று தனது மகன் பெயர் அடிபடுவதைக் கேட்டவுடன் அங்கு மறைந்திருந்து அவர்கள் பேசுவதைக் கேட்கத் தொடங்கினான்.

தூணின் மறைவில் பதுங்கியிருந்த அச்சுதப்பன் பின்புறமாகச் சென்று அவன் வாளை உருவி நெஞ்சில் பதித்ததையும், பிறகு அவன் தத்துப்பித்தென்று உளறியதையும், முடிவில் வாளை மறந்து விட்டு அவன் சென்றதையும் இளவரசி விளக்கமாகச் சொல்லிச் சொல்லிச் சிரித்தாள். இதைக் கேட்ட ரங்கப்பனுக்கு ஆத்திரம் பெருகத் தொடங்கியது.

"எப்படி இருந்தால் என்ன? இந்த அச்சுதப்பனுக்குத் தான் உன்னை உனது தந்தை மணமுடித்துக் கொடுப்பார் என்று இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள்."

"ஒன்று மட்டும் நன்றாகக் கேட்டுக்கொள்ளடி! என்னை மணப்பவர் அழகிலும், வீரத்திலும் இணையற்ற வராய் இருக்கவேண்டும். வாளை உருவியது கூட உணராத நிலையில், மறைந்தவாறு பெண்களை ரசிக்கும் இந்தக் கேடு கெட்டவனை நான் ஒருநாளும் மணந்து கொள்ள மாட்டேன். இது உறுதி!" என்றாள் இளவரசி.

இதைக் கேட்ட ரங்கப்ப நாயக்கன் உள்ளுக்குள் கறுவத் தொடங்கினான். 'உன்னை என் மகனுக்கே மணமுடித்துக் கொடுத்து, இந்த நாட்டுக்கே அவனை மன்னனாக்கா விட்டால் என் பெயர் ரங்கப்பன் இல்லை.'

ரங்கப்பன் பிறகு அவர்களை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனைப் பார்த்ததும் இருவரும் பதறிப்போய் எழுந்தார்கள்.

"வாருங்கள் தளவாய் அவர்களே!" என்றாள் இளவரசி.

"மன்னர் உன்னை இன்னும் ஒரு முகூர்த்தவேளை கடந்த பிறகு அவருடைய மாளிகையில் வந்து காணுமாறு சொல்லி அனுப்பினார்."

"தங்கள் மைந்தர் சற்று நேரத்திற்கு முன்புதானே அதை சொல்லிவிட்டுச் சென்றார்."

"இருந்தாலும் நானும் ஒருமுறை நேரில் வந்து சொல்லி விடுவது நல்லது என்று நினைத்தேன். வந்தேன்."

"அப்படியா! நன்றி! தங்கள் புதல்வர் இங்கு வந்திருந்தபோது கவனக்குறைவாக தனது வாளை மறந்து விட்டுப் போய்விட்டார். இதனை அவரிடமே கொடுத்து விடுங்கள்!" என்றவாறு வாளை இளவரசி நீட்ட, மதுரவாணி சிரித்தாள்.

ரங்கப்பனுக்கு கடுப்பு ஏறியது. 'சிரிக்கிறாயடி மதுரவாணி! உன் வாழ்க்கையைச் சிரிப்பாய் சிரிக்கும்படி செய்கிறேனா இல்லையா பார்' என்று உள்ளுக்குள் கறுவ ஆரம்பித்தான்.

ரங்கப்ப நாயக்கன் வாளைப் பெற்றுக்கொண்டு மனதிற்குள் எழுந்த ஆத்திரத்தை மறைத்தவாறு அந்தப்புரத்தை விட்டு அகன்றான்.

சற்று நேரம் கழித்து மன்னன் மாளிகையில், இந்த இரண்டு மங்கையரும் எதிர்பாராத செய்தி ஒன்று தெரிய வந்தது.

6

சொக்கநாதன் தன்னை விட்டுப் பிரிந்து இரண்டு மாதங்கள் வெளியூர் செல்லப் போகிறானே என்ற

வேதனை அவன் தாய் வையாம்பிகா தேவியின் மனதை அரிக்கத் தொடங்கியது.

அதைவிட அவர்கள் இருவரும் பேசுவதை அடுத்த அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த முத்துநகைக்கு ஏமாற்றமாக இருந்தது. அதுவும் தான் வந்த மறுநாளே, தனது மனதுக்குப் பிடித்தவன் தன்னை விட்டுச் செல்ல இருக்கிறானே என்ற ஏக்கம் அதிகமானது.

முத்துநகைக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்தே, அவனை மணக்க இருப்பவன் சொக்கநாதனே என்று சொல்லிச் சொல்லியே வளர்க்கப்பட்டதால், அவன் மீதிருந்த ஆசையை ஒவ்வொரு நாளும் கூட்டிக்கொண்டே வந்திருந்தாள். பருவம் எய்தி சில ஆண்டுகள் ஆகி விட்டதால், இனி இவள் இருக்க வேண்டிய இடம் மதுரை தான் என்று வையாம்பிகா அழைப்பு விடுக்க ஆசையோடு வந்திருந்தவள், இனி மதுரை அரண்மனையில் தங்கி, தன்னை மணக்க இருக்கும் சொக்கநாதனுடன் நெருங்கிப் பழகவேண்டும், தினமும்அவனைப் பார்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று ஏங்கிக் கொண்டிருந்தாள் ஆனால் அவள் முற்றிலும் எதிர்பாராத விதமாக சொக்கநாதன் நாளையே இங்கிருந்து அகலப் போகிறான் என்பது தெரிந்ததும் அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

வையாம்பிகாவுக்கோ வேறு விதமான வேதனை. பிறந்ததில் இருந்தே தன்னை விட்டுப் பிரியாதவனை மாதக்கணக்கில் பிரிந்திருப்பது என்றால் பெற்ற மனதிற்குப் பெருந்துன்பந்தானே! அதிலும் தஞ்சைக்கு அருகில் செல்லப் போகிறானே என்பதை நினைக்கும் பொழுது துன்பத்தோடு துயரமும் சேர்ந்து கொண்டது.

"மகனே சொக்கநாதா! நீ திருவரங்கத்திற்கு செல்லத்தான் வேண்டுமா?" கவலையுடன் கேட்டாள் வையாம்பிகா.

"என்னம்மா இப்படிக் கேட்கிறீர்கள்? நமது வழக்கப்படி அரங்கனின் ஆசி பெற்ற பிறகுதானே அரசுப் பொறுப்பை ஏற்பது வழக்கம்?"

"அதே அரங்கன்தான் திருமோகூர் கோயிலில் பாம்பணையின் மீது பள்ளி கொண்டிருக்கிறார். அழகர் கோயிலில் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். இங்கு சென்று நீ ஆசி வாங்கினால் போதாதா? அவ்வளவு தூரம் எதற்குச் செல்லவேண்டும்? அதிலும் இரண்டு மாதங்கள் உன்னைப் பிரிந்திருப்பதுஎனக்குவேதனையைத் தரவல்லது என்று உனக்குத் தெரியாதா?"

"நமது முன்னோர்களுக்கு திருமோகூரும், அழகர் கோயிலும் தெரியாமலா இருந்தது? அவர்கள்தானே தெற்குத் திருவரங்கம் தேடிச் சென்றார்கள்? திருவரங்கத்தின் மண்ணை மிதிப்பது, வைகுண்டத்தின் வாசலைத் தொடுவதற்கு சமம் என்று பெரியவர்கள் சொல்வதை மறந்து விட்டீர்களா? தங்கள் மகன் வைகுண்ட வாசனிடம் ஆசி பெற்று இந்த மண்ணை சிறப்பாக ஆட்சி செய்ய வேண்டுமல்லவா? இரண்டு மாதப் பிரிவிற்கே இப்படி ஏங்குகிறீர்களே? பொறுப்பு ஏற்ற பிறகு, பலமாதங்கள் கூட வெளியூரில் நான் தங்க வேண்டி வருமே, அப்பொழுது என்ன செய்வீர்கள்?"

"மதுரைக்கு தெற்கே பல ஆண்டுகள் நீ தங்கி இருந்தாலும் நான் கவலைப்படமாட்டேன். ஆனால் இப்பொழுது நீ தஞ்சைக்கு அருகே அல்லவா செல்லப் போகிறாய்! அதை நினைத்தால் தான் எனக்குக் கவலையாக இருக்கிறது."

"தஞ்சைக்கு அருகே என்ன, தஞ்சைக்கு உள்ளே சென்றால் கூட என்னை என்ன செய்ய முடியும்? அந்த விஜய ராகவ நாயக்கன் என்ன மலை விழுங்கியா, என்னை அப்படியே விழுங்கி விடுவதற்கு?"

"அப்படியானால் நீ தஞ்சைக்குச் செல்லப் போகிறாயா?" பதறிப் போய்க் கேட்டாள் வையாம்பிகா.

சொக்கநாதன் உடனே தடுமாறி, "இல்லையம்மா! ஒரு பேச்சுக்குச் சொன்னேன். தஞ்சை மன்னன் என்னை என்ன செய்து விடுவான்?" என்றான்.

"அப்படிச் சொல்லாதேடா! விஜயராகவ நாயக்கனின் தமக்கை அச்சுத ரகுநாதம்மாவைத்தான் உனது தாத்தா திருமலை மன்னர் திருமணம் புரிந்து இருந்தார். அவளுக்கு வாய்த்துடுக்கு அதிகம். சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டாள் உன் தாத்தாவிற்கும் முன் கோபம் அதிகம். உடனே அவளைக் குத்திக் கொன்றுவிட்டார். அதிலிருந்தே தஞ்சைக்கும் மதுரைக்கும் உறவு முற்றிலுமாக அறுபட்டுப் போயிற்று."

"பல தடவை இதைப் பற்றி சொல்லிவிட்டீர்கள்," என்று அலுத்துக் கொண்டான் சொக்கநாதன்

"இருந்தாலும் உன் மனதிலிருந்து மறையக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். தன் தமக்கை கொல்லப் பட்ட செய்தி தெரிந்ததில் இருந்து விஜயராகவ நாயக்கன் நம் மீது எல்லையற்ற கோபத்தில் இருக்கிறான். நமது வம்சத்தையே கருவறுத்துவிட வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறானாம். இந்த நிலைமையில் நீ தஞ்சைக்கு வருவது தெரிந்து, அவனால் உனக்கு ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்றுதான் அஞ்சுகிறேன்."

"உங்கள் அச்சம் அர்த்தமற்றது அன்னையே! முதலில் நான் தஞ்சைக்குச் செல்லப் போவதில்லை இரண்டாவது நமது மண்ணுக்குள் புகுந்து நமக்கே ஆபத்து விளைவிக்கும் ஆற்றல் விஜயராகவ நாயக்கனுக்குக் கிடையாது. அதனால் தயவுசெய்து எனக்கு அனுமதி அளியுங்கள் அம்மா!"

வையாம்பிகா அரை மனதுடன் தலையாட்டினாள். "சரி. போய் வா! அப்புறம் இன்னொரு விஷயம்."

"என்னம்மா?"

"தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் பெரிய பக்திமான். அதிலும் திருவரங்கன் மீது தீவிரமான காதல் பூண்டிருப்பவன். அதனால் ரங்கனைச் சேவிக்க அடிக்கடி திருவரங்கம் செல்கிறான் என்று எனக்கு அடிக்கடி தகவல்கள் வருகின்றன. ஒரு வேளை நீ திருவரங்கம் செல்லும் சமயம் அவனும் கோயிலுக்குள் வந்துவிட்டான் என்று வைத்துக் கொள்! அவனுடன் சந்நிதானத்திற்குள் எந்த சச்சரவும் செய்யாதே! அவன் சேவித்து விட்டு பத்திரமாகத் தஞ்சை திரும்பும் வரை அவனுடன் எந்த விதத்திலும் மோத நீ வழிவகுக்கக் கூடாது. தீராப்பகை கொண்டிருந்தாலும் தெய்வ தரிசனம் பண்ண வந்த பக்தர்களுக்குத் தீங்கு இழைக்க நினைப்பது பெரிய பாவம்."

"தஞ்சை மன்னன் திருவரங்கம் வந்திருக்கிறான் என்ற செய்தி கிடைத்தாலே நான் அங்கு செல்ல மாட்டேன் தாயே! அவன் சேவித்து முடித்து அவன் ஊர் போய்ச் சேரும்வரை நான் திருச்சிராப்பள்ளியிலேயே இருந்து விடுகிறேன் போதுமா?"

"அதைவிட முக்கியமான விஷயம் ஒன்று இருக்கிறது! அப்படி நடந்து விடுமோ என்று என் மனம் அச்சத்தில் துடிக்கிறது சொக்கநாதா! அதை நினைக்கையில் உன்னைத் திருவரங்கம் செல்ல அனுமதி கொடுப்பதற்கே எனக்கு பயமாக இருக்கிறதடா மகனே!"

"தாங்கள் அச்சப்படும்படியாக அப்படி என்னம்மா இருக்கிறது?"

"தஞ்சை விஜயராகவ நாயக்கனுக்குச் சந்திரவதனா என்று ஒரு மகள் இருக்கிறாளாம். மிகவும் அழகானவள்

என்று கேள்விப்பட்டேன். அவளது அழகைப்பற்றி தஞ்சைக்குச் சென்று வந்தவர் என்னிடம் வியந்து பேசி இருக்கிறார்கள். இப்பொழுதுதான் இளமையின் முதல் படியில் காலெடுத்து வைத்திருக்கிறாளாம்"

"இருந்தால் இருந்துவிட்டுப் போகட்டுமே! கழுதை கூட குட்டியில் அழகாகத்தான் இருக்கும்! இதில் நீங்கள் பயப்படும் படியாக என்ன இருக்கிறது?"

"நீ திருவரங்கப் பெருமானை வணங்குவதற்காக சென்ற சமயம் அந்த தஞ்சை மன்னன் தனது மகள் சந்திர தனாவுடன் அதே திருவரங்கன் சந்நிதானத்திற்கு வந்தான் என்று வைத்துக்கொள்..."

"உடனே அந்தக் கழுதையின் அழகைப் பார்த்து மயங்கி பின்னால் சென்று விடுவேன் என்று எதிர்பார்க்கிறீர்களா அன்னையே! அவ்வளவு தரங்கெட்டவனாகவா என்னை நினைக்கிறீர்கள்?"

"எரிச்சல்படாதே சொக்கநாதா! உனக்கோ வயது இருபத்தைந்து கூட இன்னும் முடியவில்லை. உலக அனுபவம் அதிகம் இல்லை. இளமையின் வேகம் பரிபூரணமாக நின்று விளையாடும் வயது. இந்த வயதில் பெண்களின் புற அழகு ஒன்றுதான் பிரதானமாகத் தெரியும். அந்த அழகின் பின்னே பேராபத்து ஒளிந்திருப்பது தெரியாது. சந்திரவதனாவின் அழகிற்கு ஈடு இணையானவர்கள் வடக்கே விஜய நகரத்தில் இருந்து தெற்கே கன்னியாகுமரிவரை கிடையாது என்று அவளை நேரில் பார்த்து பலர் சொல்லும்பொழுது அதனை பொய் என்று தள்ள முடியாது. அப்படிப்பட்ட அழகியை நேருக்கு நேர் பார்த்தவுடன் அவளை நீ அடைய நினைத்து அவள் பின் சென்றாலோ அல்லது அவளை பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு வர நினைத்தாலோ அதன் பின்விளைவுகள் எத்தனை பயங்கரமாக இருக்கும் தெரியுமா?"

இதனைப் பக்கத்து அறைக்குள் இருந்தவாறு கேட்டுக் கொண்டிருந்த முத்துநகைக்கு இதயம் படபடக்க ஆரம்பித்தது. யாருக்காக அவள் ஆசையோடு சந்திரகிரியில் இருந்து வந்தாளோ, அவன் நாளையே இங்கிருந்து கிளம்பப் போகிறானே என்ற அதிர்ச்சி முதலில் ஏற்பட்டது. அதைவிட அவன் செல்லப்போகும் இடத்தில் வேறொரு பெண்ணைப் பார்த்து மயங்கி விடுவானோ என்று அவனைப் பெற்ற தாயே அச்சமுற்றதைக் கேட்டவுடன் அவள் அதிர்ச்சியில் கற்சிலை போல் சற்று நேரம் சமைந்து போனாள்.

மறுகணம் தன்னை சுதாரித்துக்கொண்டு தாயும், தனயனும் பேசுவதை கூர்ந்து கேட்கத் தொடங்கினாள்.

வையாம்பிகாவின் பேச்சைக் கேட்டவுடன் சொக்கநாதனுக்கு எல்லையற்ற கோபம் எழலாயிற்று.

"அம்மா, என்னைப் பெற்று, வளர்த்து, சீராட்டி, பாராட்டி, முன்னிருத்தி செங்கை கொட்டிக் காட்டி, வைகை நீராட்டி, அந்தி நிலாக்காட்டி, வியக்கவைக்கும் வீரக்கதைகளை என் நெஞ்சில் ஏற்றி இத்தனை காலமும் பிரியாமல் வளர்த்த தாங்களா என்னைப்பற்றி, எவளோ ஒருத்தியின் அழகைப் பார்த்து மயங்கி விடுவேன் என்று புலம்புவது! படம் எடுக்கும் நாகப்பாம்பு கூட பார்வைக்கு அழகாகத்தான் இருக்கும். அதற்காக அதனைப் பாய்ந்து எடுத்து அணைத்துக்கொள்ளும அளவுக்கு அறிவுகெட்டவனாக என்னை நீங்கள் வளர்க்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். விஜயராகவ நாயக்கனே ஒரு விஷப்பூண்டு. அந்த வித்தில் இருந்து வந்த பெண் கண்ணுக்கு விருந்தாக இருந்தாலும் விஷம் விஷம்தானே அம்மா! அவர்களுடைய குடும்பத்தையே கருவறுக்க கருவிக் கொண்டிருக்கும் என்னைப் பார்த்து நீங்கள் இப்படி நினைக்கலாமா?"

"நீ அவள் மீது காதலுறவும் வேண்டாம். அவர்களைக் கருவறுக்கவும் வேண்டாம். திருவரங்கனை வணங்கி விட்டு வந்து நமது மண் சிறக்க ஆட்சி செய்தால போதும். அவர்களைப் பற்றிய நினைவே உனக்கு வேண்டாம்."

"தங்கள் உத்தரவுப்படியே நடக்கிறேன் அம்மா" குழைந்து பேசினான் சொக்கநாதன். மறுபடியும் கோபத்தில் பேசினால் தன்னை இங்கிருந்து செல்லவே வேண்டாம் என்று சொல்லிவிட்டால் வம்பு!

"இன்னும் சிறிது காலம் நீ பொறுத்திருக்கக் கூடாதாடா மகனே! உனக்கும், உனக்காகவே காத்திருக்கும் முத்துநகைக்கும் இந்த மதுரையே அதிரும்படி திருமணம் முடித்துவிடுவேன். அதன் பிறகு நீ அவளையும் அழைத்துக் கொண்டு மணமக்கள் இருவரும் சேர்ந்தவாறு அந்த திருவரங்கனின் ஆசி பெற்று வந்துவிட்டால் உன் ஆட்சி சிறப்பாக இருக்கும் என்பதில் ஐயமில்லை."

"இல்லையம்மா! பயிற்சிக் காலம் முடிந்த மறுநாளே ஆண்டவனிடம் ஆசி பெறுவதுதான் முறை என்று நமது ஆசான்தான் வற்புறுத்துகிறார். திருமணத்திற்கு இப்பொழுது என்னம்மா அவசரம்? முத்துநகை இங்கேதான் இருக்கிறாள். வேறு எங்கும் போய்விடப் போவதில்லை."

"அவள் எங்கும் போகமாட்டாள் என்பது உறுதி. ஆனால் உன் மனம் வேறு எங்காவது போய் விடுமோ என்றுதான் அச்சப்படுகிறேன்."

இதைக் கேட்டவுடன் சொக்கநாதனுக்கு எல்லையற்ற எரிச்சல் மூளத் தொடங்கியது. கோபத்துடன் தன் இடுப்பில் இருந்த உடைவாளைக் கழற்றி அருகில் இருந்த பஞ்சணை மீது உறையோடு எறிந்தான்.

''வேண்டாம். எனக்கு ஒன்றும் வேண்டாம். இந்த ஆட்சியும் வேண்டாம். திருவரங்கன் ஆசியும் வேண்டாம் அந்தப்புரத்திலேயே கிடக்கிறேன். என் தந்தை மாதிரி சிற்றின்பத்தில் மூழ்கி சீக்கிரம் செத்துத் தொலைகிறேன்," என்றவாறு பஞ்சணையில் விழுந்து முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

பதறிப் போய் விட்டாள் வையாம்பிகா. சொக்கநாதன் சொன்ன வார்த்தைகள் அவள் நெஞ்சில் ஈட்டிகளாகப் பாய்ந்தன. உடல் நடுங்க வாய் புதைத்த வாறு அவனருகே ஓடிவந்தாள்.

பஞ்சணையில் உட்கார்ந்து குப்புறக்கிடந்த தன் மகன் முகத்தைப் பிடித்து திருப்ப முயற்சித்தாள். சொக்கநாதன் பிடிவாதமாக முகத்தைத் திருப்பாமல் கிடந்தான்.

அவன் சொன்ன வார்த்தைகளும், அவன் பிடிவாதமும் அவள் நெஞ்சை உலுக்க ஆரம்பித்தன. மாலை மாலையாகக் கண்களில் நீர்வழிந்தது அவன் தலையை பரிவுடன் தடவியவாறு தழுதழுத்தக் குரலில் சொல்ல ஆரம்பித்தாள்.

''இந்த வார்த்தைகளை சொல்வதற்காகவா உன்னை இவ்வளவு காலம் பூட்டிப் பூட்டி வளர்த்தேன்? உன் தந்தைதான் சிற்றின்பத்தில் மூழ்கி, இந்த மதுரை மண்ணில் நான்கே நான்கு மாதங்கள் ஆட்சி புரிந்து விட்டு என்னை இந்தக் கோலத்துக்கு ஆளாக்கி விட்டு மறைந்தார் என்றால், நீயுமா அந்த வார்த்தைகளைச் சொல்வது? இதற்குப் பதில் இதோ இருக்கும் வாளால் என் நெஞ்சை பிளந்திருக்கலாமே நீ!" என்றவாறு குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் பதறி எழுந் தான். தாய் அழுவதைப் பார்த்தவுடன் அவன் கண்கள் பனித்து நெஞ்சு நெகிழ்ந்தது.

"நீங்கள் மட்டும் அப்படி சொல்லலாமா அம்மா ? எவ்வளவு சொல்லியும் என்னை நம்ப மாட்டேன் என்கிறீர்களே ?... சரிம்மா ! நான் சொன்னது தப்புத் தான். என்னை மன்னித்து விடுங்கள் ! இனி அப்படிச் சொல்ல மாட்டேன்."

வையாம்பிகா பரிவுடன் அவன் தலையை வருடிக் கொடுத்தாள். பிறகு பாச மேலீட்டில் அவன் உச்சியில் முத்தமிட்டாள்.

"உன் பாட்டனார் திருமலை நாயக்கர் மாதிரி பேரும் புகழுடன் பல்லாண்டு காலம் ஆட்சி புரிய வேண்டும் என்று திருவரங்கனிடம் ஆசிபெற்றுச் சீக்கிரமே திரும்பி விடு ! இந்தா உடைவாள் ! அணிந்து கொள் ! திருப்திதானே இப்பொழுது ?"

சொக்கநாதன் மகிழ்ச்சி பொங்க எழுந்து, தன் தாயின் கால்களில் விழுந்து வணங்கினான்.

"நாளைக் காலையில் கதிரவன் உதிக்கும் முன்னரே கிளம்ப இருக்கிறேன் அன்னையே ! என்னுடன் வெங்கட கிருஷ்ணனும் வர இருக்கிறான். போய் வருகிறேன்."

அன்னையிடம் ஆசி பெற்றுக் கொண்டு உடைவாளை எடுத்து இடுப்பில் மாட்டிக் கொண்டு, ஓரக்கண்ணால் மூத்து நகை ஒளிந்திருக்கும் அறையைப் பார்த்து விட்டு வெளியேறத் தொடங்கினான்.

பெற்ற தாயிடம் இப்படி பொய் உரைத்து விட்டு, அவள் எங்கு போகக் கூடாது என்று சொன்னாளோ அதே தஞ்சைக்குச் செல்லப் போகிறோமே என்ற குற்ற உணர்வு அவனுக்குள் இருக்கத்தான் செய்தது.

அவன் புறப்படுவதைக் கேட்டவுடன் அவன் முகத்தைப் பார்ப்பதற்காகக் கதவருகே ஓடோடி வந்தாள்

முத்துநகை. அதற்குள் சொக்கநாதன் வாசலைத் தாண்டிச் சென்று விட்டான். முத்துநகை ஏமாற்ற உணர்வுடன் வையாம்பிகா இருக்கும் இடத்தை நோக்கி வரத் தொடங்கினாள்.

''வாம்மா வெட்க ராணி! உன் அத்தான் போன பிறகுதான் வெட்கமும் உன்னை விட்டுப் போனதாக்கும்? அவனைக் கண்டு இப்படியா வெட்கப்படுவது?" என்றவாறு அவளை தன்னருகே இருத்தி, கன்னத்தை நிமிண்டினாள்.

''என்ன அத்தை! உங்கள் மகன் இவ்வளவு பிடிவாதக்காரராக இருக்கிறாரே?" என்றாள் மெதுவாக.

''அவன் குழந்தையில் இருந்தே அப்படித்தான். அவன் நினைத்ததை சாதிக்க வேண்டும். இனி நீதான் அவனைப் படிப்படியாகத் திருத்த வேண்டும்."

''அத்தை!'' என்றாள் தயக்கத்துடன்.

''என்னம்மா?"

அதை எப்படிக் கேட்பது என்று பயந்து, எச்சிலை விழுங்கி, "ஒன்றுமில்லை," என்றாள்.

"ஏதோ கேட்க நினைத்து விட்டு— ஏன் தயங்குகிறாய்? அத்தையிடம் உனக்கு எதற்கு அச்சம்? தயங்காமல் கேளடி கண்ணே!"

''இல்லை... அவள்... ரொம்ப அழகாக இருப்பாளா?"

''யாரைக் கேட்கிறாய்?"

"வந்து... அவள்தான்... தஞ்சை இளவரசி..."

"சந்திரவதனாவைச் சொல்கிறாயா?" என்றவாறு ஒரு தடவை பெருமூச்சு விட்டு விட்டு, "அவள்

மிகவும் அழகு என்றுதான் சொல்கிறார்கள். திருமலை மன்னருக்கு மனைவியாக வந்த அச்சுத ரகுநாதம்பாவும் அழகுதான். அவளை விட இவள் பன்மடங்கு அழகானவள் என்று பலர் சொல்கிறார்கள். அதை நினைத்தால்தான் எனக்குப் பயமாக இருக்கிறது. ஒருவேளை என் மகன் அவளைப் பார்த்து ஆசைப்பட்டு விட்டான் என்று வை! விஜயராகவன் சம்மதத்துடன் மணமுடித்தால் கூட அவன் வாழ்க்கை அவன் பாட்டனார் மாதிரி அமைந்துவிடுமே என்று பயமாக இருக்கிறது. ஒருவேளை அவர்கள் சம்மதிக்காவிட்டால் இவன் ஆத்திரமுற்று என்ன செய்வான் என்றே எனக்குத் தெரியாது. பெண்ணிற்காக இரண்டு பெரிய அரசுகள் இடைவிடாத போரில் ஈடுபட்டு... அதை நினைக்கவே எனக்கு அச்சமாக இருக்கிறது, முத்துநகை."

"தஞ்சைக்கும் நமக்கும் அப்படி என்ன பகை?"

இதற்கு வையாம்பிகா அளித்த பதிலும், தொடர்ந்து சொன்ன வார்த்தைகளும், முத்துநகைக்கு திகிலை ஏற்படுத்தின. அதன் பிறகுதான் சொக்கநாதனை தனிமையில் சந்திக்க முடிவு செய்தாள்.

7

இளவரசி சந்திரவதனாவிடம் இருந்து தனது மகன் அச்சுதப்பனின் உடைவாளை பெற்றுக் கொண்டு தளவாய் ரங்கப்ப நாயக்கன் நந்தவனத்தை விட்டு நகரும் வரை மதுரவாணியும், சந்திரவதனாவும் மவுனமாக இருந்தார்கள்.

மதுரவாணியின் முகத்தில் மட்டும் சற்று கலக்கம் தென்பட்டது. சற்று முன் தானும் இளவரசியும் அச்சுதப்பனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தது தளவாயின்

காதில் விழுந்திருக்குமோ? அவர் முகத்தில் தென்பட்ட மாற்றத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறது. அது உண்மையாக இருந்தால் நான் சிரித்தது கூட அதிகப் பிரசங்கித்தனமாகப் பட்டிருக்குமோ?

ரங்கப்ப நாய்க்கன் அந்தப்புரத்தை விட்டு அகன்று விட்டான் என்பதை உறுதி செய்து கொண்ட பிறகு மதுரவாணி பேச்சை ஆரம்பித்தாள்.

''ஏன்டி சந்திரவதனா நாம் பேசியது தளவாயின் காதுகளில் விழுந்திருக்குமோ?" என்றாள் அச்சம் கலந்த உணர்வுடன்.

"விழுந்தால் விழுந்து விட்டுப் போகட்டுமே! நாம் ஒன்றும் தவறாகப் பேசவில்லையே!" என்றாள் இளவரசி அலட்சியமாக.

"இருந்தாலும் அவர் மகன் அச்சுதப்பனைப் பற்றி இவ்வளவு உரக்கப் பேசி இருக்க வேண்டாம். தளவாய் பணிவாகப் பேசினாலும் அவர் கண்களில் ஆத்திரம் தெரிந்ததை நீ கவனிக்கவில்லையா?"

''அவர் ஆத்திரமுற்று எனக்கென்ன ஆகப் போகிறது?"

"அவர் மகனுக்கு உன்னை மணமுடித்து வைக்கும் எண்ணம் அவருக்கு இருக்கிறது என்று கேள்விப் பட்டேன். இப்படிப்பட்ட நிலைமையில் அவர் மகனை 'பெண்களை மறைந்தவாறு ரசிக்கும் கேடு கெட்டவன். அவனை ஒரு நாளும் மணக்க மாட்டேன்' என்று நீ கத்திப் பேசியது அவர் காதுகளில் விழுந்திருந்தால்?"

''ரொம்பவும் நல்லதாகப் போயிற்று. அந்த எண்ணத்தை அவர் அடியோடு மறந்து விடுவார் இல்லையா?"

"அப்படி நினைக்காதே சந்திரவதனா! ரங்கப்ப நாயக்கன் ஒரு நாகப்பாம்பு. அவனிடம் கவனமாக நடக்க வேண்டும் என்று எனது தந்தை அடிக்கடி சொல்லுவார்."

''என் தந்தைக்கு என் மீது எவ்வளவு பாசம் என்பது நீ அறியாததா? என் திருமணம் என் விருப்பத்திற்கு மாறாக ஒரு நாளும் நடக்காது. சரி வா! எனது தந்தையின் மாளிகைக்குச் செல்லலாம்."

''நான் எதற்கு? இருட்டு வேறு ஆரம்பித்து விட்டது. நான் எனது வீட்டிற்குச் செல்கிறேன். நாளைக் காலையில் வருகிறேன். செங்கல்வல கால்கவியோட ராஜகோபால விலாசம் படித்துப் பார்க்க வேண்டும் என்று சொன்னாய் அல்லவா?''

''அதை நாளை பார்த்துக் கொள்ளலாம். இப்பொழுது நீ என்னுடன் எனது தந்தையின் மாளிகைக்கு வா!"

''மன்னர் உன்னை எதற்காக வரச் சொல்லி இருக்கிறாரோ? அச்சுதப்பனும் அவர் தந்தை ரங்கப்ப நாயக்கனும் அடுத்தடுத்து வந்து சொல்லியதை வைத்துப் பார்க்கும் பொழுது ஏதாவது முக்கிய ராஜாங்க விஷயமாகக் கூட இருக்கலாம். அப்படிப்பட்ட நேரத்தில் நான் உன்னுடன் வருவது சரியாகாது.''

''அந்தப்புரத்துப் பெண்களிடம் அரச காரியங்களைப் பேசுவதே வழக்கமில்லாத ஒன்று. அதிலும் என்னைப் போன்ற சிறு பெண்ணிடமா, ராஜாங்க விஷயத்தைப் பற்றி என் தந்தை பேசப் போகிறார்? வாடி!''

''இருந்தாலும் தந்தையும் மகளும் தனித்துப் பேசும் இடத்தில் நானும் உடனிருப்பது சிறுபிள்ளைத்தனமானது சந்திரவதனா''

"பரவாயில்லை வாடி! அப்படி ஏதாவது எனது தந்தை பேசுவது மாதிரித் தோன்றினால் நீ புரிந்து கொண்டு நகர்ந்து விடு. வாணியம்மா என் கண்ணில்லை! வாடி பெண்ணே!'' என்று கேலியாக அவள் கன்னத்தைப் பிடித்து நிமிட்டிச் சிரித்தாள்.

மன்னனின் மாளிகைக்கு செல்வதற்கு முன் நந்தவனத்தில் பந்து விளையாடியதால் ஏற்பட்ட வியர்வை நீங்க அங்கங்களை நீரால் கழுவி, அலங்காரங்களை சரிப் படுத்திக் கொள்வதற்காக இருவரும் அந்தப்புரத்திற்குள் சென்றனர்.

அதே நேரம் தளவாய் ரங்கப்ப நாயக்கன் தனது மாளிகையில் கடுகடுவென்ற முகத்துடன் உட்கார்ந்திருந்தான். மாளிகைககு வரும் வழியிலேயே ஒரு காவலனை விளிதது, தனது மகன் அச்சுதப்பனை காவற்கூடத்திலிருந்து கையோடு அழைத்து வரும்படி கட்டளையிட்டிருந்தான்

சற்று நேரத்தில் வந்த அச்சுதப்பனை கடுமையாக முறைத்துப் பார்த்தான் ரங்கப்ப நாயக்கன். அவனுக்கு முன்னால் இருந்த சிறிய ஆசனம் ஒன்றில் சற்று முன்னர் சந்திரவதனாவிடம் இருந்து வாங்கி வந்த அச்சுதப்பனின் உடை வாள் வைக்கப்பட்டிருந்தது.

அச்சுதப்பன் உள்ளே நுழைந்தவுடன் தன் வாள் இருப்பதைக் கூட கவனிக்காமல் தந்தையைப் பார்த்து, ''சற்று முன்னர் தானே அந்தப்புரத்தில் பார்த்தீர்கள்? அதற்குள் எதற்காக என்னை அழைத்தீர்கள்? காவற் கூடத்தில் எனக்கு நிறைய பணிகள் காத்திருக்கின்றன. நான் போக வேண்டும். சீக்கிரம் சொல்லுங்கள்'' என்று சிடுசிடுத்தான்.

நண்பர்கள் குழுவுடன் கள் குடிக்கப் போகும் சமயம் பார்த்துக் கூப்பிட்டு விட்டாரே என்ற ஆத்திரம் அவனுக்கு!

''அச்சுதப்பா ! அந்தப்புரத்தில் சந்திரவதனாவிடம் என்ன பேசினாய் என்பதைச் சொல் !'' என்றான் அமைதியாக தன் மகனைப் பார்த்து.

''அதுதான் ஏற்கெனவே சொல்லி விட்டேனே இதற்காகவா திரும்பவும் என்னை அழைத்தீர்கள் ?''

''உன் உடைவாளை இளவரசியிடம் எப்படி கொடுத்தாய் என்பது மட்டும் மறந்து விட்டது திரும்பவும் ஒரு தடவை சொல்.''

''ஒரு தடவை தான் சொல்வேன். நன்றாக கேட்டுக் கொள்ளுங்கள். பிறகு இதற்காக மறுபடியும் என்னை அழைக்கக் கூடாது. எனக்கு தலைக்கு மேல் நிறைய பணிகள் காத்திருக்கின்றன.''

''கோபித்துக் கொள்ளாதே ! திரும்ப ஒரு தடவை சொல் போதும்.''

''சந்திரவதனா என் உடைவாளைப் பார்த்து வியந்து, 'உங்கள் வீரத்திற்குப் பெருமை சேர்க்கும் வாளைத் தொட்டுப் பார்க்க வேண்டும். உங்கள் நினைவாக அதனை சிறிது நாட்கள் வைத்திருக்க வேண்டும்' என்று விருப்பப்பட்டாள். கொடுத்து விட்டு வந்தேன்; போதுமா ?''

''அது இந்த வாள்தானா என்று பார்!'' என்று தன் முன்னே இருந்த ஆசனத்தில் வைக்கப்பட்டிருந்த வாளைக் காட்டினான்.

அப்பொழுதுதான் அந்த வாளைப் பார்த்த அச்சுதப்பன் திடுக்கிட்டு, ''அ... ஆமாம்... ! இதெப்படி.... நீங்கள் வாங்கிக்கொண்டு வந்தீர்களா ? நான் தான் இதைப் பற்றி அவளிடம் கேட்க வேண்டாம் என்று சொன்னேனே ? பிறகு எதற்காக கேட்டீர்கள் ? இதுதான் உங்களிடம் எந்த விஷயத்தையும் சொல்லக் கூடாது,'' என்றான்.

"உனக்கு வேறு எதிலும் திறமை இல்லாவிட்டாலும் பொய் சொல்வதில் மட்டும் அசாத்திய திறமை இருக்கிறது. அறிவு கெட்டவனே! இடுப்பில் இருந்த வாள் உருவப்பட்டது கூட தெரியாமல் பெண்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாயே! வெட்கமாக இல்லை?"

அச்சுதப்பன் தலை குனிந்தவாறு இருந்தான்.

"இளவரசியை எந்த வழியிலாவது கவர்ந்து அவள் மனதில் இடம் பிடிக்கச் சொன்னால் மறைந்திருந்து பார்த்து வெறுப்பைத் தான் சம்பாதித்திருக்கிறாய் இவ்வளவு நேரம் என் முன்னால் நின்று பேசும்பொழுது கூட எதிரில் இருந்த வாள் உன் கண்ணுக்குத் தட்டுப்படவில்லை. எந்த சூழ்நிலையிலும் உஷாராக இருப்பவன் தான் மண்ணை ஆளும் மாவீரன் ஆக முடியும். உன்னை அப்படி ஒரு உயர்ந்த நிலையில் வைத்துப் பார்க்க ஆசைப் படுகிறேன். உன் மந்த புத்தியால் என் கனவுகளைச் சிகறடித்து விடுவாயோ என்று பயமாக இருக்கிறது. இளவரசி உன் பின்னால் வந்து உன் வாளையே உருவி உன் நெஞ்சில் பதிக்கும் வரையிலா, நீ சொரணையற்றுப் போய்ப்பந்தடிக்கும் பெண்களைப் பார்த்துக் கொண்டிருந்தாய்?"

"நீங்கள் நினைப்பது போலில்லை. இளவரசி மறைந்து மறைந்து என் பின்னால் வந்ததை நான் பார்க்காதது மாதிரி பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். அவள் என்னதான் செய்கிறாள் என்று பார்ப்போமே என்று வேடிக்கையாக நினைத்தேன். என் வாளை அவள் உருவியவுடன் நான் உடனே திரும்பி அவள் கையைப் பற்றித் திருகினேன். அவள் அதைச் சொல்லவில்லையா?"

"மறுபடியும் பொய் பேச ஆரம்பித்து விட்டாயா? அச்சுதப்பா! அங்கு நடந்த நிகழ்ச்சிகள் அத்தனையையும்

சந்திரவதனா, அமைச்சரின் பெண்ணிடம் சொல்லிச் சொல்லி சிரித்ததை நான் காதாரக் கேட்டேன். உன்னை எக்காரணம் கொண்டும் திருமணம் செய்ய மாட்டேன் என்று எவ்வளவு ஆணவமாக மதுர வாணியிடம் சொன்னாள் தெரியுமா?"

அச்சுதப்பன் மவுனமாக நின்றான்.

"விட மாட்டேன்! இளவரசி சந்திரவதனாவை உனக்கு மணமுடித்து வைத்து, இந்த ராஜ்யத்தையும் நீ ஆளும்படியாக செய்து வைத்தால்தான் என் ஆத்திரம் அடங்கும். அதுவரை என் சொல்படி கேட்க வேண்டியது தான் உன் வேலை. புரிந்ததா?"

தலையாட்டினான் அச்சுதப்பன்.

"சரி! என்னுடன் வா! மன்னர் இளவரசியை தனது மாளிகைக்கு வரச் சொல்லி இருக்கிறார். ஏதாவது முக்கியமான விஷயமாக இருக்கும்! நாமும் தெரிந்து கொள்ளலாம்.

இளவரசி சந்திரவதனாவும் மதுரவாணியும் தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் தனி மாளிகையை ஒட்டி இருந்த தர்பார் மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். தன் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் மிக முக்கியமான விருந்தினர்களையும் அயல்நாட்டில் இருந்து வரும் மன்னர்களையும் சந்தித்துப் பேசுவதற்காக மட்டுமே அமைக்கப்பட்டிருந்தது அந்த தர்பார் மண்டபம்.

பொதுமக்களைக் காண்பதற்கான தர்பார் மண்டபம் பெரிதாக மற்றோரிடத்தில் அமைந்திருந்தது.

இந்த சிறிய தர்பார் மண்டபம் உயர்ந்த விதானங் களுடன் எழிலுற அமைக்கப்பட்டிருந்தது. மன்னன் அமர்ந்திருக்கும் அரியணைக்கு நேர் உயரத்தில்

இராமனின் பட்டாபிஷேகக் காட்சி சுதைச் சிற்பமாக அமைந்திருந்தது இரவு நேரம் என்பதால் அந்த இடத்தி லுள்ள தூண்கள் அனைத்திலும் நிறைய தீவட்டிகள் கொளுத்தி வைக்கப்பட்டு, பகலெனப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

தர்பார் மண்டபத்தின் நடுவில் இருந்த அரியணையின் மீது சாகித்ய போஜ, சங்கீதவேதி, லக்ஷவிப்ர அன்னதாதா என்கிற விருதுகளுக்கு உரியவனும் பிராமணர்களுக்கான பாடசாலைகளைப் பல இடங்களில் நிறுவியதால் ஸ்ரீ சாரதா த்வஜம் என்ற சிறப்புப் பதாகை பெற்றவனும், தெலுங்கு மொழியில் கவி இயற்றும் திறமையினைப் பறைசாற்றுவதற்காக சாகித்யராயா என்னும் கழலினை இடது காலில் அணிந்தவனுமான தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் கம்பீரமாக வீற்றிருந்தான்.

எழுபதுக்குரிய வயதினை அவன் அடைந்திருந்த போதிலும் அவன் முகத்தில் இருபதுக்குரிய கம்பீரம் தெரிந்தது அவன் அருகில் அவனுடைய அமைச்சரான கோவிந்த தீட்சிதர் பணிவுடன் நின்று கொண்டிருந்தார்.

இளவரசி சந்திரவதனா உள்ளே நுழைந்ததைப் பார்த்தவுடன் மன்னன் பாசத்துடன் அருகில் அழைத்து அவள் தலையை வருடி, "சந்திரவதனா, என் கண்ணே! ஏன் இளைத்தாற்போல் இருக்கிறாய்? நன்றாகச் சாப்பிட்டால் என்ன? விருப்பப்பட்ட பொருள் எதுவாக இருந்தாலும் சொல். தில்லியில் இருந்தால் கூட வரவழைக் கிறேன்," என்றான்.

அதே நேரம் இளவரசியுடன் மதுரவாணியும் சேர்ந்து வருவதைப் பார்த்தவுடன் அருகில் இருந்த அமைச்சருக்கு முகம் மாறியது. கண்களால் அவளைத் தன்னருகே வருமாறு அழைத்தார்.

"நீ எதற்கு மதுரவாணி இங்கே வந்தாய்? அரசாங்க விஷயங்கள் பரிமாறும் இடத்தில் அந்தணர் குலப் பெண்கள் வருவது சரியல்ல என்று உனக்கு எத்தனை முறை சொல்லி இருக்கிறேன்?" என்று மெதுவான குரலில் அதே சமயம் கடுமை கலந்து சொன்னார்.

"இல்லை... இளவரசிதான் கூப்பிட்டாள்."

"அவள் கூப்பிட்டால் கூட நீ 'மறுக்க வேண்டியது தானே! சரி, சரி நீ வீட்டிற்குப் போ. இங்கு இருக்க வேண்டாம்," என்று அவர் கிசுகிசுத்தது மன்னர் காதில் லேசாக விழுந்தது.

"தீட்சிதரே, உமது மகளும் இங்கு இருக்கட்டுமே! சந்திராவும் வாணியும் இணைபிரியாத தோழிகள். சேர்ந்தே வந்தவர்கள். சேர்ந்தே போகட்டுமே. நாம் என்ன ராஜ ரகசியமா பேசப் போகிறோம்? வாணியைக் கடிந்து கொள்ள வேண்டாம். நீயும் வாம்மா. இருவரும் இப்படி என் எதிரில் அமருங்கள்."

சந்திரவதனாவும், மதுரவாணியும் மன்னனுக்கு எதிரில் இருந்த ஆசனங்களில் அமர்ந்த சமயம், தளவாய் ரங்கப்ப நாயக்கனும் அச்சுதனும் உள்ளே நுழைந்து மன்னனுக்கு மரியாதை செலுத்தினர்.

"வா ரங்கப்பா! நீயும் வந்தது நல்லதுதான். நான் சொல்லப் போகும் விஷயம் நீயும் தெரிந்து கொள்ளக் கூடிய ஒன்றுதான். அச்சுதப்பன் எப்படி இருக்கிறான்?" என்றார், மன்னன்.

"தஞ்சை நகரின் காவற் பணிகள் அனைத்தையும் என் மகன் அச்சுதப்பனே கவனித்துக் கொள்கிறான் மன்னவா. இவன் பொறுப்பு ஏற்ற பிறகு நமது தலைநகருக்குள் மட்டுமல்ல, தலைநகரைச் சுற்றி இருக்கும் ஊர்களில்கூட திருட்டு, வன்முறை போன்ற குற்றங்கள் நடப்பதே

இல்லை. அதுமட்டுமில்லை. அந்தப்புரத்தின் காவல் பொறுப்புகளையும் அச்சுதப்பனே ஏற்றிருக்கிறான். இதுவரை ஒரு அசம்பாவித சம்பவம் கூட நடந்ததில்லை. இல்லையா இளவரசி!''

சந்திரவதனா சற்று இகழ்ச்சியுடன் சிரித்தாள்.

''தந்தை எட்டடி பாய்ந்தால் அச்சுதப்பன் ஐம்பதடி பாய்கிறானே என்று பலர் என் காதுபடவே பேசுகிறார்கள் மன்னவா?"

"தளவாய் ரங்கப்பனின் மகனல்லவா? அப்படித்தான் இருப்பான். வேறு மாதிரி இருந்தால்தானே அதிசயம். இல்லையா அமைச்சரே?" என்றான் விஜயராகவ நாயக்கன்.

இந்த பேச்சு இளவரசிக்கு எரிச்சலைத் தந்தது.

'என்னை அழைத்த காரணம் பற்றி தெரிந்து கொள்ளலாமா தந்தையே?" என்று பேச்சை மாற்றினாள், சந்திரவதனா.

"ஆம். அதைத்தான் சொல்ல வருகிறேன். இந்த விஷயம் உனக்கு மட்டுமல்ல. இங்கு அனைவரும் தெரிந்து கொள்வது நல்லது. இதுவரை அன்றாடம் காலையில் எனது அரசாங்கப் பணிகளைத் துவக்குவதற்கு முன்பு, நான் மேற்கொள்ளும் கடமைகள் என்னவென்று தெரியும் அல்லவா?' என்றார் அமைச்சரைப் பார்த்து.

''தெரியும் மன்னவா. தினமும் காலையில் இங்கிருந்து முப்பது கல் தொலைவில் இருக்கும் திருவரங்கத்திற்குச் சென்று அரங்கனை சேவித்து விட்டு வருவீர்கள். அதன் பிறகு பனிரெண்டாயிரம் பிராமணர்களுக்கு உணவு வழங்கி, அவர்கள் அனைவரும் உணவு உண்டு முடித்தனரா என்று பார்வையிட்ட பிறகுதானே தாங்களே உணவருந்துவீர்கள்! அதற்குப் பிறகுதானே அரசுப் பணிகள்!" என்றார், அமைச்சர்.

"தினமும் திருவரங்கத்திற்குச் சென்று வருவதை மட்டும் சீக்கிரம் நிறுத்திவிடப் போகிறேன்."

"ஏன் மன்னவா?" அதிர்ச்சியுடன் கேட்டார் அமைச்சர்.

"மதுரையின் மன்னனாக சொக்கநாதன் என்று ஒரு சிறுவன் இருக்கிறான். அவன் நம் அரசையே அழிக்கப் போவதாக அடிக்கடி மார்தட்டுகிறான் என்று செய்தி வருகிறது. திருவரங்கமோ மதுரை அரசை சேர்ந்தது."

"அந்த அற்பனுக்கு பயந்தா அரங்கன் சேவையைக் கைவிட நினைக்கிறீர்கள் மன்னவா? என் மகன் அச்சுதப் பன் ஒருவனே போதும். அந்த மதுரை நாயக்கனை அடியோடு நாசமாக்குவதற்கு. கட்டளை இடுங்கள் மன்னவா!" என்றான் ரங்கப்பன் கோபத்துடன்.

"பொறு! அவசரப்படாதே ரங்கப்பா. சொக்கநாதனுக்கு பயந்து நான் இந்த முடிவெடுக்கவில்லை. எனக்கும் வயதாகி விட்டது. நீண்ட தூரப் பயணம் சிரமமாக இருக்கிறது. அதனால் தஞ்சையிலேயே ஒரு உயர்ந்த கோபுரம் எழுப்ப இருக்கிறேன். அதன் உச்சியில் இருந்து பார்த்தால் அரங்கன் கோபுரம் தெரிய வேண்டும். அந்த வேலைகளை நீ எடுத்துக்கொள்!"

"உத்தரவு மன்னவா!"

"சந்திரவதனாவிற்குக் கூடிய சீக்கிரம் மணம் செய்விக்க வேண்டும். என்னை அரசுப் பொறுப்புகளில் இருந்து விடுவித்துக் கொள்ள எண்ணி இருக்கிறேன்" என்று தொடர்ந்து மன்னன் சொன்ன விஷயத்தைக் கேட்டதும், ரங்கப்பன் தலையில் இடி விழுந்ததுபோல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

8

தஞ்சை அரசுக்கும், மதுரை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட பகைமையின் விபரம் பற்றி முத்துநகை கேட்டதும், மதுரை மகாராணி வையாம்பிகா தேவி சற்று நேரம் மௌனமாக இருந்தாள்.

அவள் மனதிற்குள் பழைய காலத்தில் நடந்தேறிய நிகழ்ச்சிகள் மறுபடியும் வந்து எட்டிப்பார்க்கத் தொடங்கின, முத்துநகை அவள் முகத்தையே கூர்ந்து பார்த்தாள்.

"என்ன அத்தை, ஒன்றுமே பேசமாட்டேன் என்கிறீர்கள்? நான் ஏதும் தவறாகக் கேட்டுவிட்டேனா?" என்றாள் தயங்கியபடி.

உடனே நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டு வையாம்பிகா முத்துநகையின் தலையை வருடிக் கொடுத்தவாறு சொன்னாள்.

"நீ எதுவும் தவறாகக் கேட்டு விடலையடி என் தங்கம்! இதனைப்பற்றி ஆதியோடு அந்தமாக நீ தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். மதுரையில் நாயக்க அரசு எப்படி ஏற்பட்டது என்று தெரியுமா?"

"ஓரளவு தெரியும். விஜயநகரத்தில் இருக்கும் எனது சிறிய தாயார் இதனைப் பற்றி சொல்லி இருக்கிறார். விஜய நகரப் பேரரசை ஸ்ரீகிருஷ்ணதேவராயர் ஆண்டு வரும் பொழுது இங்கே பாண்டிய நாட்டில் குழப்பம் ஏற்பட்டதாம். அதனை அடக்குவதற்காக நமது சக்கரவர்த்தி தனது படைத்தளபதி நாகமநாயக்கன் என்பவரை மதுரைக்கு அனுப்பி வைத்தாராம். நாகமநாயக்கன் இங்கு நிலவிய குழப்பத்தினை அடக்கி விட்டு, மதுரை அரசினையும் கைப்பற்றி இனி நானே

இந்தப் பாண்டிய நாட்டிற்கு மன்னன்' என்று பிரகடனம் செய்து விட்டாராம்.

இதனைக் கேள்விப்பட்ட கிருஷ்ணதேவராயருக்குத் தாங்க முடியாத கோபம் ஏற்பட்டதாம். தனக்குக் கீழ் வேலை பார்த்தவன் தன்னையே மதிக்காமல் எவ்வளவு திமிராக அறிவித்திருக்கிறான் என்ற ஆத்திரம் அவருக்குள் அளவு கடந்து சென்றதாம். உடனே தனது படைத் தலைவர்களை அழைத்து 'மதுரையில் இருக்கும் நாகம நாயக்கனை வென்று, அவனை உயிரோடு இங்கு கொண்டு வருபவர்களுக்கு அவர்கள் கேட்கும் பரிசை அளிக்கிறேன்' என்று சொன்னாராம். ஆனால் அங்குள்ள படைத்தலைவர்கள் யாருக்குமே துணிவுவரவில்லையாம்."

தனக்குத் தெரிந்த கதையைத் தன் குழந்தை தன்னிடம் சொல்லும்பொழுது, அப்பொழுது தான் முதன் முதலில் கேட்பது போல் பாவனைசெய்துஆர்வத்துடன் அதனைக் கேட்கும் தாய்போல் வையாம்பிகா. முத்துநகை சொல்லுவதை மகிழ்ச்சியுடன் கேட்பது மட்டுமின்றி, குறுக்கே புகுந்து கேள்விக்கணை ஒன்றை தொடுத்தாள்.

"படைத்தலைவர்களுக்குத் துணிவு வராத காரணம் என்ன?"

"'நாகம நாயக்கர் படைத்தலைவர் மட்டுமில்லை. 'கோட்டியம்' 'தோசேக்கார அதிகாரி' போன்ற பட்டங்களுக்கு உரியவராம். மிகச்சிறந்த வீரராம். அதனால் அவருடன் சென்று போர் புரிவதற்கு அங்குள்ள மற்ற படைத்தலைவர்களுக்குத் துணிச்சலே வரவில்லையாம். மோதினால் தோல்வி தான் மிஞ்சும் என்ற அச்சமாம்."

"பிறகு?"

"நாகம நாயக்கனுக்கு ஒரு மகன் இருந்தாராம். அவர் பெயர் விசுவநாத நாயக்கனாம். இந்த விஸ்வநாத நாயக்கன் நமது சக்கரவர்த்தி ஸ்ரீகிருஷ்ணதேவராயனிடம்

வெற்றிலை மடித்துக் கொடுக்கும் அடைப்பக்காரராகப் பணிபுரிந்து வந்தாராம். தனது தந்தை மன்னருக்குச் செய்த துரோகச் செயல் அவருக்கு கொஞ்சமும் பிடிக்க வில்லையாம். அவருக்கே அவர் தந்தையின் மீது அளவற்ற கோபம் இருந்ததாம்.

மன்னர் இவ்வளவு கூறியும் நாகம நாயக்கனை வென்று வருவதற்கு ஒருவர் கூடத் துணிய வில்லையே என்பதைப் பார்த்த விசுவநாத நாயக்கனுக்கு ஆத்திரம இன்னும் அதிகமானதாம்.

அதனால் ஸ்ரீகிருஷ்ணதேவராய சக்கரவர்த்திகளிடம் தானே நேரில் சென்று சொன்னாராம். 'அண்ணா! நானே படைகளை நடத்தி மதுரைக்குச் சென்று நாகம நாயக்கனை வென்று, அவரைக் கட்டி இழுத்து வந்து உங்கள் காலடியில் விழவைக்கிறேன்' என்று வீராவேச மாகச் சொன்னாராம்."

"அப்புறம்?"

"நமது சக்கரவர்த்தி அவர்களுக்கு எல்லையிலா மகிழ்ச்சி ஏற்பட்டதாம். விசுவநாத நாயக்கன் தலைமை யில் பெரும்படை ஒன்றை மதுரைக்கு அனுப்பினாராம். மதுரையில் நாகம நாயக்கனுக்கும் அவர் மகன் விசுவநாத நாயக்கனுக்கும் கடுமையான சண்டை நடை பெற்றதாம்.

நாகமநாயக்கனுக்குத் தன் மகனே தன்னைப் பிடிக்க படையுடன் வந்திருக்கிறானே என்ற ஆத்திரம் கண்ணை மறைத்ததாம். பல வருடங்கள் குழந்தை இல்லாமல் இருந்து குழந்தை வரம் வேண்டி காசிக்கு யாத்திரை சென்று, காசி விசுவநாதரை தரிசித்து தவம் புரிந்து, அவர் கருணையால் பெற்றெடுத்து, அவர் பெயரையே சூட்டி மகிழ்ந்து, மார்மேலும் தோள் மேலும் போட்டு வளர்த்து சீராட்டிய தனது மகன் விசுவநாதனே தன்னை

எதிர்க்க வந்திருக்கிறானே என்ற நினைப்பு அவர் கோபத்தை அதிகமாக்கியதாம்.

விசுவநாத நாயக்கனுக்கோ தங்கள் குடும்பத்திற்கு ஒரு அந்தஸ்தையும், கௌரவத்தையும், அளவற்ற செல்வத்தையும் கொடுத்த மாமன்னரையே தனது தந்தை எதிர்த்தது எவ்வளவு பெரிய துரோகம். இந்தக் களங்கத்தைப் போக்க வேண்டுமானால் நானே என் தந்தையை சிறைப் பிடித்துச் செல்வது ஒன்று தான் வழி என்ற நினைப்பில் ஆவேசமாகப் போராடினாராம்."

"போரின் முடிவில் என்ன ஆயிற்று ?"

"என்றைக்கும் சத்தியம் தானே அத்தை வெல்லும் ? விசுவநாதநாயக்கன் போரை வென்று தனது தந்தை நாகமநாயக்கனை சிறைப் பிடித்தாராம். அவரது கை—கால்களில் விலங்கிட்டு விஜயநகரத்திற்கு இழுத்து வந்து நமது சக்கரவர்த்திகள் முன்னர் நிறுத்தினாராம். ஸ்ரீகிருஷ்ணதேவராயருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி ஏற்பட்டதாம்."

"ம்... அப்புறம் ?"

"விசுவநாத நாயக்கனை கட்டித் தழுவினாராம். நீதியை நிலை நாட்டுவதற்காக பெற்ற தந்தையையே சிறைப் பற்றி வந்த ஒப்பற்ற வீரன் என்று அவரைப் பாராட்டினாராம் பிறகு அவரிடம் 'நீ சொன்ன மாதிரியே உன் தந்தையை கட்டி வந்து என் காலடியில் போட்டு விட்டாய். அதனால் நான் சொன்ன வாக்கினை நிறைவேற்ற வேண்டியது என் கடமை. கேள்! உனக்கு விருப்பமானது எதுவாக இருந்தாலும் தயங்காமல் கேள். இப்பொழுதே நிறைவேற்றித் தருகிறேன் என்றாராம்."

"பிறகு?"

"இதனைக் கேட்டதும் விசுவநாத நாயக்கன் கண்களில் கண்ணீர் கலங்கத் தொடங்கியதாம். "மன்னா! ஆயிரம் தவறுகள் இழைத்து இருந்தாலும் நாகம நாயக்கன் என்னைப் பெற்றெடுத்த தந்தை. என் பிறப்பிற்காகத் தவம் செய்தவர். என்னை மாவீரனாக்கியவர். எனக்காக அவர் பிழையினை பொறுத்து, அவரை மன்னித்து விடுதலை செய்வது ஒன்றே போதும். எனக்கு வேறு எதுவும் வேண்டாம். தயவு செய்து கருணை புரியுங்கள்' என்று கதறி, கண்ணீர் மல்கி... அவர் கால்களில் விழுந்தாராம். இதைப் பார்த்தவுடன் ஸ்ரீகிருஷ்ண தேவராயருக்கும் நெஞ்சம் இளகி விட்டதாம்."

"என்ன செய்தார்?"

"விசுவநாத நாயக்கன் விருப்பப்படியே அவரது தந்தை நாகமநாயக்கனை விடுதலை செய்தாராம். விசுவநாத நாயக்கனின் கடமை உணர்வையும், தியாக மனப்பான்மையையும், பாசத்தின் மாண்பினையும், வீரத்தின் மேன்மையையும் பார்த்து வியந்த நமது ஸ்ரீகிருஷ்ண தேவராய சக்கரவர்த்தி அவர்கள் விசுவநாத நாயக்கனையே மதுரைப் பகுதி முழுவதையும் அரசாட்சி செய்து, திறைப்பணத்தை விஜயநகரத்திற்கு அனுப்பி வைக்கும்படி உத்தர விட்டாராம்."

* "சரியாக சொன்னாய் முத்துநகை! ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் படைத் தளபதியான நாகமநாயக்கனின்

---

* 1. Madura Country Amanual J. H. Nelson (Part III Page No. 87 to 90.)

2 History of Nayaks of Madura R. Sathianatha Aiyar Page No. 48 to 51.

3. History of Tinneveli— Bishop R. Caldwell— Page No. 55 to 56.

4. மதுரை நாயக்கர் வரலாறு. கி. பரந்தாமனார் பக்கம்—98.

மகன்தான் 'மகாராஜா மான்யராஜாஸ்ரீ விசுவநாத நாயனி அய்யலு காரு' என்ற பெயரில் இந்த மதுரையம் பதியில் நாயக்கவம்சம் ஆட்சியை ஏற்படுத்தியவர். தஞ்சையில் நாயக்க அரசு எப்படி உருவானது என்று தெரியுமா?" என்றாள் வையாம்பிகா.

"அதனைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது அத்தை."

"விசுவநாத நாயக்கன் மதுரை பகுதியினை ஆளத் தொடங்கியபொழுது, தஞ்சை பகுதியும் அவருடைய ஆளுகைக்குட்பட்டிருந்தது. விஜயநகரத்தில் ஸ்ரீகிருஷ்ண தேவராயரின் மறைவிற்குப் பிறகு அவரது தம்பி அச்சுதராயர் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவருடைய மனைவியின் பெயர் திருமலாம்பாள்.

"இந்த திருமலாம்பாளுக்கு ஒரு தங்கை இருந்தாள். அவள் பெயர் மூர்த்திமாம்பாள். இந்த மூர்த்திமாம்பாளுக்குத் திருமண வயது வந்ததும் விஜயநகரப் பேரரசின் மன்னர் அவளை தனது உறவினனான செவப்ப நாயக்கன் என்பவனுக்குத் தனது மைத்துனி மூர்த்திமாம்பாளைத் திருமணம் செய்து வைத்து, அதற்கு சீதனமாக தஞ்சை பகுதியை செவப்பநாயக்கனுக்கு வழங்கினார்."

** "அப்படியானால் செவப்பநாயக்கனுக்கு இந்தத் தஞ்சை பகுதி பெண் வீட்டுச் சீதனமாகத்தான் வந்ததா?"

** "The tanjavuri Andhra Rajulu Charithamu which says that Sevappa Nayaka who married Murtimamba, the sister of Tirumalamba, a consort of Achutadevaraya, was appointed to the governorship of the chola country which was given away as dowry to Murtimamba'— The Nayaks of Tanjore V. Vriddhagirisan— Page No. 9.

"ஆம்! சீதனமாகக் கிடைத்த நிலத்தை ஆட்சிபுரிய செவப்பநாயக்கன் தஞ்சைக்கு வந்தான். செவப்பநாயக்க னுக்குப் பின்னர் அச்சுதப்பநாயக்கன், பிறகு ரகுநாத நாயக்கன், அதற்கடுத்ததாக விஜயராகவ நாயக்கன் இப் போது தஞ்சையை ஆண்டு வருகிறான். அதே போன்று இந்த மதுரையை விசுவநாத நாயக்கனின் வாரிசுகள்தான் தொடர்ந்து ஆண்டு வருகிறார்கள்.

"தஞ்சைக்கும் நமக்கும் என்ன பகை என்று சொல்ல வில்லையே!"

"அதைத்தான் சொல்ல வருகிறேன். தஞ்சையில் இருக்கும் நாயக்கர் பரம்பரை விஜயநகரப் பேரரசின் உறவினர் வகையைச் சேர்ந்தது. மதுரை நாயக்கர் பரம்பரை பேரரசின் படைத்தளபதியின் வாரிசுகளால் உருவானது. அதாவது அவர்கள் நினைப்பு எப்படி தெரியுமா? அவர்கள் மன்னர் பரம்பரையாம். நாம் வேலைக்காரர் பரம்பரையாம். அதனால் தஞ்சை நாயக்கர்கள் நம்மை விட சகலவிதத்திலும் உயர்ந்தவர் கள் என்ற நினைப்பு. அதனால் நம்மை அவர்கள் மதிக்கவே மாட்டார்கள். இடையில் சிறுசிறு சச்சரவு கள் ஏற்பட்டன. முடிவில் விஜயநகரத்தில் ஏற்பட்ட வாரிசுப் போட்டியில் தஞ்சையும், மதுரையும் இரு கட்சி களாகப் பிரிந்தது மட்டுமின்றி பெரும்போரே ஏற் பட்டது."

"தோப்பூரில் நடந்த போரைப் பற்றித்தானே சொல் கிறீர்கள்?"

"அதற்குப் பிறகு இரு அரசுகளும் ஒருவரை ஒருவர் விரோதிகளாக எண்ண ஆரம்பித்தனர். நீண்ட காலம் இப்படியே கடந்தது. பிறகு திருமலை நாயக்கர் காலத்தில் தஞ்சையை ரகுநாதநாயக்கன் ஆண்டு கொண்டு இருந் தார். அவர் சற்று சிந்தித்து தமிழகத்தில் இருக்கும் இரண்டு வல்லரசுகளும் நாயக்க வம்சத்தைச் சேர்ந்தது

தானே. இதில் உயர்வு, தாழ்வு, சண்டை, சச்சரவு பார்த்தால் அண்டையில் இருக்கும் முஸ்லிம் அரசர்களுக்கு வாய்ப்பாகிவிடும் இருவரும் சமாதானமாகிப் போவது நல்லது என்று அவரே திருமலை மன்னருக்குத் தூது விடுத்தார்."

"சமாதானத் தூதா?"

*** "ஒருவகையில் சமாதானத் தூதுதான். ரகுநாத நாயக்கனுக்கு அச்சுதரகுநாதம்மா என்று ஒரு தங்கை இருந்தாள். அவளுக்கு பார்வதி என்று மற்றொரு பெயரும் உண்டு. இவளைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி திருமலை மன்னருக்கு தூது விடுத்தார். அப்பொழுது வல்லம் கோட்டை நமது பக்கமும், திருச்சி கோட்டை அவர்கள் பக்கமும் இருந்தது. திருமணத்தின் மூலம் இந்த இரண்டையும் மாற்றிக் கொள்ளலாம் என்றார். திருமலை மன்னரும் சம்மதித்தார். தஞ்சையும், மதுரையும், அதிரும்படி அவர்கள் திருமண விழா பல நாட்கள் நடைபெற்றதாக இன்றும் வயதான பெரியவர்கள் சொல்வார்கள். திருமணத்தால் உறவு வலுப்படும் என்று நினைத்ததற்கு மாறாக, அந்த திருமணத்தினால்தான் பிரச்சனையே உருவாயிற்று."

"என்ன பிரச்சனை அத்தை?" என்று ஆவலோடு கேட்டாள் முத்துநகை.

***"Tirumalai received the Tanjore ambassador and agreed to given vallam in exchange of Trichy, of Vijaye Ragunatha would give his sister Parvathi to him in marriage, wheelen (History Vol IV— Part II— Page No. 576—581) gives a description of the royal marriage, which was exactly the some as that at the persent day— Indian Antiqnary— V. Rangacharya— Vol. XLVI— 1917. —Page No. 36.

''தஞ்சை ரகுநாதநாயக்கனின் தங்கை அச்சுத ரகுநாதம்மா மிகவும் அழகாக இருப்பாளாம். அவளைப் போன்ற அழகி நமது மதுரை வம்சத்தில் கூட யாரும் இல்லையாம். அதனால் அவளுக்கு கர்வம் தலைக்கேறி, இருந்ததாம். யாரையுமே மதிக்க மாட்டாளாம்.

''திருமலை மன்னர் அவள் அழகைப் பார்த்து சொக்கிப் போய்விட்டாராம். அது ஆண்கள் இயல்பு தானே! அழகான பெண்களைக் கண்டுவிட்டால் இந்த அவனியையே மறந்து விடுவார்களே. திருமலை மன்னரும் அவளுக்காக எதையும் செய்வாராம். ஆனால் அவளோ அவரைக் கூட மதிக்கமாட்டாளாம். திமிரோடு பேசுவாளாம். தன் பரம்பரைதான் உயர்ந்தது. தன்னைப் போய் வலுக்கட்டாயமாக இப்படி தரம் தாழ்ந்து மண முடித்து விட்டார்களே என்று திருமலை மன்னரிடமே சீறிப் பாய்வாளாம்!''

''பிறகு என்ன நடந்தது?''

''மன்னர் அவள் விரும்பியதை எல்லாம் வாங்கித் தருவாராம். அப்படி இருந்தும் இளக்காரமாக பேசுவாளாம். அப்பொழுது நம் அரண்மனை தஞ்சை அரண்மனையை விடச் சிறியது. அவ்வளவு பெரிய அரண்மனையில் இருந்த என்னை இப்படி ஒரு இடத்தில் தள்ளிவிட்டார்களே என்று அடிக்கடி புலம்புவாளாம். அதற்காகவே திருமலை மன்னர் அயல்நாட்டுக் கட்டடக் கலைஞர்களை அழைத்து வந்து, கோடிக்கணக்கான பணத்தை அரசின் கருவூலத்தில் இருந்து செலவழித்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் இரவும், பகலும் பாடுபட்டு இந்த அரண்மனையை தஞ்சை அரண்மனையை விட பெரிதாக மட்டுமின்றி இங்குள்ள மற்ற எந்த அரண்மனைகளையும் விட சிறப்பாகக் கட்டி முடித்தாராம். கட்டி முடித்த பிறகு, தன் மனைவி அச்சுதரகுநாதம்மாவைக் கூட்டி வந்து அதனைச் சுற்றிக் காண்பித்து, ''உனக்காக

நான் கட்டிய அரண்மனை எப்படி இருக்கிறது ?" என்று கேட்டாராம். அதற்கு அவள் என்ன சொன்னாள் தெரியுமா ?''

''என்ன சொன்னாள் ?"

''பெண்ணுக்குத் திமிர் மட்டும் இருக்கக்கூடாது முத்து நகை. அது அவளை மட்டுமல்ல, அவளோடு சேர்ந்தவர்களையும் அழித்துவிடும்."

''தஞ்சை இளவரசி அப்படி என்னதான் சொன்னாள் ?''

"அவளுக்காக அத்தனை சிரமப்பட்டு, இந்த உலகே வியக்கும் வண்ணம் கட்டிய இந்த அரண்மனையை சற்று இளக்காரமாக பார்த்தாளாம். பிறகு, "அரண்மனையா இது ? எங்கள் தஞ்சை அரண்மனையிலுள்ள ஜலதாரைக்குக் கூட இது ஈடாகாதே!" என்று குத்தலாகச் சொன்னாளாம். உடனே திருமலை மன்னருக்கு அடக்க முடியாத கோபம் ஏற்பட்டதாம். தன் இடுப்பில் இருந்த குத்துவாளை உருவி அவள் நெஞ்சில் ஒரே குத்தாகக் குத்திக் கொன்று விட்டாராம் அந்த இடத்திலேயே !''

"ஐயையோ !"

"அதிலிருந்து தஞ்சைக்கும், நமக்கும் உள்ள பகை முற்றிப் போய்விட்டது. இப்பொழுது ஒருவரை ஒருவர் அழிக்கும் எண்ணத்தில் ஊறிப்போய் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமயத்தில் சொக்கநாதன் தஞ்சை அரசுக்கு மிக அருகில் இருக்கும் திருவரங்கத்திற்கு சென்று வருவதாகச் சொன்னதும் என் குலையே நடுங்கிவிட்டது முத்துநகை."

''திருவரங்கத்திற்கு சென்று அரங்கனை சேவித்து விட்டு பத்திரமாகத் திரும்பி விடுவார் அத்தை ! இதற்குப்

போய் ஏன் கலங்குகிறீர்கள்? உங்கள் மகன் வீரத்தில் யாருக்கும் குறைந்தவர் இல்லையே!"

"அவன் வீரத்தைப் பற்றி நான் ஐயம் கொள்ள வில்லை கண்ணே! திருவரங்கத்திற்கு தஞ்சை மன்னன் அடிக்கடி என்ன— தினமும் வந்து சேவித்த பிறகே உணவு உட்கொள்வானாம். சில சமயம் அவன் மகள் சந்திரவதனாவும் அவனுடன் வருவது உண்டாம். அவள் அச்சுதரகுநாதம்மாவை விட அழகென்று சொல்கி றார்கள். சொக்கநாதனோ பெண்ணின் சுகம் என்ன வென்று அறியாதவன். கழுதை கூட அழகாகத் தெரியும் வயது. இவன் பார்வையில் அந்த அழகி பட்டுவிட்டால்... அதை நினைத்து தான் எனக்கே பயமாக இருக்கிறது."

இதைக் கேட்டதும் முத்துநகைக்கும் பயமாகத்தான் இருந்தது. இருந்தாலும் அதை வெளிக்காட்டாமல் தொடர்ந்து பேசினாள்.

"அவர் சற்று முன்னர் பேசியதைப் பார்த்தால் அப்படி எல்லாம் நடப்பவர் போல் தெரியவில்லையே!"

"உனக்கு அவன் குணத்தைப் பற்றி முற்றிலும் தெரியாது. பார்க்காத ஒன்றைப் பற்றி முதலில் அப்படித் தான் பேசுவான். பிறகு பார்த்து விட்டால் முதலில் பேசியதை மறந்துவிட்டு, அதைப் பெற்றே தீர வேண்டும் என்று பிடிவாதம் பிடிப்பான், அதனால்தான் கவலைப் படுகிறேன்."

"ஒருவேளை தஞ்சை இளவரசியின் அழகில் மயங்கி அவளைத்தான் திருமணம் செய்வேன் என்று சொல்லிவிடு வாரோ?" என்று சொல்லும்பொழுது அவள் குரல் நடுங்க ஆரம்பித்தது.

அதை உணர்ந்த வையாம்பிகா அவள் தலையை வருடி, "கவலைப்படாதே கண்ணே! அப்படி ஒன்று

நடந்து விடாமல் இருப்பது உன் கையில்தான் இருக்கிறது. அவன் மனதை உன்பால் ஈர்த்துக் கொண்டால்போதும்!" என்றாள்.

அதன் பிறகுதான் முத்துநகை, சொக்கநாதனைத் தனிமையில் சந்தித்துப் பேச முடிவெடுத்தாள்.

அன்று மாலையே அப்படி ஒரு சந்தர்ப்பத்தை அவளே உருவாக்க முடிவு செய்தாள். உருவாக்கவும் செய்தாள்.

9

தஞ்சை அரண்மனையில் அந்தப்புரத்தை ஒட்டிய வாறு அமைந்திருந்த சிறிய தர்பார் மண்டபத்தின் நடுவில் இருந்த அரியணை மீது மன்னன் விஜயராகவ நாயக்கன் அமர்ந்திருக்க, அவனருகே இருந்த சிறிய ஆசனங்களில் ஒரு பக்கம் அமைச்சர் கோவிந்த தீட்சிதரும், மறுபக்கம் தளவாய் ரங்கப்பநாயக்கனும் அமர்ந்திருந்தனர்.

எதிரில் இருந்த இரட்டை ஆசனத்தில் இளவரசி சந்திரவதனாவும், அமைச்சரின் மகள் மதுரவாணியும் அமர்ந்தவாறு, மன்னன் சொல்வதை கவனமுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

தளவாய் ரங்கப்பநாயக்கனின் மைந்தன் அச்சுதப்பன் மட்டும் மிகவும் பணிவுடன் இருப்பதைப் போல் காட்டிக் கொண்டு, தனது தந்தை அருகில் நின்று கொண்டிருந் தான். அவன் கண்கள் அடிக்கடி சந்திரவதனாவின் மீதே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. சில சமயம் மதுரவாணி யின் அழகிய பகுதிகள் மீதும் உலவின.

'மதுரவாணி சந்திரவதனாவைவிட அழகில் குறைந்த வள் என்றாலும் சில இடங்கள் கவர்ச்சிகரமாகத்தான்

காட்சி அளிக்கின்றனா' என்று அவன் மனதில் எண்ணம் ஓடியது.

அச்சுதப்பனின் கண்கள் எதிரில் உள்ள பெண்கள் மீதே நிலைத்திருப்பதை அமைச்சர் கோவிந்த தீட்சிதர் பார்த்தும் பார்க்காதது மாதிரி கவனித்துக் கொண்டு தான் இருந்தார்.

மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது மகள் சந்திரவதனாவின் திருமணத்தைப் பற்றிய பேச்சினை எடுத்ததும் தளவாயின் முகம் மலர்ந்தது அச்சுதப்பனும் அதனை ஆவலுடன் கேட்கத் தொடங்கினான்.

''என் செல்ல மகள் சந்திரவதனாவின் திருமணத்தை முடித்துவிட்டால் எனக்கு பாதி பாரம் குறைந்தது மாதிரி இருக்கும்,'' என்றான் விஜயராகவ நாயக்கன்.

இதைக் கேட்டதும் சந்திரவதனாவின் முகம் நாணத்தில் சிவந்தது.

''என் திருமணத்திற்கு எதற்கு தந்தையே அவசரப் படுகிறீர்கள்? முதலில் அண்ணன் திருமணம் முடியட்டும். பிறகு பார்க்கலாமே!''

"வயதுக்கு வந்த பெண்ணை வைத்துக் கொண்டு அவளுடைய தமையனுக்கு மணமுடிப்பதும் சரியல்ல சந்திரா. முதலில் உன் திருமணம்தான் என் கடமை."

அப்பொழுது அமைச்சர் கோவிந்த தீட்சிதர் குறுக்கிட்டு, ''மன்னவா, நமது இளவரசியாருக்கோ மிகவும் சிறிய வயதாக இருக்கிறதே! அதற்குள் திருமணத்தைப் பற்றி இவ்வளவு அவசரம் வேண்டுமா?'' என்றார்.

''நான் அவசரம் காட்டச்சொல்லவில்லை. கூடிய சீக்கிரம் முடித்துவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

எனக்கும் வயதாகி விட்டது. மதுரையில் உள்ள சொக்கநாத நாயக்கனோ வாலிப முறுக்கில் இருக்கிறான். இப்படிப்பட்ட நிலைமையில் என் கடமைகளை முடித்து விட்டு, பொறுப்புகளை என் வாரிசுகளிடம் ஒப்படைத்து விட்டால் இனி அவர்கள் பாடு என்று நிம்மதியாக ராஜகோபால சுவாமியின் காலடியில் எனது மீதிக்காலத்தைக் கழித்து விடுவேனே!''

''மதுரையில் இருக்கும் சிறு பயலுக்காகவா பயப்படுகிறீர்கள் மன்னவா? என் மகன் அச்சுதப்பன் இருக்கும் வரை அந்த நாய் நமது மண்ணைப் பற்றிய பேச்சைக் கூட எடுக்க முடியாது மன்னவா! அச்சுதப்பனை மதுரைக்கு அனுப்பி அதனை நிரூபித்துக் காட்டட்டுமா?" என்றான் தளவாய்.

அதே நேரம் அச்சுதப்பனும் தலையை அசைத்து நெஞ்சை நிமிர்த்தி, 'ஹ்ஹூம்' என்று ஆணவத்தோடு முனகினான்.

''ரங்கப்பா, நமது வேலைக்காரர்கள் பரம்பரையில் வந்த அந்த மதுரை நாய்க்குப் பயந்து என் மகளின் திருமணத்தை சீக்கிரம் நடத்தும் அளவுக்கு இந்த விஜயராகவ நாயக்கன் கோழையல்ல. என் கடமைகளை நிறைவேற்றும் காலம் வந்துவிட்டது என்பதற்காகச் சொன்னேன்.

''இளவரசியாருக்கு ஏற்ற மணாளனைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா மன்னவா?'' என்றார் அமைச்சர்.

இதற்கான பதில் மன்னன் வாயில் இருந்து என்ன வரப்போகிறது என்று ரங்கப்பனும், அச்சுதப்பனும் ஆவலோடு அவன் முகத்தைப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

இளவரசி சந்திரவதனா தலைகுனிந்தவாறு இருந்தாலும், அவள் மனதிற்குள்ளும் ஆவல் கிளர்ந்து எழுந்தது.

விஜயராகவ நாயக்கன் நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டான். பிறகு, "என் மகள் சந்திரவதனா என்து தமக்கை அச்சுதரகுநாதம்மாவின் சாயல் என்று பலர் சொல்கிறார்கள். உண்மையில் அவளைவிட என் மகள் இன்னும் அழகாக இருக்கிறாள். அதுமட்டுமல்ல; மிகவும் புத்திக் கூர்மையானபெண். இவள் அழகுக்கும், அறிவுக்கும் ஏற்ற மணாளன் கிடைக்கப் பெறவேண்டும். அவன் இவளுக்கேற்ற அழகு படைத்தவனாக மட்டுமின்றி அறிவிலும், வீரத்திலும் சிறந்தவனாக இருக்க வேண்டும்."

"அப்படிப்பட்டவன் நமது தளவாயின் மகன் அச்சுதப்பனைத் தவிர வேறுயாரும் இல்லை" என்று மன்னவன் வாயில் இருந்து அடுத்த வார்த்தைகள் விழப்போகிறது என்ற நிலையில் இறுமாந்து நின்றான் அச்சுதப்பன். அவன் தந்தை மனதிலும் அதே எண்ணம் தான் ஓடியது.

மன்னவன் அடுத்து சொன்ன வார்த்தைகளைக் கேட்டதும் இருவர் நெஞ்சிலும் இடி விழுந்தது போல் ஆயிற்று.

"இப்படிப்பட்ட ஆடவன் தஞ்சைத் தரணியில் எனக்குத் தெரிந்தவரை யாருமே இல்லை. அதனால் விஜயநகரம், பெறுகொண்டா ஆகிய இடங்களுக்கு நமது தூதவர்களை அனுப்பி சந்திரவதனாவிற்கு ஏற்ற மணாளன் ஒருவனைத் தேர்ந்தெடுக்க எண்ணி இருக்கிறேன்," என்றான் மன்னவன்.

'இப்படிப்பட்ட சிறந்த ஆடவன் என் மகன் அச்சுதப்பன் தான் என்பதை மறந்து விட்டீர்களா மன்னவா? என் மகனுக்கே தங்கள் மகளை மணமுடித்து வையுங்கள்' என்று மன்னனிடம் சொல்வதற்கு ரங்கப்ப நாயக்கனுக்கு ஆசை இருந்தாலும், மன்னன் கோபித்துக் கொள்வானோ என்று அச்சமாகவும் இருந்தது.

அதனால் தன்னுடைய எண்ணத்தை நேரடியாகக் கூறாமல் நாசூக்காக, மறைமுகமாகக் கூறலாம் என்று முடிவெடுத்தான்.

"நாளைக்கே விஜய நகரத்திற்கும், பெருகொண்டா விற்கும் நமது தூதுவர்களை அனுப்பி வைக்கிறேன்" என்றார் அமைச்சர்.

"மன்னவா..." என்று தயங்கியவாறு ஆரம்பித்தான் ரங்கப்பன்.

"சொல் ரங்கப்பா."

"என் மகன் அச்சுதப்பனுக்கும் வயதாகிக் கொண்டு வருகிறது. அவனுக்குத் திருமணம் செய்து வைக்கும் வேளை நெருங்கிவிட்டது. என் மகனின் வீரத்தினையும், புத்திசாலித்தனத்தையும் பற்றி நீங்கள் அறியாததா? அச்சுதப்பன் பெயரைக் கேட்டாலே இந்தத் தஞ்சைத் தரணியில் மட்டுமின்றி சுற்றுவட்டாரத்தில் இருக்கும் அரசுகளே அச்சப்படுகின்றன. இதனால் பெண்கள் மத்தியில் இவனை மணப்பதற்கு பலத்த போட்டி இருக் கிறது மன்னவா! அச்சுதப்பன் நல்லவன்தான். இருந் தாலும் இளவயது பாருங்கள். காலாகாலத்தில் திருமணம் செய்யவில்லை என்றால் இவன் கெட்டுப் போய்விடு வானோ என்ற அச்சமும் இருக்கிறது. அதற்காக யாரை யாவது ஒரு பெண்ணை மணமுடிக்க என் மனம் விரும்ப வில்லை. இவனுக்கு ஏற்ற பெண்ணாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

இதைக் கேட்டவுடன் விஜயராகநாயக்கன், 'அடடா, அச்சுதப்பன் நினைவே எனக்கு வரவில்லையே! இளவரசி சந்திரவதனாவிற்கு எல்லா வகையிலும் பொருத்தமானவ னான அச்சுதப்பன் நம் அருகிலேயே இருக்கும் பொழுது வேறு எங்கு போய்த்தேட வேண்டும். அச்சுதப்பனுக்கே என் மகளை மணமுடித்துவிடலாம்' என்று சொல்வான்

என்று எதிர்பார்த்து ரங்கப்பன் இந்த வார்த்தைகளை நாசூக்காகச் சொன்னான்.

அதே நேரம் அச்சுதப்பனை உயர்த்தித் தளவாய் பேசிய பேச்சுக்கள் இளவரசி சந்திரவதனாவின் இதழ்களில் இளக்காரமான புன்னகை ஒன்றை ஏற்படுத்தியது. உடனே தன் பக்கத்தில் அமர்ந்திருந்த மதுரவாணியின் தொடையில் லேசாகக் கிள்ளி கண்களால் ஜாடை செய்தாள். அதனைக் கண்டு கொண்ட மதுரவாணியும் கண்களை சிமிட்டி தன் கடைவாயில் இளக்காரமான சிரிப்பு ஒன்றை உதிரவிட்டாள்.

இக்காட்சியினை ஓரக்கண்ணால் கவனித்து விட்ட ரங்கப்பநாயக்கன் இதயத்தில் நெருப்பை அள்ளிக் கொட்டியது போல் இருந்தது. இருந்தாலும் மன்னவன் வாயிலிருந்து என்ன பதில் வரப்போகிறது என்று ஆவலோடு பார்த்தான்.

விஜயராகவ நாயக்கன் ரங்கப்பனின் வார்த்தைகளை மிகக் சாதாரணமாக எடுத்துக் கொண்டு, "உண்மைத் தான் ரங்கப்பா. உன் மகன் அச்சுதப்பனுக்கும் காலா காலத்தில் திருமணம் செய்து விடுவது நல்லது தஞ்சையில் நல்ல பெண் கிடைக்கவில்லை என்றால் விஜயநகரத்தில் இருக்கிறதா என்று பார்க்கச் சொல்வோம். அமைச்சரே நமது தூதுவர்களிடம் அச்சுதப்பனுக்கு ஏற்ற பெண்ணையும் பார்த்து வரும்படி சொல்லுங்கள். இப்பொழுது திருப்தியா ரங்கப்பா?" என்றான்.

ரங்கப்பன் இதயமோ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு தலையசைத்தான்.

'இப்பொழுது ஒன்றும் அவசரப்படவேண்டாம். என்றைக்கு இருந்தாலும் இளவரசி சந்திரவதனாவை என்

மகன் அச்சுதப்பனுக்கு மணம் முடிக்காமல் விடமாட்டேன்' என்று உள்ளுக்குள் கறுவிக் கொண்டான்.

''அப்புறம் ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்வதற்காகத்தான் என் மகளை இங்கு அழைத்துவரச் சொன்னேன். சந்திரவதனா, உன் அருமை அண்ணன் மன்னார்தாசனின் கல்விப்பயிற்சிகள் முடிந்துவிட்டனவாம். அதனால் உடனே கிளம்பி வரச் சொல்லி உத்தர விட்டிருக்கிறேன். அவனும் இன்று பெறுகொண்டாவில் இருந்து புறப்படுவதாக எனக்குத் தகவல் அனுப்பி இருக்கிறான்.''

"அப்படியா!'' என்று மகிழ்ச்சி பெருகக் கேட்டாள் இளவரசி.

பக்கத்தில் இருந்த மதுரவாணியோ தன் மனத்திற்குள் பொங்கி எழுந்த பரவசத்தை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, மற்றவர்கள் பார்க்காதவாறு இளவரசியின் காதருகே, "எப்பொழுது இங்கு வந்து சேரப்போகிறார் என்று கேளடி!" என்று கிசுகிசுத்தாள்.

''அண்ணன் இன்றைக்குத் தானே பெறுகொண்டாவில் இருந்து கிளம்புகிறார்? தஞ்சைக்கு என்றைக்கு வருவார்?" என்றாள் இளவரசி.

"ஒரு வாரம் ஆகும். அநேகமாக அடுத்த புதன்கிழமை இங்கு வந்து விடுவான் என்று நினைக்கிறேன்."

புதன்கிழமை எப்போது வரும் என்ற ஆவல் அப்பொழுதே மதுரவாணியின் மனதிற்குள் வளரத் தொடங்கியது.

'மன்னார்தாசன் இங்கு வந்தவுடன் நமது குருவிடம் ஆசி பெற்று ஒரு நல்ல நாளில் இளவரசுப் பட்டம் கட்டி விட்டால் எனது மீதிப்பாரமும் குறைந்துவிடும். நான் நினைக்கின்ற இந்த இரண்டு சுபகாரியங்களும்

அதாவது சந்திரவதனாவின் திருமணமும், மன்னார் தாசனின் இளவரசு பட்டமளிப்பும் சீக்கிரம் நடத்தி முடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்."

இதைக் கேட்டவுடன் தளவாய் ரங்கப்பநாயக்கனின் இதயம் சுக்கல் சுக்கலாக வெடித்துச் சிதற ஆரம்பித்தது. உள்ளுக்குள் எழுந்த ஆத்திரத்தை மறைத்துக் கொண்டு பணிவாக மன்னனைப் பார்த்துக் கேட்டான்.

"மன்னவா! எனக்கு ஒரு சிறிய ஐயம்."

"சொல் ரங்கப்பா!"

*"தங்களது பட்டத்தரசி மகாராணி காந்திமதி தேவியார் என்பதை இந்த நாடே அறியும். பட்டத்தரசிக்குப் பிறந்தவர்தான் நமது இளவரசி சந்திரவதனா. தங்கள் மகன் மன்னார்தாசனோ தங்களது மற்ற மனைவியர்களில் ஒருவரானராஜகோபால கஞ்சிகா தேவியாருக்குப் பிறந்தவன். முறைப்படி பார்த்தால் பட்டத்தரசிக்குப் பிறந்த வாரிசுகள் தானே தங்களுக்குப் பிறகு இந்த நாட்டை ஆள வேண்டும்? அதன்படி பார்த்தால் இளவரசி சந்திரவதனாவும் அவள் கணவரும் தானே இந்த நாட்டை ஆள்வதற்கு உரியவர்கள் என்று மக்கள் நினைக்க மாட்டார்களா?"

இளவரசிக்கு இந்தப் பேச்சு வெறுப்பை ஏற்படுத்தியது.

"ரங்கப்பா, என் மகன் மன்னார்தாசன் பட்டத்து ராணியின் வயிற்றில் உதிக்கவில்லை என்றாலும், அவன்

---

*Mannarudas in his Hemabga Nayika swayamvaram says that he was the son of Vijayaraghava by his another wife called Rajagopala kanchika. The Nayaks of Tanjore - V. Vriddhagirisan. Page No. 160.

எனக்குப் பிறந்தவன்தானே! பட்டத்து ராணிக்கோ ஆண் வாரிசு இல்லை. என் பெண்ணை மணந்ததற்காக வேறு யாரோ ஒருவனுக்கு இந்த நாட்டையும் சேர்த்து தாரைவார்த்துத்தர என் மனம் ஒப்பவில்லை. மன்னார் தாசன் எந்த மனைவிக்குப் பிறந்திருந்தாலும் என் ரத்தத்திலிருந்து விளைந்த வித்துத்தானே! எனக்குப் பிறகு அவன்தான் இந்த மண்ணை ஆளவேண்டும்."

''தங்கள் முடிவு எனக்கு பரிபூரண சம்மதம்தான் மன்னார்தாசன் எனக்கும் மருமகன் தானே! அவன் இந்த நாட்டை ஆள்வதில் எனக்கு மகிழ்ச்சி இல்லாமல் இருக்குமா? இருந்தாலும் மக்கள் ஏதாவது ஆர்ப்பாட்டம் செய்வார்களோ என்று அச்சமாக இருக்கிறது."

''மக்கள் எதற்கு ஆரப்பாட்டம் செய்வார்கள்? அவர்கள் சிறுவயதில் இருந்தே பார்த்த என் மகனை விட்டு விட்டு, வேறு எங்கிருந்தோ வரப்போகும் என் மருமகனுக்காகவா ஆர்ப்பாட்டம் செய்வார்கள்? நிச்சயம் அப்படி நடக்காது. நீ பயப்படாதே! என் மன்னார்தாசன் தான் இந்த நாட்டை ஆளப்போகிறான் இதுதான் என் முடிவு! இதனை யார் தடுத்தாலும் நடத்திக்காட்டாமல் விட மாட்டேன்."

இதைக் கேட்க கேட்க தளவாய் ரங்கப்பநாயக்கனின் அங்கம் முழுவதும் தீயாய்க் கனன்றது. தன் மகன் அச்சுதப்பனுக்கு இளவரசி சந்தரவதனாவை மணமுடித்து அவனை இந்த நாட்டிற்கே மன்னனாக்கலாம் என்ற அவன் கனவு பொடிப் பொடியாகச் சிதறிவிடும் போல் அல்லவா இருக்கிறது. விடமாட்டேன். என் உயிருள்ள வரை இதனை நடக்க விட மாட்டேன் என்று அவன் இதயம் ஓலமிட்டது.

"அமைச்சரே, மார்கழி மாதம் பிறக்கப் போகிறது. ஒவ்வொரு வைகுண்ட ஏகாதசி அன்றும் நமது குருவான

வைஷ்ணவ ஆச்சாரியார் குமார தாத்தாச்சாரியாருக்கு நாம் செலுத்தும் மரியாதை இவ்வருடம் மிகச் சிறப்பாக அமைய வேண்டும். ஏன் என்றால் இவ்வருடம் என் மகளும், இளவரசனாகப் போகும் என் மகனும் கலந்து கொள்ளப் போகிறார்கள். எனவே சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யுங்கள்."

"உத்தரவு மன்னவா!" என்றார் அமைச்சர் பணிவாக.

"நமது குருவின் வீதி உலா சிறப்பாக அமைவ தற்குரிய காவற்பணிகளை செவ்வனே பார்த்துக் கொள்ள வேண்டியது, ரங்கப்பா. நீயும் உன் மகன் அச்சுதப்பனும்தான்."

"அப்படியே அரசே!" என்றான் ரங்கப்பன் பல்லைக் கடித்துக் கொண்டு

அன்று இரவு அமைச்சர் கோவிந்த தீட்சிதர் தன் வீட்டில் தனது மகள் மதுரவாணியைக் கடிந்து கொண் டிருந்தார். பக்கத்தில் அவருடைய மனைவி நாகமாம்பாள் நின்று கொண்டிருந்தாள்.

"எப்படி இருந்தாலும் நீ இருட்டியவுடன் அந்தப் புரத்தில் இருந்து கிளம்பி நம் வீட்டிற்கு வந்து விட வேண்டும் என்று எத்தனை முறை சொல்லி இருக்கிறேன். அதை விடுத்து இளவரசியுடன் சேர்ந்து தர்பார் மண்டபத்திற்கு வந்தது தவறு," என்றார் கோபமாக.

"இளவரசி வலுக்கட்டாயமாக அழைக்கும் பொழுது அவள் என்ன செய்ய முடியும்? ஏதோ சிறு பெண். அறியாமல் செய்து விட்டதற்காக ஏன் இப்படிக் கடிந்து கொள்கிறீர்கள்?" என்றாள் நாகமாம்பாள்.

"இளவரசி வலுக்கட்டாயமாக அழைத்தாலும் இவள் புத்தி எங்கே போயிற்று? தந்தை கோபிப்பார்.

தாயார் திட்டுவாள். எங்கள் குலவழக்கத்திற்கு மாறாக நடக்கக் கூடாது என்று சொன்னால் இளவரசி அதன் பிறகு கட்டாயப்படுத்த முடியாதே! அதை ஏன் இவன் செய்யவில்லை?"

"இப்பொழுது என்ன கெட்டுப் போயிற்று? சரி விடுங்கள். இனி அப்படிச் செய்யமாட்டாள்."

"இன்றைக்கு தர்பார் மண்டபத்தில் என்ன நடந்தது தெரியுமா? தளவாய் ரங்கப்ப நாயக்கனின் மகன் அச்சுதப்பன் அடிக்கடி இவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனை பற்றித்தான் நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேனே! அவன் ஒரு பெண் பித்தன் என்று."

"மன்னனின் மதிப்புக்குரிய அமைச்சர் என்னும் மாபெரும் பதவியை வகிக்கும் தங்கள் மகளிடமே தவறாக நடந்து கொள்ளும் அளவுக்குத் தளவாயின் மகனுக்கு துணிச்சல் வரும் என்கிறீர்களா?"

"எதையும் அறுதியிட்டுக் கூற முடியாது நாகு. மண்ணாளப் பிறந்தவர்களின் மனதில் ஒரு எண்ணம் ஏற்பட்டு விட்டால் அதனை எந்த வழியிலும் நிறைவேற்றத்தான் பார்ப்பார்கள். நமக்கு நமது குலதர்மமும் ஆசாரமும்தான் முக்கியம்."

"நடக்க முடியாததை எல்லாம் எதற்கு வீணாகக் கற்பனை செய்து தங்களை வதைத்துக் கொள்கிறீர்கள்?" என்றாள் மதுரவாணி

"மதுரவாணி! நீ சிறு பெண் உலகம் அறியாதவள். எனக்கு இந்த நாட்டில் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் இருக்கிறது என்று உனக்குத் தெரியாதா? அனைத்து சாஸ்திரங்களையும் ஐயம்திரிபறக் கற்றவன் என்ற பெயர் இருக்கிறது. உனக்கு ஒரு களங்கத்தை ஏற்படுத்தி

அதன் மூலம் இத்தனையையும் அழித்து விட்டால் என் இதயம் தாங்காது."

"ஏன் பெரிய வார்த்தை எல்லாம் பேசுகிறீர்கள்?" என்றாள் நாகமாம்பாள்.

"மன்னர் பரம்பரையினர் சலனப்பட நாமே ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தரக்கூடாது. மதுராவாணிக்கு நம் குலத்திலேயே நல்ல வரன் பார்த்துச் சிறப்பாகத் திருமணத்தை நடத்த வேண்டும் என்று எண்ணி இருக்கிறேன். அதனால் இனிமேல் மதுரவாணி மன்னர் சம்பந்தப்பட்ட காரியங்களில் எட்டிப் பார்க்கக் கூடாது. இளவரசியோடு அவள் நட்பு இருக்க வேண்டும். வேறு எங்கும் அவள் செல்லக் கூடாது, புரிந்ததா வாணி?"

மதுரவாணி தலையாட்டினாள்.

ஆனால் அவள் மனதுக்குள் இளவரசன் மன்னார் தாசன் வரும் நாளில் அன்று எப்படியும் அவனைப் பார்த்து விட வேண்டும் என்று முடிவெடுத்தாள்.

மறுவாரம் புதன்கிழமை மன்னார்தாசன் தஞ்சை அரண்மனைக்கு வந்து சேர்ந்தான். அதிலிருந்து பிரச்சனைகளும் ஒவ்வொன்றாக வர ஆரம்பித்தன.

10

மாலைக் கதிரவன் தன் மஞ்சள் நிறக் கதிர்களால் மதுரை அரண்மனையின் மீது அபிஷேகம் செய்து கொண்டிருந்தான். மஹால் முழுவதும் மஞ்சள் நிற ஒளியில் தங்கத்தினால் கட்டப்பட்டதோ ' என்ற பிரமையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது.

பொதிகைமலை உச்சியில் இருந்து புறப்பட்டு வந்த தென்றல்காற்று அரண்மனை வளாகத்தின் உட்புகுந்து,

மெல்லத் தவழ்ந்து, செல்லமாக வீசிக் கொண்டிருந்தது. தூபக்காலினை ஏந்தியபடி அரண்மனை ஏவலர்கள் சாம்பிராணி, அகில் போன்ற நறுமணம் வீசும் புகையினை ஒவ்வொரு இடமாகக் காட்டிக் கொண்டிருந்தார்கள்

அரண்மனை வாசலில் இருந்த நவபத்கானா வாத்தியங்கள் இந்த மனோகரமான மாலை வேளைக்கு ஏற்ற மனதை மயக்கும் இசையை வழிய விட்டுக் கொண்டிருந்தன. அந்தப்புரத்தின் உட்பக்கம் அமைந்திருந்த அலர்வனத்திலிருந்து இனிமை ததும்பும் மணம் வியாபித்துக் கொண்டிருந்தது.

இத்தகைய இன்பமான வேளையில் அந்தப்புரத்தில் இருந்த தனி அறை ஒன்றில் அடைந்து கிடந்த முத்து நகைக்கு இதயமோ பரபரத்துக் கொண்டிருந்தது. தனது அத்தை மகாராணி வையாம்பிகா சொன்ன வார்த்தைகள் அவள் மனசுக்குள் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன.

சந்திரகிரியில் இருந்து எவ்வளவு ஆவலுடன் இந்த மதுரைக்கு வந்தாள்? வந்த அன்றே அவள் மனது சஞ்சலப்படும்படியாக அல்லவா ஆகிவிட்டது. தன்னை மணக்கப்போகும் மணாளனை நேருக்கு நேர் பார்த்து வெட்கமும் மகிழ்ச்சியும் அடைந்தாலும், அதற்கு அடுத்த நிமிடமே வேதனையையும் சேர்த்தல்லவா அனுபவிக்கும் படியாக ஆயிற்று!

மதுரைக்கு வந்தவுடன் சொக்கநாதனின் மறைந்திருந்தாவது அடிக்கடி பார்க்க வேண்டும். முடிந்தால் பேச வேண்டும். அவன் தன்னைக் கேலி செய்யவேண்டும். தான் வெட்கப்பட்டு ஓடவேண்டும் என்று எப்படி எல்லாம் கற்பனை செய்து பார்த்திருந்தாள்.

ஆனால் அவள் வந்த மறுநாளே சொக்கநாதன் மதுரையை விட்டு வெளியூர் செல்லப் போகிறான்.

வருவதற்கு சில மாதங்கள் ஆகலாம் என்ற செய்தியே அவளுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியது என்றாலும், போகிற இடத்தில் அவன் வேறு பெண்ணின் அழகைப் பார்த்து மையல் கொண்டு விடுவானோ என்ற நினைப்புத் தான் அவளுக்கு மனக்கலக்கத்தினை ஏற்படுத்தியது

வையாம்பிகாவுடன் பேசி முடித்த பிறகு சொக்க நாதனை தனிமையில் பார்த்துப் பேசிவிட முடிவு செய்தாலும் அதற்கான வாய்ப்பு இதுவரை ஏற்பட வில்லை.

சொக்கநாதனின் தனி அறை அதே வளாகத்தில் சற்றுத் தள்ளி இவள் அறைக்கு நேர் எதிரில் அமைந் திருந்தது. ஆனால் அதற்குள் எப்படிப் போவது? திருமணம் ஆகாத கன்னிப் பெண் மன்னனின் தனி அறைக்குள் தானே வலியச் செல்வதை அந்தப்புர மகளிர் பார்த்தால் கேலிக்கு இடமாகி விடுமே என்று அச்ச மாகவும் இருந்தது. இருந்தாலும் சூழ்நிலையை நினைத்துப் பார்க்கும் பொழுது, யார் என்ன நினைத் தாலும் கவலை இல்லை என்ற தைரியமும் ஏற்பட்டது.

அதனால் ஒரு முறை அவன் அறைப் பக்கமாகப் போய்ப்பார்த்தாள் வெளிப் பக்கம் தாழிடப்பட் டிருந்தது. ஏமாற்றமாக இருந்தது முத்துநகைக்கு. அதே நேரம் அங்கு வந்த பணிப்பெண்ணிடம் சொக்கநாதன் எங்கே சென்றிருக்கிறான் என்று யதேச்சையாகக் கேட்பது போல் வினவினாள்.

மன்னவர் நாளை வெளியூருக்குப் பயணப்பட இருக்கிறாராம் அதற்கான ஏற்பாடுகளை கவனிப் பதற்காகத் தன்னுடைய படைத்தளபதி வெங்கடகிருஷ்ண னுடன் வெளியே சென்றிருக்கிறாராம். எங்கே சென்றார் என்றும் தெரியவில்லை. எப்பொழுது வருவார் என்றும் தெரியவில்லை என்று பதிலளித்தாள் அந்தப்பணிப்பெண்.

மனம் ஓடிந்து போய் தன்னறைக்குள் வந்து படுத்தவள் அடிக்கடி வெளியே வந்து சொக்கநாதன் வாசற் கதவு திறந்து விட்டதா என்றும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஊஹூம்! இதுவரை வரவில்லை இதோ மாலையும வந்துவிட்டது இனி இருட்டிய பிறகு சொக்கநாதன வந்தால், அதன் பிறகு தான் தனியே சென்று சந்திப்பது பண்பான செயலாக இருக்காது. சொக்கநாதன் கூட தன்னைப் பற்றிக் கீழ்த்தரமாக நினைத்துவிடலாம் என்று அவள் பெண்மை எச்சரித்தது மனதில் ஆற்றாமை எழுந்தது. மதுரை மீனாட்சியை மனதில் எண்ணித் துதித்தாள்.

மறுபடியும் ஒரு தடவை பார்க்கலாமே என்று நினைத்து வெளியில் வந்து சொக்கநாதன் அறையை உற்றுப் பார்த்தாள். மறுவினாடி அவள் முகத்தில கோடான கோடி நிலவுகள் ஒளிவிட்டதைப் போன்ற ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

சொக்கநாதன் அறைக்கதவுகள் திறந்திருப்பது தெரிந்தன. வேகமாக ஒரு அடி எடுத்து வைத்தவள் யோசித்தாள். இவ்வளவு நேரம் அவன் வந்தவுடன் ஓடிப் போய்ப் பார்க்க வேண்டும் என்று சிந்தித்தவள் அவன் வந்துவிட்டான் என்று அறிந்ததும் தனியாக அவன் அறைக்குள் நுழைய அச்சமாகவும், லஜ்ஜையாகவும் இருந்தது.

ஆனால் அவனை சந்தித்தே ஆக வேண்டுமே! யோசித்தாள். குறுக்கும் நெடுக்குமாக அறைக்குள்ளேயே நடந்தாள். சேலையின் முந்தானையை அவள் விரல்கள் திருகித் திருகி இழுத்தன. மறுபடியும் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

சொக்கநாதனின் அறைக் கதவுகள் திறந்தே இருந்தன. மெதுவாக அதை நோக்கி நடந்தாள் கண்கள் பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தன. இதயம் படபட வென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

சொக்கநாதனின் அறைக்கு அருகே வந்ததும் அச்சமும் அவளைத் தொற்றிக் கொள்ள ஆரம்பித்தது. ஓரக்கண்ணால் அறையின் உட்பக்கம் கூர்ந்து பார்த்தாள். அறைக்குள் ஒருவருமே தட்டுப்படவில்லை.

அந்த இடத்திற்குள் அவள் அதுவரை சென்றதே இல்லை அதற்குள் எத்தனை அறைகள் இருக்கின்றன என்றும் தெரியாது அவற்றில் அவளது ஆசைக்குரியவன் எந்த அறையில் இருக்கிறான் என்றும் தெரியவில்லை. நுழைந்து பார்க்க மனதுக்குள் ஆசை இருந்தாலும், பயம் இப்பொழுது அவளை முழுவதும் ஆட்கொண்டு விட்டதால், முத்துநகை படபடப்புடன் அந்த அறையைக் கடந்து நடந்து விட்டாள். 'ஏண்டி நுழையாமல் நேரே நடந்தாய்' என்று அவள் மனது ஒரு பக்கம் இடித்தது. எரிச்சலாகவும் இருந்தது.

கால்கள் தன்னிச்சையாக நடக்க, மறுபடியும் வாசலை நோக்கி வந்தாள். அப்பொழுது பணிப்பெண் ஒருத்தி வெள்ளிப்பாத்திரம் ஒன்றை ஏந்தியபடி அவளருகே வந்தாள்.

"தேவி, நமது மலர்வனத்தில் இப்பொழுது அரும்பிய மல்லிகை மொட்டுக்களைப் பறித்தெடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். இவற்றை நானே தொடுத்துத் தங்கள் தலையில் சூட்டிவிடட்டுமா?" என்றாள் அந்தப் பணிப் பெண்.

"வேண்டாமடி! நானே தொடுத்துக் கொள்கிறேன். அதனை வைத்துவிட்டுச் செல்."

பணிப்பெண் மலர்கள் நிறைந்த பாத்திரத்தினை மஞ்சத்தின் அருகில் இருந்த ஆசனத்தில் வைத்துவிட்டு வெளியேறினாள். புதிதாகப் பறித்தெடுத்த மல்லிகை மலர்களின் மணம், முத்துநகையின் மனதை ஈர்க்க, பாத்திரத்தினை எடுத்து, மலர்களை முகர்ந்தாள்.

அம்மா! எவ்வளவு வாசனை! மதுரையில் மலரும் மல்லிகைக்கு இருக்கும் மணம் மற்ற மலர்களுக்குக் கிடையவே கிடையாது என்று சந்திரகிரியில் பலர் சொல்லி இருந்தாலும், இப்படி மயங்க வைக்கும் நறுமணம் இருக்கும் என்று அவள் நினைத்துப் பார்த்ததில்லை.

மல்லிகையின் மணம் அவள் மனதை மயக்கி, கிறக்கி, இன்ப வானில் பெருக்கெடுக்க, சொக்கநாதன் நினைவுகள் அவளை பாடாய் படுத்தத் தொடங்கின. மலர்களை அள்ளி முகத்தோடு வைத்து, ஆழமாக முகர்ந்து பார்த்துக் கண்கள் கிறங்கினாள். சொக்கநாதனின் முகத்தோடு முகம் வைத்துக் கொண்டது போன்ற உணர்வு அவளுக்குள் ஏற்பட்டது.

மல்லிகை மலர்கள் நிரம்பிய பாத்திரத்தினை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்து யோசித்தாள். என்ன செய்வது, சொக்கநாதனை எப்படிப் பார்ப்பது என்று கண்களை நாலாபுறமும் ஓடவிட்டாள்.

மாளிகையின் உப்பரிகை மீது அவள் கண்கள் சற்று நிலைத்தன. கையில் வைத்திருந்த பாத்திரத்துடன் அவள் கால்கள் உப்பரிகை செல்லும் படிகளை நோக்கி நடக்க ஆரம்பித்தன.

11

மதுரை மன்னன் சொக்கநாதன் திருவரங்கம் செல்லும் போது தஞ்சை இளவரசியும் பேரழகியுமான சந்திரவதனாவைப் பார்க்கநேரிட்டு அவள்அழகில் மனதை இழந்துவிடக் கூடாதே என்ற அச்சம் சொக்கநாதனின் அன்னைக்கு மட்டுமின்றி அவனை மணக்கவிருக்கும் முத்துநகைக்கும் இருந்தது. இதனால் சொக்கநாதன் மறுநாள் புறப்படுவதற்குள் அவனை நேரில் சந்தித்து தன் மனதை வெளிப்படுத்திவிட நினைத்த முத்துநகை அதற்கு வழி தெரியாமல் தவித்தாள். மதுரை அரண்மனை யில் பணிப்பெண் கொண்டு வந்த மல்லிகை மலர் மொட்டுகள் நிறைந்த கிண்ணத்துடன் சொக்கநாதன் அறையின் மேல்பகுதியில் இருந்த உப்பரிகை நோக்கி தயக்கம்- பயம் மனதைக் கவ்வ மெல்ல நடந்தாள்.

உப்பரிகைக்கு வந்து அந்த அரண்மனையின் அந்தப் புரம் முழுவதும் சுற்றிவளைத்துச் செல்லும் மொட்டை மாடிப் பகுதிக்கு வந்தாள். சொக்கநாதன் அறைக்கு நேர்மேலே இருக்கும் பகுதிக்கு வந்து சேர்ந்தாள்.

இடுப்பளவு உயரம் இருந்த கைப்பிடிச்சுவரில் மலர்கள் நிறைந்த பாத்திரத்தினை வைத்துவிட்டு, அங்கிருந்து நேர்கீழே எட்டிப் பார்த்தாள்.

மறுவினாடி அவள் இதயம் முழுவதும் மல்லிகை மலர் களால் நிரம்பிவழிவது போன்ற உணர்ச்சி அவளுக்குள் ஏற்பட்டது. மகிழ்ச்சிப் பெருக்கில் அவள் முகம் தாமரை யாய் மலர, அவள் விரல்களை ஒன்றுடன் ஒன்று பின்னி நெருக்கிக் கொண்டாள்.

அவள் பார்த்த இடத்திற்கு நேர்கீழே, சொக்க நாதனின் அறையின் பின்புறம் அமைந்திருந்தது. அதில் மாடம் போன்று அமைந்திருந்த ஒரு அகன்ற வெற்றிடம்

கூரையில்லாமல் இருந்தது. அந்த வெற்றிடத்தில் இருந்த ஆசனம் ஒன்றில் சொக்கநாதன் அமர்ந்திருப்பது தெரிந்தது.

மாலை ஞாயிறின் மஞ்சள் ஒளி சொக்கநாதன் தங்க நிற மேனி முழுவதும் தழுவி, ஆடகப்பொற் சிலை ஒன்று ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றதோ என்ற பிரமையை ஏற்படுத்தியது.

வெற்றுமார்புடன் ஆசனத்தில் அமர்ந்தவாறு சொக்கநாதன், தனது நீண்ட உடைவாளைத் துடைத்து நெய்பூசிக் கொண்டிருந்தான். அந்த வாளின் மீதும், சொக்கநாதனின் மார்பின் மீதும் வெய்யோன் ஒளிபட்டு, 'பளிச், பளிச்' என்று மின்னல் வெட்டுப் போல் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

முத்துநகை அவன் அழகை ரசித்து, தன்னை மறந்து லயித்துப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனது அகன்ற தோள்களும், பரந்த மார்பும், தங்கப் பாளங்களைச் சேர்த்து வைத்தது போன்ற முதுகுப் பகுதியும், கரிய கூந்தலை அள்ளி எடுத்துக் கொண்டையாகச் சுற்றி வைத்த எழிலும், அளவாக வந்து கன்னத்தில் முறுக்கிக் கொண்டு இருக்கும் மீசையின் அழகும் அவளைக் கிறங்க அடித்தன. அந்த மீசையோடு அந்தக் கன்னத்தையும் அழுத்திப் பிடித்துத் திருகவேண்டும் போல் இருந்தது அவளுக்கு !

சொக்கநாதனுடன் நேரில் பேச வேண்டிய அவசியத்தை அவள் மனம் உச்சரிக்க ஆரம்பித்ததும் சுதாரித்துக் கொண்டு யோசித்தாள். கைகள் மல்லிகை, மலர்களை அளைந்தபடி இருக்க, அவள் மனம் பலவழிகளைச் சிந்திக்கத் தொடங்கியது.

பளிச் என்று ஒரு எண்ணம் உதிக்கத் தொடங்கியது.

முத்துநகை நின்று கொண்டிருக்கும் இடத்திற்கு நேர் கீழாகத்தான் சொக்கநாதன் அமர்ந்திருந்தான். மனம் படபடக்கத் தனது மனதில் எழுந்த திட்டத்தினை மறுநிமிடமே செயல்படுத்தினாள்.

தன் கையில் இருந்த மல்லிகை மலர்கள் நிறைந்திருந்த வெள்ளிப் பாத்திரத்தை அப்படியே தலைகீழாகக் கவிழ்த்தாள். அத்தனை மலர்களும் கீழே உட்கார்ந்திருந்த சொக்கநாதனின் தலைமீது மொத்தமாக விழுந்து, உடல் முழுவதும் அபிஷேகம் செய்ததுபோல வழிந்து இறங்கின.

அடுத்த வினாடியே தன் கையில் இருந்த வெற்றுப் பாத்திரத்தை சொக்கநாதனுக்கு சற்றுத் தள்ளி கீழே விழுமாறு போட்டாள். அவ்வளவு உயரத்தில் இருந்து விழுந்த வெற்றுப் பாத்திரம், சொக்கநாதனின் காலருகே 'டணார்' என்ற ஓசையுடன் 'கலகல' என்ற ஒலி ஏற்படுத்தியவாறு தரையில் விழுந்து ஓடியது.

தஞ்சையில் விஜயராகவ நாயக்கன் இருக்கும் இடத்திற்கு எப்படிச் செல்வது, விஜயராகவ நாயக்கனுக்கு விருப்பமான பொருள் என்னவென்று எப்படி அறிவது, அதனை எப்படிக் கவர்ந்து வருவது என்ற தீவிர சிந்தனையில் ஆழ்ந்தவாறு தன்னுடைய உடைவாளைத் துடைத்துக் கொண்டிருந்த சொக்கநாதன், தன் தலை மீது திடீரென்று மல்லிகை மலர்கள் விழுந்ததையும், தொடர்ந்து ஏதோ ஒரு பாத்திரம் தன் காலருகே பெருத்த ஓசையுடன் விழுந்து உருண்டு சென்றதையும் பார்த்து திடுக்கிட்டான்.

பின்னர் மேலிருந்து யாரோ கவனக்குறைவாக பாத்திரத்தினை நழுவ விட்டிருக்கிறார்கள் என்ற நினைப்புடன் கோபமும் சேர்ந்து கொள்ள தலையை மேலே உயர்த்தினான்.

அதே நேரம் முத்துநகையும், "ஐயையோ!" என்று ஒன்றுமே அறியாதவள் போல் பதைபதைத்து, முகத்தில் அதிர்ச்சியைத் தேக்கி கீழே எட்டிப் பார்த்தாள்.

"யாரது?" கோபத்துடன் இடி முழங்கியதுபோல் கேட்டான் சொக்கநாதன்.

ஏதோ பெரிதாக சாதித்து விடப் போவதைப் போல திட்டமிட்டு, ஆசையுடன் மல்லிகை மலர்களை அவன் மீது கவிழ்த்த முத்துநகை, இப்பொழுது சொக்கநாதன் கோபத்துடன் குரல் எழுப்பியதும் நடுங்கிப் போனாள்.

அம்மா! படபடக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள். குரலைக் கேட்டாலே பயமாக இருக்கிறதே! நேரில் பார்த்தால் கண்களாலேயே எரித்து விடுவாரோ! இல்லை-கன்னத்தில் அறைவாரோ!

'யாரது' என்ற அவன் குரலைக் கேட்ட மறு வினாடியே முத்துநகை பயத்தில் அப்படியே கைப்பிடிச் சுவரருகே மறைந்து உட்கார்ந்து கொண்டாள்.

சே! விளையாட்டுத்தனமாகச் செய்துவிட்டேனா! இந்தத் திட்டமே தப்பு! செய்திருக்கக்கூடாது!

மேலே ஏறிட்டுப் பார்த்த சொக்கநாதன், அதே நேரத்தில் உப்பரிகை அருகே ஒரு இளம்பெண் பயத்துடன் 'ஐயையோ' என்று பதறிப் போய் சொன்னதையும், தான் 'யாரது' என்று கோபத்துடன் கேட்டவுடன் அந்தப் பெண் பயந்து போய், மொட்டைமாடியின் கைப்பிடிச் சுவரின் பின்புறம் மறைந்து, பதுங்கி உட்கார்ந்ததையும் பார்த்து அவன் கோபம் இன்னும் அதிகமாகியது.

தான் பார்த்த மறுவினாடியே அந்தப்பெண் பதுங்கிக் கொண்டதாலும், அந்தப் பெண்ணின் பின்புறம் இருந்து மாலைக் கதிரவனின்மஞ்சள் கிரணங்கள் சொக்கநாதனின் கண்களின் நேராக விழுந்ததால் கண்கள் கூசியதாலும், சொக்கநாதனுக்கு அந்தப் பெண் யாரென்று உடனடியாகத் தெரியவில்லை.

அந்தப்புரத்தைச் சேர்ந்த யாரோ அறிவில்லாத பணிப்பெண் ஒருத்தி கை தவறுதலாக மலர்கள் நிறைந்த பாத்திரத்தை கீழே போட்டு விட்டாள் போலிருக்கிறது. தன்னைப் பார்த்ததும் பயந்து போய் பதுங்கிக் கொண்டாள் என்ற எண்ணமே அவனுக்குள் உதித்தது.

மன்னனின் அந்தரங்க அறைக்கு நேர்மேலே வருவதற்கு இந்தப் பணிப்பெண்ணுக்கு எவ்வளவு துணிச்சல்? அவள் கையில் இருந்து நழுவிய பாத்திரம் மட்டும் காலருகே விழாமல் நேரே அவன் தலையில் விழுந்திருந்தால் என்ன ஆயிருக்கும்? இவ்வளவு கவனக் குறைவுடனா ஒரு பணிப்பெண் நடந்து கொள்வது?

சொக்கநாதனுக்கு மறுபடியும் ஆத்திரம் வந்தது.

"கேட்பது காதில் விழவில்லையா? ஏன் பதுங்கு கிறாய்? எழுந்து நில்!" கோபத்துடன் கத்தினான்.

முத்துநகை நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அப்படியே உட்கார்ந்து இருந்தாள், யப்பா! எவ்வளவு கோபப்படு கிறார்!

"ஏய்! அறிவு கெட்ட பெண்ணே! எழுந்து நிற்கப் போகிறாயா, இல்லையா? மன்னன் கட்டளையை மதிக்காவிட்டால் என்ன நடக்கும் என்பது மறந்து போய் விட்டதா?... ம்! எழுந்து நில்!"

முத்துநகை மெதுவாக எழுந்து நின்றாள்! இதயத் திற்குள் புறா ஒன்று சிறகடித்தது போல் படபடத்தது.

அதே சமயம் சொக்கநாதனுக்கும் அவள் யார் என்று தெரியவில்லை. எழுந்து நின்ற முத்துநகை தன்முகத்தை அவனுக்கு நேர்காட்டாது முதுகுப்பக்கமாகத் திரும்பி நின்றிருந்தாள். வெய்யில் ஒளி கண்ணில் பாயாதவாறு. கையால் மறைத்துப் பார்த்தான். அப்படியும் அவள் யார்

என்று தெரியவில்லை. அவன் கோபம் இன்னும் அதிகமாகியது.

“நேராக நில்!”

முத்துநகை திரும்பவே இல்லை.

“அவ்வளவு திமிரா உனக்கு? கீழே இறங்கிவா!”

முத்துநகைக்கு மறுபடியும் பயம் எழ, உடனே உட்கார்ந்து பதுங்கிக் கொண்டாள். ‘இதைத்தானே எதிர்ப்பார்த்தாய்! அதுதான் உன் ஆசைமாமன் அழைக்கிறானே! போயேண்டி’ என்று அவள் மனம் சொன்னாலும் அவளுக்கு பயமாக இருந்தது.

“ஏய்! இப்பொழுது நீ கீழே இறங்கி இங்கு வரப் போகிறாயா? இல்லை நான் அங்கு வரவா?” கோபத்துடன் கத்தியும் அவள் எழவிலலை. சொக்கநாதனின் கோபம் எல்லை மீறத் தொடங்கியது.

அரண்மனையின் அந்தப்புரத்தில் பணிபுரியும் சாதாரண ஒரு சேடிப்பெண், மன்னவன் என்ற மரியாதை கொஞ்சம் கூட இல்லாமல் தான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நேர் மேலே வந்தது மட்டுமின்றி மலர்கள் நிறைந்த பாத்திரத்தினை கவனப்பிசகாக கைநழுவ விட்ட குற்றத்திற்காக பதறிப் போய், ஓடி வந்து அவனிடம் மன்னிப்புக் கேட்காமல், பலமுறை கூப்பிட்ட பிறகும் தன்னருகே வராமல் ஒளிந்து கொள்ளும் அவளுக்கு இருக்கும் ஆணவம்தான் எவ்வளவு என்ற கோபத்தில் சொக்கநாதன் மாடிக்கு விரைவாக ஓடி வந்தான்.

அதே நேரம் முத்துநகை தன் திட்டப்படி தன் மனதுக்கு பிடித்தமான மதுரை மன்னனின் கவனத்தைத் தன்பால் ஈர்த்து விட்டோம் என்று மகிழ்ச்சி அடைந்

தாலும் தான் யார் என்பதை அறியாது அவன் கோபக் குரல் எழுப்பியதும் தன் சர்வ நாடியும் ஒடுங்கிப்போய், நெஞ்சம் நடுங்கி விதிர் விதிர்த்து விட்டாள்.

இரண்டாவது தடவையாக சொக்கநாதன் குரல் எழுப்பியதும் மெதுவாக எழுந்து அவன் பார்வையின் நேர்படாது முதுகுப்புறமாக திரும்பி நின்றாலும் மனதிற்குள் லேசான ஆசை எழுந்தது.

சொக்கநாதன் தான் யார் என்பதை உணர்ந்து, தன் கோபத்தை உடனே விட்டு, வியப்பும் மகிழ்ச்சியும் பொங்க தன்னை அன்புடன் அழைப்பான் என்று ஆசையுடன் எதிர்பார்த்தாள் மாறாக அவன் முன்னை விட அதிக கோபத்தில் கத்தியதும் முத்துநகை பயத்துடன் மறுபடியும் கைப்பிடிச் சுவருக்கு கீழே பதுங்கிக் கொண்டாள்.

என்ன இது? என்னைப் பார்த்த பிறகும் இவ்வளவு கோபப்படுகிறார்? ஒருவேளை உண்மையில் என் மீது அவருக்கு ஆசை இல்லையோ? பக்கத்தில் சென்றால் ஏன் இப்படி என் தலை மீது கொட்டினாய் என்று ஆத்திரத் துடன் பேசி அடித்து விடுவாரோ? இப்படிப்பட்ட கோபக்காரருடன் எப்படிப் பேசுவது? சே! இங்கே வந்திருக்கவே வேண்டாம், இப்படியே என் அறைக்குள் ஓடிவிட்டால் என்ன? அவர் எப்படியும் போகட்டும்!

ஐயையோ! தப்பு! தப்பு! அவர் என்னைத்தான் கட்டிக்கொள்ள வேண்டும்! திருவரங்கத்திற்குச் சென்ற பிறகு தஞ்சை இளவரசியை எங்கேயாவது பார்த்து மையல் கொண்டு என்னை மறந்துவிட்டால் அப்புறம் நான் உயிரோடு இருந்தே பலன் கிடையாது! அவரிடம் பேசித்தான் ஆகவேண்டும். அவர் எவ்வளவு கோபப் பட்டாலும் சரி! அடித்தாலும் சரி!

இவ்வளவு நேரமாக கீழிருந்து ஒரு சத்தமும் வர வில்லையே! சொக்கநாதன் உள்ளறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டாரா? இல்லை, தொடர்ந்து அங்கேயே உட்கார்ந்து மறுபடியும் வாளை சுத்தம் செய்யத் தொடங்கிவிட்டாரா?

மெதுவாக எழுந்து, கீழே எட்டிப் பார்த்தாள். கீழே சொக்கநாதனை காணாது திகைத்தாள். எழுந்து உள்ளே போய் விட்டாரா? இனி என்ன செய்வது?

சிந்தித்தபடி நின்றவள் பின்பக்கமாக ஏதோ ஓசை கேட்டதும் அவசரமாகத் திரும்பிப் பார்த்தாள். சொக்கநாதன் தன்னை நோக்கி ஓடாத குறையாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அதைப் பார்த்ததும் திகைத்த முத்துநகைக்கு மறு படியும் பயம் மூண்டது. முக்கணாங்கயிறு இல்லாத காளையைப் போல ஓடி வருகிறாரே! தேவி மீனாட்சி!

அவள் நினைத்ததை எல்லாம் மறந்து, மிரண்டு போய் அங்கிருந்து ஓட ஆரம்பித்தாள்.

தன்னைப் பார்த்த பிறகும் இந்த பணிப்பெண் ஓடு கிறாளே, இவளுக்கு எவ்வளவு திமிர் என்ற ஆத்திரத்தில் சொக்கநாதன் "ஓடாதே நில்!" என்று கூவியவாறு வேக மாகப் பாய்ந்து வந்து அவள் கரத்தை பற்றி இழுத்தான்.

வேகமாக ஓடிய முத்துநகையின் கரத்தைப் பற்றி வெடுக் என்று சொக்கநாதன் இழுத்ததும், அவள் நிலை தடுமாறி அவன் நெஞ்சில் அப்படியே சாய்ந்தாள்.

மறுவினாடி அவள் யார் என்று தெரிந்ததும் சொக்கநாதன் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானான். திக்பிரமை பிடித்தவன் போல், சற்று நேரம்

திகைத்தபடியே அவள் முகத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தவாறு நின்று விட்டான்.

அவன் நெஞ்சில் விழுந்து கிடந்த முத்துநகையோ பலவிதமான உணர்ச்சிகளுக்கு இடைப்பட்டு தவிக்கத் தொடங்கினாள்.

வேகமாக ஓடிய அவள் கரத்தை சொக்கநாதன் பற்றிய மறுநிமிடமே தன்னை நோக்கி வெடுக்கென்று இழுத்ததால் அடியோடு நிலைகுலைந்து, கால்கள் தடுமாறி அப்படியே ஒரு பக்கமாக திரும்பி, அவன் நெஞ்சின் மீது பொத்தென்று விழுந்தாள். அப்பொழுது அவளது ஒரு பக்க மார்பு அங்கி அணியாத அவனது வெற்று மார்பில் நச் என்று முட்டி, சற்றே சரிந்து அவன் நெஞ்சோடு அழுந்திக் கொண்டது.

அதே நேரம் அவள் முகமோ அவன் மீது விழும் பொழுது, முதலில் அவன் கன்னத்தோடு கன்னம் தாள வாத்தியக்காரன் தன் இரண்டு கரத்தில் இருக்கும் தாளங் களை 'டணார்' என்று ஓசை எழத் தட்டுவானே. அதைப் போன்று இருவர் கன்னங்களும் ஒன்றுடன் ஒன்று மோதி, பிறகு சரிந்து அவன் கழுத்தில் வந்து அவள் முகம் புதைந்தது.

இதே சமயம் கொழுகொழுவென்று இளமையும் அழகும் பூத்துக் குலுங்கும் ஒரு பெண்ணை தன்னை நோக்கி முழுபலத்துடன் இழுத்ததால், அவளின் மொத்த மும் தன் மீது சாய, அதனால் சற்று நிலைகுலைந்த சொக்கநாதன், தான் தடுமாறிக் கீழே விழுந்து விடக் கூடாது. என்பதற்காக, அனிச்சையாக அவன்கைகள் அவள் இடையைச் சுற்றி வளைத்தன.

அவன் கைகள் முதலில் அவளது பின்னழகுகளில் படர்ந்து இறுக வளைத்தது. முத்துநகையின் உடல் அவன் நெஞ்சில் விழுந்து சற்று சரிந்ததும் அவளத

பின்னழகுகளில் படர்ந்த அவன் கைகளில் முதலில் அந்த அழகுகள் பட்டு, பிறகு வழுக்கிக்கொண்டு கீழே இறங்கியது. முடிவாக அவளது இடையை அவன் கரங்கள் இறுக்கிப் பிடித்துக் கொண்டன.

தன்னை மதிக்காது, மன்னன் என்ற பயம் கூடத் துளியும் இல்லாது ஓடிய பணிப்பெண் இப்பொழுது தன் மீது விழுந்து தன்னையே நிலைகுலைய வைத்து விட்டாளே என்ற நினைப்பில் சொக்கநாதனின் கோபம் இன்னும் அதிகரிக்க, ஆத்திரத்துடன் அவள் யார் என்று கூர்ந்து பார்த்தான்.

இவள் பணிப்பெண் மாதிரித் தெரியவில்லையே! இவளை எங்கோ பார்த்திருக்கிறோமே என்று சற்றுத் தடுமாறிய சொக்கநாதனுக்கு மறுவினாடியே அவள் யார் என்று தெரிந்ததும் எல்லையற்ற அதிர்ச்சிக்கு ஆளானான்.

இவள் முத்துநகை அல்லவா! என்னை மணக்க இருப்பவள் என்று காலையில் அன்னை காட்டிய பெண் அல்லவா! இவளையா பணிப்பெண் என்று கடுமையாகப் பேசிவிட்டோம்! அடடா! அடடா! இவள் எங்கே, எப்படி?

இதே நேரம் முத்துநகையோ பலவிதமான உணர்ச்சி களுக்கு இடையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தாள் முதலில் அவன் தனது கரத்தைப் பிடித்து இழுத்ததால் ஏற்பட்ட பயம்! அடுத்து அவன் மீது நிலை குலைந்து விழுந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி! தொடர்ந்து அவன் கன்னத்தோடு கன்னம் உராய்ந்ததால் எழுந்த கிளு கிளுப்பு! அதே சமயம் அவள் மார்பில் ஒன்று அவன் நெஞ்சைக் குத்தித் தோற்றுப் போய் கீழே இறங்கி அவன் மார்போடு புதைந்து கொண்டதால் ஏற்பட்ட கோபம்! சொக்கநாதனின் ஒரு கரம் தன் பின்னழகுகளைப் பற்றி,

அவைகள் அவனிடமிருந்து வழுக்க, அவள் இடையை அவன் கரம் சுற்றி வளைத்துத் தன்னோடு இறுகப் பிடித்துக் கொண்டதால் எழுந்த நாணம் !

இந்த உணர்ச்சிகள் எல்லாம் சில வினாடிகள் அவளுக்குள் புரண்டு மகிழ்ச்சியையும், கிளர்ச்சியையும் ஏற்படுத்தி முடிவில் சொக்கநாதனின் மற்றொரு கரம். தன்னுடைய கரத்தை வளைத்துப் பிடித்ததால், அந்தக் கரம் திருகி தாங்க முடியாத வலியை ஏற்படுத்தியது. அந்த வலியையே அவன் அணைப்பில் கிடந்ததால் சில நொடிகள் மறந்திருந்த முத்துநகை. பிறகு தன்னை உணரவும், வலியும் உணர்ந்து, வேதனையில் முன கினாள்.

''ஸ்ஸ்... அம்மா... ! கை... கை வலிக்கிறது !"

அதுவரை தன்னை மறந்த நிலையில் இருந்த சொக்கநாதன், முத்துநகை வலியில் முனகியதும், தன் னுணர்வுக்கு வந்து, அவளை எந்த நிலையில் தன்னோடு அணைத்துக் கொண்டிருக்கிறோம் என்று அறிந்து, பதறிப் போய் அவள் கரத்தை தன்னிடமிருந்து விடுவித்தான்.

12

சொக்கநாதனின் கைபட்டதால் உடல்சிலிர்த்த முத்துநகை மறுவினாடியே நாணத்துடன் அவனிட மிருந்து விலகி நின்றாள். அவன் பற்றி இழுத்த தனது கரத்தை திருப்பித் திருப்பிப் பார்த்தாள். முழங்கையை ஒட்டி இருந்த சதைப்பகுதி கன்றிப்போய் சிவந்து காணப் பட்டது. அவன் கை விரல்கள் இரண்டும் அப்படியே

பதிந்தது போல் தெரிந்தது. இன்னும் வலித்துக் கொண்டிருந்தது. அவன் கையைப் பிடித்து இழுத்ததால் ஏற்பட்ட சுகம் நெஞ்சிலே இருந்தாலும், அந்த வலி அவளை பேச வைத்தது.

''ஸ்ஸ்... எப்படிக் கன்றிப் போய் விட்டது! இப்படியா ஒரு பெண்ணின் கரத்தைப் பற்றி இழுப்பது?'' கரத்தைப் பார்த்தபடி சொன்னாள்

சொக்கநாதனுககு தர்மசங்கடமாக இருந்தது. அவள் கரம் சிவந்து இருப்பதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. உடனே அவள் கையைப் பற்றி பரிவுடன் தடவிக் கொடுக்கலாம் என்ற எண்ணத்தில் எழுந்த அவன் கைகள் சற்று நீண்டு, பிறகு யாருமில்லாத இடத்தில் அந்திப்பொழுதில் ஒரு இளம் பெண்ணின் கரத்தைப் பற்றுவதை யாரும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற நினைப்பில், எழுந்த அவன் கரம் தாழ்ந்து கொண்டது.

அதனைப் பார்த்த முத்துநகைக்கு சற்று ஏமாற்றமாக இருந்தது.

''மன்னித்துக்கொள் முத்துநகை! நீ எப்படி இங்கு வந்தாய்? யாரோ ஒரு பணிப் பெண் என்று தவறாக நினைத்து உன்னிடம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டேன். ரொம்பவும் வலிக்கிறதா? என்று பரிவுடன் கேட்டான்.

''பணிப்பெண்ணாக இருந்தால்கூட இப்படியா முரட்டுத்தனமாக நடந்து கொள்வது? உங்கள் பலத்தை எதிரிகளிடம் காட்டுங்கள். என்னைப் போன்ற இளம் பெண்கள் தாங்க மாட்டார்கள்!... யம்மா! எப்படி வலிக்கிறது!'' கையை திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

சொக்கநாதனுக்கு தன் மீதே எரிச்சலாக வந்தது ஏன் இப்படி நடந்து கொண்டோம்.

''நீ இங்கே எப்படி வந்தாய் முத்துநகை? என்ன பண்ணிக் கொண்டிருந்தாய்? மலர்கள் நிறைந்த பாத்திரத்தை எப்படி கை நழுவவிட்டாய்?''

''சேடிப் பெண் ஒருத்தி மல்லிகை மலர்களைப் பறித்தெடுத்து என்னிடம் தந்தாள். மல்லிகை என்றால் எனக்கு ரொம்பவும் இஷ்டம். மாலை நேரத்தில் இந்த மாடியில் காற்று நன்றாக வருமே! அதனால் இங்கு உட்கார்ந்து மல்லிகை மலர்களை சரமாகத் தொடுப்பதற்காக வந்தேன். இங்குதான் உங்கள் அறை இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. தற்செயலாக இங்கு வந்தவள், கைப்பிடிச் சுவரின் மீது பாத்திரத்தை வைக்க நினைத்து அதே நேரத்தில் கீழே பார்த்தேன். தாங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தவுடன் எனக்கு பயம் வந்துவிட்டது. அதே நேரம் கைப்பிடிச் சுவர் என்று நினைத்து நான் பாத்திரத்தை வைக்க, அது நேரே உங்கள் மீது வந்து விழுந்து விட்டது என்னை மன்னித்து விடுங்கள்.''

''என்னைக் கண்டு அப்படி என்ன பயம் உனக்கு முத்துநகை? நான் என்ன புலியா, சிங்கமா? உன்னை அப்படியே கடித்து விழுங்கி விடவா போகிறேன்? காலையில் என் அன்னையின் அறையில் வைத்து என்னைப் பார்த்தவுடன் பதறிப்போய் பழரசக் குவளையை தரையில் போட்டுவிட்டு ஓடினாய். இப்போது இவ்வளவு உயரத்தில் இருந்து என்னைப் பார்த்துவிட்டு பயந்து போய் பெரிய பாத்திரத்தையே என் தலைமீது போடாத குறையாகப் போட்டு விட்டு ஓடுகிறாய்? அப்படி என்ன உனக்கு என்மீது அவ்வளவு பயம்?''

"அது தான் தெரியாமல் நடந்து கொண்டேன் என்று சொன்னேனே? நல்ல வேளை! மலர்கள் என் தலை மீதும், பாத்திரம் என் காலருகே தரையிலும் விழுந்தது. அதற்கு பதிலாக பாத்திரம் என் தலை மீது விழுந்திருந் தால் என் கதி என்ன ஆகியிருக்கும்?''

''உங்களுக்கு ஒன்றும் ஆகி இருக்காது, இரும்பு போல் வலிமையாக இருக்கும் உங்கள் தலையில் அந்தப் பாத்திரம் விழுந்தால்கூட, அது பந்து போல எவ்வித் திரும்பவும் என் கைக்கு வந்து விடும். பாத்திரம் தரை யில் விழுந்ததற்கே இப்படி ஓடி வந்து என் கையை முறுக்கினீர்கள். அது மட்டும் உங்கள் தலையில் விழுந் திருந்தால் என் கையை ஒடித்து கழற்றி உங்கள் கை யோடு எடுத்துச் சென்றிருக்க அல்லவா செய்து இருப்பீர்கள்; சரியான முரடு!''

சொக்கநாதன் கலகலவென்று சிரித்து, "சரியான வாயாடிப் பெண்ணாய் இருப்பாள் போலிருக்கிறதே!" என்றான்.

முத்துநகை அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் தலையில் சில இடங்களில் மல்லிகை மொட்டுக்கள் விழுந்து கிடந்தன. ஒரே ஒரு மல்லிகை மொட்டு அவனது வலது பக்க மீசைக்குள் புகுந்து நன்றாக ஒட்டிக் கிடந்தது.

இந்தக் காட்சியை பார்த்ததும் முத்துநகைக்கு தன்னை அறியாமல் சிரிப்பு பொத்துக் கொண்டு வர, சிரித்து விட்டாள்.

"எதற்கு முத்துநகை இப்படி நகைக்கிறாய்...?"

''உங்கள் தலையில்... மல்லிகை, மறுபடியும் சிரித்தாள்.

சொக்கநாதன் அவசரமாக தலையை தட்டிவிட்டான். தலையில் கிடந்த மலர்கள் கீழே விழுந்தன. மீசைக்குள் இருந்த மலர் அப்படியே இருந்தது.

முத்துநகை அவனருகே நெருங்கி மீசைக்குள் இருந்த மலரைக் கசங்காது வெளியே எடுத்துக் காட்டினாள். முதலில் திகைத்த சொக்கநாதன் பிறகு குறும்பு தவழ, "அவ்வளவு தானா, இல்லை இன்னும் வேறு எங்காவது நீ கொட்டிய மலர்கள் ஒளிந்து இருக்கின்றனவா?" என்றான்

"இன்னொரு பக்க மீசையிலும் ஒரு மலர் ஒட்டிக் கொண்டிருக்கிறது. இருங்கள் எடுத்து விடுகிறேன்" என்று அவள் கூற சொக்நாதன் தன் மறுகன்னத்தைத் திருப்பிக் காட்டினான்.

மறு நொடியில் முத்துநகை அவன் மீசையை பிடித்து வெடுக்கென்று இழுத்தாள். சொக்கநாதன் வலியில் முனகி அவளை முறைத்தான்.

"வாயாடி என்று தான் நினைத்தேன். பெரிய குறும்புக்காரியாகவும் இருப்பாய் போலிருக்கிறதே! உன்னை மணக்கவே எனக்கு பயமாக இருக்கிறதே!"

முத்துநகை சற்று நேரம் மவுனமாக இருந்தாள்.

"என்ன முத்துநகை பதிலையே காணோம்?"

"தயவு செய்து விளையாட்டுக்காக கூட அப்படி சொல்லாதீர்கள். என்னால் தாங்க முடியாது," கண் கலங்கினாள். இதைப் பார்த்த சொக்கநாதன் திடுக்கிட்டான்.

"பைத்தியம்! உண்மையிலேயே கேலிக்காகத்தான் சொன்னேன். உடனே அழுது விட்டாயே! கண்களைத் துடைத்துக்கொள்!"

முத்துநகை அவன் மீசைக்குள்ளிருந்து எடுத்த மல்லிகை மொட்டை அவனறியாமல் தன் இடுப்பில் சொருகிக் கொண்டு கண்களை துடைத்துக் கொண்டாள். பிறகு அவளிடம் தெளிவாகப் பேச முடிவெடுத்தாள்.

"மன்னவா, உங்களிடம் ஒன்று கேட்கலாமா?"

"கேள்! என்னிடம் கேட்பதற்கு எதற்கு இவ்வளவு பீடிகை?"

"இல்லை... வந்து... நீங்கள் திருவரங்கம் போகத்தான் வேண்டுமா?"

"அன்னை... உன்னிடம கேட்கச் சொன்னார்களா?"

"இல்லை... இல்லை... நானாகத்தான் கேட்கிறேன்."

"பதவிப் பொறுப்புகளை ஏற்பதற்கு முன் திருவரங்கனை சேவித்து வருவது நமது குலவழக்கம். இதில் நீயும் சேர்த்து ஏன் பயப்படுகிறீர்கள்?"

"நீங்கள் திருப்பி வர சில மாதங்கள் பிடிக்கும் என்று கூறினீர்களே?"

"அதனால் என்ன?"

"இல்லை... அங்கு..." தஞ்சை இளவரசியைப் பற்றிப் பேச்செடுக்க பயமாகவும் இருந்தது.

"நீ ஒன்றும் பயப்படாதே முத்துநகை! எனக்கு ஒன்றும் ஆகாது. பத்திரமாகத் திரும்பி வருகிறேன் போதுமா?"

"என்னை மறந்து விடமாட்டீர்களே!" ஏக்கத்துடன் கேட்டாள்.

சொக்கநாதன் அவள் முகத்தையே சற்று நேரம் கூர்ந்து பார்த்தான். பிறகு அவள் கரத்தைப் பற்றி,

"ஒன்றும் கவலைப்படாதே! எல்லாம் நல்லபடியாக நடக்கும்!'' என்றான்.

சற்று நேரம் அங்கு மவுனம் நிலவியது.

"மல்லிகை மலர்கள் மீது உனக்கு என்ன அவ்வளவு இஷ்டம்?" என்றான்.

"என் தெய்வத்திற்கு சூட்டுவதற்காக எடுத்து வந்தேன். கொட்டி விட்டது.''

"அடடா! இங்கேயே இரு நான் எடுத்து வந்து தருகிறேன்''

அவள் பதிலை எதிர்பாராது சொக்கநாதன் தனது அறைக்கு ஓடிப் போய், கீழே கிடந்த மலர்களை எடுத்து, அந்தப் பாத்திரத்தில் நிரப்பிக் கொணர்ந்தான்.

''சுவாமிக்காக எடுத்த மலர் வீணாகக் கூடாது. இந்தா! மீனாட்சியம்மன் கோவிலுக்கு செல்லப் போகிறாயா?"

''இல்லை. சொக்கநாதப் பெருமானுக்காக இம் மலர்களை எடுத்து வந்தேன். ஏற்கெனவே அபிஷேகம் செய்து விட்டேன்: இது பாதபூஜைக்காக...'' என்று அந்த பாத்திரத்தில் இருந்த மலர்களை அவன் காலடியில் கொட்டினாள்.

சொக்கநாதன் உள்ளம் நெகிழ அவளைப் பார்த்தவாறு இருந்தான்.

"எங்கு சென்றாலும் உங்களுக்காக ஒருத்தி இங்கே காத்திருக்கிறாள் என்பதை மட்டும் மறக்காதீர்கள்!'' என்று சொல்லிவிட்டு முத்துநகை தன் அறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அறைக்குள் வந்ததும் இடுப்பில் இருந்த சொக்கநாதன் மீசையில் ஒட்டி இருந்த மல்லிகை மொட்டை சிறிய பேழைக்குள் வைத்து மூடினாள்.

மறுநாள் விடியற்காலையில் சொக்கநாதன் தஞ்சையை நோக்கி, தன் தோழன் வெங்கடகிருஷ்ணனுடன் தன் பயணத்தைத் துவங்கினான்.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் அருமை மகள் மதுரவாணிக்கு அடுத்த சில தினங்கள் தூக்கமே பிடிக்கவில்லை.

இளவரசன் மன்னார்தாசன் வருகிற புதன் கிழமை அன்று பெனுகொண்டாவில் இருந்து இங்கு வரப்போகிறான் அவனை வந்த அன்றே நேருக்கு நேர் பார்க்க வேண்டும். அவனுடன் எப்படியாவது பேசிவிட வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு நிறைய இருந்தது.

இளம் வயதில் அவளும் மன்னார்தாசனும் அவளுடைய தந்தையிடம் ஆரம்பக் கல்வி பயின்ற நினைவுகள் இன்னமும் அவள் மனதில் பசுமையாக நின்றிருக்கின்றன. அதை எல்லாம் இளவரசன் இப்பொழுது நினைவில் வைத்திருப்பானா ?

*மன்னனின் மைந்தன் என்பதால் மன்னார் தாசன் அவனுடைய தாத்தா ரகுநாதநாயக்கர் கல்வி பயின்ற மாதிரியே தங்கத்தட்டில் வைரங்களைப் பரப்பி அதன் மீது எழுத்துக்களை எழுதக் கற்றுக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்திருந்தான் விஜயராகவ நாயக்கன்.

ஆனால் மதுரவாணிக்கோ ஆற்றுமணலைப் பரப்பி அதன்மீது எழுதச் சொல்லித் தந்தார் கோவிந்த திட்சிதர்

---

* The Sahityaratnakara refers to his early educa tion when Ragunatha is said to have learnt the alphabets, by writing them on a board strewn with precious stones'—The Nayaks of Tanjore-V. Vriddhagirisan- Page No. 108.

மன்னார்தாசனும், மதுரவாணியும் அருகருகே உட்கார்ந்து பயின்றாலும், அவன் மட்டும் ரத்தினங்களுக்கு இடையே விரலால் எழுதவும், இவளோ ஆற்று மணல் மீது விரல் வலிக்க எழுதுவதுமாக நடைபெற்றது அவர்களது அட்சர அப்பியாசம் என்னும் எழுத்துப் பயிற்சி.

மதுரவாணிக்கும் மன்னார்தாசன் மாதிரி தங்கத் தட்டில் வைரங்கள் மீது எழுதிப்பார்க்க ஆசையாக இருந்தது. மணலில் எழுதமாட்டேன். வைரங்கள் மீதுதான் எழுதுவேன் என்று அடம்பிடித்தாள்.

கோவிந்த தீட்சிதரோ, "மன்னார்தாசன் மன்னன் மகன். வருங்கால இளவரசன். நீயோ அந்தணர் குலப் பெண். ஒரு சத்திரியனுக்கு இருக்கும் வசதிகளை எண்ணி ஏங்கக் கூடாது. அடம் பிடிக்காமல் ஆற்றுமணல் மீது எழுது!" என்று கண்டித்தார்.

"ஆற்றுமணல் விரலை அறுக்கிறது அப்பா. ஒருநாள் மட்டும் வைரங்கள் மீது எழுதிப்பார்க்கிறேனே!" என்று அழுதாள்

"இந்த இளம் வயதிலேயே கஷ்டங்களைத் தாங்க முடியாத நீ பின்னாளில் வாழ்க்கையில் சந்திக்கப் போகும் எந்த ஒரு கஷ்டத்தையும் எப்படி தாங்குவாய்?"

மதுரவாணி மாட்டேன் என்று அழுது அடம்பிடிக்க, அவள் தந்தை பிரம்பால் நன்றாக அடித்து விட்டார். அன்று முழுக்க அவள் ஏங்கி ஏங்கி அழுது கொண்டிருந்தாள்.

மறுநாள் மன்னார்தாசன் அமைச்சர் வந்து பாடம் நடத்துவதற்கு வருமுன்பே, மதுரவாணியை அழைத்துத் தன்னிடமிருந்த தங்கத் தட்டை மதுரவாணியிடம் தந்து, அவள் பிஞ்சு விரல்களை தனது கையால் பிடித்து, தங்கத் தட்டில் பரப்பப் பட்டிருந்த வைரங்களின் மீது எழுத்துக்களை எழுதிக் காண்பித்தான்.

"இப்பொழுது உனக்கு திருப்தியா? உன் தந்தை இங்கு இல்லாத நேரத்தில் இதன் மீது எழுதிப்பார். விரல் வலிக்காது. இனி அழமாட்டாய் அல்லவா?'' என்று சொல்ல, மதுரவாணி சிரித்தாள்.

இந்த நினைவுகள் இப்பொழுது எழில் மங்கையாய் இருக்கும் மதுரவாணியின் நெஞ்சில் எழ, தன்னையறியாமல் இதழ்களில் குறுநகை பிறந்தது.

தனது விரல்களை நீட்டிப் பார்த்தாள்.

'இந்த விரல்களைத்தானே அன்று அவர் பற்றினார்! இந்த விரலை பிடித்துக்கொண்டுதானே அன்று வைரங்களுக்கு இடையே ஆனா, ஆவன்னா என்று சொல்லிச் சொல்லி எழுதிக் காண்பித்தார்! இந்த விரல்கள் எவ்வளவு பாக்கியம் செய்தவை! இன்று வளர்ந்து வாலிபனாகி இருக்கும் அவருக்கு சிறுவயதில் நடந்தேறிய இந்த நிகழ்ச்சிகள் நினைவில் இருக்குமா?'

மன்னார்தாசன் எப்பொழுதுமே அமைதியானவன். கல்வி கற்கும்பொழுது அமைச்சர் கோவிந்த தீட்சிதரிடம் அளவற்ற மரியாதையுடன் நடந்து கொள்வான். படிப்பிலே மிகவும் ஆர்வமாக இருப்பான்.

மதுரவாணியோ அப்படி இல்லாது அவனை சீண்டிக் கொண்டே இருப்பாள். தந்தை இல்லாத சமயம் ஏதாவது குறும்புகள் செய்வாள். மன்னார்தாசனோ அவைகளை சட்டை செய்யாது, பாடங்களைப் படிப்பதிலேயே கவனமாக இருப்பான்

ஒருநாள் இருவரும் அருகருகே உட்கார்ந்து கல்வி பயின்று கொண்டு இருந்தவேளை. அவர்கள் இருவரையும் எழுதச் சொல்லி விட்டு கோவிந்த தீட்சிதர், ரகுநாத நாயக்கர் இயற்றிய பாரிஜாத பரணம் என்ற காவியம் அடங்கிய ஓலைச் சுவடியைப் படித்துக் கொண்டிருந்தார்.

மதுரவாணி ஓரக்கண்ணால் இருவரையும் கவனித்துப் பார்த்தாள். தந்தையோ சுவடிகளில் ஆழ்ந்து லயித்துக் கொண்டிருந்தார். மன்னார்தாசனோ இந்த உலகையே மறந்தவன் போல் எழுதிக் கொண்டிருந்தான்.

மதுரவாணி அடுத்த விநாடி மன்னார்தாசன் தொடையில் 'நறுக்' என்று கிள்ளினாள். மன்னார்தாசன் திடுக்கிட்டு அவளை ஏறிட்டுப் பார்த்தான். மதுரவாணியோ ஒன்றுமே அறியாதவள் போல் அவன் பக்கம் திரும்பாது எழுதிக் கொண்டிருந்தாள்.

மன்னார்தாசன் மறுபடியும் குனிந்து எழுதத் தொடங்கினான். சற்று நேரம் கழித்து மதுரவாணி தன் தந்தையை ஓரக்கண்ணால் பார்த்து விட்டு, கையை நீட்டி மன்னார்தாசன் தொடையில் பலமாகக் கிள்ளிவிட்டு மின்னல் வேகத்தில் தன் கரத்தை இழுத்துக் கொண்டாள்.

அவள் இரண்டாவது தடவையாக கிள்ளியது மன்னார் தாசனுக்கு தாங்க முடியாத வலியை ஏற்படுத்தியதால், அவன் தன்னை மறந்து 'ஸ்ஸ...ஆ' என்று கத்தி விட்டான். கோவிந்த தீட்சிதர் அவர்களை ஏறிட்டுப் பார்த்தார்.

தந்தை பார்த்து விட்டார் என்று தெரிந்த மறு வினாடியே மதுரவாணி முந்திக் கொண்டு, "பாருங்கப்பா, மன்னார்தாசன் என் தொடையில்கிள்ளுகிறான்," என்று சிணுங்கினாள்.

கோவிந்த தீட்சிதர் உடனே மன்னார்தாசனை முறைத்துப் பார்த்தார்.

"மன்னார்தாசா, கல்விப் பயிற்சியின் போது முழு கவனமும் கல்வியின் மீதுதான் இருக்க வேண்டும். இதென்ன சேஷ்டை? ஒழுங்காக எழுது!" என்றார் கடுமையாக.

மன்னார்தாசன் எதுவுமே சொல்லாமல் மறுபடியும் எழுத ஆரம்பித்தான். மதுரவாணியும் நல்ல பிள்ளை போல எழுதத் தொடங்கினாள்.

சற்று நேரம் கழித்து மதுரவாணி தன் தந்தையை ஓரக்கண்ணால் பார்த்தபடி, கையை நீட்டி மன்னார் தாசனைக் கிள்ளினாள். மன்னார்தாசன் அவளை முறைத்துப் பார்த்து, 'இப்படிச் செய்யாதே' என்று கண்ணால் ஜாடை செய்து விட்டு, மறுபடியும எழுதத் தொடங்கினான்.

அதன் பிறகும் மதுரவாணி சும்மா இருக்கவில்லை, திரும்பவும் அவன் தொடையில் கிள்ளுவதற்காகக் கரத்தை நீட்டினாள். மன்னார்தாசன் இப்போது கையை இறுக்கப் பிடித்துக் கொண்டான்.

'இனிமேல் கிள்ளக் கூடாது' என்று அவன் கிசுகிசுக்க 'ஸ்... கையை விடுடா வலிக்கிறது' என்று அவள் கிசுகிசுக்க, இந்த சிறிய சப்தம் கோவிந்த தீட்சிதரின் கவனத்தைக் கலைக்க, இருவரையும் ஏறிட்டுப் பார்த்தார்.

அவர் பார்க்கிறார் என்று தெரிந்ததும் இருவரும் தங்கள் கைகளை அவசரமாக விடுவித்துக் கொள்ள, அந்தக் காட்சியை கோவிந்த தீட்சிதரின் கண்கள் கவனித்து விட்டன.

உடனே இருவரையும் முறைத்துப் பார்த்து ''என்ன இது சேஷ்டை ?'' என்று கோபத்துடன் கேட்டார்.

அடுத்த வினாடியே, ''பாருங்கப்பா, மன்னார்தாசன் திரும்பத் திரும்ப என்னைக் கிள்ளிக்கொண்டே இருக்கிறான்,'' என்றாள், அழுவதுபோல் முகத்தை வைத்துக் கொண்டு.

கோவிந்த தீட்சிதருக்கு இதைக் கேட்டு கோபம் எழுந்தாலும் மன்னன் மகனை ஒரு அளவுக்கு

மேல் கண்டிக்க முடியாதே என்ற நினைவில் "இருவரும் அருகருகே உட்கார வேண்டாம். மதுரவாணி நீ இங்கே வா!" என்று மகளை சற்று தூரத்தில் உட்காரும்படி கட்டளை இட்டார்.

மன்னார்தாசன் இப்பொழுதும் எதுவும் பேசாமல் மறுபடியும் எழுதத் துவங்கி விட்டான். தூரத்தில் இருந்ததால் மதுரவாணியும் ஒழுங்காக எழுத ஆரம்பித்தாள்.

கோவிந்த தீட்சிதர் தண்ணீர் அருந்துவதற்காக எழுந்து வீட்டிற்குள் சென்றார். உடனே மதுரவாணி அவர் தலை மறைந்ததும், தன் தலையில் சூட்டி இருந்த மலர்களை பிய்த்து, மன்னார்தாசன் மேல் எறிந்தாள். மன்னார்தாசன் அவற்றைப் பொறுமையாக பொறுக்கி, வேறு பக்கமாக எறிந்து விட்டு மதுரவாணியை ஏறிட்டுப் பார்த்து, "ஒழுங்காக எழுது வாணி, குறும்பு பண்ணாதே!" என்றான் சன்னமான குரலில்.

"போடா" என்றவாறு மதுரவாணி அவன்மீது மறுபடியும் சில மலர்களை எறிந்தாள்.

அதே சமயம் தன் மைந்தனின் கல்விப் பயிற்சி எப்படி நடக்கிறது என்று நேரில் பார்ப்பதற்காக விஜயராகவ நாயக்கன் அந்த இடத்திற்கு வர, கோவிந்த தீட்சிதரும் அவரும் பேசியபடியே உள்ளே வந்தார்கள்.

"என்ன அமைச்சரே! மன்னார்தாசன் எப்படி படிக்கிறான்? என்ன வாணி, அட்சரங்களை எழுதக் கற்றுக் கொண்டாயா?" என்றார் மன்னர்.

"மன்னார்தாசனுக்கு படிப்பில் மிகுந்த ஆர்வம் இருக்கிறது மன்னவா எதையும் சீக்கிரம் கற்றுக் கொள்கிறான்," என்றார் அமைச்சர்.

அவர் சொல்லி முடித்தவுடன் மதுரவாணி எழுந்து, "மாமா, நான் பாடங்களை எழுதிக் கொண்டிருக்கும்

பொழுது மன்னார்தாசன் என்னைக் கிள்ளிக் கொண்டே இருக்கிறான்," என்றாள்.

இதைக் கேட்ட மறுவினாடி அமைச்சர் தனது மகளின் கன்னத்தில், ஓங்கி அடித்தார், "மன்னரை மாமா, என்று அழைக்கக் கூடாது என்று எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன். இனி அப்படிக் கூப்பிட மாட்டேன் மன்னவா, மன்னித்துக் கொள்ளுங்கள் என்று சொல்!" என்று கடுமையாகச் சொன்னார்.

விஜயராகவ நாயக்கன் உடனே அதிர்ந்து "அமைச்சரே! என்ன இது, சின்னப் பெண்ணிடம் போய் முரட்டுத் தனமாக நடந்து கொள்கிறீர்கள்? அவளுக்கு என்ன தெரியும். குழந்தை! வாம்மா கண்ணு அழாதே!" என்றவாறு வாணியை இழுத்து தன் மடியில் உட்கார வைத்தான்.

பிறகு தன் மகன் மன்னார்தாசனை தன்னருகில் அழைத்தான்.

"மன்னார்தாசா! இவளைக் கிள்ளினாயா?" என்றான்.

மன்னார்தாசன் மவுனமாக நின்றான்.

"கல்வி கற்கும்பொழுது பாடத்தில் மட்டுமே கவனம் இருக்க வேண்டும். இனிமேல் இவளைக் கிள்ளக் கூடாது. என்ன?"

மன்னார்தாசன் எதுவுமே சொல்லாது தலையை மட்டும் ஆட்டினான். விஜயராகவ நாயக்கன் அவனையும் இழுத்து தன் மடியில் வாணி அருகே உட்கார வைத்துக் கொண்டு இருவர் கன்னங்களிலும் முத்தமிட்டான்.

இந்த நினைவுகள் இன்று மதுரவாணிக்கு எழுந்து இதயத்தை சிலிர்க்க வைத்தது. இளம் வயதிலேயே எவ்வளவு சிறந்த குணம் அவருக்கு? நான்தான் கிள்ளினேன் என்று என் தந்தையிடமோ, மன்னரிடமோ கூட சொல்லவில்லையே! இந்த நிகழ்ச்சியை அவர் மறந்திருப்பாரா?

இத்தனை ஆண்டுகள் கழித்து வரப்போகிறார். என்னையே கூட மறந்திருப்பாரோ? மதுரவாணிக்கு இதயம் பரபரப்பாக இருந்தது.

13

அமைச்சர் கோவிந்த திட்சிதரின் மகள் மதுரவாணி மனக்குழப்பத்தில் ஆழ்ந்திருந்தாள். இளவரசன் மன்னார் தாசனின் வரவை எண்ணி அவள் மனம் பதட்டம் அடைந்து கொண்டிருந்தது.

இளவரசன் வந்த அன்றே, அவர் தஞ்சை அரண் மனையின் வாசலில் கால் எடுத்து வைப்பதற்கு முன் அவரை நான் பார்த்துவிட வேண்டும். ஆனால் தந்தையோ அன்று வீட்டை விட்டே போகக் கூடாது என்கிறார். என்ன செய்வது? எப்படி பார்ப்பது?

அன்று இளவரசியுடன் ஆலோசனை மண்டபத்திற்கு அரசர் அருகே வந்ததற்கே தந்தை கோபித்துக் கொண்டார். குலப்பெருமை பேசி நோகடித்து விட்டார். இதற்கு எப்படி அனுமதி தருவார்?

ஒருவேளை அனுமதி தந்தாலும் கூட்டத்தோடு கூட்டமாய் நின்றுதான் பார்க்க அனுமதிப்பார். இல்லாவிட்டால் மாடத்தின் மீதிருந்து பார்க்கச் சொன்னாலும் சொல்லுவார். அது எனக்குத் தேவை இல்லை.

என்னையும் மன்னார்தாசன் அந்த நிமிடமே பார்க்க வேண்டும். என்னை பார்த்தவுடன் அவர் கண்களில் என்னைப் பற்றிய நினைவுகள் தெரிகிறதா என்று பார்க்க வேண்டும். இதற்கு அவருக்கு நேர் எதிரில் நான் நிற்கும் படியான ஒரு வாய்ப்பு அமைய வேண்டும். எப்படி ?

இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு என் தந்தை ஒருநாளும் சம்மதிக்க மாட்டார். அவரை எப்படி சம்மதிக்கச் செய்வது ? அத்தனை கூட்டத்திற்கு மத்தியில் நான் மட்டும் மன்னார்தாசன்— இந்த நாட்டின் இளவரச னுக்கு முன்பாக நேர் எதிரில் எப்படி நிற்க முடியும் ?

நிச்சயம் அப்படி ஒரு வாய்ப்பை நான் உருவாக்கியே தீர வேண்டும். எப்படி ?

நீண்ட நேரம் யோசித்துக் கொண்டிருந்தாள். அருமையான திட்டம் ஒன்று அவள் மனத்திற்குள் உருவாக ஆரம்பித்தது.

அன்று திங்கட்கிழமை ! தஞ்சை அரண்மனையின் வாசலில் இருந்து கடைசி வரை பல ஏவலர்கள் அலங்கரிக் கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார் கள். அலங்கார வளைவுகளும், மகர தோரணங்களும், பல இடங்களில் காட்சி அளிக்கத் தொடங்கின.

புதன்கிழமை அன்று இந்த நாட்டின் இளவரசன் பல ஆண்டுகள் கல்வி, அரசநீதி, போர் முறைகள் போன்ற பயிற்சிகளுக்காக விஜயநகரம், பெனுகொண்ட சந்திரகிரி போன்ற இடங்களில் தங்கியிருந்து தனது பயிற்சிகளை முடித்துக் கொண்டு வர இருப்பதால் தஞ்சை நகரமே விழாக் கோலம் பூணுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

திங்கட்கிழமை காலையில் கோவிந்த தீட்சிதர் தனது அமைச்சுப் பணியில் ஈடுபடுவதற்காக வழக்கம் போல்

கிளம்பி அரண்மனைக்குச் சென்றுவிட்டார். மதுரவாணி அதன் பிறகு தனது தாயிடம் வந்தாள்.

"அம்மா, இளவரசி என்னை இன்று சீக்கிரம் வரச் சொன்னாள். தாமதமானால் கோபிப்பாள். நான் சென்று வரட்டுமா ?" என்றாள்.

"மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்துவிடுவாய் அல்லவா ?"

"சொல்ல முடியாது. இளவரசி சந்திரவதனா தன்னுடன் மதிய உணவை சாப்பிட சொல்லி கட்டாயப் படுத்தினால் என்னால் வர இயலாது."

"என்ன பெண்ணோ அந்த இளவரசி! உன்மேல் இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாள் !" எரிச்சல் படுவது போல் சொன்னாலும், உள்ளுக்குள் நிறைய பெருமை பொங்கி வழிந்தது நாகமாம்பாளுக்கு.

"சரி, நான் போய் வரட்டுமா ?"

"சீக்கிரம் வந்து விடு. இருட்டுவதற்கு ஒரு நாழிகைக்கு முன்பே நீ இங்கு வந்துவிட வேண்டும். இல்லாவிடில் உன் தந்தைக்கு ஏற்படும் கோபத்தை என்னால் சமாளிக்க முடியாது."

மதுரவாணி தலையாட்டி விட்டு வேகமாக அந்தப் புரத்திற்குள் நுழைந்தாள். அடுத்த சில நிமிடங்களில் இளவரசி சந்திரவதனாவின் அறைக்குள் வந்து சேர்ந்தாள்.

மதுரவாணி அந்த அறைக்குள் நுழைந்த சமயம் சந்திரவதனா தன் அலங்காரங்களை முடித்துக்கொண்டு அருகில் இருந்த ஓவிய சிலையில் துள்ளி வரும் மானின் ஓவியத்தை வரைய முற்பட்டிருந்தாள்.

மதுரவாணியை பார்த்ததும் தூரிகையைக் கீழே வைத்து விட்டு அவளருகே வந்து அவள் கரத்தைப் பற்றினான்.

"ஏண்டி வாணி! இவ்வளவு நேரம்? எனக்கு பொழுதே போகவில்லை. உனக்காக தான் காத்திருந்தேன். ஓவியம் தீட்டுவதற்கு கூட மனம் ஒப்பமாட்டேன் என்கிறது. வா, மலர் வனத்துக்குச் சென்று சற்று நேரம் பந்து விளையாடலாம். இன்று பத்து பேர் சேர்ந்து விளையாடலாமா? மற்றவர்களையும் அழைத்துவரச் சொல்லட்டுமா?"

"வேண்டாம் சந்திரவதனா! வெளியில் வெயில் கடுமையாக இருக்கிறது. சற்று நேரம் விளையாடினாலே களைத்து விடுவோம். இன்று இங்கேயே உட்கார்ந்து எதையாவது பேசிக் கொண்டிருக்கலாம். மாலையில் வேண்டுமானால் பந்தடிக்கச் செல்லலாம்."

"சும்மா உட்கார்ந்து பேசுவதைவிட எதையாவது விளையாடிக் கொண்டே பேசிக் கொண்டிருந்தால் பொழுது இனிமையாகக் கழியும்."

"தெலுங்கு, சமஸ்கிருத இலக்கியங்களைப் பற்றிப் பேசுவோமா? பாரிஜாத பஹரணம், வால்மீகி சரித்திரம், ருக்மணி பரிணயம், யக்ஷகாணம், சங்கீத சுதா, பாரத சுதா..."

"வேண்டாமடி! அலுத்துவிட்டது. வா! பல்லாங்குழி ஆடலாம். ஆடும்பொழுது வேண்டுமானால் இலக்கியம் பற்றி பேசலாம்."

சந்திரவதனா அருகில் இருந்த தங்கத்தகடு இழைக்கப் பெற்ற பல்லாங்குழிப் பலகையை எடுத்து விரித்து, பேழையில் இருந்த முத்துப் பரல்களை மதுரவாணி முன்பு வைத்தாள்.

இருவரும் தங்கள் குழிகளில் ஒவ்வொன்றையும் ஐந்து ஐந்து முத்துக்களாக நிரப்பத் தொடங்கினர்.

மதுரவாணி தன் மனதில் இருந்த திட்டத்தினை செயல்படுத்த தொடங்கினாள்.

இளவரசி சந்திரவதனாவும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மகள் மதுரவாணியும் தங்கத்தால் செய்யப் பட்ட பல்லாங்குழியில் முத்துப்பரல்களைப் போட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

மதுரவாணியின் மனதில் தனது திட்டத்தினை எப்படி துவங்குவது என்று சிறு குழப்பம் ஏற்பட்டது. எடுத்த எடுப்பிலேயே அதைப்பற்றிப் பேசவும் தயக்கமாக இருந் தது.

சந்திரவதனா அவளை விட வயதில் குறைந்தவள் என்றாலும் மிகவும் புத்திசாலிப்பெண். அவள் மனதில் சந்தேகம் விளைந்து விட்டால் ஆபத்து. பிறகு அந்தப் புரத்தினுள் கூட அவளால் நுழைய முடியாதபடி ஆகி விடும்.

அந்தப் பேச்சை கொண்டு வருவதற்கு முன், சந்திர வதனா எள்ளளவும் ஐயமுறாதபடி சுற்றி வளைத்துக் கொண்டு வரவேண்டும். எப்படித் துவங்குவது?

இளவரசி சந்திரவதனாவோ தனது தோழியின் மனதில் புரண்டு கொண்டிருக்கும் எண்ணங்களை அறியா தவளாய் மிகவும் ஆர்வத்துடன் முத்துப்பரல்களை மொத்தமாக எடுத்துக் கொண்டு ஒவ்வொன்றாக ஒவ்வொரு குழியிலும் வரிசையாக போட்டுக் கொண்டி ருந்தாள்.

செம்பொன்னால் வார்த்தெடுக்கப்பட்டதுபோல் சிவந்து மிளிரும் அவள் விரல்கள் முத்துப்பரல்களை இறுக மூடிக்கொண்டு ஒவ்வொரு குழியிலும் ஒவ்வொரு முத்தாக

விரைந்து போட்டுக் கொண்டு செல்லும் அழகைப் பார்க்கும் பொழுது, தங்கத்தால் உருவாக்கப்பட்ட பறவை ஒன்று வரிசையாக முட்டை இட்டுக் கொண்டு செல்வது போன்ற பிரமையை உருவாக்கிக் கொண்டிருந்தது.

மதுரவாணியின் கண்கள் சந்திரவதனாவின் கரத்தின் அழகை சற்று ஊன்றிப் பார்த்தன. இளவரசியின் ஒவ்வொரு அங்கமும் எவ்வளவு அழகாக இருக்கின்றது!

மதுரவாணிக்குப் 'பளிச்' என்று ஒரு எண்ணம் உதித்தது. இவளை வைத்தே பேச்சை ஆரம்பிக்க வேண்டியது தான்.

"என்னடி சந்திரவதனா, உனது தந்தைக்கு அந்த செய்திகள் வந்து சேர்ந்து விட்டனவா? உன் முகத்தைப் பார்த்தால் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறதே!" என்று ஆரம்பித்தாள் மதுரவாணி.

"எந்தச் செய்திகள்?" என்று குழப்பத்துடன் கேட்ட சந்திரவதனாவின் விரல்கள் முத்துப்பரல்களை உதிர்ப்பதைச் சற்று நிறுத்தின.

"'அன்று உன் தந்தை உனக்கு ஏற்ற மணாளனைத் தேர்ந்தெடுப்பதற்காக சந்திரகிரி, பெனுகொண்டா ஆகிய இடங்களுக்கு தூதுவர்களை அனுப்ப இருப்பதாகச் சொன்னாரே? அவர்கள் ஏதாவது நல்ல செய்தியைக் கொண்டு வந்திருக்கிறார்களா என்று கேட்டேன்."

"வந்த உடனே உன் கேலிப்பேச்சை ஆரம்பித்து விட்டாயா? அந்தத் தூதுவர்கள் இங்கிருந்து கிளம்பிப் போய் இன்னும் இரண்டு நாட்கள் கூட ஆகவில்லை. இந்நேரம் தமிழகத்தைக்கூடத் தாண்டி இருக்கிறார்களோ என்னவோ? அதற்குள் எப்படியடி சேதிவரும்?"

இதைக் கேட்டவுடன் மதுரவாணி நீண்ட பெருமூச்சு ஒன்றை வேண்டுமென்றே உதிர்த்தபடி, "ஹூம்!

இவர்கள் அங்கு செல்வதற்கே ஒரு மாதம் ஆகிவிடும்போல் இருக்கிறது. இனி அவர்கள் எங்குபோய் சந்திரகிரி, பெனுகொண்டா, விஜயநகரம் என்று பல ஊர்களில் பற்பல திங்கள்கள் சுற்றி அலைந்து, உனக்கு ஏற்ற மணாளனைத் தேடிக் கண்டுபிடித்து, அதன் பிறகு திரும்பவும் அவர்கள் இங்கு வந்து அந்த நல்ல செய்தியைச் சொல்வதற்குள் சில ஆண்டுகள் கடந்துவிடும் போல் இருக்கிறதே !" என்றாள்.

"ஆனால் ஆகட்டுமே ! இப்பொழுது என் திருமணத்திற்கு என்ன அவசரம் ?"

"இருந்தாலும் என் அன்புக்குரிய தோழி இளவரசி சந்திரவதனா தேவியின் திருமணத்தை சீக்கிரம் பார்க்க வேண்டும் என்று எனக்கு எவ்வளவு ஆவலாக இருக்கிறது தெரியுமா ?"

"நல்ல நேரமும், வேளையும், காலமும் கூடிவரும் பொழுது எல்லாம் நல்லபடியாகவே நடக்கும். என் திருமணத்தைப் பற்றி நீ ஏண்டி இவ்வளவு கவலைப்படுகிறாய் ?"

"கவலையாகத்தான் இருக்கிறது," என்று உண்மையிலேயே கவலைப்படுபவள் போல் முகத்தை வைத்துக் கொண்டாள்.

"உன் கவலைக்கான காரணம்தான் எனக்குப் புரியவில்லை," என்றவாறு சிரித்தாள் இளவரசி.

"கையிலேயே வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறார்களே என்பதுதான் என் கவலைக்கான காரணம்."

"என்ன சொல்கிறாய் ? எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"உனக்கு ஏற்ற நல்ல மாப்பிள்ளையை பக்கத்திலேயே வைத்துக் கொண்டு ஊர் ஊராய் தேடி அலைகிறார்களே என்று சொல்ல வந்தேன்."

"இந்தக் கிண்டல்தானே வேண்டாம் என்கிறேன்."

''கிண்டல் இல்லையடி! நிஜமாகவே சொல்கிறேன். எல்லா விதத்திலும் உனக்கு ஏற்ற மாப்பிள்ளை அருகிலேயே இருப்பதை உன் தந்தைதான் மறந்துவிட்டாலும், நீயாவது ஞாபகப்படுத்தி இருக்கக்கூடாதா?''

"நமது தளவாயின் மகன் அச்சுதப்பனா எனக்கு ஏற்ற மாப்பிள்ளை? அவனைத் திருமணம் செய்வதும் ஒன்றுதான். நமது அரண்மனைக்கு அருகில் இருக்கும் சிவகங்கைக் குளத்தில் என்னைப் பிடித்துத் தள்ளுவதும் ஒன்றுதான் என்பதை அன்று அவர் பேசியதில் இருந்து உனக்குப் புரியவில்லையா?"

நமது தளபதி கூட ஜாடைமாடையாக தன் மகனைப் பற்றி எப்படி எல்லாம் புகழ்ந்து பேசினார் பார்த்தாயா? என் தந்தை அதனை சட்டையே செய்யவில்லையே! கடைசியாக அச்சுதப்பன் திருமணத்தைப் பற்றித் தளவாய் சொன்னதுமே 'அவனுக்கும் ஏற்ற பெண் எங்காவது இருக்கிறாளா என்று நமது தூதுவரைப் பார்க்கச் சொல்கிறேன்' என்று என் தந்தை சொன்னதும் தளவாயின் முகம்போன போக்கை நீ பார்க்கவில்லையே! இஞ்சி தின்ற குரங்கு மாதிரி இருந்தது! நன்றாக வேண்டும் அவருக்கு!'' கலகலவென்று நகைத்தாள்.

அவளது அந்த சிரிப்பொலி அவள் கரத்திலிருந்த முத்துப் பரல்கள்தான் மொத்தமாகத் தங்கத்தட்டின் மீது கொட்டிவிட்டதோ என்ற பிரமையை ஏற்படுத்தியது.

''உனக்கு ஏற்ற நல்ல மாப்பிள்ளை அருகிலேயே இருக்கிறார் என்று நான் சொன்னது நமது தளவாயின்

மகன் அச்சுதப்பனை அல்ல!" என்றாள் மதுரவாணி திட்டவட்டமான குரலில்.

''பிறகு யாரை சொல்கிறாய்?" மறுபடியும் குழம்பினாள் இளவரசி

"மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனை குறித்துத் தான் கூறினேன்" படக் என்று கையிலிருந்த முத்துக்களை தரையில் வைத்துவிட்டு, மதுரவாணியை பார்த்து விரலை அசைத்தபடி சொன்னாள்.

"வாணி! இதை நீ கேலியாக நினைத்துச் சொன்னால் கூட, எனக்கு இந்தப் பேச்சு அடியோடு பிடிக்கவில்லை. மதுரை என்று பேச்சை எடுத்தாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது. மதுரவாணி என்ற உன் முழுப் பெயரைக் கூப்பிடுவதற்குக் கூட அது மதுரை என்று சேர்ந்து வந்து விடுமோ என்று ஆத்திரமாக இருக்கிறது.''

''கேலிக்காக இதைச் சொல்லவில்லை சந்திரா! உனக்குக் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்த வேண்டும் என்று நினைப்பேனா? நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா? அதோடு உன் புத்திசாலித்தனமும் என்னை வியக்க வைக்கிறது. இவ்வளவு சிறந்த என் தோழிக்கு ஏற்ற மணாளன் அமையவேண்டுமே என்று எத்தனை நாட்கள் மன்னார்குடி ராஜகோபால சுவாமியை மனதில் எண்ணித் துதித்திருக்கிறேன் என்று நீ அறியமாட்டாய் தோழி! நான் கேள்விப்பட்டவரை மதுரை மன்னன் சொக்கநாயக்கன் அழகிலும், அறிவிலும், வீரத்திலும் இணையற்றவன் என்று தெரிகிறது. அப்படிப்பட்ட வீரன் என் தோழிக்கு மணாளனாக அமைய மாட்டானா என்று ஓர் ஆதங்கத்தில் சொல்லிவிட்டேன்."

''நீ ஆண்டவனை துதிப்பதோடு நிறுத்திக்கொள். ஆதங்கப்படவே வேண்டாம். அப்படி என்னடி அவன்,

பெயரைப்பார் பெயர், சொக்கநாதனாம், மக்குநாதன், அவன் என்ன பெரிய அழகு! ஊர் உலகில் இல்லாத பெரிய மன்மதன்! பெரிய வீரனோ? அவன் வீரதீர பராக்கிரமச் செயல்கள் பற்றி ஏதாவது ஒன்று சொல்லேன். அப்படி என்ன வீரதீரச் செயல் செய்திருக்கிறான்? சொல்லுடி!"

"ஏதோ நான் கேள்விப்பட்டதைச் சொன்னேன். அதில் உண்மை இல்லாமல் பலரும் அதையே சொல்ல மாட்டார்கள்."

"நமது அச்சுதப்பனைப் பற்றிக் கூடத்தான் தளபதியார் பெருமையாகச் சொன்னார். அவரை மாதிரி பலர் கூட அவன் வீரன், தீரன், சூரன் என்று புகழலாம். அவன் வீரத்தைப் பற்றி நமக்கு தெரியாதா? இது போலத்தான் அந்த மதுரை மடையனைப் பற்றி நீ கேள்விப்பட்டதும் இருக்கும்."

"இல்லை சந்திரா, உண்மையிலேயே..."

மதுரவாணி அடுத்தவார்த்தை பேசுவதற்கு முன்பு சந்திரவதனா கோபத்துடன் தன்னருகில் இருந்த பல்லாங்குழியைக் கையால் தள்ளினாள். பல்லாங்குழியில் இருந்து முத்துப்பரல்கள் சிதறி விழுந்தன.

"இனி அந்தப் பேச்சை எடுக்காதே வாணி! எனக்குக் கோபம் எல்லை மீறிவிடும்."

"சரி, சரி, கோபித்துக் கொள்ளாதே! நான் கூட வேண்டும் என்றே எடுக்கவில்லை. உன்முகம் அதிக மலர்ச்சியுடன் காணப்பட்டதா? ஒரு வேளை சொக்கநாத நாயக்கனைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ என்று எண்ணிவிட்டேன்."

இதைக் கேட்டவுடன் சந்திரவதனாவின் கோபம் எல்லை மீற, படக்கென்று எழுந்துவிட்டாள்.

"இனி நீ ஒரு வார்த்தை கூடப் பேசவேண்டாம். நீ போகலாம். இனி இங்கு நீ வரவே வேண்டாம்," என்றாள் கடுமையாக.

மதுரவாணி சிரித்தவாறு எழுந்து அவள் கரத்தைப் பற்றினாள். இளவரசி முகம் திருப்பினாள். அவள் முகத்தை வலியப் பிடித்துத் தன் பக்கமாகத் திருப்பி "அடேயப்பா! எவ்வளவு கோபம் வருகிறது! இனி நான் அந்த மதுரைமடையன் மக்குநாதனைப் பற்றிய பேச்சையே எடுக்கமாட்டேன். இப்பொழுது நான் பேசியது கூடத்தவறுதான்" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டாள்.

இளவரசி சிரித்தாள். மதுரவாணி அவள் கரத்தைப் பற்றி அருகில் இருக்கும் மஞ்சத்திற்கு அழைத்துப் போய் உட்கார வைத்து, தானும் அவள் அருகில் அமர்ந்து கொண்டாள்.

"சரி. இப்பொழுதாவது உண்மையைச் சொல். உன் வதனம் இன்று அதிகமாக மலர்ந்திருப்பதற்கு என்ன காரணம்?" என்றாள் வாணி.

"ஒரு காரணமும் இல்லையடி! நான் வழக்கம் போல் தான் இருக்கிறேன். உன் கண்களுக்குத்தான் அப்படித் தோன்றுகிறது!" என்றாள் சந்திரவதனா சகஜ நிலைக்கு வந்தவாறு.

"இல்லை சந்திரா! நிஜமாகவே உன் முகம் இன்று ரொம்பப் பிரகாசமாக இருக்கிறது. உன் மனதில் ஏதோ மகிழ்ச்சி இருக்கவேண்டும்."

"ம். ஒருவேளை புதன்கிழமையன்று வரப்போகும் என் அண்ணனை நினைத்துக் கொண்டிருந்த மகிழ்ச்சியாகக் கூட இருககலாம்."

இந்தப்பேச்சு இளவரசியின் வாயில் இருந்து வர வேண்டும் என்பதைத்தானே மதுரவாணியும் எதிர் பார்த்தாள்.

14

இளவரசி சந்திரவதனாவின் வாயில் இருந்து அவள் அண்ணனான இளவரசன் மன்னார்தாசனைப் பற்றிய விவரங்களை அவளே முதலில் ஆரம்பிக்க வேண்டும் என்ற மதுரவாணியின் திட்டம் எளிதாக நிறைவேறியது.

அந்த மகிழ்ச்சியில் மதுரவாணி இளவரசியுடன் தொடர்ந்து பேச ஆரம்பித்தாள்.

"உன் அண்ணனை வரவேற்பதற்காக இந்த நகரம் முழுதும் அலங்கார ஏற்பாடுகள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். நமது அரண்மனை வாசலில் எப்படி வரவேற்கப் போகிறார்களாம்?"

"வழக்கம் போல்தான் இருக்கும்"

"வழக்கம் போல என்றால்? எப்படி?"

"நமது பட்டத்துயானை அண்ணன் கழுத்தில் மாலையிடும். பிறகு மங்கலப்பெண்டிர் ஆரத்தி எடுத்து, வெற்றித்திலகம் இட்ட பிறகு வலதுகாலை எடுத்து வைத்து அரண்மனைக்குள் நுழைவார்."

"யார் ஆரத்தி எடுக்கப்போகிறார்கள்?"

"யார் என்று எனக்குத் தெரியாது? நமது அந்தப்புரத்துப் பெண்களில் யாரையாவது அதற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள்."

"யாரையாவது என்று எளிதாகச் சொல்லிவிட்டாயே சந்திரா! அது எவ்வளவு முக்கியம் தெரியுமா? ஒரு நாட்டின் இளவரசன் பல ஆண்டுகள் வேறிடத்தில் உறைந்து குருகுலவாசம் முடிந்து தன்னுடைய நாட்டில் முதன் முறையாக காலடி எடுத்து வைக்கும் பொழுது சாஸ்திரப்படி சில நடைமுறைகளை கடைப் பிடிக்க வேண்டுமாம். அப்படிச் செய்தால்தான் அந்த நாடும் வளம் பெறுமாம். அதனை ஆளப்போகும் அந்த இளவரசனுக்கும் ஒரு குறையும் வராது தீர்க்காயுசாக இருப்பான் என்று நமது குரு குமாரதாத்தாச்சாரியர் ஒரு முறை என்னிடம் கூறி இருக்கிறார்."

"நமது குலகுரு கூறினால் அது சரியாகத்தான் இருக்கும். அந்த சடங்குகளைப் பற்றி விளக்கமாகச் சொல்லடி!"

"வேறு ஒன்றும் இல்லையடி. பட்டத்துயானை கழுத்தில் மாலைபோட்டவுடன் வேத மந்திரங்கள் முழங்கவேண்டும் பிறகு அந்தணர் குலத்தைச் சேர்ந்த கன்னிப்பெண் ஒருத்தி அந்த இளவரசனுக்கு ஆரத்தி எடுத்து, வெற்றித்திலகம் இடவேண்டும். அந்தப்பெண் கன்னியாக இருப்பது மட்டுமின்றி, சகலகலைகளிலும், கல்வியிலும் தேர்ச்சி பெற்றவளாக இருக்கவேண்டும். அவள் வெற்றித்திலகம் இடும்பொழுது மங்கலவாத்தியங்கள் முழங்கவேண்டும்

அதன் பிறகு இளவரசன் வலதுகாலை எடுத்துவைத்து அரண்மனைக்குள் செல்ல வேண்டும் என்றி யக்ஞவல்கயா ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்பதாக குமாரதாதாச்சாரியார் எப்பவோ ஒரு தடவை கூறி இருக்கிறார். அதனால்தான் கேட்டேன் உன் அண்ணனுக்கு ஆரத்தி எடுக்கப்போகிறவள் யார் என்று?"

இளவரசி சற்றுநேரம் யோசித்தாள். பிறகு, "ஆரத்தி எடுப்பதற்கு அந்தப்புரத்துப் பெண்டிர் யாரையோ

அமர்த்தி இருப்பதாக என் அன்னை கூறினார். நீ சொல்வதைப் பார்த்தால், இந்த விஷயம் என் தந்தைக்கே தெரியாது என்று நினைக்கிறேன்." என்றாள்.

''சீக்கிரம் உன் தந்தையிடம் போய் இதைச்சொல் அப்படியே ஆரத்தி எடுப்பதற்கு ஏற்ற பெண்ணையும் தேர்ந்தெடுக்கச் சொல்."

''வாணி, நீ சொல்வதைப் பார்த்தால் என் அண்ணனுக்கு மங்கல ஆரத்தி எடுப்பதற்கு ஏற்ற பெண் அந்தணர் குலத்தைச் சேர்ந்தவளாக இருக்கவேண்டும். கலை, கல்வியிலும் சிறந்தவளாக இருக்க வேண்டும் என்று ஸ்மிருதி கூறுவதாகச் சொல்கிறாய். எனக்குத் தெரிந்து இத்தனை தகுதிகளும் கொண்ட ஒரே ஒரு பெண்தான் தஞ்சையில் இருக்கிறாள்.

"யார் அவள் ?" ஒப்புக்காகக் கேட்பது போல் நடித்தாள்.

''வேறு யார் ? நீ ஒருத்திதான் வாணி. யக்ஞவல்கயா ஸ்மிருதியில் சொல்லப்பட்ட சகல குணங்களும் ஒருங்கமைந்த ஒரே பெண் நீதான். என் நெருங்கிய தோழி என்று இன்னொரு சிறப்பும் உனக்குச் சேர்கிறது, நீதான் என் அண்ணனுக்கு ஆரத்தி எடுக்கவேண்டும் வாணி."

இதைத்தானே அவளும் எதிர்பார்த்தாள். இருந்தாலும் தன் மனதில் எழுந்த மகிழ்ச்சியை முகத்தில் காட்டாது, அதிர்ச்சியுற்றவள் போல் நடித்தாள் மதுரவாணி.

"ஐயையோ ! நானா ? என்னால் முடியாது ! அவ்வளவு பெரிய கூட்டத்தில் நான் சென்று ஆரத்தி எடுப்பதற்கு எனக்கு பயமாக இருக்கிறது ! வேறு பெண் இருக்கிறார்களா என்று பார்க்கச் சொல்."

''எனக்குத் தெரிந்து வேறுபெண், இத்தனை தகுதிகளும் கொண்டவள், கிடையவே கிடையாது. நீதான் எடுக்க வேண்டும்."

"உன்னிடம் இதைப்பற்றி சொன்னதே தவறு! இப்பொழுது என்னையே தர்ம சங்கடத்தில் ஆட்படுத்தப் பார்க்கிறாயே !"

"வாணி ! நீ எனது நெருங்கிய தோழி இல்லையா ? என் அண்ணன் இந்த நாட்டையே ஆளப்போவது உனக்கும் பெருமைதானே !"

"நான் இல்லை என்று சொல்லவில்லையே ! ஆரத்தி எடுப்பதற்கு பயமாக இருக்கிறது என்றுதான் சொல்ல வந்தேன்."

''நான்தான் உன்னருகிலேயே இருப்பேனே, பிறகு எதற்கு உனக்கு பயம் ? சரி என்று சொல்லடி !"

"நான் உனக்காக சரி என்று சொன்னாலும், என் தந்தை இதற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை என்றால் நான் அன்றைய தினம் என் வீட்டு வாசலைக் கூட தாண்டி வர முடியாது."

''உன் தந்தையை இதற்குச் சம்மதிக்கச் செய்யும் பொறுப்பு எனது தந்தையிடம் உள்ளது. மன்னவர் பேச்சுக்கு மதியமைச்சர் மறுப்புச் சொல்ல முடியுமா மதுரவாணி !"

''என்னவோ உன் இஷ்டம்" வேண்டா வெறுப்பாகச் சொல்லுவதுபோல் கூறிவிட்டு, ''ஆரத்தி எடுப்பதற்கான பெண்ணை ஏற்கெனவே ஏற்பாடு செய்திருப்பார்கள். இனி அதை மாற்றுவது கடினம்," என்றாள்.

''நமது குரு சொல்லியவாக்கு என்றால் என் தந்தை ஒருநாளும் தவறமாட்டார். வேறு பெண்ணை ஏற்பாடு

செய்திருந்தாலும், நான் உண்மையைச் சொல்லி சாஸ்திரப்படி உன்னை ஆரத்தி எடுக்க உத்தரவிடச் சொல்கிறேன் நீ மட்டும் மறுக்கக் கூடாது."

"சரி, உன் வார்த்தைக்காக ஒப்புக்கொள்கிறேன்" வேண்டா வெறுப்பாகச் சொல்வது போல் கூறிவிட்டு, தனது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்ட மகிழ்ச்சியில் மதுரவாணி வீடு திரும்பினாள்.

அடுத்த சில நிமிடங்களில் இளவரசி சந்திரவதனா தனது தந்தையுடன் கலந்து பேசி மதுரவாணி சொன்ன விஷயத்தைக் கூறி மன்னார்தாசன் வந்தவுடன் மதுரவாணிதான் ஆரத்தி எடுத்து, வெற்றித்திலகம் இடவேண்டும் என்று உத்தரவிடச் சொன்னாள்.

விஜயராகவ நாயக்கன் தனது அமைச்சரைக் கூப்பிட்டு விவரத்தைக் கூறினான். இதைக் கேட்ட கோவிந்ததீட்சிதர் முகம் மாறி, "யக்ஞவல்கயா ஸ்மிருதியில் அப்படி எழுதி இருப்பதாக உங்களிடம் யார் சொன்னது? அவர்களை இங்கு கூட்டி வாருங்கள்!" என்று கோபமாகச் சொன்னார்.

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கன் தனது அந்தரங்க அறையை ஒட்டி இருக்கும் விசாலமான ஆலோசனை மண்டபத்தில் அமர்ந்தவாறு அரண்மனையின் திருவாய்க் கேள்வியிடம் சில முக்கியமான உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தான்

மதுரவாணியிடம் பேசிவிட்டு வந்த இளவரசி சந்திரவதனா தனது தந்தையைத் தேடி ஆலோசனை மண்டபத்திற்குள் நுழைந்தாள்

நிமிர்ந்து அவளை ஏறிட்டுப் பார்த்த விஜயராகவ நாயக்கன், "என்ன சந்திரவதனா, உன் அன்னையார் அழைத்தாரா?" என்றான்.

''இல்லை தந்தையே! தங்களை வேறு ஒரு காரியத்தின் நிமித்தம் பார்க்க வந்தேன். அரண்மனை வேலைகள் முடிந்து விட்டனவா?" என்றவாறு திருவாய்க் கேள்வியை திரும்பிப் பார்த்தாள்.

''கிட்டத்தட்ட முடிந்துவிட்டன. அப்புறம் தஞ்சையில் நான் எழுப்பிய ராஜகோபால சுவாமி ஆலயத்தின் வெளிக் கோபுரத்தூணில் எனது உருவச் சிலையை அமைக்கும்பணி என் மகன் வருவதற்குள் பூர்த்தி ஆகிவிட வேண்டும் என்று ஸ்தபதியைப் பார்த்துச் சொல்லிவிடு. அவ்வளவுதான் நீ போகலாம்!" என்று உத்தரவிட, திருவாய்க் கேள்வி பணிவுடன் தலையாட்டி விட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

''சொல் சந்திரா, என்ன விஷயம்?'' என்றான் மகளைப் பார்த்து.

''நாளைக் கழித்து அண்ணன் மன்னார்தாசன் இங்கு வரப் போகிறார் இல்லையா? அதுவும் பல வருடங்கள் கழித்து வரப்போகிறார் இல்லையா?"

''கிட்டத்தட்ட பத்து வருடங்கள் ஆகிவிட்டன அங்கு அவன் கல்விப் பயிற்சிக்குச் சென்று. இப்பொழுது அதற்கென்ன?"

''அண்ணன் பல வருடங்கள் கழித்து நம் அரண்மனையில் காலடி எடுத்து வைக்கும் பொழுது அவருக்கு மங்கல ஆரத்தி எடுத்து வெற்றித் திலகம் இடுவதற்குச் சில சாஸ்திர முறைகள் இருக்கின்றனவாம். அதன்படி ஏற்பாடு செய்திருக்கிறீர்களா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் வந்தேன்.''

"இதில் ஒன்றும் அதிகமான சாஸ்திர முறைகள் இல்லை மகளே! மங்கலப் பெண்டிர் ஆரத்தி எடுத்து. வெற்றித் திலகம் இடுவர். அவ்வளவுதான்."

''ஆரத்தி எடுக்கும் பெண்களுக்கு உரிய தகுதிகளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பதுண்டு இல்லையா ?"

"நிச்சயமாக. அவர்கள் மங்கலப் பெண்டிராக இருக்க வேண்டும். விதவைகளாக இருக்கக் கூடாது."

''மங்கலப் பெண்டிர் என்றால் ?"

"கணவனை விட்டுப் பிரியாத கற்பரசிகளாக இருக்கலாம். கல்யாணமே ஆகாத கன்னிப் பெணகளாகவும் இருக்கலாம்."

''இல்லை தந்தையே! இதற்கு யக்ஞவல்கயா ஸ்மிருதியில் ஒரு வரைமுறை வகுத்திருக்கிறதாம்."

''உனக்கு எப்படித் தெரியும்? நீ படித்திருக்கிறாயா?"

''இல்லை தந்தையே! என் தோழி ஒருத்தி நம் குல குருவான குமாரதாத்தாச்சாரியாரிடம் ஒரு முறை பேசிக் கொண்டிருந்த பொழுது, தற்செயலாக இதைப் பற்றி அவளிடம் கூறினாராம்."

''நமது குரு சொன்னால் அதில் தவறு இருக்காது. அந்த ஸ்மிருதியில் என்ன சொல்லி இருக்கிறதாம் ?" ஆர்வத்துடன் கேட்டான்.

''நீங்கள் சொல்லியதைப் போன்ற ஆரத்தி எடுப்பது மற்ற சமயங்களில் நடக்கலாமாம். ஆனால் ஒரு நாட்டின் இளவரசன் சிறு வயதில் கல்வி பயிற்சிக்காக தன்னுடைய நாட்டில் இருந்து வெளியேறி பல வருடங்கள் குருகுல வாசமிருந்து, தனது பயிற்சி முடிந்து முதன் முதலாகத் தனது நாடு திரும்பும் பொழுது கடைப் பிடிக்க வேண்டிய முறை என்று யக்ஞவல்கயா ஸ்மிருதியில் விளக்கமாகச் சொல்லி இருக்கிறதாம் ''

''என்ன சொல்லி இருக்கிறதாம் ?"

''பட்டத்து யானை இளவரசர் கழுத்தில் மாலை யிட்டவுடன் வேத மந்திரங்கள் ஓத வேண்டுமாம். பிறகு கல்வி, கலை, ஞானம் இவற்றில் சிறந்த அந்தணர் குலத்தைச் சேர்ந்த கன்னிப் பெண் ஒருத்தி அவருக்கு ஆரத்தி எடுத்து, வெற்றித் திலகம் இட வேண்டுமாம். அப்பொழுது மங்கல வாத்தியங்கள் முழங்க வேண்டுமாம். அதுதான் சாஸ்திரப்படி சாலச் சிறந்ததாம்.''

''ஓஹோ ! அப்படி ஒரு விஷயம் இருப்பதே எனக்குத் தெரியாது. இந்த சமயத்தில் நமது குலகுரு குமார தாத்தாச்சாரியார் குருவாயூருக்கு யாத்திரை சென்றிருப்ப தால், என்னால் இந்த விவரங்களைத் தெரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டது. நல்லவேளை இப்பொழு தாவது தெரிந்ததே !"

"ஸ்மிருதியில் சொன்னபடி செய்தால் அந்த நாட்டின் வளம் பெருகுமாம். அந்த இளவரசனுக்கு ஒரு குறையும் வராமல் தீர்க்காயுசாக நாட்டை ஆள அனுக்கிரகம் கிடைக்குமாம் "

''கண்டிப்பாக ஸ்மிருதியில் சொல்லப்பட்ட விஷயங் களுக்கு மாறாக நாம் நடக்கவே கூடாது!" என்று வானைப் பார்த்துக் கும்பிட்டான்.

''அதனால் தான் ஓடோடி வந்தேன், ஆரத்தி எடுப்பதற்கு யாரை நியமித்திருக்கிறீர்கள் ?"

''வழக்கம் போல அந்தப்புரப் பெண்டிர் யாராவது எடுக்கலாம். இன்னும் யாரையும் நியமிக்கவில்லை. ஸ்மிருதியில் கூறிய மாதிரி அத்தனை தகுதிகளும் நிறைந்த அந்தணப் பெண் யார் இருக்கிறாள் ?" என்று யோசித் தான்.

''இதில் யோசிக்க வேண்டிய அவசியமே இல்லை தந்தையே ! இதற்கு ஏற்ற பெண் நமது அமைச்சரின் மகள் மதுரவாணிதான்.''

இதை கேட்டவுடன் விஜயராகவ நாயக்கனின் முகம் மலர்ந்தது.

"சரியான தேர்வு சந்திரலதனா! சபாஷ்! அவளை விட்டால் பொருத்தமான நபர் யாரும் கிடையாது. கோவிந்த தீட்சிதர் பெண்ணாயிற்றே! அவரைப் போலவே புத்திசாலிப் பெண். பல நூல்களைக் கற்று உணர்ந்தவள். சங்கீதத்திலும் வல்லவள். நாட்டியம் கூட நன்றாக ஆடுவாள் என்று அவரே ஒரு முறை என்னிடம் கூறி இருக்கிறார். இவ்வளவு தகுதிகளையுடைய அவள் மன்னார்தாசனுக்கு ஆரத்தி எடுத்தால்தான் ஸ்மிருதியில் கூறியபடி சிறப்பாக இருக்கும். அவளை ஆரத்தி எடுக்கும்படி நீயே சொல்லிவிடு."

"நானே அவளை அழைத்துச் சொன்னேன். மறுக்கிறாள். பயப்படுகிறாள்."

"ஏன்? எதற்கு?"

"அவள் தந்தை உத்தரவிட்டால்தான் செய்வாளாம்."

"இவ்வளவு தானே! இப்பொழுதே சொன்னால் போயிற்று. யாரங்கே?" அருகில் இருந்த தாளத்தை அடித்து ஓசை ஏற்படுத்தினான்.

ஒரு காவலன் ஓடி வந்து வாய் பொத்தி நின்றான்.

"அமைச்சர் கோவிந்த தீட்சிதரை நான் அழைத்ததாக உடனே வரச் சொல்."

சற்று நேரத்தில் அமைச்சர் கோவிந்த தீட்சிதர் விரைந்து வந்து மன்னனின் முன்பு பணிவுடன் நின்றார்.

"அமைச்சரே, ஒரு நாட்டின் இளவரசன் குருகுலப் பயிற்சி முடிந்து சொந்த நாடு திரும்பி வரும் பொழுது

அவனை வரவேற்க வேண்டிய முறை பற்றி யக்ஞவல்கயா ஸ்மிருதியில் விவரமாகச் சொல்லி இருக்கிறதாமே!"

கோவிந்த தீட்சிதர் தன் கண்களை இடுக்கி, நெற்றியைச் சுருக்கி யோசித்துவிட்டு. "அப்படி ஒன்றும் சொல்லப்பட்டதாக நினைவில்லையே!" என்றார்.

"அந்த இளவரசனை வரவேற்கும் பொழுது பட்டத்து யானை மாலை அணிவித்தவுடன் வேத மந்திரங்கள் முழங்க வேண்டுமாம். பின்னர் கலை, கல்வி, கேள்விகளில் துறை போகிய அந்தணர் குலத்தில் பிறந்த கன்னிப் பெண் ஒருத்தி அவனுக்கு மங்கல ஆரத்தி எடுத்து, வெற்றித் திலகமிட்டு, மங்கல வாத்தியங்கள் முழங்கினால் அவனும், நாடும் சுபீட்சம் பெறுவார்கள் என்று யக்ஞவல்கயா ஸ்மிருதியில் எழுதப் பட்டு இருக்கிறதாம்."

"எனக்குத் தெரிந்து யக்ஞவல்கயா ஸ்மிருதியில் அப்படி எதுவும் சொல்லப்படவில்லை," என்றார் தீட்சிதர் ஆணித்தரமாக.

"ஒரு வேளை பராசர ஸ்மிருதியில் சொல்லப்பட்டு இருக்கலாம்."

"மன்னர் முன் என்னைப் பற்றி பெருமையாக நானே சொல்வதைப்பொறுத்தருளவேண்டும். உங்களுக்கு நன்றாகத் தெரியும். அடியேன் சிவதம், வேதாந்தம். வியாகரணம், தர்க்கம், மீமாம்சம் முதலிய சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவன். எனக்குத் தெரிந்து நீங்கள் சொன்ன இந்த விஷயம் பற்றி யக்ஞவல்கயா ஸ்மிருதியிலோ, இல்லை பராசர ஸ்மிருதியிலோ சொல்லப்படவில்லை. அது மட்டுமல்ல, ஆபஸ்தம்பர் கௌதமர், வசிஷ்டர், பௌதாயனர். மனு. சுக்கிரர், நாரதர், பிரஹஸ்பதி இவர்கள் எழுதிய எந்த சாஸ்திரத்திலும் இப்படி ஒரு வழக்கம் சொல்லப்பட

வில்லை. யக்ஞவல்கயா ஸ்மிருதியில் இப்படிச் சொல்லப் பட்டு இருப்பதாக தங்களுக்கு யார் சொன்னது? அவர்களை இங்கு கூட்டி வாருங்கள். நானே உங்கள் எதிரில் அவர்களை விசாரிக்கிறேன். உண்மையாக இருப்பின் ஒப்புக் கொள்கிறேன்," என்றார் கோபமாக.

மன்னனும் இளவரசியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு மன்னன் பேச ஆரம்பித்தான்.

"நமது குலகுரு குமார தாத்தாச்சாரியர் இதைப் பற்றிச் சொல்லியதாக எனது நம்பிக்கைக்கு உரியவர் ஒருவர் சற்று முன்தான் சொன்னார். எப்போதோ அதைப் பற்றி சொன்னதால் எந்த சாஸ்திரத்தில் அது சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை கேட்டவர் இப்பொழுது மறந்திருக்கலாம். நமது குலகுரு சொன்னால் நிச்சயம் அதில் தவறு இருக்காது"

"அப்படியானால் குமார தாத்தாச்சாரியாரிடமே இதைப் பற்றிக் கேட்டு விடுவது நல்லது இல்லையா?"

"கேட்கலாம் என்று பார்த்தால் அவர் குருவாயூருக்கு யாத்திரை மேற்கொண்டிருக்கிறார். இனி அங்கு ஒரு தூதுவனை அனுப்பி, அவன் விவரம் கேட்டுத் திரும்பி வருவதற்குள் மன்னார்தாசன் இங்கு வந்து விடுவான். மேலும் இந்த விஷயம் வாதத்திற்குரியதாக நான் எண்ணவில்லை. இதில் ஏதும் தவறு இருப்பதாகவும் தெரியவில்லை. கல்விப் பயிற்சி முடிந்து வரும் இள வரசனை கல்வி, குலம் ஆகியவற்றில் சிறந்த பெண் வரவேற்று ஆரத்தி எடுப்பது சிறப்பாகத்தான் இருக்கு மென எனக்குத் தோன்றுகிறது."

"சரி, அப்படியானால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன். அப்படிப்பட்ட சிறந்த பெண் யாரென்று மாலைக்குள் சொல்கிறேன்."

"தேவையில்லை. அந்தப் பெண்ணை நாங்களே தேர்ந்தெடுத்தாயிற்று "

''யார் அந்தப் பெண் ?"

"வேறு யார் ? தங்களின் பெண் மதுரவாணிதான்."

"மதுரவாணியா !" அதிர்ச்சியுடன் கேட்டார் அமைச்சர்.

"இத்தனை தகுதிகளும் பொருந்திய ஒரே பெண் இந்த நாட்டிலேயே தங்கள் பெண் ஒருத்திதான் இருக்கிறாள். அமைச்சரே ! அது மட்டுமல்ல, அவள் பெயரிலேயே சரஸ்வதி இருக்கிறாள். கல்விப் பயிற்சி முடிந்து வரும் என் மகனுக்கு கல்விக்கு உரியவளான கலைவாணியே ஆசீர்வதிப்பது போல இருக்கும்."

கோவிந்த தீட்சிதருக்கு இது பிடிக்கவில்லை. என்றாலும், மன்னனிடம் எப்படி மறுத்துரைப்பது என்றும் புரியவில்லை.

"அவள் சிறுபெண் மன்னவா ! கூட்டத்தைக் கண்டு மிரளுவாள்!" என்றார் மெதுவாக.

"இவ்வளவு சிறிய வயதிலேயே இத்தனை திறமைகளும் ஒருங்கிணைந்து அமைந்திருப்பதில் இருந்தே அவளுக்கு கலைமகள் பரிபூரண கடாட்சம் அருளியிருப்பது தெரிகிறது. அதனால் மதுரவாணிதான் இதற்கு மிகவும் பொருத்தமானவள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.''

"கூட்டத்தைக் கண்டு பதறி, மிரண்டு ஆரத்தி எடுக்கும் பொழுது ஏதாவது அபசகுனமாகப் பண்ணி விடுவாளோ என்று எனக்கு அச்சமாக இருக்கிறது மன்னவா !"

"அமைச்சரே, மதுரவாணியை நீங்கள் இன்னும் குழந்தையாகவே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் !

அவள் எவ்வளவு புத்திசாலிப் பெண் என்று எனக்கு நன்றாகவே தெரியும். அப்படி எல்லாம் எதுவும் நடக்காது ராஜகோபாலசுவாமியின் அனுக்கிரகத்திலும், எனது குலகுரு குமாரதாத்தாச்சாரியாரின் ஆசியிலும் எல்லாமே நல்ல விதமாக நடக்கும். மதுரவாணிக்கு அருகில் என் மகள் சந்திரவதனா இருப்பாள். அதனால் உங்கள் மக்களுக்கு எந்த பயமும் ஏற்படாது. கவலைப் படாதீர்கள்."

கோவிந்த தீட்சிதர் மறுத்துச் சொல்ல முடியாமல் தவித்து, செய்வதறியாது, மவுனமாக நின்று கொண் டிருந்தார்.

"வாணியை தயாராக இருக்கச் சொல்லுங்கள் புதன்கிழமை காலையிலேயே அந்தப்புரத்திற்கு வந்து இளவரசியுடன் சேர்ந்து இருக்கச் சொல்லுங்கள்."

கோவிந்த தீட்சிதர் வேறுவழியின்றி மவுனமாகத் தலையாட்டி விட்டு வீட்டிற்கு வந்தார்.

15

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனிடம் பேசி விட்டுத் தனது வீட்டிற்கு வந்தார் அமைச்சர் கோவிந்த தீட்சிதர். அவர் முகமும், மனமும் இறுகிப் போய் இருந்தது. முகம் வாடிப்போய் வீட்டிற்குள் நுழையும் தந்தையை தூரத்தில் இருந்து பார்த்த மதுரவாணியின் மனதில் மகிழ்ச்சி பெருகியது. தனது திட்டத்தின் செயல் பாட்டினால் இளவரசி மன்னனிடம் சொல்லி இருப்பாள்; மன்னர் தந்தையிடம் சொல்லி இருப்பார்.

தந்தைக்கு இது அடியோடு பிடிக்காவிட்டாலும் மன்னனின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு வந்திருப்பார். அதனால்தான் அவர் முகம் வாடி இருக்கிறது என்பதை புரிந்து கொண்ட மதுரவாணியின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கத் தொடங்கியது. இனி வீட்டில் என்ன நடக்கும் என்பதை உணர்ந்தவளாய், அவர் கண்ணில் படாது உள்ளறைக்குச் சென்று, ஒரு ஓலைச் சுவடியை படிப்பது போல் பாவனை செய்து, காதுகளை கூர்மையாக்கிக் கொண்டாள்.

"என்ன சோர்வாக வருகிறீர்கள்; உடம்பு சவுகரிய மாக இல்லையா?" என்றாள் தீட்சிதரின் மனைவி நாகமாம்பாள்.

"மனசுதான் சரியில்லை நாகு!" என்றார் வெறுப்புடன் உட்கார்ந்தவாறு.

"ஏன்? என்ன விஷயம்?"

"நாளைக் கழித்து இளவரசன் மன்னார்தான் வரப் போகிறான் இல்லையா. அப்பொழுது "நமது மதுர வாணிதான் அவனுக்கு ஆரத்தி எடுக்க வேண்டும் என்று மன்னர் உத்தரவிட்டு விட்டார்."

இதைக் கேட்ட மதுரவாணிக்குத் தன் திட்டம் வெற்றியடைந்து விட்ட சந்தோஷம் பீறிட்டது. தொடர்ந்து கேட்டாள்.

"இது நல்ல விஷயம்தானே! இதற்குப் போய் வருத்தப்படுகிறீர்களே!" என்றாள் நாகமாம்பாள். அவளுக்கும் அந்தச் செய்தி மகிழ்வைத் தந்தது.

"நமது குலப்பெண்கள் அரச குலத்து ஆண்கள் எதிரில் வருவதையே விரும்பாதவன் நான். நமது மதுரவாணி அவ்வளவு பெரிய விழாவில், அரசப் பிரதானிகள் சூழ்ந்திருக்கும் இடத்தில், இளவரசனுக்கு

ஆரத்தி எடுப்பது என் மனசுக்குப் பிடிக்கவில்லை," என்று நடந்ததைச் சொன்னார்.

"இதில் நமக்கு என்ன குறை வந்து விடப் போகிறது? இது ஒரு வகையில் நமது வாணிக்குப் பெருமைதானே! உங்களுக்கு விருப்பமில்லை என்றால், மதுரவாணிக்கு உடல்நலம் சரியில்லை என்று கூறி, வேறு பெண்ணை ஏற்பாடு செய்யச் சொல்வோமா?"

இதைக் கேட்ட மதுரவாணிக்குத் திடுக்கென்றது நெஞ்சம். அப்படி ஒன்று நடந்து விடுமோ என்று அச்சமும், பதைபதைப்பும் நடுக்கமும் ஏற்பட்டது.

"வேண்டாம். வேண்டாம்! உண்மை தெரிந்தால் மன்னனின் தீராத கோபத்திற்கு ஆளாக நேரிடும். நடப்பது நடக்கட்டும். வாணி என்ன செய்கிறாள்?"

"படித்துக் கொண்டு இருக்கிறாள் உள்ளறையில்."

"கூப்பிடு அவளை!"

அன்னை கூப்பிட, மதுரவாணி ரொம்ப நல்ல பெண்ணாக கையில் ஓலைச்சுவடியுடன் அவர்கள் அருகே வந்தாள்.

"என்னம்மா படிக்கிறாய்?" என்றார் கனிவுடன்.

"ரகுனாதாப்யுதயம் தந்தையே! ராமபத்திராம்பாளின் கவித்திறம் அற்புதமாக இருக்கிறது."

"உன்னிடம் ஒரு முக்கியமான பொறுப்பை மன்னர் ஒப்படைத்து இருக்கிறார். உருப்படியாகச் செய்ய வேண்டும்."

"என்ன தந்தையே?" தெரியாதது மாதிரிக் கேட்டாள்.

"புதன்கிழமையன்று இளவரசன் மன்னார்தாசன் இங்கு வரப் போகிறான். அவனுக்கு நீதான் ஆரத்தி எடுத்து, திலகம் இட வேண்டுமாம்"

"நானா ! ஐயையோ ! என்னால் முடியாது ! வேறு யாரையாவது செய்யச் சொல்லுங்கள். எனக்கு அவ்வளவு பெரிய கூட்டத்தில் ஆண்கள் மத்தியில் போகவே பிடிக்க வில்லை. நான் மாட்டேன்!" நன்றாக நடித்தாள்.

"நானும் எவ்வளவோ சொன்னேன். மன்னர் பிடிவாதமாக நீதான் அதனைச் செய்ய வேண்டும் என்கிறார்."

''எனக்கு பயமாக இருக்கிறது தந்தையே ! என்னால் முடியவே முடியாது. தயவு செய்து மன்னரிடம் பேசி மாற்று ஏற்பாடு செய்யச் சொல்லுங்கள்."

''இனி ஒன்றும் செய்ய முடியாது வாணி. நீ பயப்படாதே ! இளவரசி உன் அருகிலேயே இருக்கப் போகிறாள். ஆரததி எடுக்கும் நிகழ்ச்சி சில நிமிடங்களில் முடிந்து விடும். பதறாமல் ஆரத்தித் தட்டு கைதவறிக் கீழே விழுந்து விடாமல் கவனமாகச் செய்து இளவரசன் நெற்றியில் வெற்றித் திலகம் இட்டு விட்டால் உன் வேலை முடிந்தது. அதன் பிறகு இளவரசன் அரண் மனைக்குள் வலது காலை எடுத்து வைத்து சென்று விடுவான். உடனே ஒரு வினாடி கூட தாமதிக்காமல் நம் வீட்டிற்கு வந்துவிடு."

மதுரவாணி அதற்குப் பிறகும் ஒப்புக்கொள்ள வில்லை. நீண்ட நேரம் பிடிவாதம் பிடித்தாள். கோவிந்த தீட்சிதரும், அவர் மனைவி நாகமாம்பாளும் நீண்ட நேரம் அவளை சமாதானப்படுத்தினார்கள். பிறகு வேண்டா வெறுப்பாக சம்மதிப்பவள் போல் நடித்து அவர்களுக்கு உடன்பட்டாள்.

தன் திட்டம் வெற்றிகரமாக நடந்து விட்டது. இனி மன்னார்தாசன் வரும் நாளில் எப்படி நடப்பது என்பதை யோசித்தாள்.

புதன்கிழமையன்று இளவரசன் மன்னார்தாசனும் தஞ்சை வந்து சேர்ந்தான். அரசனின் உத்தரவுப்படி அவனுக்கு ஆரத்தி எடுக்கும் பொழுது, "என்னை மறந்து விட்டீர்களா ?" என்று மதுரவாணி சன்னமான குரலில் கேட்டதும் மன்னார்தாசன் திடுக்கிட்டான்.

இந்த நிகழ்ச்சியை தளவாய் ரங்கப்பநாயக்கனும் கவனித்து விட்டான்.

புதன்கிழமை காலையின் விடியற்பொழுதில் கண் களை விழித்துப் பார்த்த கதிரவன், தஞ்சை நகரமே விழாக்கோலம் பூண்டு இருப்பதைச் கண்ணுற்று சிலிர்த்து எழுந்து முறுவலித்தான்,

வீதிகள் தோறும் மகர தோரணங்களும், குலை தள்ளிய வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன. அரண்மனைக்குச் செல்லும் அகன்ற ராஜவீதியில் ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அமைக்கப் பட்டிருந்தன.

தஞ்சை பெருநகர்வாழ் குடி மக்கள் புத்தாடை புனைந்து மலர்ந்த முகத்துடன் கூட்டம் கூட்டமாக அரண்மனையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். சந்தடி சாக்கில் தங்கள் காதலரை கடைக்கண்ணால் பார்க்கலாம் என்று ஆசையுடன் வந்த கன்னிகளும் வரப் போகும் இளவரசனின் பார்வை நம் மீது பட்டு விட்டால் அந்தப்புரத்தில் வசதியாக இருக்கலாமே என்ற ஏக்கத் துடன் வந்து ஏந்திழைகளும், இளவரசன் எப்படித்தான் இருக்கிறான் என்று பார்க்கலாம் என்ற வெறும் ஆர்வத் தில் ஓடி வந்த ஆரணங்குகளும் சிறந்த ஆடை, ஆபரணங் களை அணிந்துகொண்டு, மையுண்ட கூந்தலில் மணம் கமழும் மலர்களைச் சூடி, மகிழ்ச்சிப் பொங்க வீதிகளில் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள்.

தஞ்சை அரண்மனை ஒப்பற்ற முறையில் ஒப்பனை செய்யப்பட்ட சித்தினிப் பெண்ணைப் போல இளம் வெயிலில் மின்னிக் கொண்டிருந்தது. அரண்மனை வாசலில் பிரமாண்டமான அலங்கார வளைவு அமைக்கப் பட்டு, மாவிலைத் தோரணங்களும், வாழை மரங்களும் கட்டப்பட்டிருந்தன.

அரண்மனை வாயிலில் அலங்காரம் செய்யப்பட்ட பட்டத்து யானை கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. வேத விற்பன்னர்கள் பூர்ண கும்பங்களுடன் தயாராகக் காத்திருந்தனர். மற்றொரு பக்கம் பல்வேறு விதமான இசைக் கருவிகளை வாசிக்கும் கலைஞர்கள் இனிமையான ராகம் ஒன்றை இசைத்துக் கொண்டிருந்தனர்.

தஞ்சை மன்னன் விஜய ராகவ நாயக்கன் மன்னனுக்கே உரிய சகல அலங்காரங்களையும் பூண்டு எழுபது வயதைத் தாண்டிவிட்ட போதிலும் அடலேறு போல் நெஞ்சை நிமிர்த்தியவாறு நின்றிருந்தான். அவனுக்கருகே அமைச்சர் கோவிந்த தீட்சிதர் தனக்கே உரிய நீண்ட அங்கியையும் உயர்ந்த தலைப்பாகையும் அணிந்தபடி காட்சி அளித்தார்.

இவர்களுக்கு சற்று தள்ளி தளவாய் ரங்கப்ப நாயக்கனும், அவன் மகன் அச்சுதப்பனும் சர்வ அலங்காரம் பூண்டவர்களாய் நின்றிருந்தனர். இவர்களைச் சுற்றி பின்புறமாக அரண்மனையின் முக்கிய பிரதானிகளும் அலுவலர்களும் சூழ்ந்து இருந்தனர்

இளவரசி சந்திரவதனாவும், மதுரவாணியும் புத்தாடை புனைந்து, சகல ஆபரணங்களையும் தரித்து எழிலுக்கு எழில் சேர்த்து அரண்மனைக்கு அருகில் இருந்த தனி அறை ஒன்றில் அமர்ந்திருந்தனர். இளவரசன் வந்த பிறகு வந்தால் போதும். அதற்கு முன் வரவேண்டாம் என்று மன்னரின் உத்தரவு.

அவர்களுடன் இளவரசியின் தாயும் பட்டத்துராணியுமான காந்திமதிதேவியாரும், இளவரசன் மன்னார்தாசனின் தாயாரான ராஜகோபால கஞ்சிகா தேவியாரும் அமர்ந்திருந்து இளவரசன் வரவை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அரண்மனை வாயிலில் இருந்த நீண்ட பெருவெளியில் வரிசையாக மூங்கில் கம்புகள் நடப்பெற்று ஏகமாகத் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தை ஒழுங்குப்படுத்திக் கொண்டிருந்தனர். அரண்மனைக் காவலர்கள். அச்சுதப்பன் சற்று நேரம் அரசன் அருகில் பணிவுடன் இருப்பான். பிறகு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு மக்கள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் காவலர்களைப் பார்த்து ஆணையிட்டவாறு, பெருமையுடன் நடந்து செல்வான்.

அங்கு திரண்டிருக்கும் பெண்கள் கூட்டத்தைக் கடந்து செல்லும்போது மட்டும் அவன் நெஞ்சு இன்னும் நிமிர்ந்து கொள்ளும். தனக்கு இருக்கும் அதிகாரத்தை அந்தப் பெண்கள் கண்டு அசர வேண்டும் என்பதற்காக தேவையில்லாத உத்தரவுகளைப் பிறப்பித்துக் காவலர் களை விரட்டுவான். பிறகு மறுபடியும் அரசன் அருகில் வந்து பணிவுடன் நிற்பான். தான் காவற்பணியில் எவ்வளவு கண்டிப்புடன் இருக்கிறேன் என்பதை மன்னர் கண்டு வியக்க வேண்டும் என்பதற்காக இம்மாதிரி அடிக்கடி செய்தான். அதே சமயம் அங்கிருந்து போகும் போதும், வரும் போதும் இளவரசியிருக்கும் அறைப் பக்கம் ஓரக்கண் பார்வையை வீசவும் அவன் தவற வில்லை

விடிந்து ஒரு ஜாமம் முடியும் தருவாயில் தூரத்தில் பெருத்த ஆரவாரம் ஏற்பட்டது. மகிழ்ச்சிப் பெருக்கில் மக்கள் தங்களை மறந்து வாழ்த்துக்களை ஒலிக்க ஆரம்பித்தனர்.

எட்டு குதிரைகள் பூட்டிய பெரிய ரதம் ஒன்றில் இளவரசன் மன்னார்தாசன் கம்பீரமாக உட்கார்ந்தபடி

வந்து கொண்டிருந்தான். இதனைப் பார்த்த விஜயராகவ நாயக்கனின் முகம் அன்று மலர்ந்த தாமரை மலரைப் போல் காட்சி அளித்தது. சுற்றிலும் இருப்பவர்கள் வாழ்த்துக்களை ஒலிக்க, மங்கல வாத்தியங்கள் கம்பீர மாக முழங்கத் தொடங்கின.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் முகம் மட்டும் சற்று இறுகிக் கிடந்தது. கம்பீரமாக வந்து கொண்டிருக்கும் இளவரசனைப் பாரத்து அவன் மனதில் காழ்ப்பு உணர்ச்சி பெருகிக் கொண்டிருந்தது.

மக்களின் ஆரவாரத்தையும் மங்கல வாத்தியங் களின் பிளிறலையும் கேட்டு, அடுத்த அறையில் இருந்த மன்னனின் தேவியரும், இளவரசி சந்திரவதனாவும், மதுரவாணியும் ஓட்டோடி வாயிலுக்கு வந்தனர். மதுர வாணி வருவதற்குள் அவள் இதயம் தாவிக் குதித்து அவளுக்கு முன் ஓடி வந்தது.

தூரத்தில் ரதத்தில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் இளவரசன் மன்னார்தாசனைப் பார்த்ததும் மதுர வாணிக்கு உடல் சிலிர்த்தது. எவ்வளவு அழகாக இருக் கிறார்! எவ்வளவு கம்பீரமாக வீற்றிருக்கிறார்! இன்னும் சற்று நேரத்தில் அவர் முன் நிற்கப் போகிறேனே! என்னைப் பார்த்தவுடன் அவர் முகம் எப்படி இருக்கும்? நினைவில் வைத்திருப்பாரா?

மதுரவாணியின் எண்ண ஓட்டம் போல் ரதமும் வேக மாக அரண்மனை வாயிலில் வந்து நின்றது. அதிலிருந்து குதித்து இறங்கினான் மன்னார்தாசன். மக்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது.

மதுரவாணிக்கு அவனை அருகில் பார்த்தவுடன் பரவசமாக இருந்தது. சிறுவயதில் பார்த்ததை விட இன்னும் அழகாக இருக்கிறாரே!

அலங்கார ரதத்தில் இருந்து இறங்கிய மன்னார் தாசன் ஓடி வந்து தனது தந்தையின் காலடியில் விழுந்து வணங்கினான். விஜயராகவ நாயக்கன் அவன் தோளைப் பிடித்துத் தூக்கி தன்னுடன் இறுக அணைத்துக்கொண்டு, உச்சி முகர்ந்து கண்கள் கலங்கினான்.

"நலமுடன் இருக்கிறீர்களா தந்தையே?" என்று மன்னார்தாசன் கேட்க, விஜயராகவ நாயக்கன் மகிழ்ச்சியுடன் தலையாட்டினான்.

பிறகு தன்னைப் பெற்ற அன்னை ராஜகோபால கஞ்சிகாதேவியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்து நலம் விசாரித்தான். அருகில் இருந்த இளவரசி சந்திரவதனாவின் தாய் காந்திமதிதேவியாரைப் பார்த்து, "அன்னையே மிகவும் இளைத்து விட்டீர்களே!" என்று அவர் கால்களிலும் விழுந்து வணங்கினான்.

பின்னர் அமைச்சர் கோவிந்த தீட்சிதரைப் பார்த்து வியந்து, "எனது முதல் ஆசானான நமது அமைச்சர் பெருமான் அல்லவா? நலமுடன் இருப்பதைக் காண எனக்கு மிக்க மகிழ்ச்சி அமைச்சரே! தங்கள் மைந்தர்கள் யக்ஞநாராயணனும், வெங்கடமகியும் நலமுடன் இருக்கிறார்களா?" என்றான்.

"நன்றாக இருக்கிறார்கள் இளவரசே! எனது மைந்தரின் பெயரைக் கூட இத்தனை ஆண்டுகள் கழித்தும் மறக்கவில்லையே தாங்கள்!"

என்னதான் சிறுவயதில் தன்னிடமே படித்தவன் என்றாலும், இந்த நாட்டின் இளவரசன் என்பதால் மரியாதை கலந்து பேசினார் மதி அமைச்சர்.

மதுரவாணிக்கு மகிழ்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக இங்கிருந்து பிரிந்து சென்ற போதிலும் என் அண்ணன்மாரின் பெயரைக் கூட

மறக்காதவர் என்னை எப்படி மறப்பார்? அடுத்து என்னைப் பற்றிதான் விசாரிக்கப் போகிறார் என்று ஆவலுடன் காத்திருந்தாள்.

16

இளவரசன் மன்னார்தாசன் மறக்காமல் தன் குடும்பத்தினர் ஒவ்வொருவரையும் பற்றிக் குறிப்பிட்டு, தனது தந்தையிடம் அவர்களின் நலம் பற்றி விசாரித்த பொழுது மதுரவாணியின் இதயம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது.

இதோ அடுத்து என்னைப் பற்றித்தான் கேட்கப் போகிறார். "அமைச்சரே! தங்களின் மகள் மதுரவாணி எப்படி இருக்கிறாள்? சிறு வயதில் இருந்த மாதிரியே அதே குறும்புக்காரப் பெண்ணாகத்தான் இருக்கிறாளா?" என்று கேட்கப் போகிறார். என் தந்தை இதோ இருக்கிறாளே மதுரவாணி என்று சொல்லப் போகிறார். என்னைப் பார்த்து குறும்புடன் சிரிக்கப் போகிறார். நான் நாணத்தால் தலை கவிழப் போகிறேன். இதோ வரப் போகிறார். வருகிறாரே!

ஆனால் இளவரசனோ மதுரவாணியை ஏறிட்டுப் பார்க்காமல் அவளிடமிருந்து நகர்ந்து விட்டான்.

மன்னார்தாசன் அடுத்து நகர்ந்து இளவரசி சந்திரவதனா அருகே வந்து விட்டது அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது. இளவரசியை பார்த்தவுடன் மன்னார்தாசன் முகம் மலர்ந்தது. குறுநகை புரிந்தான்.

"என் அருமைத் தங்கை சந்திரவதனா தானே இந்தப் பெண்?" என்று கேட்டு முடிப்பதற்குள் இளவரசி அவன் கால்களில் விழுந்து வணங்கினாள்.

அவளைத் தூக்கி நிறுத்தி அவன் நாடியைப் பிடித்துப் பார்த்தான்.

"உன் நினைவுதான் தினமும் எனக்கு இருந்தது சந்திரா! ஏன் தெரியுமா? உன்னைப் பற்றி அடிக்கடி பலர் என்னிடம் சொல்வார்கள். மிகவும் அழகாக இருக்கிறாள் உன் தங்கை! நமது வம்சத்திலேயே இப்படி ஒரு அழகியைப் பார்த்ததில்லை என்று உன்னைப்பற்றி என் காதுகளில் விழாத நாளே இல்லை.

நாம் சிறுவயதில் தூக்கி வளர்த்த பெண்தானே! அப்படி ஒன்றும் சிறுவயதில் அழகாக இருந்ததில்லையே! ஒரு வேளை இப்பொழுது அழகியாக மாறிவிட்டாளோ என்று உன்னை நினைக்காத நேரமில்லை. வந்தவுடன் உன்னைத்தான் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன். இப்பொழுது பார்த்தால் அதே கழுதைக் குட்டியாகத் தான் இருக்கிறாய் பார்த்தவர்கள் கண்ணில்தான் ஏதோ கோளாறு இருக்க வேண்டும்."

இளவரசி சந்திரவதனா தன் தந்தையைப் பார்த்துச் சிணுங்கினாள்.

"பாருங்கள் தந்தையே! அண்ணன் வந்தவுடன் என்னை கேலி செய்கிறார்," என்று சொல்ல, மன்னார் தாசன் அவள் காதை செல்லமாகத் திருகினான். எல்லோரும் சிரித்தார்கள்.

இளவரசியின் அருகில் இருந்த மதுரவாணிக்கு நெஞ்சம் படபடக்கத் தொடங்கியது மன்னார்தாசன் அடுத்து என்னைப் பார்ப்பார். மதுரவாணியா இவள் என்று வியப்பார், கேலி செய்வார் என்று ரொம்ப எதிர் பார்த்தாள்.

மன்னார்தாசனின் கண்களோ மதுரவாணியை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, அங்கிருந்து நகர்ந்து

விட்டன. மதுரவாணிக்குப் பெருத்த ஏமாற்றமாக இருந்தது. நெஞ்சில் அடி விழுந்தது போல் இருந்தது.

மன்னார்தாசன் அடுத்து தளவாயைப் பார்த்து, "நமது தளவாய் ரங்கப்பமாமன் அல்லவா தாங்கள்? நன்றாக இருக்கிறீர்களா ?" என்றான்.

ரங்கப்ப நாயக்கன் கடுப்பை மறைத்துக் கொண்டு, சிரிப்பை வலிய வரவழைத்துத் தலையாட்டினான்.

"தங்கள் மகன் அச்சுதப்பன் எப்படி இருக்கிறான்? எனது பால்ய வயது விளையாட்டுத் தோழன் இல்லையா? அவன் எங்கே ?''

"இதோ இருக்கிறேன் மன்னார்தாசா! உன் வரவேற்பிற்காக எத்தனை இரவு- பகல் தூங்காமல் பாடு பட்டிருக்கிறேன் தெரியுமா? என்னை நீ மறக்காமல் கேட்டதே எனக்குக் கிடைத்த பெரும்பாக்கியம்," என்றவாறு ஓரக்கண்ணால் இளவரசியைப் பார்த்தான்.

இதற்குள் கோவிந்த தீட்சிதர் மன்னரின் காதுகளில் ஏதோ சொல்ல, மன்னன் மன்னார்தாசனைப் பார்த்து, ''மகனே! நல்ல நேரம் முடிவதற்குள் நீ அரண்மனைக்குள் நுழைய வேண்டும். இப்படி வந்து நில். சாஸ்திர சடங்குகளை நிறைவேற்ற வேண்டும்!" என்றார்.

"நேரத்தில் என்ன இருக்கிறது தந்தையே! எல்லா நேரமும் நல்ல நேரம்தான். நான் இங்கு பிறந்து வளர்ந்தவன்! எனக்கு எதற்கு இந்தச் சடங்குகளும் சாஸ்திரங்களும்!''

''அப்படிச் சொல்லாதே! எல்லாம் முறைப்படி செய்யவேண்டும். யாரங்கே, புனித நீரைக் கொண்டு வாருங்கள்."

இரண்டு இளம்பெண்கள் புனித நீர் அடங்கிய குடங்களைத் தலையில் ஏந்தி வந்து இளவரசன் காலடியில்

இறக்கி வைத்தார்கள். அவனுக்கு முன் பொற்பலகைப் ஒன்று கொண்டு வந்து வைக்கபபட்டது.

"மன்னார்தாசா, பலகை மீது ஏறி நில் புனித நீரால் உன் பாதங்களை இவர்கள் கழுவி விடுவார்கள்.''

இதைக் கேட்ட மன்னார்தாசன் அதிர்ச்சி அடைந்தவன்போல் முகத்தை வைத்துக் கொண்டு, "நான் வரும்பொழுது குளித்துவிட்டுத் தான் வந்தேன். அப்படியே கழுவவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்கள் திருப்திக்காக நானே கழுவிக் கொள்கிறேன். என் பாதங்களைப் பிற பெண்டிர் தீண்டுவதை நான் விரும்பவில்லை." என்றவாறு புனிதநீர் அடங்கிய குடத்தை தன் காலிலே கொட்டி, பாதங்களைக் கழுவிக் கொண்டான்.

மன்னனுக்குத் தன் மகன் பேச்சும் செயலும் சிறிது அதிர்ச்சியைத் தந்தது.. கோவிந்த தீட்சிதரும் முகம் சுளித்தார்.

அடுத்து பட்டத்து யானை தும்பிக்கையில் மாலையுடன் அவனருகே பிளிறிக்கொண்டு வந்தது. மாலையை மன்னார்தாசன் கழுத்தில் போட்டு மறுபடியும் பிளிற, வேத விற்பன்னர்கள் வேதமந்திரங்களை இசையுடன் கலந்து அந்த இடமே ஆர்ப்பரிக்கும்படி ஓதத் தொடங்கினர்.

மன்னார்தாசன் பொறுமையுடன் நின்றிருந்தான். வேதங்கள் ஓதி முடிக்கப்பட்டதும், இளவரசி சந்திரவதனா தன் அருகில் இருந்த மதுரவாணியின் கரத்தில் ஆரத்தி தட்டை கொடுத்து சைகை செய்தாள். மதுரவாணி தன் கையில் ஆரத்தி தட்டுடன் அன்னப் பேடை போல் அழகாக நடந்து இளவரசன் முன் வந்து நின்று, ஆரத்தி எடுக்கத் தொடங்கினாள். மன்னார் தாசனின் கண்களோ ஆரத்தி எடுக்கும் தன்னை பார்ப்பதற்கு பதில் தூரத்தில் தெரியும் மக்கள்

கூட்டத்தை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தது. மறுபடியும் அவளுக்கு ஏமாற்றமாக இருந்தது.

ஆரத்தி எடுத்து முடித்து, தட்டில் இருந்த சிவந்த சாற்றில் விரல் நனைத்து அவன் நெற்றி அருகே கொண்டு செல்லும் பொழுது அருகில் இருந்த மங்கள வாத்தியங்கள் அனைத்தும் உச்ச ஸ்தாயியில் ஒலிக்க ஆரம்பித்தன. கைநடுங்க அவ்ன் நெற்றியில் திலகமிட்டாள் மதுரவாணி.

அதே சமயம் அவன் காதுகளில் மட்டும் கேட்கும் படியாக, "என்னை மறந்து விட்டீர்களா இளவரசே?" என்றாள். உடனே இளவரசன் திடுக்கிட்டுப் போய் அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

வாத்தியங்களின் பெருத்த ஓசையில் மதுரவாணி இளவரசனிடம் பேசியதை யாரும் கவனிக்கவில்லை என்றாலும், தளவாய் ரங்கப்ப நாயக்கனின் நரிக்கண்கள் இதை கவனித்து விட்டன.

மதுரவாணி இளவரசனிடம் ஏதோ பேசினாள் என்று தெரிந்ததே தவிர, என்ன பேசினாள் என்று அவன் காதிலும் விழவில்லை. மற்றவர்கள் மதுரவாணியின் பின்புறமாக நின்றிருந்ததால் அவள் மன்னார்தாசனிடம் பேசியதை அவர்கள் கண்கள் காணவில்லை.

மதுரவாணி இளவரசன் நெற்றியில் வெற்றித் திலகம் இட்டு முடிந்தவுடன், வாத்தியங்களின் இசையும் உடனே குறைந்து விடவே, அதற்கு மேல் அவனருகில் நிற்க முடியாமல், நகர்ந்து விட்டாள் மதுரவாணி. இளவரசன் அவளையே சற்று நேரம் கூர்ந்து பார்த்தான்.

மதுரவாணி முதலில் தன் தங்கை சந்திரவதனா அருகில் நின்று கொண்டிருக்கும்பொழுதே அவளை அவன் கண்கள் கவனிக்கத்தான் செய்தன. அவள் யார் என்ற அடையாளம் புரியாமல், அந்தப்புரத்தைச்சேர்ந்த பணிப்

பெண் யாரோ இளவரசியுடன் வந்திருக்கிறாள் போலும் என்றுதான் நினைத்தான்.

ஆரத்தி தட்டுடன் தன் அருகே நெருங்கி வந்த பொழுது கூட அவன் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தான். அவள் தன் நெற்றியில் வெற்றித் திலகம் இட்டு முடித்தவுடன், ''என்னை மறந்து விட்டீர்களா இளவரசே?'' என்றவுடன் ஒரு விநாடி திகைத்து விட்டான்.

யார் இந்த பெண்? இவ்வளவு துணிச்சலாக கேட்டு விட்டாள்! பிறகு ஒன்றுமே பேசாமல் நகர்ந்து விட்டாளே! இவளை எங்கேயோ பாாத்த மாதிரி நினைவு இருக்கிறதே?

மன்னார்தாசன் குழம்பிப் போய் அவளையே சற்று நேரம் கூர்ந்துபார்த்துக் கொண்டிருந்தான். மதுரவாணி, இளவரசியின் அருகில் சென்றதும் அவள் கையில் ஆரத்தி தட்டை வாங்கிக் கொண்டாள். அடுத்த விநாடி மதுரவாணி இளவரசனை ஏறிட்டுப் பார்க்க, மன்னார் தாசன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை பார்த்த வுடன் ஒரு கணம் சிலிர்த்து போனாள்.

இதையும் தளவாய் ரங்கப்ப நாயக்கனின் கண்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தன. இந்தப் பெண்ணும் இளவரசனும் ஒருவரை ஒருவர் ஏன் இப்படி பார்க் கிறார்கள்? மதுரவாணி திலகமிடும்போது அப்படி என்ன சொல்லி இருப்பாள்? குழம்பியவாறு நின்றான்.

அதே நேரம் மன்னர் விஜயராகவ நாயக்கன் தன் மகன் அருகேவந்து அவன் கரத்தைப் பற்றி, ''வலது காலை எடுத்து வைத்து, நம் வம்சம் சிறப்புற ஆட்சி புரிவேன் என்று நம் குலதெய்வம் ராஜகோபாலசுவாமியை மனதில் நினைத்துக் கொண்டு அரண்மனைக்குள் அடி யெடுத்து வையடா!'' என்றான்.

மன்னார்தாசன் அரண்மனை வாயிலில் தனது வலது காலை எடுத்து வைக்க, வாத்தியங்களின் ஓசை மறு படியும் காதைப் பிளந்தது. இளவரசனுக்குப் பின்னால் அரசனும், அவன் தேவியரும் செல்ல அவர்கள் பின்னே இளவரசியும், மதுரவாணியும் மற்ற அந்தப்புர மகளிரும் பின்தொடர, அவர்களைத் தொடர்ந்து, அமைச்சர், தளவாய், மற்ற அரசப் பிரதிநிதிகள் சென்றனர்.

அரண்மனைக்குள் நுழைந்தவுடன் மன்னார்தாசன் திரும்பிப் பார்த்தான். தன் தங்கையுடன்சேர்ந்துதன்னைப் பார்த்தபடியே அந்தப் பெண் வருவது தெரிந்தது உடனே நின்று தன் தந்தையைப் பார்த்து கேட்டான்.

''சந்திரவதனாவின் அருகில் வரும் இந்த பெண் யார் தந்தையே ?"

"இவள்தான் நமது அமைச்சரின் மகள் மதுரவாணி. சிறுவயதில் நீயும் இவளும் ஒன்றாக படித்தது நினைவில்லையா ?''

''ஓ ! மதுரவாணியா இவள் ? எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டு வந்தேன். நிஜமாகவே மறந்து விட்டேன். நன்றாக இருக்கிறாயா மதுரவாணி ?"

மதுரவாணிக்கு இப்பொழுது புளங்காகிதமாக இருந்தது. மலர்ச்சியுடன் தலையாட்டினாள்.

மறுபடியும் நடக்க ஆரம்பித்தார்கள். அப்பொழுது கோவிந்த திட்சிதர் தன் மகளை அருகில் வரும்படி சைகை செய்தார். அருகில் வந்த மதுரவாணியிடம், ''உன் வேலை முடிந்து விட்டது. இனி நீ வீட்டுக்குச் செல் !" என்றார் கடுமையாக.

மதுரவாணி ஏமாற்றத்துடன் வீட்டை நோக்கி செல்ல ஆரம்பித்து விட்டாள்.

எப்படியோ ஒருவழியாய் மன்னார்தாசனின் கவனத்தை தன்மீது திருப்பி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் மிதந்து வந்தாலும், தொடர்ந்து அவன் அருகே இருக்கும்படியான வாய்ப்பை துண்டித்து விட்டாரே என்று அவளுக்கு தந்தை மீது கோபமாக வந்தது.

அடுத்து வந்த நாட்களிலும் மதுரவாணியால் இளவரசனைக் கண்ணால் கூட பார்க்க முடியவில்லை. மன்னார்தாசனுடன் நாள் முழுவதும் பேசும்படியான வாய்ப்பு ஒன்றை உருவாக்க மற்றொரு திட்டம் ஒன்றை தீட்டினாள்.

அது நிறைவேறும் பொழுது அவளுக்கே அது பாதகமாக விளைந்தது. மட்டுமின்றி, இளவரசி மதுரை மன்னன் சொக்கநாதநாயக்கனை முதன் முறையாக நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பையும் அது ஏற்படுத்திக் கொடுத்தது.

17

இளவரசன் மன்னார்தாசனை அழைத்துக் கொண்டு மன்னன் விஜயராகவ நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் மற்றும் பிரதானிகளும் அரண்மனைக்குள் நுழைந்து தர்பார் மண்டபத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

மதுரவாணி மட்டும் அந்தக் கூட்டத்தில் இருந்து பிரிந்து வேறுபக்கமாக நடந்து கொண்டிருந்தாள். இதனை தளவாய் ரங்கப்ப நாயக்கனின் கண்கள் கவனித்து விட்டன.

இவ்வளவு நேரம் இளவரசியுடன் இருந்த இவள் இப்பொழுது எதற்குத் தனியே செல்கிறாள்? அமைச்சர் அவளிடம் எதையோ சொன்னது தெரிந்தது. என்ன

சொல்லி இருப்பார்? இளவரசனிடம் மதுரவாணி எதையோ பேசியதை அமைச்சரும் கவனித்திருப்பாரோ? அதனால் கண்டித்திருப்பாரோ? அதன் காரணமாக இவள் கோபித்துக் கொண்டு வீட்டிற்குச் செல்கிறாளோ? எதற்கும் அவளிடமே இதைப் பற்றி விசாரித்துப் பார்த்தால் என்ன?

தளவாய் ரங்கப்ப நாயக்கன் வேகமாக மதுரவாணியை நோக்கி நடந்து சென்றான்.

மதுரவாணி தாள முடியாத எரிச்சலில் நடந்து கொண்டிருந்தாள். தந்தை மீது அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது.

தந்தை என்னைத் தனியே அழைத்தபொழுது இளவரசியும், மன்னரும் சற்று தூரம் சென்று விட்டார்கள். அண்ணன் அருகில் வரும் மகிழ்ச்சியில் சந்திரவதனாவிற்குத் தன் தோழி பக்கத்தில் நடந்து வருகிறாளா என்று பார்ப்பதற்குக் கூட உணர்வு இல்லையே! பார்த்திருந்தால் என் தந்தையைக் கடிந்து தன்னோடு அல்லவா அழைத்துச் சென்றிருப்பாள். மன்னர் பார்த்திருந்தாலும் இந்த மாதிரி நடந்திருக்க முடியாது.

இனி அவர்கள் பின்னே செல்ல முடியாது! தந்தையின் கோபம் அளவிட முடியாதபடி ஆகி விடும். என் மனதிற்குப் பிடித்த மன்னார்தாசனை நேருக்கு நேர் பார்த்துவிட்டேன். அவர் கவனத்தையும் என் மீது திருப்பி விட்டேன். அவரும் என்னைப் பார்த்து நலம் விசாரித்து விட்டார். இது போதும்.

இனி அவர் இங்குதானே இருக்கப்போகிறார். இன்று இல்லாவிட்டால் இன்னொரு நாள் அவருடன் பேசும் வாய்ப்பு கிட்டாமலா போய்விடப் போகிறது? அப்படியே கிட்டாவிட்டாலும் அதற்கான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டியதுதான்.

மதுரவாணி மனத்திற்குள் புலம்பியபடியே நடந்து கொண்டிருக்கும் பொழுது, "அம்மா மதுரவாணி, சற்று நில்!" என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் தன்னை நோக்கி விரைவாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். மனம் குழம்பியது.

தளவாய் எதற்கு இவ்வளவு வேகமாக வருகிறார்? ஒருவேளை என்னை அருகில் காணாது இளவரசி அழைத்து வருமாறு தளவாயிடம் சொல்லி அனுப்பி இருப்பாளோ? மதுரவாணியின் மனம் ஒரு வினாடி குதூகலித்தது.

தளவாய் அவளருகில் வந்து, "என்ன மதுரவாணி, நீ மட்டும் திரும்பிச் செல்கிறாய்? இளவரசி வேறு ஏதாவது பணியின் நிமித்தம் உன்னைப் போகச் சொன்னாளா?" என்றார்.

"இல்லை. என் தந்தைதான் வீட்டிற்குச் செல்லும்படியாக கட்டளையிட்டார்," என்றாள். மனதில் மறுபடியும் வருத்தம் எழுந்தது.

"எதற்கு?"

"ஆரத்தி எடுத்தவுடன் என் பணி முடிந்துவிட்டது. இனி நடக்க இருக்கும் அரசகாரியங்களில் அந்தணர் குலப் பெண்கள் கலந்து கொள்ளும் வழக்கம் கிடையாது அல்லவா? அதனால் தான் என் தந்தை என்னை வீட்டிற்குச் செல்லச்சொன்னார். ஏன்? இளவரசி ஏதாவது சொல்லி அனுப்பினாளா?"

"இல்லை. நீ மட்டும் தனியாகச் செல்கிறாயே என்ற நோக்கத்தில் கேட்டேன் அது இருக்கட்டும். இளவரசன் முன்னார்தாசனிடம் என்ன பேசினாய்?"

இதைக் கேட்டவுடன் மதுரவாணிக்குத் 'திக்'கென்றிருந்தது. மனம் பதைத்து உடல் லேசாக நடுங்கத் தொடங்கியது.

"நா... நானா? இ... இளவரசருடனா? பேசவே இல்லையே!" அவள் குரல் கூட லேசாக நடுங்கிற்று.

"நீ பேசியதை நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தேன். என்னிடம் பொய்யுரைக்காதே! என்ன பேசினாய் என்று நானும்தான் தெரிந்து கொள்கிறேனே!" மிகவும் சாமர்த்தியமாகக் கேட்டான்.

"இல்லை. நிஜமாகவே நான் அவருடன் பேசவே இல்லை. அவர்தான் என்னைப் பார்த்து 'நன்றாக இருக்கிறாயா மதுரவாணி' என்றார். நான் தலையை மட்டும் ஆட்டினேன். பேசவே இல்லையே!"

"அப்பொழுது இல்லை. ஆரத்தி எடுத்து முடித்து இளவரசன் நெற்றியில் திலகம் இடும் பொழுது நீ பேசியதை நான் பார்த்தேன். அதுதான் என்ன பேசினாய் என்று கேட்டேன்."

இதைக் கேட்டவுடன் மதுரவாணிக்குப் பகீர் என்றிருந்தது. ஆசை வெட்கம் அறியாது என்பார்கள். அக்கம் பக்கம் மற்றவர்கள் பார்க்கிறார்கள் என்ற அறிவும் வராது என்பதுவும் இப்பொழுது தெரிகிறது. இந்த நரிப்பயல் அதையும் கவனித்திருக்கிறானே!

சற்றுத் தடுமாறிய மதுரவாணி சற்று நேரத்தில் சமாளித்துக் கொண்டு, "ஆரத்தி எடுத்து முடித்தவுடன், 'பல்லாண்டு வாழ்க' என்ற பொருளில் வரும் சமஸ்கிருத ஸ்லோகத்தைச் சொல்லியவாறு நெற்றியில் வெற்றித் திலகம் இடவேண்டும் என்று சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறது. அதைத்தான் சொன்னேன். தங்கள் கண்களுக்கு நான் இளவரசருடன் பேசியது மாதிரித்

தோன்றிய தாக்கும்" என்று சொல்லியவாறு கலகல என்று நகைத்தாள்.

தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்கு 'சப்'பென்று ஆகி விட்டது. ஒருவேளை அப்படியும் இருக்குமோ?

"இதைக் கேட்கவா என்னைத் தேடி இவ்வளவு அவசரமாக ஓடிவந்தீர்கள்?" என்றாள் மதுரவாணி உள்ளுக்குள் பயத்துடனும் கொஞ்சம் கடுப்புடனும்.

"இல்லை. இல்லை... திடீரென்று நீ மட்டும் பிரிந்து செல்கிறாயே. இளவரசி ஏதாவது பணித்தாளா? ஒரு வேளை நான் ஏதாவது உதவக்கூடுமோ என்ற நினைப்பில் வந்தேன். நீ வீட்டிற்குத்தானே செல்கிறாய்?"

'ஆமாம்' என்பது போல் தலையை மட்டும் ஆட்டினாள்.

"சரி சரி. காலாகாலத்தில் செல். இல்லாவிட்டால் அமைச்சர் கோபித்துக் கொள்ளப்போகிறார்."

மதுரவாணி திரும்பி நடக்கத் தொடங்கினாள். அவள் மனதிற்குள் புகையத் தொடங்கியது. 'தளவாய் கவனித்து விட்டானே! இனி இவனிடம் மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.'

மதுரவாணி சற்று தூரம் செல்லும் வரை பார்த்துக் கொண்டிருந்த ரங்கப்ப நாயக்கன் பிறகு திரும்பி தர்பார் மண்டபத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவன் மனமும் புகைந்து கொண்டிருந்தது.

மதுரவாணி சொல்வது உண்மையாக இருக்குமோ? நான் தான் தவறாகப் புரிந்து கொண்டேனோ? அது உண்மையாக இருந்தால் அதைச் சொல்வதற்கு இவள் எதற்கு இவ்வளவு தடுமாற வேண்டும்?

வாழ்த்துச் சொன்னது மாதிரி தோன்றவில்லையே! ஆரத்தி எடுக்கும் பொழுது எங்கோ கவனத்தில் இருந்த இளவரசன், இவள் சொன்னவுடன் இவள் முகத்தை உற்றுப் பார்த்தானே! அதன் பிறகும் இவள் இருக்கும் இடத்தை அடிக்கடி ஏறிட்டுப் பார்த்துக் கொண்டு அல்லவா இருந்தான்! மதுரவாணி மறைக்கிறாள்!

ஒரு வேளை உண்மையாக இருந்தால்? என் சந்தேகக் கண்ணுக்கு அப்படித் தோன்றி இருந்தால்?

எதற்கு குழப்பிக் கொள்ள வேண்டும். இனி இவர்களைத் தொடர்ந்து கவனிக்க வேண்டியதுதான்.

இந்த நினைப்புடன் தளவாய் ரங்கப்ப நாயக்கன் மீண்டும் தர்பார் மண்டபத்திற்குள் நுழைந்து, பரிவாரங் களுடன் கலந்து கொண்டான்,

தர்பார் மண்டபத்தை நோக்கி நடக்கும் பொழுது, இளவரசன் மன்னார்தாசன் தன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

''தந்தையே! என் ஆருயிர்த் தோழன் அக்கி ராஜுவை எங்கே காணவில்லை? நான் இங்கு வரும் நாள் குறித்து அவனுக்குத் தனியாக முடங்கல் ஒன்று அனுப்பி இருந்தேனே! நான் வரும் அன்று அரண்மனை வாயிலில் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று எழுதி இருந்தேன், அப்படி இருந்தும் காணவில்லையே? நீங்கள் அவனுக்கு வேறு ஏதாவது பணி கொடுத்து இங்கிருந்து அனுப்பி விட்டீர்களா?" என்று ஆவல் பொங்கக் கேட்டான்.

"கவலைப்படாதே! உன் மல்யுத்தத் தோழன் அக்கிராஜு உனக்காகத் தர்பார் மண்டபத்தில் காத்து இருப்பான், நான்தான் அவனை அங்கு இருக்குமாறு பணித்திருக்கிறேன."

தர்பார் மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். அதன் வாயிலைக் கடந்ததும், மன்னார்தாசனின் நண்பன் அக்கிராஜு ஒரு பெரிய ஆளுயர மாலையினைத் தூக்கி வந்து இளவரசன் கழுத்தில் அணிவித்தான். மன்னார் தாசன் அவனை ஆவலுடன் இழுத்து கட்டிக் கொண்டான்.

"அக்கிராஜு! நலமாக இருக்கிறாயா? உன் கடிதங்கள் அடிக்கடி எனக்கு வந்து கொண்டிருந்தாலும், உன்னை நேரில் பார்க்க வேண்டும் என்ற அவா எனக்கு வராத நாளே இல்லை! நம் நண்பர்களும், மல்யுத்தத் தோழர்களும் நலமாக இருக்கிறார்களா?"

உன் ஆசியால் அனைவரும் நலமாக இருக்கிறோம் மன்னார்தாசா! இதோ அனைவரும் உன்னைப் பார்க்கத் திரண்டு வந்திருக்கிறார்கள்."

அவனது பால்ய தோழர்கள் ஒவ்வொருவராக வந்து மாலை அணிவித்து அவனுக்கு சிறப்பு அளித்தனர்.

தர்பார் மண்டபத்தின் நடுவில் இருந்த பெரிய அரியணையின் மீது மன்னன் விஜயராகவ நாயக்கன் அமர்ந்து கொள்ள, அதற்கருகே அலங்காரமான சிறிய ஆசனம் ஒன்று போடப்பட்டு, அதில் இளவரசன் அமர்ந்தான்.

அரண்மனையின் முக்கிய அலுவலர்களும், பிரதானிகளும் அவர்கள் ஆளுகைக்கு உட்பட்ட, பகுதியைச் சேர்ந்த முக்கிய, பெரிய மனிதர்களும் வரிசையாக வந்து இளவரசனுக்கு வாழ்த்துக்கள் கூறி மரியாதை செலுத்தினர். மன்னனும் அவர்கள் யார் என்று கூறி இளவரசனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

தளவாய் ரங்கப்ப நாயக்கன் இந்தக் காட்சியினைச் சற்று எரிச்சலோடு பார்த்துக் கொண்டிருந்தான். இந்த அரியணையின் மீது தன் மகன் அச்சுதப்பன் அமர்ந்து,

இத்தனை சிறப்புகள் நடக்கக் கூடிய நாள் என்று வருமோ என்ற ஏக்கம் அவன் மனதில் குடி கொண்டது.

ஆனால் அச்சுதப்பனோ அங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை சரிவர கவனிக்காது அடிக்கடி மண்டபத்தின் மேல் மாடியையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

காரணம்? இளவரசனுடன் அரண்மனை வாயிலில் இருந்து சேர்ந்து வந்த அரசமாதேவியரும், இளவரசி சந்திரவதனாவும், மற்ற அந்தப்புரத்துப் பெண்டிரும் தர்பார் மண்டபத்தின் உப்பரிகையில் அமைந்திருந்த, மாடங்களில் அமர்ந்திருந்து கீழேபார்த்துக் கொண்டிருந்தனர்.

மேலே இருந்து அவர்கள் கீழே நடப்பதைக் காண முடியும். ஆனால் கீழே அமர்ந்திருப்பவர்களால் மேல் மாடத்தில் இருக்கும் பெண்டிரைப் பார்க்கவே முடியாது. இருந்தாலும் அச்சுதப்பனுக்கு ஒரு நப்பாசை!

இளவரசி மேல் மாடத்தில் இருந்து தன்னையே பார்த்துக் கொண்டு இருக்கலாம். தன் கண்ணுக்குத் தட்டுப்படும் படியாக ஏதாவது ஒரு மாடத்தில் சைகை செய்யலாம் என்ற நினைப்பில் அடிக்கடி உப்பரிகைப் பக்கமே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். இளவரசி அவனைத்தான் பார்த்துக் கொண்டிருப்பாள் என்ற நினைப்பில் அடிக்கடி தனது ஆடையினையும் தலை அலங்காரத்தையும் திருத்திக் கொண்டிருந்தான்.

வாழ்த்துக்களும் அறிமுகங்களும் இனிதே நடந்து முடிந்தவுடன் மன்னன் தன் மைந்தனையும், முக்கிய பிரதானிகளையும் மட்டும் அழைத்துக் கொண்டு, அருகில் இருக்கும் தனி அறை ஒன்றில் சென்று அமர்ந்தான்.

"மன்னார்தாசா! களைத்துப் போய் காணப்படுகிறாயே! உணவு அருந்திவிட்டு வருகிறாயா? இன்னும்

நிறைய வேலைகள் உனக்காகக் காத்திருக்கின்றன" என்றான் பாசம் பொங்க மன்னவன்.

''பசி இல்லை தந்தையே! நீண்ட காலம் கழித்து இன்றுதான் இங்கு வந்திருக்கிறேன். எனவே இன்று முழுவதும் தங்களுடன்தான் உணவு உட்கொள்வது என்று முடிவெடுத்து இருக்கிறேன். தாங்கள் சாப்பிடு வதாக இருந்தால் நானும் தங்களுடன் இப்பொழுதே சாப்பிடத் தயாராக இருக்கிறேன்."

"நான் தினமும் காலையில் உணவு உட்கொள்ளும் முறை உனக்கு நினைவில் இல்லையா மகனே?"

மன்னார்தாசன் சற்று யோசித்து விட்டு, "நான் இளம் வயதிலேயே இங்கிருந்து சென்று விட்டதால் மறந்துவிட்டது தந்தையே!'' என்றான்.

''என்னுடைய வழக்கத்தை நீ தெரிந்து கொள்வது மட்டுமின்றி, எனக்குப் பிறகு இந்நாட்டை ஆளப்போகிற நீ என்னைப் போன்றே இந்த வழக்கத்தையும் மேற் கொள்வது நலம் என்று நினைக்கிறேன்."

"அப்படி என்ன வழக்கம் தந்தையே?''

"எனக்கு வயது எழுபதுக்கு மேலாகி விட்டது. இத்தனை ஆண்டுகளாக என் உடல் நலத்திற்கு எந்த குறையுமின்றி இருப்பதோடு மட்டுமின்றி இந்த நாட்டிற்கும் என் ஆட்சிக்கும் எந்தவிதமான குந்தகமும் இதுவரை நிகழாமல் சுபீட்சமாக இருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் ஆண்டவனுடைய அனுக்ரகம் பரிபூரணமாக என்மீது இருப்பதுதான் ஆண்டவனுடைய கடாட்சத்தினைப் பெற வேண்டுமானால் நமது சாஸ்திரங்களில் சொல்லி இருப்பதன்படி அனுகூடப்

பிசகாமல் நடப்பது ஒன்றுதான் சிறந்தவழி!" என்றவாறு வானைப் பார்த்து கும்பிட்டான்.

''இதற்கும் தாங்கள் சாப்பிடும் வழக்கத்திற்கும் உள்ள சம்பந்தம்பற்றி எனக்குப் புரியவில்லை தந்தையே!"

"சொன்னால் புரியாது. வா ! நேரில் பார் ! உனக்குப் புரியும்."

மைந்தனை அழைத்துக் கொண்டு மன்னன் தர்பார் மண்டபத்தில் இருந்து வெளியே வந்தார். அவருடன் அமைச்சர் கோவிந்த திட்சிதரும், தளவாய் ரங்கப்ப நாயக்கனும் உடன் வந்தார்கள். அச்சுதப்பன் இதுதான் சமயம் என்று தன் நண்பர்களை அழைத்துக் கொண்டு கள் குடிப்பதற்காக வேறு பக்கம் சென்று விட்டான்.

அரண்மனையில் இருந்து சற்று தூரத்தில் ஓலைக் கீற்றுகளால் வேயப்பட்ட நீண்ட கட்டடங்கள் தொடர்ச்சியாக இருக்கும் இடத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தனர். மன்னன் தன் மகன் மன்னார்தாசனின் கையைப் பற்றிய படி அதற்குள் நுழைந்தான்.

விசாலமான அந்தக் கட்டடத்திற்குள் எதிர் எதிரே இரண்டு வரிசைகளாக தலை வாழை இலை விரிக்கப்பட்டு அதன்மீது சகல உணவு வகைகளும் பரிமாறப்பட்டிருந்தன. இட்டத்தட்டப் பனிரெண்டாயிரம் பிராமணர்கள் அங்கு உணவருந்திக் கொண்டிருந்தனர்.

''இவர்கள் யார் தந்தையே ?" என்றான் மன்னார் தாசன்.

''இவர்கள் அனைவரும் தம் நாட்டில் குடியிருக்கும் அந்தணர்கள். நான்கு வேதங்களையும் கரைத்துக் குடித்த சதுர்வேதிகள். வேதவித்துக்கள். இவர்கள் திருப்தியாக உணவு அருந்தி முடித்த பிறகுதான் நான் உணவு உட்கொள்வது வழக்கம்."

"தினமும் இவர்கள் உணவு அருந்திய பிறகுதான் தாங்கள் சாப்பிடுவது வழக்கமா?" அதிர்ச்சியுடன் கேட்டான் மன்னார்தாசன்.

"ஆம் மகனே. தினமும் காலையில் நானே இங்கு நேரில் வந்து இவர்கள் சாப்பிடுவதைப் பார்வையிடுகிறேன். இவர்கள் அனைவரும் திருப்தியாக உணவு அருந்தி முடித்தனரா என்று தெரிந்து கொண்ட பிறகுதான் இந்த இடத்தை விட்டே நகருவேன். அதன் பிறகு தான் நான் சாப்பிட வேண்டும் என்ற நினைப்பே எனக்குள் எழும்."

"இவர்கள் சாப்பிட்ட பிறகுதான் நீங்கள் சாப்பிட வேண்டும் என்று சாஸ்திரத்தில் சொல்லி இருக்கிறதா?"

"ஆமாம். சாஸ்திரத்தில் சொல்லியபடிதான் செய்கிறேன்!" என்றவாறு வானைப் பார்த்து கும்பிட்டான் மன்னன்.

"எந்த சாஸ்திரத்தில் அப்படி கூறியிருக்கிறது?"

மன்னன் தனது அமைச்சர் கோவிந்த தீட்சிதரைப் பார்த்தான். அமைச்சர் பணிவுடன் இளவரசன் அருகில் வந்தார்.

"மனு தர்ம சாஸ்திரத்தில் விரிவாக உள்ளது இளவரசே!"

"மனு ஸ்மிருதி என்ன சொல்கிறது என்றுதான் கூறுங்களேன்."

* "ஒரு மன்னன் ஆளும் நாட்டில் வேதங்களை கற்றுத் தேர்ந்த பிராமணன் ஒருவன் பசியால் துன்பப்

---

* 1. "Of that King, in whose dominion a learned Brahman is afficated with hunger the whole kingdom will in a short time be afflicted with famine'—Manava Dharma Sastra or the Institutes of Manu—G.C Haughton Page No 186

படும்படியாக நேரிட்டால், அந்த நாடு முழுமையும் பஞ்சத்தால் துயரப்பட நேரிடும் என்று மனு ஸ்மிருதியின் ஏழாம் பாகம் நூற்று முப்பத்து நான்காவது ஸ்லோகம் கூறுகிறது இளவரசே."

இதைத் தொடர்ந்து மன்னார்தாசன் கூறியது மன்னவனுக்கும், அமைச்சருக்கும் எரிச்சலையும், தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்கு மகிழ்ச்சியையும் அளித்தது.

18

அமைச்சர் கோவிந்த தீட்சிதர் மனுதர்ம சாஸ்திரத்தில் இருந்து விளக்கம் அளித்து முடித்தவுடன் மன்னன் விஜயராகவ நாயக்கன் தன் மகன் மன்னார்தாசனை பெருமை பொங்கப் பார்த்தான்.

"பார்த்தாயா மகனே! வேதங்களை விளக்கமுறக் கற்ற பிராமணன் ஒருவன் பசியால் துடித்தாலே அந்த நாடு முழுவதும் பஞ்சத்தால் துன்புற நேரிடும் என்று மனு ஸ்மிருதி சொல்கிறது. தஞ்சையைச் சேர்ந்த இந்தப் பகுதி முழுவதையும் ஒரு காலத்தில் சோழ மன்னர்கள் சிறப்பாக ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் மனுநீதி பிறழாமல் அரசை நடத்தியவர்கள். மனுநீதிசோழனின் வரலாற்றை இங்குள்ள மக்கள் இன்னமும் பேசி மகிழ்கிறார்கள்.

---

2. "The kingdom of that king in whose dominions a srotriya pines with hunger, will even, erelong, be afflicted by famine' - The Laws of Manu-Translated by G. Buhler - Edited by F. Max Muller - Page No 237.

பின்னாளில் வந்தவர்கள் மனுநீதி தவறி ஆட்சி புரிந்தமையால்தான் அந்த வம்சமே அடியோடு அழிய நேரிட்டது. இதனை மனதில் எண்ணிப் பார்த்துத்தான் நான் மனுதர்ம சாஸ்திரத்தின் அடிதனை ஒட்டி ஆட்சி செய்து வருகிறேன். அதில் ஒன்றுதான் இது. என் நாட்டில் இருக்கும் பிராம்மணர்க பசியால் வாடக்கூடாது. அதனால் அவர்கள் அனைவரும் வயிறார உணவு உட்கொண்ட பிறகுதான், என் வயிற்றில் பசியே ஏற்படும்!" என்றான் மன்னன்.

"தினமும் இத்தனை பேர் இங்கு உணவருந்துகிறார்களே, இதற்கான செலவை யார் கொடுக்கிறார்கள்? இவர்களே செலவையும் பகிர்ந்து கொள்கிறார்களா?"

"இல்லை. இல்லை. இதற்கான செலவு முழுவதையும் நமது அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது," என்றான் மீண்டும் பெருமை பொங்க.

"அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது என்றால், நமது கருவூலத்தில் இருந்து இதற்கான பணம் செலவிடப்படுகிறது. அப்படித்தானே?"

"ஆமாம்."

"நமது மக்களிடமிருந்து வரி வசூலிக்கிறீர்களா?"

"மக்களிடம் வரி வாங்காமல் ஒரு நாட்டை எப்படி நிர்வகிக்க முடியும் மன்னாரு? அதில்கூட முறைப்படி, சாஸ்திரப்படி நமது மக்கள் அனைவரிடம் இருந்தும் அவர்கள் செய்யும் தொழிலுக்கு ஏற்ப, உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஏற்ப, வரி வசூலிக்கிறோம் அதனையும் நீ முழுக்க தெரிந்து கொள்ளத்தான் போகிறாய்."

"மக்களிடம் பெற்ற வரிப்பணம் நமது கருவூலத்திற்கு வருகிறது. அதிலிருந்துதானே இவர்கள் உணவிற்குச் செலவழிக்கிறீர்கள்?"

"ஆம். அதிலென்ன சந்தேகம்?"

"இவர்கள் என்ன வேலை செய்கிறார்கள்?"

"என்ன இப்படிக் கேட்கிறாய் மன்னார்தாசா? அந்தணர்களுக்கு என்ன தொழில் என்று உனக்கு இவ்வளவு நாட்களாகத் தெரியாதா? இதைக் கூடவா நீ குருகுலவாசத்தில் கற்றுக் கொள்ளவில்லை?"

"இருந்தாலும் தங்கள் வாயால் தெரிந்து கொள்ளலாமே என்றுதான்—"

"வேதம் ஓதுதலும், ஓதுவித்தலும் அவர்கள் கடமை. இதைத்தவிர இங்குள்ள கோயில்களில் ஆண்டவனின் சேவைக்காக தங்களையே அர்ப்பணித்துக் கொண்டவர்கள்"

"இவர்கள் வரி செலுத்துகிறார்களா?"

"வரியா? அந்தணர்களிடமிருந்து வரி பெற்றுக் கொள்வதா?" அதிர்ச்சியுடன் கேட்டான் மன்னன்.

"இதற்கு ஏன் இவ்வளவு பதைக்கிறீர்கள் தந்தையே?"

"அந்தணர்களிடமிருந்து அரசன் வரி வாங்கக் கூடாது என்று சாஸ்திரங்கள் புகல்கின்றன"

"எந்த சாஸ்திரத்தில் கூறி இருக்கிறது?"

*"மனு ஸ்மிருதியில்தான் கூறி இருக்கிறது இளவரசே! அதன் 7ழாம் பகுதியில் நூற்றுமுப்பத்து மூன்றாவது

---

* 1 "A King, even though dying with want, must not receive any tax from a Brahman leatned in Vedas, nor suffer such a Brahman, residing in his territories, to be afflicted with hunger'— Manava Dharma Sastra or The Institute of Manu-G. C. Haughton —Page No. 166.

ஸ்லோகத்தில் விவரமாக உள்ளது. 'ஒரு அரசன், தான் சாகும் நிலையில் உள்ள அளவுக்கு தேவையின் நெருக்கடி ஏற்பட்டால் கூட தன் நாட்டில் இருக்கும் வேதம் கற்ற பிராமணர்களிடம் இருந்து எந்த வரியும் பெற்றுக் கொள்ளவோ அவர்களை 'பசியால் துன்புறுத்தவோ கூடாது' என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறது." என்றார் அமைச்சர்.

"அதாவது இங்கு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் எவரும் எந்தக் காலத்திலும் அரசாங்கத்திற்கு எந்த வகையிலும் வரி செலுத்தியதில்லை. அப்படித்தானே தந்தையே ?"

"ஆம் மகனே !"

"ஆனால் இவர்கள் சாப்பிடுவதற்கான செலவு முழுவதும் இங்கு இருக்கும் உழைக்கும் மக்கள் செலுத்திய வரிப் பணத்தில் இருந்து கொடுக்கப்படுகிறது இல்லையா தந்தையே ?"

"உண்மை."

"இது எந்த வகையில் நியாயம் தந்தையே ? இது ஊதாரித்தனமான செலவு என்று தங்களுக்குத் தோன்றவில்லையா ?"

இதைக் கேட்டவுடன் மன்னன் மட்டுமின்றி அமைச்சரும் சேர்ந்து அதிர்ச்சியுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தனர்.

---

2. "Though dying (with want), a King must not levy a tax on Srotriyas, and no Srotriya, residing in his kingdom, must Perish from hunger — The Laws of Manu- Translated by G. Buhler- Edited by F. Max Muller -Page No. 237.

"மன்னார்தாசா! என்ன இப்படிச் சொல்கிறாய்? இவர்களுக்கு உணவிடுவது ஊதாரித்தனமாகவா உனக்குத் தோன்றுகிறது?" என்றான் மன்னன்

"அதிலென்ன ஐயப்பாடு? ஒரு மன்னன் தனது நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் பசியால் வாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான் முக்கிய கடமை. அதற்காக அவனுக்கு வருமானத்தைத் தேடிக் கொள்ளும் அளவுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதை விடுத்து, அவனை உட்கார வைத்து உணவிடுவது தவறு இல்லையா? அதிலும் ஒருசாரார் பசியின்றி இருக்க வேண்டும் என்பதற்காக மற்றொரு சாராரிடமிருந்து பெற்ற வரிப்பணத்தைச் செலவிடுவது நிச்சயம் ஊதாரித் தனமான செயல்தான்."

இதைக் கேட்டவுடன் அமைச்சரின் முகம் மாறியது. மன்னனுக்கோ ஆத்திரம் லேசாக எட்டிப் பார்த்தது. வந்த அன்றே மைந்தனுடன் வாக்குவாதம் செய்ய அவன் விரும்பவில்லை. இருந்தாலும் எதையோ சொல்ல அவன் வாய் எடுத்த பொழுது, அமைச்சர் அவனை அவசரமாகத் தடுத்து கண்களால் சைகை செய்தார்.

"மன்னா, இங்கு பார்வை இட்டது போதும். கோபுரத்திற்குச் செல்லலாம்!" என்றார்.

"வா மகனே! இதனைப் பார்வையிட்ட பிறகு, நான் செய்யும் அடுத்த செயல் பற்றி உனக்குச் சொல்கிறேன்."

உணவுக் கூடத்தில் இருந்து வெளியேறி, அரண்மனையின் வளாகத்தினுள், அந்தப்புரத்திற்குச் செல்லும் வழியில் கட்டப்பட்டிருந்த உயர்ந்த கோபுரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

"மன்னார்தாசா, நமது வம்சமே மகாவிஷ்ணுவின் மீது மாறாத பக்தி நிறைந்தவர்கள் என்பது உனக்கு நன்றாகத்

தெரியும். விஜய நகரத்தை தோற்றுவித்த ஹரிஹரரும் புக்கரும் அவர்களுடைய குரு வித்யாரண்யர் மீதும் குல தெய்வமான விட்டலநாத சுவாமி மீதும் தீராக் காதலில் திளைத்தவர்கள். அவர்கள் வழி வந்த விஜயநகரப் பேரர சர்களும், அவர்களது நெருங்கிய உறவினர்களான நாமும் வைஷ்ணவ நெறியினை விடாது பற்றிக் கொண்டிருப்ப வர்கள் என்பது உனக்குத் தெரியாததல்ல."

மன்னார்தாசன் அமைதியாக கேட்டுக்கொண்டு வந்தான்.

''மன்னார்குடியில் குடிகொண்டிருக்கும் ராஜகோபால சுவாமியின் நினைவாகத்தான் உனக்கு மன்னார்தாசன் என்ற பெயரையே சூட்டி மகிழ்ந்தேன். அதிலும் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி பள்ளி கொண்டிருக்கும் மண்ணைத் தொடுவது வைகுண்டத்தின் வாசலைத் தொடுவதற்குச் சமம் என்று பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதனால் தினமும் நான் காலையில் திருவரங்கம் சென்று ரங்கநாதனை சேவித்து வந்த பிறகுதான் உணவருந்து வேன்.''

"தினமும் அவ்வளவு நீண்ட தொலைவா சென்று வருகிறீர்கள்?"

"பகவான் மேல் பக்தி பூண்டவர்களுக்கு பலநூறு கற்கள் நடந்து சென்றாலும் பசி, தாகம் ஏற்படாது. நானோ விரைவாகச் செல்லும் புரவிகள் பூட்டிய ரதத்தில் செல்கிறேன். தரிசனம் செய்துவிட்டு, உணவருந்தும் நேரத்திற்குள் தஞ்சைக்குத் திரும்பி விடுவேன். கடந்த சில மாதங்களாக என் மனதில் கொஞ்சம் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. அதனால் தினமும் திருவரங்கம் செல்வதை அடியோடு விட்டுவிட்டேன்."

இதனைக் கேட்டதும் மன்னார்தாசனின் முகத்தில் திடீரென்று ஒரு மலர்ச்சி எழுந்தது.

"தங்கள் வெறுப்பிற்கான காரணம் எனக்கும் புரிந்து விட்டது தந்தையே! நானே உங்களிடம் அதைப்பற்றி கேட்க வேண்டும் என்று எண்ணி இருந்தேன். நீங்களே சொல்லிவிட்டீர்கள். அப்படியானால் அந்தக் கவிதையில் என்னளவும் சந்தேகம் இல்லை!" என்றான் மன்னார் தாசன்.

மன்னனுக்கு அவன் எதைப் பற்றி சொல்கிறான் என்று புரியவில்லை.

"கவிதையா? நீ என்ன சொல்கிறாய்?"

"நீங்கள் அந்தக் கவிதையை படித்ததில்லையா? அற்புதமாக இருக்கும். ஸ்ரீரங்கம் கோயில் வழிபாட்டினைப் பற்றி அப்பட்டமாக விளக்கி இருக்கிறது அது தானே தங்கள் வெறுப்பிற்கான காரணம்?"

மன்னனுக்கு மறுபடியும் புரியாமல் மதி அமைச்சரைப் பார்த்தார். அவரும் தெரியாதென்று உதட்டைப் பிதுக்கினார்.

"என்ன கவிதை அது— மன்னார்தாசா?"

"தெலுங்கு மொழியில் உள்ள கவிதை தந்தையே! இந்தக் கவிதையை அடிக்கடி பெனுகொண்டாவில் சொல்லிக் கொள்வார்கள்."

"தங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்களேன். நாங்கள் கேள்விப்படவே இல்லையே!" என்றார் கோவிந்த தீட்சிதர்.

** "ரங்கதாமமுனக்கு ஹங்குக தானிநேகி
கள்ளு கம்பு சொம்பு கலிகியுண்டு
நரய லோகநாது நலமட்டரேயுனு"

** "If you go seasonably to the abode of Ranga (in the cauveri) you will find the charming smell of toddy. Truly, Truly this is scorn of the lord ofthe world. (The Vaishnavites drink toddy while worshipping)' -Verses of Vemana -C. P. Brown -Page No. 212.

மன்னார்தாசன் இந்தக் கவிதையினை கூறியவுடன் அமைச்சரின் முகம் சிறுத்துப் போயிற்று. மன்னன் விஜயராகவ நாயக்கனுக்கோ ஆத்திரத்தில் முகம் சிவக்கத் தொடங்கியது. கண்களில் கோபக்கனல் தென்பட்டது.

இதனை நன்றாக கவனித்த தளவாய் ரங்கப்ப நாயக்கனுக்கோ ஒன்றும் புரியவில்லை. கவிதை, இலக்கியம் இவற்றில் அவனுக்கு எப்பொழுதுமே ஆர்வம் இல்லாத தாலும், ஒரு கவிதையைச் சொன்ன உடனே புரிந்து கொள்ளும் அளவுக்கு அடிப்படை அறிவு இல்லாததாலும் மன்னார்தாசன் கவிதையைச் சொல்லும் பொழுது மிகவும் அசட்டையாக இருந்திருந்தான்

கவிதையைக் கேட்டவுடன் அமைச்சரின் முகம் மாறியதையும், மன்னனின் முகத்தில் கோபச்சாயை தட்டுப்பட்டதையும் பார்த்த பிறகுதான், அவனுக்கு அந்தக்கவிதையில் என்ன சொல்லி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டது.

"மருமகனே! அந்தக் கவிதையின் பொருள் எனக்குப் புரியவில்லை. அதில் அப்படி என்ன சொல்லி இருக்கிறது?" என்றான்.

தளவாயும் மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அக்கவிதையினை தமிழில் மொழி பெயர்த்துக் கூறினான் இளவரசன்.

"அரங்கன் குடி கொண்டிருக்கும் இடத்திற்கு செல் வீர்களேயானால் அங்கு மனங் கவரும் கள்ளின் நாற்றத்தினை நீங்கள் உணரலாம். உண்மையிலேயே இது இவ்வுலக நாயகனின் வெறுப்புத்தானே' என்று சொல்கிறது அந்தக் கவிதை அதாவது வைஷ்ணவர்கள் அரங்கனை சேவிக்கும் பொழுது கள் குடிக்கிறார்கள் என்று பொருள். இப்படிப்பட்ட இடத்திற்குச்செல்வதற்கு ஒரு மன்னனுக்கு எப்படிப் பிடிக்கும்? அதனால்தான் நிறுத்திவிட்டீர்களா தந்தையே?"

"எந்த முட்டாள் இந்தக் கவிதையை இயற்றியது ?" கோபத்துடன் கேட்டான் மன்னன்.

"வேமணா என்று ஒரு மாபெருங்கவிஞன் இயற்றிய கவிதை. அவன் எவ்வளவு பெரிய ஞானி என்பது தங்களுக்குத் தெரியாதா தந்தையே! அவன் இயற்றிய கவிதைகள் ஒவ்வொன்றும் முத்துக்கள்."

"யார் அது வேமணா ?" என்று மன்னன் தனது அமைச்சரைப் பார்த்துக் கேட்டான்.

"சில ஆண்டுகளுக்கு முன் கடப்பை பகுதியில் வாழ்ந்தவன் இந்த வேமணா. இவன் இயற்றிய கவிதைகளில் நாத்திகக் கருத்துக்கள் மிகுந்திருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் படித்ததில்லை," என்றார் கோவிந்த் தீட்சிதர்.

"அப்படி ஒட்டு மொத்தமாகக் கூறி விடாதீர்கள் அமைச்சரே! முதலில் அந்தக் கவிதைகளைப் படியுங்கள். அதிலுள்ள கருத்துக்களை ஆராய்ந்து பாருங்கள். அதன் பிறகு நீங்களே அதனை விரும்புவீர்கள்."

"உன்னை குருகுலவாசத்திற்கு அனுப்பி வைத்து, சகலவித்தைகளையும், சாஸ்திரங்களையும் கற்றுக் கொள்ளச் சொன்னால் நீ கண்ட கழிசடைக் கவிதைகளை படித்துக் கொண்டு வந்திருக்கிறாய்! திருவரங்கத்தில் நான் ஒரு நாளும் கள் குடிப்பவர்களையோ, குடித்தவர்களையோ இல்லை— கள்ளின் வாசனையையோ கூட பார்த்ததில்லை." என்றான் மன்னன் கோபமும் எரிச்சலும் கலந்து.

"மன்னன் சேவிக்க வரும் பொழுது அவர்கள் கவனமாக நடந்து கொண்டு இருக்கலாம். மற்ற நேரங்களில் அது தொடரலாம் இல்லையா ? வேமணா பொய்யுரைத்து இருக்கமாட்டார் தந்தையே!"

மன்னனுக்கு இதைக் கேட்டு மனதில் ஆத்திரம் எழுந்தாலும், வாக்குவாதத்திற்கு இது சரியான இடம் அல்ல என்பதால் கோபத்தை அடக்கிக் கொண்டு, "சரி. விடு அந்தப் பேச்சை மன்னார்தாசா! கோயிலுக்கு வரும் அடியார்கள் எல்லோரும் ஒன்றுபோல் இருப்பதில்லை அவர்களைப் பற்றி நமக்கு எதற்கு அக்கறை? கடவுளின் கருணைதானே நமக்குத்தேவை. நான் தினமும் திருவரங்கம் செல்லாமல் இருப்பதற்கு காரணம் அதுவல்ல!" என்றான்.

"பிறகு என்ன காரணம் தந்தையே?"

"மதுரை அரசுக்கும் நமக்கும் பல ஆண்டுகளாகவே தீராத பகை இருந்து வருகிறது என்பது உனக்குத் தெரியுமா?"

"தெரியும் தந்தையே! தஞ்சையில் நமது வம்சம் ஆட்சி புரியத்தொடங்கியதில் இருந்தே இரண்டு அரசுகளுக்கும் மனவேற்றுமை சிறிது சிறிதாக பகையாக முளைவிட்டதையும் அறிந்தேன். முடிவாக எனது பாட்டனார் தமது தங்கை அச்சுத ரகுநாதம்மாவை மதுரையின் திருமலை நாயக்கருக்கு மணமுடித்துக் கொடுத்த பிறகு, அவளை திருமலை மன்னர் குத்திக் கொலை செய்த பிறகு நமக்குள் இருந்த பகை வானளாவிய மரமாக வளர்ந்து விட்டதையும் தெரிந்து கொண்டேன்."

"எவ்வளவு கொடூரமான செயலென்று பார்த்தாயா மகனே? எனது தந்தை எவ்வளவு பரந்த மனப்பான்மையுடன், நமது வேலைக்காரர் பரம்பரையில் வந்தவர்கள் என்பதைக் கூட எண்ணிப்பார்க்காமல், தனது உடன் பிறந்த தங்கையைத் திருமலை நாயக்கனுக்கு மணமுடித்துக் கொடுத்தார். அதனை எண்ணிப் பெருமை கொண்டு அவளை சிறந்த முறையில் வைத்துக் கொள்ள வேண்டுமே

என்று நினைத்துப் பார்த்தானா அந்த நாய்! எவ்வளவு கொடூரமாக என் அத்தையைக் குத்தி கொன்று விட்டான்!"

"எந்தப் பகைமையையும் தனிமையில் இருந்து சிந்தித்து யார் பக்கம் தவறு என்று ஆலோசித்து திருத்திக் கொண்டால் அந்தப்பகைமை அடியோடு தகர்ந்துவிடும்."

"அப்படிச் செய்தானா அந்த நாய்? தராதரம் தெரியாது வேலைக்காரர் பரம்பரையில் வந்த நாய்க்கு, அரச வம்சத்தில் பிறந்த நாம் பெண் கொடுத்தது எவ்வளவு பெரிய தவறு?"

"அதுகூடத் தவறில்லை தந்தையே! அதைவிடப் பெரிய தவறுகளை நம் பரம்பரையினர் செய்து விட்டனர். இதில் மதுரை அரசைக் குற்றம் சொல்வது அர்த்தமில்லை."

இதைக் கேட்டவுடன் அதிர்ச்சியாகி விட்டான் மன்னன்.

"என்ன சொல்கிறாய் மகனே? நம் மீதுதான் குற்றமா?"

"ஆம் தந்தையே! எந்த ஒரு அரச பரம்பரையின் அடிவேரை தேடிப் பார்த்தால் கூட அதில் அசிங்கம் இருக்கும். மதுரை அரசவம்சத்தை வேலைக்காரன் பரம்பரை என்று இகழ்ச்சியுடன் காலம் காலமாகப் பேசிக் கொண்டு வருகிறோமே! நாம் யார்? விஜயநகரப் பேரரசு முதன் முதலாக யாரால், எப்படி உருவாக்கப் பட்டது?"

இதைக் கேட்டவுடன் விஜயராகவ நாயக்கன் மௌனமாக இருந்தான்.

*** "வாரங்கல் நாட்டின் மன்னனான பிரதாப ருத்ரரிடம் கருவூலக்காவலர்களாகப் பணி புரிந்தவர்கள் தானே ஹரிஹரரும், புக்கரும், முஸ்லிம்கள் படையெடுப்பினால் வாரங்கல் நாடு அழிந்த பொழுது இவர்கள் இருவரும் தப்பிச் சென்று வித்யாரண்யர் என்னும் மாதாவாச்சாரியர் ஆசியுடன் உருவாக்கப்பட்டதுதானே விஜயநகரப் பேரரசு? அதன்படி பார்த்தால் ஹரிஹரரும், புக்கரும் வேலைக்காரர் பரம்பரையில் வந்தவர்கள்தானே. அவர்கள் வம்சமான விஜயநகரப் பேரரசர்களும் வேலைக்காரர்கள்தாம் இவர்கள் உறவினரான நாமும் வேலைக்காரர்கள்தாம். இதில் மதுரை அரசவம்சத்தை மட்டும் நாம் இழிவாக குத்திக் காட்டியது, காட்டிக் கொண்டிருப்பது தவறு இல்லையா தந்தையே?"

இதைக் கேட்டதும் விஜயராகவனுக்கு கோபத்தில் கன்னத்துத் தசைகள் துடித்தன.

"அப்படியானால் என் அத்தை அச்சுதரகுநாதம்மாவை திருமலை நாயக்கன் குத்திக் கொலை செய்தது நியாயம் என்று சொல்கிறாயா?"

இதற்கான மன்னார்தாசனின் பதிலைக் கேட்டவுடன் தளவாய் ரங்கப்பநாயக்கனின் உள்ளம் கள்வெறி கொண்டாற்போல் கூத்தாடத் தொடங்கியது.

*** ...Vidyarayana Sikka, which relates that the founders of Vijayanagar were Hukka and Bukka, guards of the treasury of Pratapa Rudra of warrangal.' A Forgotten Empire -Robert Sewell -Page No. 21.

19

தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக்கனின் கோபம் கலந்த குரலைக் கேட்டதும், இளவரசன் மன்னார்தாசன் சற்று நேரம் அமைதியாக இருந்தான்.

அதே சமயம் அவர்களுக்குள் ஏற்பட்ட வாக்கு வாதத்தைப் பார்த்த தளவாய் ரங்கப்ப நாயக்கனின் மனம் மகிழ்ச்சியில் துள்ளத் தொடங்கியது. வந்த அன்றே தந்தையும் மகனும் முட்டிக் கொள்வார்கள் போலிருக்கிறதே! அதுதான் நல்லது. இது தொடர்ந்தால் இன்னும் நல்லது.

"சொல் மன்னார்தாசா! ஏன் மௌனமாக இருக்கிறாய்? மதுரைத் திருமலை தன் மனைவியை குத்திக் கொன்றது தவறே இல்லை என்கிறாயா?" என்று மறுபடியும் தன் மைந்தனைப் பார்த்துக் கேட்டான் மன்னன்.

"ஒரு உயிரைக் கொலை செய்வது என்பது தவறு தான் தந்தையே! இருந்தாலும் அதற்கான காரண காரியங்களையும், சூழ்நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்."

"என்னடா பெரிய சூழ்நிலை?" கோபத்துடன் கேட்டான் மன்னன்.

"திருமலை மன்னர் ஆரம்பத்தில் தன் மனைவியை எவ்வளவு சிறப்பாக வைத்திருந்தார் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு பெண் எப்பொழுது மணமுடித்து, புகுந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாளோ அப்பொழுதே தன் பிறந்த இடத்தை

அடியோடு மறந்துவிடவேண்டும். பிறந்த வீட்டுப் பெருமையினை அடிக்கடி குத்திக் காண்பித்தால் யாருக்குத்தான் கோபம் வராது? அதிலும் அவளுக்காகவே திருமலை மன்னர் இவ்வளவு பெரிய அரண்மனையை கட்டிக் காண்பித்தபொழுது, 'இது நான் பிறந்த தஞ்சை அரண்மனையின் சாக்கடைக்குக் கூட ஈடாகாது' என்று சொன்னால் தன்மானம் உள்ள எவனுக்குமே கோபம் தாறுமாறாகத்தானே வரும்? இதே வார்த்தையினை உங்கள் மனைவியரில் ஒருவர் சொன்னால் உங்களுக்குக் கோபம் வராதா?"

விஜயராகவ நாயக்கன் கோபத்தில் பல்லைக் கடித்தான். தன் மகனிடம் இருந்து இப்படிப்பட்ட வார்த்தைகளை அவன் எதிர்பார்க்கவே இல்லை. பக்கத்தில் இருந்த அமைச்சருக்கோ தர்மசங்கடமாக இருந்தது.

"இருந்தாலும் மதுரை நாயக்கன் நமது பெண்ணை அப்படிக் கொன்றிருக்கக் கூடாது," என்று தளவாய் மேலும் தூண்டிவிட்டான்.

"அது தவறுதான் தவறு அவர் பக்கம் மட்டும் இல்லை என்றுதான் சொல்கிறேன். அது இருக்கட்டும். பேச்சு எங்கெங்கோ போகிறது. தாங்கள் திருவரங்கம் செல்வதை எதற்காக நிறுத்தி விட்டீர்கள் என்று சொல்லவில்லையே!" என்று தன் தந்தையைப் பார்த்துக் கேட்டான்.

மன்னரின் மனதுக்குள் இன்னும் கோபம் புகைந்து கொண்டிருந்தது அதனால் சற்றுநேரம் மௌனமாகவே வந்தார்.

''என்ன தந்தையே? என் மீது ஏதேனும் கோபமா? நான் ஏதும் தவறாகப் பேசி விட்டேனா?''

"இப்பொழுது தான் இங்கு வந்திருக்கிறாய்! இங்குள்ள நிலைமைகளை சரியாக சீர்தூக்கிப் பார்த்த பிறகுதான் உனக்கு எல்லாமே புரியும்!" என்று நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டார்.

''சரி. சொல்லுங்கள் தந்தையே! எதற்காக தாங்கள் திருவரங்கம் செல்லவில்லை?"

''மதுரைக்கும் நமக்கும் ஏற்பட்ட பகை இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது மகனே!"

''எந்தப் பகையும், உறவும் பல தலைமுறைகளுக்கும் நீடித்து இருந்ததாக எந்த நாட்டு வரலாற்றிலும் காணப் படவில்லை தந்தையே! காலப்போக்கில் இந்தப் பகையும் மறையலாம். சொல்ல முடியாது. மீண்டும் ஒரு கல்யாணத்தால் கூட இணையலாம்."

"அது மட்டும் நான் உயிரோடு இருக்கும்வரை நடக்காது. நீ சிறுவன். இதன் ஆழம் புரியாமல் பேசுகிறாய். அதுவும் இப்பொழுதுதான் இந்த நாட்டிற்குள் விவரம் அறிந்த மனிதனாக அடியெடுத்து வைத்திருக்கிறாய். இருந்தாலும் சொல்கிறேன், கவனமாகக் கேட்டுக் கொள். நீயோ அல்லது உன் தங்கை சந்திரவதனாவோ எக்காரணத்தைக் கொண்டும் மதுரை அரசுடன் உறவு கொள்ள நினைக்கவே கூடாது. இது உன் தந்தை இடும் உத்தரவு, ஆணை, சத்தியம் என்று நினைத்துக் கொள். நான் உயிரோடு இருந்தாலும் சரி, இறந்து விட்ட பிறகும் சரி அப்படி ஒரு உறவு ஏற்பட வழிவகுக்கவே கூடாது!" என்று கோபம் கலந்து கூறினான்.

மன்னார்தாசனுக்கு இந்தப்பேச்சு பிடிக்கவில்லை. சத்தியம், ஆணை என்று சொன்ன பிறகு அதனை மறுத்துப் பேசவும் அவன் நாக்கு எழவில்லை.

"இந்தப் பகைக்கும் தாங்கள் திருவரங்கம் செல்லாத தற்கும் என்ன காரணம் என்று தாங்கள் கூறவில்லையே!"

"அதைத்தான் சொல்ல வருகிறேன். திருவரங்கம் இப்பொழுது மதுரை அரசுக்கு சொந்தமாக இருக்கிறது. மதுரையின் மன்னனாக திருமலையின் பேரன் சொக்க நாதன் என்று ஒரு சிறுவன் பட்டம் ஏற்றிருக்கிறான். அவன் நமது அரசை அடியோடு அழித்துவிடப் போவதாக அடிக்கடி சூளுரைக்கிறான்."

"அப்படி ஏதாவது ஓலை அனுப்பினானா?"

"அந்த அளவுக்கு அவனுக்குத் துணிச்சல் ஏது? அப்படிச் சொல்வதாக நமக்குச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் திருவரங்கம் சென்று வர விரும்பவில்லை."

"சொக்கநாத நாயக்கன் என்னும் சொறிநாய்க்குப் பயந்து திருவரங்கனை சேவிப்பதை கைவிடுவதா? என் மகன் அச்சுதப்பனை அனுப்பி மதுரை அரசையே மண்ணோடு மண்ணாக்குகிறேன் என்று பலமுறை சொல்லி விட்டேன் மருமகனே! மன்னர்தான் இதற்கு செவி சாய்க்க மாட்டேன் என்கிறார்," என்றான் தளவாய் நெஞ்சை உயர்த்திக் கொண்டு.

"இல்லை மாமா! தந்தை செய்தது ஒரு வகையில் சரிதான். பகையரசன் நாட்டிற்குள் தினமும் சென்று வருவது பற்பல பிரச்சனைகளை தோற்றுவிக்கும். நாமே வீணாகப் பகையினை வளர்த்துக் கொள்ள வழி வகுப்பது நல்லதில்லை."

தன் மகன் தனக்கு சாதகமாக இப்பொழுதாவது வந்தானே என்று மன்னனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. மன்னார்தாசனின் தோளில் கை போட்டு நடந்தவாறு சொன்னான்.

"அதுதான் மகனே என் நினைப்பும்! இருந்தாலும் அரங்கனை ஒருநாள் பார்க்காமல் இருந்தாலே என் மனது சூன்யமாகத் தோன்றுகிறது அதற்காகத்தான் இத்தனை பெரிய கோபுரத்தைக் கட்டி இருக்கிறேன்''

உயர்ந்த கோபுரத்தருகே வந்தார்கள். எட்டு நிலைகளைக் கொண்ட கோபுரம் வானை எட்டிப் பிடிப்பது போல் தோற்றமளித்தது.

''எதற்காக தந்தையே இவ்வளவு பெரிய கோபுரம்?"

''வா சொல்கிறேன்''

அனைவரும் கோபுரத்தின் படிகளில் ஏறி உயரே செல்லத் தொடங்கினர் கோபுரத்தின் உச்சிக்கு சென்றவுடன் மன்னன் தன் மகனை தன்னருகில் அழைத்து தூரத்தில் கை நீட்டி காண்பித்தான்.

*''அதோ தெரிகிறது பார்! அதுதான் எம்பெருமான் அனந்தசயனத்தில் இருக்கும் கோயிலின் கோபுரம். கோபுரத்தினை ஸ்தூல லிங்கம் என்றும் சொல்வார்கள். கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன மகனே. இதனை பிரமரந்திர மத்ய கபாலத்வாரம் என்று யோகிகள் கூறுகின்றனர். அண்டபிண்டங்கள் அனைத்தையும் அடக்கிக் கொண்டு இருக்கும் பரமபுருஷனாகிய இறைவனது விராட் ஸ்வரூபமே கோபுரமாகும் அதோ உச்சியில் தெரிகிறதே-கும்பம், அதற்குப் பெயர் ஷோடசாந்தம். கன்னத்தில் போட்டுக்கொள்!"

மன்னன் விஜயராகவநாயக்கன் பக்தி மிகுந்து, கண்கள் கலங்க, கைகளை உயர்த்தி வணங்கினான்.

---

* இந்துமத இணைப்பு விளக்கம் - திருவாவடுதுறை ஆதீன மகாவித்வான் கே. ஆறுமுக நாவலர் - பக்கம் 4○-46

அனைவரும் தூரத்தில் தெரியும் திருவரங்கன் கோயில் கோபுரத்தைப் பார்த்து வணங்கினார்கள்

சேவித்து முடித்து படிகளில் இறங்கும் பொழுது மன்னன் மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

''இந்த கோபுரம் கட்டியதன் நோக்கத்தினைப் புரிந்து கொண்டாய் அல்லவா? என் காலைக் கடமைகள் இனிதான் தொடங்கும். என் மனம் நிறைந்து இருக்கிறது இப்பொழுதுதான் எனக்குப் பசியே ஏற்படுகிறது. என்னுடன் வா! நீண்ட ஆண்டுகள் கடந்த பிறகு, இன்று உன்னோடு உணவருந்த விரும்புகிறேன். அமைச்சரே! மற்ற காரியங்களை நீங்களும், தளவாயும் கவனித்துக் கொள்ளுங்கள்."

மற்றவர்கள் கலைந்து தங்கள் கடமைகளை ஆற்ற விரைந்தனர்.

இளவரசனை தோளோடு பற்றி அணைக்காத குறையாக அந்தப்புரத்திற்குள் அழைத்துச் சென்றான் மன்னன்.

இளவரசி சந்திரவதனா, அவள் தாய் காந்திமதி தேவியார், மன்னார்தாசனின் தாய் ராஜகோபால கஞ்சிகா தேவியார் இவர்களுடன் மன்னனும், இளவரசனும் அமர்ந்து சாப்பிடத் தொடங்கினர். அனைவரும் கலகலப்புடனும் மகிழ்ச்சியுடனும் பேசி சிரித்தவாறு உணவு உண்ணும் காட்சியினை மன்னன் உவகையுடன் பார்த்தான். அவன் மனம் நிறைந்திருந்தது. இந்த மகிழ்ச்சி கடைசிவரை நீடித்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்குள் எழுந்தது.

சற்று நேரத்திற்கு முன் தன் மகன் மன்னார்தாசன் வாக்குவாதம் செய்த நிகழ்ச்சிகள் அவன் மனதை நெருடியது.

"மன்னார்தாசா, சாப்பிட்ட களைப்புத்தீர சற்று நேரம் ஓய்வு எடுத்துக்கொள். மாலையில் உன்னைச் சந்திக்கிறேன்," என்று கூறிவிட்டு மன்னன் எழுந்து செல்ல ஆரம்பித்தான்

மன்னன் அவ்விடத்தில் இருந்து நகர்ந்து சென்ற பிறகு, காந்திமதி தேவியார் மன்னார்தாசனைப் பார்த்துக் கேட்டார்

''என்னடா மன்னாரு, வந்ததும் வராததுமாகச் சந்திரவதனாவைப் பார்த்து என்ன சொன்னாய்? அவள் உன் மீது கோபமாக இருக்கிறாள்."

"நானா? என்ன சொன்னேன்? நினைவில்லையே"!

"கழுதைக் குட்டி என்று சொன்னாயாமே! உன் தங்கையை நீயே அப்படிச் சொல்லலாமா?" என்றாள் கஞ்சிகாதேவியார்.

"ஓ! அதைச் சொல்கிறீர்களா? தவறுதான். நான் அப்படிச் சொல்லி இருக்கக்கூடாது. மன்னித்துக் கொள் சந்திரா!" என்று கையெடுத்துக் கும்பிடுவது போல் பாவனை செய்தான்.

''எதற்கு அண்ணா பெரிய பெரிய வார்த்தைகளைச் சொல்கிறீர்கள்?'' பதறிப் போய்க் கேட்டாள் சந்திரவதனா

"வளர்ந்து இவ்வளவு பெரிய பெண்ணாகி இருக்கிறாய்! உன்னைப் போய் 'கழுதைக் குட்டி' என்று சொன்னது தவறுதான், பெரிய கழுதை என்று தான் சொல்லி இருக்கவேண்டும்," என்றான் சிரிக்காமல்.

தேவியர் இருவரும் பலமாகச் சிரிக்க, சந்திரவதனா முகம் சிவந்து "ஹூம் ஹூம்... பாருங்கம்மா அண்ணனை!" என்றவாறு பக்கத்தில் இருந்த பழக்

குவளையில் இருந்து திராட்சைக் கொத்துகளை எடுத்து தனது அண்ணன் மீது எறிந்தாள். மன்னார்தான் சிரித்தான்.

"நான் பெரிய கழுதை என்றால், என் அண்ணனாகிய நீங்கள் அதைவிட பெரிய கழுதைதானே!" என்றாள் சந்திரவதனா குறும்புடன்.

"நீங்கள் கழுதைகள் என்றால உங்களைப் பெற்ற நாங்களும் கழுதைகள் என்று கூறிவிடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள் கஞ்சிகாதேவி.

"அது மட்டுமல்ல அன்னையே! தங்களை மணந்ததால் எங்கள் தந்தையும் அல்லவா கழுதையாகி விடுவார். பிறகு தஞ்சாவூர் மன்னர் பரம்பரையே கழுதைகள் பரம்பரையாக அல்லவா போய்விடும்?" என்று மன்னார்தாசன் சொல்ல, அங்கிருந்து அனைவரும் நகைக்க, பரிமாறிய தாதியரும் வாயைப் பொத்திக் கொண்டு நகைத்தனர்.

"போதுமடா விளையாட்டு! ரொம்ப கேலி செய்தால் சந்திரவதனா அழுதுவிடுவாள்!" என்றாள் கஞ்சிகாதேவி.

"அழுவதற்கு அவள் என்ன குழந்தையா? என் தங்கைக்குத் திருமணத்திற்கான வீரனை தேடுகிறார்களாமே! எப்படிப்பட்ட மணாளன் அவளுக்கு வரப் போகிறானோ? இவளிடம் மாட்டிக் கொண்டு என்ன பாடுபடப் போகிறானோ? அவனை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.''

சந்திரவதனா மீண்டும் அவன் மீது பழங்களை எறிந்தாள்.

"உன் தோழி மதுரவாணி உன்னுடன்தானே வந்தாள் அப்புறம் பார்க்கவில்லையே! அவளையும் இன்று நம்மோடு உணவருந்த சொல்லி இருக்கலாமே! நல்ல பெண்" என்றான் காந்திமதிதேவியார்.

"ஆரத்தி எடுத்து முடித்தவுடன் என்னுடன்தான் வந்தாள் சற்று நேரம் கழித்து திரும்பிப் பார்க்கிறேன், அவளைக் காணவில்லை வீட்டிற்குப் போய்விட்டாள் போலிருக்கிறது. நாளைக்கு வரட்டும், 'சொல்லாமல் ஏனடி சென்றாய்' என்று அவளை ஒருபிடி பிடிக்கிறேன்!" என்றாள் சந்திரவதனா.

''மதுரவாணி என்றால் அமைச்சரின் பெண்ணைச் சொல்கிறீர்களா?" என்றான் மன்னார்தாசன்.

''ஆம் அவள்தான், உன்னோடு சிறுவயதில் அமைச்சரிடம் அட்சர அப்பியாசம் பயின்றாளே அந்த மதுர வாணிதான். அவள்தான் உனக்கு ஆரத்தி எடுத்தது. அவளை ஞாபகமில்லையா உனக்கு?'' என்றாள் கஞ்சிகா தேவி!

உடனே மன்னார்தாசனுக்கு ஆரத்தி எடுக்கும் பொழுது அவள் துணிச்சலாக அத்தனை பேர் மத்தியில் 'என்னை மறந்துவிட்டீர்களா இளவரசே' என்று கேட்டது அவன் மனதில் எழுந்தது. எவ்வளவு துணிச்சல் நிறைந்த பெண்! சிறுவயதில் அவள் செய்த குறும்புகள் நினைவுக்கு வந்தன. இன்னமும் அதே குறும்புடன் திகழ்கிறாளே!

தன் மனதில் ஓடிய எண்ணங்களை அவசரமாக மறைத்து தன் தாய் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கத் தொடங்கினான்.

''முதலில் மறந்துவிட்டது அன்னையே! பிறகுதான் நினைவுக்கு வந்தது. அவள் நமது சந்திரவதனாவின் தோழிகளில் ஒருத்தியா?''

''தோழிகளில் ஒருத்தி இல்லை அண்ணா! என் உயிருக்கு உயிரான ஒரே தோழி அவள்தான்! சகல இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்தவள். சங்கீதம் கூட

கற்றுக் கொண்டிருக்கிறாள். நாட்டைக் குறிஞ்சிராகம் அவள் பாடிக் கேட்க வேண்டும். அற்புதமாக இருக்கும். அதுமட்டுமில்லை அண்ணா. பரதநாட்டியம்கூட ஆடத் தெரிந்தவள்.''

"இவ்வளவு சிறப்புக்கள் அவளிடம் இருக்கிறதா? ஆளைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே!" என்றான் பிரமிப்புடன்.

''ஆளைப்பார்த்து எடை போடாதீர்கள் அண்ணா! பார்க்க சாதுவாக தோன்றுவாள். ஆனால் பெரிய குறும்புக்காரி!''

மன்னார்தாசனுக்கு மதுரவாணி இளம் வயதில் அவனுடன் குறும்பாக நடந்து கொண்டது நினைவுக்கு வந்தது. வயது வளரவளர அவளது குறும்புகளும் வளர்ந்திருக்குமோ?

மன்னார்தாசனுக்கு அவளைப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. இருந்தாலும் அமைச்சரின் பெண். அவளை சிறுவயது நினைவில் நாமாக சந்திப்பது நன்றாக இராது என்று நினைத்துக் கொண்டான்.

''மதுரவாணிக்குத் திருமணம் ஆகிவிட்டதா?''

''இன்னும் இல்லை. அவளுக்கும் நல்ல வரன் பார்த்துக் கொண்டு இருப்பதாக கோவிந்த தீட்சிதர் கூறினார்,'' என்றாள் காந்திமதிதேவி.

''சந்திராவைப் பார்ப்பதற்காக அடிக்கடி வருவாளா?''

''அடிக்கடி இல்லை மகனே! தினமும் வருவாள். அவள் வராத நாளே கிடையாது. அவளைப் பார்க்காமல் இவளுக்குத் தூக்கம் வராது. இவளைப் பார்க்காமல் அவளுக்குத் தூக்கம் வராது. அவ்வளவு நெருங்கிய தோழிகள்!" என்றாள் கஞ்சிகாதேவி.

"மதுரவாணி வந்து விட்டால் போதுமே! இருவரும் சேர்ந்து அடிக்கும் கூத்து இருக்கிறதே! அந்தப்புரத்தையே கலங்கடித்து விடுவார்கள். நந்தவனத்தில் பந்தடிப்பார்கள். இல்லாவிட்டால் பாட்டும், படிப்பும் என்று ஒரே அமர்க்களம்தான். திருமணத்திற்குப் பிறகு என்ன செய்வார்களோ?" என்றாள் காந்திமதி.

"இவர்களுக்கு வரப்போகிற கணவர்களை நினைத்தால்தான் பாவமாக இருக்கிறது. என்ன பாடுபடுத்தப் போகிறார்களோ?" என்றான் மன்னார்தாசன்.

"போங்க அண்ணா!" என்று நாணமுற்றாள் சந்திரவதனா.

மன்னார்தாசன் மதுரவாணிக்குத் திருமணம் இன்னும் நடைபெறவில்லை என்று தெரிந்தவுடன் அவளை சந்திக்கும் சிந்தனையை அறவே விட்டு விட்டான். ஏதோ சிறுவயது ஞாபகம்! அதை நினைத்து ஒரு கன்னிப் பெண்ணை, அதிலும் அமைச்சர் மகளை, அந்தணர் குலப் பெண்ணை சந்திக்க நினைப்பது தவறு என்ற நினைப்பில் அந்த எண்ணத்தையே அடியோடு மறந்து விட்டான்.

ஆனால் அங்கு மதுரவாணியோ அவனையே எண்ணிக் கொண்டு இருந்தாள். அவனை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று இடைவிடாத சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

20

அந்தப்புரத்தில் அன்னையருடனும் தங்கை சந்திரவதனாவுடனும் உணவருந்தியவாறு அளவளாவி

மகிழ்ந்த இளவரசன் மன்னார்தாசன், பிறகு அரண்மனைக்கு வந்தான்.

தளவாய் ரங்கப்பநாயக்கனும், நண்பன் அக்கிராஜுவும் அவனுக்காக அங்கு காத்துக் கிடந்தனர்.

''வா. மருமகனே! உனக்காகத்தான் நாங்கள் இங்கு காத்துக் கொண்டிருக்கிறோம் உணவருந்தி முடித்த பிறகு சற்று நேரம் ஓய்வெடுத்துக் கொள்வாயோ என்று நினைத்தோம்," என்றான் தளவாய்

''பகலில் தூங்கும் வழக்கம் எனக்குக் கிடையாது மாமா. எனக்காகவா நீங்கள் காத்துக் கிடக்கிறீர்கள்?"

''ஆமாம் மன்னார்தாசா அரண்மனையைச் சுற்றி நடக்கும் காவற்பணிகளை நீ பார்வையிட்டுத் தெரிந்து கொள்ள சொல்லி மன்னர் எங்களுக்குக் கட்டளை இட்டிருக்கிறார்!" என்றான் அக்கிராஜு.

மூவரும் அரண்மனைக்கு வெளியே வந்து, குதிரைகளில் ஏறி அரண்மனையைச் சுற்றி வளைத்திருக்கும் கோட்டையினை பார்வை இடத் தொடங்கினர். கோட்டையின் அமைப்பினையும், ஆங்காங்கே கட்டப்பட்டிருந்த கொத்தளங்களையும், அவற்றில் இரவு பகலாகக் கண் விழித்துக் காவல் புரியும் வீரர்களின் பணியையும் பற்றித் தளவாய், இளவரசனுக்கு விவரமாகச் சொல்லிக்கொண்டு வந்தான்.

''மருமகனே! நமது கோட்டை எவ்வளவு வலிமை நிறைந்ததாக இருக்கிறதென்று பார்த்தாயா? இதற்கு முக்கிய காரணம் யார் என்று நினைக்கிறாய்?" என்றான் தளவாய் இளவரசனைப் பார்த்து.

''வேறு யார்? இந்நாட்டின் தளவாயான தங்களைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?" என்றான் மன்னார்தாசன்.

"அதுதான் இல்லை. என் மகன், அதாவது உன் மைத்துனன் அச்சுதப்பன் தான் இவற்றுக்கெல்லாம் காரணம் அரண்மனைக்காவல் முழுக்க அவனிடம் தான் ஒப்படைத்திருக்கிறேன். எவ்வளவு கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்கிறான் தெரியுமா ? அவன் அறியாமல் இங்கு ஒரு அணு கூட அசையாது!" என்றான் பெருமையாக.

"அப்படியா மாமா ! கேட்க மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கே அச்சுதப்பன் ? நான் அரண்மனைக்குள் நுழையும் பொழுது பார்த்தேன். அப்புறம் காணவில்லையே ?'.

தளவாய் உடனே பக்கத்தில் இருந்த காவற் கூடத்திற்குள் சென்று அச்சுதப்பனைப் பற்றி விசாரித்தான். சற்று நேரத்திற்கு முன் நண்பர்களை அழைத்துக் கொண்டு தென்னந்தோப்பிற்குள் அவன் சென்றதாகவும், இன்னும் அவன் திரும்பி வரவில்லை என்றும் தெரிய வந்தது.

தன் சொல்லையும் மீறி அவன் கள் குடிக்கப் போய் விட்டானே என்று மனதிற்குள் ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் அதனை மறைத்துக்கொண்டு, சிரித்தவாறு இளவரசன் அருகில் வந்தான்.

''சே ! கொஞ்சமும் பொறுப்பு இல்லாத பயல் ! நான் என்ன சொல்லி இருந்தேன். அவன் என்ன செய்திருக்கிறான் என்று பார்த்தீர்களா ?" என்று புலம்பியவாறு அவர்கள் அருகில் வந்தான் தளவாய்.

''என்ன மாமா ? யாரைச் சொல்கிறீர்கள் ?"

''வேறு யார் ? உன் அருமை மைத்துனனைப் பற்றித் தான் புலம்புகிறேன்."

"அப்படி என்ன செய்தான் அச்சுதப்பன் ?"

"காலையிலேயே அவனிடம் படித்துப் படித்துச் சொன்னேன். இன்னும் சற்று நேரத்தில் அரண்மனையின் காவற்பணிகளை பார்வையிட உன் அத்தானை அழைத்துக் கொண்டு வரப் போகிறேன். அதனால் நீ எந்தக் காரணம் கொண்டும் காவற்கூடத்தை விட்டு அகலக் கூடாது என்று பலமுறை சொல்லி இருந்தும் போய் விட்டான். பொறுப்பு இருக்கிறதா?"

"எங்கே போய் விட்டான்?"

"இங்கிருந்து பத்துப் பதினைந்து கல் தொலைவில் இருக்கும் தென்னந்தோப்பிற்கு போய் இருக்கிறானாம்"

"தென்னந்தோப்பிற்கா? எதற்கு?"

அதே நேரம் அக்கிராஜூ ஏதோ சொல்ல வாய் எடுத்தான். அவனைப் பேச விடாமல் முந்திக்கொண்டு, தளவாய் சொல்லத் தொடங்கினான்.

"சில நாட்களாக இங்கு ஒரு வேங்கைப்புலி இந்தச் சுற்று வட்டாரத்து மக்களை படாதபாடு படுத்திக் கொண்டிருக்கிறது. ஆடு மாடுகளை துவம்சம் செய்கிறது. நாலைந்து ஆட்களையும் அடித்துக் கொன்று விட்டது. அது அந்தத் தோப்பில் பதுங்கி இருபபதாக செய்தி வந்ததாம். அதனால் அதனைக் கொல்வதற்காக கிளம்பிப் போய் இருக்கிறானாம். பொறுப்பற்ற மடையன்"

"நல்ல பணிக்காகத் தானே சென்றிருக்கிறான். அவனை எதற்கு திட்டுகிறீர்கள்?"

"இளவரசர் இங்கு பார்வையிட வந்து விடுவாரே என்ற அறிவு அவனுக்கு கொஞ்சமாவது இருந்தால் இப்படிப் போவானா? முட்டாள்."

"என்னைவிட நாட்டு மக்களின் நலமே பெரிதென்று எண்ணியது சரிதானே! பாராட்ட வேண்டிய செயல்! திட்டாதீர்கள் மாமா!"

"இது உனக்குத் தெரிகிறது மருமகனே! உனது தந்தையான மன்னருக்குத் தெரியவில்லையே!"

"என் தந்தைக்கு எது தெரியவில்லை?" குழப்பத்துடன் கேட்டான்.

'தெரிந்திருந்தால் இளவரசி சந்திரவதனாவிற்கு அச்சுதப்பனை மணமகனாக தேர்ந்தெடுக்காமல் வேறு இடத்தில் மாப்பிள்ளை பார்க்க தூதுவர்களை அனுப்பி வைப்பாரா?' என்று கேட்க நினைத்து, இப்பொழுது அதற்குச் சமயமன்று என்ற நினைப்பில் அடக்கிக் கொண்டான்.

"என்ன மாமா, மௌனமாக இருக்கிறீர்கள்? என் தந்தைக்கு எதைப் பற்றித் தெரியவில்லை?" மறுபடியும் கேட்டான் மன்னார்தாசன்,

"இன்று காலையில் நீ மன்னரிடம் பேசியது நினைவுக்கு வந்தது. அதைப் பற்றிச் சொன்னேன்." என்று பேச்சை மாற்றினான் தளவாய்.

"என்ன பேசினேன்? புரியும் படியாகச் சொல்லுங்கள் மாமா!"

"ஆண்டவனின் மீது பக்தி அவசியம் தான். அதற்காக நாட்டின் நலனையும் கருதாது கருவூலத்தில் குவியும் பணத்தை கண்ணை மூடிக்கொண்டு வாரி இறைப்பது தவறுதானே! நீ பேசியது வார்த்தைக்கு வார்த்தை சத்தியமான உண்மை! எனக்கும் அதே நினைப்புத் தான் என்னால் சொல்ல முடியாது! நீயாவது சொன்னாயே என்ற மகிழ்ச்சி எனக்கு"

"உண்மை தான் மாமா! என் தந்தைக்கு இவ்வளவு தூரம் பக்தி கண்ணை மறைத்திருப்பது இங்கு வந்த பிறகு தான் எனக்குத் தெரிகிறது."

"அது மட்டுமல்ல மன்னார்தாசா! மதுரை அரசுக்கும் நமக்கும் எவ்வளவு காலமாகத் தான் இப்படி பகை நீடித்துக் கொண்டிருப்பது? அது விஷயமாகவும் நீ மன்னரிடம் பேசியது, இங்குள்ள நமது மக்களின் ஏகோபித்த குரலாகவும் எனக்குத் தெரிந்தது."

"வீணாக பகையை வளர்த்துக் கொள்வதற்கு பதில், இரண்டு அரசுகளும் இணக்கமாக செயல்பட்டால் இந்த தமிழகம் முழுவதுமே அமைதி தவழும் என்ற எண்ணம் தான் மாமா அதற்கு காரணம்."

"சரியான வார்த்தை மருமகனே! நூற்றில் அல்ல கோடியில் ஒரு சொல்! இந்த எண்ணமும் எனக்குள் இருந்து தான் வருகிறது. ஆனால் மன்னரிடம் சொல்ல முடியவில்லை உன்னால் தான் சொல்ல முடியும்! உன் தந்தையிடம் அடிக்கடி இதனைப் பற்றி நீ விவாதித்து அவர் மனதை எப்படியாவது மாற்ற முயன்று பார் மன்னார் தாசா!"

"கண்டிப்பாக! இந்த முடிவை நான் எப்போதோ எடுத்து விட்டேன்"

இதைக் கேட்டவுடன் ரங்கப்ப நாயக்கனுக்கு இனிப்பாக இருந்தது. அவனுக்குத் தெரியும் மன்னன் விஜய ராகவ நாயக்கனுக்கு ஆண்டவன் மீது பக்தியும், சாஸ்திரங்களின் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும், மதுரை அரசின் மீது அளவிட முடியாத பகையும் அவனது ரத்தத்தில் ஊறிக் கிடக்கிறது என்று! இளவரசன் அதற்கு எதிராக அடிக்கடி பேசினால் இருவருக்குள்ளும் கருத்து வேற்றுமை பிறக்கும். அதுவளர்ந்து இளவரசனையே மன்னன் வெறுக்கும்படியான சூழ்நிலை உருவாகும். அதன் பிறகு அவனுக்கு முடிசூட்டும் எண்ணத்தையே மன்னன் கைவிட நேரிடும் என்று மனதிற்குள் ஆனந்தப்பட்டான்.

"அமைச்சரின் மகள் மதுரவாணி இளம் வயதில் உன்னுடன் கல்வி கற்றவள் இல்லையா? அவளைப் 'பார்த்துப் பேசினாயா?" என்று மிகவும் சாமர்த்தியமாக பேச்சைத் துவக்கினான்.

"ஆரத்தி எடுக்கும் பொழுது பார்த்தேன் மாமா! அவள் யார் என்று அடையாளம் தெரியவில்லை. பிறகு அரண்மனை செல்லும் வழியில் கேட்டுத் தெரிந்து கொண்டு நலம் விசாரித்தேன்."

"அவள் உன்னிடம் எதுவும் பேசவில்லையா?"

இளவரசனுக்கு அவள் 'என்னை மறந்து விட்டீர் களா' என்று கேட்ட வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. அதைப் பற்றி தளவாயிடம் அவன் சொல்ல விரும்ப வில்லை.

"இல்லை மாமா. நலமாக இருக்கிறாயா? என்று கேட்டேன். தலையை மட்டும் ஆட்டினாள். வேறு ஒன்றும் பேசவில்லை! ஏன் கேட்கிறீர்கள்?"

"சும்மா தான் கேட்டேன். நீ சற்று ஓய்வெடுத்துக் கொள் எனக்கு வேறு சில பணிகள் இருக்கின்றன. வரட்டுமா?"

இளவரசன் பொய் சொல்கிறானா? என் கண்கள் கண்ட காட்சி தவறா? எதற்கும் இருவரையும் தொடர்ந்து கவனிக்க வேண்டும் என்று எண்ணியவாறு தளவாய் அங்கிருந்து நகர்ந்தான்.

மன்னார்தாசனும், அக்கிராஜூவும் அரண்மனைக் குள் நுழைந்து, ஒரு தனி அறையில் அமர்ந்து பேசத் தொடங்கினர்,

"மன்னார்தாசா, உன்னிடம் ஒன்று சொல்ல வேண் டும். தவறாக எடுத்துக் கொள்ள மாட்டாயே?" என்றான் அக்கிராஜூ.

''என் உயிர்த்தோழன் நீ! நீ எது சொன்னாலும் அது என்னுடைய நலனுக்காகத்தான் இருக்கும்! தாராளமாக சொல் ராஜு.''

''உன் மாமா தளவாய் ரங்கப்ப நாயக்கனிடம் நீ மிகவும் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். தந்திரத்தில் நரியை மிஞ்சுபவர் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதில் அவருக்கு ஒப்பார் யாரும் இல்லை.''

''நான் இளம் வயதாக இருக்கும் பொழுது என் அன்னையார் இதே தளவாயைப் பற்றி சொல்லி இருக்கிறார். ஆனால் இப்பொழுது பார்க்கும் பொழுது என் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார்!''

''அவ்வளவும் நடிப்பு நண்பா! அவருக்கு உன் தங்கை சந்திரவதனாவை தனது மகன் அச்சுதப்பனுக்கு மணம் முடித்துக் கொடுத்து, இந்த நாட்டையே அபகரிக்கும் எண்ணம் இருக்கிறது.''

''சேச்சே! அப்படி இருக்காது ராஜு! அப்படி ஒரு எண்ணம் இருந்தால் என் தந்தை வெளியூரில் மாப்பிள்ளை தேடுவதை தவிர்த்திருக்க மாட்டாரா?''

''சரி. அதைவிடு அச்சுதப்பன் எங்கே சென்றிருக்கிறான் என்று நினைக்கிறாய்?''

''புலியைக் கொல்வதற்காக தென்னந்தோப்பிற்குத் தானே சென்றிருக்கிறான்?''

''புலித் தொல்லை சுற்றுவட்டாரங்களில் இருப்பது உண்மை! ஆனால் இவன் தென்னந்தோப்பைத் தேடி சென்றது புலியை கொல்வதற்காக அல்ல! புளித்த கள்ளை குடிப்பதற்காக!''

''நிஜமாகவா? அச்சுதப்பன் கள் குடிப்பானா?''

"குடிப்பான் என்பதைவிட மிதப்பான் என்பதே பொருந்தும். கள்ளைக் குடித்து விட்டு, 'இந்நாட்டு இளவரசியை நான்தான் மணக்கப் போகிறேன்' என்று அடிக்கடி உளறுவதாக நான் கேள்விப் படுகிறேன்."

"சொன்னால் சொல்லி விட்டு போகட்டும். என் தங்கை மிகவும் அழகாக இருக்கிறாள். சிறு வயதில் இருந்தே புத்தி கூர்மை மிகுந்தவள். அவளுக்கேற்ற கணவனாக ஒருவன் அமைய வேண்டும் என்பதுதான் என் ஆசை! அதே நேரம் அவள் மனதில் யார் மீதாவது காதல் ஏற்பட்டால், அவள் இஷ்டப்படியே மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் என்பதே என் விருப்பம்."

'அதற்காக அச்சுதப்பன் மேல் அவள் ஆசைப் பட்டால்?"

"நீ சொன்ன மாதிரி அவன் நடத்தை மோசமாக இருந்தால், என் தங்கையிடம் சொல்லிப் பார்ப்பேன். அதையும் மீறி அவன் மீது அவள் ஆசைப்பட்டால், அவள் இஷ்டப்படி விட்டுவிட வேண்டியதுதான்."

"ஒரு பேச்சுக்கு கேட்கிறேன். கோபப்பட மாட்டாயே! உன் தங்கை ஒருவேளை மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கன் மேல் காதல் கொண்டால், அதையும் நீ நிறைவேற்றி வைப்பாயா?"

இளவரசன் சற்று யோசித்து விட்டு, "மதுரை மன்னன் நல்லவனாக, என் தங்கைக்கு ஏற்ற மணாளனாக இருந்தால் நிச்சயம் அவர்கள் காதலை நிறைவேற்ற உதவி அளிப்பேன். இது ஒரு வகையில் எனக்கு மகிழ்ச்சியான விஷயம். இதனாலாவது இரு அரசுகளும் அமைதியாக இருக்காதா என்று!" என்றான்.

"மன்னார்தாசா, என்னிடம் பேசியது மாதிரி உன் தந்தையிடப் பேசி விடாதே! அது மட்டுமல்ல தளவாய்

கூறியது மாதிரி மன்னனின் சமயப் பற்று விஷயத்திலும் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்பதுபோல் பேசவே பேசாதே!"

"என்னால் அடக்க முடியவில்லை சில அனாவசிய நிகழ்ச்சிகளைப் பார்க்கும் பொழுது! ஆனால் நான் காலையில் பேசியதில் ஒன்றும் தவறு இல்லையே!"

"உன்னைப் பொறுத்த மட்டில் தவறு இல்லை. ஆனால் மன்னனுக்கும், அமைச்சருக்கும் எவ்வளவு அதிர்ச்சி அளித்தது என்று அவர்கள் பேச்சிலிருந்து புரிய வில்லையா?"

"அப்படியானால் அநியாயத்தை தட்டிக் கேட்க கூடாது என்கிறாயா?"

"கேள்! கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை ஆனால் அடுத்தவர் மனம்புண்படாமல், அவர்கள் ஏற்றுக் கொள்ளும் முறையில் இதமாகச் சொல்!"

"அப்படி யார் மனதை புண்படுத்திவிட்டேன் நண்பா?"

"உணவுக் கூடத்தில் நீ பேசியது பலர் முகங்களை சுளிக்க வைத்தது. அது மட்டுமில்லை. உன்னை முதன் முதலாக வரவேற்கும் பொழுது, புனித நீரால் உன் கால களைக் கழுவும்போது தடுத்து விட்டாயாமே! அக்கணத் தில் சொம்பை எடுத்துக் கால் அலம்புவது போல், புனித நீர் அடங்கிய குடத்தினை நீயே எடுத்து, உனது கால்களில் ஊற்றிக் கொண்டாயாமே? நமது நாட்டிலுள்ள எத்தனை புண்ணிய தீர்த்தங்களில் இருந்து அந்த நீர் கொண்டு வரப்பட்டது தெரியுமா?"

"புனித நீர், புண்ணிய தீர்த்தம் என்பதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை நண்பா! எல்லா நீரும் ஒன்று தான்."

"நம்பிக்கை இல்லாமலா வடநாட்டில் கும்பமேளா விற்கும், நம் நாட்டில் மகாமகத்திற்கும், கோடிக் கணக் கான மக்கள் கூடுகிறார்கள் ?"

"உனக்கு வேமணா பற்றிய நிகழ்ச்சி ஒன்று கூறு கிறேன், கேள் வேமணாவை அவர் அண்ணிதான் தன் மகனைப் போல வளர்த்து வந்தாராம். அவர் ஒரு தடவை காசி வரை சென்று அனைத்து புனித நதிகளிலும், தீர்த்தங்களிலும் நீராடிவரக் கிளம்பிய பொழுது, வேமணா செப்புக்காசு ஒன்றை எடுத்து, ஒரு துணியில் முடிந்து தன் அண்ணியாரிடம் கொடுத்து, 'அண்ணி, இதனைத் தாங்கள் நீராடும் அனைத்து புண்ணிய தீர்த்தங் களிலும் மூழ்கி எடுத்துக் கொண்டு வாருங்கள்' என்று சொன்னாராம்.

அவர் அண்ணியும் பல மாதங்கள் கழித்து திரும்பி வந்து அந்த் துணி முடிச்சை வேமணாவிடம் நீட்டி, 'வேமணா ! நீ சொன்ன மாதிரியே இதனை அனைத்து புண்ணிய தீர்த்தங்களிலும் மூழ்கி எடுத்துக் கொண்டு வந்துவிட்டேன்' என்றாராம். வேமணா அதனை வாங்கி, முடிச்சைப் பிரித்து செப்புக்காசை வெளியே எடுத்து அண்ணியிடம் காட்டிச் சொன்னாராம் 'பார்த்தீர்களா அண்ணி ! அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களிலும் மூழ்கி வந்ததால் இந்த செப்புக்காசு தங்கமாக மாறவில்லையே ! இல்லை— வேறு எந்த மாற்றமும் அடையவில்லையே ! பிறகு உங்களுக்கு மட்டும் என்ன மாற்றம் நிகழ்ந்துவிடப் போகிறது' என்று ! நாம் பயன்படுத்தும் நீர் சுத்தமாக இருக்க வேண்டும். அவ்வளவுதான் ! புனிதமாவது, புண்ணியமாவது ! நீ வேமணாவின் கவிதைகளைப் படிக்க வேண்டும் நண்பா !"

"காலம் காலமாக ஊறிக்கிடக்கும் பழக்கம் நீ சொல்லும் ஒரு வார்த்தையில் மாறப்போவதில்லை. மாறாக மனக்கசப்பு ஏற்படலாம் ! மாற்ற முயற்சி செய் !

அதே சமயம் மனக்கசப்பு ஏற்பட வழி வகுத்து விடாதே!"

"முயற்சிக்கிறேன் நண்பா!"

"மதுரவாணியைப் பற்றி துளவாய் உன்னிடம் கேட்டாரே? என்ன விஷயம்? அவள் ஏதாவது உன்னிடம் பேசினாளா?"

அதைப்பற்றி தன் நண்பனிடம் சொல்லலாம் என்று நினைத்தான். இருந்தாலும் மணமாகாத பெண்ணைப் பற்றி விவாதிக்க அவன் மனம் அப்போது விழைய வில்லை. நண்பனிடம் நிதானமாகப் பேசிக் கொள்ள லாம் என எண்ணினான்.

"ஒன்றும் பேசவில்லை ராஜு."

"பிறகு எதற்கு துருவித்துருவிக் கேட்டார் என்று தெரியவில்லையே? நிச்சயம் ஏதாவது காரணம் இருக்கும்! எதற்கும் அவரிடம் எந்த விஷயத்திலும் ஜாக்கிரதை யாக இரு மன்னார்தாசா!"

அரண்மனையின் வேறு ஒரு பகுதியில் மன்னன் விஜயராகவ நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சி தரும் தனிமையில் அமர்ந்திருந்தனர்.

"மன்னவா, நெடு நேரமாக சிந்தனையில் மூழ்கி இருக்கிறீர்களே! மனதில் ஏதாவது சஞ்சலமா?" என்றார் அமைச்சர்.

மன்னர் பெருமூச்சு ஒன்றை உதிர்த்து விட்டு, "காலையில் என் மகன் என்னுடன் விவாதித்ததை நினைத்து வருத்தமாக இருக்கிறது அமைச்சரே! இவனை விஜயநகரத்திற்கு அனுப்பி வைத்தது தவறோ என்று கூட என் மனம் இடிக்கிறது. கடவுள் மறுப்பு கொள்கைகளைக் கொண்டிருக்கிறானோ என்று எனக்கு பயமாக இருக் கிறது!" என்றான்.

''வருத்தப்படாதீர்கள் மன்னவா! இளம் வயதில் இறைவனை இகழ்ந்து பேசுபவர்கள் முதுமை வயதில் இறைவன் காலடியே கதி என்று கிடப்பார்கள். இளவரசருக்கு இளம் வயது. அனுபவம் இல்லை. அப்படித்தான் பேசுவார். அனுபவமும், வயதும் ஏறஏற எல்லாம் சரியாகிவிடும்."

''என்னவோ அமைச்சரே, என் அப்பன் மன்னார்குடி ராஜகோபால சுவாமிதான் அவனை நல்ல வழிக்கு கொண்டு வரவேண்டும். நமது குலகுரு குமாரதாத்தாச்சாரியர் என்றைக்கு இங்கு வருகிறாராம்?''

''இன்னும் பத்து நாட்களுக்குள் வந்து சேர்ந்து விடுவதாக செய்தி அனுப்பி இருக்கிறார் அரசே!''

"குருவிடம் அழைத்துச் சென்று அவரிடம் அறிவுரை பெற்றானேயானால் எல்லாம் சரியாகிவிடும். இவ்வாண்டு அவருக்குச் செய்யும் மரியாதையை மன்னார்தாசனை முன்னிறுத்தி செய்ய எண்ணி உள்ளேன். அவர் ஆசி கிடைத்தால் போதும், மன்னார்தாசன் மாறி விடுவான்.''

ஆனால் அந்த நிகழ்ச்சி நடக்கும் பொழுதுதான் எத்தனை விதமான மாற்றங்கள்— எத்தனை பேருக்கு நிகழ்ந்து விட்டன!

அன்று இரவு அமைச்சர் கோவிந்த தீட்சிதர் வீட்டிற்கு வந்தவுடன் மதுரவாணி அவரிடம் ஓடிவந்து பேச்சை ஆரம்பித்தாள்.

அடுத்த வினாடி அமைச்சர் அவளிடம் சீறி விழத் தொடங்கினார்.

மதுரவாணிக்கு அன்று முழுவதும் மகிழ்ச்சியாக இருந்தது. தான் நினைத்தபடி ஒவ்வொரு காரியமும் நடைபெற்றது குறித்து அவள் மனம் ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருந்தது.

அரண்மனையின் வாசலில் அழகிய புரவிகள் பிணைக்கப்பட்ட ரதத்தில் இருந்து இறங்கிய இளவரசன் மன்னார்தாசனை பார்த்தவுடன் அவள் இதயம் எவ்வளவு பூரிப்பு அடைந்தது. மிகச் சிறிய வயதில் அவனை பார்த்ததால், அந்த முகத்தையே எண்ணிக் கற்பனையில் இதுநாள் வரையில் மிதந்து கொண்டிருந்த மதுரவாணி, இவ்வளவு வாட்டசாட்டமான வாலிபனாக, அரும்பு மீசையும், குறும்பு பார்வையும், அழகிய கன்னங்களும், சிவந்த உதடுகளும், தலை நிறைய கரிய சுருள் முடியும், முகம் நிறைய முத்துப்பல் புன்னகையுமாக இருப்பான் அவன் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை !

தொடர்ந்து அவன் தன்னை லட்சியம் செய்யாமல் மற்றவர்களுடன்பேசிமகிழ்ந்தது அவளுக்குஏமாற்றத்தைத் தந்தது. பிறகு ஒவ்வொருவராக அவன் நினைவுபடுத்திக் கொண்டு, வலியச் சென்று பேசிய பொழுது, அடுத்து தன்னைத்தான் நினைவு கூர்வான் என்று எவ்வளவு எதிர்பார்த்தாள் ! அதிலும் அவன் தன்னுடைய தந்தையைப் பார்த்து நலம் விசாரித்து, தனது தமையன் மார்களை நினைவு படுத்திக் கேட்ட பொழுது, இதோ அடுத்து என்னைத்தான் கேட்கப் போகிறான் 'குறும்புக்காரி மதுரவாணி எப்படி இருக்கிறாள்? அழகிய பெண்ணாகவளர்ந்திருக்கிறாளா? இங்குவந்திருக்கிறாளா?

என்றெல்லாம் கேட்பான் என்று எப்படி எதிர்பார்த்து இருந்தாள்.

ஆனால் அவனோ அதைப் பற்றிய நினைவே இல்லாது அடுத்த நபரிடம் சென்ற பொழுது எவ்வளவு துடித்துப் போனாள்! இதயமே வெடித்து விட்டது போல் மனம் உடைந்து எவ்வளவு வருந்தினாள்.

இனி அவன் கவனத்தை கவர்ந்தே ஆக வேண்டும் என்ற துணிச்சல் அதனால் தானே அவளுக்கு ஏற்பட்டது. ஆரத்தி எடுக்கும் பொழுது! "என்னை மறந்து விட்டீர்களா இளவரசே!" என்று அவள் கேட்டதும் அவன் எவ்வளவு அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான்!

அதுமட்டுமல்ல! அதற்குப் பிறகு அவள் ஆரத்தி எடுத்து முடித்து இளவரசி சந்திரவதனாவின் அருகில் வந்து நின்ற பிறகும் கூட எத்தனை முறை அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

இந்தக் காட்சி மட்டும் அவள் மனதுக்குள் மாறி மாறி வந்து அவளை மகிழ்ச்சிப்படுத்திக்கொண்டிருந்தது. ஆரத்தி எடுக்கும் போது அவள் பார்த்ததையும், அதற்குப் பிறகு அவன் பார்த்ததையும் மட்டும் அவள் மனம் திரும்பத் திரும்ப வரவழைத்து ஆனந்தப்பட்டுக் கொண்டு இருந்தது.

என்ன அழகான கண்கள்! அந்தப் பார்வையில்தான் எத்தனை வசீகரம்! விழிகளில்தான் எத்தனை கூர்மை! அதற்குள்தான் எத்தனை குழப்பங்கள்!

அதிர்ச்சி அடைந்திருப்பாரோ? திகில் வந்திருக்குமோ? ஒரு வேளை கன்னிப்பெண் ஒருத்தி திடீர் என்று கேட்டதால் மனதுக்குள் ஆனந்தம் கொண்டிருப்பாரோ? ஆவல் கிளர்ந்திருக்குமோ?

அதனால்தான் அடக்க முடியாமல் அரண்மனைக்குள் நுழையும் பொழுது என்னைச் சுட்டிக் காட்டி ''யார்

இந்தப் பெண்?" என்று கேட்டு விட்டார். இனி உன்னை மறப்பாரா ? நிச்சயம் மாட்டார்.

என்னைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆசை அவருக்குள் வந்திருக்குமோ ? ''என்ன மதுரவாணி இப்படிப் பண்ணி விட்டாய். நாலுபேர் எதிரில் இப்படிக் கேட்கலாமா ? இளம் வயதில் இருந்த அதே குறும்புகள் இன்னமும் உன்னிடமிருந்து மறையவில்லையே ! உன் காதை பிடித்து திருக வேண்டும்" என்று கேலியாகச் சொல்வாரோ ?

எப்படிச் சொல்வார் ? எங்கே சொல்வார் ? நான் அதற்குப் பிறகு அவர் அருகிலேயே இருக்கவில்லையே ! நான் வீட்டிற்கு கிளம்பி வந்தது சந்திரவதனாவிற்கே தெரியாதே !

அவர் என்னைத் தேடிப் பார்த்திருப்பாரோ? இவ்வளவு தூரம் வந்த மதுரவாணியை திடீர் என்று எங்கே காணவில்லை என்று யாரிடமாவது கேட்டிருப்பாரா ? இல்லை, கண்களாலாவது சுழற்றிப் பார்த்திருப்பாரா?

சே ! இன்னும் சிறிது நேரம் அவரருகே இருக்க விடாமல் என் தந்தை இப்படித் துரத்தி விட்டாரே ! தந்தை மேல் எரிச்சலாக இருந்தது மதுரவாணிக்கு !

திரும்பத் திரும்ப இதையே எண்ணிக் கொண்டிருப்பது அவளுக்குள் சற்று எரிச்சலாகவும் இருந்தது. வேறு எதையாவது நினைத்தால் கூட, குரங்கு மனம் மறுபடியும் அந்த இடத்திற்குத்தான் தாவிக் கொண்டிருந்தது.

தெலுங்கு, சமஸ்கிருத இலக்கிய ஏடுகளை எடுத்துப் புரட்டினாள். இரண்டு வரி இலக்கியத்தில் படியும். மூன்றாவது வரியினைப் படிக்கும் போது, "அவர் ஏன் என்னை அப்படிப் பார்த்தார். அதில் காதல் கொஞ்ச

மாவது கலந்திருக்காது" என்று அவள் மனம் எண்ணும். அதன் பிறகு கையில் ஏடுகள் விரிந்து கிடக்க, மனம் சிறகடித்து மன்னார்தாசனை நோக்கி ஓடிவிடும்!

இனி தனிமையில் உட்கார்ந்தால் பைத்தியம் பிடித்து விடும் என்ற நினைப்பில் சமையலறைக்குச் சென்று தன் தாயுடன் கூடமாட உதவிகள் செய்ய எத்தனித்தாள்.

அடுப்பை சற்று நேரம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவள் தாய் பக்கத்து அறைக்குள் சென்றாள். அடுப்பில் எரியும் விறகுக் கட்டைகளை சரி செய்யும் பொழுது மதுரவாணியின் நினைவுகள் மறுபடியும் மன்னார்தாசனை நோக்கி ஓடின.

"நலமாக இருக்கிறாயா மதுரவாணி" என்று கேட்கும்பொழுது, அவர் சிரித்தாரே! சிரிக்கும்போது பேசினாரா இல்லை பேசும்பொழுது சிரித்தாரா? சிரித்தால் கன்னத்தில் குழி விழுந்தது மாதிரித் தெரிந்தது. சரியாக கவனிக்கவில்லை. அடுத்த தடவை அவர் சிரிக்கும் பொழுது அதனை நன்றாகக் கவனிக்க வேண்டும்.

"ஐயோ! மதுரவாணி எங்கேயடி கவனமாக இருக்கிறாய்?" என்றவாறு அவள் தாய் ஓடிவந்து அவள் காலருகே இருந்த சேலையின் மீது காலை வைத்து அழுத்தினாள்.

அதற்குப் பிறகு தான் மதுரவாணிக்கே அவள் சேலையில் தீப்பற்றிய உணர்வே வந்தது. அடுப்பில் இருந்த தீ அவள் கவனக்குறைவாக அமர்ந்து இருந்ததால் அவள் சேலை படர்ந்து விறகுகள் அருகே இருந்ததால் காற்றில் தலை சாய்ந்து தீயின் மேல் விழுந்ததையோ தீப்பற்றி எரிய ஆரம்பித்ததையோ அவள் கவனிக்கவே இல்லை

அவள் தாய் ஓடி வந்து அணைத்த பிறகுதான் சேலையில் பட்ட தீ அவள் காலைக் கூட லேசாகப் பதம்

பார்த்திருப்பது புரிந்தது அதற்குப் பிறகுதான் தீப்பட்ட இடம் எரிய ஆரம்பித்தது.

"என்ன பெண்ணடி நீ! சேலையில் தீப்பற்றிய உணர்வு கூடவா உனக்கு இல்லை? என்ன ஞாபகத்திலடி இருக்கிறாய்?" என்று சற்றுக் கோபமும், பரிவும் கலந்து கேட்டாள் நாகமாம்பாள்!

சற்றுத் தடுமாறித் தன்னிலைக்கு வந்த மதுரவாணி, "ஆங்... வந்தும்மா... கேதாரகௌளம் ராகத்தில் நேற்று அண்ணனிடம் ஒரு கீர்த்தனை கற்றுக் கொண்டேனே; அதில் சரணத்தில் சட்ஷமம் இடறிக் கொண்டே இருக்கிறது. அதை எப்படிக்கொண்டு வருவது என்று எண்ணிக் கொண்டு இருந்தேன். தீப்பற்றியது தெரியவில்லை," என்று சமாளித்தாள்.

"சமையல் அறைக்குள் வந்து சங்கீதத்தையே நினைத்துக் கொண்டு இருந்தால் உனக்குச் சமையலும் வராது. சங்கீதமும் வராது. நீ ஒன்றும் எனக்கு உதவி செய்ய வேண்டாம். போ. உன்னறைக்குள் போய் பாட்டுப்பாடு" என்று எரிச்சலுடன்கூறியவாறு பசு நெய் எடுத்து வந்து தீப்பட்ட இடத்தின் மேல் தடவினாள்.

"நான் மட்டும் சீக்கிரம் வராது போயிருந்தால் உன் சேலையில் பற்றிய தீ முழுக்கப் பரவி... அம்மம்மா... பட்டீஸ்வரம் அம்மன்தான் உனக்கு அப்படி ஒரு நிலை வராது தடுத்திருக்கிறாள். வருகிற வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு அபிஷேகம் செய்து, சிவப்புப் பட்டாடை அணிவித்தால் என் மனம் நிம்மதியாகும்."

மதுரவாணி மறுபடியும் தன்னுடைய அறைக்குள் வந்தாள். மனமும் எரிச்சலாக இருந்தது. தீப்பட்டதால் காலும் எரிச்சலாக இருந்தது. மறுபடியும் இலக்கிய ஏடுகளை எடுத்துப் புரட்டத் தொடங்கினாள்.

இப்படி மாலை வரை அவளுக்குப் பொழுது கழிந்தது.

இருட்டி நீண்ட நேரத்திற்குப் பிறகு அவள் தந்தை யான அமைச்சர் கோவிந்த திட்சிதர் வீட்டிற்குள் நுழைந் தார். மதுரவாணியும், அவள் தாயும் அவரருகே வந்தார்கள்

''இன்று மதியம் கூடத் தாங்கள் உணவருந்த வர வில்லையே? அரண்மனையில் அலுவல்கள் அதிகமா?'' என்றாள் நாகமாம்பாள்.

''இளவரசர் எப்படி இருக்கிறார் தந்தையே?'' என்றாள் மதுரவாணி.

''உனக்கு எதற்கு அதைப் பற்றிய அக்கறை? போ. இங்கிருந்து உன் அறைக்குப் போய் வியாகரணம் படி!'' என்று சீறினார் அமைச்சர்.

"எதற்கு வந்ததும் வராததுமாக குழந்தையைப் பார்த்து இவ்வளவு கடினமான வார்த்தைகளை வீசு கிறீர்கள்? அவள் அப்படி என்ன தவறாகக் கேட்டு விட்டாள்?'' என்று பரிந்து பேசினாள் நாகமாம்பாள்.

"இளவரசன் எக்கேடு கெட்டால் இவளுக்கென்ன? இவளுக்கெதற்கு அவனைப்பற்றிய அக்கறை?" மறுபடியும் சினத்துடன் கேட்டார்.

"இன்றைக்கு உங்களுக்கு என்ன ஆயிற்று? ஏன் இப்படிக் கோபப்படுகிறீர்கள்? இளவரசன் இவளுடன் இளம் வயதில் ஒன்றாக சேர்ந்து தங்களிடம் அட்சர அப்பியாசம் பயின்றவன் இல்லையா? நீண்ட நாட்கள் கழிந்துத் தனது கல்விப் பயிற்சி முடிந்து இன்று தான் திரும்பி வந்திருக்கிறான். அவனுடைய ஆரம்பக் கால ஆசான் என்ற முறையில் அவனது அறிவார்ந்த நிலை எப்படி இருக்கிறது என்று தங்களுக்குத் தானே தெரியும். அதனால் கேட்டிருக்கிறாள்! அதிலென்ன தப்பு?"

''அரசனோ, அரசன் சம்பந்தப்பட்ட அரச காரியங்களைப பற்றியோ, அந்தணர் குலப் பெண் அறிந்து கொள்ள வேண்டிய அவசியமே இல்லை. அவன் எப்படி இருந்தால் இவளுக்கென்ன ? போ. போய்ப் படி ! இல்லாவிடில் போய்ப் படு!" என்றாள் மதுரவாணியைப் பார்த்து.

மதுரவாணி முகம் சுண்டி போய், தன் அறைக்குச் சென்றாள் அங்கிருந்த கட்டிலில் போய் .படுத்தவாறு வியாகரண ஏடுகளை எடுத்துப் பிரிக்க ஆரம்பித்தாள். மனமும், செவியும் பக்கத்து அறையில் தாயும், தந்தையும் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கவனிக்க ஆரம்பித்தன

"இருந்தாலும் குழந்தையை நீங்கள் இப்படி சினந்து பேசக்கூடாது. பாவம். அவள் முகமே வாடி விட்டது!" என்றாள் நாகமாம்பாள்.

''காலையில் ஆரத்தி எடுத்து முடித்தவுடன் உடனே வீடு திரும்பி விடு என்று சொன்னேன். அதை மறுத்து விட்டு இளவரசியுடன் சேர்ந்து அத்தனை பெரிய கூட்டத்தின் இடையில் அரண்மனைக்குள் நுழைகிறாள். அப்பொழுதே எனக்கு கோபம் !"

"பாவம் இளம் வயது. அரண்மனையின் கோலாகலமான ஆட்ட பாட்டங்களைக் காண அவளுக்கும் ஆசை இருந்திருக்கும். ஒரு வேளை இளவரசி அவளைக் கட்டாயப்படுத்தி கூட்டிக்கொண்டு போயிருக்கலாம். இருந்தாலும் வயதிற்கு வந்த பெண்ணை திட்டுவதில் நீங்கள் வரம்பைக் கடக்கிறீர்கள் !"

"அவள் வரம்பு மீறவோ, அவளுக்காக வேறு யாராவது வரம்பு மீறவோ ஒரு சூழ்நிலை வந்து விடக் கூடாது என்பது தான் நாகு என் நோக்கம்.''

''சரி அது இருக்கட்டும். இளவரசன் எப்படி இருக்கிறான்? உங்களுக்கு உகந்த மரியாதை அளித்தானா? சிறு வயதில் பார்த்தபடி இருக்கிறானா?"

''மரியாதை செய்ததில் மாற்றம் இல்லை நாகு! வேறு வகையில் அவனிடம் நிறைய மாற்றம் தெரிகிறது! அதுதான் என் மனதை அரித்து கொண்டிருக்கிறது,'' என்றார் பெருமூச்சு விட்டபடி.

"தாங்கள் கவலைப்படும்படி அப்படி என்ன மாற்றம் இளவரசனிடம் தெரிகிறது.''

இதற்கான தந்தையின் பதிலை மதுரவாணியும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

"விஜய ராகவ நாயக்கனுக்கு நேர் விரோதமாக அவன் ஆகி விடுவானோ என்றும் அச்சமாக இருக்கிறது. இன்று இவன் பேசிய பேச்சுக்களையும், விவாதித்த விதத்தினையும் பார்க்கும் பொழுது இவன் நாளை பட்டம் ஏற்று ஆட்சி நடத்தி அது பலருக்கு பாதகமாக ஆகி விடுமோ என்று கலக்கமாகவும் இருக்கிறது நாகு."

''அப்படி என்ன பேசினான்?"

கோவிந்த திட்சிதர் காலையில் நடந்த சம்பவங்களை விளக்கமாகச் சொல்லி விட்டு, "கடவுள் மீது பக்தியும், சாஸ்திரங்களின் மீது நம்பிக்கையும் உள்ள ஒருவன் ஒழுக்கமாக இருப்பான். இந்த நம்பிக்கை இல்லாதவன் பஞ்சமா பாதங்களுக்கும் பயப்பட மாட்டான். அதனால் தான் எனக்கு கலக்கமாக இருக்கிறது நாகு! நமது மகள் மதுரவாணியைக் கூட இனி இளவரசியைத் தேடி அடிக்கடி அந்தப்புரத்திற்குள் செல்ல வேண்டாம் என்று சொல்லி விடு!" என்றார்.

மதுரவாணிக்கு இதைக் கேட்டவுடன் ஒரு பக்கம் கலக்கமாக இருந்தாலும், மற்றொரு பக்கம் மகிழ்ச்சியும் பிறந்தது.

மன்னார்தாசன் மன்னருடனும், அமைச்சருடனும் இவ்வளவு விவாதம் புரிபவனாக இருந்தால் நிறைய மனத் துணிவு கொண்டவனாக உருவாகி இருக்கிறான் என்பது நிச்சயம்! இப்படிப்பட்டவன் என்னைக் காதலித்தால் எந்தப்பாடு பட்டாலும் திருமணம் செய்யாமல் விட மாட்டான்.

அவன் என்னைக் காதலிக்க வேண்டும்! என் மனம் அவனுக்குத் தெரிய வேண்டும். அதற்கு அவனை அடிக்கடி சந்திக்க வேண்டும்! அவனை எங்கே காண்பது? அரண்மனைக்குள் அவள் செல்ல முடியாது! அதனால் அந்தப்புரத்திற்குள் அடிக்கடி சென்றால்தான், இளவரசனை அகஸ்மாத்தாக சந்திக்கும் அனுகூலம் ஏற்படும்! தந்தையோ இதற்கும் அல்லவா தடை விதிக்கிறார்.

இரண்டு நாட்கள் கழித்து கோவிந்த தீட்சிதர் சமஸ்கிருத பாடசாலையினரின் அழைப்புக்கு இணங்க கும்பகோணம் வரை சென்றிருந்தார். மறுநாள் தான் வர முடியும் என்று சொல்லி இருந்தார்.

இந்தத் தருணத்தை நழுவ விடாது மதுரவாணி தாயிடம் கெஞ்சி அனுமதி வாங்கி விட்டு, அந்தப்புரத்திற்குள் நுழைந்தாள்.

இளவரசி சந்திரவதனா இவளைப் பார்த்தவுடன் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள்.

''என்னடி வாணி! உடல் நலம் சரியில்லையா? மூன்று நாட்களாக உன்னைப் பார்க்கவே முடியவில்லையே?'' என்றாள் ஏக்கத்துடன்.

''நீயும் என்னை அடியோடு மறந்து விட்டாய்! உன் அண்ணன் வந்த மகிழ்ச்சியில் மதுரவாணி என்று ஒரு தோழி இருப்பதையே மறந்து விட்டாயே! என்னைப் பார்த்தப் பிறகு தான் என் நினைப்பே உனக்கு வருகிறது'' என்றாள் பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு.

"இல்லையடி! இன்று தான் உன் வீட்டிற்கு சேடி ஒருத்தியை அனுப்பி அழைத்து வரச் சொல்ல இருந்தேன். அதற்குள் நீயே வந்து விட்டாய்! ஏன் இத்தனை நாட்கள் வரவில்லை?"

"கன்னிப்பெண் ஒருத்தி அடிக்கடி அந்தப்புரத்திற்குள் சென்று வருவது சரியல்ல என்று என் தந்தை கோபிக்கிறார்!"

"இங்கு உன்னை யாரும் கடித்து தின்றுவிட மாட்டார்கள் என்று சொல். ரொம்பவும் கண்டிப்பு காட்டினால் என் தந்தையிடம் சொல்லி தினமும் நீ இங்கு வர வேண்டும் என்று கட்டளையிட சொல்லட்டுமா?"

"வேண்டாம். அது வேறு விதமான பிரச்சனைகளை உருவாக்கும். அதற்கு பதில் தினமும் ஒரு பணிப் பெண்ணை என் வீட்டிற்கு அனுப்பி ஏதாவது அவசர வேலை இருப்பதாக சொல்லி என்னை அழைத்து வரச் செய் போதும். என் தந்தை மறுக்க மாட்டார்."

அதன்படி இளவரசியும் செய்ய, மதுரவாணி தினமும் அந்தப்புரத்திற்குள் சென்று சந்திரவதனாவுடன் அளவளாவி மகிழ்ந்தாள் அதே நேரம் இளவரசன் மன்னார்தாசன் தங்கையைப் பார்க்க வரமாட்டானா என்ற ஏக்கமும் இருந்தது! ஆனால் ஒரு நாள் கூட இளவரசன் அங்கு வரவில்லை. அந்தப்புரத்திற்குள் செல்லும் வழியில் அகஸ்மாத்தாகக் கூட அவனை சந்திக்கவும் இல்லை. மதுரவாணிக்கு ஏக்கமாக இருந்தது. சாதுரியமாக சந்திரவதனாவிடம் தெரிந்து கொள்ள முயன்றாள்.

"ஏன்டி சந்திரவதனா, உனது அண்ணன் கல்வி பயிற்சிக்காக மறுபடியும் வெளி நாட்டிற்கு சென்று விட்டாரா?" என்றாள்.

"இல்லை. இல்லை. இங்கு தான் இருக்கிறான். ஏன் அப்படி கேட்கிறாய் ?"

"பார்க்கவே முடியவில்லையே! அந்தப்புரத்தில் எந்தப் பக்கம் அவர் இருக்கிறார்?"

"அந்தப்புரத்திலேயே அவர் இல்லை."

"பிறகு வேறு எங்கு இருக்கிறார் ?"

"அவருக்கு அரச காரியங்கள் போக மீதி நேரங்களில் கவிதை, தத்துவம் என்று ஆராய்ச்சிகளில் தான் அதிக நாட்டமாம். அந்தப்புரத்தில் எந்த நேரமும் பெண்களின் ஆரவாரமும், ஓசையும் இருப்பதால், அமைதியான ஓர் இடம் வேண்டும் என்று நமது சிறிய தர்பார் மண்டபத்திற்குச் செல்லும் வழியில் உள்ள கட்டடத்திற்குச் சென்று விட்டார்."

இதைக் கேட்டவுடன் மதுரவாணிக்கு ஏமாற்றமாக இருந்தது. அரண்மனைக்குள் அவளால் அடிக்கடி செல்வதற்கு வாய்ப்பே இல்லை. அந்தப்புரத்திற்குள் அவன் வரும் வாய்ப்பும் இல்லை. என்ன செய்வது ?

மன்னார்தாசனுடன் அடிக்கடி பேசும் வாய்ப்பை எப்படி உருவாக்குவது ? பல இரவுகள் யோசித்து அந்தத் திட்டத்தினை உருவாக்கினாள் !

அடுத்த நாளே அதை நிறைவேற்ற ஆரம்பித்தாள். ஆனால் முடிவில் அவளுக்கு எத்தகைய ஏமாற்றத்தை அளித்தது !

வைகறைப் பொழுது உதயமாகி ஒரு ஜாமம் முடியும் நேரத்தில் தஞ்சை அரண்மனையின் வெளிவாசலில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சிவிகை ஒன்று வெளியே வந்து கொண்டிருந்தது.

அதன் முன்னும் பின்னும் ஆசனங்களில் அமர்ந்திருந்த இளவரசி சந்திரவதனாவும், அமைச்சரின் மகள் மதுர வாணியும் சிவிகையின் இருபுறமும் தொங்க விடப்பட்டி ருந்த திரைச்சீலைகளின் வழியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

* தஞ்சை அரண்மனைக்கு அருகே சமீபத்தில் மன்னன் விஜயராகவ நாயக்கனால் கட்டி முடிக்கப்பட்ட ராஜகோபால சுவாமி ஆலயத்தின் முன் அந்தப் பல்லக்கு இறக்கி வைக்கப்பட்டது. சந்திரவதனாவும், மதுரவாணி யும் வானில் இருந்து இறங்கி வந்த அப்சரஸ்கள் மாதிரி அழகாக நடந்து கோயிலின் உள்ளே செல்லத் தொடங் கினர்.

கோயிலின் நுழைவு வாசலில் இருந்ததூணில் அமைக் கப்பட்ட மன்னன் விஜயராகவ நாயக்கன் கைகூப்பிய நிலையில் இருக்கும் கல்லால் வடிக்கப்பட்ட சிற்பத்தினை சற்று நேரம் பார்த்தனர்.

"பார்த்தாயாடி மதுரவாணி! என் தந்தையின் முகச்சாயல் சிற்பத்தில் எவ்வளவு தத்ரூபமாக அமைந்

"The Present Rajagopalaswami temple at Tanjore was also briet by him (Vijaya Ragava Nayaka)'- The Nayaks of Tangore- V. Vriddhagirisan- Page No. 159

திருக்கிறது என்று! இதனை வடித்தெடுத்த சிற்பி உண மையிலேயே திறமை வாய்ந்தவன்தான்!" என்றாள் இள வரசி.

"அது மட்டுமல்ல. மன்னனின் வித்தியாசமான மணி மகுடத்தினையும், இடது காலில் அணிந்திருக்கும் சாகித்ய ராயா என்னும் கழலினையும் எவ்வளவு கவனமாக செதுக்கி இருக்கிறான் என்று பார்த்தாயா?" என்றாள் மதுரவாணி.

"எதையோ சொல்லவேண்டும் கோயிலுக்குள் சென்று பேசலாம் என்று கூப்பிட்டாயே மதுரவாணி! இப் பொழுது சொல்லேன்."

"இறைவனை சேவித்து விட்டு வரலாம். அதன் பிறகு சொல்கிறேன்."

இருவரும் சுவாமி சன்னதிக்கு சென்று மனம் உருக வணங்கினர். தனது திட்டம் எந்த ஒரு தடங்கலும் இன்றி நிறைவேற வேண்டும் என்று மதுரவாணி கண்ணீர் மல்கி கடவுளை வேண்டினாள்.

தோழியர் இருவரும் பிரகாரத்தை ஒட்டி அமைக்கப் பட்டிருந்த நந்தவனத்தில் வந்து உட்கார்ந்தனர்.

"இப்பொழுது சொல்லடி! என்ன பேசவேண்டும் என்று என்னை இத்தனை தூரம் கூட்டி வந்தாய்?" என்றாள் இளவரசி

"உன் தந்தை எதற்கு இங்கு இவ்வளவு பெரிய கோயிலைக் கட்டினார்?"

"இதைக் கேட்கவா இங்கு கூட்டி வந்தாய்?"

"காரணமாகத்தான் கேட்கிறேன் சொல்லேன்!"

"எங்களுக்கு குல தெய்வம் மன்னார்குடியில் குடி கொண்டிருக்கும் ராஜகோபால சுவாமிதான் என்று

உனக்குத் தெரியாதா? தினமும் மன்னார்குடி சென்று வர இயலாது என்பதால் இங்கு இந்தக் கோயிலை நிர்மாணித்தார். எங்களுடைய கோத்திரம் கூட மன்னாரு கோத்திரம்தான்.''

''*ஆமாம். தமது அரண்மனையின் ஆஸ்தானப் பெண் கவிஞரான ரங்காஜம்மா கூட அதனைப் பற்றி தனது ருக்மணி பரிணயத்தில் அழகாகப் பாடி இருக்கிறார் அல்லவா?''

**''ஆம்! 'மன்னாரு கோத்ர விபுதேந்திரனின் விஜய ராகவ சந்த்ருணி' என்று எவ்வளவு அற்புதமானவை அந்த வரிகள்! சரி இப்பொழுது அதற்கென்ன?''

''வைஷ்ணவக் கோயில்களுக்கு மட்டும் உனது தந்தை முக்கியத்துவம் கொடுக்கிறாரே! சிவன் கோயில்களைப் பற்றி அக்கறைப்பட மாட்டேன் என்கிறாரே!''

''இல்லையே! சிவன் கோயில்களுக்கும் தானம் அளிக்கத்தான் செய்கிறார். ஜமார்த்தர்களாகிய உனது தந்தை செய்யும் சிவகாரியங்களுக்கும் அவர் தடை விதித்ததில்லையே!''

''அப்படி இருந்தும் தஞ்சையில் உள்ள பிரஹதீஸ்வரர் கோயிலுக்கு நீ ஒரு நாளாவது சென்றிருக்கிறாயா? உனக்கு மனதில் அந்தப் பாகுபாடு இருக்கிறது இல்லையா?''

''நிச்சயமாக இல்லை வாணி! இவ்வளவு தூரம் என்னிடம் பழகி என்னைப் பற்றி நீ அறிந்தது இவ்வளவு தானா? எனக்கும் அந்தக் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று பல நாட்களாக ஆசை இருந்து வருகிறது. போகத் தான் இயலவில்லை.''

**Ibid-Page No 26

"உனக்கு சம்மதம் என்றால் இப்பொழுதே கூட நாம் அங்கு செல்லலாம். என்ன சொல்கிறாய் ?"

"இதைச் சொல்லத்தான் இவ்வளவு பீடிகை போட்டாயா ?"

"இல்லை. அதனை அங்கு சென்ற பிறகு கூறுகிறேன்."

வெளியே வந்து சிவிகையில் ஏறினார்கள். பல்லக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோயிலை நோக்கிச் செல்லத் தொடங்கியது.

கோயிலின் உள்ளே நுழைந்ததும் பிரமித்துப் போய் நின்றாள் இளவரசி சந்திரவதனா !

"எவ்வளவு அற்புதமாக இருக்கிறதடி இந்தக் கோயில் ! தஞ்சையிலேயே பிறந்து வளர்ந்து இத்தனை ஆண்டுகளாக இந்தக் கோயிலுக்குள் வந்து பார்க்காதது எவ்வளவு பெரிய தவறு ! விண்ணை முட்டும் விமானம் ! கண்ணைக் கவரும் சிலைகள்.''

"உள்ளே வா ! பெருவுடையாரை தரிசிக்கலாம் !"

கருவறைக்குள் செல்ல ஆரம்பித்தனர்.

தஞ்சை இளவரசியின் எதிர்பாராத விஜயத்தால் திக்குமுக்காடிப்போன அர்ச்சகர் ஓடிவந்து பணிவுடன் அவர்களை வரவேற்றார். கருவறையில் இருந்த சிவலிங்கத்தினைப் பார்த்து இன்னும் பிரமித்தாள் சந்திர வதனா !

உண்ணாழிகையின் உள்ளே காணப்பெறும் பெருவுடையார் இவ்வளவு உயரமாக அமைந்திருக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. லிங்கத்துக்கு ஏற்ற அளவிற்பெரிய ஆவுடையார்.

லிங்கத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த மேடையின் மீது ஏறிநின்று, அர்ச்சகர் அபிஷேகம் செய்தார். பிறகு

தூபங்காட்டி, கற்பூர ஆரத்தி எடுத்து அவர்களிடம் கொணர்ந்தார்.

சந்திரவதனாவும், மதுரவாணியும் பயபக்தியுடன் அதனைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டனர். பிறகு அர்ச்சகர் அவர்களுடன் வந்து அந்தக் கோயிலின் சிறப்புகள் ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி விளக்கிய வாறு இருந்தார்.

"ஏனடி மதுரவாணி, இந்த அற்புதமான கோயிலை யார் கட்டினார்கள்? எப்பொழுது கட்டினார்கள் என்று உனக்குத் தெரியுமா?" என்றாள் இளவரசி.

"சோழ மன்னர்களில் சிறப்பு வாய்ந்தவரான, இராஜராஜ சோழன் என்பவரால் பலநூறு ஆண்டு களுக்கு முன் கட்டப்பட்டது என்று என் தந்தை கூறி இருக்கிறார்! சரிதானா அர்ச்சகரே!"

"உண்மைதான் தாயே!" என்றார் அர்ச்சகர்.

"கருவறையில் இருக்கும் லிங்கம் தான் எத்தனை பெரியது! இவ்வளவு பெரிய லிங்கம் வேறு எந்தக் கோயிலிலாவது இருக்கிறதா?"

"இவ்வளவு பெரிய லிங்கம் இந்த நாட்டில் எந்தக் கோயிலிலும் இல்லை. ஓரளவு அதற்கடுத்து எல்லா வகையிலும் சிறப்பான கோயில் ஒன்று உண்டு என்றால் அது, கங்கைகொண்ட சோழபுரத்தில் இருக்கும் கோயி லைச் சொல்லலாம்."

"கங்கை கொண்ட சோழபுரமா? அது எங்கே இருக் கிறது?"

"கும்பகோணத்தில் இருந்து வடகிழக்கில் இருபத்து மூன்று கல் தொலைவில் இருக்கிறது இளவரசியாரே! சிற்ப அம்சங்கள் வெகு சிறப்பாக இருக்கும். லிங்கமும்

அளவிற் பெரியதாக இதே பாணியில் அமைக்கப்பட்டிருக்கும்."

"அதனை இதே இராஜராஜ சோழ மன்னன்தான் கட்டினானா?"

"இல்லை. அவரது மகன் இராசேந்திர சோழன் என்னும் மன்னன் கட்டியதாகச் சொல்வார்கள். அவன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றானாம். அதன் நினைவாகத்தான் கங்கைகொண்ட சோழபுரம் என்று ஒரு ஊரையும் ஏற்படுத்தி அதில் கங்கை கொண்ட சோழீச்வரம் என்ற கோயிலைக் கட்டினான் என்று சொல்வார்கள் தேவி."

"அடேயப்பா! அவ்வளவு பெரிய வீரனா அவன்!"

"ஆம் இளவரசி! கங்கையின் புனித தீர்த்தத்தினைக் குடங்களில் நிறைத்து, தான் வெற்றி பெற்ற மன்னர்களின் தலையில் ஏற்றி இங்கு கொண்டு வந்தானாம்"

"எதற்கு?"

***"கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே ஒரு மாபெரும் ஏரியை வெட்டி, அதில் கங்கை நீரைப் பெய்வித்து அதற்குச் சோழகங்கம் என்று பெயரிட்டானாம். அதாவது அது தனது கங்கை வெற்றிக்கான ஜலஸ்தம்பமாக இருக்க வேண்டும் என்பதற்காக"

*** அப்பேரேரி சோழகங்கம் என்னும் பெயருடையது என்பது திருவாலகாட்டுச் செப்பேடுகளால் அறியப் படுகிறது. அச்செப்பேடுகள் அதனை நீர்மயமான வெற்றித்தூண் என்றும் புகழ்ந்து கூறுகின்றன' - பிற்காலச் சோழர் சரித்திரம் T.V. சதாசிவ பண்டாரத்தார் - பகுதி I - பக்கம் 184.

"இதைக் கேட்டவுடன் எனக்கு இவற்றை எல்லாம் பார்க்க வேண்டும் என்று ஆசையாக இருக்கிறதடி மதுர வாணி."

"கங்கை கொண்ட சோழபுரத்தில் வேறு ஒரு முக்கிய மான விஷயம் இருக்கிறது சந்திரா! கேட்டால் உனது ஆசை இன்னும் அதிகமாகிவிடும்," என்றாள் மதுரவாணி.

"அப்படி என்ன இருக்கிறது.?"

"அங்கே சிங்கக்கிணறு என்று ஒன்று இருக்கிறது. மிகப் பெரிய சிங்கம் ஒன்று கட்டுவிக்கப்பட்டு, அதன் வயிற்றின் வழியாகச் செல்லும் படிக்கட்டுகளில் இறங்கி னால் அந்தக் கிணற்று நீரினை அடையும் படியாகக் கட்டப்பட்டுள்ளது."

"கற்பனை செய்யும்போதே அற்புதமாகத் தெரி கிறதே! நேரில் சென்று பார்த்தால் இன்னும் அழகாகத் தெரியுமோ?"

"நிச்சயமாக நான் சிறுவயதாக இருக்கும் பொழுது எனது தந்தை ஒருமுறை கூட்டிச் சென்று காண்பித்திருக் கிறார். இராசேந்திர சோழன் கங்கையில் இருந்து கொண்டு வந்த புனிதநீரை அந்தக் கிணற்றில் ஊற்றி இருக்கிறானாம்."

"என்ன காரணத்திற்காக?"

"***தினமும் அந்தக் கிணற்றில் இருந்துதான் மூலவ ருக்கு அபிஷேகம் செய்யப்படுமாம். அதாவது தினமும்

***"The Popular Story goes that the chola king got water from the Ganga and poured it to this well so that there could be a perpetual supply up it for the bath (abhisheka) of the deity'- Chola Temples- C.Sivarama murthi- Page No. 27

கங்கை நீரால் லிங்கம் நீராட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவாம்."

"எவ்வளவு உயரிய நோக்கம். அந்தக்கிணறு இன்னமும் நல்ல நிலையில் இருக்கிறதா வாணி?"

"ஆமாம். அதில் வற்றாத கங்கைநீர் இன்னமும் சுரந்து கொண்டுதான் இருக்கிறது. அதில் மற்றொரு விசேஷமும் உண்டு என்று என் தந்தை கூறி இருக்கிறார்."

"சொல்லடி! என்ன விசேஷம்?"

"ஒரு பெண்ணானவள் பருவ வயது அடைந்தவுடன் அந்தக் கிணற்றில் இறங்கி, அந்தப் புனிதமான கங்கை நீரைத் தலையில் பக்தி பூர்வமாக தெளித்துக் கொண்டு, ஆண்டவன் சன்னிதானத்துக்கு வந்து வணங்கினால் அவள் மனதுக்கு நிறைந்த கணவன் கிடைப்பான் என்று என் தந்தை சொல்லி இருக்கிறார். சரிதானா அர்ச்சகரே!"

"பத வாக்யப்ரமாண பாராவாரஹரான மகாபிரபு கோவிந்த தீட்சிதர் சொன்னால் சரியாகத்தான் இருக்கும். அதிலென்ன ஐயப்பாடு? அதுமட்டுமல்ல தாயே! பட்டம் சூடும் நிலைக்கு ஏற்ற பருவத்திற்கு வந்த ஒரு நாட்டின் இளவரசன் அந்தக் கங்கா தீர்த்தத்தினை தலையில் தெளித்து, கங்கைகொண்ட சோழீச்வரனைத் தரிசித்தால் அவன் ஆட்சியில் எந்தக் குறையும் நிகழாத படி ஆண்டவன் அருள் கிடைக்கும். அந்த இளவரசனும் தீர்க்காயுசாக இருப்பான் என்பதும் ஐதீகம்."

"இவ்வளவு சிறப்பான கோயில் ஒன்று, இருப்பதைப் பற்றி எனக்கு இத்தனை நாட்கள் தெரியாதே! மதுர வாணி, இதைச் சொல்வதற்காகத்தான் என்னை இங்கு அழைத்து வந்தாயா?"

"ஆமாம் சந்திரா. அந்தப்புரத்தில் நான்கு சுவர் சூழ்ந்த தனியறையில் அமர்ந்து கொண்டு இந்தக் கோயி லின் பெருமையைப் பற்றி நீ முழுக்க உணர முடியாது. அதனால் உன்னை எப்படியாவது பிரஹதீஸ்வரர் ஆலயத்திற்குக் கூட்டி வந்து நேரில் காண்பித்தால்தான் அதன் சிறப்பை நீ முற்றிலுமாகப் புரிந்து கொள்வாய் என்று நினைத்தேன்."

"உன் எண்ணம் சரிதானடி! அந்தப்புரத்தில் கேட் டிருந்தால்கூட, இவ்வளவு தூரம் அதனை உணர்ந்திருக்க மாட்டேன்."

அர்ச்சகரை அனுப்பிவிட்டு இளவரசி சந்திரவதனா வும், மதுரவாணியும் வெளிப்பிராகாரத்தில் இருந்த ஒரு மரத்தின் அடியில் வந்து உட்கார்ந்தார்கள்.

"வாணி, எனக்கு அந்த கோயிலைப் பார்க்க வேண் டும் என்று ஆசையாக இருக்கிறதடி."

"இங்கிருந்து நீண்ட தூரம் இருக்கிறதே! சென்று வருவதற்கு குறைந்தது ஒரு வாரகாலம் ஆகுமே! அத்தனை நாட்கள், அவ்வளவு தொலைவான இடத்திற்கு இளவரசியான உன்னைத் தனியாக அனுப்ப மன்னர் ஒப்புக்கொள்ள வேண்டுமே!"

"நான் மட்டும் தனியாகச் செல்லப்போவதாக இல்லையடி! நீயும் என்னோடு வரப்போகிறாய்!"

"நானா? உன்னுடனா? நான்தான் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு ஒரு தடவை சென்றிருக்கிறேனே!"

"அறியாப் பருவத்தில் தானே சென்றிருக்கிறாய்? உன் தந்தையின் கூற்றின் படி பருவம் எய்திய பெண்கள் கங்கா தீர்த்தமாடி, கங்கை கொண்ட சோழீச்வரனைத் தரிசிப்பது அவர்கள் எதிர்கால வாழ்க்கைக்கு நல்லது இல்லையா? நீயும் என்னைப் போல் மணமாகாத

மங்கை! நாம் இருவரும் சேர்ந்து கங்கை கொண்ட சோழபுரம் சென்று வரலாம். நீ கண்டிப்பாக என்னோடு வரவேண்டும்."

"என் தந்தை என்னை அவ்வளவு தூரத்திற்கு அனுப்புவதற்கு ஒப்புக் கொள்ளவே மாட்டார்."

"அந்தப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு வாணி! என் தந்தை அமைச்சரைக் கூப்பிட்டு, 'தீட்சிதரே, இளவரசி கங்கைகொண்டசோழபுரம் செல்கிறாள். அவள் உயிர்த்தோழியான உமது மகளும் உடன் வர வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். உடனே அனுப்பி வையும்' என்று உத்தரவிட்டால் உனது தந்தை மறுபேச்சின்றி ஒப்புக் கொள்வார்."

"முதலில் உன்னை அனுப்புவதற்கே மன்னர் ஒப்புக் கொள்ள வேண்டுமே?"

"ஏன்? நான் கேட்டு எதையும் அவர் மறுக்க மாட்டார்"

"இருந்தாலும் அவ்வளவு நீண்ட தொலைவில் சென்றுவர இளம் பெண்கள் இருவரைத் தனியே அனுப்ப அவருக்கு எப்படி மனம் வரும்? வழியில் நீண்ட அடர்த்தியான காடுகள் நிறைந்திருக்கின்றன. கள்வர் பயம் இருக்கலாம். கடுமையான விலங்குகளால் ஆபத்து நிகழலாம்."

"நாம் இருவர் மட்டும் தனியாக அங்கு செல்லப் போவது மாதிரி அல்லவா கதைக்கிறாய் வாணி! நமக்குப் பாதுகாப்பாக ஒரு படையை என் தந்தை அனுப்பி வைக்கமாட்டாரா?"

"படைக்கு தலைமை ஏற்று நமது தளவாய் ரங்கப்ப நாயக்கன் வருவார். அவர் வருவது எரிச்சலை அல்லவா தரும்?"

"உண்மைதான். அவருக்குப் பதில் யாரை அனுப்பச் சொல்லலாம்?"

இளவரசி தன் அழகிய சிவந்த கீழ் உதட்டினைத் தடவித் திருகியபடி யோசித்தாள். "உன் அண்ணன் எப்படி இருக்கிறார்?" தற்செயலாக வேறு எதையோ கேட்பது மாதிரிக் கேட்டாள் மதுரவாணி.

"ஆஹா! அவரை மறந்து விட்டேனே! அவர்தான் நம்மோடு துணைக்கு வரவேண்டும். எனக்கும் அவர் வந்ததில் இருந்து அடிக்கடி அவரிடம் பேச முடியவில்லை. இது தான் நல்ல வாய்ப்பு!" என்றாள் சந்திரவதனா.

"அவரை எதற்கடி தொந்தரவு செய்ய நினைக்கிறாய்! அவருக்கு இந்நாட்டின் இளவரசன் என்ற நிலையில் பல கடமைகள் இருக்கலாம். நீ அழைத்தால் கூட மன்னர் அனுப்பமாட்டார். வேறு யாரைப்பற்றி யாவது யோசித்துச் சொல்!" வெறுப்புடன் சொல்வது போல் சொன்னாள்.

"இல்லை. அவர்தான் வரவேண்டும். பட்டம் ஏற்கும் இளவரசன் கூட அங்கு தரிசித்து வருவது நல்லது என்று அர்ச்சகர் கூறியதை மறந்து விட்டாயா? இதைச் சொன்னால் என் தந்தை உடனே சம்மதித்து அண்ணனை நம்மோடு துணைக்கு அனுப்பத்தான் போகிறார். அதனால் நீ மறுக்காதே!"

"என்னவோ போ! சைவ தலங்களைப் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இங்கு அழைத்து வந்தேன். கடைசியில் என்னையே இக்கட்டிற்குள் ஆளாக்குகிறாய்! நான் எதுவும் சொல்ல மாட்டேன். என் தந்தை சம்மதித்தால் வருவேன். இல்லாவிடில் என் மீது கோபப்படாதே!"

"அந்தப் பொறுப்பு என்னுடையது! நீயும் வருகிறாய்! அண்ணனும் துணைக்கு வருகிறார்! இதற்கான மன்னர்

உத்தரவை நாளையே பெற்று விடுகிறேன்." ஆணித் தரமாகச் சொன்னாள் சந்திரவதனா !

தன் ஆரம்பத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி விட்ட மகிழ்ச்சியில் சிரித்தாள் மதுரவாணி !

23

தஞ்சை இளவரசி சந்திரவதனா பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் சென்று வழிபட்டுவந்த மறுநாள் காலையில் தனது தந்தையை தேடிச் சென்றாள்.

அரண்மனையை ஒட்டி இருக்கும் சிறிய தர்பார் மண்டபத்தினுள் மன்னன் விஜயராகவ நாயக்கனும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரும் வர இருக்கும் வைகுண்ட ஏகாதசி நாளன்று குலகுருவான குமாரதாத்தாச்சாரிய ருக்கு செய்ய இருக்கும் மரியாதைகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார்கள்.

"குருவிடம் ஆசியும் அனுக்ரகமும் பெற்று விட்டானா னால் அதன் பிறகு மன்னார்தாசனுக்கு சமயப்பற்று வந்து விடும்," என்றார் அமைச்சர்.

"நானும் அப்படித்தான் நினைக்கிறேன் அமைச்சரே ! ராஜகோபால சுவாமிதான் அவன் மனதை மாற்ற வேண்டும். வா சந்திரவதனா ! காலையிலேயே என்னைத் தேடி வந்திருக்கிறாயே !" என்று அப்பொழுது தான் உள்ளே நுழைந்த இளவரசியைப் பார்த்த மலர்ச்சியுடன் சிரித்தார்.

"தங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் பற்றி பேசு வதற்காகத்தான் இத்தனை சீக்கிரம் ஓடி வந்தேன். சற்று தாமதமாகி இருந்தால் கூட நீங்கள் நகர்வலம் சென்று

விடுவீர்கள். பிறகு நாளைக்கல்லவா தங்களைப் பார்க்க முடியும்?" என்றாள் இளவரசி.

தந்தையும் மகளும் பேசும் இடத்தில் தான் இருப்பது முறையல்ல என்று உணர்ந்த அமைச்சர், "மன்னவா, நான் சென்று வரட்டுமா? திறைக்கணக்கினை இன்று பார்வையிட வேண்டும். உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்," என்று பணிவுடன் வணங்கினார்.

"சற்று இருங்கள் அமைச்சர் பெருமானே! நான் பேசப்போகும் விஷயங்களுக்குத்தகுந்தவிளக்கம் தங்களால் தான் தரமுடியும். அமைச்சரை சற்று நேரம் இருக்கச் சொல்லுங்கள் தந்தையே!"

மன்னர் சிரித்தவாறு, "சற்றுப் பொறுங்கள் அமைச்சரே! என்ன சந்திரா? இவ்வளவு பீடிகை போடுகிறாய்! அப்படி என்ன முக்கியமான விஷயம்? அந்தப்புரத்தில் பந்துகளின் எண்ணிக்கை குறைந்து விட்டனவா? இல்லை பல்லாங்குழி ஆடுவதற்குப் பாண்டிய நாட்டு முத்து சிறந்ததா என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?" என்றார் கேலியாக.

"போங்கள் தந்தையே! நான் என்ன சிறுகுழந்தையா, இதற்காக தங்களைத் தேடிவர? அதை விட முக்கியமான விஷயம்! கேளுங்களேன்!"

"சரி கேட்கிறேன். சொல்!" என்று வாயைப் பொத்திக் கொண்டு கேலியாகப் பணிந்தார். அமைச்சர் புன்னகைத்தார்.

"நமது நாட்டில் கங்கைகொண்ட சோழபுரம் என்று ஒரு ஊர் இருக்கிறதாமே, தெரியுமா?"

"ஆம். கும்பகோணத்திற்கு அருகே இருக்கிறது. எதற்காக அதைப்பற்றி கேட்கிறாய்?"

"மிகவும் பழமையான ஊராமே? பெரிய பெரிய மன்னர்கள் எல்லாம் அதில் இருந்து ஆட்சி செய்ததாகக் கேள்விப்பட்டேன்."

"ஆம் மகளே! பழங்காலத்தில் சோழர்களின் தலைநகராக இருந்தது என்று என் தந்தை ரகுநாத நாயக்கர் சொல்லி, இருக்கிறார். அதைப் பற்றிய முழு விவரம் தெரியாது. அமைச்சரே! தங்களுக்குத் தெரியுமா?"

"தெரியும் மன்னவா! நமது தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டினானே இராஜராஜ சோழன், அவனுடைய மைந்தனான இராசேந்திர சோழனால் உருவாக்கப்பட்டது அந்த ஊர், சோழர் பரம்பரையிலேயே மிகப் பெரிய வெற்றி வீரன் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்று வந்தானாம். அதன் நினைவாகத்தான் கங்கை கொண்ட சோழபுரம் என்று ஒரு நகரத்தை நிறுவி, அதனையே தனது தலைநகராகக் கொண்டான் என்று பெரியவர்கள் சொல்லி இருக்கிறார்கள்."

"அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக இருந்ததா அந்த ஊர்? இப்பொழுது பார்த்தால் ஒரு சிறிய கிராமம் மாதிரியல்லவா இருக்கிறது!"

*"ஆம் மன்னவா! இது வட மொழியில் கங்காபுரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் இலங்கியங்களிலும் இந்நகரை பெருமைப்படச் சொல்லி இருக்கிறார்கள்."

"அவ்வளவு சிறப்பான ஊரா?" என்று வியந்தான் மன்னன்.

---

*சோழர்கள்- புத்தகம் 1- பேராசிரியர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி- பக்கம் 303.

"ஆம் மன்னவா! 'கங்காபுரியின் மதிற்புறத்துக் கருதார் சிரம் போய் மிக வீழ' என்று கலிங்கத்துப்பரணி யிலும், 'கங்காபுரி பரந்த கற்பகமும்' என்று விக்கிரம சோழன் உலாவிலும், 'கொங்கரவங்கன் அனபாயன் குளிர் பொழில் சூழ் கங்காபுர மாளிகை' என்று தண்டி யலங்காரத்தின் மேற்கோள் செய்யுளிலும் புகழப்பட்ட இடம்தான் இன்று ஒரு சிற்றூராகக் காட்சி அளிக்கிறது. ஒரு காலத்தில் மாளிகையாக இருந்த இடம் இன்று மண் மேடாகக் கிடக்கிறது. 'ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும்' என்று ஔவை பிராட்டி பாடியது எத்தனை உண்மை!"

"உண்மை. உண்மை! எல்லாம் ஆண்டவன் சித்தம்" என்று விண்ணைப் பார்த்து கையுயர்த்தி வணங்கிவிட்டு, "எதற்குச் சந்திரா அந்த ஊரைப் பற்றி இத்தனை அக்கறையாக விசாரிக்கிறாய்?" என்றார் மகளைப் பார்த்து.

"அந்த ஊரில் அந்த மன்னன் கட்டில் கோயில் ஒன்று இருக்கிறதாம். கங்கைகொண்டசோழீச்வரம் என்று அதற்குப் பெயராம். மிகச் சிறப்பு வாய்ந்த சிவத்தலங் களில் அதுவும் ஒன்று என்று கேள்விப்பட்டேன்."

"ஆம் இளவரசி! தஞ்சை இராசராசேச்சுரத்தின் மீது பதிகம் பாடிய கருவூர்த்தேவர் கங்கைகொண்ட சோழ புரத்தில் அமைந்துள்ள கோயிலில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான் மீதும் ஒரு பதிகம் பாடியுள்ளார். அப்பதிகம் சைவத் திருமுறைகள் பனிரெண்டினுள் ஒன்றாகிய ஒன்பதாம் திருமுறையில் திருவிசைப்பா என்னும் பகுதி யில் இருக்கிறது மன்னவா! ஓய்வு கிடைக்கும் பொழுது அதனைத் தங்களுக்குப் பாடிக் காண்பிக்கிறேன்."

"அந்தக் கோயிலுக்குள் சிங்கக்கிணறு என்று ஒன்று இருக்கிறதாமே? தாங்கள் பார்த்திருக்கிறீர்களா தந்தையே?"

''நான் பலமுறை அந்த ஊர் வழியாகச் சென்றிருக்கிறேன். ஆனால் ஒருதடவைகூட அந்தக் கோயிலுக்குள் சென்று பார்த்ததில்லை. அமைச்சர் சிவபக்தர். அவருக்குத்தான் நன்றாகத் தெரியும் சொல்லுங்கள் தீட்சிதரே!"

"கோயிலின் வெளிச் சுற்றில் அந்தக் கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது மன்னவா. சோழ மன்னனான இராசேந்திரன் கங்கையில் இருந்து கொண்டு வந்த புனிதமான நீரை அந்தக் கிணற்றில் ஊற்றினானாம்! தினமும் அந்த கங்கா தீர்த்தத்தில் இருந்துதான் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று ஆணையாம். அது இன்றுவரை தொடர்ந்து வருகிறது.''

''இப்படி ஒரு தீர்த்தம் இருப்பது எனக்கு இத்தனை நாட்களாகத் தெரியாதே! தெரிந்திருந்தால் அந்த கங்கா தீர்த்தத்தின் புனித நீரில் என் பாதங்களை நனைத்திருப்பேனே!" என்று வருத்தத்துடன் கூறினான் மன்னன்.

"அந்தப் புனித நீரில் நீராடி அங்கிருக்கும் ஆண்டவனைத் தரிசிக்கும் கன்னிப் பெண்களுக்கு நல்ல மண வாழ்க்கை அமையும் என்றும், ஒரு நாட்டின் இளவரசன் இந்த மாதிரி வழிபட்டால் அவனது ஆயுசும் விருத்தியாகி, அவன் ஆட்சியும் சிறக்கும் என்றும் சொல்கிறார்களே!"

இதற்கு அமைச்சர் சற்று நேரம் யோசித்து விட்டு, "எனக்குத் தெரிந்து சாஸ்திரங்களிலும் இலக்கியங்களிலும் அப்படி ஒரு விஷயம் சொல்லப்படவில்லை. பொதுவாக புனித நீரில் நீராடி, இறைவனை சேவிப்பது சகலருக்கும் நன்மை பயக்கும். அதிலும் அந்த சிங்கக் கிணற்றில் ஒரு வகையில் உண்மையாகக் கூட இருக்கலாம். ஏனெனில் உலகின் எந்த இடத்தில் செய்த பாவமும் கங்கையில் குளித்தால் நீங்கிவிடும் என்று சாஸ்திரங்கள்

கூறுகின்றன அந்தக் கங்கை நீரை அக்கிணற்றில் இருப்ப தால் அவர்கள் கொண்டுள்ள ஐதீகமும் உண்மையாகத் தான் இருக்கும்!'' என்றார்.

"அப்படிப்பட்ட இடத்திற்கு சென்றுவர எனக்கு ஆசையாக இருக்கிறது தந்தையே!"

இதைக் கேட்டவுடன் மன்னவன் சற்றுத் திகைத் தான்.

"அவ்வளவு நீண்ட தொலைவிற்கு உன்னை எப்படி தனியாக அனுப்புவது?"

"நான் மட்டும் தனியாகச் செல்ல விரும்பவில்லை தந்தையே! எனது தோழி மதுரவாணியையும் உடன் அழைத்துச் செல்ல விரும்புகிறேன்"

இதைக் கேட்டவுடன் அமைச்சருக்கு 'திக்' கென்றிருந் தது. இதனை எப்படி மறுப்பது என்று யோசிக்க லானார். அதற்குள் மன்னன் பேசிவிட்டான்.

''உன்னை அனுப்புவதற்கே எனக்கு பயமாக இருக் கிறது. இதில் உன்னுடன் மதுரவாணியையும் சேர்த்துக் கொள்கிறாயே! இரண்டு இளம் பெண்களை ஒரு வாரப் பயணத்திற்கு தனியே அனுப்புவதில் பல சிக்கல்கள் இருக் கின்றன சந்திரா! பொறு! கூடிய சீக்கிரம் உன் திருமணம் முடியட்டும். அதன் பிறகு நீயும் உன் கணவ ரும் ஒன்றாக சேர்ந்து போய் ஒரு வாரம் என்ன, ஒரு மாதம் கூட இருந்து ஆசைதீர தரிசித்து விட்டு வாருங்கள்."

''திருமணத்திற்கு முன் கன்னிப்பருவத்தில் சென்று சேவித்து வருவதுதான் சிறப்பு என்கிறார்கள். என் உயிர்த்தோழி மதுரவாணிக்கும் அத்தகைய சிறப்பு கிடைக்க வேண்டும் என்பது அவா. மறுக்காதீர்கள்

தந்தையே! தயவு செய்து சென்றுவர அனுமதி தாருங்கள்."

"பெண்களை மட்டும் தனியாக அனுப்புவதற்கு யோசனையாக இருக்கிறது."

"நாங்கள் மட்டுமல்ல தந்தையே! அண்ணனை மறந்து விட்டீர்களா? ஓர் இளவரசன் பட்டம் ஏற்பதற்கு முன்பு கங்கா தீர்த்தமாடி, கடவுளைத் தரிசிப்பது அவனது ஆட்சிக்கும், ஆயுசுக்கும் மாட்சியாகும் என்று நான் சொன்னதை மறந்து விட்டீர்களா? அண்ணா எங்களுக்குத் துணையாக வரும்படி சொல்லுங்கள். நீங்கள் கூட சற்று நேரத்திற்கு முன் அங்கு சென்று பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டீர்களே! நீங்களும் எங்களோடு வாருங்களேன்."

"எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன சந்திரா. வைகுண்ட ஏகாதசி நாளில் குருவிற்கு நாம் செலுத்தும் மரியாதைக்கான ஏற்பாடுகள் நிறைய இருக்கின்றன. அதை விட்டு விட்டு வர இயலாது."

மன்னன் சற்று நேரம் யோசித்தான். மன்னார் தாசனை இவர்களுடன் அனுப்பி புனித நீராடி வரச் சொல்ல வேண்டியதுதான் கங்கையின் புண்ணிய நீர் தலையில் பட்டால் அவனுக்கு நிச்சயம் மாற்றம் பிறக்கும்.

அருகில் இருந்த மணியை ஒலித்து சேவகன் ஒருவனை வரவழைத்தார்.

"நீ உடனே சென்று இளவரசனையும், தளவாயையும் நான் அழைத்ததாக சீக்கிரம் வரச்சொல்"

சற்று நேரம் கழித்து முதலில் தளவாய் ரங்கப்ப நாயக்கன் அங்கு வந்து பணிவுடன் நின்றான்.

''வணக்கம் மன்னவா! வணக்கம் அமைச்சர் பெருமானே! மருமகளே சந்திரவதனா! நலமுடன் இருக்கிறாயா?" என்று இளவரசியைப் பார்த்து சிரித்தவாறு கேட்டான்

''நன்றாக இருக்கிறேன் தளவாய் அவர்களே!"

'மாமா என்று சொல்லக் கூடாதா? தளவாய் என்கிறாளே! இருஇரு! உன்னை மருமகளாக அடையத்தான் போகிறேன்' என்று தனக்குள் கறுவிக் கொண்டான்.

''அழைத்தீர்களாமே மன்னவா?'' என்றான் தளவாய்.

''ஆம் ரங்கப்பா! இளவரசியும், மதுரவாணியும் கங்கைகொண்ட சோழபுரம் சென்று தரிசித்து விட்டுவர இருக்கிறார்கள்! அதற்கு ஒருவார காலம் ஆகலாம். போகும் பாதை வேறு சரியில்லை. அதனால் நமது படையில் சிறந்த வீரர்களாக நூறுபேரைத் தேர்ந்தெடுத்து அனுப்ப வேண்டியது உன் கடமை!"

''உத்தரவு மன்னவா! அப்படைக்குத் தலைமை ஏற்று நடத்த யாரை அனுப்புவது?"

''எனது மகன் மன்னார்தாசனை அனுப்ப எண்ணியுள்ளேன். இதோ அவனும் வந்து விட்டானே! வா மகனே! இப்படி உட்கார்''

இளவரசன் மன்னார்தாசன் அமைச்சரையும் தளவாயையும் பார்த்து வணங்கி விட்டு ஆசனத்தில் அமர்ந்தான்.

''மன்னார்தாசா, நம் நாட்டில் கும்பகோணத்திற்கருகே கங்கை கொண்ட சோழபுரம் என்ற சிவத்தலம் இருக்கிறது தெரியுமா?'' என்றான் மன்னன்.

''தெரியும் தந்தையே! நானும் கேள்விப்பட்டேன்.''

''அந்த தீர்த்தத்தில் நீராடி அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனை தரிசித்து வணங்குவது திருமணமாகாத பெண்டிருக்கும், திறன் மிகுந்த இளவரசனுக்கும் நன்மை பயக்கும் என்கிறார்கள்.''

''நமது நாட்டில் இப்படி எத்தனையோ தீர்த்தங்கள் இருக்கின்றன தந்தையே! ஒவ்வொன்றைப் பற்றியும் இப்படி ஓர் ஐதீகம் இருக்கத்தான் செய்கிறது.''

''அதில் உண்மை இல்லாமல் இல்லை மகனே! உன் தங்கையும், அமைச்சர் மகளும் அங்குச் சென்றுவர நினைக்கிறார்கள்.''

''உயர்ந்த இடத்தில் உல்லாசமாக இருக்கும் பெண்களுக்கு தீர்த்த யாத்திரை என்பது ஒரு பொழுதுபோக்குத் தானே! தாராளமாகச் சென்று வரட்டும்.''

''நீயும் எங்களுடன் வரவேண்டும் அண்ணா!''

''நான் எதற்கு?'' அசட்டையாகச் சொன்னான்.

''ஆம் மகனே! நீயும் இவர்களுடன் சென்றுவர வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.''

''எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன தந்தையே!''

''கங்கா தீர்த்தத்தில் நீராடி வருவது உனது எதிர் காலத்திற்கும், உனது ஆயுளுக்கும் நல்லது மன்னாரு.''

''எனக்கு அதில் நம்பிக்கை இல்லை தந்தையே! கங்கைக்குச் சென்று நீராடி வருவதால் மட்டும் யாரும் புனிதம் அடைந்துவிட முடியாது தந்தையே. அதிலும் எந்தக் காலத்திலோ கங்கையில் இருந்து கொண்டு வரப் பட்டு கிணற்றில் ஊற்றிய நீரில் இன்னமும் கங்கா நதி

பெருகி வருவதாக நினைப்பது முட்டாள் தனமாகப் படுகிறது எனக்கு!''

இதைக் கேட்டவுடன் கோவிந்த தீட்சிதர் முகம் சுளிக்க, மன்னவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''அண்ணா அப்படிச் சொல்லாதீர்கள்! தீர்த்த யாத்திரை புரிவது ஒரு மனிதனை செம்மைப்படுத்தும். அவன் பாவங்கள் போகும்.''

''சந்திரா, புத்தபெருமான் இதைப் பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

*ருத்ராக்ஷம் துளசி ஹஸ்தம் த்ரிபுண்டரம் பஸ்ம தாரணம் யாத்ராஸ்நானியதா பூதஹிதே ரதி' என்று. அதாவது ருத்ராட்சம் அணிவது, துளசி இலையினைக் கையில் கொள்வது, நாமம் தரிப்பது, விபூதி இடுவது, தீர்த்த யாத்திரை, புண்ணிய நதி நீரில் குளிப்பது, ஹோமமும், ஜெபங்களும் செய்வது, உருவ வழிபாடு ஆகிய இவை ஒரு மனிதனை புனிதமாக்காது உனது சகமனிதனுக்குச் செய்யும் சேவையே உன்னைப் புனிதமாக்கும்' என்று. அதனால் எனக்கு அங்கு வர விருப்பம் இல்லை.''

''சரி விருப்பம் இல்லா விட்டாலும் இப்பெண்களுக்குத் துணையாகவாவது அவர்களுடன் சென்று வா,'' என்றான் மன்னன்.

''மன்னிக்க வேண்டும் தந்தையே! தளவாயை அனுப்புங்கள். எனக்கு காவற் பணிகளை செம்மைப்

---

* ''Bead Necklaces, rosaries, triple paint on forehead, or putting on ashes, pilyirimages, baths in holy rivers meditation, or image worship, do not purify a man as service of fellow- Creatures does'- Religion and culture- S. Radhakrishnan- Pages No.27 and 129.

படுத்தும் வேலை நிறைய இருக்கிறது. வரட்டுமா !" என்றவாறு எழுந்து சென்றுவிட்டான்.

மன்னனுக்கு மனதில் நிறைய வருத்தம் ஏற்பட்டது. மன்னார்தாசனின் வாக்கும் போக்கும் அவருக்கு கவலை அளித்தன. அதே நேரம் இளவரசிக்கும் அண்ணன் வராதது ஏமாற்றத்தை அளித்தது. இதனால் தந்தை தங்களைப் போக வேண்டாம் என்று சொல்லி விடுவாரோ என்று பயமாகவும் இருந்தது

"இப்பொழுது என்ன செய்வது தந்தையே ! அண்ணன் எங்களோடு வரவில்லை ! நீங்களாவது வரலாமே?" என்றாள் ஏக்கத்துடன்.

"எனக்கும் நிறைய வேலைகள் இருக்கிறதென்று சற்று முன் சொன்னதை மறந்து விட்டாயா ? மன்னார்தாசன் வராவிட்டால் என்ன, வருந்ாதே ! நமது தளவாயை உடன் அனுப்பி வைக்கிறேன். அவர் சிங்கத்திற்கு நிகரானவர். நீங்கள் பயமின்றி போய் வரலாம். என்ன ரங்கப்பா ?"

"தாங்கள சொல்வதை மறுக்க மனமில்லை ! இருப்பினும் எனக்கும் நீங்கள் இட்ட பணிகள் நிறைய இருக்கின்றன. அதனால் எனக்குப் பதில் என் மகன் அச்சுதப்பனை அனுப்பி வைக்கிறேன். நானோ கிழவன் அவன் வாலிபன். நூறு சிங்கங்களுக்கு நிகரான வலிமை கொண்டவன். அவன் தலைமை ஏற்று வருகிறான் என்றால் பலகாததூரத்திற்கு எந்தப் பகையும் நிற்காது!"

"அதுவும் நல்லதுதான். அவனையே அனுப்பி வை !"

"என்றைக்குக் கிளப்ப வேண்டும் தந்தையே ?" என்றாள் இளவரசி.

"நாளை மறுநாள் நல்ல நாள். அன்றைக்குக் காலையிலேயே நீயும் மதுரவாணியும் கிளம்பி விடுங்கள். என்ன அமைச்சரே ?"

''மதுரவாணியும் உடன் போவது...'' மெல்ல இழுத்தார்.

''இறைவனுக்காகச் செல்வதை தடுக்காதீர்கள் அமைச்சரே!''

இதற்கு மேல் அமைச்சரால் தடுக்க முடியவில்லை. புனித நீராடி வருவது நல்லது என்றுதான் நினைத்தார். இளவரசியுடன் ஒரு படையே காவலாகச் செல்லும் பொழுது கவலைப்பட வேண்டாம் என்று நினைத்தார்.

அதேநேரம் தளவாய்க்கோ மனதில் மட்டற்ற மகிழ்ச்சி! ஒரு வாரப்பயணம! இளவரசியுடன் தனது மகன் மட்டும் செல்லப் போகிறான்! போகும் வழியில் எப்படியாவது இளவரசியின் மனதை மாற்றி அவளைக் காதல் கொள்ளும்படி அச்சுதப்பன் வசியப்படுத்தி விட்டால், அடுத்து இந்த தஞ்சைத் தரணிக்கு அவன் தானே அரசன்! இந்த வாய்ப்பை அவன் நழுவவிடமவ மாட்டான்!

இளவரசி சந்திரவதனாவிற்கோ தன் இனிய தோழியுடன் ஒரு வார காலமாக உல்லாசமாகப் பேசி இறைவனை தரிசித்து வரப்போகிறோமே என்று ஆனந்தம் ஏற்படத் தொடங்கியது.

இந்த மூவருக்குமே எத்தனை எதிர்பாராத சம்பவங்கள் நிகழ நேரிட்டன.

24

தஞ்சை இளவரசி சந்திரவதனா கங்கை கொணட சோழபுரம் சென்று, இறைவனைத் தரிசித்துத் திரும்பி வரும்வரை அவளுக்குப் பாதுகாப்பாக, அவளுடன் சென்று வருவதற்குத் தன் மகன் அச்சுதப்பனை அனுப்பி

வைப்பதற்கு மன்னன் அனுமதி தந்துவிட்ட மகிழ்ச்சியில் தளவாய் ரங்கப்ப நாயக்கன் தன்னுடைய மாளிகைக்கு வந்தான்.

அவன் மனதில் ஆனந்தம் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. அவ்வளவு தூரம் இளவரசியுடன் சென்று வருவதற்குக் குறைந்தது ஒருவார காலம் ஆகலாம். அந்த ஏழு நாட்கள், முழுவதும் இரவும், பகலும் இளவரசி சந்திரவதனாவுடன் அச்சுதப்பன் இருந்து தான் தீர வேண்டும்.

எவ்வளவு அரிய வாய்ப்பு! தானாக அல்லவா தேடி வந்திருக்கிறது? எப்பாடுபட்டாவது அச்சுதப்பன் சந்திரவதனாவின் மனதை மாற்றித் தன்பால் மயங்க வைத்துவிட்டால் போதும்! கங்கை கொண்ட சோழ புரத்தில் இருந்து திரும்பி வரும்பொழுது அவர்கள் காதலர்களாக மாறிவந்தால் போதும்!

சற்று நேரத்திற்கு முன்பு தர்பார் மண்டபத்தில் மன்னர் விஜயராகவனுக்கும் இளவரசன் மன்னார்தாச னுக்கும் இடையில் ஏற்பட்ட விவாதத்தை எண்ணி அவன் மனம் குதூகலித்தது. மன்னார்தாசனின் பேச்சு அமைச்சருக்குக் கூட வெறுப்பை அளித்திருக்கிறது என்பதை அவர் முகமாற்றத்தில் இருந்து உணர்ந்து கொண்டான்.

அச்சுதப்பன் மட்டும் இளவரசியின் மனதை மயக்கிக் காதல் கொள்ள வைத்துவிட்டால் போதும். அப்புறம் இளவரசியே மன்னரிடம் சென்று 'நான் அச்சுதப்பனைத் தான் மணப்பேன். இல்லாவிட்டால் மரணத்தைத்தான் அணைப்பேன்' என்று பிடிவாதம் செய்வாளே?

மன்னருக்குச் சந்திரவதனா ஒரே பெண்! செல்லப் பெண்! அவள் எது கேட்டாலும் இதுவரை இல்லை என்று அவர் மறுத்த தேகிடையாது. திருமண விஷயத்திலா

மறுக்கப் போகிறார்? அதிலும் அச்சுதப்பன் யார்? அந்நியனா? ஒருவகையில் உறவுக்காரனல்லவா? மன்னர் இவர்கள் திருமணத்திற்கு ஒருக்காலும் மறுக்க மாட்டார்.

திருமணம் மட்டும் நடந்துவிட்டால் போதும். அப்புறம் இந்தத் தஞ்சைத் தரணியே அச்சுதப்பனுக்குச் சொந்தமாகி விடாதா?

மன்னார்தாசன் இப்படியே பேசிக் கொண்டிருந்தால் போதும். கொஞ்சம் கொஞ்சமாக மன்னனின் வெறுப்புக்கு ஆளாகிவிடுவான். அதற்குப் பிறகு அவனுக்குப் பட்டம் சூட்டுவதற்கே விஜயராகவ நாயக்கன் யோசிக்க மாட்டாரா? யோசிக்கும் படியாக நான் வைத்துவிட மாட்டேனா?

முதலில் அச்சுதப்பன், சந்திரவதனாவின் மனதை மாற்றிக் காதல் கொள்ள செய்யட்டும். ஒவ்வொன்றாக இதனை நிறைவேற்றிக் காட்டுகிறேன்.

நெஞ்சினில் இன்பமும் கண்களில் இறுமாப்பும் எழ, அருகில் இருந்த சேவகனை விளித்துத் தன் மகன் அச்சுதப்பன் எங்கிருந்தாலும் உடனே அழைத்து வரும்படி உத்தரவிட்டான்.

சற்று நேரத்தில் அச்சுதப்பன் தந்தை முன் வந்து நின்றான்.

"அச்சுதப்பா, உன்னிடம் முக்கியமான வேலை ஒன்றினை ஒப்படைத்திருந்தேனே. அது எந்த அளவில் இருக்கிறது?" என்றான் தளவாய்.

"மேற்கு வாசல் கோட்டையின் வெளிப்புறச்சுவற்றில் ஏற்பட்ட விரிசலைத்தானே சொல்கிறீர்கள்? நேற்றுத் தான் அதன் விரிசலில் சாந்து பூசிக் கல் வைத்துச் சுத்தமாக அடைத்துவிட்டேன். இப்பொழுது வந்து பாருங்கள். விரிசல் இருந்த இடமே தெரியாது."

"அதைச் சொல்லவில்லையடா! இளவரசி சந்திரவதனாவை அடிக்கடி பார்த்து, அவளுடன் பேசு, அவள் மனதில் உன்னைப் பற்றி நல்லதோர் அபிப் பிராயத்தினை உருவாக்கு என்று சொன்னேனே, அதைப் பற்றிக் கேட்டேன்."

"நானும் பலதடவை முயற்சித்துக் கொண்டுதான் இருக்கிறேன். இளவரசியை நேரில் பார்த்துப் பேசும் சந்தர்ப்பமே கிடைக்க மாட்டேன் என்கிறது. நான் ஏதாவது ஒருவேலையாக அந்தப்புரத்தினுள் சென்றால் கூட அவள் நேரில் என்னெதிரில் வராமல், பணிப் பெண்ணை அனுப்பி வைக்கிறாள். ஒரு வேளை என்னுடன் நேரில் பேசுவதற்குக் கூச்சமாக இருக்கலாம்."

"கவலைப்படாதே! அவளுடன் நாள் முழுக்க அவளருகிலேயே இருக்கும்படியாக ஏற்பாடு செய்திருக் கிறேன்."

"ஒருநாள் முழுக்கவா?" முகத்தில் ஆனந்தம் கொப்ப ளிக்க, ஆவலுடன் கேட்டான்.

"ஒருநாள் முழுக்க இல்லையடா! ஒரு வாரம் முழுக்க! கிட்டத்தட்ட ஏழு நாட்களுக்கு மேல் இளவரசியுடன் நீ இருக்கப் போகிறாய்."

"ஒருவாரம் முழுக்கவா! எப்படி தந்தையே?" எக்குத்தப்பான மகிழ்ச்சியில் திக்கு முக்காடிப் போய்க் கேட்டான்.

"இளவரசி கங்கைகொண்ட சோழபுரத்திற்குச் சென்று சுவாமி தரிசனம் செய்துவிட்டு வர இருக்கிறாள். அதற்குக் குறைந்த பட்சம் ஒருவார காலம் ஆகலாம். அவ்வளவு நீண்ட தொலைவில் அடர்ந்த காடுகள் மிகுந்து இருக்கின்றன. அதனால் இளவரசியின் பாதுகாப்பிற்காக ஒரு பெரும்படையை மன்னர் அனுப்புகிறார். அதற்குத்

தலைமை ஏற்றுச் செல்லும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறார்."

"அவ்வளவு நீண்ட தொலைவு வரை இளவரசி தனியாகவா செல்லப் போகிறாள்? மன்னர் உடன் வரவில்லையா?"

"மன்னருக்கு வேறு முக்கியமான பணிகள் இருப்பதால் அவளுடன் செல்லப்போவதில்லை. ஆனால் அமைச்சரின் மகள் மதுரவாணி மட்டும் இளவரசியுடன் சேர்ந்து வரப்போகிறாள்."

"மதுரவாணியும் வரப்போகிறாளா? ஹேஹே ஹேஹ்ஹே" என்று பலமாகச் சிரித்தான்.

"இளிக்காதேடா, நிறுத்து!" என்று தளவாய் சினந்து கூறியதும். அச்சுதப்பன் அவசரமாகச் சிரிப்பை அடக்கி வாயை மூடினான்.

"நீ எதற்காகச் சிரிக்கிறாய் என்று எனக்குப் புரிகிறது உன் கவனம் இளவரசியின் மீது மட்டும் இருக்கட்டும். இளவரசி இருக்கும் போதோ இல்லை தனிமையிலோ மதுரவாணியிடம் குழைந்து பேசும் எண்ணத்தை அடியோடு விட்டுவிடு."

"என்னப்பா நீங்கள், பார்க்கிற பெண்ணிடம் எல்லாம் மனதை அலை பாயவிடும் பித்தன் என்றா என்னை நினைக்கிறீர்கள்?"

"உன்னைப் பற்றி எனக்குத் தெரியுமடா! போன வாரம் தென்னந்தோப்பில் கள் விற்கும் பெண்ணை உன் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடினாயாமே!"

"யார் சொன்னது? சுத்தப் பொய்! தென்னந்தோப்பில் கள்ளா விற்கிறார்கள்? எனக்குத் தெரியாதே!"

"புளுகாதேடா! எனக்குத் தெரியாதா உன்னைப் பற்றி!"

"என்னை நம்பாமல் இப்படி எல்லாம் பேசினால், நான் இளவரசியுடன் செல்லமாட்டேன். வேறு யாரை யாவது அனுப்பிக் கொள்ளுங்கள்!" என்றவாறு திரும்ப முற்பட்டான்

தளவாய் உடனே அவன் கையைப் பற்றி "சரி, சரி கோபித்துக் கொள்ளாதே! உன் கவனம் முழுவதும் இளவரசியின் மீது மட்டும் இருக்கவேண்டும் என்பதற் காகச் சொன்னேன். மற்ற பெண்களிடம் குழைந்து பேசும் ஓர் ஆடவனை, எந்தப் பெண்ணும் விரும்ப மாட்டாள். அதனால் மதுரவாணியிடம் அதிகமாகப் பேசாதே!" என்றான்.

"சரி தந்தையே!"

"அப்புறம் ஒரு முக்கியமான விஷயம்! கங்கை கொண்ட சோழபுரம் போய் திரும்பும் வரையில் கள் குடிப்பதை நீ மறந்து விடவேண்டும்."

"பார்த்தீர்களா? மறுபடியும் அதையே பேசுகிறீர் களே! நான் இதுவரை கள்ளின் வாசனையைக் கூட நுகர்ந்ததில்லை!"

"இருந்தாலும் ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன். பெண்களின் மனம் குடிகாரன் மேல் மையலுறாது! அது உன் நினைவில் இருக்கட்டும்."

அச்சுதப்பன் மௌனமாக நின்றான்.

"நீ என்ன செய்வியோ, ஏது செய்வியோ எனக்குத் தெரியாது. ஒருவாரம் கழித்துக் கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்து நீங்கள் திரும்பி வரும்பொழுது அவள் உன் வலையில் வீழ்ந்திருக்க வேண்டும். தன் தந்தையிடம் சென்று 'நான் அச்சுதப்ப மாமனைத்தான்

திருமணம் செய்து கொள்வேன்' என்று அடம் பிடிக்கும் அளவுக்கு அவள் மனதை நீ மாற்ற வேண்டும். என்ன ?"

''அப்படியே செய்கிறேன் அப்பா !"

''எல்லாவற்றையும் விட முக்கியமான ஒரு விஷயம் சொல்கிறேன். கவனமாகக் கேட்டுக் கொள். இளவரசி கங்கைகொண்ட சோழபுரம் சென்று, சுவாமி தரிசனம் செய்து விட்டுத் திரும்பவும் தஞ்சை வந்து சேரும் வரை அவளுக்கு எந்த ஓர் ஆபத்தும் ஏற்படக்கூடாது. அப்படி ஏதாவது ஏற்பட்டுவிட்டால் நமது எண்ணம் அடியோடு நாசமாகிவிடும். அதனால் உன் முதல் கவனம் இளவரசியின் பாதுகாப்புத்தான். அதற்கு அடுத்துத்தான் அவள் காதலை நீ சம்பாதிப்பது ! புரிந்ததா ?''

''கவலைப்படாதீர்கள் தந்தையே ! நான் தலைமை ஏற்றுச் சென்றால் காற்றுக் கூட என் அனுமதி இன்றிச் சந்திரவதனாவைத் தீண்டாது!" என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னான் அச்சுதப்பன்.

''நாளை மறுநாள் இங்கிருந்து இளவரசி கிளம்ப இருக்கிறாள். அதனால் அதற்கான ஏற்பாடுகளைக் கவனி !"

அச்சுதப்பன் தலையாட்டிவிட்டு அங்கிருந்து கிளம்பினான். இளவரசியுடன் ஒருவாரம் இணைந்து செல்லப் போகிறோமே என்ற மகிழ்ச்சி அவனுக்குள் பீறிட்டுக் கிளம்பியது.

காவற்கூடத்திற்கு வந்து தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு நேரே தென்னந்தோப்பிற்குள் நுழைந்தான். மூக்கு முட்டக் குடித்தான். நிதானம் தவறியது.

''டேய் எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கிறதடா! நான் உட்கார்ந்து கொள்கிறேன். அந்தக் கள்ளுப்

பானையை அப்படியே என் தலையில் இருந்து ஊற்றுங்கள்," என்றவாறு தரையில் உட்கார்ந்தான.

நண்பர்கள் அவன் சொன்ன மாதிரியே அவன் தலை மீது கள்ளினை ஊற்றினார்கள். அனைவரும் அந்தக் காட்சியினைப் பார்த்து ரசித்துச் சிரித்துக் கை கொட்டி னார்கள். அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கள் விற்கும் பெண்ணான செல்லத்தாய் 'கலகல' என்று நகைத்தாள்.

அச்சுதப்பன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். எழுந்து அவளருகே வந்தான். புளித்த கள் அவன் உடல் முழுக்க நனைந்து சொட்டியது.

''செல்லத்தாயி, நான்தான் இப்ப உனக்குக் கடவுள்! இந்தக் கடவுளுக்குக் கள்ளாபிஷேகம் பண்ணி இருக் காங்க. நீ சும்மா இருக்கலாமா? உன் முந்தானையால என்னைத் துவட்டி விடு!" என்றான்.

செல்லத்தாயி அவனை அணைக்காத குறையாக இழுத்து, தனது முந்தானையால் அவன் தலையைத் துவட்டி விடத் தொடங்கினாள். உடன் இருந்த நண்பர்கள் 'ஹோ' என்று நகைத்தனர்.

''என்னடா மடையர்களா, இளிக்கிறீர்கள்? இங்கிருந்து போங்கள். நான் செல்லத்தாயுடன் தனியாகப் பேச வேண்டும்."

அவன் உத்தரவுக்கு அடிபணிந்து அவனது நண்பர்கள் போதையில் தடுமாற்றத்துடன் அங்கிருந்து நகர்ந்தனர்.

''செல்லத்தாயி, கண்ணு, உன்னை ஒரு வாரத்திற்குப் பார்க்க முடியாது. அதனால் உன்னைச் சொர்க்க லோகத் திற்குக் கூட்டிச் சென்று சொக்க வைக்கிறேன்," என்றவாறு அவளைத் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குடிசையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தான்.

அமைச்சர் கோவித்த தீட்சிதர் மன்னனிடம் பேசி முடித்த கையோடு, தனது மாளிகைக்கு வேகமாக வந்தார். அப்பொழுது அவர் மகள் மதுரவாணி கால் சலங்கைப் பட்டையை பிரித்து, அதில் கோர்க்கப் பட்டிருந்த மணிகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா, எல்லாவற்றில் இருந்தும் ஒரே சீரான ஓசை வருகிறதா என்று சரி பார்த்துக் கொண்டிருந்தாள்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் இறைவன் சன்னதிக்கு எதிரே பரதநாட்டியம் ஆடவேண்டும். அதனை இளவரசன் பார்த்து ரசிக்க வேண்டும் என்ற கற்பனையில் மிதந்து கொண்டிருந்தாள்.

அமைச்சரைப் பார்த்தவுடன் அவள் தாய் நாகமாம்பாள், ''என்ன இன்று இவ்வளவு சீக்கிரமாக வந்திருக்கிறீர்கள்? எதையாவது மறந்து விட்டீர்களா?'' என்றாள்.

இதனைக் கேட்டவுடன் மதுரவாணி சலங்கைகளை வைத்துவிட்டு, வேகமாக வாசலுக்கருகே வந்து நின்றாள். தனது திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி விட்டதை அவர் வாயிலிருந்து கேட்க மனம் பரபரத்தது.

''நாளை மறுநாள் இளவரசி கங்கைகொண்ட சோழபுரம் செல்லப் போகிறாளாம்,'' என்றார் அமைச்சர்.

''எதற்கு?''

''அங்குள்ள சிவன் கோயிலில் இருக்கும் சிங்கக் கிணற்றில் கங்கா தீர்த்தம் பிரவாகிப்பது உனக்குத்தான் தெரியுமே! அதில் நீராடி இறைவனை வழிபடுவது கன்னிப் பெண்களின் எதிர்கால மணவாழ்க்கைக்கு நல்லது என்று யாரோ கூறியிருக்கிறார்கள். அதனால் மதுரவாணியையும் அழைத்துக் கொண்டு போகப் போகிறார்களாம்.''

நாகமாம்பாள் சற்றுத் திகைத்து. "நல்லகாரியம்தான், இருந்தாலும் நெடுந்தொலைவு அல்லவா? நீங்கள் என்ன சொன்னீர்கள்?" என்றாள்.

"எனக்கு முதலில் யோசனையாகத்தான் இருந்தது. மன்னரின் உத்தரவை மறுக்க முடியாது. அடுத்து இளவரசியுடன் சேர்ந்து செல்வதால் பயம் இல்லை. மூன்றாவது கங்காதீர்த்தமாடி வந்த பிறகாவது மதுர வாணிக்குச் சீக்கிரம் ஒரு நல்ல மணமகன் அமையட்டுமே என்ற நினைப்பு! சரி என்று சொல்லிவிட்டேன். மதுர வாணி எங்கே?"

"மதுரவாணி! அப்பா அழைக்கிறார்!" உரத்துக் குரல் கொடுத்தாள் தாய்.

மதுரவாணி மகிழ்ச்சிப் பொங்க ஓடோடி வந்தாள்.

"மதுரவாணி, இங்குதான் இருந்தாயா? நான் சொன்னதைக் கேட்டாய் அல்லவா? இளவரசியுடன் கங்கைகொண்ட சோழபுரம் போய் வருவதில் உனக்கு விருப்பந்தானே?" என்றார் அமைச்சர்.

"அவ்வளவு நீண்ட தொலைவிற்கு இளவரசியுடன் தனியே சென்றுவரப் பயமாக இருக்கிறது தந்தையே! இருந்தாலும் தங்களது சொல்லுக்குக் கட்டுப்பட்டுச் சென்றுவரச் சித்தமாக இருக்கிறேன்,' என்று மிகவும் பணிவுகாட்டிச் சொன்னாள் மதுரவாணி.

"நீங்கள் இருவர் மட்டும் தனியாகவா செல்லப் போகிறீர்கள்? அப்படி அனுப்பிவிடத்தான் மன்னர் சம்மதிப்பாரா? அப்பாவும், மன்னரும் உங்களுடன் வரும் பொழுது எதற்காகப் பயப்படவேண்டும்" என்றாள் நாகாம்பாள்.

''இல்லை நாகு! எனக்கும் மன்னருக்கும் வைகுண்ட ஏகாதசிக்கான ஏற்பாடுகளைச் செய்யும் வேலைகள் காத்து இருக்கின்றன. அதனால் நாங்கள் இவர்களுடன் செல்லப் போவதில்லை!''

''என்ன? நீங்கள் யாரும் இவர்களுடன் போகப் போவதில்லையா? பிறகு இவர்களைத் தனியாகவா அனுப்பப் போகிறீர்கள்?"

''இரண்டு இளம் பெண்களைத் தனியாக நீண்ட தொலைவிற்கு அனுப்பும் முட்டாள்களா நாங்கள்! இவர்களுக்குப் பாதுகாப்பாக நூறு வீரர்கள் கொண்ட படை செல்ல இருக்கிறது."

'வெறும் படைவீரர்களை மட்டுமா துணைக்கு அனுப்புகிறீர்கள்? படைகளுக்குத் தலைமையேற்று வழி நடத்திச் சென்றுவர இளவரசனையாவது அனுப்பி வைக்கிறார்களா?"

''முதலில் மன்னார்தாசனைத்தான் இவர்களுக்குத் துணையாக அனுப்பி வைக்க மன்னர் எண்ணி இருந்தார். அவனைக் கூப்பிட்டுச் சொல்லவும் செய்தார். இளவரசனின் பேச்சுக்கள் எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை நாகு! ஆண்டவன் மீது அளவு கடந்த பக்தியும், தர்ம சாஸ்திரங்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்ட அரசருக்கு இப்படி ஒரு மைந்தன் அமைந்திருக்கிறானே என்று ஒரு பக்கம் வருத்தமாகவும் இருக்கிறது."

"இளவரசன் இவர்களுடன் செல்லப் போகிறானா இல்லையா?''

''மன்னர் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மன்னார்தாசன் ஒரேயடியாக மறுத்து விட்டான்.''

''பிறகு? படைகளுக்குத் தலைமை?''

''நமது படைத்தளபதி ரங்கப்ப நாயக்கனின் மகன் அச்சுதப்பன்தான் படைகளுக்குத் தலைமை தாங்கி அவர்களுடன் கங்கை கொண்ட சோழபுரம் சென்று வரப் போகிறான்."

இதைக் கேட்டவுடன் மதுரவாணியின் தலையில் இடி இறங்கியதைப் போன்றிருந்தது. தன் எண்ணம் அடியோடு குலைந்துவிட்டதே என்று இதயம் படபடத்தது. இளவரசன் மீது சற்று எரிச்சலும் தோன்றியது.

''அச்சுதப்பன் கிறுக்கனல்லவா?" என்றாள் நாக மாம்பாள் கவலையுடன்.

''நூறு படைவீரர்கள் வருகிறார்கள். இளவரசியும் இருக்கிறாள். அதனால் மதுரவாணியின் பாதுகாப்பைப் பற்றி நாம் பயம் கொள்ளத் தேவை இல்லை. எல்லாம் விதிப்படி நடக்கும். கவலைப்படாதே! மதுரவாணி, நாளை மறுநாள் காலையில் சூரிய உதயம் கழிந்த மூன்றாம் நாழிகையில் நீங்கள் இங்கிருந்து கிளம்ப வேண்டி இருக்கும். அதனால் பயணத்திற்குத் தேவைப் படும் ஆடைகள், அணிகலன்கள் முதல் சகலவற்றையும் நாளையே தயாராக எடுத்து வைத்துக்கொள்."

மதுரவாணி தலையாட்டிவிட்டு நெஞ்சில் சோகம் பீறிடத் தன்னுடைய அறைக்குள் நுழைந்து அங்கிருந்த மஞ்சத்தின் மீது அயர்வுடன் சரிந்தாள். மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

இளவரசனுடன் கங்கைகொண்ட சோழபுரம் சென்றால் அவனுடன் தனிமையில் பேசும் வாய்ப்பு எழும். எப்படியாவது தன் மனதில் இருக்கும் காதலைச் சொல்லி விடலாம் என்று எண்ணி அவள் போட்ட திட்டம் அடியோடு குலைந்து போயிற்று! இனி அவள் இளவரசியுடன் செல்வதில் அர்த்தமே இல்லை!

போகாமல் எப்படித் தவிர்ப்பது? இவ்வளவு தூரம் நடந்து அவளும் ஒப்புக் கொண்ட பின் வரமாட்டேன் என்று சொன்னால் இளவரசி, மன்னர், தந்தை ஆகிய மூவரின் கோபத்திற்கும் ஆளாக நேரிடும்! போவதில் பலனே இல்லை! இங்கு இருந்தாலாவது இளவரசனை நேருக்கு நேர் பார்க்கும்படியான வாய்ப்பு ஏற்படலாம்.

ஆனால் மற்றவர்கள் கோபப்படாமல் அவர்களே இவளைப் போகவேண்டாம் என்று சொல்வது மாதிரி இருந்தால் இன்னும் நல்லது. அதற்கு என்ன வழி?

மறுநாள் முழுக்க யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

25

தஞ்சை இளவரசி சந்திரவதனாவும், அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் அருமைப் பெண் மதுரவாணியும் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் புனித நீராடி விட்டு வருவதற்காகத் தஞ்சையில் இருந்து புறப்படும் நாளான அன்று காலை இன்னும் உதயமாகாமல் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

கண்ணைக் கசக்கிக் கொண்டு செந்தழலோன் விண்ணில் கிளம்ப இன்னும் ஐந்து நாழிகைகள் இருக்கும் நேரம். அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மாளிகையில் பரபரப்பு எழ ஆரம்பித்தது

இரவில் அணைக்கப்பட்டிருந்த விளக்குகள் ஒவ்வொன்றாக எரியூட்டப்பட்டன.

அமைச்சர் குளித்து முடித்துப் பூஜை அறையில் அமர்ந்து சந்தியா வந்தனம் செய்து, இறைவனைத் தொழுது 'கங்கைகொண்ட சோழபுரம் சென்று திரும்பும்

வரை மங்கை மதுரவாணிக்கு எந்த இடரும் நேரக்கூடா மல் காத்தருள்வாய்' என்று மனதில் எண்ணி இறைஞ்சி திருநீறு இட்டுக்கொண்டார்.

பிறகு வெளியில் வந்து தனது மனைவியை அழைத் தார்

"நாகு, மதுரவாணி ஸ்நானாதிகளை முடித்துவிட்டுத் தயாராக இருக்கிறாளா என்று பார். இன்னும் சற்று நேரத்தில் அந்தப்புரத்தில் இருந்து இவளை அழைத்துச் செல்லப் பல்லக்கு வந்துவிடும்," என்றார்.

நாகமாம்பாள் வேகமாக மதுரவாணியின் அறையை நோக்கிச் சென்றாள். சற்று நேரம் கழித்து அமைச்சரிடம் ஓடோடி வந்தாள்.

"என்னங்க, மதுரவாணியைக் காணவில்லை!" என்றாள் படபடப்புடன்.

"காணவில்லையா? அவள் அறைக்குள் நன்றாகத் தேடிப்பார்! ஒருவேளை பின்புறத்தில் உள்ள அறையில் குளித்துக்கொண்டு இருக்கலாம்."

"அங்கேயும் போய்ப் பார்த்தேன். அவளைக் காண வில்லை."

"பதறாதே! வேறு எங்கே போகப் போகிறாள்? வீட்டுக்குள்தான் இருப்பாள். எல்லா அறைகளிலும் தேடிப்பார்."

நாகமாம்பாள் மறுவினாடி அங்கிருந்து வேகமாகச் சென்றாள். அமைச்சரின் மனம் கூட உள்ளுக்குள் அடித்துக் கொள்ள ஆரம்பித்தது.

நீண்ட நேரம் கழித்து நாகமாம்பாள் மெதுவாக அவரருகே வந்து நின்றாள். அவள் முகத்தில் சோகம் நிறைந்திருந்தது.

''என்ன நாகு? மதுரவாணி எங்கிருக்கிறாள்? நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. அரண்மனையில் இருந்து ஆட்கள் வந்துவிடுவார்கள்!''

"மதுரவாணி... இளவரசியுடன் செல்ல முடியாது...!" என்றாள் சோகமாக.

"என்ன? என்ன சொல்கிறாய்? மதுரவாணி இளவரசியுடன் போக முடியாதா? மதுரவாணி இருக்கிறாளா இல்லையா?'' கோபத்துடன் கேட்டார் அமைச்சர்.

''இருக்கிறாள்!'' என்றாள் தயக்கத்துடன்.

"எங்கே இருக்கிறாள்? இன்னும் என்ன பண்ணிக் கொண்டு இருக்கிறாள்? ஸ்நானம் பண்ணி விட்டாளா இல்லையா?"

"ஸ்நானம் பண்ணி விட்டாள்..." தொடர்ந்து அவர் காதில் ரகசியமாகச் சொன்னாள்.

அதைக் கேட்டவுடன் அமைச்சரின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது. சற்று யோசித்தார். நீண்ட பெருமூச்சு விட்டார்.

''இப்படிப்பட்ட சமயத்தில் மதுரவாணி இளவரசியுடன் செல்லக் கூடாது. இத்தனை ஏற்பாடுகளும் நடந்து முடிந்த பிறகு இப்படி ஒரு சோதனை! மதுரவாணி கங்கைகொண்ட சோழபுரம் வருவதற்கு ஆண்டவன் அனுக்ரஹம் அமையவில்லையே! சரி. இதை முதலில் மன்னரிடம் தெரிவித்துவிட்டு வருகிறேன்."

அமைச்சர் அவசரமாக வெளியில் வந்து, குதிரையில் ஏறி நேரே அரண்மனைக்கு வந்தார் அரண்மனை முழுக்க விளக்குகள் ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. இளவரசியை வழி அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தன.

அமைச்சரைப் பார்த்தவுடன் அங்கிருந்த ஒவ்வொரு வரும் பணிவுடன் வணங்கினர்.

ஒரு சேவகனை விளித்து, ''அமைச்சர் அவசரமாகப் பார்க்க வேண்டும் என்று சொன்னார் என்று மன்னரிடம் சொல்!'' என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் விஜயராகவ நாயக்கன் சர்வ அலங்காரம் பூண்டவனாக அந்தப்புரத்தில் இருந்து கிளம்பி வந்தான். அங்கிருந்த விளக்குகளின் ஒளி வெள்ளத்தில் அவன் அணிந்திருந்த ஆடைகளும், ஆபரணங்களும் கண்களைச் சிமிட்டின...

''என்ன அமைச்சரே, மதுரவாணி தயாராகி விட்டாளா? பல்லக்கினைத் தங்கள் மாளிகைக்கு அனுப்பச் சொல்ல வேண்டுமா?'' என்று தனது மீசையைத் தடவியவாறு கேட்டான் மன்னன்.

''அதற்கு அவசியம் இருக்காது என்று நினைக்கிறேன் அரசே!'' என்றார் அமைச்சர் தயங்கியவாறு.

''ஏன்? தங்களுடனே வந்து விட்டாளா?''

''இல்லை மன்னவா! மதுரவாணி இருக்கும் சூழ் நிலையில் இன்று அவள் இளவரசியுடன் கங்கைகொண்ட சோழபுரத்திற்குப் பயணப்பட முடியாது.''

''என்ன சொல்கிறீர்கள்? புரியவில்லை!''

''மதுரவாணி தலைக்குக் குளித்திருக்கிறாள்...''

மன்னன் கண்களை இடுக்கிக் கொண்டு, ''அதாவது...''

''பெண்களுக்கு மாதத்தோறும் வரும் சங்கடம். மதுரவாணி அதனால் இன்று தனியறையில் ஒதுங்கி இருக்கிறாள். இப்படிப்பட்ட நிலையில் பெண்கள் அந்த அறையை விட்டு வெளியே வருவதே மிகப் பெரிய தப்பு!''

"ஆமாம். ஆமாம். மாத விடாயுற்ற பெண்கள் மஹேஸ்வரனைத் தரிசிக்கச் செல்வது மாபெரும் அபச்சாரம். மதுரவாணி மட்டும் விதி விலக்காக முடியுமா? இறைவனின் சித்தம் அப்படி என்றால் நாம் என்ன செய்ய முடியும் அமைச்சரே!" என்று விண்ணைப் பார்த்துக் கை கூப்பி வணங்கினான் விஜயராகவ நாயக்கன்.

"பெண்களைப் பிடித்த பிரம்மஹத்தி தோஷம்தான் ஒவ்வொரு மாதமும், அவர்களுக்கு மாத விலக்காக வெளியேறுகிறது என்று வேதம் சொல்கிறது."

"உண்மை. உண்மை." என்று மறுபடியும் வானைப் பார்த்துக் கை கூப்பிய மன்னவன், "பெண்களுக்கு அந்த பிரம்மஹத்தி தோஷம் எப்படி பிடித்தது என்று வேதத்தில் சொல்லிய விஷயத்தை நீங்கள் ஒருமுறை கூறியது நினைவில் இருக்கிறது அமைச்சரே! அதுபற்றி இன்னொரு முறை சொல்லுங்கள். அந்த நிகழ்ச்சி மட்டும் எனக்கு மறந்து விட்டது," என்றான்.

* "தைத்ரிய சம்ஹிதையில் இதனைப் பற்றித் தெளிவாகச் சொல்லி இருக்கிறது மன்னவா! த்வஸ்த்ரி என்ற பிராமணனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் விருத்ரன். அவனுக்கு மூன்று முகங்கள். இந்த விருத்ரன் வேதங்கள் அனைத்தையும் ஐயந்திரிபறக் கற்றவன். இவனை இந்திரன் கொலை செய்து விட்டானாம். வேதங்களைக் கற்ற பிராமணனைக் கொன்றதால் இந்திரனுக்குப் பிரம்மஹத்தி தோஷம் பற்றிக் கொண்டது.

லோகத்தில் இருக்கின்ற சகல ஜீவராசிகளும் இந்திரனைப் பார்த்து, "கற்றுணர்ந்த பிராமணனைக்

* Taihtria Samhita—II, 5, 1—6—7

கொலை செய்தவனே" என்று கூச்சலிட்டனராம். இத்தகைய பெரும் பாவத்தில் இருந்து தன்னை ரட்சிக்க வேண்டி இந்திரன் பெண்களிடம் ஓடி வந்திருக்கிறான். பெண்களைப் பார்த்து, "நான் செய்த பாவத்தில் மூன்றாவது பங்கான வேதங்கற்ற பிராமணனைக் கொலை செய்த பாகத்தை மட்டும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்," என்று கேட்டிருக்கிறான். "அதற்குப் பதிலாக நீங்கள் ஏதாவது எங்களுக்கு உபகாரம் செய்ய வேண்டும்," என்று அந்தப் பெண்கள் இந்திரனைக் கேட்டிருக்கிறார்கள். "உங்களுக்கு என்ன வரம் வேண்டும். கேளுங்கள் அளிக்கிறேன்," என்று இந்திரன் சொல்லி இருக்கிறான்.

அதற்கு அவர்கள், "எங்களுடைய கணவர்கள் சரியான சமயத்தில் எங்களுடன் கூடினால் அதன் மூலம் எங்களுக்குக் குழந்தைகள் பிறக்க வேண்டும். குழந்தைகள் பிறக்கும்வரை நாங்கள் எங்கள் கணவர்களோடு கூடி மகிழ்வுடன் இருக்க வேண்டும்," என்று கேட்டார்களாம். இந்திரனும் அப்படியே தருவதாக அவர்களுக்கு வரம் அளித்திருக்கிறான். அதனால் இந்திரன் செய்த பாவத்தின் மூன்றாவது பங்கைப் பெண்கள் எடுத்துக் கொண்டார்களாம்."

"இப்படித்தான் பிரம்மஹத்தி தோஷம் பெண்களைப் பிடித்துக் கொண்டதா?" என்றான் மன்னன்.

**"ஆம்! மன்னவா. அந்த பிரம்மஹத்தி தோஷம் தான் பெண்களுக்கு மாதவிடாயாக ஒவ்வொரு மாதமும்

**.. That guilt of Brahmana—murder appears every month as the menstrual glow. Therefore let him not eat the food of a woman in her courses; (for) such a one has put on the shape of the guilt of Bramana—Murder— Sacred Laws of the Aryas— Astaught in the school of — VASISHTHA— Ttranslated by George Buhler— Edited by F. 'Max Mulleer— Pages No. 32 to 34.

வெளியேறுகிறது. அதனால் மாதவிலக்கான பெண்களிட மிருந்து யாரும் உணவு வாங்கி உண்ணக்கூடாது. அப்படி அவர்கள் கையால் சாப்பிட்டால் பிரம்மஹத்தி தோஷம் அந்தப் பெண்ணிடமிருந்து அவனுக்குத் தொற்றிவிடும் என்று வசிஷ்டர் எழுதிய தர்ம சாஸ்திரத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது மன்னவா !"

''இவ்வளவு தெளிவாகத் தர்மசாஸ்திரங்களும், வேதங்களும் சொல்லி இருக்கும் பொழுது மதுரவாணி எப்படிக் கங்கைகொண்ட சோழபுரம் செல்ல முடியும்?'' என்ற மன்னவன் சற்று நேரம் யோசித்தான்.

பிறகு அருகில் இருந்த மணியை அடித்தான் சேவகன் ஒருவன் பணிவுடன் வந்து வணங்கி நின்றான்.

''நீ உடனே அந்தப்புரத்திற்குச் சென்று இளவரசியை நான் வரச் சொன்னதாகச்சொல்!" என்றான் விஜயராகவ நாயக்கன்.

சற்று நேரம் கழித்து அங்கு இளவரசி சந்திரவதனா வந்து சேர்ந்த பொழுது, அந்த இடமே பிரகாசத்துடன் மிளிர ஆரம்பித்தது.

பச்சை வண்ணப்பட்டு புடவை அவள் மேனியை எழிலாக வளைத்திருக்க, அதன் முந்தானையிலும், ஓரங் களிலும் தங்க இழைகளால் நெய்யப்பட்டிருந்த அன்னப் பறவைகள், விளக்குகளின் ஒளிப்பட்டுக் கண்ணைப் பறித்தன. அவள் மேனி எங்கும் அணிந்திருந்த ஆபரணங் களில் பதிக்கப்பட்ட முத்தும், பவழமும், நவமணிகளும் வண்ண ஒளிக்கற்றைகளை நாலாபுறமும் சிதறி, நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தையே அவள் ஆடையாக அணிந்திருக்கிறாளோ என்ற பிரமிப்பை ஏற்படுத்தின.

இவை எல்லாவற்றையும் விட முழு நிலவு ஒன்றுதான் அவள் முகமாக அமைந்திருக்கிறதோ என்று எண்ணும்

படியான வசீகரம் அவள் இவ்வுலக மங்கை தானா? இல்லை வானத்தில் இருந்து இறங்கி வரும் அப்சரஸோ என்னும் மயக்கத்தை ஏற்படுத்தியது.

அழகுக்கு அழகு பூண்டதுபோல் ஆபரணங்கள் அணிந்து அம்சமாக வரும் தனது ஆசை மகள் சந்திரவதனாவை மன்னன் பெருமையுடன் பார்த்தான் அருகில் வந்தவுடன் அன்பு பொங்கி வழிய அவள் தலையை வருடிக் கொடுத்தான்.

''அழைத்தீர்களாமே தந்தையே? நாங்கள் கங்கை கொண்ட சோழபுரம் செல்வதற்கான நல்லநேரம் நெருங்கிவிட்டதா? மதுரவாணி ஏன் இன்னும் வரவில்லை? என்ன அமைச்சரே, தங்கள் மகளின் அலங்காரம் முடியவில்லையா?'' என்று முத்துப் பரல்களைச் சிதறியது போல் சிரித்தவாறு கேட்டாள்.

''அதில்தான் இப்பொழுது சிக்கல் ஏற்பட்டிருக்கிறது சந்திரவதனா!''

''அலங்காரத்தில் சிக்கலா?''

''இல்லை மகளே? மதுரவாணி தலைக்குக் குளித்திருக்கிறாளாம். தீட்டுப்பட்ட பெண் வீட்டை விட்டு வருவதே தவறு. அப்படி இருக்கும்பொழுது இறைவனைப் பூஜிக்கச் செல்லவே முடியாதே!''

இதைக் கேட்டதும் சந்திரவதனாவிற்கு ஏமாற்றமாக இருந்தது. இத்தனை ஏற்பாடுகளும் செவ்வனே செய்து முடித்துக் கிளம்பும் தறுவாயில் இப்படி ஒரு சோதனையா?

''இப்பொழுது என்ன செய்வது தந்தையே?''

''அதுதான் எனக்கும் புரியவில்லை.''

''இன்னும் மூன்று நாட்கள் கழித்தே நாங்கள் கங்கை கொண்ட சோழபுரம் செல்கிறோமே! அதற்குள் மதுர வாணியும் தயாராகி விடுவாள் இல்லையா?'' என்றாள் இளவரசி.

''என்ன அமைச்சரே சொல்கிறீர்கள்?'' என்றான் மன்னவன்.

''இல்லை மன்னா! இளவரசிக்காகத்தான் இத்தனை ஏற்பாடுகளும் செய்து முடித்திருக்கிறோம். மதுரவாணி வர இயலாவிட்டால் என்ன? மற்றொரு முறை பார்த்துக் கொள்ளலாம். இறைவனுக்காக எடுத்த காரியத்தை இடையில் நிறுத்த வேண்டாம். இளவரசியார் மட்டும் இந்தத் தடவை சென்று எம்பெருமானைத் தரிசித்து வரட்டும்.''

''நீங்கள் சொல்வதும் சரிதான் எல்லாம் இறைவன் சித்தம்,'' என்று உயரே பார்த்துக் கும்பிட்டுவிட்டு, ''சந்திரா, அமைச்சர் சொன்னபடி செய்!'' என்றான் மன்னன்.

இளவரசி சற்று யோசித்தாள். மதுரவாணி சொன்ன தால் தானே இத்தனை ஏற்பாடுகளும் செய்தோம்! அவள் வராமல் தனியாகச் செல்வதற்கும் மனம் இடங் கொடுக்கவில்லை. அதே சமயம் கங்கைகொண்ட சோழ புரத்தைக் காண்பதற்கும் ஆவலாக இருந்தது.

அந்தப்புரத்திலே அந்திபுலர்ந்து சந்தி சாயும் வரை அடைந்தே கிடக்கும் அவளுக்கு வெளி உலகத்தைப் பார்த்து வரும் நினைவே இச்சைக்கு உகந்ததாக இருந் தது. இப்படி ஒரு வாய்ப்பு மறுபடியும் கிட்டுவதற்கு எத்தனை நாளாகுமோ? மதுரவாணிக்கு ஆரம்பத்தில் இருந்தே வருவதற்கு விருப்பமில்லை! இப்பொழுது ஆண்டவனாய்ப் பார்த்துத் தடுத்தும் விட்டார்.

நான் மட்டும் போய்வர வேண்டியதுதான் !

இளவரசி மகிழ்வுடன் சம்மதித்தாள்.

கிழக்கு வானம் வெளுத்து பறவைகள் உற்சாகமாக குரல் எழுப்பியபடி பறந்து செல்லத் தொடங்கின.

தஞ்சை நகரத்து மக்கள் தங்கள் இளவரசி கங்கை கொண்ட சோழபுரம் செல்லும் சேதி அறிந்து, அரண்மனையில் இருந்து அவள் வெளியேறும் கோலாகலத்தைக் காண்பதற்காகத் தெருக்களில் கூட்டம் கூட்டமாகச் சேர ஆரம்பித்தனர்

அரண்மனை வாசலில் மன்னனின் படைப்பிரிவில் இருந்து திறமையான படைவீரர்களில் நூறுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, சலவை செய்த ஆடைகளும் சகல ஆயுதங்களும் தரித்தவர்களாய்த் தயாராக நின்று கொண்டிருந்தனர். அவர்களை ஒழுங்குபடுத்தி நிற்க வைத்து, அடுக்கடுக்காய் கட்டளைகளைப் பிறப்பித்தவாறு மிடுக்குடன் நின்று கொண்டிருந்தான் அச்சுதப்பன் !

அவன் ஆடை அலங்காரங்களும் கவனமாக செய்யப் பட்டிருந்தன! தன் மீசையை அடிக்கடி தடவிக் கொண்டு, தன் கையில் இருந்த வாளை உயர்த்தி, மறு கையால் ஒரு பழத்தை வானில் எறிந்து, அது கீழே விழுவதற்குள், அதனை வாளால இரண்டாகப் பிளந்து, நெஞ்சை நிமிர்த்தியபடி சுற்றி இருந்த கூட்டத்தை இளக்காரமாகப் பார்த்தபடி முன்னும் பின்னுமாக உலவியபடி இருந்தான்.

மிக நன்றாக அலங்கரிக்கப்பட்டு, இருபுறமும் தங்க இழைகள் கலந்த பட்டுத் திரைச்சீலைகள் தொங்கவிடப் பட்ட பல்லக்கு ஒன்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. படை வீரர்களுக்கு முன்புறம் யானை ஒன்று அம்பாரி ஏற்றப்பட்ட நிலையில், முதுகின் இருபுறமும்

தொங்க விடப்பட்ட மணிகள் குலுங்க அசைந்து அசைந்து நின்று கொண்டிருந்தது.

இளவரசி பயணத்தின் போது வழி நெடுகத்தென் படும் காட்சிகளைக் காண்பதற்கு யானை மீதுள்ள அம்பாரியினையும், ஓய்வெடுக்கும் பொழுது பல்லக்கினை யும் பயன்படுத்துவதற்காக அந்த ஏற்பாடு

சற்று நேரத்தில் இளவரசியின் கரத்தைப் பற்றியபடி மன்னன் விஜயராகவ நாயக்கனும், அவளருகில் அமைச் சர் கோவிந்த தீட்சிதரும், அவர் பின்னால் தளவாய் ரங்கப்ப நாயக்கனும் வருவதைக் கண்டு திரண்டிருந்த மக்கள் ஆர்ப்பரித்தனர்.

மன்னார் குடி ராஜ கோபால சுவாமி கோயிலில் இருந்து வந்த அர்ச்சகர் பூரண கும்ப மரியாதையுடன் இளவரசிக்கு ஆரத்தி எடுத்து, ஆசீர்வாதம் செய்தவுடன், இளவரசி யானை மீது அம்பாரியில் உட்கார்ந்தாள்.

மறுகணமே அனைத்து வாத்தியங்களும் தங்கள் உச்சத்தில் பிளிற, யானை மெதுவாக நடக்க ஆரம்பித் தது. மன்னன் தனது மகளைப் பார்த்துக் கையசைத்து ஆசீர்வசித்து, பிறகு ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட் டான்.

இளவரசி சந்திரவதனா, அச்சுதப்பன், தலைமையி லான படை வீரர்கள் பின் தொடர, கங்கை கொண்ட சோழபுரம் நோக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

அதே சமயம் மதுரை மன்னன் சொக்கநாத நாயக் கனும், அவன் நண்பன் வெங்கட கிருஷ்ணனும் கங்கை கொண்ட சோழபுரத்தை நெருங்கிக் கொண்டிருந்தனர்.

26

மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனும் அவனது உயிர்த் தோழனான வெங்கட கிருஷ்ணனும், மதுரையில் இருந்து கிளம்பி வந்து ஒரு வாரத்திற்கு மேலாகி விட்டது.

முதலில் திருச்சிராப்பள்ளிக்கு வந்து சேர்ந்த அவர்கள் கோட்டையின் பலத்தையும், பாதுகாப்பையும் பார்வையிட்டனர். சொக்கநாதன் கோட்டைத் தலைவனிடம் அந்தப் பகுதியிலுள்ள நிலவரங்களையும், வரி வசூல், கோயில்களுக்கு அளிக்கப்படும் நிவந்தங்கள், குடிமக்களுடைய வசதிகளுக்கு செய்ய வேண்டிய கடமைகள் இவற்றை எல்லாம் விசாரித்து, தேவைப்படும் உத்தரவுகளைப் பிறப்பித்தான்.

பின்னர் அங்கிருந்து திருவரங்கம் சென்று இறைவனைச் சேவித்துவிட்டு, அந்த வழியாக மதுரைக்குச் சென்று விடுவதாகக் கோட்டைத் தலைவனிடம் சொல்லி விட்டுச் சொக்கநாதனும் வெங்கட கிருஷ்ணனும் திருச்சிராப்பள்ளியின் எல்லையைத்தாண்டி, காட்டுப் பகுதிக்குள் வந்தனர்.

''சொக்கநாதா! எதற்காக இந்தக் காட்டுப்பகுதிக்குள் வந்தாய்? காவிரிக்கரையில் இருந்து சற்றுக் கிழக்காக ஒரு ராஜபாட்டை செல்கிறது. அந்த வழியாகச் சென்றால் நேரே தஞ்சாவூருக்குச் சென்று விடலாமே!'' என்றான் வெங்கட கிருஷ்ணன்.

''நாம் இப்பொழுது நேரே தஞ்சாவூர் செல்லப் போவதில்லை!''

"தஞ்சைக்குச் செல்வதுதானே உன் திட்டம்? அதை விடுத்து வேறு எங்கே செல்லப் போகிறாய்?"

''தஞ்சைதான் நமது கடைசி இலக்கு. அதற்கு முன் கங்கைகொண்ட சோழபுரம் வழியாக கும்பகோணம் செல்வோம். அங்கிருந்து தஞ்சாவூர் செல்ல நினைக்கிறேன்."

''எதற்கு இவ்வளவு சுற்று?"

''தஞ்சை அரசாட்சிக்குட்பட்ட பகுதிகளில் கும்பகோணம் மிக முக்கியமான இடம். இந்தப் பகுதிகளில் உள்ள மக்களிடம் மெதுவாகப் பேசிப் பார்த்தால் விஜய ராகவ நாயக்கனின் ஆட்சிமுறை, அவனுடைய பலம், அவனது ஆசாபாசங்கள் என்று சகல விவரங்களையும் தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று நினைக்கிறேன்."

''அதுவும் நல்ல யோசனைதான்."

"அதனால் முதலில் இந்த ஆடம்பரமான ஆடைகளைக் களைந்துவிட்டு எளிமையான உடைகளை அணிந்து கொள்வோம்."

இருவரும் மிகச் சாதாரண குடியானவர்களைப் போல எளிமையான சற்று அழுக்கேறிக் காணப்பட்ட ஆடைகளை உடுத்திக் கொண்டனர் இடுப்பின் ஒரு பக்கம் இருந்த குறுவாளும், மறுபக்கம் நீளமாகத் தொங்கிக் கிடக்கும் உடைவாளும் வெளியே தெரியாத அளவுக்குத் தங்கள் ஆடைகளால் மறைத்துக் கொண்டனர்.

மாறுவேடம் புனைந்த இருவரும், ஒருவர் உருவத்தைப் பார்த்து மற்றவர் திருப்தி அடைந்த பின்னர், தங்களது புரவிகளில் ஏறி, காட்டுப்பாதைகளின் வழியே

குதிரைகளைக் கடுவேகமாகச் செலுத்திக் கங்கை கொண்ட சோழபுரம் வந்து சேர்ந்தனர்.

காட்டுப் பகுதியாக இருந்த அந்த இடத்தில் கோயிலின் கோபுரம் கம்பீரமாகக் காணப்பட்டது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஆள் நடமாட்டமோ, குடியிருப்புகளோ தென்படவில்லை

இரண்டாவது பிரஹதீஸ்வரர் என்றும், கங்கை கொண்ட சோழீஸ்வரர் என்றும் அழைக்கப்படும் அந்தக் கோயிலுக்குள் சென்று பார்த்தனர்.

கோயிலின் பல இடங்கள் பாழடைந்து போய்க் காணப்பட்டன. இருவரும் சென்று இறைவனைச் சேவித்தனர். மறுபடியும் வெளியே வந்து கோயிலைச் சுற்றிப் பார்த்தனர்.

"இந்தக் கோயிலின் கதியை பார்த்தாயா வெங்கட கிருஷ்ணா! ஒரு காலத்தில் சோழ மன்னனின் தலை நகராகச் சீரும் சிறப்புமாக இருந்த இடம் இன்று சிந்து வாரற்றுப் போய்க் கிடக்கிறது கோலாகலமாக இருந்த ஊரில் இன்று குடி இருப்பதற்குக் கூட ஒரு ஆள் இல்லை. இதனைப் பார்க்கும் பொழுது, தான் என்ற மமதை எவனுக்கும் அற்றுப் போய்விடும்.''

''உண்மை சொக்கநாதா! இந்த உலகில் எதுவுமே நிரந்தரமில்லை என்று இதைப் பார்க்கும் பொழுது தோன்றுகிறது."

''சோழ மன்னன் குடியிருந்த அரண்மனை இப் பொழுது முற்றிலும் நொறுங்கிப் போய் மண்மேடாகக் காட்சி அளிக்கிறது பார்த்தாயா! நாம் வரும் வழியில் வாணடிப்பட்டம் என்று ஒரு சிற்றூரைப் பார்த்தோமே நினைவிருக்கிறதா? அங்குதான் இந்தக் கோயிலுக்கான

திருவிழாக் காலத்தின் போது வாண வேடிக்கைகள் விமரிசையாக நடைபெறுமாம். இப்பொழுது அந்த இடம் எப்படி இருக்கிறதென்று பார்த்தாயா? வானளாவிய கோபுரங்களும், வனப்பு மிகுந்த மாளிகைகளும், வலிமை மிகுந்த கோட்டைகளும், ஒருநாள் மண்ணோடு மண்ணாக மக்கிச் சீரழிந்துவிடும் என்ற மாபெரும் உண்மையினை உணராது மதிகெட்ட மாந்தர் அடையும் செருக்கு எத்தனை தவறு என்று இவை உணர்த்துவது போல் தோன்றுகிறது."

"அதுமட்டுமில்லை சொக்கநாதா! எந்த உறவும் எந்தப் பகையும் யுகம் யுகமாக நீடித்ததில்லை என்றும் இதிலிருந்து நீ புரிந்து கொள்ள வேண்டும்."

"என்ன சொல்கிறாய் கிருஷ்ணா?"

"எப்போதோ நமக்கும் தஞ்சைக்கும் ஏற்பட்ட பகை இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்கும்? காலப் போக்கில் இந்தப் பகை நெருக்கமான உறவாகக் கூட மாறலாம்."

"ஒரு காலத்தில் மாறினாலும் மாறலாம். ஆனால் என் காலத்தில் அது நிச்சயம் மாறாது. விஜயராகவ நாயக்கனின் வம்சத்தை அடியோடு அழிக்க வேண்டும் என்று என் மனம் எந்நேரமும் ஓலமிட்டுக் கொண்டு இருக்கிறது. அது காலத்தால் நிச்சயம் அழியாது."

"எதனையும் உறுதியாகச் சொல்லாதே சொக்கநாதா! விஜயராகவ நாயக்கனின் மகளான தஞ்சை இளவரசி சந்திரவதனா தேவியை நேரில் பார்த்து விட்டால் உன் மனம் அடியோடு மாறினாலும் மாறலாம்."

"ஆரம்பித்துவிட்டாயா உன் கேலிப் பேச்சை! அந்தக் கழுதையைப் பற்றி இனி என்னிடம் பேசாதே என்று பலமுறை எச்சரித்தும் நீ கேட்க மாட்டேன் என்

கிறாய்! இனி ஒரு தடவை அவளைப் பற்றி என்னிடம் நீ பேசினால், உன்னை இந்த இடத்திலேயே விட்டு விட்டு, நான் மட்டும் தனியாகத் தஞ்சாவூருக்கு கிளம்பி விடுவேன். ஜாக்கிரதை!" என்று கோபமாகச் சொன்னான் சொக்கநாதன்.

"ஐயையோ! அப்படி மட்டும் செய்துவிடாதே சொக்கநாதா! தனியாக தஞ்சைக்கு சென்று அந்தத் தையலைப் பார்த்து மையல் கொண்டு மயங்கி விழுந்து விட்டால், உன்னை யார் தூக்கி வருவது?"

இதைக் கேட்டவுடன் சொக்கநாதன் அவன் காதைப் பலமாகத் திருகினான்.

"இதற்கு மேலும் அவளைப் பற்றி பேசினால் உன் நாக்கை அறுத்துவிடுவேன். என் கோபத்தைக் கிளறாதே! நிஜமாகவே அந்தக் கழுதை பெயரைச் சொன்னால் கூட எனக்குப் பிடிக்கவில்லை என்பதனை முதலில் நீ புரிந்து கொள். என் பாட்டனார் திருமலை மன்னருக்கு நேர்ந்த அவமானங்கள் இன்னமும் என் நெஞ்சை அரித்துக் கொண்டிருக்கின்றன. அவள் எப்பேர்ப்பட்ட அழகியாக இருந்தாலும் என் மனம் விரும்பாது. சொன்னால் நீ கேட்க மாட்டாய். அதனால் இப்படியே நீ திரும்பி மதுரைக்குப் போய் விடு. நான் மட்டும் போய்க் கொள்கிறேன்," என்று சொக்கநாதன் முகத்தைத் திருப்பிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

வெங்கடகிருஷ்ணன் உடனே பதறிப் போய் சொக்கநாதன் கரத்தைப் பற்றி நிறுத்தினான்.

"கோபித்துக் கொள்ளாதே சொக்கநாதா! என்னை மன்னித்துவிடு. இனி நானும் அந்தக் கழுதையைப் பற்றிப் பேசமாட்டேன்."

சொக்கநாதன் சிரித்தவாறு மறுபடியும் அவன் காதைப் பிடித்துத் திருகினான். வெங்கட கிருஷ்ணன் வலியுடன் சிரித்தான்.

இருவரும் கோயிலில் இருந்து வெளியேறி, புரவிகள் நிறுத்தி இருந்த இடதத்திற்கு வந்தனர்.

"நேரே கும்பகோணம் செல்ல வேண்டியதுதானே ?' என்றான் வெங்கடகிருஷ்ணன்.

"இல்லை கிருஷ்ணா! எனக்கு மிகவும் அலுப்பாக இருக்கிறது இரண்டு நாட்கள் இந்த இடத்தில் தங்கி ஓய்வெடுத்து விட்டு அப்புறம் செல்லலாமே!"

''எங்கே தங்குவது? இந்தக் கோயிலுக்குள்ளே தங்கிக் கொள்வோமா?''

"கோயிலுக்குள் மட்டும் தங்கவேண்டாம் கிருஷ்ணா! தினமும் யாராவது பக்தர்கள் வந்துகொண்டு இருப்பார்கள். பக்தர்களின் போர்வையில் தஞ்சை ஒற்றர்கள் கூட வரலாம். நாம் தொடர்ந்து இரண்டு நாட்கள் இங்கே தங்குவது அவர்கள் கவனத்தைக் கவரலாம்."

''வேறு எங்கே தங்குவது! சிற்றூராக இருக்கிறது. சத்திரம் எதுவும் இருப்பது போலவும் தோன்றவில்லை.''

''கோயிலைத்தாண்டி இருக்கும் காட்டுப்பகுதியில் தங்கலாம். அது தான் நமக்குப் பாதுகாப்பும் கூட."

இருவரும் தங்களது குதிரைகளைக் கோயிலுக்குப் பின்புறம் அடர்ந்து இருக்கும் காட்டுப் பகுதியில் செலுத்தினர் சுமார் ஒரு கல் தொலைவு உள்ளே நுழைந்ததும் சொக்கநாதன் அந்தப் பகுதியினைச் சுற்றிலும் பார்வையை ஓடவிட்டான்.

அத்தி, அரசு, ஆல், புளிமா, சந்தனம், எலுமிச்சை, வெண்கடம்பு, அசோகம், மகிழம், கூவிளம், சீந்தில், விளா, இராசாதனம், மா, புன்னை, பூவரசு, புளி, சண்பகம், கடம்பு, கோகாமிரம், சரளம், மாதுளை, கடு, பிசடம், சிஞ்சுபம், சிம்பு, இலந்தை, வேம்பு, தாரத்தை,

பாலை, பேரீந்து, புன்கு, பேயத்தி, மலையத்தி, சிம்பலம் வள்ளிக்கொடி, நெல்லி, கமுகு, தென்னை, வாழை, கருங்காலி, தேக்கு, கோங்கு, பெருவாகை, மருதோன்றி இலுப்பை. மருது, புரசு, வன்னி, தேவதாறா என்று பல விதமான மரங்களும் படர்செடிகளும், கொத்துச் செடிகளும், சிறு தூறுகளும், கொடிகளும் நிறைந்து காணப் பட்டன இவற்றை அரணாகக் கொண்டது போன்று ஒரு பெரிய இடம் தங்குவதற்கு வசதியாக காணப் பட்டது.

"எத்தனை விதமான மரங்கள் பார்த்தாயா சொக்கநாதா! எண்ணற்ற கனிச் செல்வங்களை வாரி வழங்குவதனால்தான் இந்த மரங்களுக்கு வனஸ்பதி என்று சமஸ்கிருதத்தில் சொல்கிறார்களோ?"

* "இல்லை கிருஷ்ணா! பூக்களே இல்லாமல் பழங்கள் மட்டும் தரும் மரங்களுக்குத்தான் வனஸ்பதி என்று பெயர். அதாவது காடுகளின் தலைவன் என்று பொருள். 'பூக்களும், பழங்களும் சேர்ந்து தருகின்ற மரங்களுக்கு விருட்சம் என்று பெயர். இதனை மனுநீதி நூல் தெளிவாகச் சொல்கிறது."

"இந்த இடத்தைப் பார்த்தாலே மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. நாம் இங்கேயே தங்கிக் கொள்ளலாம் சொக்கநாதா!"

இருவரும் சிறிய கூடாரம் ஒன்றை அமைத்தனர்.

மாலை கதிரவன் மெதுவாக மயங்கி கொஞ்சம் கொஞ்சமாக இருள் சூழத் தொடங்கியது. பல்வேறு

(Thosetrees which bear fruit without flowers are called Vanaspathic lords of the forest); but those which bear both flowers and fruits are called Vriksha-Laws of Manu-Translated by G. Buhler - Edited by F. Max Muller- Page No. 16.

திக்குகளிலும் பறந்து சென்ற புள்ளினங்கள் அலுத்துப் போய்த் தங்கள் கூடுகளுக்குத் திரும்பி வந்தன. கொஞ்சம் கொஞ்சமாகப் பறவைகளின் ஒலிகள் குறைந்து அங்கு அமைதி ஆட்சி செய்யத் தொடங்கியது.

துஷ்ட மிருகங்கள் அருகில் வந்து விடாமல் இருக்கும் பொருட்டு பாதுகாப்பிற்காகக் கூடாரத்தின் அருகே தீ மூட்டினர். அருகில் இருந்த காய்ந்த சுள்ளிகளையும், சருகுகளையும் போட்டு தீயை நன்றாக வளரவிட்டு அதனருகில் குளிர் காய்ந்தவாறு சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் உட்கார்ந்தனர்.

"என்ன சொக்கநாதா, நீண்ட நேரம் மௌனமாகவே இருக்கிறாயே! என் மீது ஏதாவது கோபமா?" என்றான் வெங்கடகிருஷ்ணன்.

''கோபமா? உன் மீதா? எதற்கு?''

"சற்று நேரத்திற்கு முன் தஞ்சை இளவரசி சந்திரவதனாதேவியைப் பற்றி உன்னிடம் கேலி செய்தேனே, அந்தக் கோபம்தானோ?''

"சேச்சே! அப்பொழுது நிஜமாகவே கோபம் இருந்தது, அதன் பிறகு அதனை மறந்து விட்டேன். இப்பொழுது ரம்யமான நேரம்! அழகான சூழ்நிலை! இந்த நேரத்தில் மறுபடியும் அந்தக் கழுதையைப் பற்றிய பேச்சை எடுத்து விடாதே!''

''நீண்ட நேரம் சிந்தித்தபடி இருக்கிறாயே! நான் ஒருவன் அருகில் இருப்பது கூட உணராமல் அப்படி என்ன நினைக்கிறாய் என்று ஒரு கணம் என் மனம் வேதனையுற்றது.''

" என் மனம் முழுக்க நான் நினைத்த காரியம் வெற்றிகரமாக நடக்கவேண்டுமே! அதனை எப்படிச் செயலாற்றுவது, விஜயராகவ நாயக்கனுக்குப் பிடித்தமான பொருள்

என்ன, அதனை எப்படிக்கவர்ந்து வருவது என்பதில்தான் ஆழ்ந்திருக்கிறது.''

"உன் ஆர்வத்திற்கும், முயற்சிக்கும் என்றுமே தோல்வி ஏற்பட்டதில்லை சொக்கநாதா! நிச்சயம் இதிலும் வெற்றி அடையத்தான் போகிறாய். அது இருக்கட்டும்! அன்று நாம் போர்ப்பயிற்சி முடிந்து அரண்மனைக்குத் திரும்பிவரும் பொழுது ஒரு அழகிய பெண் பல்லக்கில் செல்வதைப் பார்த்தோமே, அவள் யார் என்று தெரிந்து கொண்டாயா?"

சொக்கநாதன் முகம் உடனே மலரத் தொடங்கியது. ''அவள் வேறுயாரும் இல்லை கிருஷ்ணா! நமது தளபதி லிங்கம் நாயக்கர் இருந்தாரே, அவர் மகள் முத்துநகைதான் அந்தப் பெண். சிறுவயதில் நமது அரண்மனையில் வளர்ந்த அவளை நீ கூடப் பார்த்திருக்கிறாயே!"

"அந்தப் பெண்தானா! அவளுக்கு அன்னமுத்து என்றல்லவா பெயர்?"

''இட்டபெயர் அன்னமுத்து. சந்திரகிரியில் அவளை மங்கா என்று அழைத்தார்களாம். என் அன்னைக்கு இரண்டுமே பிடிக்கவில்லையாம். முத்துநகை என்று புதுப்பெயர் வைத்திருக்கிறாராம்."

"இவ்வளவு காலம் சந்திரகிரியில் இருந்த அவள் இப்பொழுது எதற்கு இங்கு வந்திருக்கிறாளாம்?"

இதற்கு உடனே பதில் சொல்லாமல் சொக்கநாதன் முகம் சிவந்தது. சற்றுத் தடுமாறி, "அவளை எனக்கு மணமுடிப்பதற்காக மதுரைக்கு வரவழைத்திருக்கிறார் அன்னை!" என்றான்.

சொக்கநாதன் சற்று நேரம் தயங்கினான். மனம் முழுக்க அன்று நடந்த நிகழ்ச்சிகளில் வட்டமிட்டது.

"உன்னிடம் அதைப் பற்றிச் சொல்லவேண்டும் என்று தான் நினைத்திருந்தேன் கிருஷ்ணா. நாம் கிளம்புவதற்கு முதல் நாள் மாலை நான் உப்பரிகையில் அமர்ந்து வாளைத் துடைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது மேலிருந்து என் தலையில் மல்லிகை மலர்கள் கொட்டியது..." என்று அன்று நடந்த சம்பவங்கள் முழுக்கச் சொல்லி முடித்தான்.

கேட்டு முடித்த கிருஷ்ணன் உணர்ச்சிப் பெருக்கில் சொக்கநாதனின் கரத்தைப் பலமாக அழுத்தி, "அந்தப் பெண் உன்னை எவ்வளவு தீவிரமாகக் காதலிக்கிறாள்! அப்படிப்பட்ட பெண்ணை மனைவியாக அடைய நீதான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்! இருந்தாலும் அவளுக்குள் உன்னைப் பற்றி ஒருபயம் இருக்கிறது என்று தெரிகிறது," என்றான்.

'அப்படி என்ன பயம்? திருவரங்கம் செல்லத்தான் வேண்டுமா என்று பயந்து பயந்து கேட்டாள் அதுதான் எனக்குப் புரியவில்லை! கடைசியாக 'அவள் எங்கு சென்றாலும் உங்களுக்காக ஒருத்தி இங்கே காத்திருக்கிறாள் என்பதை மட்டும் மறக்காதீர்கள்' என்று சொல்லி விட்டு நகர்ந்து விட்டாள். எதற்காக அப்படிப் பயந்து பேசினாள் என்றும் புரியவில்லை."

"இன்னுமா புரியவில்லை சொக்கநாதா? உனது அன்னை அதற்கு முதல்நாள் தஞ்சை இளவரசியைப் பற்றியும், அவள் அழகினைப் பார்த்து நீ மயங்கி விடுவாயோ என்ற பொருளில் பயத்துடன் உன்னிடம் பேசி இருக்கிறார். அதனை முத்துநகை உள்ளறையில் இருந்து நிச்சயம் கேட்டிருப்பாள். தன்னை மணக்கப் போகிறவன் வேறு ஒரு பெண்ணின் அழகில் மயங்கித் தன்னை மறந்து விடுவானோ என்ற பயம் எந்தப் பெண்ணிற்கும் இருக்கத்தானே செய்யும்! அதனை உன்னிடம்

நேரிடையாகப் பேசுவதற்கும் பயமாக இருந்திருக்கும். நான் நினைக்கிறேன். முத்துநகை உன்னிடம் வந்து பேசுவதற்காகவே, வேண்டும் என்றே மாடியில் இருந்து மல்லிகை மலர்களைக் கொட்டி இருப்பாள்"

"நீ எல்லாவற்றையும் அளவுக்கு அதிகமாக கற்பனையில் பார்க்கிறாய். தஞ்சை இளவரசி எவ்வளவு பெரிய அழகியாக இருந்தாலும் என் மனதை அவளால் அசைக்க முடியாது. அதுமட்டும் நிச்சயம்."

"அப்படியே நீ ஒருவேளை அசைந்து விட்டாலும்! இந்தப்பெண் முத்துநகையை மட்டும் ஏமாற்றிவிடாதே, உன் மீது காதல் மட்டுமல்ல, கண் மூடித்தனமான பக்தியும் வைத்திருக்கிறாள்!"

"கவலைப்படாதே! அப்படி ஒன்று நடக்கவே நடக்காது."

இவர்கள் பேசிக் கொண்டிருந்த அதே வேளையில் தஞ்சை இளவரசி சந்திரவதனா பெரும்படை ஒன்று பின் தொடர கங்கைகொண்ட சோழபுரம் கோயிலின் முன் வந்து இறங்கினாள்.

மறுநாள்தான் எத்தனை விநோதமான சம்பவங்கள் நடந்து முடிந்தன.

27

கங்கை கொண்ட சோழபுரத்தின் கோயிலைச் சுற்றிய பகுதிகள் இருண்டு போய் அமானுஷ்யமாகக் காட்சி அளித்தன.

இருள் கவிந்து முதல் ஜாமம் முடியும் தறுவாயில் தஞ்சை இளவரசி சந்திரவதனாவைத் தாங்கிய சிவிகை, கோயிலின் முன் கொண்டு வந்து இறக்கி வைக்கப்பட்டது.

அடுத்த வினாடி அத்தனை வாத்தியங்களும் உச்ச சுதியில் பிளந்து கட்ட ஆரம்பித்தன. பல்லக்கு முன்னால் நின்றிருந்த யானை தனது தும்பிக்கையை உயர்த்திப் பிளிற ஆரம்பித்தது. அமானுஷ்ய அமைதியை இரண்டாகக் கிழிப்பது போல் இந்தக் கூக்குரல்கள் திடீரென்று எழுந்ததால், கோயிலின் கோபுரத்தில் தூங்கிக் கொண்டிருந்த பறவைகள் திடுக்கிட்டு விழித்து, சடசடத்துப் பறக்க ஆரம்பித்தன.

இளவரசி அமர்ந்திருந்த பல்லக்கிற்குச் சற்று அருகில், அவள் பார்வையில் படும்படியாகத் தனது குதிரையில் கம்பீரமாக அமர்ந்தவாறு நெஞ்சை நிமிர்த்தி, ஒரு கையால் லகானைப் பிடித்தவாறு மறுகையால் தனது மீசையைத் தடவிக் கொண்டு இளவரசியையே பார்த்துக் கொண்டிருந்தான் அச்சுதப்பன். சற்று முன்னர் அருந்திய கள் அவனுக்குள் போதையை அளித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது கோயில் கோபுரத்தில் இருந்து பறந்து வந்த கூகை ஒன்று வாத்தியங்களின் அலறலையும், படை வீரர்களின் கூச்சலையும் பார்த்து மிரண்டு, அந்த வீரர்கள் ஏந்தி இருந்த தீவட்டிகளின் வெளிச்சத்தில் கண்கள் கூசி, திசையறியாது பறந்து வந்து அச்சுதப்பன் முகத்தில் வந்து மோதியது.

பெரும் பறவை ஒன்று திடீரென்று மோதியதால் அதிர்ச்சியுற்ற அச்சுதப்பனுக்குக் கள்ளின் போதையும் சேர்ந்து தடுமாற, குதிரையில் இருந்து தடுமாறிக் கீழே விழுந்தான். இதனைப் பார்த்தவுடன் அருகில் இருந்த வீரன் தன்னை மறந்து சிரித்து விட்டான்.

கீழே விழுந்த அச்சுதப்பன் அவசரமாக எழுந்து, தனது உடைகளில் இருந்த தூசியைத் தட்டிவிட்டு, தன்னைப் பார்த்துச் சிரித்த வீரனை முறைத்துப் பார்த்தான். இந்த நிகழ்ச்சியை இளவரசி பார்த்து விட்டாளோ என்று

பதற்றத்துடன் பல்லக்கின் பக்கம் பார்வையைச் செலுத்தினான்.

சந்திரவதனா ஏற்கெனவே இதனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தவள், அச்சுதப்பன் தன் பக்கம் திரும்பிப் பார்ப்பதை அறிந்தவுடன் அவசரமாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

'நல்லவேளை நான் கீழே விழுந்ததை இளவரசி பார்க்கவில்லை' என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்ட அச்சுதப்பன் தன்னைப் பார்த்துச் சிரித்த வீரன் அருகே நெருங்கி முறைத்து, "சிரிக்கவாடா செய்கிறாய். இருஇரு. உன்னை அப்புறம் கவனித்துக் கொள்கிறேன்," என்று கிசுகிசுத்து விட்டுப் படைவீரர்களுக்கு உத்தரவிடத் தொடங்கினான்.

வாத்தியங்களின் ஓசை ஓய்ந்து படைவீரன் ஒருவன் கட்டியம் கூறி முடித்ததும், கோயிலின் அர்ச்சகரும், இளவர யின் வரவு தெரிந்து ஜெயங்கொண்ட சோழபுரத்திலிருந்து வந்திருந்த அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர்களும் பல்லக்கின் அருகே வந்து பணிவுடன் நின்றனர்.

சிவிகையில் இருந்து வெளிப்பட்டாள் சந்திரவதனா. ஆயிரம் நிலவுகள் அவள் அங்கம் முழுவதும் அணிதிரண்டாற்போல, அழகின் வடிவமாக வெளிப்பட்ட இளவரசியைப் பார்த்ததும் அங்கிருந்தவர்கள் கண்ணிமைக்க மறந்து, வியந்து பார்த்தனர்.

"தங்கள் வரவிற்காக காலையில் இருந்து காத்திருக்கிறோம் இளவரசியாரே! அர்த்த ஜாமப் பூஜை முடித்துக் கோயிலின் நடை சாத்த வேண்டிய வேளை நெருங்கி விட்டது. தங்களின் பயண அலுப்புத் தீரக் குளித்துவிட்டு வருவதற்கு வெந்நீர் தயாராக இருக்கிறது தாங்கள் தங்குவதற்காகக் கோயில் வளாகத்தில் சகலவசதிகளுடன்

கூடிய கூடாரம் அமைக்கப்பட்டிருக்கிறது. வாருங்கள்," என்று கோயில் ஸ்தானிகர் பணிவுடன் சொன்னார்.

கோபுரத்தின் உச்சிக்கு நேரே விண்ணில் வந்திருந்த முழுநிலவு கோபுரம் முழுவதையும் தனது அமுத ஒளியால் தழுவிக் கொண்டிருந்தது. இந்தக் காட்சியைக் கண்டு பிரமித்தவளாய் அன்னப்பறவை ஒன்று அடியெடுத்து வைப்பதுபோல், ஒயிலாகக் கோயிலுக்குள் நுழையத் தொடங்கினாள் சந்திரவதனா.

கோயிலுக்குள் ஏராளமான தீவட்டிகள் ஏற்றி வைக்கப்பட்டன. சற்று முன்னர் இருளில் மூழ்கிக்கிடந்த அந்த இடம் இப்பொழுது ஒளி வெள்ளத்தில் ஜொலிக்கத் தொடங்கியது.

இதே நேரத்தில் கோயிலின் பின்பக்கத்தில் இருந்த காட்டுக்குள் கூடாரம் அமைத்துப் படுத்திருந்த சொக்கநாத நாயக்கனும், வெங்கட கிருஷ்ணனும் இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு வந்த பேரொலி கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தனர்.

"சொக்கநாதா என்ன இது சத்தம் ?"

"வாத்தியங்களின் ஓசையை வைத்துப் பார்த்தால், தஞ்சையிலிருந்து யாரோ ஒரு முக்கியமான ஆள் கோயிலுக்கு வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. வா. பார்க்கலாம்."

சொக்கநாதன் கூடாரத்தை விட்டு வெளியே வந்து, அருகில் இருந்த ஒரு பெரிய மரத்தின் மீது ஏறி உச்சிக்குச் சென்று, தூரத்தில் ஒளி வெள்ளத்தில் திகழும் கோயிலைக் கூர்ந்து பார்த்தான் பிறகு அவசரமாக இறங்கி வந்தான்

"கிருஷ்ணா, கோயிலைச் சுற்றி நிறையதீப்பந்தங்கள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. ஏராளமான படை வீரர்கள் தென்படுகிறார்கள். இதனை வைத்துப்

பார்க்கும் பொழுது தஞ்சை மன்னன் குடும்பத்திலிருந்து யாரோ வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒருவேளை விஜயராகவ நாயக்கன் தான் வந்திருக்கிறானோ என்னவோ? நல்ல வாய்ப்பு நம்மைத் தேடி வந்திருக்கிறது வா யாரென்று தெரிந்து வரலாம்."

இருவரும் குதிரைகளில் ஏறி கோயிலின் எல்லை வரை வந்தனர். பின்னர் புரவிகளை மறைவாகக் கட்டி விட்டுத் தங்களது மாறுவேடத்தை ஒரு முறை சரி பார்த்து விட்டு, மெதுவாகக் கோயிலை நோக்கி அடியெடுத்து வைக்கத் தொடங்கினர்.

"பார்த்தாயா கிருஷ்ணா, இங்கு எவ்வளவு படை வீரர்கள் வந்து குவிந்திருக்கிறார்கள் என்று! நாம் இந்நேரம் கோயிலுக்குள் தங்கி இருந்தால் எவ்வளவு ஆபத்தாக இருக்கும் என்று!"

"உண்மைதான் சொக்கநாதா! யார் வந்திருக்கிறார்கள் என்று எப்படி அறிந்து கொள்வது?"

சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் கோயில் வாசலை நோக்கிச் சென்ற அதே வேளையில் இளவரசி சந்திரவதனா தனது பயண அலுப்பு நீங்க, வெந்நீரில் குளித்து முடித்து, அலங்காரங்களைப் புதிதாகப் புனைந்து கோயிலின் சந்நிதானத்திற்குள் நுழைந்து இருந்தாள்.

கங்கைகொண்ட சோழீஸ்வரனின் சன்னிதானத்தில் மங்கல இசைக்கருவிகள் முழங்க பூஜை நடைபெறத் தொடங்கியது சந்திரவதனா கண்களை மூடி இறைவனைத் தொழுதாள்.

தேவாரப் பண் ஒன்றினை அருகில் இருந்த முதியவர் மனமுருகிப் பாடினார். கற்பூர ஆரத்தி காட்டி முடித்ததும் அர்ச்சகர் பணிவுடன் அதனை இளவரசி முன் கொண்டு வந்து நீட்ட, சந்திரவதனா அதனைத்

தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டாள். அவள் மனம் நிறைவடைந்தாற்போல் ஒரு அமைதி உள்ளுக்குள் பரவியது.

அதே நேரம் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் கோயிலின் வாசலுக்கு வந்தார்கள். அதன் முன் இரண்டு காவலர்கள் கையில் ஈட்டியைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

சொக்கநாதன் அவர்களைச் சட்டையே பண்ணாமல் அவர்களைக் கடந்து உள்ளே செல்ல முயன்றான். மறுகினாடி காவலர்களின் ஈட்டிகள் குறுக்காகப் பாய்ந்து அவனைத் தடுத்து நிறுத்தின.

"யாரடா நீ? எங்கே செல்கிறாய்?" காவலர்களில் ஒருவன் அதட்டலாகக் கேட்டான்.

"ம்! மாட்டுக்குப் பால் கறக்கப் போகிறேன்" என்று கிண்டலாகச் சொன்னான் சொக்கநாதன்.

காவலன் உடனே அவனை முறைத்துப் பார்த்தான், "என்னடா கொழுப்பா?"

"பின்னே என்ன ஐயா, இறைவனின் சன்னிதானத்திற்குள் வேறு எதற்கு வருவார்கள்? அர்த்த ஜாமப் பூஜையினை ஏற்கப் போகும் ஆண்டவனை அடியேன் தரிசிக்க வேண்டும். வழி விடுங்கள். முருகா, சீக்கிரம் வா," என்று நண்பனைப் பார்த்து அழைத்தான்.

அடுத்தவர்கள் முன்னிலையில் சொக்கநாதனை 'முத்து' என்றும், வெங்கடகிருஷ்ணனை 'முருகன்' என்று அழைக்க வேண்டும் என்பது அவர்கள் மேற்கொண்டிருந்த திட்டம்.

காவலர்களின் ஈட்டி மறுபடியும் அவர்களைத் தடுத்தது.

"டேய் நில்லுங்கள், நீங்கள் உள்ளே செல்லக் கூடாது."

"கடவுளைத் தரிசிக்கச் செல்வதை காவலர்கள் கட்டுப் படுத்த முடியாது. வழிவிடுங்கள். பூஜை முடிவதற்குள் நாங்கள் போகவேண்டும்."

"உள்ளே இளவரசி சுவாமி தரிசனம் பண்ணிக் கொண்டு இருக்கிறார். அதனால் யாரையும் உள்ளே நுழைய விடாதே என்று எங்கள் படைத் தலைவர் உத்தர விட்டிருக்கிறார். எனவே மரியாதையாக நீங்கள் போய் விடுவது நல்லது."

"இளவரசி என்றால் தஞ்சை இளவரசியா?" என் றான் சொக்கநாதன்.

"ஆமாம்."

"இளவரசி சந்திரவதனா தேவியா?" என்று ஆவல் பொங்கக் கேட்டான் வெங்கடகிருஷ்ணன்.

"ஆமாமடா மடையர்களே! எத்தனை தடவை சொல்வது?"

சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்து பொருள் பொதிந்த பார்வை ஒன்றைப் பரிமாறிக் கொண்டனர்.

சொக்கநாதன் மறுநிமிடம் மிகவும் பணிவுடன் அந்தக் காவலனைப் பார்த்து, "ஐயன்மீர், நாங்கள் நெடுந்தொலைவில் இருந்து வருகிறோம். கங்கை கொண்ட சோழீஸ்வரனை ஒரு மண்டலம் ஒரு பூஜை கூடத் தவறவிடாமல் சேவிக்க வேண்டும் என்பது எங்கள் நேர்த்திக் கடன். இன்றைய பகல் பூஜைகள் அனைத் தையும் தவறவிடாமல் தரிசித்து விட்டோம். இந்த அர்த்தஜாமப் பூஜையை மட்டும் தவறவிட்டுவிட்டால்

எங்களது நேர்த்திக் கடன் பாதிக்கும். அதனால் தயை கூர்ந்து எங்களை அனுமதியுங்கள் பிரபோ!'' என்றான்

"இளவரசியார் சற்று முன்னர்தான் இங்கு வந்து சேர்ந்திருக்கிறார். இன்று இங்கேதான் தங்கப் போகிறார். நாளைக் காலையில் இறைவனை வணங்கிய பிறகு தஞ்சைக்குக் கிளம்பி விடுவார். அதற்குப் பிறகு தங்கள் நேர்த்திக் கடனைத் தொடருங்கள். இப்பொழுது உங்களை நாங்கள் உள்ளே விட்டால் எங்கள் படைத் தலைவர் அச்சுதப்ப நாயக்கன் எங்கள் தலைகளை வெளியே எடுத்து விடுவார். அதனால் இந்த இடத்தில் கூட நீங்கள் நிற்காதீர்கள். போய் விடுங்கள்.''

"தஞ்சைத் தளவாய் ரங்கப்ப நாயக்கனின் அருமை மைந்தன் அச்சுதப்ப நாயக்கனா இங்கு இளவரசியுடன் வந்திருக்கிறார்?'' என்றான் சொக்கநாதன்.

"ஆம். அவரைப் பற்றி உனக்குத் தெரியும் இல்லையா?''

''தெரியும். கிறுக்கன் என்று'' என்று சன்னமான குரலில் வெங்கட கிருஷ்ணனைப் பார்த்துச் சொன்னான்.

''என்னடா வாய்க்குள் முணுமுணுக்கிறாய்?" கோபத்துடன் அந்தக் காவலன் கேட்டான்.

''ஒன்றுமில்லை. அச்சுதப்பனைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். நேரில் பார்த்ததில்லை என்று என் நண்பனிடம் வருத்தப்பட்டேன்."

''ஆமாம். அச்சுதப்பரும் நிறைய வருத்தப்பட்டாராம். உங்கள் இருவரையும் பார்த்ததில்லையே என்று! போங்கடா போங்க!'' என்று மற்றொரு காவலன் எரிச்சலுடன் சொன்னான்.

''தஞ்சை மன்னரும் வந்திருக்கிறாரா?''

''ஏன், மன்னருக்கும் குறைந்து மற்றவர்களிடம் நீங்கள் பேசமாட்டீர்களோ ?'' இடக்காகக் கேட்டான்.

''இல்லை தெரிந்து கொள்ளலாம் என்றுதான்...''

''மன்னர் வரவில்லை இளவரசியார் மட்டும்தான்...'' என்று சொல்ல ஆரம்பித்த காவலனை மற்றவன் அவசரமாகத் தடுத்தான்.

''இவர் பெரிய சக்ரவர்த்தி ! இவருக்கு இங்கே யார் யார் வந்திருக்கிறார்கள் என்று விரிவாகச் சொல்கிறாயாக்கும் ! உங்களுக்கு எதற்கடா அந்த வேலை? உள்ளே நுழையக்கூடாது என்றால் மரியாதையாகப் போய்விட வேண்டியதுதானே ? ஆண்டிக்கு எதற்கு அம்பாரக் கணக்கு ?''

''தயவு பண்ணுங்கள் பிரபு ! இளவரசியாருக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒரு ஓரத்தில் நின்று இறைவனைத் தரிசித்து விட்டு ஓசையே ஏற்படுத்தாமல் திரும்பி விடுகிறோம்.''

''டேய், மரியாதையாகச் சொன்னால் போக மாட்டீர்களா ? என்டா, இன்னும் வேடிக்கைப் பார்க்கிறாய்? இவர்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளு,'' என்று அந்தக் காவலன் கூற, இருவரும் சேர்ந்து ஈட்டிக் கம்பிகளை சொக்கநாதன், வெங்கடகிருஷ்ணன் இருவரது மார்புகளில் அழுத்தி அவர்களை வெளியே தள்ள முயன்றார்கள்.

சரியாக அதே சமயம் இளவரசி சந்திரவதனா கங்கை கொண்ட சோழீஸ்வரனைத் தரிசித்து முடித்துவிட்டு, ஓய்வு எடுப்பதற்காகப் பிராகாரத்தின் மூலையில் இளவரசிக்கு என்றே தனியே அமைக்கப்பட்டிருந்த கூடாரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள்

அருகே அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர்களும், கோயில் அர்ச்சகரும் வந்து கொண்டிருந்தனர். இவர்கள் அனை வருக்கும முன்னால் இளவரசியை வழி நடத்திச் செல்பவன் போல், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு, ஒரு கையால் வாளின் பிடியை உறுதியாகப் பற்றிக் கொண்டு, ஒய்யார மாக நடந்து கொண்டிருந்தான் அச்சுதப்பன்.

கோயிலின் வாசலுக்கு நேரில் உள்ள பிராகாரப் பகுதி யினை அவர்கள் கடக்கும் பொழுது, சொக்கநாதன், வெங்கடகிருஷ்ணனைக் காவலர்கள் வெளியே தள்ளிக் கொண்டிருந்த காட்சியினை அவர்கள் காண நேர்ந்தது.

''அங்கே என்ன அமளி?'' என்று இளவரசி கையை நீட்டிக் கேட்டாள்.

மறுவினாடியே அச்சுதப்பன் இளவரசியின் அருகில் நின்றவாறு வாயிலில் நிற்கும் காவலர்களைப் பார்த்து உரத்த குரலில் கேட்டான்.

''டேய் மடையர்களே! இளவரசியார் வருகிறார் என்ற அறிவு இல்லையா? அங்கே என்னடா கூச்சல்?''

இளவரசியைப் பார்த்ததும் காவலர்கள் சற்று வெல வெலத்து, "யாரோ வெளியூரில் இருந்து வந்த யாத்ரீகர் ளாம். சாமி கும்பிட உள்ளே செல்ல வேண்டும் என்று அடம்பிடிக்கிறார்கள்," என்றார்கள்.

தீவட்டிகளின் வெளிச்சத்திற்கு நடுவே இளவரசி நின்று கொண்டு ருக்கும் காட்சியினைப் பார்த்தும் சொக்கநாதன் ஒரு வினாடி உலகத்தையே மறந்து விட்டான் இப்படி ஒரு அழகா? தீப்பந்தங்களின் வெளிச் சத்தைக் கூட அவள் முக வடிவு மங்கச் செய்கிறதே! இவள் உண்மையிலேயே மனிதப்பெண்தானா?

சற்று மெய் மறந்திருந்த சொக்கநாதனை, அச்சுதப்பனின் இடிக்குரல் தன்னிலைக்குக் கொண்டு வந்தது.

"அவர்கள் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளுங்கள். மறுபடியும் அடம்பிடித்தால் கழுத்தை வெட்டி எறியுங்கள்," என்று தன் வாளைப் பாதி உருவி, மறுபடியும் 'கணார்' என்று ஓசை எழ உறைக்குள் கோபத்துடன் திணித்துவிட்டு, இளவரசியைப் பார்த்துக் குழைவுடன் "பயப்படாமல் வா சந்திரவதனா," என்று சொன்னான்.

இளவரசியுடன் கூட்டமும் நகர்ந்தது. மின்னல் ஒன்று ஒளிவிட்டு மறைந்ததைப் போல் ஒரு உணர்வு சொக்கநாதனுக்குள் எழுந்தது.

அதே நேரம் காவலர்கள் இவர்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளினார்கள். இருவரும் தரையில் தடுமாறி விழுந்தனர்.

"இப்பொழுது என்ன செய்வது முத்து ?" என்று கேட்டான் வெங்கடகிருஷ்ணன்

"ஆண்டவனே அரசாள்பவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கும் பொழுது, ஆண்டிகளான நாம் என்ன செய்யமுடியும் முருகா வா போகலாம். இளவரசியார் இங்கிருந்து கிளம்பிச் சென்ற பிறகு நமது நேர்த்திக் கடனை முதலில் இருந்து தொடங்க வேண்டியதுதான். ஐயன்மீர், சிரமம் கொடுத்ததற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்," என்று வாயிற்காவலர்களைப் பார்த்து வணங்கி விட்டு, வெங்கடகிருஷ்ணனை அழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான் சொக்கநாதன்.

நீண்ட தொலைவு நடந்து இருட்டான பகுதிக்குள் வரும்வரை இருவரும் எதுவுமே பேசவில்லை.

சொக்கநாதன் மனதில் விதவிதமான எண்ணங்கள் அலைபாயத் தொடங்கின. தங்கள் குதிரைகள் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் வந்தவுடன்தான் சொக்கநாதனுக்கு விபரீதமான அந்த எண்ணம் தோன்றியது அதனை உடனே செயல்படுத்தவும் திட்டமிட்டது அவன் மனம்! அதனால் எத்தனை விபரீதங்கள் எழுந்தன !

28

கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில் வாயிலில் காவலர்களால் கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளப்பட்ட சொக்கநாத நாயக்கனும், வெங்கட கிருஷ்ணனும் ஒருவருக்கொருவர் எதுவுமே பேசாமல் நிதானமாக நடந்து கொண்டிருந்தனர்.

சொக்கநாதன் மனம் அலைபாயத் தொடங்கியது.

தஞ்சை இளவரசி சந்திரவதனாவின் அழகைப் பற்றி வெங்கடகிருஷ்ணன் அவனிடம் பலமுறை கூறிய பொழுதெல்லாம், அவன் ஏதோ கேலிக்குச் சொல்கிறான் என்று பலமுறை கோபங்கொண்ட சொக்கநாதன், சற்றுமுன் அவளை நேருக்கு நேர் பார்த்தவுடன் தன்னிலையை அறவே மறந்துவிட்டான்.

சந்திரவதனா இவ்வளவு அழகாக இருப்பாள் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை! மின்னலை எடுத்து அவள் எழிலுருவைப் பிரம்மன் வடிவமைத்திருப்பானோ என்ற மயக்க உணர்வே ஏற்பட்டது

'அங்கே என்ன அமளி' என்று அவள், அவர்கள் நின்றிருந்த இடத்தை நோக்கிக் கை நீட்டிய காட்சி அவனுக்குள் திரும்பத்திரும்ப எழுந்தது. எவ்வளவு மிடுப்பாக எத்தனை ஒய்யாரமாக அவள் நின்றிருந்தாள்! தீப்பந்தங்களின் மங்கிய ஒளியிலேயே இவள் இவ்வளவு அழகாக இருந்தால், பகலில் இவள் வதனம் இன்னும் பளிச்சென்று பிரகாசமாக இருக்குமோ?

சொக்கநாதன் அவளை ஏறிட்டுப் பார்த்தது ஒரு கணம்தான். அதற்குள் காவலர்கள் இவன் கழுத்தைப்

பிடித்துத் தள்ளிவிட்டார்கள். பார்த்த அந்த ஒரு கணத்திலே அவள் அழகு அவன் இதயத்தை ஒரேயடியாக உலுக்கிவிட்டது. கீழே விழுந்த அவன் எழுந்து பார்ப்பதற்குள் அவள் அங்கிருந்து அகன்றுவிட்டாள்.

அவளைக் கண்ணாரப் பார்த்தது நிஜம்தானா? இல்லை கனவா? வானத்தில் இருந்து இறங்கி வந்த தேவதை பளிச் என்று உருவைக் காட்டிவிட்டு உடனே மறைந்தது போன்ற உணர்வு!

அவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கும் பொழுதே இவ்வளவு அழகாக இருந்தால், அவளை நேருக்கு நேர் மிக அருகில் நின்று பார்த்தால் இன்னும் எவ்வளவு அழகாக இருப்பாள்?

தீப்பந்தங்களின் மங்கலான ஒளியில், தூரத்தில் இருந்து பார்க்கும்பொழுது அழகாகத் தெரிந்திருக்கலாம். அருகில் சென்று பார்க்கும்பொழுது சுமாராகத் தோன்றலாம்.

ஒருவேளை நிஜமாகவே அவள் அழகு நெருக்கத்தில் நின்று பார்க்கும் பொழுது சுடர்விட்டுப் பிரகாசித்தால்? எதற்கு இப்படிக் குழப்பிக் கொள்ள வேண்டும்? சந்திரவதனாவின் அருகில் சென்று பார்த்துவிட்டால் தெரிந்து விடுகிறது!

சொக்கநாதனின் மனம் இப்படிக் குழப்பிக் கொண்டிருந்த வேளையில் அவன் அருகில் சற்று நேரம் அமைதியாக வந்து கொண்டிருந்த வெங்கடகிருஷ்ணன் சுற்று முற்றும் பார்த்தான்.

தங்களைத் தொடர்ந்து யாரும் வரவில்லை என்பதையும், அவர்கள் இருக்கும் பகுதியின் நாலாபுறமும் எந்த ஆள் நடமாட்டமும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொண்ட அவன், சொக்கநாதனைப் பார்த்துச் சன்னமான குரலில் பேசத் தொடங்கினான்.

"சொக்கநாதா, தஞ்சை இளவரசியைப் பார்த்தாயா ?"

சொக்கநாதன் பதில் சொல்லாமல் அமைதியாக வந்து கொண்டிருந்தான்.

"என்னிடம் தஞ்சை சென்று வந்த எத்தனையோ பேர் சொல்லி இருக்கிறார்கள். தஞ்சை இளவரசி ஏதோ சுமாரான அழகு படைத்தவளாக இருப்பாள் என்று நினைத்தேன். ஆனால் இவ்வளவு அற்புதமான அழகியாக இருப்பாள் என்று நான் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை."

சொக்கநாதன் அதற்கும் பதில் சொல்லவில்லை.

"பார்த்த ஒரு கணத்திலே நானே பிரமித்துப் போய் விட்டேன். சொக்கநாதா ! இவள் மானுடப்பெண் மாதிரி எனக்குத் தோன்றவில்லை ! கந்தர்வ கன்னி ஒருத்தி காட்சி அளித்து மறைந்தது போன்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது ! இத்தனை சிறந்த அழகியை மணப்பவன் உண்மையிலேயே பெரிய அதிர்ஷ்டசாலிதான் !"

சொக்கநாதன் மௌனமாக வந்தான்.

"அந்த அதிர்ஷ்டசாலி நீயாக ஏன் இருக்கக் கூடாது சொக்கநாதா?"

சொக்கநாதன் அதற்கும் பதில் சொல்லவில்லை. வெங்கடகிருஷ்ணன் அவன் முகத்தை ஏறிட்டுப்பார்த்தான் பிறகு குழப்பத்துடன் சொக்கநாதனின் கரத்தைப் பற்றி நிறுத்தினான்.

"என்ன சொக்கநாதா, பதிலே பேசாமல் வருகிறாய் ? என் மீது கோபமா ?"

அப்பொழுதுதான் தனது சிந்தனைகளில் இருந்து விடுபட்ட சொக்கநாதன் தன்னுணர்வுக்கு வந்து, "என்ன கிருஷ்ணா...? என்ன கேட்டாய் ?" என்றான்.

''சரிதான். நீ இந்த உலகத்திலேயே இல்லையா அப்படி எதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்?"

"இளவரசி சந்திரவதனாவை இப்பொழுதே நேருக்கு நேர் பார்ப்பதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டு இருக்கிறேன்.'

"அதுதானே பார்த்தேன்! சொக்கநாதன் சந்திரவதனாவைப் பார்த்துச் சொக்கிப் போய்விட்டான் என்று இப்பொழுதுதானே புரிகிறது, தூரத்தில் இருந்து பார்த்தே அவள் அழகில் மயங்கிவிட்ட நீ, இப்பொழுது அருகில் சென்று பார்க்க ஆசைப்படுகிறாயாக்கும்!"

''சேச்சே! அப்படி என்ன பெரிய அழகி! நான் ஒன்றும் அவளைப் பார்த்து மயங்கவும் இல்லை, அவளும் நான் மயங்கிவிடத்தக்க பேரழகு படைத்தவளாகவும் தோன்றவில்லை,'' என்று சமாளித்தான்.

''பிறகு எதற்கு அவளை இப்பொழுதே அருகில் சென்று பார்க்க இவ்வளவு துடிக்கிறாய்?"

''எனக்கு அச்சுதப்பன் நம்மைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகள் மனதை அரித்துக் கொண்டிருக்கின்றன கிருஷ்ணா! எவ்வளவு ஆணவமாகப் பேசினான் என்று பார்த்தாயா?''

''உண்மைதான்! அதற்காக அச்சுதப்பனை நேருக்கு நேர் பார்த்து இரண்டு அறை கொடுத்துவிட்டு வர நினைத்தால் அது மெச்சத்தகுந்தது. அதை விடுத்து இளவரசியை எதற்கு நேரில் பார்க்கத் துடிக்கிறாய்?''

''அச்சுதப்பன் சொன்ன விதத்தை நினைத்துப் பார் நாம் நின்றிருந்த இடத்திற்கும், இளவரசி நின்ற இடத்திற்கும் எவ்வளவு தூரம். அவ்வளவு நீண்ட தூரத்தில் நிற்பதற்குக்கூட அனுமதிக்காது கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொன்னான். அடம்பிடித்தால்

கழுத்தை வெட்டி எறியச் சொன்னானே! எவ்வளவு திமிர்! அதற்காகத்தான் பழிவாங்கப் போகிறேன்."

"இளவரசியை நேரில் பார்ப்பதற்கும், அச்சுதப்பனைப் பழிவாங்குவதற்கும் என்ன தொடர்பு? புரியவில்லை சொக்கநாதா!"

"இளவரசி அப்படி என்ன எட்டாக் கனியா? தூரத்திலிருந்து பார்த்ததற்கே இவ்வளவு ஆத்திரப்படுகிறானே, நேருக்கு நேர் நெருக்கமாகப் பார்த்தால் என்ன பண்ணிக் கிழித்துவிடுவான் என்று பார்க்கலாம். இளவரசிக்கும் அப்படி ஒரு திமிர் இருந்தால், அதையும் அடக்கிய மாதிரி இருக்கும் என்ற நினைப்புத்தானே தவிர, அவளை அருகில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கு அறவே கிடையாது."

"நீ சொல்வது ஒருவகையில் சரிதான் சொக்கநாதா! ஆனால் இதனை எப்படி நிறைவேற்றுவது? காவல் பலமாக இருக்கும் போல் தெரிகிறது. நடக்கக் கூடிய காரியம் மாதிரித் தோன்றவில்லையே!"

"நடக்க முடியாததை நடத்திக் காட்டுவதுதான் சொக்கநாதனுக்கு விருப்பம். வா, வழிகிட்டாமல் போகாது."

இருவரும் குதிரைகள் கட்டப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். சொக்கநாதன் அருகில் இருந்த பெரிய மரத்தில் ஏறி உச்சிக்குச் சென்று நீண்ட நேரம் கோயிலையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு வேகமாக இறங்கிவந்தான்.

"கிருஷ்ணா, தெற்குப் பிராகார மூலையில் ஒரு கூடாரம் மட்டும் மிகப் பெரியதாக, அலங்காரமாகத் தெரிகிறது. அதனைச் சுற்றிலும் தீவட்டி வெளிச்சமும், காவலும் அதிகமாகக் காணப்படுகிறது. அந்தக்

கூடாரத்தில்தான் சந்திரவதனா தங்கி இருக்கலாம். வா முதலில் கோயிலின் பின்புற மதிலுக்குச் செல்லலாம்."

இருவரும் புரவிகளை ஓசையில்லாமல் நடத்தியவாறு கோயிலின் பின்புறமுள்ள மதிலருகே வந்தனர். நிலவின் வெளிச்சம் மங்கலாக இருந்தது. மதிலைச் சுற்றிப்புதர்களும், கொடிகளும், மரங்களும் அடர்ந்து இருந்தன.

மிகப்பெரிய மரம் ஒன்று கோபுர உயரத்திற்கு வளர்ந்து, சுற்றிலும் கிளை பரப்பி இருந்தது. அதனை ஏறிட்டுப் பார்த்தான் சொக்கநாதன்.

"கிருஷ்ணா, ஒருவழி புலப்படுகிறது. நீ இந்த இடத்தில் காத்திரு புரவிகள் தயார் நிலையில் மதிலருகேயே நிற்கட்டும். கட்டிப் போடாதே. நான் மட்டும் சென்று வருகிறேன். எத்தனை அமளி எழுந்தாலும்! இந்த இடத்தை விட்டு அகன்று விடாதே!

வெங்கடகிருஷ்ணன் தலையாட்ட, சொக்கநாதன் அந்த மரத்தின் மீது ஏறத் தொடங்கினான். தோளில் கயிற்றுச் சுருள் ஒன்றை மாட்டி இருந்தான்.

மரத்தின் உச்சிக்கு வந்த சொக்கநாதன் கோயில் பகுதி முழுக்க உற்றுப் பார்த்தான். இளவரசியின் கூடாரத்தைச் சுற்றிலும் நிறைய தீவட்டிகள் தென்பட்டன. கூடார வாயிலில் இரண்டு காவலர்கள் கையில் ஈட்டியை ஏந்தியவாறு கண் உறங்காமல் நின்றிருந்தனர்.

அந்தக் கூடாரத்திற்குச் சற்றுத்தள்ளி மற்றொரு கூடாரம் தெரிந்தது. அதில் அநேகமாக அச்சுதப்பன் இருக்கலாம். சுற்றிலும் அமைதி! நேரமோ அர்த்த ஜாமத்தை நெருங்கிக் கொண்டிருந்தது.

சொக்கநாதன் ஏறி இருந்த மரத்தின் பெருங்கிளை ஒன்று இளவரசியின் கூடாரத்திற்கு நேர் மேலே விரிந்

திருந்தது மெதுவாக அந்தக் கிளைக்குத் தவழ்ந்து, கூடாரத்திற்கு நேரில் வந்தான். அங்கிருந்து கூடாரம் சுமார் முப்பதடிக்குக் கீழ் இருந்தது.

தோளில் இருந்த கயிற்றை எடுத்துக் கிளையில் கட்டிக் கீழே தொங்க விட்டான். கயிற்றின் மறுநுனி கூடாரத்தின் கூரை மீது ஓசையின்றி விழுந்தது.

மரத்திலிருந்த பறவைகளின் உறக்கம் கலையாத அளவுக்கு எந்த ஓசையும் எழாமல் கயிறறின் வழியே மெதுவாக இறங்கினான்.

கூடாரத்தின் கூரைக்கு மிக அருகில் வந்ததும் சற்று நிதானித்தான் சுற்றிலும் பார்த்தான். கூடாரத்தைச் சுற்றிலும் இருந்த தீவட்டிகளின் வெளிச்சம் சற்றே மங்கி இருந்ததால், அவை கூரைப்பகுதியில் அறவே விழவில்லை.

இளவரசியின் கூடார வாயிலில் நின்றிருந்த காவலர் களும், அவர்களுக்கு எதிரில் இருந்த அச்சுதப்பனின் கூடார வாயிலில் இருந்த காவலர் களும்கண்ணுறங்காமல் சுற்று முற்றிலும் பார்வைகளை ஓட விட்டிருந்தார்களே தவிர, உச்சியில் அவர்கள் பார்வை செல்லவே இல்லை.

சொக்கநாதன் இதை உணர்ந்தவனாய், கயிற்றைப் பலமாகப் பற்றித் தலைகீழாய்த் தொங்கினான். பின்னர் இரு கால்களாலும் கயிற்றினை வளைத்து, பாதங்களால் கயிற்றை வளைத்து இறுக்கினான்.

பின்னர் கைகளை விடுவித்துத் தலை கீழாய்த் தொங்கிப் பார்த்தான். கயிறு அவன் பாதங்களைப் பிடித்திருந்தது. திருப்தி அடைந்தவனாய் இடுப்பில் இருந்த குறுவாளை உருவினான்.

ஓசையே ஏற்படுத்தாமல் கூடாரத் துணியினைக் கவனமாகக் கிறத் தொடங்கினான்.

இளவரசி சந்திரவதனா சற்று நேரத்திற்கு முன்பாகத்தான் கூடாரத்தினுள் அமைக்கப்பட்டிருந்த படுக்கையில் படுத்து ஓய்வெடுக்கத் தொடங்கினாள்.

நீண்ட தூரப்பயணம் அவளுக்கு அதிகமான அலுப்பை ஏற்படுத்தி இருந்ததால், உணவருந்தி முடித்ததுமே உறக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வந்தது. படுக்கையில் படுத்த சிறிது நேரத்தில் உடலின் அசதி சற்றுக் குறைந்ததுவே தவிர, உறக்கம் உடனே வரவில்லை

கண்களை மூடி யோசித்துக் கொண்டிருந்தாள். இரவின் அமைதியான சூழ்நிலையில் கங்கைகொண்ட சோழீஸ்வரனைத் தரிசித்தது அவள் மனதுக்கு நிறைவையும், சாந்தத்தையும் தந்திருந்தது

சந்திரவதனாவுக்கு உடனே மதுரவாணியின் நினைவு எழுந்தது. பாவம்! அவள் சொல்லப் போய்த்தானே இத்தனை ஏற்பாடுகளும் செய்தோம். கடைசி நிமிடத்தில் அவள் வர இயலாது போய்விட்டதே!

அவளும் வந்திருந்தால் இந்தப்பயணம் எவ்வளவு குதூகலமாக இருந்திருக்கும்! மிகவும் புத்திசாலிப் பெண்! வழியில் பார்க்கும் ஊர்களைப் பற்றி எல்லாம் சொல்லி இருப்பாளே!

பயண அலுப்புத் தோன்றாமல் எத்தனையோ விஷயங்களைப் பேசி இருக்கலாம். இலக்கியம் பற்றி, சங்கீதம் பற்றி, நாட்டியம் பற்றி... அவள் என்னுடன் வராமல் போனது எத்தனை பெரிய இழப்பு!

வழி நெடுக விதர்விதமான ஊர்களையும், வித விதமான மனிதர்களையும், விலங்குகளையும், பறவைகளையும் அவள் பார்த்து ரசித்துத் தனது மனதைப் பறிகொடுத்தவளாய் வந்து கொண்டிருந்தாலும்,

அச்சுதப்பனால் அவ்வப்பொழுது ஏற்பட்ட எரிச்சலுக்கு மட்டும் அளவே இல்லை.

பயணம் ஆரம்பித்தது முதல் அவள் பார்வையில் படும் படியாக அச்சுதப்பன் நடந்துகொண்ட விதமும், காட்டிய தோரணையும், காவலர்களை அனாவசியமாக உத்தர விடுவதும், மிரட்டுவதும் அவளுக்கு ஒருபக்கம் எரிச்சலாக இருந்தாலும், மற்றொரு பக்கம் நாடகத்தில் வரும் விதூஷகனைப் பார்ப்பது மாதிரி உள்ளுக்குள் சிரிப்பாகவும் இருந்தது.

சிவிகையில் அவள் வரும் பொழுது அடிக்கடி தனது குதிரையை அவளருகே கொண்டு வந்து, 'ஏதாவது வேண்டுமா சந்திரவதனா ? பழங்கள் சாப்பிடுகிறாயா ? பானகம் அருந்துகிறாயா ?' என்று நச்சரிப்பான். இல்லா விட்டால் அருகில் தெரியும் ஊரைப் பற்றி என்னென் னவோ கதை அளப்பான். அந்த ஊரில் செயற்கரிய செயல் ஒன்றைச் செய்ததாகப் புளுகுவான்.

இளவரசிக்கு முதல் நாளே அவன் செய்கை வெறுத்து விட்டது. அதனால் பெரும்பாலான நேரங்களில் யானை யின் மேலிருக்கும் அம்பாரியில் போய் அமர்ந்து கொள் வாள். அசதி ஏற்பட்டால் பல்லக்கிற்கு இறங்கி வந்து படுத்துக் கொள்வாள். அச்சுதப்பன் அருகில் வந்து ஏதாவது பேசினால் தூங்குவது மாதிரிப் பாவனை செய் தாள்.

அச்சுதப்பன் தொந்தரவு அப்படியும் நிற்கவில்லை. யானையின் அருகே வந்து நின்று அண்ணாந்து பார்த்து ஏதாவது பேசுவான். சந்திரவதனாவிற்கு இரண்டு நாட் களுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. தன்னையறியாமல் சிரித்தாள்

சந்திரவதனா யானை மேலிருந்த அம்பாரியில் அமர்ந் திருந்தவாறு ஏதோ ஒரு காட்சியை ரசித்துக் கொண்டிருந்

தாள். அப்பொழுது அச்சுதப்பன் நடந்து வந்து யானைப் பாகனிடம் ஏதோ சொல்ல, பாகன் யானையை நிறுத்தினான்.

"சந்திரவதனா, இந்த ஊரில் விளையும் மாதுளம் பழம் மிகவும் ருசியாக இருக்கும். கொண்டுவரச் சொல்லட்டுமா ?" என்றான்.

''வேண்டாம் மாமா ! என் வயிறு நிரம்பி இருக்கிறது."

"ஒரு பழமாவது சாப்பிட்டுப் பார். தேனாக இனிக்கும். இப்படி ஒரு சுவையான பழத்தை இதுவரை நீ சாப்பிட்டு இருக்கவே மாட்டாய். யானையில் இருந்து இறங்கி வா ! பாகா, யானையை மண்டியிடச் செய்."

''வேண்டாம், என்னால் ஒரு முத்து கூடச் சாப்பிட முடியாது. பாகா, யானையை மண்டியிடச் செய்ய வேண்டாம். நான் இறங்கவில்லை."

''எனக்காகவாவது ஒரு பழம் மட்டும் சாப்பிட்டுப் பார்!" என்றவாறு அச்சுதப்பன் யானை மேலிருக்கும் இளவரசியை அண்ணாந்து பார்த்தவாறு உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது நாய் ஒன்று அவனருகே வந்து, அவனது காலருகே தனது காலைத் தூக்கிச் சிறுநீர் கழிக்க ஆரம்பித்தது.

அச்சுதப்பனால் எவ்வளவு தலைவேதனை என்று சலித்த சந்திரவதனா, நாய் ஒன்று அச்சுதப்பன் காலின் மீது சிறுநீர் கழிக்கும் காட்சியினைப் பார்த்ததும், தன்னை மறந்து பலமாகச் சிரித்து விட்டாள்.

அதற்குப் பிறகுதான் தன்னுணர்வுக்கு வந்த அச்சுதப்பனுக்குத் தன் காலின் மீது அசிங்கம் செய்யும் அந்த

நாயைப் பார்த்ததும் அளவு கடந்த ஆத்திரம் வரத் தொடங்கியது. அருகில் இருந்த காவலன் கரத்தில் இருந்த சவுக்கை வாங்கி அந்த நாயை விரட்டி விரட்டி அடிக்கத் தொடங்கினான். அதன் பிறகு நீண்ட நேரம் அவன் அவள் பக்கத்தில் வரவே இல்லை.

இந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்ததும் சந்திர வதனாவிற்கு மறுபடியும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது. மதுரவாணி என்னோடு இருந்திருந்தால் இந்தக் காட்சியைப் பார்த்து எப்படிச் சிரித்திருப்பாள். இதைச் சொன்னாலே நான்கு நாட்களுக்கு நினைத்து நினைத்துச் சிரிப்பாள.

சற்றுநேரத்திற்கு முன்னால் இருட்டில் பறவை ஒன்று மோத, அச்சுதப்பன் குதிரையிலிருந்து தவறி விழுந்த காட்சியும் நினைவுக்கு வர படுக்கையில் படுத்தபடி தன்னை மறந்து சிரித்தாள்.

இப்படிப்பட்ட கோமாளி ஒருவனை எனக்குப் பாதுகாவலாகத் தந்தை அனுப்பி இருக்கிறாரே! என்று எண்ணி, எண்ணிச் சிரித்தாள்.

இளவரசி தன்னை மறந்து சிரித்து கொண்டிருந்த அதே வேளையில் சொக்கநாதன் தலைகீழாய் கயிற்றில் தொங்கியவாறு கூடாரத்தின் மேற்கூரையைக் கத்தியால் ஓசையின்றிக் கிழித்து முடித்தான்.

ஒரு ஆள் நுழையும் அளவுக்கு அதனைக் கிழித்து முடித்ததும், குறுவாளை இடுப்பில் சொருகிக் கொண்டு, கூரைத் துணியைப் பிரித்துப் பார்த்தான். சரியாக அதற்கு நேர்கீழே இளவரசி படுக்கையில் மல்லாந்து படுத்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதே நேரம் நிலவின் ஒளி, கிழிந்த இடத்தின் வழியாகக் கூடாரத்திற்குள் பாய்ந்தது. இளவரசி உடனே அண்ணாந்து பார்த்தாள்.

கூரை கிழிந்து நிலவு தெரிவதும், அதனருகே ஒரு ஆண்மகனின் முகம் தெரிவதையும் பார்த்துத் திடுக்கிட்டு எழுந்தாள்.

மறுவினாடி சொக்கநாதன் அந்த ஓட்டையின் வழியாகப் 'பொத்'தென்று அவள் முன்னால் வந்து குதித்தான். இளவரசி பயத்தில் அந்த இடமே கலகலத்தது போல் 'வீல்' என்று அலறினாள்.

இளவரசியின் அலறலைக் கேட்டு அச்சுதப்பன் திடுக்கிட்டு எழுந்தது மட்டுமின்றி, அங்கிருந்த காவலர்களும் ஓடிவரத் தொடங்கினர்

29

கூடாரத்தின் மேற்பகுதியைக் கிழித்து முடித்து குறுவாளை இடுப்பில் சொருகிக் கொண்டு, துணியை மெதுவாக விலக்கிப் பார்த்த சொக்கநாதன் உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்ததும் ஒரு கணம் திகைத்துப் போய் விட்டான்.

இளவரசி சந்திரவதனா அவன் முகத்திற்கு நேர் கீழ் இருந்த மஞ்சத்தின் மீது எழிலாகப் படுத்துக் கொண்டிருந்தது தெளிவாகத் தெரிந்தது. கூடாரத்தின் கம்பங்களில் மாட்டி வைக்கப்பட்டிருந்த விளக்குகளின் ஒளி அவள் உடல் முழுவதும் பரவி, அவள் அழகின் முழுமையையும் துல்லியமாகக் காட்டிக் கொண்டிருந்தது.

மஞ்சத்தின் மீது மல்லாக்கப் படுத்துக் கிடந்தாள் சந்திரவதனா! அசதி மேலீட்டில் தனது அலங்காரங்களைக் கூடகலைக்காமல் அப்படியே படுத்திருந்தாலும்,

அவள் படுத்து சிறிது நேரமே ஆகி இருந்ததால் அவளது அலங்காரம் கலையாமல் அப்படியே இருந்ததாலும், அவன் பார்ப்பது உண்மையான காட்சியா இல்லை மிகப் பெரும் ஓவியம் ஒன்றை தரையில் விரித்திருக்கிறார்களா என்ற பிரமையை அவனுக்கு ஏற்படுத்தியது.

தன்னை மறந்து அவள் அழகை ரசித்துப் பார்த்தான் சொக்கநாதன்.

செம்பொன்னால் செய்யப்பட்ட சிலை ஒன்று மஞ்சத்தில் கிடப்பது போல் ஒயிலாகப் படுத்திருந்தாள் சந்திர வதனா! சேலை சற்று விலகிக் கிடந்ததால் பாதங்கள் நன்றாகத் தெரிந்தன. பாதங்களின் மேற்பரப்பில் பலவிதமான கோலங்களில் அவள் பூசி இருந்த மருதாணியின் அழகையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது தாமரை மலரின் மீது பொற்கோலங்கள் போட்டதுபோல் தோற்றம் அளித்தன.

ஏராளமான சரிகைகள் மின்ன அவள் காலை இறுகத் தழுவியிருந்த பட்டுச்சேலை ஏற வேண்டிய இடங்களில் ஏறி, ஒடுங்க வேண்டிய இடங்களில் ஒடுங்கி, புடைக்க வேண்டிய இடங்களில் புடைத்து அவள் எழிலை இன்னும் அதிகப்படுத்திக் காட்டியது.

அவளது கரிய தலைமுடி கழுத்தின் வழியாக மேலேறி, அவளது எடுப்பான மார்புகளில் ஏறி, பின்பு சரிவுடன் இறங்கி இடுப்பில் இருந்து வழுக்கிக் கொண்டு, மஞ்சத்தின் கீழே சென்று விழுந்து கிடந்தது. அவளது மற்றொரு பக்க மார்பு விளக்குகளின் ஒளியிலும், சொக்கநாதன் மேற்கூரையை சற்று விலக்கியதால் அந்த இடைவெளி வழியாக எட்டிப் பார்த்த நிலவின் அமுத கிரணங்களாலும் பளபளத்து இவனைப் பார்த்து முறைத்துப் பார்ப்பது போல் தோன்றியது. அதன் கனபரிமாணமும் கூர்மையும் சொக்கநாதன் மனதை படாத பாடு படுத்தின.

சந்திரவதனா என்னதான் மல்லாக்கப் படுத்திருந்த போதிலும், அவளது பருத்த பின்னழகுகள் மஞ்சத்தில் பதிந்து அளவு சற்றும் கோணாமல் திரட்சியாக இருப்பதையும், அந்தத் திரட்சியிலிருந்து வாளிப்பான தொடைகள் நீண்டு பாதங்கள் சற்று மடிந்தாற்போல் இருக்கும் காட்சியினைப் பார்க்கும் பொழுது இளவரசி சந்திரவதனா தனது இடுப்பிற்குக் கீழ் தஞ்சாவூர் வீணை ஒன்றை ஒட்டவைத்துக் கொண்டிருக்கிறாளோ என்ற எண்ணமே அவனுக்குள் எழுந்தது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக விண்ணிலிருந்து வந்த முழு நிலவு அவள் கழுத்துக்கு மேல் ஒட்ட வைக்கப் பட்டிருக்கிறதோ என்று வியக்கும் படியான அவள் முக அழகைப் பார்த்ததும் சொக்கநாதனின் இதயமே ஒரு கணம் துடிக்க மறந்து விட்டது.

எவ்வளவு அழகாக இருக்கிறாள்! ஒரு குழந்தையைப் போல! மாசு மருவற்ற எழிலான முகம். அதில் தான் எத்தனை பெரிய கண்கள்! கூர்மையான மூக்கு! உதடுகளா இவை! எவ்வளவு சிவப்பாக இருக்கின்றன.

சொக்கநாதன் அவள் முகத்தையே உற்று நோக்கித் தன்னை மறந்து லயித்துக் கொண்டிருந்த பொழுதுதான், சந்திரவதனா அச்சுதப்பன் காலின் மீது நாய் ஒன்று சிறுநீர் கழித்த காட்சியை நினைத்து சிரிக்க ஆரம்பித்தாள்.

சொக்கநாதன் திடுக்கிட்டான். இளவரசி எதற்கு சிரிக்கிறாள்? ஒருவேளை கூடாரத்திற்குள் யாராவது வருகிறார்களா? வாயிலைப் பார்த்தான். மூடியே இருந்தது. ஒரு வேளை என்னைப் பார்த்து விட்டாளா?

அவன் முகத்தை கூர்ந்து பார்த்தான். கண் மூடி இருப்பது தெரிந்தது. கனவு கண்டு சிரிக்கிறாள் போலும்!

அவள் சிரிப்பதுதான் எவ்வளவு அழகாக இருக்கிறது! பற்கள்தான் எவ்வளவு வரிசையாக சுச்சிதமாக அமைந்திருக்கின்றன இவள் சிரிப்பதை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போலல்லவா தோன்றுகிறது!

சொக்கநாதன் தன்னை மறந்து, கூரைத் துணியை இன்னும் சற்று விலக்கிப் பார்த்தான்.

அதுவரை சற்று தடுமாறி வீசிய நிலவின் ஒளி, சொக்கநாதன் கூரையை நன்றாக விலக்கியதும் தனது முழு உருவில், தன்னுடைய மொத்த ஒளிக்கற்றைகளையும் இளவரசியின் முகத்தில் வீசியது. இவ்வளவு நேரமும் சொக்கநாதன். சந்திரவதனாவைப் பார்க்க முடியாமல் இடைஞ்சல் செய்த ஆத்திரத்தில் திடீரென இடம் கிடைத்ததும், அணை கடந்த வெள்ளம் போல், தனது அமுத தாரைகளை ஒட்டு மொத்தமாக அவள் முகத்தில் பாய்ச்சி, அபிஷேகம் செய்து ஆரத் தழுவியது.

கண்களை மூடிப் படுத்திருந்த சந்திரவதனாவிற்கு திடீரென்று மேலிருந்து சந்திரனின் ஒளி பாய்ந்ததும், இமைகளை மீறிக் கண்கள் கூசியதால் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தாள்.

கிழிந்த மேற்கூரையின் வழியாக நிலவு தெரிந்தது. அதற்கு அருகில் ஒரு ஆண் முகம்! கனவா?

அவசரமாக எழுந்து நின்று. கண்களைக் கசக்கிக் கொண்டு, அண்ணாந்து பார்த்தாள். நிஜமாகவே ஒரு ஆண் தலை மட்டும் தொங்குகிறதே? பேயாக இருக்குமோ?

பயத்தில் தன்னை மறந்து வீல் என்று அலறினாள். மறுநிமிடம் அவள் முன்னால் பொத் என்று குதித்தான்.

அடுத்த வினாடி இளவரசியின் பயம் இன்னும் அதிகமாகி, "ஐயோ பேய்... பேய்" என்று பயங்கரமாக அலறினாள்.

இதனால் திடுக்கிட்ட சொக்கநாதன் அவசரமாக அவள் கையைப் பிடித்து இழுத்து, மறுகையால் அவள் வாயைப் பொத்தினான். இளவரசி பயத்தில் நடுநடுங்கி, மலங்க மலங்க அவனை விழித்துப் பார்த்தாள்.

"ஏய், ஏன் இப்படி அலறுகிறாய்? நான் பேயல்ல! மனிதன்தான்! நன்றாகப் பார்!" என்றவாறு; அவள் வாயைப் பொத்தியிருந்த கரத்தை விலக்கினான்.

இளவரசியின் இதயம் படபடவென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. சொக்கநாதனை மேலும் கீழும் உற்றுப் பார்த்தாள். அவன் கரம் இன்னமும் தன் கரத்தைப் பற்றி இருப்பதை உணர்ந்து அவசரமாக உதறினாள்.

"நீ... நீ... யார் நீ?" என்றாள் கோபத்துடன்.

"உன்னைப் பார்ப்பதற்காக வந்தேன்!"

"எதற்கு?"

"கோயில் வாசலில் இருந்து பார்க்கும் பொழுது உன் முகம் சரியாகத் தெரியவில்லை. அதனால் அருகில் வந்து பார்க்க நினைத்தேன்" என்றவாறு அவள் முகத்தின் அருகே தன் முகத்தைக் கொண்டு வந்து உற்றுப் பார்த்து விட்டு "நீ உண்மையிலேயே அழகாகத்தான் இருக்கிறாய்" என்றான்.

அதே நேரம் இளவரசியின் கூடாரத்திற்கு சற்று தள்ளி அமைக்கப்பட்டிருந்த அச்சுதப்பன் கூடாரம் இளவரசியின் அலறல் கேட்டு திடுக்கிட்டு எழுந்தது.

மூன்று நாழிகைகளுக்கு முன்பாக மூக்கு முட்டக் குடித்த கள்ளின் போதையில் கிறங்கிப் போய்ப் படுத்துக் கிடந்த அச்சுதப்பன் கூட சந்திரவதனாவின் அலறல் கேட்டு அரக்கப் பரக்க எழுந்தான். இளவரசிக்கு ஏதோ ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்த அவன்

உடைவாளை எடுத்துக் கொண்டு, அவசரமாக வாயிலுக்கு ஓடினான்.

இருட்டில் மஞ்சத்தின் அருகே வைக்கப்பட்டிருந்த பழக் கூடையை வைக்கப்படும் முக்காலி ஒன்று அவன் முழங்காலை வகையாகப் பதம் பார்த்தது.

"நாசமாய்ப் போகிற பயல் எவனோ வழியில் முக்காலியை நகர்த்தி வைத்திருக்கிறான்," என்று சபித்தவாறு நொண்டி நொண்டி வாசலுக்கு வந்தான்.

அதற்குள் நாலைந்து காவலர்கள் இளவரசியின் அலறலைக் கேட்டு கூடாரத்தைக் நோக்கி உருவிய வாளுடன் ஓடுவது தெரிந்தது.

''டேய், எங்கேயடா ஓடுகிறீர்கள்?" என்று அவர்களை அதட்டினான்.

''இளவரசியார் சற்றுமுன் அலறினார். அவருக்கு ஏதாவது ஆபத்து சூழ்ந்திருக்கிறதோ என்று பார்க்கத் தான் ஓடுகிறோம்," என்றான் ஒருவன்.

''நீங்கள் அவ்வளவு பெரிய ஆளாகிவிட்டீர்களா? முதலில் நான் செல்கிறேன். என் பின்னால் நீங்கள் வாருங்கள்!"

இளவரசிக்கு ஆபத்து என்றவுடன் முதலில் சென்று பார்த்தது அச்சுதப்பன் தான் என்று இருக்க வேண்டுமே! இவர்கள் முன்னால் சென்றால் தன் மதிபபு குறைந்து விடுமே என்ற நினைப்புத்தான் அவனுக்கு!

அச்சுதப்பன்; நாலைந்து காவலர்களுடன், உருவிய வாளைக் கவனமாக நீட்டியவாறு, இளவரசியின் கூடார வாயிலுக்குள் நுழைந்தான்.

சரியாக அதே நேரம் தான் சொக்கநாதன் இளவரசியைப் பார்த்து ''நீ உண்மையிலேயே அழகாகத்

தான் இருக்கிறாய்," என்று சொல்லிக் கொண்டு இருந்தான்.

இளவரசியின் அருகே யாரோ ஒருவன் நிற்பதையும், இளவரசி பயத்துடன் மலங்க மலங்க விழிப்பதையும் பார்த்த அச்சுதப்பன் எல்லையற்ற கோபத்துக்கு ஆளாகி, "யாரடா நீ? எவ்வளவு தைரியம் இருந்தால் இந்த நாட்டின் இளவரசி இருக்கும் இடத்தில் நுழைவாய்!" என்றவாறு வாளை ஓங்கியவாறு சொக்கநாதன் அருகில் ஓடி வந்து கழுத்தைப் பார்த்து வீசினான்.

அதுமட்டும் சரியாக இருந்திருந்தால சொக்கநாதன் தலை இரண்டு துண்டாக விழுந்திருக்கும் சொக்கநாதன் மிக லாவகமாக தலையை குனிந்து அதே வேகத்தில் அச்சுதப்பன் வயிற்றில் பலமாக முட்டினான்.

அச்சுதப்பன் நிலை குலைந்து கீழே விழுந்தான். அதே நேரம் ஐந்தாறு காவலர்கள் வாட்களுடன் சொக்க நாதனை நோக்கி ஓடி வந்தார்கள். கீழே விழுந்த அச்சுதப்பனும் வேகமாக எழுந்து சொக்கநாதன் மீது ஆவேசமாகப் பாய்ந்தான்.

தன் மேல் பாய்ந்த அச்சுதப்பனின் வாளேந்திய கரத்தைப் பலமாகப் பற்றி ஒரு சுழற்று சுழற்றினான் சொக்கநாதன். அச்சுதப்பன் உடம்பு திருகி முதுகுப் பக்கம் வந்ததும், அவன் முதுகைத் தன் நெஞ்சோடு இறுக அணைத்துக் கொண்டு, அச்சுதப்பனின் இடக்கரத்தைத் தன் இடக்கரத்தால் பற்றி வளைத்துத் தனது இடுப்போடு இறுகப் பிடித்துக் கொண்டான்.

பிறகு அச்சுதப்பன் வலக்கரத்தில் இருந்த வாளை அவனும் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, அச்சுதப்பனை நெஞ்சில் அணைத்தவாறு எதிரே இருந்த காவலர்களின் வாளின் மீது மோதத் தொடங்கினான்.

ஆறு காவலர்களின் வாட்களையும், அச்சுதப்பனின் கரத்தில் இருந்த வாளை, அவன் கரத்தாலேயே சுழற்றச் செய்து கூடார வாயிலை விட்டு வெளியே தள்ளிக் கொண்டு சென்றான். இளவரசி இந்தக் காட்சியைப் பார்த்துப் பிரமித்துப் போய் அவர்கள் பின்னாடியே ஓடினாள்.

கூடார வாயிலை விட்டு வெளியே வந்த பிறகும் அச்சுதப்பனை விடுவிக்காது அவன் கரத்தாலேயே அந்தக் காவலர்களுடன் மோதினான். அச்சுதப்பனோ திமிற முடியாது, சொக்கநாதன் நெஞ்சில் ஒட்டிக் கொண்டு மூச்சைக்கூட விடுவதற்குக் கஷ்டப்பட்டு அலற ஆரம்பித்தான்.

கத்திகள் மோதும் சப்தமும், அச்சுதப்பன் அலறும் சப்தமும் கேட்டு தூரத்தில் அமைக்கப்பட்டிருந்த படை வீரர்கள் முகாம்கள் விழித்தெழத் தொடங்கின. இதை உணர்ந்த சொக்கநாதன் தனது தாக்குதலைத் தீவிரப் படுத்தத் தொடங்கினான்.

சற்று நேரத்தில் ஆறு வீரர்களின் உடைவாளும் பறந்து விழுந்து, ஒவ்வொருவராகக் காயம் பட்டு உருண்டனர். அடுத்த வினாடி சொக்கநாதன், அச்சுதப்பனின் முழங்கையைத் தனது தொடையுடன் பலமாக மோத, அச்சுதப்பன் கரத்தில் இருந்த வாளும் நழுவி விழுந்தது.

சொக்கநாதன் உடனே அவன் கரத்தைப் பற்றி ஒரு சுழற்றுச் சுழற்ற அச்சுதப்பன் உடல் சுழன்று திரும்பி அவனுக்கு எதிரில் வந்தது. மறுவினாடி அவன் நெஞ்சில் இருந்த ஆடையை இறுகப் பற்றித் தூக்கி எறிந்தான்.

அச்சுதப்பன் அலாக்காகத் தூரத்தில் உள்ள புதருக்குள் போய் மட்ட மல்லாக்க விழுந்தான். அதே நேரம் தூரத்துக் கூடாரங்களில் இருந்து படை வீரர்கள் பலர் கூச்சலிட்டவாறு ஓடி வருவது தெரிந்தது.

சொக்கநாதன் அதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப் படாது, எதிரில் இருந்த இளவரசியை ஏறிட்டுப் பார்த்தான். சந்திரவதனா திக்பிரமை பிடித்தவள் போல் சொக்கநாதனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

''இப்பொழுதுகூட நீ அழகாகத்தான் இருக்கிறாய் சந்திரவதனா" என்று சொல்லிவிட்டு, ஒரே தாவாகத் தாவி கூடாரத்தின் மேலே தொங்கும் கயிற்றைப் பற்றிச் சரசர என்று ஏறினான்.

இதற்குள் படை வீரர்கள் அந்த இடத்திற்கு ஓடி வந்து சேர்ந்தார்கள். புதருக்குள் விழுந்த அச்சுதப்பனும். கஷ்டப்பட்டு எழுந்து தனது ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டு, முகத்தில் அவமானம் பொங்க, இளவரசியின் அருகில் ஓடி வந்தான்.

''எங்கே அவன்? இந்நேரம் வரை என்னடா பண்ணிக் கொண்டிருந்தீர்கள்? எங்கேடா அந்த நாய்?'' என்று கோபத்துடன் வீரர்களைக் கேட்டான்.

படை வீரர்கள் திருதிருவென்று விழிக்க, "சந்திர வதனா, உனக்கு ஒன்றும் ஆகவில்லையே? எங்கே அவன்? அவன் நெஞ்சைப் பிளந்தால்தான் எனக்கு நிம்மதி!" என்று கோபத்துடன் கேட்டான்.

இளவரசியின் பிரமை இன்னமும் அகலவில்லை. கையை மட்டும் ஒரு பொம்மையைப் போல் உயர்த்திக் காட்டினாள். அனைவரும் அண்ணாந்துப் பார்த்தார்கள்.

சொக்கநாதன் அதே நேரம் மரத்தின் கிளைக்கு வந்து, கீழே தொங்கிய கயிற்றை உருவிச் சுருட்டித் தோளில் மாட்டியவாறு, மதிலுக்கு மேல் வந்து நின்றான். மறுவினாடி கீழே தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குதிரையின்மீது குதித்தான் வெங்கட கிருஷ்ணனும், அவனும் தங்களது புரவிகளில் பறக்க ஆரம்பித்தனர்.

''பிடியுங்களடா அவர்களை!'' என்று அச்சுதப்பன் அலற, வீரர்கள் மதிற் சுவரின் மீது ஏறி மறுபுறம் வருவ தற்குள், அவர்கள் காட்டிற்குள் மறைந்து விட்டிருந்தனர்.

''சே! தப்பி விட்டானே! கிடைத்திருந்தால் சல்லி சல்லியாக வெட்டி எறிந்திருப்பேன்! யார் அவன் சந்திரவதனா? எப்படி உள்ளே நுழைந்தான்?'' என் றான் அச்சுதப்பன்.

இளவரசி பிரமையிலிருந்து சற்று மீண்டு, ''யார் என்று தெரியவில்லை! கூரையைக் கிழித்துக் கொண்டு குதித்தான். நான் பயந்து அலறினேன்! நீங்களும் வந்து விட்டீர்கள்!'' என்றாள்.

''எவனாவது திருட்டுப் பயலாக இருக்கும்! இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது! நான் பொறுப்பு! நீ போய்த் தூங்கு! டேய், எவனும் இன்றைக்குத் தூங்கக் கூடாது. கோயில் முழுக்க ஒரு நாய்கூட நுழையக் கூடாது.''

இளவரசி கூடாரத்திற்குள் வந்து படுத்தாள். மஞ்சத் திற்கு நேர் மேலே கிழிந்த கூரையிலிருந்து நிலவு முகம் காட்டியது! நடந்தது கனவா, நனவா என்ற பிரமை மறுபடியும் அவளுக்குள் எழுந்தது.

யார் அவன்? என்னை அருகில் வந்து பார்ப்பதற்காக வந்தானாமே! எத்தனை துணிச்சல்!

தனி ஒருவனாகக் கையில் ஆயுதம் இன்றி எத்தனை பேரைச் சமாளித்தான்! அதிலும் அச்சுதப்பனை அணைத்துக் கொண்டு அவன் கையாலேயே அவன் வாளைச் சுழற்றிய விதம் நினைக்க நினைக்க அவளுக்குள் வியப்பை ஏற்படுத்தியது. கடைசியாக அச்சுதப்பனைத் தூக்கிப் புதருக்குள் எறிந்தது நினைக்க நினைக்க அவளுக் குள் சிரிப்பை ஏற்படுத்தியது!

உண்மையிலேயே சிறந்த வீரன் தான்! இப்படி ஒரு வீரச் செயலை இதற்கு முன் பார்த்ததே இல்லை! நிச்சயம் கள்வனாக இருக்கமாட்டான்!

"நீ உண்மையிலேயே அழகாக இருக்கிறாய சந்திரவதனா" என்று அவன் கூறிய வார்த்தைகள் அவளுக்குள் மாறி மாறி ஒலித்துத் தூங்கவிடாமல் பண்ணிக் கொண்டிருந்தன.

சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் தங்களது கூடாரத்திற்குள் வந்து சேரும்வரை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை.

புரவிகளை மரத்தில் கட்டிவிட்டுக் கூடாரத்திற்குள் நுழைந்தனர்.

"என்ன சொக்கநாதா, இளவரசியை அருகில் சென்று பார்த்தாயா?" என்றான் வெங்கடகிருஷ்ணன்.

"ம். பார்த்தேன்!" என்றான் அமைதியாக.

"எப்படி இருக்கிறாள்?"

"பரவாயில்லை."

"அவ்வளவுதானா? அருகில் சென்று பார்க்கும் பொழுது அவள் அழகு இன்னும் அதிகமாகத் தோன்றவில்லையா?"

"ம். இருக்கிறது. ஓரளவு!"

"அப்படியானால், அவளைத் தூக்கிக் கொண்டு வந்து விடுவதுதானே? நீ அப்படித்தான் செய்வாய் என்று எதிர்பார்த்தேன்."

"சேச்சே! முன்பின் தெரியாத ஒரு பெண்ணை முரட்டுத்தனமாகக் கவர்ந்து வருவது ஒரு வீரனுக்கு அழகல்ல!"

"அவள் எத்தனை அழகாக இருக்கிறாள்! அவள்தான் உனக்கு ஏற்றவள்! இந்த எண்ணம் உனக்குத் தோன்ற வில்லையா?"

''இல்லவே இல்லை. எதிரியின் மகளைப் பற்றிப் பேசாதே என்று எத்தனை முறை உன்னிடம் சொல்லி இருக்கிறேன்."

''பிறகு எதற்கு அங்கே சென்றாய்?''

''அதுதான் சொன்னேனே, அச்சுதப்பனைப் பழி வாங்க என்று! இன்று நடந்ததை அவன் ஜென்மத்திலும் மறக்க மாட்டான். சரிவிடு அந்தப் பேச்சை! எனக்குத் தூக்கம் வருகிறது," என்று மறுபுறம் புரண்டு படுத்துக் கொண்டான்.

வெறுப்போடு சொல்வதுபோல் நடித்தானே தவிர, சொக்கநாதன் மனதில் இளவரசியின் அழகு பரிபூர்ண மாகப் பரவி படாதபாடு படுத்தத் தொடங்கியது. அவள் படுத்திருந்த கோலம், தூக்கத்தில் சிரித்த அழகு பிறகு அவனைப் பார்த்து மிரண்டது, "நீ அழகாக இருக்கிறாய்" என்றதும் அவள் முகத்தில் பரவிய நாணம், முடிவாக அவன் போராடியதைப் பார்த்துப் பிரமித்தது என்று ஒவ்வொரு செயலும் எத்தனை அழகு! அவள் நின்றால் அழகு, எழுந்தால் அழகு, நடந்தால் அழகு, உறங்கி னாலும் அழகு, விழித்தாலும் அழகு, திகைத்தாலும் அழகு, சிரித்தாலும் அழகு, சினந்தாலும் அழகு! அழகின் மொத்த வடிவமே அவள்தான்!

இப்படிப்பட்ட அழகி எனக்கு மட்டுமே உரியவளாக இருந்தால்!

மறுகணம் அவன் மனம் சிலிர்த்தது! என்ன இருந்தாலும் எதிரியின் மகள்? என் பாட்டனார் திருமலை பட்டபாடு போதாதா! இவளும் அந்த

மாதிரித் திமிர்பிடித்த பெண்ணாக இருக்கலாம் வேண்டவே வேண்டாம்!

முத்துநகை அவன் நினைவுக்கு வந்தாள். எவ்வளவு நல்ல பெண்! என்மீது எவ்வளவு காதல் கொண்டிருக்கிறாள்! என் கால்களில் மல்லிகை மலர்களைக் கொட்டி பூஜிக்கிறாள். அவளை ஏமாற்றக்கூடாது!

இனி இளவரசி சந்திரவதனாவைப் பற்றி நினைக்கவே கூடாது! அவளைப் பார்க்கவும் கூடாது இனி அவள் இந்தக் கோயிலை விட்டுச் செல்லும் வரை இந்த காட்டைவிட்டு நகரக்கூடாது என்று மனதில் உறுதியாக எண்ணிக் கொண்டு தூங்க முயன்றான் சொக்கநாதன்.

ஆனால் மறுநாளே அவன் முற்றிலும் எதிர்பாராத சம்பவங்கள் நடந்து, அவனே இளவரசியைத் தேடிச் செல்லும்படியாக ஆயிற்று!

30

மறுநாள் காலையில் கதிரவன் தனது மஞ்சள் நிறக் கதிர்களை கங்கை கொண்ட சோழபுரத்தின் கோயில் பகுதி முழுக்கவீசி பரவசமுற்றுக் கொண்டிருந்தான்.

மஞ்சத்தில் படுத்துக் கிடந்த இளவரசி சந்திரவதனா, தூக்கம் கலைந்து விழித்துப் பார்த்தாள். அவள் முகத்துக்கு நேர் மேலே கிழிந்த கூரைப் பகுதியில் இருந்து சூரியனின் இளங்கதிர்கள் அவள் முகத்தில் வந்து மோதின.

முன்னிரவில் நடந்த நிகழ்ச்சிகள் முழுக்க நினைவுக்கு வந்தன. நடந்து கனவல்ல என்று கிழிந்த கூரைப் பகுதி

யில் இருந்து எட்டிப் பார்த்த வெய்யோன் ஒளிக்கற்றைகள் உணர்த்துவதுபோல் இருந்தது.

என்னைப் பார்ப்பதற்காகவே வந்தானாமே! இத்தனை காவலர்களுக்கு மத்தியில் ஒரு நாட்டின் இளவரசி தங்கி இருக்கும் கூடாரத்தைக் கிழித்துக் கொண்டு உள்ளே குதித்தது மட்டுமின்றி, "உன்னை அருகில் வந்து பார்க்க நினைத்தேன், நீ உண்மையிலேயே அழகாக இருக்கிறாய்," என்று நேருக்கு நேர் சொன்னது எத்தனை துணிச்சலான செயல்! யார் அவன்?

எவ்வளவு அற்புதமாகச் சண்டையிட்டுத் தட்பினான்! வியப்பிற்குரிய வீரன்! அவனை மறுபடியும் பார்க்க முடியுமா?

கூடாரத்தை விட்டு வெளியே வந்தாள் சந்திரவதனா! கூடாரத்தைச் சுற்றிலும் நிறையக் காவலர்கள் உருவிய வாளோடு உலவிக் கொண்டிருந்தனர். மதில் மீது கூடச் சில காவலர்கள் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

எதிரில் இருந்த கூடார வாயிலில் அச்சுதப்பன் ஒரு ஆசனத்தில் அமர்ந்தவாறு அரசப் பிரதிநிதிகளுடன் பேசிக் கொண்டிருந்தான். இளவரசி கூடாரத்தில் இருந்து வெளியே வந்து நிற்பதைப் பார்த்தவுடன், அவசரமாக எழுந்து ஓடோடி வந்தான்.

"இப்பொழுதுதான் உறங்கி எழுந்தாயா சந்திர வதனா! நன்றாகத் தூங்கினாயா? உனக்காக நான் இரவு முழுவதும் தூங்கவில்லை. உன் கூடாரத்தைச் சுற்றி. எத்தனை காவல் பார்த்தாயா? அதன்பிறகு ஒரு நாய்கூட இந்தக் கோயிலின் அருகில் வராமல் பார்த்துக் கொண்டோம்" என்றான் அச்சுதப்பன் அவளைப் பார்த்து நெஞ்சை நிமிர்த்தியவாறு.

கோயில் ஸ்தானிகர் பணிவுடன் அவளருகில் வந்து "நேற்று இரவு நடந்த சம்பவங்களுக்கு வருந்துகிறோம்

இளவரசியாரே! இதுவரை இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்த தில்லை தங்களிடமிருந்த ஆபரணங்களை திருடுவதற் காக வந்தவனாக இருக்கலாம். இனி இப்படி ஒரு சம்பவம் நிகழாமல் எங்கள் உயிரைக் கொடுத்தாவது தங்களைப் பாதுகாக்கிறோம்!'' என்றார்.

''ஹும்! கோழைப்பயல்! என்னைப் பார்த்தவுடன் பயந்து ஓடிப்போய் விட்டான். என் கையில் மட்டும் கிடைத்திருந்தால் அவனை என்ன பாடு படுத்தியிருப்பேன் தெரியுமா?'' என்று மீசையைத் திருகியவாறு அருகில் இருந்த அரசப் பிரதிநிதிகளிடமும், ஸ்தானிகர்களிடமும் ஆணவமாகக் கூறினான் அச்சுதப்பன்!

இளவரசி அவனை ஏளனமாகப் பார்த்தாள்! நேற்று இரவு அந்த வீரனிடம் இவன் பட்டபாடு முழுக்க நான் பார்த்தவள்! என்னையும் வைத்துக் கொண்டு இவனால் எப்படி இவ்வளவு பெருமையாகப் பேச முடிகிறது! போயும் போயும் இப்படி ஒரு மூடனை எனக்குக் காவலாக அனுப்பி இருக்கிறார்களே என்ற எரிச்சல் அவ ளுக்குள் எழுந்தது.

“மாமா, நேரம் ஆகிக் கொண்டிருக்கிறது. புனித நீராடி, இறைவனைத் தொழுதுமுடித்தவுடன் தஞ்சைக்குக் கிளம்புவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து விடுங் கள்!'' என்றாள் எரிச்சலாக.

“இளவரசியாரே, இன்று ஒருநாள் இங்கேயே தங்கி விட்டு நாளைக் காலையில் செல்லலாமே! எதற்கு இவ்வளவு அவசரம்?'' என்றார் அரசப்பிரதிநிதி ஒருவர்.

''நான் இங்கு வந்தது இறைவனைத் தரிசிப்பதற்குத் தானே தவிர ஒய்யாரமாக ஓய்வு எடுப்பதற்கல்ல!''

“நேற்றைய நிகழ்ச்சிகள் பற்றி மனங்கலங்கி இருக்கி றீர்கள் போல் தெரிகிறது. இனி அப்படி ஒன்று நிகழாமல்

நிச்சயமாகப் பார்த்துக் கொள்கிறோம். கூயவு செய்து ஒரு நாளாவது தங்குங்கள்!" என்று மன்றாடினார்.

"ஆம் சந்திரவதனா! உடனே கிளம்பினால் உனக்கு அலுப்பாக இருக்கும். ஒரு நாள் ஓய்வெடுத்துக் கொள்! இனி எந்த நாயும் உன்னருகில் வராமல் பாதுகாக்க நான் இருக்கிறேன்.''

"எதற்குமாமா இந்த வெட்டிப்பேச்சு! சொன்னதைச் செய்யுங்கள்! இறைவனது தரிசனம் முடிந்ததும் நான் கிளம்ப வேண்டும்.''

"இளவரசியாரே, எங்களுக்காக மதிய உணவு முடிந்த பிறகாவது கிளம்புங்கள். எங்களுக்கு அந்தப் பெருமையையாவது நீங்கள் தரவேண்டும்!'' மிகவும் பணிவுடன் கேட்டார்.

இளவரசி சற்று யோசித்துவிட்டு, "சரி. மதிய உணவு முடிந்த கணமே நாங்கள் கிளம்ப வேண்டும். தாமதப்படுத்தக்கூடாது. அதற்கான ஏற்பாடுகளை இப்பொழுதே செய்யுங்கள்!" என்று உத்தரவிட்டாள்.

அப்பொழுது கோயிலின் அர்ச்சகர் வந்து பணிவுடன் வணங்கினார்.

"இளவரசியாருக்கு வணக்கம். தாங்கள் கங்கை நீரில் புனித நீராடுவதற்கான சகல வசதிகளும் செய்து முடித்து விட்டோம். தங்கள் வரவிற்காகத்தான் அனைவரும் காத்து இருக்கின்றனர்.''

இளவரசியை அழைத்துக் கொண்டு சிங்கக்கிணறு இருக்கும் இடத்திற்குச் சென்றனர். கதிரவன் ஒளி கோயில் முழுக்க பொன்னொளி வீச, அந்தக் கோயிலின் அமைப்பைப் பார்த்து வியந்தாள் சந்திரவதனா ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக இருந்த இந்த இடம் இப்பொழுது எவ்வளவு சிதிலப்பட்டுக் கிடக்கிறது.

கோயிலின் வடக்கு பகுதியில் பிரம்மாண்டமான உயரத்தில் சுதை வேலைப்பாடுகளுடன் அழகுற நின்று கொண்டிருந்த சிங்கச் சிலைக்கருகே வந்து நின்று வியந்து பார்த்தாள். அதன் வயிற்றுப் பக்கம் திறக்கப்பட்டு, அதன் வழியாகப் படிக்கட்டுகள் கீழ்நோக்கிச் செல்வது தெரிந்தது.

"இதுதான் சிங்கக்கிணறு இளவரசியாரே! இந்தப் படிக்கட்டுகளின் வழியாக இறங்கிச் சென்றால் கிணற்றை அடையலாம். இராசேந்திர சோழமன்னன் கங்கை வரை படையெடுத்துச் சென்று, புனித கங்கை நீரைக் குடங்களில் கொண்டு வந்து இந்தக் கிணற்று நீரில் ஊற்றினான். இந்தக் கிணற்று நீரில் குளிப்பது கங்கையில் குளிப்பதற்கு ஒப்பானது,'' என்றார் அர்ச்சகர்.

ஏராளமான தாதியர் சிங்கக்கிணற்றின் வாசலில் தயாராக நின்று கொண்டிருந்தனர். சந்திரவதனா அவர்களுடன் சேர்ந்து படிக்கட்டுகளில் இறங்கினாள்.

சில படிகள் கீழிறங்கியதும் கிணற்றுநீர் சலனமற்றுக் கிடப்பது தெரிந்தது. கிணற்றின் அமைப்பைப் பார்த்து வியந்தாள். பின்னர் தாதிகளின் உதவியுடன் நீராடத் தொடங்கினாள்.

கதகதப்பான கிணற்று நீர் அவளுக்குப் புத்துணர்ச்சியைத் தர ஆரம்பித்தது. முன்னிரவில் நடந்த நிகழ்ச்சிகள் மறுபடியும் அவளுக்குள் எட்டிப் பார்த்தன.

எவ்வளவு துணிச்சலான வீரன்! கூரையைக் கிழித்துக் கொண்டு குதித்தது மட்டுமின்றி, என் கையைப் பற்றி இழுத்து வாயையும் சேர்த்துப் பொத்தினானே! உண்மையிலேயே என்னைப் பார்ப்பதற்காகத்தான் இவ்வளவு துணிகரமாகச் செயல் பட்டானா?

"நீ உண்மையிலேயே அழகாக இருக்கிறாய்."

அவன் சொன்னதை நினைத்துக் குறுநகை புரிந்தவாறு குளித்தாள். அவன் தொட்ட கரத்தை ஒரு முறை வெறித்துப் பார்த்தாள். அவனிடம் இருந்து என் கரத்தை விடுவித்த பிறகு கூட எவ்வளவு நேரம் வலித்துக் கொண்டிருந்தது! அப்பப்பா! எத்தனை முரட்டுத்தனமாகப் பிடித்தான்! சரியான பலசாலிதான்! அதனால்தான் அச்சுதப்பன் அவனிடம் அந்தப்பாடு பட்டிருக்கிறான்!

மறுபடியும் குறுநகை அவள் இதழ்களில் பிறக்க, புனித நீராடி, புத்தாடை புனைந்து தாதிகள் புடைசூழக் கிணற்றில் இருந்து வெளியே வந்தாள்.

புத்தம் புது மலராய் வந்த இளவரசியைப் பார்த்ததும் அங்கிருந்த அனைவருமே அவள் அழகை வியந்து பார்த்தனர். கதிரவன் ஒளிபட்டுப் பளபளத்த அவள் மேனி எழிலைப் பார்த்து அச்சுதப்பன் வாய் பிளந்து நின்றான். இந்த அழகி கூடிய சீக்கிரமே என் மனைவியாகப் போகிறாள் என்ற செருக்கான நினைவு அவனுக்குள் எழுந்தது.

வெய்யோன் ஒளி அவள் மேனியின் விரிசோதியில் மறைய பொய்யோ என்னும் இடை கொண்ட அந்த பொற்கொடி மெல்ல அசைந்து கோயிலை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. கங்கை கொண்ட சோழீஸ்வரனின் கருவறைக்குள் பூஜைகள் தொடங்கின!

மனம் உருகிப் பிரார்த்தித்தாள் சந்திரவதனா! தன் தந்தைக்கு நீண்ட ஆயுளும், தமையன் மன்னார்தாசன் சீக்கிரமே அரியணை ஏற்றுச் சிறப்பாக அரசாள வேண்டும் என்றும் வேண்டினாள். மதுரவாணிக்கும், தனக்கும் மனதிற்கேற்ற மணாளன் அமைய வேண்டும் என்று இறைஞ்சினாள்.

மறுவினாடி முன்னிரவில் தனது கூடாரத்திற்குள் குதித்த வீரன் முகம் நினைவுக்கு வந்தது! 'நீ உண்மையிலேயே அழகாக இருக்கிறாய்'

அவள் மேனி சிலிர்க்க அவசரமாகத் தனது தலையைக் குலுக்கி அந்த நினைவைத் தூர ஓட்டினாள். அவன் யாரோ, எவனோ, அவனை இந்நேரம் எதற்கு அனாவசிய மாக நினைக்க வேண்டும்?

அபிஷேகம், ஆரத்திகளை மெய்மறந்து பார்த்தாள்.

கடவுள் தரிசனம் முடிந்து, மனநிறைவுடன் கருவறையைக் கடந்து, தாதியரும், அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர்களும் புடைசூழ, அச்சுதப்பன் பெருமை பொங்க முன் நடக்க முகமண்டபம், அர்த்த மண்டபத்தைக் கடந்து வெளியே வந்தாள்.

அர்ச்சகர் இளவரசி அருகில் வந்து பிராகாரத்தினை ஒருமுறை சுற்றி வருமாறு வேண்டினார். அவர்களுடன் வந்து ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் விளக்கினார்.

இதுதான் சண்டேசனுக்ரஹ மூர்த்தி! இந்த மாதிரி ஒரு சிற்பத்தை நீங்கள் வேறு எந்தக் கோயிலிலும் காண முடியாது. நன்றாகப் பாருங்கள் இளவரசியாரே! சிவபெருமான் சண்டேஸ்வரர் தலையைச் சுற்றிப் பூமாலை சூட்டுவதை! இராசேந்திர சோழன் கங்கை வரை சென்று வெற்றி பெற்றதற்காகச் சிவபெருமானே அவனைப் பாராட்டிப் பூமாலை சூடுவதை மறைமுகமாக உணர்த்த வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு சிலையை வடித்தான் என்று பெரியவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்!"

இளவரசி அந்தச் சிலையின் சிற்ப நேர்த்தியைப் பார்த்து வியந்தாள். பிரகாரம் சுற்றி முடித்து, பலி பீடத்திற்கு நேர் நின்று இறைவனை மறுபடியும் சேவித்து விட்டு, சற்று நேரம் அங்கேயே உட்கார்ந்து, கண்களை மூடி, மனம் கசியத் தியானித்தாள்.

பிறகு எழுந்து, "நான் சற்றுநேரம் ஓய்வெடுக்கிறேன். மதிய உணவு தயாரானதும் சொல்லுங்கள். உணவு முடித்த பிறகு நான் ஓய்வெடுக்கப் போவதில்லை. உடனே கிளம்பி விடுவேன். அதற்கான ஏற்பாடுகளையும் செய்து விடுங்கள்" என்று அச்சுதப்பனைப் பார்த்துச் சொல்லிவிட்டுத் தனது கூடாரத்தை நோக்கி சென்று விட்டாள் சந்திரவதனா!

அச்சுதப்பன் எல்லையற்ற மகிழ்ச்சியில் மிதக்கத் தொடங்கினான். இளவரசியின் புனிதப்பயணம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டது. நேற்று இரவு நடந்த சிறு சம்பவத்தைத் தவிர, வேறு எந்த ஆபத்தும் இதுவரை அணுகவில்லை! இனியும் அணுகுவதற்கு வாய்ப்பில்லை!

இந்த நான்கு நாட்கள் பயணத்தில் சந்திரவதனாவுடன் எத்தனைமுறை நெருக்கமாக நின்று பேசி விட்டேன்! அவளும் என்னைப் பார்த்து 'மாமா, மாமா' என்று எவ்வளவு அன்புடன் அழைக்கிறாள்! அதில் காதலும் கலந்திருப்பது போல் தெரிகிறது

இனி தஞ்சைக்குச் செல்ல இன்னும் நான்கு நாட்கள் ஆகலாம். அதற்குள் சந்திரவதனாவுடன் இதைவிட நெருக்கமாகப் பழகிவிடலாமே! அரண்மனை சென்றடைவதற்குள் 'அன்பு மாமா! உங்களை நான் எவ்வளவு காதலிக்கிறேன் தெரியுமா' என்று அவள் வாயால் சொல்ல வைக்கத்தான் போகிறேன்.

அச்சுதப்பனுக்குள் குஷி பிறக்கத் தொடங்கியது. கள் குடிக்க வேண்டும் போல் தோன்றியது. மதியம் சிறப்பான விருந்து வேறு தயாராகிக் கொண்டிருக்கிறது. இப்பொழுதே கள் குடித்தால் தான் விருந்தையும் சுவையாக அனுபவிக்க முடியும்! சப்புக் கொட்டிக் கொண்டு அவன் தயாரானான்.

இளவரசி சந்திரவதனா தஞ்சையிலிருந்து பல நாட்கள் பயணம் செய்து கங்கை கொண்ட சோழபுரத்தில் முகாமிட்டு சோழீஸ்வரரை தரிசித்து, கங்கையில் நீராடிய தற்கு ஒப்பான சிங்கமுக கிணற்றில் நீராடியபின் அன்று பகலில் விருந்துண்டதும் தஞ்சைக்குப் பயணப்பட தீர்மானித்தாள்.

முன் தினம் இரவு ஒரு மாவீரன் தனது கூடாரத்தில் புகுந்து தன்னை மிகவும் நெருக்கத்தில் பார்த்து 'நீ உண்மையிலேயே அழகாக இருக்கிறாய்' என்று புகழ்ந்து விட்டு தனது காவல் வீரர்களுடன் வாள் போரிட்டு தப்பிச் சென்ற நிகழ்ச்சி இளவரசியின் மனதைவிட்டு அகலாமல் நிழலாடிற்று.

ஆனால் இளவரசியின் காவல்படைத் தலைவனாக வந்த அச்சுதப்பனோ, எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் புனித பயணம் நிறைவேறியதை எண்ணி மனநிறைவுடன், பகல் விருந்துக்கு முன்னேற்பாடாக கள் குடிக்க ஆயத்தமானான்.

பயணத்தின்போது கள்ளினைக் கொண்டு வருவதற் காகவே சிலரைக் கையோடு கூட்டி வந்திருந்தான் அச்சுதப்பன்! இளவரசியின் கண்களில் அவர்கள் படக் கூடாது! பயணத்தின் போது அவர்கள் கடைசி வரிசையில் வரவேண்டும் என்பது அவன் உத்தரவு!

"யாரடா அங்கே?" என்றதும் ஒருவன் ஓடிவந்து கும்பிட்டான், "இன்று காலையில் இறக்கிய ஒரு மரத்துக் கள்ளினை என் கூடாரத்தில் எடுத்து வைக்கச் சொல்!" என்றான்.

அச்சுதப்பன் கூடாரத்திற்குள் நுழைந்த சிறிது நேரத்தில் நுரை பொங்கப் பொங்க கள்ளுப்பானைகள் அவன் முன் கொண்டு வந்து வைக்கப்பட்டன. ஒருவன் கலயத்தில் இருந்த கள்ளை ஒரு பொற் குவளையில் ஊற்றித்தர அச்சுதப்பன் மீசையைத் தடவியவாறு வாங்கி அருந்தினான்.

பக்கத்தில் இருந்த காவலன் பணிவுடன் அவனைப் பார்த்துக் கேட்டான்.

"படைத் தலைவரே, எனக்கு ஒரு சந்தேகம்? தங்களிடம் கேட்கலாமா?"

"எது வேண்டுமானாலும் கேள்! இன்று எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறது! என்னடா சந்தேகம்?"

"கள் குடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் நீங்களோ தினமும் இவ்வளவு கள் குடிக்கிறீர்களே?"

"மடையா, உனக்கு எந்த மடையனடா அப்படிச் சொன்னான். கள் குடிப்பது தீங்கே விளைவிக்காது! சுக்கிர நீதி படித்திருக்கிறாயா?"

"நான் அரிச்சுவடியே சரிவரக் கற்கவில்லை தலைவரே! சுக்கிர நீதி என்றால் என்ன?"

"சாதாரண படைவீரன் நீ! உனக்கு எங்கே சுக்கிர நீதி பற்றித் தெரியப் போகிறது? முதலில் படித்துவிட்டு வா! பிறகு இப்படி எல்லாம் முட்டாள்தனமாகக் கேள்வி கேட்க மாட்டாய்"

"சுக்கிர நீதி என்றால் என்னவென்றாவது சொல்லுங்கள் மகாராஜா!"

மகாராஜா என்ற வார்த்தை அச்சுதப்பனைக் குளிர்வித்தது. "அப்படிக் கேள். சொல்கிறேன். அசுரர்

களுக்கு குருவான சுக்கிராச்சாரியார் இம்மண்ணுலக மக்களுக்காக இயற்றிய நீதிகளின் சாரம்தான் சுக்கிர நீதி. அற்புதமான நீதிகளை அது போதிக்கிறது. என்னைப் போன்ற அரச குலத்தவர்க்குத்தான் அது தெரியும். நீ எங்கே படித்திருக்கப் போகிறாய்?"

"அதில் கள் குடிப்பதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறது. மகாராசா ?"

*"கள்ளை மிகுதியாகக் குடிப்பவனுக்கு அறிவு கெடும். சிறிதளவு உண்ணப்படும் கள் மதிநுட்பத்தையும் தூய அறிவையும், அஞ்சாமையையும், மன உறுதியையும் தருவதாகும் என்று சுக்கிராச்சாரியார் சொல்கிறார். என்னைப் பார்த்தாயா நான் எவ்வளவு பலசாலியாக, எவ்வளவு அறிவுடன் திகழ்கிறேன் என்று! அதற்குக் காரணம் இந்த கள்தான்டா" என்று பெருமையுடன் சொன்னான்.

"உண்மைதான் மகாராசா!" என்று அந்த காவலன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

அப்பொழுது யானைப்பாகன் அவசரமாக அச்சுதப்பனிடம் ஓடிவந்துவணங்கினான்.

"என்னடா, யானைக்குத் தீனி வேண்டுமா ?" என்றான் அச்சுதப்பன்.

"தீனி நிறைய குவிக்கப்பட்டிருக்கிறது தலைவரே ! ஆனால் யானை அதைத் தொடமாட்டேன் என்கிறது. அடிக்கடி பிளிறுகிறது. கொஞ்சம் மிரண்ட மாதிரி அங்கும் இங்கும் தலையை ஆட்டுகிறது நீங்கள் வந்து பாருங்கள்!"

---

* சுக்கிரநீதி— பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் மொழிபெயர்ப்பு— பக்கம் கசா.

அச்சுதப்பன் உடனே எழுந்து யானைப்பாகனோடு சேர்ந்து நடந்தான். கையில் கள் நிறைந்த பொற் குவளையினை ஒரு காவலனிடம் கொடுத்து, தன் பின்னாலேயே அதைக் கொண்டு வருமாறு உத்தரவிட்டான்.

யானைக் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். யானைப்பாகன் சொன்னது உண்மைதான். யானை அங்குள்ள அனைவரையும் மிரட்சியுடன் பார்த்தது தலையைத் திருப்பிப் பார்த்தது! தும்பிக்கையை உயர்த்திப் பிளிறியது.

அச்சுதப்பன் யானையைச் சுற்றி வந்து பார்த்தான்.

"எந்த இடத்திலும் அடிபட்ட மாதிரித் தோன்றவில்லையே! என்ன ஆகி இருக்கும்?" என்று யோசித்தான்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை தலைவரே! நமது அரண்மனையில் பட்டத்து யானையின் பாகனாக இருப்பவனுக்கு யானை வாகடம் தெரியும். எனக்குச் சரியாகத் தெரியாது"

அவர்கள் மட்டும் சற்று ஊற்றுக் கவனித்து இருந்தால், யானையின் காதுப் பகுதியின் அருகே மதநீர் ஒழுகுவது தெரிந்திருக்கும்.

இன்னும் சற்று நேரத்தில் இளவரசி கிளம்பி விடுவாள் என்பதற்காக யானை காலையிலேயே அலங்கரிக்கப்பட்டுத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது! யானையின் மத்தகத்தில் மாட்டப்பட்டிருந்த முகபடாம் அதன் காது இடுக்கு வரை மறைத்திருந்ததால், மத நீர் கசிவது ஒருவர் கண்களிலும் படவில்லை.

"வேறு என்னவாக இருக்கும்?" என்று யோசித்த அச்சுதப்பன், "டேய் அந்தக் கள்ளைக் கொண்டு வா!" என்றான்.

கள் நிறைந்த குவளையை ஏந்திய காவலன் அச்சுதப்பனிடம் அதைக் கொடுப்பதற்கு வரும்பொழுது, கள்ளின் வாசனை யானையின் நாசியைத் தாக்க, யானை வேகமாகத் தும்பிக்கையை நீட்டி, அந்தக் 'காவலனிட மிருந்து குவளையைப் பிடுங்க முயற்சித்தது

இதனால் பதறிப்போன காவலன் குவளையைத் தவறவிட, கள் முழுவதும் தரையில் சிதறி, குவளை உருண்டோடியது. யானை உடனே அந்த இடத்தை முகர்ந்து பார்த்துப் பிளிற ஆரம்பித்தது.

அச்சுதப்பன் முகம் இதைப் பார்த்து உடனே மலர ஆரம்பித்தது.

''இப்பொழுது தானடா விஷயமே விளங்குகிறது!" என்றான்.

''என்ன தலைவரே?" என்றான் யானைப்பாகன் புரியாமல்.

''நான்கு நாட்கள் இடைவிடாத பயணத்தினால் யானை அலுத்துப் போய் இருக்கிறது. வயிறு மந்தப் பட்டிருக்கிறது. கள்ளைப் பார்த்தவுடன் அதற்கு எவ்வளவு குதூகலம் வந்தது என்று பார்த்தாயா? அதனால் ஒரு தொட்டியில் கள்ளை ஊற்றிக் குடிக்கச் செய்யுங்கள். சற்று நேரத்தில் புத்துணர்ச்சி வந்து விடும்."

''அப்படியே செய்கிறோம் தலைவரே!"

மதிய உணவு முடிந்த அதே வேளையில் யானைக்கு மதம் பிடித்திருக்கிறது என்று அறவே உணராத அவர்கள் ஒரு தொட்டி நிறையக் கள் ஊற்றி யானை முன்பு வைத்தார்கள். யானை வெறியுடன் அந்தக்கள் முழுவதையும் தும்பிக்கையால் உறிஞ்சிக் குடித்தது.

அடுத்த நாழிகைப் பொழுதில் அந்த யானையின் மீது அமைக்கப்பட்டிருந்த அம்பாரியில் இளவரசி சந்திரவதனா ஏறி உட்கார்ந்தாள் தஞ்சையை நோக்கி அவர்கள் பயணப்படத் தயாரானார்கள்.

மதுரை மன்னன் சொக்கநாதநாயக்கன், கங்கை கொண்ட சோழபுரீஸ்வரர் கோயிலுக்குப் பின்புறமாக இருந்த காட்டுப் பகுதிக்குள் அமைக்கப்பட்டிருந்த சிறிய கூடாரத்திற்குள், வெறுந்தரையில் மெல்லிய துணி விரிக்கப்பட்ட படுக்கையில் இருந்து கண் விழிக்கும் பொழுது, கதிரவன் உதயமாகி நீண்ட நேரம் ஆகி இருந்தது

கண்கள் விழித்தவுடன், கைகள் அனிச்சையாகப் பக்கத்தில் இருந்த உடைவாளையும், இடுப்பில் இருந்த குறுவாளையும் சரிபார்த்துக் கொள்ள, தலையை மட்டும் திருப்பிப் பார்த்தான். பக்கத்தில் படுத்திருந்த நண்பன் வெங்கடகிருஷ்ணனைக் காணவில்லை

சொக்கநாதன் அரக்கப்பரக்க எழுந்து, உடைவாளை இடுப்பில் கட்டிக் கொண்டு, அவசரமாகக் கூடாரத்தை விட்டு வெளியே வந்தான்.

வெங்கடகிருஷ்ணன் ஒரு மரத்தின் அடியில் தீ மூட்டி இரண்டு பெரிய பறவைகளை அறுத்துக் கறி சமைத்துக் கொண்டிருந்தான். சொக்கநாதன் தன்னருகே வருவதைப் பார்த்தவுடன் சிரித்தான்.

"என்ன சொக்கநாதா !, இப்பொழுதுதான் உனக்குப் பொழுது விடிந்ததாக்கும்! நானும் இரண்டு முறை உன்னை எழுப்பிப்பார்த்தேன். நீ அசையவே இல்லை! சரி. சுகமான கனவு கண்டு கொண்டிருக்கிறாய் போலும். எதற்குக் கலைப்பானேன் என்று அதன் பிறகு நான் உன்னை எழுப்பவே இல்லை!"

''அலுப்பு! அது தான் அசந்து தூங்கிவிட்டேன்!''

''சரி, எத்தனை பாட்டுக்கள் பாடினாய்?''

''பாட்டா? என்ன சொல்கிறாய்?'' புரியாமல் கேட்டான் சொக்கநாதன்.

''கனவிலே தஞ்சை இளவரசி சந்திரவதனா தேவியாரோடு எத்தனை காதல் பாடல்கள் பாடினாய் என்று கேட்டேன்.''

''நான் எதற்குக் கண்ட கழுதையோடு காதல் பாட்டுப் பாடவேண்டும்! அவள் ஒன்றும் என் கனவில் வரவில்லை!'' என்றான் எரிச்சலோடு.

''பொய் சொல்கிறாய் பார்த்தாயா! வழக்கத்திற்கு விரோதமாக நீ நெடு நேரம் தூங்கியதற்கு வேறு என்ன காரணம்?''

''முன்னிரவில் தஞ்சைப் படை வீரர்களோடு சண்டையிட்ட அலுப்பு! அதுதான் நீண்ட நேரம் தூங்கிவிட்டேன்.''

''சிறிது நேரம் சண்டையிட்டதற்கா இத்தனை அலுப்பு? இதனை வேறு யாரிடமாவது சொல்லி இருந்தால் நம்பி இருப்பார்கள்! என்னிடமே சொல்கிறாய் பார்த்தாயா?''

''ஏன்? நீ என்ன பெரிய கொம்பனா?''

''கொம்பன் இல்லாவிட்டாலும் உன்னுடைய உயிர் நண்பன். உன்னைப் பற்றி முற்றிலும் நன்றாக அறிந்தவன். இதைவிடப் பயங்கரமான சாகசச் செயல்களை நாள் முழுவதும் செய்து விட்டு, மறுநாள் பொழுது விடிவதற்குள் புத்துணர்ச்சியுடன் கிளம்பி வருவதைப் பார்த்துப் பலமுறை உன்னைப் பற்றி வியந்

திருக்கிறேன். நீ இப்பொழுது என்னிடமே சமாளிக்கப் பார்க்கிறாய்! பரவாயில்லை. இப்பொழுதாவது உண்மையைச் சொல். கனவில் சந்திரவதனா வந்தாளா?"

"அந்தக் கழுதை எதற்கு என் கனவில் வர வேண்டும்?"

"நேற்று கோயில் வாசலில் இருந்து நீண்ட தூரத்தில் நின்ற இளவரசியின் அழகைப் பார்த்தவுடனே நீ மயங்கிவிட்டாய். மனசு தாளாமல் அருகில் சென்று பார்க்க ஆசைப்பட்டு அவள் தங்கி இருந்த கூடாரத்திற்குள்ளே புகுந்து பார்த்துவிட்டாய்! மனசு தாங்குமா? அந்த அற்புதமான அழகியை அருகில் பார்த்தவுடன் உன் இதயம் சுழன்று அங்கேயே விழுந்திருக்கும்! பாவம்! இதயத்தை அவளிடம் தொலைத்துவிட்டு இவ்வளவு தூரத்தில் நீ எப்படி நிம்மதியாகத் தூங்க முடியும்? அதனால்தான் இரவு முழுவதும் தூங்காமல் கிடந்து தவித்து ஒருவழியாகக் காலையில் தான் உனக்குத் தூக்கமே பிடித்திருக்கும்!"

"நிறுத்துடா! இதுக்கு மேலே ஏதாவது உளறினே. உன் நாக்கையும், மூக்கையும் சேர்த்து அறுத்துத் தீயில் போட்டிருவேன்!" என்று கோபத்துடன் அவன் தலை முடியைப் பிடித்து உலுக்கினான்

"ஆ! வலிக்கிறது!" என்று வெங்கடகிருஷ்ணன் பொய்யாக அலற, சொக்கநாதன் அவன் தலையில் இருந்து கையை எடுத்தான்.

"நேரம் ஆகிறது சொக்கநாதா! சற்று தூரத்தில் சுனை ஒன்று இருக்கிறது. போய்க் குளித்துவிட்டு வா! அதற்குள் உணவு தயாராகிவிடும்! பழங்கள் வேறு பொறுக்கி வந்திருக்கிறேன். சீக்கிரம் வந்துவிடு!"

சொக்கநாதன் கூடாரத்திற்குள் நுழைந்து, குளிப்பதற்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு

சுனையை நோக்கி நடக்கத் தொடங்கினான். அப்பொழுது வெங்கடகிருஷ்ணன் மறுபடியும் அவனைக் கூப்பிட்டான்.

''சொக்கநாதா! ஒரு விஷயம் சொல்லிவிட்டுப் போயேன்."

"என்னடா ?" திரும்பி நின்று கேட்டான்.

"ஒருவேளை முத்து நகையைப் பற்றி இரவு முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தாயா ?''

"டேய்..." என்றவாறு முறைத்தான் சொக்கநாதன்.

"இல்லை. இப்பொழுது குளிக்கப் போகிறாயே, நேற்று இரவு உன்னைத் தூங்க விடாமல் செய்த அந்தப் பெண்ணின் நினைவு, நீ குளிப்பதற்கு முன் மறுபடியும் வந்துவிட்டது என்று வைத்துக்கொள்! நீ உலகத்தையே மறந்து கால நேரத்தையும் மறந்து, சுனையின் கரையிலேயே உட்கார்ந்துவிட்டால் இங்கு தனிமையில் இருக்கும் என்பாடு திண்டாட்டமாகப் போய்விடுமே! அதனால் தான் கேட்டேன்."

''டேய், இனி ஏதாவது பிதற்றினாய் என்றால்...'' என்றவாறு கீழே கிடந்த கல்லை எடுத்து ஓங்கினான் சொக்கநாதன்.

உடனே வெங்கட கிருஷ்ணன் பயந்தவன் போல் நடித்து, "சரி, சரி. வாயைத் திறக்கவே மாட்டேன். உத்தரவு!" என்று நடுங்கி வாயைப்பொத்திப் பணிந்தான்.

சொக்கநாதன் சிரித்தவாறு சுனையை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

''சற்று தூரத்திலேயே அந்த சுனை அமைந்திருந்தது சுற்றிலும் மரங்கள்சூழ்ந்திருக்க,இயற்கையிலேயே அழகாக

அமைந்திருந்தது, அந்தச் சிறிய தடாகம்! நிறையத் தாமரை மலர்கள் பூத்து நெருக்கமாகக் காணப்பட்டா லும் நீர் தெளிவாக இருந்தது.

சொக்கநாதன் இறங்கிக் குளிக்கத் தொடங்கினான். கதகதப்பான நீரில் மூழ்கியதும், அலுப்பு நீங்கிப் புத்துணர்ச்சிப் பெருகத்தொடங்கியது வெங்கடகிருஷ்ண னின் கேலிப் பேச்சுக்கள் நினைவுக்கு வந்தன.

உண்மையிலேயே இரண்டு பெண்களின் நினைவு களும்தான் அவன் தூக்கத்தை நெடுநேரம் தொலைத்திருந் தன. அதிலும் பெரும்பாலான நேரம் இளவரசி சந்திர வதனாதான் அவன் சிந்தனையை ஆக்கிரமித்து இருந் தாள்.

கோயில் வாசலில் இருந்து அவளைக் கண்டது முதல், கூடாரத்தின் மேல் தொங்கிய கயிறு வழியாக அவன் தப்பித்தது வரை முன்னிரவில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சி யும் மாறி மாறி அவன் மனதை உலுக்கிக் கொண்டு உறக்கத்தை ஒரேயடியாக ஓட்டி விட்டிருந்தது.

எவ்வளவு அழகாக இருந்தாள்! சில பெண்கள் தூரத்தில் இருந்து பார்க்கும் பொழுது அழகாக இருப் பார்கள்! அருகில் சென்று பார்த்தால் அத்தனை எழில் தோன்றாது! இவளோ தூரத்திலிருந்து பார்த்தாலும் அழகாக இருக்கிறாள்! அருகில் சென்று பார்க்கும் பொழுது அதைவிட அற்புதமாக இருக்கிறாள்.

சிலருக்குப் பின்னழகு பிரமாதமாக இருக்கும்! அதைப் பார்த்து மயங்கி முன்னால் ஓடிப்போய்ப் பார்த்தால், முன்னழகு மோசமாக இருக்கும்! கோயிலுக்குள் இவள் நடந்து செல்லும் பொழுது இவள் பின்னழகுதான் எவ்வளவு பிரமாதமாக இருந்தது. நடக்கும்பொழுது அவள் இடை அசைந்த அழகும், இடைக்குக் கீழே புடைத் திருந்த எழில்கள், அவள் நடைக்கேற்ப சுழன்று திருகி யதைப் பார்த்த பொழுது என் இதயமே திருகியதே!

இவைதான் அற்புதமாக அமைந்திருக்கிறது என்றால், அவளின் முகமும், முன்னழகுகளும் என் மூச்சையே ஒரு கணம் நிறுத்தி விட்டனவே! பாலேற்றை பட ரவிட்டது போல் எவ்வளவு அழகான வதனம்! திடீரென்று நான் மேலிருந்து குதித்ததைப் பார்த்தவுடன் அவளது திரண்ட மார்புகள் பயந்து ஒருமுறை ஏறி இறங்கிய காட்சி இன்னும் என் மனத்தை விட்டு அகலமாட்டேன் என்கிறதே!

என்னைப் பார்த்து அலறியவுடன் அவள் கையைப் பற்றி வாயைப் பொத்தியவுடன் எப்படி மிரண்டுபோய் என்னைப் பார்த்தாள்? அதுகூட அழகாகத்தான் இருந்தது! அந்தக் கண்கள் எப்படிச் சுழன்றன! கண்களா அவை? இல்லை கயல்கள்! அந்தக் கண்களில் அப்படியே முத்தமிட்டிருக்க வேண்டும்.

இந்தக் கையால்தானே அவள் வாயைப் பொத்தினேன்! தன் உள்ளங் கையை உற்றுப் பார்த்தான். என் கை பட்டது அவள் உதட்டிலா? இல்லை தாமரை இதழ் கள் மீதா? எவ்வளவு மென்மையாக இருந்தன!

என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்! பேய் என்று அலறினாளே! நான் என்ன பேயைப் போலவா இருக்கிறேன்! தடாகத்து நீரில் தெரிந்த தனது பிம்பத்தை உற்றுப் பார்த்தான்.

மனிதன் என்று தெரிந்ததும் என்ன நினைத்திருப் பாள்? கள்வன் என்று நினைத்திருப்பாளோ? "நீ அழ காக இருக்கிறாய்! உன்னை அருகில் பார்ப்பதற்காக வந்தேன்" என்று சொன்னவுடன் காமுகன் என்று நினைத் திருப்பாளோ? ஒருவேளை பைத்தியக்காரன் என்று நினைத்திருப்பாளோ?

இன்னொருமுறை அவள் அருகில் சென்று பார்த்தால் என்ன நினைப்பாள்? பயப்படுவாளா? இல்லை அதிர்ச்சி

அடைவாளா? ஒருவேளை கோபம் அடைந்தால்? அதையும் பார்த்தால் என்ன? அப்பொழுதுகூட அவள் அழகாகத்தான் இருப்பாள்! அந்தக் காட்சியையும் பார்த்தால் என்ன?

இன்று காலையில் இறைவனைத் தரிசித்துவிட்டு இங்கிருந்து கிளம்பி விடுவதாகத்தானே காவலர்கள் நேற்றுச் சொன்னார்கள். இளவரசியை இப்பொழுது சென்று பார்த்தால் என்ன? சொக்கநாதனின் நினைவு அவனையும் மீறி சந்திரவதனாவையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

32

கங்கை கொண்ட சோழபுரம் கோயிலையொட்டி தஞ்சை இளவரசி சந்திரவதனா சுவாமி தரிசனத்துக்காக முகாமிட்டிருக்க, கோயிலை அடுத்துள்ள காட்டுப் பகுதியில் வெங்கடகிருஷ்ணனுடன் கூடாரமிட்டு தங்கியிருந்த சொக்கநாதன் காலையில் காட்டு சுனை நீரில் நீராடியவாறே முன்தினம் இரவு இளவரசியின் கூடாரத்தினுள் புகுந்து அவளை திகைப்பில் ஆழ்த்திய நிகழ்ச்சியை எண்ணிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இளவரசியின் பிரமிக்கத்தக்க அழகு மனதைவிட்டு நீங்காதிருந்ததால் அவளை மீண்டும் ஒருமுறை சென்று பார்த்தால் என்ன என்ற ஆவலும்தான் மனதில் தோன்றியது.

சொக்கநாதன் சுனை நீரில் இருந்து இந்த எண்ணத்துடன் வெளிப்பட்டு, மரத்தின் அடியில் வந்து நின்று தலையைத் துவட்டத் தொடங்கினான். துவட்டி முடித்துத் துண்டைப் பிழிந்து 'பட்பட்' என்று ஓசை எழும்படியாக உதறினான்.

அந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் மரத்தில் இருந்த பறவைகள் சடசடத்துப் பறந்தன. அந்த மரத்தைச் சுற்றிலும் மல்லிகைக் கொடி ஒன்று அடர்த்தியாகப் படர்ந்து இருந்தது. அதில் ஏராளமான மல்லிகை மலர்கள் பூத்துக் கிடந்தன.

சொக்கநாதன் துண்டை உதறியதால் ஏற்பட்ட ஓசையில் மிரண்டு பயந்த பறவைகள் மரத்தின் கீழ் நிற்கும் சொக்கநாதனைப் பார்த்து வெருண்டு, மரத்தில் படர்ந்த மல்லிகைக் கொடிகளின் இடையே புகுந்து. அவற்றைப் பலமாக அசைத்து விட்டுப் பறந்தன.

இதனால் கொடியிலிருந்து ஏராளமான மல்லிகை மொட்டுக்கள் சொக்கநாதன் தலைமீதும், காலடியிலும் சிதறி விழுந்தன. சொக்கநாதன் சிந்தை சிதறியது.

தலையில் விழுந்திருந்த பூக்களை எடுத்துப் பார்த்தான்! மல்லிகைப் பூக்கள்! முகர்ந்து பார்த்தான்! மனதை மயக்கும் வாசனை! இதயமே கிறங்கியது!

மறுவினாடி முத்துநகையின் நினைவு அவனுக்குள் ஓடோடி வந்தது.

இப்படித்தானே அவளும் உப்பரிகையில் இருந்து என் தலைமீது ஏராளமான மல்லிகை மலர்களைக் கொட்டினாள்! அன்று நடந்த நிகழ்ச்சி அவன் மனதிற்குள் மறுபடி எழுந்து மணம் பரப்பத் தொடங்கியது.

வெங்கட கிருஷ்ணன் சொன்னதுபோல் அந்த நிகழ்ச்சி தற்செயலாக நடந்திருக்காதோ?

முத்துநகை என்னுடைய கவனத்தைக் கவர வேண்டும் என்பதற்காக அவளே அங்கு வந்து, வேண்டும் என்றே அப்படிச் செய்திருப்பாளோ? யோசித்துப் பார்த்தான். உண்மைதான்!

மல்லிகை மலர்களைத் தொடுக்க நினைப்பவள், அவள் அறையில் இருந்து தொடுத்திருக்கலாம். இல்லாவிட்டால் உப்பரிகையின் மேல் மாடியில் வேறு ஏதாவது ஓர் இடத்தில் அமர்ந்து தொடுத்திருக்கலாம். அதை விடுத்து நான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு நேர் மேலாக எதற்காக வரவேண்டும்?

மல்லிகை மலர்கள் அடங்கிய பாத்திரம் அவள் கையை விட்டு உண்மையிலேயே நழுவி இருந்தால், பாத்திரமும் சேர்ந்து என் தலையில் அல்லவா விழுந்திருக்க வேண்டும்!

ஆனால் மலர்கள் மட்டும் என் தலையிலும், பாத்திரமோ என் காலில் இருந்து சற்றுத் தூரத்திலும் அல்லவா விழுந்தன! வெங்கட கிருஷ்ணன் யூகித்தது சரிதான்.

முத்துநகை என் கவனத்தை அவள் மீது திருப்ப வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத்தான் இப்படிச் செய்திருப்பாள்! அப்படியானால் அவள் என் மீது எவ்வளவு காதல் வைத்திருப்பாள்!

என்னிடம் வலிய வந்துபேசி, என் கால்களில் மல்லிகை மலர்களைக் கொட்டி சொக்கநாதப் பெருமானை ஏற்கெனவே மலர்களால் அபிஷேகம் செய்து விட்டேன். இது பாதபூஜைக்காக என்று எவ்வளவு உணர்ச்சி வசப்பட்டுக் கூறினாள்!

என் மீது அவளுக்குத்தான் எவ்வளவு பக்தி! எவ்வளவு காதல்! அவளை நான் ஏமாற்றவே கூடாது!

கடைசியாக முத்துநகை கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"எங்கு சென்றாலும் உங்களுக்காக ஒருத்தி இங்கே காத்திருக்கிறாள் என்பதை மட்டும் மறக்காதீர்கள்!"

அவளை எப்படி மறக்க முடியும்?

முத்துநகையும் அழகில் குறைந்தவள் இல்லையே! தூரத்தில் சிவிகையில் அவளைப் பார்க்கும் பொழுதும் அழகாகத்தான் இருந்தாள். அன்று உப்பரிகையின் உச்சியில், என்னுடன் உவகை பொங்கப் பொங்கப் பேசிய பொழுதும் அழகாகத்தான் இருந்தாள்.

ஆனால் சந்திரவதனாவின் அழகு?

இல்லை. இல்லை. தஞ்சை இளவரசியின் அழகுக்கு மிஞ்சக் கூடியவர் இந்த அவனியிலேயே யாரும் இருக்க முடியாது! அரம்பையர் கூட்டம் கூட அண்ணாந்து பார்த்து அசூயை கொள்ளச் செய்யும் அற்புதமான அழகு படைத்தவள் சந்திரவதனா! அவளுடைய அழகுக்கு இணை என்று கூட முத்துநகையின் அழகைச் சொல்ல முடியாது!

தங்கக்கட்டி தகதகவென்று மின்னும்! அதன் அழகில் எந்தக் குறையும் காண முடியாது! அதே நேரம் பட்டை தீட்டிய வைரம் ஒன்றை அதன் பக்கத்தில் வைத்தால் வைரத்தின் ஒளி வீச்சுக்குத் தங்கத்தின் மினுமினுப்பு இணையாகாதே!

அதுமாதிரிதான் சந்திரவதனாவின் அழகு! முத்துநகையும் அழகானவள்தான்! இருந்தாலும் சந்திரவதனா ஒப்பிட முடியாத பேரழகு படைத்தவளாக அல்லவா இருக்கிறாள்!

"முத்து, நேரமாகிறது இன்னுமா குளிக்கிறாய்?" என்று தூரத்தில் இருந்து வெங்கடகிருஷ்ணன் கத்தும் குரல் கேட்டுத் தன்னிலைக்கு வந்தான் சொக்கநாதன்!

அவன் உடல் ஒரு கணம் சிலிர்த்தது! சே பகைவன் மகளை நினைத்து என் மீது பக்தி கொண்டிருக்கும் முத்துநகையை மறக்க நினைக்கிறேனே!

சந்திரவதனா எவ்வளவு அழகானவளாக இருந்தாலும் அவர்கள் பரம்பரைக்குக உரிய திமிர் இருக்கும்! அது எப்படி இல்லாமல் போகும். நச்சுப் பாம்பின் அழகை வியந்து நாகணவாய்ப் புள்ளை ஒதுக்கிய மாதிரி சந்திரவதனாவை நினைத்து, முத்துநகையை மறப்பது மதியீனம்!

ஒரு நாள் பார்த்த உடனே உள்ளம் கலங்கிப் போய் இருக்கிறேனே! இப்படித்தானே என் பாட்டனார் திருமலை நாயக்கனும், தஞ்சைப் பெண்ணின் அழகைப் பார்த்து மையலுற்றிருப்பார்! கடைசியில் என்ன ஆயிற்று?

வார்த்தையாலே கொட்டிக் கொட்டி அவர் மனதை வெறுக்க வைத்து விட்டாளே! அப்படித்தான் இந்தச் சந்திரவதனாவும் இருப்பாள்!

வேண்டாம்! இனி அவளைப் பார்க்கவே கூடாது! நல்லவேளை! சற்றுமுன் சலனப்பட்ட என் மனதை முத்துநகை நினைவு வந்து மீட்டது!

இனி சந்திரவதனா இந்த இடத்தை விட்டுப் போன பிறகுதான், இந்தக் காட்டை விட்டே வெளியேற வேண்டும்!

"நான் நினைத்தது சரியாகி விட்டது!" என்ற குரலைக் கேட்டதும் திடுக்கிட்டு ஏறிட்டுப் பார்த்தான் சொக்கநாதன்.

வெங்கடகிருஷ்ணன் அவனைத் தேடி அங்கு வந்திருந்தான்.

"என்னடா?" என்றான் தர்ம சங்கடத்துடன்.

"குளிக்கப் போனவனை நீண்ட நேரமாகியும் காணவில்லையே என்று பதறிப் போய் இங்கு வந்து

பார்த்தால், நீ மரத்தின் அடியில் ஈரத்துண்டை ஏந்திய படி சிலையைப் போல நிற்கிறாய்! இன்னும் இளவரசி நினைவு அகலவில்லையா?"

"சேச்சே! அதெல்லாம் இல்லை!"

"எதற்கும் ஒரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வருவோமா?"

"யாரை?"

"தஞ்சை இளவரசி சந்திரவதனாவைத்தான்"

"இல்லை. இனி அவள் முகத்திலேயே விழிக்கக் கூடாது என்று முடிவு எடுத்து இருக்கிறேன். நீயும் அவளைப் பற்றி என்னிடம் பேசாதே!"

"பிறகு எதற்கு நீ இத்தனை நேரம் இப்படி நின்றிருந்தாய்?"

"ஈரத்துண்டு காயட்டுமே என்று நின்றேன்! இந்த இடமும் அழகாக இருக்கிறது. ரசித்தவாறு இருந்தேன்."

"சரி. அடுத்து நமது திட்டம் என்ன? இப்பொழுதே கிளம்பி விடலாமா?"

"வேண்டாம்! முதலில் இளவரசி இங்கிருந்து போய்த் தொலையட்டும். அதன் பிறகு நாம் வேறு வழியாகத் தஞ்சை செல்லலாம்! இனி அவள் என் பார்வையிலேயே படவேண்டாம் என்று நினைக்கிறேன்"

இருவரும் கூடாரத்திற்குள் வந்தனர்.

மதியம் உணவருந்தி விட்டுச் சொக்கநாதனும், வெங்கடகிருஷ்ணனும் ஓய்வெடுக்கலாம் என்று கூடாரத்திற்குள் உட்கார்ந்து இருந்த பொழுது, தூரத்தில் பெருத்த கூச்சல் கிளம்பியது.

திடுக்கிட்டு வெளியே வந்த சொக்கநாதன் அருகில் இருந்த பெரிய மரத்தின் உச்சியில் ஏறிப் பார்த்தான். மறு நிமிடமே அவசரமாக இறங்கி, வெங்கடகிருஷ்ண னிடம் ஓடோடி வந்தான்.

"கிருஷ்ணா, தஞ்சை இளவரசி பெருத்த ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாள்! நாம் காப்பாற்றியே தீர வேண்டும் ம். சீக்கிரம் கிளம்பு" என்றவாறு தனது குதிரையில் ஒரே தாவாக ஏறினான்.

இருவர் குதிரைகளும் பறக்கத் தொடங்கின.

தஞ்சை இளவரசி சந்திரவதனா தேவிக்காகக் கங்கை கொண்ட சோழபுரத்தில் வெகு சிறப்பான முறையில் மதிய விருந்து தயாராகிக் கொண்டிருந்தது.

இளவரசி முதன் முதலாக அந்த இடத்திற்கு வந்திருக் கிறாள் என்பதற்காக அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர் களும் மிக மும்முரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந் தனர்.

தஞ்சை இளவரசி மிகுந்த அழகு படைத்தவள் என்று அவர்கள் கேள்விப்பட்டிருந்தாலும், முதன் முறையாகச் சந்திரவதனாவை நேருக்கு நேர் பார்த்தவுடன் அவர்கள் வியப்பு இன்னும் அதிகரித்திருந்தது. இவ்வளவு அழகான பெண்ணை அவர்கள் வாழ்நாளில் பார்த்ததே இல்லை!

இவளைப் பார்த்தால் மனித இனத்தைச் சேர்ந்தவள் போல் தோன்றவே இல்லை. தஞ்சை மன்னன்விஜயராகவ நாயக்கன் செய்த பெருந்தவத்தினால் இறைவன் மனமிறங்கி இந்திர லோகத்திலிருந்து. கந்தர்வ கன்னி ஒருத்தியை மகளாக அனுப்பி இருப்பான் என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

இவ்வளவு அழகுமிருந்த இளவரசியின் பாதம் பட்டதே இந்த மண்ணுக்குப் பெருமை! இவளைக் கண்ணாரப் பார்ப்பதற்கு நாம் முன்பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்ற மகிழ்ச்சி அவர்களுக்குள் நிறைந்திருந்தது.

இப்படிப்பட்ட இளவரசிக்குச் சிறப்பான விருந்து படைக்க வேண்டும். எங்களது உபசரிப்பையும், உன்னதமான விருந்தையும் இளவரசி உயிருள்ளவரை மறக்கக் கூடாது. தஞ்சை மன்னரான தனது தந்தையிடம் சென்று இதனைப் பற்றிப் பெருமையாகப் புகல வேண்டும் என்று ஆர்வத்தில் ஒவ்வொருவரும் முனைப்புடன் செயலாற்றிக் கொண்டிருந்தனர்.

கங்கை கொண்ட சோழீஸ்வரனுக்கு உச்சிக்கால பூஜையும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இளவரசி இம்முறையும் சிங்கக் கிணற்றுக்குள் இறங்கி, புனித நீரில் கால்களை நனைத்துக் கொண்டு, தலையின் உச்சியில் அந்த நீரை எடுத்துத் தெளித்துக் கொண்ட பிறகே, கோயிலுக்குள் நுழைந்தாள்.

இறைவனுக்குச் செய்யப்பட்ட உச்சிகால பூஜையைக் கண்கள் கசியப் பார்த்து மனம் கசியப் பிரார்த்தித்தாள்.

மிக உயரமாக அமைந்திருந்த லிங்கத்தின் மீது அபிஷேகம் செய்வதற்காகக் குருக்கள் அருகில் இருந்த மேடைமீது ஏறி, உச்சியில் நின்று லிங்கத்தின் மீது புனித நீர் ஊற்றிய பொழுது, இளவரசி அந்தக் காட்சியை அண்ணாந்து பார்த்தாள்.

லிங்கத்தின் நேர் மேலே இருந்த விதானத்தைக் கண்ணுற்ற பொழுது, அவள் மனம்படக் என முன்னிரவில்

தான் கூடாரத்தை அண்ணாந்து பார்த்த காட்சி நினைவுக்கு வந்தது.

எவ்வளவு சாகசமாக மேலிருந்து குதித்தான்! யார் அவன்? பயத்தில் அவன் முகத்தைச் சரிவரப் பார்க்க வில்லையே!

அச்சுதப்பனை நெஞ்சில் அணைத்துக் கொண்டு அவன் கையாலேயே வாளைச் சுழற்றியபொழுது கூட அவன் ஒரு இடத்தில் தொடர்ந்து ஒரு நொடிக்கு மேல் நிற்காததால், அப்பொழுது கூட அவன் முகத்தைச் சரி வரப் பார்க்க முடியவில்லை!

இருந்தாலும் அழகாகத்தான் இருப்பது மாதிரித் தோன்றினான்! சே! கோயிலுக்குள், இறைவன் சன்னிதானத்திற்கு எதிரில் எனக்கு எதற்கு அவனைப் பற்றியே நினைவு எழுகிறது! இது தப்பு.

இறைவா, என்னை மன்னித்துவிடு! உன்னை நினைத்து வழிபட வேண்டிய நேரத்தில் கண்டவன் நினைப்பும் எழுகிறது! மறக்கச் செய்!

அவன் யாரோ, எவனோ? கள்வனாகத்தான் இருப் பான்!

"உன்னை அருகில் வந்து பார்க்க வேண்டும் என்பதற் காகத்தான் வந்தேன். நீ அழகாக இருக்கிறாய்" என் றானே! நிஜமாக இருக்குமோ!

சேச்சே! எனது கூடாரத்தில் புகுந்து எதையாவது திருட வந்திருப்பான். என்னைப் பார்த்ததும் அழகில் மயங்கி, பிதற்றி இருப்பான்!

பெண்ணாசைக் கொண்ட பித்தனாகவும் தோன்ற வில்லையே!

என் கையைப் பிடித்து; வாயைப் பொத்தும் அளவுக்குத் துணிச்சல் கொண்டவன் பிறகு, என்னிடம்

கண்ணியமாக அல்லவா பேசினான்! அவன் நினைத்திருந்தால் அச்சுதப்பன் வருவதற்குள் என்னிடம் முரட்டுத்தனமாக நடந்திருக்கலாமே! ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லையே! அவன் யாராக இருக்கும்?

சே! மறுபடியும் மனம் அவனை நோக்கியே செல்கிறது! ஊர் பேர் தெரியாத எவனையோ, உலகத்தை ஆளும் இளவரசி நினைப்பது தவறு! அதிலும் உலகளந்தவன் கருவறைக்குள் நின்று கொண்டு, அந்தத் திருடனை நினைத்துக் கொண்டிருப்பது மாபெரும் தவறு!

இறைவனிடம் மறுபடியும் மன்னிப்புக் கேட்டாள்! மனதைக் கஷ்டப்பட்டு ஒருநிலைப்படுத்திக் கொண்டு பிரார்த்தித்தாள். தந்தைக்கும், தனயனுக்கும் சேர்த்து வேண்டினாள்! தனக்காக இத்தனை ஏற்பாடுகள் நடக்கக் காரணமாக அமைந்துவிட்டுக் கடைசி நேரத்தில் வர முடியாமல் போன தனது தோழி மதுரவாணிக்காகவும் தொழுதாள்!

தனக்கு எல்லா நன்மையும் கிடைக்க அருள் புரியுமாறு இதயப்பூர்வமாக வேண்டிக் கொண்டாள்

பூஜை முடிந்து சன்னிதானத்தை விட்டு வெளியேறும் பொழுது அச்சுதப்பன் வழக்கம்போல் அனைவரையும் முந்திக் கொண்டு, இளவரசியின் அருகில் வந்தான்.

"சந்திரவதனா, நமக்காக விருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. உணவருந்தி முடிந்தவுடன் நீ ஓய்வு எடுப்பதற்கும் ஏற்பாடு, செய்திருக்கிறேன். ஹி ஹி!'' என்று சிரித்தான்.

சந்திரவதனா அவனை முறைத்துப் பார்த்தாள்.

''நான் சொல்லியது என்ன? நீங்கள் செய்தது என்ன?''

"சிங்கக் கிணற்றில் இருந்து புனித நீரைக் குடங்களில் திரப்பி உன் தந்தையும், தனயனும் நீராடுவதற்காகத் தஞ்சைக்குக் கொண்டு போக வேண்டும் என்று சொன்னதுதானே! மறப்பேனா? அதனை எப்போதோ செய்து முடித்து விட்டேன்."

"மாமா நான் என்ன சொன்னேன் என்றால்..." என்று சொல்ல வந்த சந்திரவதனாவை மேலே பேச விடாமல் உரத்த குரலில் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான் அச்சுதப்பன்.

"நூற்றி எட்டுக் குடங்களில் இந்தப் புனிதநீரை நிரப்பிப் பாதுகாப்பாக மூடி எடுத்துக் கொண்டு போய் நமது வீரர்கள் வண்டிகளில் வைத்து விட்டார்கள். கங்கை நீர் நம்முடன் பத்திரமாகத் தஞ்சை வந்து சேர்ந்து விடும். அந்தக் கவலையே உனக்கு வேண்டாம்."

"அதில்லை மாமா. நான் என்ன..."

"இதுல ஒரு முக்கியமான விஷயம் கவனித்தாயா சந்திரவதனா? கங்கை வரை படையெடுத்துச் சென்ற சோழ மன்னன், தான் கொண்டு வந்த கங்கை நீரை இந்தக் கிணற்றில் ஊற்றி இருக்கிறான் நாம் இப்பொழுது அந்த கங்கை நீரை, இதே கிணற்றில் இருந்து எடுத்துக் கொண்டு தஞ்சைக்குச் செல்கிறோம்! அதனால் நாமும் கங்கை வரை படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதற்குச் சமமாகி விடுகிறோம் இல்லையா? எப்படி ஹஹ்ஹஹ்ஹா!" நெஞ்சை விடைத்துக் கொண்டு சிரித்தான்.

"ரொம்ப மட்டமாக இருக்கிறது! சிரிப்பை நிறுத்துங்கள்!" என்று அதட்டும் குரலில் சொன்னாள் இளவரசி!

மறுநிமிடமே அவன் சிரிப்பு நின்றது. இளவரசி அவனைப் பார்த்துக் கோபத்துடன் வார்த்தைகளை வீசினாள்.

"நான் என்ன சொல்ல வருகிறேன் என்று முழுவதும் கேட்டு முடிக்க வேண்டும் என்ற அடிப்படை உணர்வு கூட இல்லாமல் எதை எதையோ உளறிக் கொண்டு போகிறீர்களே! இதில் அபத்தமான கற்பனை வேறு," என்றவாறு பல்லைக் கடித்தாள்.

"என்ன... என்ன சொல்ல வந்தாய்?" என்று பயத்துடன் கேட்டான் அச்சுதப்பன்.

மற்றவர்கள் முன்னிலையில் தன்னை அவள் கடிந்தது அவனுக்கு ஒரு மாதிரியாக ஆகிவிட்டது.

"காலையிலேயே நான் என்ன சொன்னேன்? மதிய உணவு அருந்தியவுடன் நான் தஞ்சைக்குக் கிளம்ப வேண்டும். ஓய்வு எடுக்க விருப்பமில்லை என்றேனே, மறந்துவிட்டதா? சொன்னது ஒன்று செய்வது ஒன்றா?"

"இல்லை... வந்து..."

"நீங்க எங்கேயும் வரவேண்டாம்! உணவு வேளை முடிந்தவுடன் ஊரை நோக்கிச் செல்வதற்கு உகந்த ஏற்பாடுகளை இப்பொழுதே செய்து விடுங்கள்!" என்று கடுமையாகச் சொன்னாள்.

அச்சுதப்பனுக்கு முகம் தொங்கிப் போய்விட்டது. வாய்க்குள் எதையோ முணு முணுத்தவாறு அந்த இடத்தை விட்டு அவசரமாக அகன்றான்.

அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர்களும் இளவரசியை அருகில் இருந்த கூடாரத்திற்கு அழைத்துச் சென்றனர். அதற்குள் அறுசுவை உணவு அவளுக்காகத் தயார் நிலையில் இருந்தது. சந்திரவதனா அமர்ந்தாள்.

தாதிகள் பரிமாறத் தொடங்கினார்கள்!

இளவரசி சாப்பிடத் துவங்கிய சிறிது நேரத்தில் அச்சுதப்பன் மறுபடியும் அங்கு நுழைந்தான்.

"சந்திரவதனா நன்றாகச் சாப்பிடு! ஏய் இளவரசிக்கு கல்கண்டுச் சோறு அதிகமாகப் போடு! என்ன ஸ்தானிகரே, பலாச்சுளைகளைத் தேனில் ஊற வைத்துத் தனியாகக் கொண்டு வரச் சொன்னேனே? கொண்டு வந்தீர்களா? இளவரசி கை துடைப்பதற்குத் துணி தயாராக இருக்கிறதா? ஏய் பணிப்பெண்ணே, இளவரசியின் இலையில் இன்னும் கொஞ்சம் மாம்பழங் களை வெட்டி வை" என்று ஒவ்வொருவராக அதட்டிக் கொண்டு, இளவரசியிடம் அதிக உரிமை எடுத்துக் கொண்டு இளவரசியின் இலையில் அவள் சாப்பிட முடி யாத அளவுக்கு ஏராளமான உணவு வகைகளைப் பரப்பச் செய்தான்

இளவரசிக்கு அவனைப் பார்க்கப் பார்க்க எரிச்சலாக வந்தது. சற்று முன்னர் தானே இவனைக் கடிந்து கொண் டேன். எத்தனை பட்டாலும் புத்தியில் உறைக்காது போலும், மட ஜென்மம்!

''மாமா, இங்கேவாருங்கள்!'' அமைதியாக அவனைக் கூப்பிட்டாள்.

"என்ன சந்திரவதனா?" இளித்தவாறு அவளருகே வந்தான்.

"உங்களிடம் சற்று முன்னர் ஒரு வேலையை ஒப் படைத்தேனே, நினைவிருக்கிறதா?''

"சாப்பிட்டு முடித்தவுடன் நாம் தஞ்சை கிளம்ப வேண்டும் என்பதுதானே? எல்லா உத்தரவுகளும் பிறப் பித்து விட்டேன். நீ கை கழுவி முடித்தவுடன் மறு விநாடியே கிளம்பி விடலாம்."

"நீங்கள் சாப்பிட்டீர்களா ?''

"நீ சாப்பிட்டு முடித்தவுடன் சாப்பிடலாம் என்று இருக்கிறேன். எனக்கு நீதானே முக்கியம்! நான் சாப்பிடுவதா முக்கியம் ?"

"எனக்கு இங்கே ஒரு குறையும் இல்லை. இவர்கள் அனைவரும் சிறப்பான முறையில் என்னைக் கவனித்துக் கொள்வார்கள். முதலில் நீங்கள் சென்று உணவருந்துங்கள்."

"நீ சொன்னால் சரிதான்," என்று புளகாங்கிதத்தோடு திரும்பியவனைச் சந்திரவதனா மறுபடியும் அழைத்தாள்.

"மாமா, சாப்பிட்டு முடித்தவுடன் நீங்கள் இங்கு வர வேண்டாம். நேரே நமது படைப் பிரிவுக்குச் சென்று அவர்கள் அனைவரும் சாப்பிட்டார்களா என்று கவனியுங்கள்! பிறகு அனைவரையும் தயார் நிலையில் ஒழுங்குப் படுத்திவிட்டு நீங்கள் அங்கேயே இருந்தால் போதும், என்னைத் தேடி வரவேண்டாம். நானே வந்து விடுவேன். சரி நீங்கள் போகலாம்;'' என்று கண்டிப்பான குரலில் சொன்னாள்.

அச்சுதப்பன் முகம் மறுபடியும் தொங்கிப் போயிற்று! முகம் வாடிப் போய் அங்கிருந்து அவசரமாக நகர்ந்தான்.

அச்சுதப்பன் அந்த இடத்தைவிட்டு அகலும் வரை அவனையே எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் இளவரசி!

''நேற்று இரவு தன்னந் தனியாக, கையில் ஆயுதமே இல்லாமல் நின்ற ஒருவனைப் பிடிக்க முடியாமல் என்ன பாடுபட்டான். இந்த அச்சுதப்பன்! இன்று கங்கை வரை படையெடுத்து வெற்றி பெற்றதற்குச் சமம் என்று

எவ்வளவு சித்தாப்பாகச் சொல்கிறான்! இவன் எல்லாம் ஒரு வீரன்!

எரிச்சலுடன் உண்ணத் தொடங்கினான்.

இளவரசியின் கூடாரத்தில் இருந்து வெளிவந்த அச்சுதப்பனுக்கோ அதைவிட எரிச்சலாக இருந்தது. நாலுபேர் முன்னிலையில் இந்த இளவரசி எடுத்தெறிந்து பேசி விட்டாளே என்று ஆத்திரமாகவும் இருந்தது.

இருக்கட்டும், இருக்கட்டும். இவள் கழுத்தில் என்னை விட்டு வேறு யார் தாலி கட்டிவிட முடியும்? முதலில் இவள் என் மனைவி ஆகட்டும்! அதற்குப் பிறகு இவளைப் படாதபாடு படுத்தினால்தான் எனக்கு நிம்மதி!

இந்த எரிச்சலிலும் ஆத்திரத்திலும் தனது கூடாரத்திற்குள் நுழைந்து கள்ளினை எடுத்துக் குடித்தான். பிறகு மூக்கு முட்ட உணவருந்தினான்.

இளவரசி இன்னும் சற்று நேரத்தில் கிளம்பி விடுவாள். அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கா விட்டால் மறுபடியும் திட்டுவாளே என்ற பயத்தில் படை வீரர்கள் இருக்கும் இடத்திற்கு வந்தான்.

வீரர்கள் அணிவகுத்து ஆயுதம் ஏந்தித் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தனர். இளவரசி ஏறிவரும் பல்லக்கு புதுத்திரைச் சீலைகள் போர்த்தப்பட்டு, அதனைச் சுமக்கும் காவலர்களால் சூழப்பட்டு இருந்தது.

அதற்கு முன்னர் அம்பாரி ஏற்றப்பட்ட நிலையில் அந்த யானை அமைதியாக நின்று கொண்டிருந்தது அதன் தும்பிக்கையைப் பிடித்தவாறு, மறுகையில் அங்குசம் ஏந்தியவனாய் யானைப் பாகன் நின்றிருந்தான்.

அச்சுதப்பன் அவனருகில் வந்து நின்று, யானையை-யும் பாகனையும் ஏற இறங்கப் பார்த்தான்.

"என்னடா, நான் சொன்னபடி கள்ளைக் குடித்தவுடன் இந்த யானை எவ்வளவு அமைதியாக ஆகிவிட்டது பார்த்தாயா? கள்ளின் மகிமையே தனி என்று இப்பொழுதாவது புரிந்து கொண்டாயா?" என்றான் பெருமையாக.

"உண்மைதான் மகாராசா!" என்றான் பாகன் பணிவுடன்

ஆனால் உண்மையில் மதங்கொண்ட அந்த யானை கள்ளைக் குடித்தவுடன் லேசாக ஏறிய போதையில் அதன் மூளை மங்கிக் கிறங்கி இருக்கிறது என்றும், போதை ஏற ஏற அதன் வெறி அதிகமாகி ஆக்ரோஷம் அடையப் போகிறது என்றும் அவர்களுக்கு எப்படித் தெரியும்?

அப்பொழுது ஒரு வீரன் அங்கு ஓடோடி வந்தான்.

"இளவரசியார் வந்து கொண்டிருக்கிறார். அம்பாரியில் அமரப் போகிறாராம். தயாராக இருக்கும்படி உத்தரவு!" என்றான்.

மறுகணம் பாகன் யானையை அதட்டினான். யானை மருண்டு நாலாபுறமும் பார்வையை ஓட்டியது! பாகன் உத்தரவு அதன் மூளையில் பதிந்தது மாதிரித் தோன்றவில்லை.

பாகன் உரத்த குரலில் யானையை அதட்டினான். யானை தலையை ஆட்டி மெதுவாக மண்டியிட்டுப் படுத்தது.

அதேநேரம் இளவரசி சந்திரவதனா அரசப் பிரதிநிதிகள், ஸ்தானிகர்கள், கோயிலில் பணிபுரிவோர் இவர்கள் புடைசூழ அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

"சந்திரவதனா, நீ சொல்லியபடி எல்லாம் தயாராக இருக்கிறது!" என்றான் அச்சுதப்பன்.

இளவரசி அவன் சொன்னது காதில் விழாததுபோல், தன்னை உபசரித்த அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டாள் பிறகு அன்னம் போல் நடந்து யானையின் அருகே வந்தாள்.

அங்கு கூடி இருந்த அனைவரையும் மறுபடியும் ஒரு முறை பார்த்துப் 'போய் வருகிறேன்' என்று சொல்லி விட்டு, முழங்காலிட்டுப் படுத்திருந்த யானையின் காலில் மிதித்து ஏறி, அதன் முதுகில் கட்டப்பட்டு இருந்த அம்பாரியில் போய் அமர்ந்தாள். யானை ஒருமுறை சிலிர்த்தது.

பாகன் உடனே அதட்டினான். யானை அசையாமல் கிடந்தது. அதன் காதருகே அங்குசத்தால் குத்தி மறுபடியும் அதட்டினான். யானை மீண்டும் ஒருமுறை சிலிர்த்துக் கொண்டு எழுந்து நின்றது. அதன் போதையும் ஏறத் தொடங்கியது! மதநீரும் அதிகமாக வழியத் தொடங்கியது!

"தஞ்சை இளவரசி சந்திரவதனா தேவியார் வாழ்க! வாழ்க!" என்று அனைவரும் வாழ்த்தினர்.

யானை முன்னே புரவியில் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு அமர்ந்திருந்த அச்சுதப்பன் வாத்தியக்காரர்களைப் பார்த்துக் கையசைக்க, அத்தனை வாத்தியங்களும், அந்த இடமே அலறும்படியாக ஒலிக்க ஆரம்பித்தன.

அடுத்த கணமே யானையின் வெறி உச்சிக்கு வந்து விட்டது. அதே நேரம் நடக்கும்படி, தும்பிக்கையைப் பிடித்து நின்ற பாகன் அதன் வயிற்றில் குத்திக் கட்டளை இட்டான்.

அந்தப் பாகனை அப்படியே தனது தும்பிக்கையில் பற்றிச் சுழற்றி வானத்தில் எறிந்து விட்டுப் பிளிற ஆரம்பித்தது மதங்கொண்ட அந்த யானை!

மதம் பிடிக்கத் தொடங்கி இருந்த அந்த மாபெரும் யானை சற்று நேரத்திற்கு முன்பாக அருந்திய கள்ளின் ஆரம்ப போதையில் முதலில் அமைதியாகத்தான் இருந்தது.

அதன் முதுகில் பளபளக்கும் சிவப்பு நிறப்பட்டுத் துணி ஒன்று போர்த்தப்பட்டு முழங்கால்வரை இருபுறமும் தொங்கிக் கொண்டிருந்தது. பட்டுத்துணி முழுவதும் பல வண்ணக் கோலங்கள் அழகுற நெய்யப் பட்டிருந்தன.

அந்த துணிக்கு மேலாக அற்புதமான வேலைப்பாடு களுடன் அமைந்த மலர்களால் அலங்கரிக்கப்பட்ட உறுதியான தேக்கு மரத்தில் கடைந்து உருவாக்கப்பட்ட அம்பாரி ஒன்று அமைக்கப்பட்டு யானையின் அசைவில் அது கீழே விழுந்து விடாமலிருக்க உறுதியான கயிற்றால் யானையின் வயிற்றோடு இறுகக் கட்டப்பட்டிருந்தது.

அம்பாரியின் முன் பக்கத்தில் இருந்து மற்றொரு கயிறு, அந்தக் களிற்றின் முதுகு வழியாகத் தொங்க விடப்பட்டு கயிற்றின் நுனிகளில் இனிமையான நாதம் ஒலிக்கும் இரண்டு வெண்கல மணிகள் கோர்க்கப்பட் டிருந்தன. களிறு லேசாக அசைந்தாலே இந்த மணிகள் நன்றாக அசைந்து கணீர், கணீர் என்ற ஒலியை எழுப்பிக் கொண்டிருந்தன.

தும்பிக்கையின் முன் பகுதியில் வண்ண குழம்பினால் கோலங்கள் தீட்டப்பட்டிருந்தன. தலையின் உச்சியில் இருந்து தந்தங்கள் ஆரம்பிக்கும் இடம் வரையிலும் தங்க

மூலாம் பூசப்பெற்ற முகபடாம் போர்த்தப்பட்டிருந்தது. அந்த முகபடாம் அதன் இரு காது நுனிகளையும் நன்றாக மறைத்திருந்ததால், காதுப்பகுதியில் இருந்து கசிய ஆரம்பித்த மதநீரை ஒருவரும் கவனிக்க முடியாமல் போய் விட்டது.

தஞ்சை இளவரசி சந்திரவதனாதேவி இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவாள் என்று அறிந்த பாகன் யானையை மண்டியிடுமாறு உத்தரவிட்டான். முதலில் தடுமாறித்தான் அது மண்டியிட்டு இருந்தது.

அதன் போதையும் அப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக ஏறத் தொடங்கியது. காதின் அருகில் இருந்து மதநீரும் தன் கசிவின் அளவை அதிகப்படுத்த ஆரம்பித் திருந்தது.

இளவரசி சந்திரவதனாவுடன் அரசப் பிரதிநிதிகளும், ஸ்தானிகர்களும் புடைசூழ்ந்து வந்து கலகலவென்று பேசி யானையின் அருகே வந்ததும், அந்த ஓசை யானையினைச் சற்று மிரளச் செய்தது தன்னிலை மறந்து நாலாபக்கமும் வெறிதது்ப் பார்த்தது.

அதே நேரம் இளவரசி மண்டியிட்டு இருந்த அந்த மதக்களிற்றின்காலைமிதித்து ஏறி, அம்பாரியில் உட்கார்ந் ததும் அதன் உடம்பு ஒரு தடவை சிலிர்த்தது. சினம் மெதுவாக எழுந்தது.

அந்தச் சமயத்தில் பாகன் அதனை எழுந்து நிற்குமாறு ஆணையிட அதனைச் சட்டை பண்ணாமல் வெறித்துப் பார்த்தவாறு நின்றது. பாகன் கோபத்துடன் தன் கையில் இருந்த அங்குசத்தால் அதன் காதருகே குத்தி மறுபடியும் ஆணையிட, களிறு எழுந்து நின்று பாகனையே வெறித்தது.

காதருகே அங்குசத்தால் பலமாகக் குத்தப்பட்டதால் மதநீரின் ஒழுக்கு அதிகமாகியது. மண்டியிட்டிருந்து

திடீரென்று எழுந்ததால் கள்ளின் போதையும் கங்கு கரையில்லாமல் பொங்கத் தொடங்கியது எழுந்து நின்று உடலைச் சிலிர்த்தது கோபம் கிளர்ந்தது. வெறியுடன் நாலாபுறமும் பார்த்தது.

அடுத்த சில நொடிகளில் இளவரசி புறப்படுவதற்கு அறிகுறியாக அனைத்து வாத்தியங்களும் அலற ஆரம்பித்ததும், யானையின் வெறி, மதம், போதை ஆகிய அத்தனையும் உச்ச நிலைக்கு வந்துவிட்டது. இந்த அண்டத்தையே துண்டு துண்டாக்கிவிடும் அளவுக்கு அதற்கு ஆத்திரம் மூளத் தொடங்கியது.

வாத்தியங்களின் அலறல் திடீரென்று நிற்க, யானைப் பாகன் அதனை நடக்குமாறு உத்தரவிட்டு, தன்கையில் இருந்த அங்குசத்தால் யானையின் வயிற்றில் ஓங்கிக் குத்த யானையின் வெறி முழுவதும் யானைப்பாகன் மேல் திரும்பியது.

மறுவினாடி தன் காலருகே நின்ற பாகனைத் தும்பிக் கையால் வளைத்துப் பிடித்து உயர்த்திச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்தது.

அந்தரத்தில் பந்து போலச் சுழன்ற பாகன் உடலைப் பார்த்தவுடன் இளவரசி பயத்தில் தன்னை மறந்து அலறினாள் அருகில் இருந்த அனைவரும் திகைத்துப் போய் அந்தக் காட்சியைப் பார்த்தனர்.

மறுவினாடி கீழே விழுந்த பாகனின் தலைமீது தன் காலை வைத்து அழுத்தி, அந்த இடமே கிடுகிடுக்கும் படியாகத் தனது தும்பிக்கையை உயர்த்தி பிளிறியது. பாகனின் தலை செஞ்சாந்துக் குழம்பு அடங்கிய கண்ணாடிக் குவளை உடைந்தது போலத் துண்டு

துண்டாகச் சிதறி, ரத்தமும் நிணமும் நாலாபுறமும் தெறித்தது.

இளவரசி மறுபடியும் பயங்கரமாக அலறினாள். யானையின் பின்புறமாக நின்றிருந்த படை வீரர்கள் ஸ்தம்பித்து நின்றனர். அதே நேரம் யானையின் முன்புறம், கம்பீரமாகக் குதிரையில் அமர்ந்து இருந்த அச்சுதப்பன் இளவரசியின் அலறலைக் கேட்டுக் குதிரையைப் பின் பக்கமாகத் திருப்பினான்.

அந்த நேரத்தில்தான் யானையும் பாகன் தலையை மண்ணோடு மண்ணாகத் தேய்த்து விட்டுப் பிளிறியவாறு இருந்தது. இந்தக் காட்சியைப் பார்த்ததும் அச்சுதப்பனின் உடல் தலை முதல் நுனிவரை நடுங்கத் தொடங்கியது. இளவரசி எவ்வளவு பெரிய ஆபத்தில் இருக்கிறாள் என்பதையும் உணர்ந்தான்

"என்னடா பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்? இந்த யானையைக் குத்துங்கள். இளவரசியை முதலில் கீழே இறக்குங்கள்!"

தொண்டை கிழியக் கத்தினான். படை வீரர்கள் அனைவரும் திகைத்தார்களே தவிர, ஒருவருக்கும் அதன் அருகில் வரத் துணிவில்லை.

"சீக்கிரம். இளவரசியை அம்பாரியில் இருந்து இறக்குங்கள். குத்துங்களடா இந்த யானையை!"

மறுபடியும் கத்தினான். பிளிறி முடித்த யானை தன் முன்னால் குதிரை மீது அமர்ந்து கத்தும் அச்சுதப்பனை முறைத்துப் பார்த்தது. அதே நேரம் அந்தக் களிறுக்கு மதம் பிடித்திருக்கிறது என்பதை உணர்ந்த அந்தப் புரவியும், உடல் சிலிர்த்து, விதிர் விதிர்த்துத் தனது முன்னங் கால்களை உயர்த்திப் பயத்துடன் கனைத்தது.

மறுகணம் யானை தனது தும்பிக்கையால் குதிரையின் வயிற்றோடு ஓங்கி ஓர் அறைவிட்டது. குதிரை துள்ளி ஒரு

பக்கம் விழ, அச்சுதப்பன் மறுபக்கம் அலங்கோலமாகத் தரையில் விழுந்து புரண்டான். அவன் உடைகள் தரையில் விழுந்து புரண்டான். அவன் உடைகள் தரையில் இழுத்துக் கிழிபட்டன.

அச்சுதப்பனைக் குதிரையோடு அறைந்த காட்சியினைப் பார்த்ததும், பின்னால் இருந்த படை வீரர்கள், பயத்தில் கூச்சல் இட்டார்கள். உடனே யானையின் கவனம் பின்புறமாகத் திருப்பியது.

உருண்டு எழுந்த அச்சுதப்பனுக்கு உயிரைப் பற்றிய பயம் வந்துவிட்டிருந்தது. அவன் எழுவதற்குள் யானை படை வீரர்கள் மத்தியில் புகுந்து துவம்சம் செய்யத் தொடங்கியது. வீரர்கள் தாறுமாறாக ஓடத் தொடங்கினர்.

அச்சுதப்பனுக்கு முன்புறம் இருந்த வாத்தியக் காரர்கள் அனைவரும் தங்கள் வாத்தியங்களைக் கீழே எறிந்துவிட்டு, "யானைக்கு மதம் பிடித்திருக்கிறது. ஓடுங்கடா! ஓடுங்கடா!" என்று அலறியவாறு ஓடினர்!

அம்பாரியின் மேல் அமர்ந்திருந்த இளவரசி சந்திரவதனா திகிலுடன் நாலாபுறமும் பார்த்து அலறினாள். பின்னால் திரும்பிப் பார்த்தபோது, அச்சுதப்பன் அப்பொழுதுதான் உருண்டு எழுந்து, தன் உடைகளிலும், உடல் மீதும் அப்பி இருந்த மண்ணைத் தட்டிவிடக் கூட உணர்வின்றி, பயத்துடன் நிற்பதைப் பார்த்தான்.

''மாமா! காப்பாற்றுங்கள்! அச்சுத மாமா, யானையிலிருந்து என்னை இறக்கி விடுங்கள்... மாமா ஆ..." என்று அவனைப் பார்த்து அலறினாள்

யானை அதே சமயம் நாலாபுறமும் கூச்சலுடன் ஓடிய வீரர்களைத் தாக்குவதற்காகச் சுழன்று திரும்பியது.

யானை தன்னை நோக்கித் திரும்பி நின்றதைப் பார்த்த வுடன் அச்சுதப்பனின் திகில் உச்சத்துக்கே சென்று விட்டது.

யானையின் முதுகில் இருக்கும் இளவரசியைப் பற்றிக் கவலையே படாது "ஐயையோ", என்று அலறியவாறு ஓடத் தொடங்கினான் அப்பொழுது அவன் இடுப்பில் கட்டி இருந்த உடைவாள் சற்று அவிழ்ந்து, அதன் உறை தரையை தொட்டு இழுத்து ஒரு கல் மீது இடற, அதனால் ஓடிய அச்சுதப்பன் நிலைகுலைந்து தரையில் குப்புற விழுந்தான். அதே நேரம் யானை பயங்கரமாகப் பிளிறியது.

நெஞ்சம் கலங்க எழுந்த அச்சுதப்பன் இடைஞ்சலாக இருந்த உடைவாளை அவிழ்த்து எறிந்துவிட்டுத் தாறுமாறாக ஓடத் தொடங்கினான். அச்சுதப்பன் ஓடும் காட்சியை இளவரசி திகிலுடன் பார்த்தாள்.

யானை வெறியுடன் பிளிறியவாறு பக்கத்தில் இருந்த பொருட்களை எல்லாம் தாக்க ஆரம்பித்தது. காலடியில் மிதிபட்டுச் சிலர் இறந்தனர். துதிக்கையால் தூக்கி எறியப்பட்ட சிலரின் உயிர் அவர்கள் உடல் கீழே விழுவதற்குள் பரலோகத்தை நோக்கிப் பறந்தது.

பக்கத்தில் இருந்த மரங்களைப் பிடுங்கி எறிந்தது. வாத்தியக்காரர்கள் எறிந்து விட்டுப் போன வாத்தியங் களைக் காலால் மிதித்து சுக்கு நூறாக்கியது,

"காப்பாற்றுங்கள்! என்னை எப்படியாவது காப் பாற்றுங்கள்! யாராவது ஓடி வந்து என்னை இறக்கி விடுங்கள்! ஈஸ்வரா!" கோயில் கோபுரத்தைப் பார்த்துக் கும்பிட்டவாறு அலறினாள் இளவரசி!

இந்தக் காட்சியைத்தான் காட்டில் இருந்த மரத்தில் ஏறிப்பார்த்த சொக்கநாதன் இளவரசி இருக்கும்

ஆபத்தான கட்டத்தை உணர்ந்து, அவசரமாக இறங்கித் தனது நண்பன் வெங்கடகிருஷ்ணனுடன் புரவியில் பறந்து வரத் தொடங்கினான்.

இங்கே இளவரசி யானை மீது இருக்கும் அம்பாரியை இறுகப் பற்றியவாறு அலறிக் கொண்டிருக்க, அந்த இடத்தில் ஒருவர் கூட இல்லை இறந்த உடல்கள் எங்கும் சிதறிக் கிடந்தன. மற்றவர்கள் உயிர் பிழைக்க நாலாபுறமும் ஓடி மறைந்திருந்தனர்.

அச்சுதப்பனோ அசுர வேகமாக ஓடி கோயிலுக்குள் நுழைந்தான். அங்கும் அவனைப் போலவே பலரும் ஓடி வந்திருந்தனர். பிறகு அச்சுதப்பன் கோபுரத்தின் மீது ஏறி மாடத்திற்கு வந்து, தூரத்தில் தெரியும் காட்சியைப் பயத்துடன் பார்க்கலானான்.

மதம் பிடித்த யானை இளவரசியைக் கொன்று விடும் என்று நிச்சயமாக நம்பி; தன்னுணர்வற்று, அந்தக் காட்சியை எதிர்பார்த்துப் பயத்துடன் நின்று கொண்டிருந்தான்.

அலறி அலறி வாய் வலித்துப் போன இளவரசி சுற்றிலும் ஒரு வீரன் கூட இல்லாது ஓடி விட்டதை உணர்ந்து, தன் முடிவு நெருங்கி விட்டது என்ற அச்சத்தில் அம்பாரியை இறுகப் பற்றியவாறு பிரமை பிடித்தவள் போல் உட்கார்ந்து விட்டாள்.

சுற்றி இருந்த பொருட்களை எல்லாம் அடித்து மிதித்துத் துவம்சம் செய்து கொண்டிருந்தது அந்த யானை! அப்பொழுது அதன் முதுகில் இருந்து இரு புறமும் தொங்கிய கயிற்றில் கோர்க்கப்பட்டிருந்த மணிகள், தாறுமாறாகக் களிற்றின் வால் நுனியில் இருந்து, அதன் வாய் நுனிவரை ஓடி ஓசைப்படுததியது. இதனால் எரிச்சலுற்ற யானை அந்தக் கயிற்றைப் பிடித்து அறுத்து எறிந்தது.

இதனால் அம்பாரி சற்று ஆட்டம் கண்டது. இதனை உணர்ந்த இளவரசி மறுபடியும் அலற ஆரம்பித்தாள். புயல் கடந்த பூமியைப் போல அந்த இடம் அமைதியாக இருக்க, இளவரசி மட்டும் தனித்து அலறியதால், அந்தச் சத்தம் யானையின் காதுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

யானை அப்பொழுதுதான் தன் முதுகில் அம்பாரி இருப்பதை உணர்ந்து, ஆத்திரத்துடன் அம்பாரியைப் பிய்த்து எறியும் நோக்கத்துடன் தும்பிக்கையை உயர்த்தியது. களிற்றின் தும்பிக்கை தன்னை நோக்கி உயருவதைப் பார்த்தவுடன் இளவரசி இன்னும் பயத்துடன் அலறினாள்.

அம்பாரி அதன் கைக்கு எட்டாததால் யானை வெறியுடன் தன் வயிற்றோடு பிணைக்கப்பட்டிருந்த கயிற்றைப் பிய்க்க முயன்றது. அதுவும் முடியவில்லை. மறுபடியும் தும்பிக்கையை அம்பாரியை நோக்கி உயர்த்தி அந்தக் காடே அலறும்படியாக பிளிறியது.

அதே சமயத்தில் சொக்கநாதனும், வெங்கட கிருஷ்ணனும் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இளவரசி இருக்கும் ஆபத்தான நிலையைப் பார்த்த சொக்கநாதன் மிக வேகமாகச் செயல்படத் தொடங்கினான்.

இவர்கள் குதிரைகள் அந்த இடத்தை அடைந்த பொழுது, யானையானது மறுபக்கமாகத் திரும்பி நின்று அம்பாரியை அவிழ்க்க முயன்று கொண்டிருந்தது. பின் பக்கத்தில் தன் குதிரையைச் செலுத்திய சொக்கநாதன், அது திரும்பினால் தும்பிக்கை எட்டாத தூரத்தில் நிறுத்தித் தன் இடுப்பில் இருந்த கொம்பை எடுத்துப் பலமாக ஊதினான்.

திடீரென்று எழுந்த ஓசையைக் கேட்டதும், யானை கோபத்துடன் திரும்பி நின்றது. உடனே சொக்கநாதன் அதனைப் பார்த்து 'ஏய்! உம்! ஓவ்!' என்று பலமாகக் கத்தித் தனது ஊதுகுழலை எடுத்து மறுபடியும் ஊதினான்.

அந்த நேரம் அம்பாரியினைக் கட்டிப் பிடித்து உட்கார்ந்திருந்த இளவரசி திடீரென்று குதிரையில் வந்து நின்று யானையை வலிய வந்து கூப்பிடும் வீரன் யார் என்று வியப்புடன் பார்த்தாள்!

இவன் நேற்று இரவு என்னைப் பார்ப்பதற்காகக் கூடாரக் கூரையினைக் கிழித்துக் கொண்டு வந்தவனல்லவா!

யானை மறுவினாடி சொக்கநாதனைத் துவம்சம் செய்ய ஓடி வரத் தொடங்கியது, சொக்கநாதன் தன் குதிரையை விரட்டினான். குதிரை வேகமாக ஓட யானை அதனை வெறியுடன் ஓடித் துரத்தியது.

சற்று தூரம் ஓட்டிய சொக்கநாதன் உடனே வளைந்து திரும்பினான். யானையும் கஷ்டப்பட்டு வளைந்து திரும்பி மறுபடியும் விரட்டியது. சிறிது தூரம் குதிரையை ஓட்டி, மறுபடியும் வளைந்து எதிர்ப்பக்கமாக ஓட்டினான். யானையும் தனது பெருத்த உடலைக் கஷ்டப்பட்டுத் திருப்பி, சொக்கநாதனை விரட்டியது.

இப்படிப் பலமுறை முன்னும் பின்னுமாக யானையை அலைக்கழித்தான் சொக்கநாதன். இடையிடையே "சந்திரவதனா, அம்பாரியைக் கெட்டியாகப் பிடித்துக் கொள். பயப்படாதே. நான் உன்னைக் காப்பாற்றி விடுவேன். தைரியத்தைக் கைவிடாதே!" என்று உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.

சந்திரவதனா பிரமை பிடித்தவள் போல் சொக்கநாதனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்!

கைகள் மட்டும் கெட்டியாக அம்பாரியைப் பிடித்துக் கொண்டன.

யானை சற்றுச் சோர்வுற ஆரம்பித்தது. அதன் ஓட்டம் தொய்வுறத் தொடங்கினால், சொக்கநாதன் ஊதுகுழலை ஊதுவான் சத்துவான் யானை மறுபடியும் அவனைக் கோபத்துடன் விரட்டும்! மறுபடியும் பழையபடி முன்னும் பின்னும் வளைந்து வளைந்து அதனை அலைக்கழித்தான்.

புரவியின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாத பொல்லாக்களிறு சோர்வும், மயக்கமும், கள்ளால் ஏற்பட்ட போதையால் தளர்ச்சியும் ஏற்பட்டுத் தடு மாறத் தொடங்கியது. இதனை உணர்ந்த சொக்கநாதன் புரவியில் இருந்து கீழே குதித்தான்.

இடுப்பில் இருந்த உடைவாளை உருவி எடுத்தவாறு யானையின் எதிரில் வந்து நின்றான் "ஏய்! ம்! வா!" என்று ஓங்கிய பெருங் குரலில் அதனைப் பார்த்து அழைத் தான்.

யானை அவனை வெறித்துப் பார்த்தது. மேலிருந்த இளவரசியோ அவன் செயலைப் பார்த்துப் பயந்தாள்! ஐயோ! இப்படி வலியச் சென்று யானை கையால் இறக்கப் போகிறானே!! அவள் நெஞ்சு துடி துடித்தது.

யானைக்கு அயர்ச்சி அதிகம் இருந்தாலும் சொக்கநாதனைப் பார்த்து ஆத்திரத்துடன் தும்பிக் கையை நீட்டியவாறு ஓடி வந்தது. அதன் தும்பிக்கை தன்னருகே வந்த மறுவினாடி, கண் இமைப்பதற்குள், சொக்கநாதன் தன் வாளால் தும்பிக்கையை வெட்டி னான்.

காலவாசித் தும்பிக்கை அறுபட்டுத் துண்டாக விழுந்தது. கறுப்புப் பையில் இருந்து பவழங்களைக்

கொட்டியது போல், அறுபட்ட துதிக்கையில் இருந்து ரத்தம் கொட்டியது. பயங்கரமாக அலறியது யானை!

சொக்கநாதன் ஒரு வினாடி கூடத் தாமதிக்காமல் யானை சுதாரிப்பதற்குள் கையில் இருந்த வாளைக் கீழே எறிந்து விட்டு, அந்தத் தும்பிக்கைகயைப் பற்றி ஒரு தாவாக ஏறி, அதன் தந்தத்தில் கால் பதித்து, யானையின் கழுத்தில் வந்து உட்கார்ந்தான்.

துதிக்கை வெட்டுப்பட்ட வலியிலும், ஆத்திரத்தில் யானை பயங்கரயாக அலறி தாறுமாறாக ஓட ஆரம் பித்தது. சொக்கநாதன் அதன் கழுத்தில் யானைப்பாகன் கட்டியிருந்த கயிற்றில் தனது பாதங்களை நுழைத்து இறுகப் பிடித்துக் கொண்டான். பிறகு இளவரசியைப் பார்த்து, "சந்திரவதனா! மெதுவாகஎன் முதுகைக் கட்டி உட்கார்ந்துக் கொள். இல்லாவிட்டால் கீழே விழுந்து விடுவாய். ம், சீக்கிரம்!" என்று ஆணையிட்டான்.

இளவரசி நெஞ்சம் பதற அம்பாரியில் ஒருகையும், சொக்கநாதன் இடுப்பில் ஒரு கையும் வைத்து, மெது வாகக் காலை விடுவித்து அம்பாரியில் இருந்து தாவி, சொக்கநாதன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள். கை களால் அவன் கைகள் வழியாகக் கோர்த்து கால்களை அவன் கால்களுடன் சேர்த்து வைத்து மார்போடு கட்டிக் கொண்டாள்.

தும்பிக்கை அறுபட்ட வலியில் காடே கிடுகிடுக்கும் படியாக பிளிறியவாறு, காட்டை நோக்கித் தாறுமாறான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது கடாக் களிறு!

சொக்கநாதன் கழுத்தோடு சேர்த்துக் கட்டிக் கொண்டிருந்தாள் இளவரசி சந்திரவதனா!

34

மதுரை மாநகரின் மையத்தில், மண்ணில் இருந்து விண்ணை எட்ட முயலுவதுபோல் கட்டப்பட்டிருந்த அரண்மனை உப்பரிகையின் மொட்டை மாடியின் மீது, இளங்காலைச் சூரியன் தனது கிரணங்களை இதமாக வீசிக் கொண்டிருந்தான்.

பொழுதைப் புலரவிட்டு ஒரு ஜாமமும் இரண்டு நாழிகைகளும் கடந்துவிட்ட பின்னர்கூடக் கதிரவன் தனது கதிர்களை அதிகம் சூடேற்றிக் கொள்ளாமல் பதமாக வீசிக் கொண்டிருந்ததற்குக் காரணம், உப்பரிகையின் மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவற்றில் உட்கார்ந்தபடி சிந்தனையில் லயித்திருக்கும் வெண்ணைச் சிலை ஒன்று உரத்த வெய்யிலுக்கு உருகி விடுமோ என்ற பயம்தான்.

கைப்பிடிச் சுவரில் தனது பருத்த பின்னழகுகள் அழுந்த, ஒரு காலைச் சற்று மடித்து மற்றொரு காலை நீட்டியவாறு உட்கார்ந்திருந்தாள் முத்துநகை. ஆகாய நீல நிறத்தில் அவள் அங்கங்களை அழகுறத் தழுவிக் கொண்டிருந்த பட்டுப் புடவையில், பொன் இழைகள் மின்னிக் கொண்டிருந்தன.

சற்று நேரத்திற்கு முன்புதான் அவள் நீராடி இருந்ததால் அவளது கூந்தலின் ஈரம் போவதற்காகத் தலைமுடியைச் சற்று விரித்துப் பரத்திக் கடைசியில் மட்டும் சிறு முடிச்சு ஒன்றைப் போட்டிருந்தாள் கூந்தலில் படிந்த நீர் முதுகு வழியாகச் சற்றுக் கீழிறங்கி, அவள் கச்சையை நனைத்திருந்தது.

கச்சை வரை நுழைந்ததாலோ என்னவோ சற்றுக் கிறங்கி அவள் மார்புகளைத் தொட்டுப் பார்க்க முயன்று கொண்டிருந்தது. ஈரம் படிந்த கச்சையில் அவள் மார்புகளின் எழில் பட்டும் படாமல் தெரிந்ததால், கதிரவன் அந்தக் காட்சியில் மெய்மறந்து, லயித்துப் போய் எங்கே தனது வெப்பக் கதிர்வீச்சு அவள் மார்புக் கச்சையில் படிந்த ஈரத்தை காய வைத்து விடுமோ என்ற பயத்தில், தன்னுள் எழுந்த வெப்பத்தை அடக்க முயன்று கொண்டிருந்தான்.

கூந்தலில் மணம் வீசும் மலர்களைச் சூட்டி இருந்தாள். கைப்பிடிச்சுவரில் இருந்து நீண்டு, மொட்டை மாடியைத் தொட்டுக் கொண்டிருந்த கால், வீணை ஒன்றைச் சாத்தி வைத்திருக்கிறார்களோ என்ற பிரமையை ஏற்படுத்தியது. காலின் பாதத்தில் அணிந்திருந்த தங்கக் கொலுசு, ஓசை ஏற்படுத்தினால் முத்துநகையின் சிந்தனை ஒரு வேளை கலைந்து விடுமோ என்ற உணர்வில் கதிரவனைப் பார்த்துக் கண்ணடித்துக் கொண்டிருந்தது.

முத்துநகையின் கண்கள் அந்த அரண்மனையின் உயரத்தைச் சற்று ஆச்சர்யத்துடன அளவிட்டன. எத்தனை உயர்ந்த கட்டடம்! எவ்வளவு கலை நுணுக்கத்துடன் இதனைக் கட்டி முடித்திருக்கிறார் திருமலை மன்னர்! உப்பரிகையின் உயர்ந்த கோபுரங்கள் உம்பர் வானில் உலவும் மஞ்சுக் கூட்டங்களைத் தொட்டு விடும் போல் இருக்கிறதே!

முத்துநகை இதற்கு முன்னர் சந்திரகிரியில் இருந்த பொழுது, மதுரை அரண்மனை பற்றி ஆமுக்த மால்யதாவில் வர்ணிக்கப்பட்டிருந்த கவிதைகளை அவள் தோழி ஒருத்தி சொல்லிச் சொல்லி மகிழ்வாள். அதில் ஒரு பாடல் முத்துநகைக்கு அப்பொழுது நினைவுக்கு வந்தது.

* மதுரை மாநகர மாளிகைகளின் மேல், உப்பரிகைகளில் இரவு நேரத்தில் இளம்பெண்கள் தங்கள் கணவர்களுடன் காதல் இன்பத்தில் களித்திருப்பார்களாம். அப்பொழுது கலவி வேகத்தில் அவர்கள் அணிந்திருக்கும் மூத்துமாலைகளில் பெரிய முத்துக்கள் சிதறிக் கீழே விழுமாம். காலையில் அந்த இடத்தைத் துப்புரவு செய்ய வந்த பணி மகளிர், சூடிக் களைந்த பூக்களுடன் சேர்த்து அந்த முத்துக்களைப் பெருக்கி எறியும் பொழுது, அவை கீழே உள்ள மேகக் கூட்டங்களின் வயிற்றில் அடங்கிச் சமயம் வரும்பொழுது மழையுடன் கீழே வந்து விழுமாம்!

இந்த அரண்மனையின் உயரத்தைப் பார்க்கும் பொழுது அந்தக் கவிஞரின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை என்று நினைத்து கொண்ட முத்துநகைக்கு உடனே சொக்கநாதன் நினைவு வந்தது.

இந்த உப்பரிகையில் அமைந்த பள்ளியறையில் நானும் அவரும் தனித்து இருந்தால், அவர் என்னவெல்லாம் செய்வார்! சரியான முரடர்! இடைஞ்சலாக இருக்கிறது என்று என் கழுத்தில் இருக்கும் முத்துமாலைகளை அப்படித்தான் அறுத்து எறிவாரோ?

அன்று எவ்வளவு முரட்டுத் தனமாக என் கைகளைப் பற்றி இழுத்தார்! கையை வளைத்து அவர் மார்போடு இறுக்கியபொழுது எனக்கு முதலில் வலியே தெரியவில்லையே!

இந்த இடத்தில் இருந்துதானே கீழே இருந்த அவர் மீது மல்லிகை மலர்களைக் கொட்டினேன்? முத்துநகை தனது கூந்தலில் இருந்த மலர் ஒன்றை எடுத்து அங்கிருந்து கீழே எறிந்தாள். அன்று சொக்கநாதன் உட்கார்ந்திருந்த இடத்தில் போய் அந்த மலர் விழுந்தது. அந்த இடத்தையே சற்றுநேரம் பார்த்தவாறு இருந்தாள்.

---

* ஆமுக்த மால்யதா-பாடல் எண் II-11

எவ்வளவு அழகாக, எத்தனை கம்பீரமாக உட்கார்ந்திருந்தார்! நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டவாறு எழுந்தாள். மொட்டை மாடிமீது தனது சிற்றடிகளை எடுத்து வைத்தாள்.

இந்த இடத்தில் நான் வந்த பொழுதுதானே அவர் ஓடி வந்து என் கையைப் பற்றி இழுத்தார்! அப்பப்பா! எத்தனை பலம்! நான் தடுமாறி அவர் மேல் அப்படியா விழவேண்டும்! வெட்கக்கேடு!

என் மார்புகள் அவர் நெஞ்சில் முட்டி, வழிந்து சிதைந்து, அவர் மார்போடு ஒட்டி என்னை என்ன பாடு படுத்திவிட்டன. அவர் கைகளும் சும்மாவா இருந்தன? என் பின்னழகுகளை வளைத்து, பிறகு வழுக்கிக் கொண்டு என் இடுப்பை எத்தனை சுகமாக அணைத்துக் கொண்டன!

இந்த இடத்தில் தானே அது நடந்தது! முத்துநகை அந்த இடத்தைச் சற்றுநேரம் நெகிழ்ச்சியுடன் பார்த்தாள். குறும்புக்காரர்! நான் வலிக்கிறது என்று முனகிய பிறகுதானே விட்டார்! முரடர்!

சிற்றிடை குலுங்க இன்னும் சில அடி நடந்து நின்றாள் இந்த இடத்தில் தானே அவர் காலடியில் மல்லிகை மலர்களை அபிஷேகித்தேன்!

அந்த இடத்தருகே உட்கார்ந்தாள். அன்று சொக்கநாதன் நின்ற இடத்தையே வெறித்துப் பார்த்தவாறு இருந்தாள் பின்னர் அந்த இடத்தை மட்டும் கையால் தடவினாள். பிறகு கண்கள் கிறங்கிச் சிந்தனையில் லயித்தாள்.

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ தெரியவில்லை. நாழிகை முடிந்த நேரத்தை அறிவிக்கும் மணியின் ஓசை 'டணார்' என்று எழுப்பப்பட்டதும் தன்னிலைக்கு வந்தாள்!

சே! இப்படியே எத்தனை நாட்களைக் கழிப்பது? சொக்கநாதனைப் பார்க்க எத்தனை ஆவலுடன் வந்தாள்! அவன் அடுத்தநாளே அங்கிருந்து அகன்றவுடன் எத்தனை ஏமாற்றமாகி விட்டது!

பொழுது வேறு போகமாட்டேன் என்கிறது. அத்தை வையாம்பிகாதேவியுடன் எவ்வளவுதான் பேசமுடியும். சில சமயம் பழைய கதைகளைச் சொல்லி அலுக்க வைத்து விடுகிறார்.

மீனாட்சி அம்மன் கோயிலையும், அழகர் கோயிலையும் பலமுறை தரிசித்துப் புளித்துப் போய் விட்டது. அரண்மனையின் அந்தப்புரத்தில் அமைந்திருந்த நாடகசாலையில் தினமும் நடக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிப்பதிலும் அவளுக்கு நாட்டம் குறைந்து விட்டது.

மனம் முழுக்க எந்த நேரமும் சொக்கநாதன்தான் நினைவுக்கு வந்து கொண்டே இருக்கிறான்! அன்று நடந்த நிகழ்ச்சிகளே மாறி மாறி அவள் நினைவுக்கு வந்து அவள் ஏக்கத்தை நாளுக்கு நாள் பெருக்கிக் கொண்டே இருந்தன.

தினமும் அவள் மொட்டை மாடிக்கு வருவதும், அங்கிருந்து சொக்கநாதன் உப்பரிகையில் உட்கார்ந்த இடத்தை உற்றுப் பார்ப்பதும், அவன் ஓடி வந்து அவள் கரத்தைப் பற்றிய இடத்தையும், அவன் பாதம்பட்ட இடத்தைத் தடவி மகிழ்வதுமாக அவள் காலைப் பொழுது கழிந்து கொண்டிருந்தது.

மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்த முத்துநகையின் மொத்த நினைவுகளையும் சொக்கநாதனே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறிந்ததாலோ என்னவோ ஆகாயத்தில் இருந்த ஆதவன் கோபத்துடன் தனது கதிர்களில் உஷ்ணத்தைப் பாய்ச்ச ஆரம்பித்தான்.

முத்துநகை எரிச்சலுடன் தன்னுடைய அறைக்குள் வந்து மஞ்சத்தில் சாய்ந்தாள். சே! இதற்குச் சந்திரிகிரியிலேயே இருந்திருக்கலாம்.

குப்புறப்படுத்தவாறு ஒரு தலையணையை எடுத்துத் தனது மார்போடு அணைத்துக் கொண்டாள். தலையணையில் அழுந்திப் பிதுங்கி அவஸ்தைப்படும் அவள் மார்புகளைத் திரண்டு நின்று திம்மென்று புடைத்திருக்கும் பின்னழகுகள் 'இப்பொழுது நீ மாட்டிக் கொண்டாயா' என்பது மாதிரிக் குலுங்கிச் சிரித்தன.

சொக்கநாதன் கன்னத்தை நான் கிள்ளியபொழுது அவர் முகத்தில் எத்தனை அதிர்ச்சி! கன்னமா அது! அப்பா! எத்தனை முரடாக இருந்தது! அதில் இருந்த ரோமக்கற்றைகள் என் கைவிரலை எப்படிக் குத்தியது! ஆனால் அவர் கன்னத்தோடு என் கன்னம் உரசிய பொழுது அந்த ரோமக்கற்றைகள் குத்தத்தானே செய்திருக்கும்! ஆனால் எனக்கு வலிக்கவே இல்லையே! சுகமாக இருப்பது போலல்லவா தோன்றியது.

முத்துநகை அவசரமாக எழுந்து, அருகில் இருந்த மரப்பெட்டியைத் திறந்து, அதற்குள் இருந்த சிறிய பேழையைத் திறந்தாள். அன்று சொக்கநாதன் மீசைக்குள் மாட்டியிருந்த மல்லிகை மலர் சற்று வாடிப் போய்க் காட்சி அளித்தது.

அதனை மிகக் கவனமாகத் தனது விரலால் எடுத்துப் பார்த்தாள். கொடுத்து வைத்த மலர்! அவர் மீசை இடுக்கில் எவ்வளவு ஆசையாக ஒட்டிக் கிடந்தது! இந்த மலரை அவரது மீசை முடி குத்தவில்லையா? ஒருவேளை குத்தியிருந்தாலும் அதனை வலி என்று உணராது சுகம் என்று நாடிச் சொக்கிப் போய்க் கிடந்திருக்குமோ? என்னைப் போல!

இப்படி மலர்களைக் கூடச் சொக்க வைப்பதனால் தான் அவருக்கு சொக்கநாதன் என்று பெயர் வைத்திருப்பார்களோ ?

சற்று நேரம் அந்த மலரையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்த முத்துநகை, பிறகு மெதுவாக அந்த மலரைத் தனது உதடுகளில் வைத்து முத்தமிட்டாள். பின்னர் அதனை மறுபடியும் அதே பேழையில் வைத்து, அதனை கவனமாக பெட்டிக்குள் வைத்துப் பூட்டினாள்.

மஞ்சத்திற்கு வந்து மல்லாக்கப் படுத்தபடி யோசிக்க ஆரம்பித்தாள். இப்பொழுது அவள் பின்னழகுகள் அழுந்தி அவஸ்தைப்படுவதை, அவளது ஏராள மார்புகள் எழுந்து நின்று இளக்காரமாகப் பார்த்தன.

முத்துநகைக்கு ஒரு பக்கம் கோபம் கோபமாக வந்தது. சொக்கநாதன் மதுரைக் கோட்டையில் இருந்து கிளம்பிப் போய் பத்து நாட்கள் ஆகப் போகிறது. அவரிடமிருந்து எந்த தகவலும் இதுவரை வரவில்லை.

பத்திரமாகப் போய் சேர்ந்தாரா, அரங்கன் கோயிலுக்குச் சென்று ஆசிர்வாதம் பெற்றாரா என்று ஏதாவது ஒரு விவரம் தெரிவித்திருக்கக் கூடாது ? அவரது அன்னையின் மனம் என்ன பாடுபடும் என்று யோசித்தாரா ?

அதுதான் வேண்டாம். அவருக்காகச் சந்திரகிரியில் இருந்து ஒரு அபலைப் பெண் வந்திருக்கிறாளே ! அவள் மனம் ஆறுதல் அடையட்டுமே என்ற நினைப்பு இருந்தால் இப்படி இருப்பாரா ?

ஒருவேளை அரங்கன் கோயிலில் இவர் தரிசிக்கச் சென்ற சமயம் தஞ்சை இளவரசியும் சாமி கும்பிட வந்திருப்பாளோ ? அவள் அழகைப் பார்த்துத் தடுமாறி தன்னை மறந்திருப்பாரோ ?

இந்த நினைவு அவளை உலுக்கியதும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். மனதில் கிலி பற்றிக் கொண்டது.

இனி தாங்க முடியாது. அவரைப் பற்றிய செய்திகள் தெரிந்தே ஆகவேண்டும் இப்பொழுது அவர் எங்கே இருக்கிறார். என்ன செய்கிறார், என்று அறிந்தே ஆக வேண்டும் அதற்கு என்ன வழி ?

யோசித்தாள். வழி ஒன்று புலப்பட்டது. அதனை உடனே செயல்படுத்தும் நினைப்புடன் மஞ்சத்தை விட்டு எழுந்து நடக்கத் தொடங்கினாள்.

தஞ்சை அரண்மனையை அடுத்து அமைந்திருந்த அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மாளிகையில் உள்ள தனியறை ஒன்றில் அமைச்சர் மகள் மதுரவாணி மனக் கலக்கத்துடன் உட்கார்ந்திருந்தாள்.

கங்கை கொண்ட சோழபுரம் செல்லும் இளவரசி சந்திரலேகாவிற்குத் துணையாக இளவரசன் மன்னார் தாசன் வருவான். பயணத்தின் போது அவர்களுடன் இனிமையாகப் பேசிக் கொண்டு வருவான். பல நாட்கள் பயணத்தின் போது அவனுடன் எப்படியும் தனிமையில் பேசி மகிழும் வாய்ப்பு ஏற்படும். அப்பொழுது அவனிடம் தன் மனதில் இருக்கும் காதலைப் பற்றித் தெரிவித்து விடலாம் என்று எவ்வளவு ஆசையாகத் திட்டம் தீட்டினாள். அது இப்படித் தவிடு பொடியாகி விடும் என்று அவள் முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

இளவரசியும் கங்கைகொண்ட சோழபுரம் கிளம்பிச் சென்று ஒருவாரம் கடந்து விட்டது. மாதவிடாய் ஆனது போல் முதல் மூன்று நாட்களைத் தனிமையில் கழித்த அவள் பின்னர் மன்னார்தாசனை எந்த வகையில் சந்திக்க லாம் என்று சிந்திக்கத் தொடங்கினாள்.

காலையிலும் மாலையிலும் தஞ்சையில் உள்ள ராஜகோபால சுவாமி கோயிலுக்குச் செல்லத் தொடங்கினாள். மன்னன் விஜயராகவ நாயக்கனின் குலதெய்வம் குடிகொண்டுள்ள அந்தக் கோயிலுக்கு வழிபடுவதற்காக மன்னார்தாசன் வரமாட்டானா என்ற நப்பாசை!

கோயிலில் உள்ள ஒவ்வொரு சன்னிதானத்திலும் நீண்ட நேரம் கும்பிடுவது போல் நேரத்தைக் கடத்துவாள். அவள் தாய் நாகமாம்பாளுக்கோ தனது மகள் தெய்வ பக்தியில் இந்த இளம் வயதிலேயே எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறாள் என்று பூரித்தாள்.

ஆனால் மன்னார் தாசனோ ஒருநாள் கூட கோயிலுக்கு வரவில்லை. தங்கள் மாளிகையில் பணி புரியும் பணிப் பெண்களிடம் சந்தேகம் தோன்றாத வகையில் மன்னார் தாசனைப் பற்றி விசாரித்துப் பார்த்தாள். மன்னார் தாசன் அந்தக் கோயிலுக்கு மட்டும் என்றில்லை. எந்தக் கோயிலுக்கும் அவன் சென்று பார்த்ததில்லை என்று அவர்கள் மூலம் தெரிந்தது.

சிவகங்கைக் குளத்தருகே அமைந்திருக்கும் உய்யான வனத்தில் மாலை வேளைகளில் தனது சேடிப் பெண்கள் சிலரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு உலவிப் பார்த்தாள். அங்கும் மன்னார்தாசன் தட்டுப் படவில்லை.

வேறு எங்குதான் செல்கிறார்? வெளியூர் எங்கும் சென்றது மாதிரியும் தெரியவில்லை. அப்படிச் சென்றிருந்தால் தந்தை வாயிலிருந்து அந்தச் செய்தி எப்படியும் வந்துவிடும்.

எரிச்சலாக இருந்தது மதுரவாணிக்கு. பொழுதும் போகமாட்டேன் என்கிறது. பொழுதெல்லாம் மன்னார் தாசனின் நினைவே அவளுக்குள் வந்து கொண்டு இருக்கிறது.

சந்திரவதனா அந்தப்புரத்தில் இருந்தாலாவது அவளுடன் பொழுதைக் கழிக்க வாய்ப்பு உண்டு. இப்பொழுது அதற்கும் வழியில்லை. அடுத்த இரண்டு நாட்களும் இப்படியே கழிந்தன. மூன்றாம் நாள் காலையின் இரண்டாம் ஜாமம் தொடங்கிய வேளையில் மதுரவாணி பூஜை அறைக்குள் உட்கார்ந்தவாறு, அங்கிருந்த ஓலைச் சுவடிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, அவற்றைப் பூச்சிகள் அரிக்காமல் இருப்பதற்காகவும், எழுத்துக்கள் தெளிவாகத் தெரிவதற்காகவும், மஞ்சளைக் குழைத்து பூசிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது அவள் தாய் பணிப்பெண் ஒருத்தியிடம் உரத்த குரலில் பேசும் சப்தம் கேட்கத் தொடங்கியது.

"ஏனடி சுந்தரவல்லி, இத்தனை தாமதம்? இன்று உனக்கு நிறைய வேலை இருக்கிறது. பொழுது புலர்ந்து ஒருநாழிகைக்குள் வந்து விடு என்று நேற்று நான் சொல்லி இருந்தும், இரண்டாம் ஜாமத்தில் வருகிறாயே?"

"கோபிக்காதீர்கள் அம்மா. பொழுது புலர்ந்தவுடன் நான் வீட்டை விட்டுக் கிளம்பினேன். அப்பொழுது என் தமக்கை அம்சவல்லிக்கு உடல்நிலை சரியில்லாமல் போய் விட்டது. இன்று இளவரசர் அவளை ஒரு பணியின் நிமித்தம் பவழவீதி வரை போய்விட்டு வரச் சொன்னாராம். அதனால் அவளுக்குப் பதில் என்னைப் போகச் சொல்லிக் கெஞ்சினாள் அதனால் அங்கு சென்றுவிட்டு இளவரசரிடம் அதைப்பற்றி சொல்லிவிட்டு வர இவ்வளவு நாழிகை ஆயிற்று."

"சரி. சரி. எதற்கு எடுத்தாலும் உனக்கு சாக்குக் கிடைத்துவிடுகிறது. போய் வேலைகளைக் கவனி"

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மதுரவாணிக்குத் 'திக்' என்றிருந்தது.

பவழவீதி முழுவதும் கோயிலில் பணிபுரியும் தேவரடியார்களுக்கு என்று ஒதுக்கப்பட்டது. தாசிகள் தங்கி இருக்கும் தெருவிற்கு இளவரசன் எதற்குச் சேடிப் பெண்ணை அனுப்ப வேண்டும்? தாசி எவளாவது மன்னார்தாசனுடன் நெருக்கமாக இருப்பாளோ? யார் அந்தத் தேவரடியாள்? மன்னார்தாசன் ஸ்திரீலோலனாக இருப்பானோ?

மதுரவாணிக்குப் பகீர் என்றிருந்தது. இதனைத் தெரிந்து கொண்டே ஆகவேண்டும். அறையில் இருந்து வெளியே வந்து எட்டிப் பார்த்தாள்.

சுந்தரவல்லி என்ற அந்தப் பணிப்பெண் நெல் மூட்டையைப் பிரித்து, நெல்லை அளந்து போட்டுக் கொண்டிருந்தாள். அவள் தாய் அங்கு இல்லை.

"சுந்தரவல்லி இங்கே வா!" என்று அவளைக் கூப்பிட்டாள்.

"என்னம்மா?" புடவையை உதறிவிட்டுப் பணிவாக மதுரவாணி அருகே வந்தாள்.

"இன்று காலையில் இளவரசருக்காக தேவரடியார்கள் குடி இருக்கும் பவழவீதிக்கா சென்றாய்?"

"ஆம். உண்மை அம்மா."

"யார் வீட்டிற்கு?"

இந்த கேள்விக்கான பதிலைச் சுந்தரவல்லி சொல்லிய மறு வினாடி மதுரவாணி எல்லையற்ற உணர்ச்சிகளுக்கு இடையே சிக்கித் தவிக்கத் தொடங்கினாள்.

35

மதுரைக் கோட்டையில் இருந்து சொக்கநாதன் கிளம்பிப்போய் பத்து நாட்கள் கடந்து விட்டதே. இதற்குள் அவன் திருச்சிராப்பள்ளிக்கோட்டையை சென்றடைந்திருப்பானா?

போய்ச் சேர்ந்துவிட்டேன் என்று அவனிடமிருந்து தகவல் எதுவும் வரவில்லையே! ஒருவேளை போகும் வழியில் ஏதாவது தடங்கல் ஏற்பட்டிருந்தால் அதனைப் பற்றியாவது செய்தி அனுப்பியிருக்கலாமே!

திருச்சிராப்பள்ளிக்குச் சென்றவுடனே திருவரங்கம் சென்று சேவித்திருப்பானோ? அவன் சேவிக்கச் சென்ற சமயம் தஞ்சை இளவரசியும் அங்கு வந்திருப்பாளோ? அவள் அழகைக் கண்டு மயங்கி, மையலுற்று, மதுரை நினைப்பை அடியோடு மறந்து போயிருப்பானோ என்று பலவிதமாகக் குழப்பமுற்ற முத்துநகை, இதற்கான விடையை தெரிந்து கொள்ளும் வழியை ஆலோசித்தவளாக தனது அத்தை வையாம்பிகா தேவியைத் தேடிவரத் தொடங்கினாள்.

அந்தப்புரத்தினுள் அமைந்திருக்கும் ராணி மாளிகைக்குள் முத்துநகை நுழைந்து விசாரித்த பொழுது, வையாம்பிகாதேவி அங்கு இல்லை. அரசாங்க அலுவல்களைக் கவனிப்பதற்காக ராணியார் அரண்மனைக்குச் சென்றிருப்பதாகத் தகவல் கிடைத்தது.

முத்துநகை உடனே அரண்மனையை நோக்கிச் சென்றாள். சொர்க்க விலாசத்திற்கு அருகில் அமைந்திருந்த ஒரு சிறிய தர்பார் மண்டபத்தில் ராணி ஒரு ஆசனத்தில்

அமர்ந்திருக்க, அவளருகில் அமைச்சரும், பண்டார நாயகரும், இன்னும் சில அதிகாரிகளும் பணிவுடன் நின்று கொண்டிருந்தனர்.

முத்துநகைக்கு உள்ளே நுழைவதற்குத் தயக்கமாக இருந்தது. மணமாகாத கன்னிப்பெண், அதிலும் சொக்கநாதனுக்கு மாலையிடப் போகிற மங்கை, இப்படி திடுதிப்பென்று தர்பார் மண்டபத்திற்குள் நுழைவது தவறு என்று வையாம்பிகா தேவி கடிந்து கொள்வாரோ என்று ஒருபக்கம் பயமாகவும் இருந்தது.

தர்பார் மண்டபத்தை ஒட்டி ராணியார் ஓய்வு எடுக்கும் அறை ஒன்று இருந்தது. அதற்குள் நுழைந்த முத்துநகை அங்கிருந்த காவலனை அவசரமாக அழைத்தாள்.

"ராணியாருடன் மிக முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றி கலந்து, அவர் அறிவுரையைப் பெறுவதற்காக முத்துநகை இங்கு காத்திருக்கிறார் என்று ராணியாரிடம் சொல். அவசரம் ஒன்றும் இல்லை. அரசாங்க அலுவல்கள் முடிந்தபிறகு வந்தால் போதும் என்று நான் பணிவுடன் வேண்டிக் கொண்டதாகவும் சொல்," என்றாள்.

காவலன் அவள் கட்டளையை உடனே நிறைவேற்றினான். முத்துநகை காத்திருக்கத் தொடங்கினாள். கிட்டத்தட்ட இரண்டு நாழிகைகள் கடந்துவிட்ட பின்னரும் வையாம்பிகாதேவி வருவது மாதிரித் தோன்றவில்லை.

எரிச்சலுடன் எழுந்து தர்பார் மண்டபத்திற்குள் நுழைந்தாள் வையாம்பிகாதேவி கோபப்படுவாரோ என்று பயத்துடன் ஏறிட்டுப் பார்த்தாள்.

முத்துநகையைப் பார்த்தவுடன் ராணியின் முகத்தில் கோபத்திற்கு பதில் மகிழ்ச்சி பரவி இருந்தது. முத்து

நகையை ஏறிட்டுப் பார்த்து, முகமலர்ச்சியுடன் சிரித்த வாறு கூறினார் வையாம்பிகாதேவி

"வா முத்துநகை இந்த ஆசனத்தில் உட்கார். நீ வந்திருப்பதாக காவலன் வந்து சொன்னான். உடனே கிளம்ப வேண்டும் என்றுதான் நினைத்தேன். முடிய வில்லை. சற்றுப் பொறு. இதனை முடித்தவுடன் நாம் இருவரும் கிளம்பலாம்."

முத்துநகை ஆசனத்தில் அமர்ந்தாள். ராணி அமைச் சரைப் பார்த்துச் சில உத்தரவுகளைப் பிறப்பித்தாள்.

"தென்மேற்குப் பாளையங்களில் காட்டுப்பன்றிகள் தொல்லை அதிகமாக இருக்கிறது. அதனால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன என்று நெற்கட்டும் செவ்வல், ஊத்துமலை, சிங்கம்பட்டி பாளையக்காரர்கள் ஒட்டு மொத்தமாகச் சொல்வதால் அதில் உண்மை இல்லாமல் இருக்காது அமைச்சரே! மலை விலங்குகளால் ஏற்படும் அழிவைத் தடுக்க முதலில் ஆவன செய்யுங்கள். அதன் பிறகு அவர்களிடமிருந்து வரி வசூலிப்பதைத் தீவிரப் படுத்துவதுதான் முறை."

திருஓலைநாயகம் அதனை எழுதிக்கொண்டார். அதன்பிறகு தண்டல் நாயகர், பண்டார நாயகர் இவர் களுக்குச் சில உத்தரவுகள் பிறப்பித்தாள். அதனைத் தொடர்ந்து அரசாங்க வேலைகளால் அடுத்த இரண்டு நாழிகைகள் முழுக்க ராணியார் மூழ்கி இருந்தார்.

முத்துநகை மனதிற்குள் எழுந்த எரிச்சலை மறைத்த வாறு பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒருவழியாக அவர்கள் அனைவரையும் அனுப்பி விட்டு, ராணி வையாம்பிகாதேவி எழுந்து முத்துநகை யின் கையைப் பற்றி அழைத்துக்கொண்டு, பக்கத்து அறைக்குக் கூட்டிச் சென்றாள்.

அறைக்குள் நுழைந்தவுடன் முத்துநகை, ராணியாரை ஏறிட்டுப் பார்த்து, "தர்பார் மண்டபத்திற்குள் வந்ததற்காகத் தாங்கள் கோபம் கொள்வீர்களோ என்று எனக்குப் பயமாக இருந்தது அத்தை!" என்றாள்.

இதைக் கேட்டதும் வையாம்பிகாதேவி அவள் கன்னங்களைப் பரிவுடன் தடவிக் கொடுத்து, உச்சி முகர்ந்தாள்.

''என் கண்ணே! உன்னிடம் நான் கோபம் கொள்வேனா? என் மகனைக் கைப்பிடித்து விட்டால் இந்த நாடே உனக்குச் சொந்தமாகி விடும். அதன்பிறகு நானல்லவா உன்னிடம் அனுமதி பெற்றுத் தர்பாருக்குள் நுழைய முடியும்? அப்பொழுது என்னை அனுமதிப்பாயா?"

"போங்கள் அத்தை!" முத்துநகை வெட்கத்துடன் முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

அவள் வெட்கத்தைப் பார்த்து உளம் நெகிழ்ந்த வையாம்பிகாதேவி முத்துநகையின் கரத்தைப் பற்றி பாசம் மேலோங்கத் தடவியவாறு நீண்ட பெருமூச்சு ஒன்றை உதிர்த்தாள்.

"பார்த்தாயா முத்துநகை. தர்பாரில் எத்தனை விதமான பணிகளை நான் பார்வையிட வேண்டியிருக்கிறது! குடிமக்கள் பிரச்சனை, வரி வசூல், அன்னியர் படை எடுக்கிறார்களா என்று எல்லைப்புறங்களில் பாதுகாப்பு ஏற்பாடு அப்பப்பா... அரசுப்பாரம் என்பது அளவிட முடியாதது இதனை ஒரு பெண் தாங்குவது எவ்வளவு பெரிய தண்டனை! கூடிய சீக்கிரம் சொக்கநாதனுக்கு முடிசூட்டிவிட்டு இந்த தொல்லைகளில் இருந்து விடுபடலாம் என்று பார்த்தால் அதற்கு வேளை வரமாட்டேன் என்கிறது."

முத்துநகை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"பாண்டியர் பரம்பரையைச் சேர்ந்த சிலருக்கு நாட்டின் தென்மேற்குப பகுதியில் உள்ள பாளையங்களை விஸ்வநாத நாயக்கர் காலத்திலேயே பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் அதாவது தென்கிழக்குப் பாளையங்கள் அனைத்திலும் தெலுங்கு பேசும் நம்மவர்கள் ஆட்சி புரிகிறார்கள். இந்த இருவருக்கும் ஓயாத போராட்டம் இருந்து வருகிறது. இவர்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கே என் பணியின் பெரும் பகுதி நேரம் செலவாகிக் கொண்டிருக்கிறது... அடடா! நீ எதற்கு இவ்வளவு தூரம் என்னைத் தேடி வந்திருக்கிறாய் என்று கேட்பதற்கு மறந்துவிட்டேன் பார்த்தாயா?"

முத்துநகை புன்முறுவலுடன் தலைகுனிந்தாள்.

"அந்தப்புரத்திற்கு நான் திரும்பி வரும்வரை காத்திருப்பதை விடுத்து தர்பார் மண்டபம் வரை நீ என்னைத் தேடி வந்திருப்பதைப் பார்க்கும் பொழுது மிக முக்கியமான விஷயம் என்று தோன்றுகிறது. சொல் கண்ணே! என்ன விஷயம்?"

முத்துநகையின் படபடப்பு அதிகமாகியது. ஏதோ ஒரு வேகத்தில் வந்து விட்டாளே ஒழிய, அதனை எப்படி ஆரம்பிப்பது என்று வெட்கம் தடுத்தது.

"அது...அத்தை...வந்து..."

"அத்தை தான் வந்து விட்டேனே! இன்னும் என்ன தயக்கம்? பயப்படாமல் சொல் முத்து நகை!

"அவர் இங்கிருந்து கிளம்பிச் சென்று பத்து நாட்கள் ஆகி விட்டன..."

"எவர்?" ராணிக்கு முதலில் புரியவில்லை.

"அதுதான்... அவர்... போங்க அத்தை... அவர் பெயரை நான் எப்படிச் சொல்வேன்?" முத்துநகை முகத்தைப் பொத்திக் கொண்டாள்.

"ஓஹோ, சொக்கநாதனைச் சொல்கிறாயா?" என்று மணம் பூரிக்கச் சிரித்தவாறு முத்துநகையின் கைகளை விலக்கி, நாடியைப் பிடித்து, "ஆமாம், அவன் கிளம்பிச் சென்று பத்து நாட்கள் ஆகிவிட்டன. இப்பொழுது அதற்கு என்ன?" என்றாள் வையாம்பிகா தேவி.

"இதுவரை அவரிடமிருந்து ஒரு தகவலும் வரவில்லையே?" என்று ஏக்கத்துடன் சொன்னாள் முத்துநகை.

இதைக் கேட்டவுடன் வையாம்பிகாதேவி சிரித்தவாறு, "இதற்காகவா இவ்வளவு அவசரமாக என்னைத் தேடி வந்தாய்? சொக்கநாதன் இப்பொழுது தான் திருச்சிராப்பள்ளிக்குப் போய்ச் சேர்ந்திருக்கலாம். போய்ச் சேர்ந்த உடனே தகவல் அனுப்பினால் கூட அதற்குச் சில நாட்கள் ஆகலாம். அங்குள்ள வேலைகளில் மூழ்கிப் போய், இப்படி ஒரு அழகான பெண் தனக்காக மதுரையில் தவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதைக்கூட மறந்திருப்பான். சற்றுப் பொறு. இந்த வாரத்திற்குள் அவனிடமிருந்து தகவல் வந்து விடும். தவிக்காதே!" என்றவாறு அவள் கன்னத்தை நிமிண்டினாள்

"திருச்சிராப்பள்ளி இங்கிருந்து ஒரு யோசனை தூரம் என்கிறார்கள். அதாவது நூறு கல் தொலைவு. இதற்கான பயணநேரம் எழுபத்தைந்து நாழிகை என்கிறார்கள். அதாவது ஒன்றரை நாள். இவர்கள் வழியில் தங்கி ஓய்வெடுத்துச் சென்றால் கூட மூன்று நாட்கள் வேண்டுமானால் ஆகலாம். பத்து நாட்கள் ஆகிவிட்டன. தகவல் வரவில்லையே."

"அம்மம்மா! எத்தனை தூரம் கணக்கிட்டு வைத்திருக்கிறாய்! எந்த நேரமும் சொக்கநாதன் நினைப்பில்தான் இருக்கிறாய் என்று இப்போதல்லவா தெரிகிறது. நீ நினைக்கிற மாதிரி ஒரே தொடர்ச்சியாகச் சென்றிருக்க மாட்டார்கள். பொறு. இன்னும் இரண்டு நாட்கள் பார்ப்போம்!"

"அதற்குப்பிறகும் வரவில்லை என்றால்?"

"பயப்படாதே! சொக்கநாதன் தகவல் அனுப்பாமல் இருக்கமாட்டான்."

"இல்லை அத்தை! ஒரு வேளை அவர் கோயிலுக்குப் போகும் பொழுது அவளை... அவளைப் பார்த்து..." தயங்கினாள்.

"யாரைப் பார்த்து?"

"அதுதான் தஞ்சை இளவரசி... அவளைப் பார்த்து... அவளுக்காக... தஞ்சாவூருக்குப் போகணும்னு நினைத்திருந்து... தகவல் சொன்னால் நீங்கள் தடுத்துவிடுவீர்களோ என்று பயந்து..."

இதைக் கேட்டவுடன் வையாம்பிகாதேவிக்குத் திடுக்கென்று இருந்தது. ஒருவேளை அப்படி ஏதாவது நடந்து விடுமோ? சொக்கநாதன் விளையாட்டுப் பிள்ளை. எந்த நேரத்தில் எப்படிச் செய்வான் என்று சொல்ல முடியாது.

"என்ன அத்தை பேசாமல் இருக்கிறீர்கள்?"

"நீ சொல்வதும் ஒரு வகையில் சரிதான். அப்படி ஒன்று நடந்து விடக் கூடாது. இப்பொழுது என்ன செய்வது?" யோசித்தாள்.

"அத்தை எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது."

"சொல் கண்ணே!"

"நாமும் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றால் என்ன? அவரை நீங்கள் அருகில் இருந்தே கவனித்துக் கொள்ளலாம். அவர் வேலை முடிந்தவுடன் மூவரும் மதுரைக்குத் திரும்பி விடலாம்."

மதுரவாணியின் மனம் பரபரக்கத் தொடங்கியது.

தஞ்சை இளவரசன் மன்னார்தாசன் பவழவீதி என்று அழைக்கப்படும் பரத்தையர் வீதிக்குள் தனது பணிப்பெண்ணை அனுப்பி சேதி சொல்கிறான் என்றாலே அது அவனுடைய கண்ணியத்தை வெகுவாகக் குறைத்து விடுமே!

மன்னார்தாசன் தஞ்சையின் இப்போதைய இளவரசன். வருங்கால மன்னன். தஞ்சைத் தரணி முழுகக ஆளப்போகிறவன். அவனிடமிருந்து செய்தி போகும் அளவுக்குப் பாக்கியம் செய்த அந்தத் தாசிப் பெண் யாராக இருக்கலாம்?

பவழவீதியில் உள்ள கணிகையர்கள் கண்ணுக்கு அழகாக இருப்பது மட்டுமின்றி, கவினுறு கலைகள் அனைத்திலுமே கைதேர்ந்தவர்களாயிற்றே! அப்படிப் பட்ட பெண்ணிடம் மயங்கிக் கிடக்கும் மன்னார்தாசன், என் காதலை மறுத்து விடுவாரோ?

மதுரவாணியின் இதயமே வாளால் அறுபட்டது போல் துடித்தது. அதனை முற்றிலும் தெரிந்து கொள்வதற்காகத் தங்களது பணிப்பெண் சுந்தரவல்லியைத் தனியாக அழைத்து அவள் சந்தேகம் கொள்ளாதவாறு தான் பேச்சைத் தொடங்கினாள்.

'சுந்தரவல்லி, இன்று நீ தாமதமாக வந்ததற்காக என் தாய் உன்னைத் திட்டியது மனவருத்தமாக இருக்கிறதா?"

"இல்லை அம்மா, எஜமானி அம்மா சொன்ன பிறகும், காலையில் தாமதமாக வருமாறு நேரிட்டு விட்டதே என்று என் மீதுதான் எனக்கு வருத்தம். எஜமானி திட்டியதெற்கெல்லாம் என் போன்ற பணிப் பெண்கள் வருத்தப்பட்டால், எங்கள் வாழ்க்கையே வீணாகி விடுமே!"

"வருத்தப்படாதே! என் தாய் சில சமயம் இப்படித் தான். அவர்கள் நினைத்த வேலை நடக்காவிட்டால் கோபப்படுவார்கள். அது இருக்கட்டும். உன தமக்கை அம்சவல்லிக்கு என்ன ஆயிற்று?"

"கடுமையான வயிற்று வலி, துடித்துப் போய் விட்டாள். எழுந்திருக்கவே முடியவில்லை. வைத்தியரை அழைத்துக் கொண்டு வந்து சூரணம் வாங்கிக் கொடுத்தேன். குணமாக மூன்று நாட்கள் ஆகும் என்றார். அதன்பிறகு இளவரசர் சொன்ன செய்தியைச் சொல்லி விட்டு இங்கு வரத் தாமதமாகி விட்டது."

"இளவரசர் அடிக்கடி பவழவீதிக்குச் செல்லும் பழக்கம் உண்டா?"

"அடிக்கடி இல்லை அம்மா! அவர் தஞ்சாவூருக்கு வந்த நாளில் இருந்து தினமும் ஒரு தடவையாவது அங்கு செல்லாமல் இருக்க மாட்டார்."

இதைக் கேட்டவுடன் மதுரவாணியின் இதயம் துடித்துப் போனது. வேசியர்பால் தீராத மையல் தேடிச் செல்லும் காமுகனா மன்னார்தாசன்?

"இன்று இளவரசர் என்ன செய்தி சொல்லிவிட்டு வரும்படி உனது தமக்கையைப் பணித்திருந்தார்?"

சுந்தரவல்லி இதற்கு உடனடியாகப் பதில் கூறாது, தனது சேலையில் இருந்த வண்டு ஒன்றைக் கவனமாக எடுத்து, வெளியே எறிந்து விட்டு வந்தாள்.

''என்னடி, நான் கேட்டதற்குப் பதில்கூற யோசிக்கிறாய்? ஏதாவது ரகசியச் செய்தியா? நான் தெரிந்து கொள்ளக் கூடாதா?" படபடப்புடன் கேட்டாள் மதுரவாணி.

"ஐயையோ! அப்படி ஒன்றும் இல்லை அம்மா! சேலையில் வண்டு ஒட்டிக் கொண்டிருந்தது. அது தங்கள் மீது பறந்து வந்து கொட்டி விடக்கூடாதே என்றுதான்..."

''சரி, சொல். இளவரசர் என்ன செய்தி சொல்லி அனுப்பினார்?"

"இன்று காலை, முதல் ஜாமம் முடிவதற்குள் வந்து விடுகிறேன் என்று நேற்றுச் சொல்லி இருந்தாராம். ஆனால் எதிர்பாராத விதமாக வேறு சில அலுவல்கள் வந்து விட்டனவாம். அதனால் இன்று வரமுடியாது. நாளைக் காலை கண்டிப்பாக வந்து விடுகிறேன். இன்று தனக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று சொல்லச் சொன்னாராம். சொன்னபடி வரமுடியாமல் போனதற்காக மன்னித்துக் கொள்ளும்படி அவர் பணிவுடன் வேண்டிக் கொண்டதாகவும் சொல்லச் சொன்னார்."

இதைக் கேட்டதும் மதுரவாணியின் இதயம் படபடத்தது

ஒரு நாட்டின் இளவரசன் தாசிப்பெண் ஒருத்தியிடம் வரமுடியாமல் போனதற்காக மன்னிப்பு வேண்டுகிறான் என்றால் அவள்பால் அவன் எவ்வளவு மையல் கொண்டிருக்க வேண்டும்? ஒரு நாள் அவளைத் தேடி வராவிட்டால் கூடக் கோபித்துக் கொள்வாளோ? இவ்வளவு உரிமை எடுத்துக் கொள்ளும் அளவுக்கு அவர்கள் காதல் வளர்ந்து இருக்கிறதா?

இது எப்படி யாருக்கும் தெரியாமல் போயிற்று? இப்படி ஒரு தொடர்பு வைத்திருப்பதனால் தான்

இளவரசர் அன்று சந்திரவதனாவுடன் சேர்ந்து கங்கை கொண்ட சோழபுரம் செல்லுவதற்கு மறுத்திருக்கிறார்! ஒரு நாள் வரமுடியாமல் போனதற்கே மன்னிப்புக் கேட்கிறவர், ஒரு வாரப்பிரிவை எப்படி தாங்குவார்?

மதுரவாணியின் மனதில் வெறுப்பும், ஏமாற்றமும் எழுந்தது.

''இளவரசர் மன்னார்தாசனுக்குப் பவழவீதியில் உள்ள பரத்தையர்கள் அனைவருமே பழக்கமா? வந்ததில் இருந்து ஒரு வீடு கூட விடாமல் சென்றிருப்பாரோ?'' என்று எரிச்சலுடன் கேட்டாள்.

இதைக் கேட்டவுடன் சுந்தரவல்லி பதறிப் போய் விட்டாள்.

''அம்மா நீங்கள் நினைப்பது தவறு. இளவரசர் மிகவும் உத்தமமானவர். பண்பு நிறைந்தவர். தவறான எண்ணத்தில் பவழ வீதிக்குள் செல்லும் தட்டுக் கெட்ட மனிதர் அல்ல. நீங்கள் நினைப்பதுபோல் பவழவீதிப் பரத்தையர்கள் வீடுகள் முழுவதும் சென்று பார்க்க நினைப்பவர் அல்ல தாயே! ஒரே ஒரு வீட்டிற்கு மட்டும் தான் செல்கிறார்.''

''ஒரு வீடாக இருந்தாலும் சரி, தெரு முழுக்கச் சென்றாலும் சரி, பரத்தையர் வீடு தேடிச் செல்வது பண்புள்ள செயல் ஆகுமா? சொல்லடி!''

''நான் சொல்வதை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள் அம்மா இளவரசர் யாருடைய வீட்டிற்குச் செல்கிறார் தெரியுமா?''

'சொல்லடி தெரிந்து கொள்கிறேன். இளவரசர் மனதை இவ்வளவு தூரம் மயக்கிய அந்த வேசிப் பெண் யாரடி?''

"ரங்காஜம்மா !"

இதைக் கேட்டவுடன் மதுரவாணியின் இதயமே ஒரு விநாடி துடிப்பை நிறுத்தி விட்டதுபோல இருந்தது.

அதன் பிறகுதான் அவள் பவழ வீதியில் அமைந்திருக்கும் ரங்காஜம்மாவின் வீட்டிற்கு மறுநாள் காலையில் போவதற்கு தீர்மானித்தாள்.

36

மதுரை மன்னன் சொக்கநாதநாயக்கனின் தாயான ராணி வையாம்பிகாதேவி, முத்துநகையின் வார்த்தைகளைக்கேட்டதும் மனம் பதை பதைக்கத்தொடங்கினாள்.

முத்துநகை மனதில் இருந்த பயம் முழுவதும், இப்பொழுது வையாம்பிகாவிற்குள் புகுந்து கொண்டு படாத பாடுபடுத்த ஆரம்பித்தது. அப்படி ஏதாவது நடந்து விடுமோ என்று அங்கங்கள் பதறின.

யோசித்துப் பார்த்தாள். முத்துநகை சொல்வதிலும் உண்மை இல்லாமல் இல்லை. நூறு கல் தொலைவு, பத்து காத தூரம் கொண்ட இதோ இருக்கிற திருச்சிராப் பள்ளிக்குச் செல்வதற்கு அதிகபட்சம் மூன்று நாட்கள் ஆகலாம். நான்கு நாட்கள் என்று வைத்துக்கொண்டால் கூட அங்கிருந்து செய்தி கொண்டு வருபவன் அதே நான்கு நாட்கள் எடுத்துக் கொண்டால் கூட இதற்குள் வந்திருக்க வேண்டுமே !

பத்துநாட்கள் கடந்த பின்னரும் சொக்கநாதனிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அவ்வளவு தூரம் பன்னிப் பன்னிச் சொல்லி இருந்தும் சொக்கநாதன் அசட்டையாக இருக்கிறானே !

முத்துநகை சொல்வது போல் திருச்சிராப்பள்ளிக்குச் சென்ற மறுநாளே திருவரங்கம் போயிருப்பான். அரங்கன்

கோயிலுக்குத் தரிசனம் செய்யச் சென்ற பொழுது தஞ்சை இளவரசியும் அங்கு வந்திருக்கலாம். அவள் அழகைப் பார்த்து மயங்கி, அவளை அடையும் எண்ணத்தோடு அவள் பின்னாடியே தஞ்சாவூர் சென்றிருப்பானோ ?

தஞ்சைக்குச் செல்வது தாய்க்குத் தெரிந்தால் தடுத்து விடுவாளோ என்ற பயத்தில் தகவல் சொல்லாது விட்டிருப்பானோ ?

ஒரு வேளை தஞ்சை இளவரசியைப் பார்த்து மயங்கி அவளைத் தொடர்ந்து சொக்கநாதன் வருவதை அறிந்து, தஞ்சை மன்னன் விஜயராகவநாயக்கன் அவனைச் சிறைப்பிடித்து இருப்பானோ ?

இல்லாவிட்டால் இப்படி இருக்குமோ ? திருவரங்கன் கோயிலில் சேவிக்கச் சென்றபொழுது, விஜய ராகவ நாயக்கனும் சாமி கும்பிட வர, சொக்கநாதனுக்கும், விஜயராகவ நாயக்கனுக்கும் சண்டை ஏற்பட்டு இருக்குமோ ?

வையாம்பிகாவின் மனம் பதறியது. திருவரங்கம் சென்று வரச் சொக்கநாதனை அனுமதித்தது தவறோ ? மகன் எவ்வளவு பிடிவாதம் பிடித்தாலும் சரி என்று இருந்து இருக்கலாமே ! இப்படித் தவிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்காதே !

''என்ன அத்தை. இப்படிப் பிரமை பிடித்தவர்கள் போல் அமர்ந்து இருக்கிறீர்கள் ? அத்தை. அத்தை உங்களுக்கு என்ன ஆயிற்று ?'' முத்துநகை பயத்துடன் ராணியின் தோளைப் பிடித்து உலுப்பினாள்.

மறுவிநாடி தன்னுணர்வுக்கு வந்த வையாம்பிகா தேவி, முத்துநகையின் தலையைப் பரிவுடன் தடவியவாறு சொன்னாள்.

"எனக்கு ஒன்றும் ஆகவில்லை கண்ணே! சொக்க நாதனுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்று தான் பயமாக இருக்கிறது."

"அதனால் தான் நான் சொல்கிறேன். நாம் இருவருமே இன்றே திருச்சிராப்பள்ளிக்குக் கிளம்பிச் செல்லலாம். கோட்டையில் உங்கள் அருகில் அவர் இருக்கும் பொழுது, உங்களை மீறி அவரால் எதுவும் செய்ய முடியாது."

"உண்மைதான். நான் முழுக்க அவனை என் கண்காணிப்பிலேயே வைத்துக் கொள்ளலாம்."

"தினமும் கூட அவர் திருவரங்கத்திற்குச் சென்று பள்ளி கொண்ட பரந்தாமனைப் பரவசம் எழ வணங்கி வரட்டும். அவர் மனம் திருப்தி கொள்ளும் அளவுக்கு எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் சேவித்து வரட்டும். ஆனால் அவர் போகும் பொழுதெல்லாம் நீங்களும் அவருடன் சென்றால் எந்த வித அசம்பா விதமும் நிகழாதே!"

"அதுவும் உண்மை தான்."

"அது மட்டுமல்ல அத்தை. திருச்சிராப்பள்ளி. திருவரங்கம் இவற்றைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்தால் கூட நீங்கள் அனுமதி தந்தால் தான் செல்ல முடியும் என்ற சூழ்நிலையில் அவர் வேறுஎங்குச்செல்லவும் மனதால் கூட விரும்ப மாட்டார். நானும் உங்கள் அருகிலேயே இருப்பதால், எனக்கும் ஒரு நிம்மதி இருக்கும்."

வையாம்பிகாதேவி யோசிக்கத் தொடங்கினாள்.

"என்ன அத்தை யோசிக்கிறீர்கள்? இப்பொழுதே நாம் இருவரும் கிளம்புவதற்குத் தேவையான ஏற்பாடு களைச் செய்ய உத்தரவிடுங்கள்."

"அவசரப்படாதே முத்துநகை. இதில் நிறைய சிக்கல் இருக்கிறது."

''என்ன சிக்கல்?

''தன்னை நம்பாமல் தாயே தன்னை வேவு பார்க்க வந்திருக்கிறார் என்று சொக்கநாதன் கோபப்படுவான்."

"அதைப்பார்த்தால் நம் எண்ணம் நிறைவேறாது அத்தை"

"அது மட்டுமல்ல. உனக்கும் அவனுக்கும் இன்னும் திருமணம் நடக்கவில்லை. இப்பொழுது உன்னையும் அழைத்துக்கொண்டு நான் அவன் பின்னாடி சென்றால் நாட்டு மக்கள் ஒரு மாதிரிப் பேசுவார்கள் ."

"அப்படி என்ன பேசுவார்கள்?''

''சொக்கநாதனுக்கு உன்னை மணமுடிக்கப் பிடிக்க வில்லை. அதனால் தான் நீ வந்தவுடன் உன்னைப் பார்க்கப் பிடிக்காது திருச்சிராப்பள்ளிக்குச் சென்று விட்டான். அவன் மனதை மாற்றுவதற்காக முத்துநகை யையும் கூட்டிக்கொண்டு ராணி தன் மகன் பின்னாடி அலைகிறார் என்று மட்டமாகப் பேசலாம். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது"

''அப்படியானால் நீங்கள் மட்டுமாவது செல்லுங் கள்."

''அதிலும் சிக்கல் இருக்கிறது முத்துநகை.''

''அதில் என்ன சிக்கல்?"

''இன்று தர்பார் மண்டபத்தில் பார்த்தாய் அல்லவா. எனக்கு எத்தனை அலுவல்கள் இருக்கின்றன என்று! அரசுப் பொறுப்பில் இருப்பவர்கள் சற்று அசட்டையாக இருந்து விட்டால் ஆட்சியே கைமாறிப் போகும் அபாயம் ஏற்படும். அதனால் இங்கிருந்து வெளியேறிப் பல நாட்கள் இருப்பதும் தவறு."

''பிறகு என்னதான் செய்வது ?''

முத்துநகை ஏமாற்றத்துடன் கேட்டாள்.

வையாம்பிகாதேவி சற்று நேரம் யோசித்தபடி இருந்தாள். பிறகு அருகில் இருந்த மணியை அடித்து ஓசை எழுப்பினாள். காவலன் ஒருவன் பணிவுடன் வந்து வணங்கினான்.

''அழகப்ப நாயக்கனை நான் உடனே வரச் சொன்னதாகச் சொல்!'' என்றார் ராணி.

அடுத்த சில நிமிடங்களில் மதுரை ஒற்றர் படைப் பிரிவின் தலைவனான அழகப்பநாயக்கன் அங்கு நுழைந்து வையாம்பிகாதேவிக்கு வணக்கம் தெரிவித்தான்.

''அழகப்பா, நான் ஒரு லிகிதம் தருகிறேன். அதனை எடுத்துக் கொண்டு நீ இன்றே இப்பொழுதே திருச்சிராப் பள்ளிக்குச் செல்ல வேண்டும்.''

''உத்தரவு!''

வையாம்பிகா தனது மகனுக்கு லிகிதம் ஒன்றை எழுதி, அதனை முத்துநகையிடம் காட்டி விட்டு, அந்த லிகிதத்தினை ஒரு பொற்குழலில் இட்டு, அதன்மீது முத்திரை பொறித்துச் சரிபார்த்து விட்டு, அதனை அழகப்ப நாயக்கனிடம் நீட்டினாள்.

''அழகப்பா, இந்த லிகிதத்தினை எனது மகன் சொக்கநாதனிடம் கொடுத்து விட்டு, அவனிடமிருந்து இதற்கான பதிலைப் பெற வேண்டும்.''

''அப்படியே அன்னையே!''

''வாங்கியவுடன் நீ இங்கு திரும்பி விடாதே. நான் சொல்லப் போகும் விஷயங்களைக் கவனமாகக் கேட்டுக்

கொள். சொக்கநாதனின் பதில் கடிதத்தை வாங்கிய வுடன் நீ திருச்சிராப்பள்ளியில் இருந்து உடனே மதுரைக்குச் செல்வதாக அவனிடம் கூறி விட்டு, அவனிடமிருந்து அகன்றுவிட வேண்டும். கடிதத்தை உன் உதவியாளர் மூலம் இங்கு அனுப்பிவிட்டு, நீ சொக்கநாதனுக்குத் தெரியாமல் மாறுவேடத்தில் அங்கேயே இருந்து அவனது நடவடிக்கைகளை கவனிக்க வேண்டும்."

"உத்தரவு தாயே!"

"முழுக்கக்கேள். முதலில் சொக்கநாதன் இத்தனை நாட்களும் என்ன செய்தான், யார் யாரைப் பார்த்தான். எந்தெந்த இடங்களுக்குச் சென்றான் என்று விசாரித்து எனக்குத் தகவல் அளிக்க வேண்டும். அதன் பிறகு அவன் திருச்சிராப்பள்ளியிலோ, திருவரங்கத்திலோ இருந் தாலும் அவனைப் பின் தொடர்ந்து அவன் நடவடிக்கை களைக் கவனமாகப் பார்த்து சந்தேகப்படும்படியாக எது நடந்தாலும் எனக்கு மறு நாளே தெரியும்படி உன் உதவியாளர்களைத்தயார் செய்து விடு."

"சரி ராணியாரே!"

"அப்புறம் மிக முக்கியமான ஒரு விஷயம். சொக்கநாதன் தஞ்சைப் பகுதிக்குள் செல்வது மாதிரித் தெரிந்தால், அந்தச் செய்தி அடுத்த இரண்டு நாழிகை களுக்குள் என்கைக்கு வர வேண்டும். அதனால் படு வேகமாகப் பறக்கக்கூடிய தூதுப்புறாக்களையும் கையோடு கொண்டு செல்."

அழகப்பநாயக்கன் அங்கிருந்து அகன்றவுடன் ராணி வையாம்பிகாதேவி, முத்துநகையைப் பார்த்து "இப் பொழுது உனக்குத திருப்திதானே?" என்றாள்.

முத்துநகை வெட்கத்துடன் சிரித்தாள்.

தஞ்சை இளவரசன் மன்னார்தாசன் பரத்தையர் வசிக்கும் பவழ வீதியில் யார் வீட்டைத் தேடி தினமும் செல்கிறான் என்று தனது பணிப்பெண் கூறியதும் மதுரவாணிக்கு முதலில் அதனை நம்ப முடியவில்லை.

''சுந்தரவல்லி, மறுபடியும் சொல். இளவரசர் யார் வீட்டிற்குச் செல்கிறார்?'' படபடப்பை மறைத்தவாறு கேட்டாள்.

''ரங்காஜம்மா வீட்டிற்கு!''

''எந்த ரங்காஜம்மா?''

''பவழ வீதியில் ஒரே ஒரு ரங்காஜம்மாதானே இருக்கிறாள். சதவேஹினி ரங்காஜம்மா வீட்டிற்குத் தான் இளவரசர் செல்கிறார்.''

''இதைக் கேட்டவுடன் மதுரவாணிக்குப் பரவசம் எழத் தொடங்கியது. மன்னார்தாசனைப் பற்றி எத்தனை தவறாக நினைத்து விட்டேன். இருந்தாலும் மனதிற்குள் சிறிய ஐயமும் எழுந்தது.

''தினமும் தேடிச் செல்லும் அளவுக்கு ரங்காஜம்மா வீட்டில் இளவரசருக்கு அப்படி என்ன வேலை இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''இளவரசருக்குக் கவிதை, நாடகம் இவற்றில் அதிகப் பிரியம் இருக்கிறதாம். உங்களுக்குத்தான் தெரியுமே, ரங்காஜம்மா இந்த நாட்டிலேயே மிகச் சிறந்த கவிதாயிணி என்று! இளவரசர்கூட ஏதோ நாடகம் எழுதப் போகிறாராம். அதனால் அதனைப் பற்றி ஏதோ பாடம் கேட்கத் தினமும் ரங்காஜம்மா வீட்டிற்குச் செல்வதாக என் தமக்கை பல தடவை என்னிடம் சொல்லி இருக்கிறாள்.''

''அப்படியா!'' என்றாள் மதுரவாணி தன் மனதில் எழுந்த மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு.

"உண்மைதான் அம்மா! இளவரசர் பெண்கள் விஷயத்தில் மிகவும் பண்புடன் நடந்து கொள்வாராம். பவழவீதிப் பெண்கள் எவரையுமே ஏறிட்டுக்கூடப் பார்க்க மாட்டாராம். அந்தத் தெருப் பெண்கள் இளவரசரிடம் வலியச் சென்று கூடப் பேசுவார்களாம். இருந்தாலும் அவர் நாசூக்காக அவர்களிடம் பேசி ஒதுங்கி விடுவாராம். மன்னர்குலத்தில் பிறந்த ஒருவரிடம் இத்தகைய அரிய பண்புகள் அமைவது அரிது என்று என் தமக்கை அம்சவல்லி அடிக்கடி அவரைப் பற்றி புகழ்ந்து பேசுவாள்."

இதைக் கேட்கக் கேட்க மதுரவாணியின் மனதில் எல்லையற்ற மகிழ்ச்சி கரைபுரண்டு ஓடத் தொடங்கியது

"சுந்தரவல்லி. இங்கேயே இரு. இதோ வந்து விடுகிறேன்," என்று சொல்லிவிட்டுத் தனது அறைக்குள் சென்று கை நிறையப் பொற்காசுகளை எடுத்து வந்து, பணிப்பெண்ணின் கரத்தில் வைத்தாள்.

"எதற்கம்மா இது?" சுந்தரவல்லி குழப்பத்துடன் கேட்டாள்.

எத்தனை இனிய செய்தி! மன்னார்தாசனைச் சந்திக்க ஆவலோடு அவள் எதிர்பார்த்த வாய்ப்பு இவள் மூலம் உருவானதற்கும், இளவரசனைப் பற்றித் தவறாக முதலில் நினைத்துக் கோபப்பட்டதற்குத் தகுந்த தண்டனையாகவும்தான் இத்தனை பொற்காசுகள் என்று மதுரவாணியால் சொல்ல முடியவில்லை.

"உன் தமக்கையின் வைத்தியச் செலவுகளுக்காக இதனை வைத்துக் கொள். என் தாய்க்குத் தெரிய வேண்டாம்," என்றாள்.

சுந்தரவல்லி மகிழ்ச்சியுடன் அதனைத் தனது மடியில் வைத்துக் கொண்டு, பணிவுடன் கும்பிட்டபடி நகர்ந்தாள்.

மதுரவாணி தனது அறைக்குள் நுழைந்து, மஞ்சத்தில் சாய்ந்தபடி சிந்திக்கத் தொடங்கினாள்.

மன்னார்தாசன் இலக்கிய ஆர்வத்தினால் ரங்கா ஜம்மா வீட்டிற்குச் சென்று தினமும் பாடம் கேட்கிறான். ஒருநாள் வரமுடியாமல் போனால்கூட தகவல் சொல்லி அனுப்புகிறான்.

அதனால் ரங்காஜம்மா வீட்டிற்கு நானும் சென்றால் இளவரசனுடன் அடிக்கடி பேசக்கூடிய வாய்ப்பு உருவாகுமே! ஆனால் பவழவீதிக்குச் செல்வதற்கு என் தாய் ஒப்புக் கொள்ள மாட்டார். தந்தையின் அனுமதி பெற்றால்தான் இது சாத்தியம். அதற்கு என்ன வழி?

நீண்டநேரம் யோசித்து ஒரு முடிவுக்கு வந்தாள்.

அமைச்சர் கோவிந்ததீட்சிதர் தனது மாளிகைக்கு வரும் சமயம் இருள் சூழ்ந்து இரண்டு நாழிகைகள் ஆகி இருந்தன. கை, கால் அலம்பி, பூஜை செய்து முடித்து விட்டு வரவும், மதுரவாணி அவரைத் தேடி வந்தாள். அவள் கையில் ஒரு ஓலைச்சுவடி இருந்தது.

"தந்தையே, பாகவதத்தில் சில இடங்கள் எனக்குப் புரியமாட்டேன் என்கிறது. சில தத்துவார்த்த விஷயங்களைப் பற்றி இதில் கூறியுள்ளவற்றை ஒரு ஆசிரியர் அருகில் இருந்தால்தான் புரியும் போலிருக்கிறது."

"ஆமாம் மதுரவாணி. பாகவதத்தை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனை நன்குணர்ந்த ஆசிரியர் ஒருவர் அவசியம் தேவை," என்றவாறுபரிவுடன் அவள் தலையைத் தடவினார்.

தன் மகள் பாகவதம் படிக்கிறாளே என்று அவருக்குள் பெருமையும் மகிழ்ச்சியும் பிறிட்டது.

"அதனை எனக்குக் கற்றுக் கொடுங்கள் தந்தையே!"

''எனக்கு எங்கே நேரம் கிடைக்கிறது. உன் தமையன் வெங்கடமஹியின் வீட்டிற்குச் சென்று கற்றுக் கொள்ளேன்.''

''அவருக்கு நேரம் இல்லையாம். அதைவிட நான் சரியாகக் கற்றுக் கொள்ளவில்லை என்றால் சிடுசிடுப்பார். தலையில் குட்டுவார். அவர் வேண்டாம் தந்தையே. தங்களுக்குத் தெரிந்த பெண்கள் யாராவது இருக்கிறார்களா?''

''பாகவதம் தெரிந்த பெண்கள் என்றால்...'' சற்று யோசித்துவிட்டு ''ரங்காஜம்மா ஒருத்திதான் பொருத்தமானவள். ஆனால் அவள் நமது வீட்டிற்கு வந்து சொல்லிக் கொடுக்கமாட்டாளே!'' என்றார்.

''நீங்கள் அனுமதித்தால் நான் அவர் வீட்டிற்குச் சென்று கற்றுக் கொண்டு வருகிறேனே!''

இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அவள் தாய் நாகமாம்பாள், ''நன்றாக இருக்கிறதடி மதுரவாணி! பரத்தையர் வசிக்கும் பவழவீதிக்கு அந்தணர் குலப்பெண், அதிலும் அமைச்சர் மகள் செல்வது எவ்வளவு இழுக்கு என்று நீ உணரவில்லையா?'' என்று கோபத்துடன் கேட்டாள்.

அமைச்சர் உடனே குறுக்கிட்டு, ''கோபப்படாதே நாகு! மதுரவாணி யார் வீட்டிற்குச் செல்லப் போகிறாள்? ரங்காஜம்மா வீட்டிற்கு!'' என்றார்.

''யார் வீடாக இருந்தாலும் அது தேவரடியார்கள் வீடுதானே!''

* ''இளக்காரமாகப் பேசாதே நாகு! ரங்காஜம்மா பற்றி முழுக்க உனக்குத் தெரியுமா? பாபுலேட்டி

---

* She (Rangajamma) calls herself a wife of Vijaya ragava and prides herself as being able to compose a hundred versee at a time... (She) wrote the Ramayana and the Bhagavata Saram The Nayaks of Tanjore V Vriddha girisan Page No. 160

வெங்கடாத்திரிக்கும், மங்கமாம்பாளுக்கும் பிறந்த ரங்காஜம்மா, பிறப்பின் காரணமாகக் கணிகையர் வீதியில் வசிக்கிறாள் என்று மட்டும் உனக்குத் தெரியும். அவள் சிறந்த புலமை பெற்றவள். நமது மன்னரிடம் இருக்கும் பெண்பாற் கவிஞர்களான சம்பகவல்லி, கஸ்தூரி, சசிரேகா, மோகனமூர்த்தி, கிருஷ்ணாஜி இவர்கள் அனைவரையும் விடச் சிறந்த கவிதாயினி. ஒரே நேரத்தில் நூறு கவிதைகளை இயற்ற வல்லவள் என்பதால் சதவேஹினி என்ற பட்டம் பெற்றவள். நமது மன்னர் அவளது புலமையை மெச்சி அவளுக்குப் பொற் காசுகளால் கனகாபிஷேகமே செய்தார்.

பிறப்பில் தாசிம்ய ஒழியே, இன்றுவரை நமது மன்னர் விஜயராகவ நாயக்கனையே மணாளனாக எண்ணி, மாற்றாரைத் தன் மாளிகையில் வரவிட்டதே இல்லை. 'அச்சுத விஜயராகவ சார்வபௌம தர்மபத்தினியாக ரங்காஜம்மா' என்று தான் இயற்றிய காவியத்தில் தன்னைப்பற்றிச் சொல்லிக் கொண்டவள். அப்படிப் பட்டவள் வீட்டிற்கு நமது பெண் செல்வது ஒன்றும் தவறில்லையே! அதிலும் ரங்காஜம்மா பாகவதசாரம் என்று ஒரு நூலே எழுதியுள்ளார். அதனால் பாகவதத் தைச் சிறப்பாகச் சொல்லித்தர மதுரவாணிக்கு இந்த நாட்டில் அவளைவிட்டால் வேறு பெண்களே கிடை யாது."

"இருந்தாலும் நமது பெண் அங்கு வேளை கெட்ட வேளையில்..."

"இப்பொழுதே போகப்போவது மாதிரியல்லவா பயப்படுகிறாய்! மதுரவாணி, காலையில் முதல் ஜாமம் முடிந்தவுடன் கிளம்பிச் சென்று, மதியம் முதல் ஜாமம் தொடங்குவதற்குள் வந்துவிடு. இந்த இளம் வயதில் பாகவதம் கற்றுக்கொள்ள நினைப்பது மெச்சத் தகுந்த செயல். நாளைமுதல் நீ செல்லலாம்," என்றார் அமைச்சர் பெருமை பொங்க.

தனது திட்டம் நிறைவேறிய பூரிப்பு மதுரவாணிக்குள் எழத் தொடங்கியது.

மதங்கொண்ட யானை மதுரை மன்னன் சொக்கநாத நாயக்கனையும், தஞ்சை இளவரசி சந்திர வதனாவையும் ஒருசேரச் சுமந்தவாறு, கங்கை கொண்ட சோழபுரக்காட்டை நோக்கித் தாறுமாறாக ஓடிக் கொண் டிருந்தது.

சற்று நேரத்திற்கு முன்பு சொக்கநாதன் வெட்டிய தும்பிக்கைப் பகுதியில் இருந்து ரத்தம் பெருக்கெடுக்க அந்த வேதனை தாளாது அறுபட்ட தனது தும்பிக்கையை முன்னும் பின்னும் சுழற்றி வலியில் காடே கிடுகிடுக்கும் படியாகப் பிளிறியவாறு ஓடிக்கொண்டிருந்தது.

அதன் கழுத்தில் ஒரு முழ அகலத்திற்குக் கனமான கயிறு ஒன்று இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. யானைப்பாகனுக்காகக்கட்டப்பட்டிருந்த அந்தக்கயிற்றை ஒட்டிச் சொக்கநாதன் உட்கார்ந்து கொண்டு, தனது இரண்டு பாதங்களையும் யானையின் கழுத்தின் இரண்டு பக்கங்களிலும் தொங்கவிட்டு, கழுத்துக் கயிற்றில் நுழைத்துத் திருகி இருந்தான். கழுத்தின் மேற்பக்கம் உள்ள கயிற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

சொக்கநாதனின் கட்டளைப்படி அம்பாரியில் இருந்து தட்டுத் தடுமாறி எழுந்த சந்திரவதனா, யானையின் தாறுமாறான ஓட்டத்தில் நிலைகுலைந்து கீழே விழாமல் கவனமாக, ஒரு கையால் சொக்கநாதனின் கழுத்தைப் பற்றி பிறகு காலை அம்பாரியில் இருந்து எடுத்து யானை யின் கழுத்தில் வந்து உட்கார்ந்தாள்.

தும்பிக்கை அறுபட்ட வேதனையிலும், மதநீர் ஒழுகிய வெறியிலும், கள்ளின் போதையிலும் அந்தக்

களிறு மேடு பள்ளங்களைப் பார்க்காது குலுங்கிக் குலுங்கி ஓடிக்கொண்டிருந்ததால், யானையின் கழுத்தில் உட்கார்ந்திருந்த சந்திரவதனா நிலைகுலைந்து கீழே விழுந்து விடாமல் இருக்க, சொக்கநாதனின் முதுகோடு நெருக்கமாக ஒட்டி உட்கார்ந்தாள்.

அவள் மார்புகள் இரண்டும் சொக்கநாதனின் முதுகில் ஒட்டிக் கொண்டு தத்தளித்தன. சந்திரவதனாவை விட அவைகளுக்குத்தான் அதிக பயம் போலும். சொக்கநாதனின் முதுகைக் குடைந்து அவன் உடலுக்குள் பாதுகாப்பாக ஒளிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அவன் முதுகைக் குத்திப்பார்த்துத் தோல்வியுற்று முதுகோடு முதுகாக ஒட்டிக் கொண்டிருந்தன.

அவள் கைகள் இரண்டும் சொக்கநாதனின் கழுத்தை வளைத்துப் பயத்துடன் பின்னிக் கொண்டிருந்தன. அவளது முகம் சொக்கநாதனின் பிடரிப்பக்கம் சாய்ந்து, அவன் கன்னத்துடன் அவளது மூக்கு உரசிக் கொண்டிருந்தது.

அவளது இடுப்பும், இடுப்புக்கு கீழ் உள்ள குறுநிலப் பகுதியும் சொக்கநாதனின் இடுப்பை ஒட்டி நெருக்கமாகப் பசை போட்டுப் பிணைத்தது போல் அப்பிக் கொண்டிருந்தது.

அவளது இரண்டு கால்களும் யானைக் கழுத்தின் இரண்டு பக்கங்களிலும் தொங்கிக் கொண்டிருந்தன. யானையின் குலுங்கலான ஓட்டத்திற்கு ஏற்ப, அவளது கால்கள் குலுங்கி, பாதங்களில் அணிந்திருந்த நூபுரங்கள் இடைவிடாது ஓசை எழுப்பின.

சந்திரவதனா தனது பாதங்களைக் களிற்றின் கழுத்தில் ஊன்றிப் பார்த்தாள். சற்று நேரம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாமல் நழுவின. சொக்கநாதனின் காலோடு

கால் சேர்த்து வைத்துப் பின்னிக் கொள்ளப் பார்த்தாள். அதற்கும் கால்கள் எட்டவில்லை.

இதனால் அவள் கால்கள் இருபுறமும் தொங்கி, தாறுமாறாக ஆடத் தொடங்கின. இதன் காரணமாக நிலை குலைந்து யானையின் முதுகில் இருந்து எங்கே கீழே விழுந்து விடுவோமோ என்ற பயத்தில் சொக்கநாதனின் கழுத்தோடு தன் கைகளை இறுக்கமாகப் பின்னிக் கொள்ள ஆரம்பித்தாள்.

இதனால் சொக்கநாதனின் கழுத்து நெறிபட்டுச் சற்றே மூச்சுத் திணறத் தொடங்கியது. அதற்கான காரணத்தை உணர்ந்த சொக்கநாதன், சந்திரவதனாவைப் பார்த்துச் சொன்னான்.

"சந்திரவதனா, கால்களை இப்படித் தளர்வாகத் தொங்கவிடாதே கீழே விழுந்து விடுவாய். யானையின் கழுத்துக் கயிற்றில் பாதங்களை நுழைத்துக் கொள்."

"இல்லை... முடியவில்லை... கால் எட்டமாட்டேன் என்கிறது," என்று பயத்தில் கிட்டத்தட்ட அழும் குரலில் சொன்னாள்.

"கால்களைத் தூக்கி என் இடுப்போடு இணைத்து இறுகப் பின்னிக் கொள். மெதுவாக... மெதுவாக... கீழே விழுந்துவிடப் போகிறாய்!"

சந்திரவதனா அவன் சொன்னது மாதிரியே தனது இரண்டு கால்களையும் எடுத்து அவன் இடுப்போடு இறுகப் பின்னிக் கொண்டாள். இதனால் அவளது இடுப்பும், இடுப்புக்குக் கீழ் உள்ள பிரதேசமும் சொக்கநாதனின் இடுப்போடு இன்னும் இறுக்கமாகப் பதிந்து கொண்டன.

அவள் கைகள் பயத்தில் சொக்கநாதன் கழுத்தில் பதிந்து அழுத்தமாகப் பின்னிக் கொண்டிருந்ததால்

சொக்கநாதனுக்கு மூச்சு விடுவதற்கே சற்றுச் சிரமமாக இருந்தது.

"சந்திரவதனா, நீ என் கழுத்தை இப்படி இறுக்கினால் எனக்குக் கஷ்டமாக இருக்கும். அதனால் கைகளைக் கீழே இறக்கி, என் மார்போடு சேர்த்து இறுக்கிக் கொள். இல்லாவிட்டால் நாம் இருவரும் சேர்ந்து கீழே விழும்படியாக ஆகிவிடும்"

சந்திரவதனா உடனே அவன் சொன்னது போன்று தனது இரண்டு கரங்களையும் ஒவ்வொன்றாக விடுவித்து சொக்கநாதனின் அக்குள் வழியாக நுழைத்து, அவன் மார்போடு சேர்த்து இறுகக் கட்டிக் கொண்டாள்.

கால்கள் இரண்டும் சொக்கநாதனின் இடுப்போடு பிணைந்து கிடக்க, கைகள் இரண்டும் அவன் கக்கத்தின் வழியாகச் சென்று மார்போடு பின்னிக் கொள்ள, சந்திரவதனாவின் முகம் சொக்கநாதனின் பிடரியோடு புதைந்து கொண்டது.

பசைபோட்டு ஒட்டியதுபோல் அவள் அங்கத்தின் முன்பக்கம் முழுவதும் சொக்கநாதனின் முதுகுப்புறத்தில் இறுக்கமாக அப்பிக் கொண்டிருந்தது. அவளது எழுச்சியான திரண்ட மார்புகள் அவனது முதுகைக் குத்திச் சப்பழிந்து போயிருக்க, அவளது சிற்றிடைக்குக் கீழ் உள்ள சிறுநிலப்பகுதி முற்றிலுமாகச் சொக்கநாதனின் இடுப்பருகே ஒடுங்கிக் கிடந்தன.

இவ்வளவு இறுக்கமான, நெருக்கமான நிலையிலும் இருவரது உணர்ச்சிகளும் சிதறாமல் இருந்ததற்குக் காரணம், இருவர் நெஞ்சிலும் படபடப்பும், யானையின் மீதிருந்து எந்த நேரமும் விழுந்து விடக் கூடிய அபாயத்தை எண்ணி எழுந்த பயமும்தான். உயிருக்கு ஆபத்து என்ற நிலையில் மற்ற உணர்ச்சிகள் உறைந்து போயிருந்தன.

இந்த நேரத்தில் யானை மீது கட்டப்பட்டிருந்த அம்பாரி நிலை குலைந்து சரிந்து தொங்க ஆரம்பித்தது. யானை வானமே இரண்டாகப் பிளந்தது போல் பெருங் குரலில் பிளிறியவாறு ஓடிக் கொண்டிருந்தது.

சற்று தூரத்தில் அடர்ந்த காட்டுப்பகுதி தெரிந்தது. யானை அதற்குள் நுழைந்து விட்டால், கட்டுப்பாடற்று அங்குள்ள பெரிய மரங்களில் மோதும். இதனால் இருவருக்குமே ஆபத்து.

யானையின் முதுகில் இருந்து இருவருமே கீழே விழுந்து விட்டால் யானையின் கவனம் முதலில் அவர்கள் மீதுதான் திரும்பும். இருவரையும் துவம்சம் செய்து, மண்ணோடு மண்ணாகச் சிதறும் வரை அதன் கோபம் தீராது என்று சொக்கநாதன் உணர்ந்தான்.

அதனால் கடாக் களிறு கானகத்திற்குள் நுழைவதற்கு முன்பு அதனைக் காலனுக்கு இரையாக்கி விட முடிவு செய்தான். தன் கரத்தை உயர்த்தி, தனது பிடரியோடு முகம் புதைத்து இருக்கும் சந்திரவதனாவின் தலையைத் தொட்டு உலுப்பினான்.

"சந்திரவதனா... சந்திரவதனா..."

''உம்...உம்..." என்று மட்டும் அவள் பதில் இருந்தது.

"நிதானமாக இருக்கிறாய் அல்லவா ?"

"உம்..." பயத்துடன் வந்த பதில் அவ்வளவுதான்.

"என்னை நன்றாகப் பிடித்துக்கொள் யானையைக் கொல்வதற்கான தருணம் நெருங்கி விட்டது."

அவன் என்ன செய்யப் போகிறான் என்று உணராமல் பிரமை பிடித்தவள் போல் அவனை இன்னும் நன்றாக இறுகக் கட்டிக் கொண்டாள்.

சொக்கநாதன் அவள் இறுக்கத்தை உணர்ந்து திருப்தி அடைந்தவனாய், தனது இடுப்பில் இருந்த குறுவாளை எடுத்தான்.

பிறகு அந்தக் குறுவாளால் தனது பலங்கொண்ட மட்டும் யானையின் நடுத்தலையில் சரமாரியாகக் குத்த ஆரம்பித்தான். ஒரு குத்தில் அவன் முழு பலமும் கத்தியின் வழியாக இறங்க ஆரம்பித்தது.

கண் இமைக்கும் நேரத்திற்குள் நூற்றுக்கணக்கான குத்துக்கள் இடைவிடாமல் சரமாரியாக யானையின் தலைக்குள் இறங்க ஆரம்பித்தன.

யானை பயங்கரமாக அலற ஆரம்பித்தது. தும்பிக் கையை உயர்த்திப் பிளிறியவாறு ஓட்டத்தின் வேகத்தை அதிகரித்தது. உயர்ந்த தும்பிக்கையில் இருந்தும் ரத்தம், உச்சந்தலையில் இருந்தும் ரத்தம்!

சொக்கநாதன் கை சளைக்காமல் குறுவாளால் குத்திக் கொண்டிருந்தான். குறுவாள் பதிந்த நடுத்தலையில் இருந்து குருதி பீறிட்டுக் கிளம்பிச் சொக்கநாதனின் முகத்திலும், மார்பிலும், மார்பில் பிணைந்து கிடந்த சந்திர வதனாவின் கரங்களிலும் பீச்சியடிக்க ஆரம்பித்தது.

சந்திரவதனா கிறக்கத்தில் இது ஒரு கனவைப் போல பிரமை உற்றவளாகக் கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

குறுவாள் ஆழமாகப் பதிய ஆரம்பித்ததும், யானை நிலைகுலைய ஆரம்பித்தது. ஓட்டத்தை நிறுத்தி வலியில் அலறியது. தனது தும்பிக்கையை உயர்த்திக் கழுத்தில் இருந்த அவர்கள் கால்களை பற்றிக் கீழே இழுத்துப் போட முயற்சித்தது.

தும்பிக்கையின் ஒரு பகுதி ஏற்கெனவே வெட்டுப்பட் டிருந்ததால் அதனால் அவர்கள் கால்களைப் பற்ற முடிய

வில்லை. இருந்தாலும் விடாப் பிடியாக முயல ஆரம் பித்தது.

யானையின் தும்பிக்கை தங்கள் பக்கமாக உயரும் பொழுதெல்லாம் சந்திரவதனா பயத்தில் அலற ஆரம் பித்தாள். அவள் அலறலைக் கேட்டு மதயானையும் பிளிறும். பிறகு மறுபடியும் தும்பிக்கையை உயர்த்தும்.

சொக்கநாதன் குறுவாளால் குத்துவதை நிறுத்தாது, "சந்திரவதனா, பயப்படாதே! நான் இருக்கிறேன். உனக்கு ஒன்றும் ஆகாது அப்படியே ஆபத்து ஏற்பட் டாலும் என்னுயிர் போன பிறகுதான் உனக்கு ஏதாவது ஆகும். பயத்தை விடு அலறாதே!'' என்று தைரியம் சொன்னவனாக அதே நேரம் யானையின் உச்சந்தலை யைக் குத்திக் கொண்டிருந்தான்

யானைத் தடுமாற ஆரம்பித்தது. நின்ற இடத்திலே அசையாது, தும்பிக்கையைக் கூடத் தூக்குவதற்கு முடியா மல் ஈனஸ்வரத்தில் அலறியது. அதே நேரம் சொக்கநாத னின் குறுவாள் யானையின் நடுத்தலையில் உள்ள முரட்டுத் தோலைக் கிழித்து அதன் அடியிலுள்ள குருத்து எலும்பைப் பிளக்க ஆரம்பித்திருந்தது.

இன்னும் சற்று நேரத்தில் குருத்தெலும்பு பிளந்து மூளைத் தட்டுப்பட்டு விடும். மூளைக்குள் குறுவாள் பதிந்து விட்டால் யானை மடேர் என்று சரிந்து விடும் என்பதை உணர்ந்த சொக்கநாதன் சந்திரவதனாவைப் பார்த்து அவசரமாகச் சொன்னான்.

''சந்திரவதனா, யானையின் முடிவு நெருங்கி விட்டது. இன்னும் சற்று நேரத்தில் அப்படியே பொத் என்று விழுந்து விடும். நாம் இருவரும் அதன் அடியில் மாட்டிக் கொண்டால், விழுந்த வேகத்தில் நமது உடல்கள் குழம்பாகிச் சிதறி விடும். அதனால் யானை

விழும் அதே நேரத்தில் நாமும் குதித்து விடவேண்டும். தயாராக இரு. என்னை நன்கு இறுக்கமாகப் பிடித்துக் கொள். நான் சொன்னது கேட்கிறதா ?"

"உம்" என்றாள் பிரமை பிடித்தவள் போல்.

அவள் உடம்பு இன்னும் இறுக்கமாக அவனோடு ஒட்டிக் கொண்டது. மார்புகளும் இடுப்பும் அவனுடன் அப்பிக் கொள்ள, அவள் கரங்களும் கால்களும் அவன் உடம்பை இறுகப் பின்னிக்கொண்டது. அவள் முகம் சொக்கநாதனின் பிடரியோடு நன்கு அழுந்திக் கொண்டது.

"சந்திரவதனா, தயாராக இருக்கிறாயா ?" என்றான் மறுபடியும்.

"உம்" என்றாள் பயத்துடன்.

சொக்கநாதன் அதன்பிறகு தனது பாதங்கள் இரண்டையும் யானையின் கழுத்தில் பிணைத்திருந்த கயிற்றில் இருந்து விடுவித்து; எந்த நேரமும் குதித்து விடக்கூடிய தயார் நிலையில் உட்கார்ந்து கொண்டான்.

யானை தளர்ந்து, தும்பிக்கையைத் தொங்கவிட்டது, அதன் கண்கள் சொருக ஆரம்பித்தன. காதுகள் இரண்டும் அசைப்பதை நிறுத்த ஆரம்பித்தன.

இதனை உணர்ந்த சொக்கநாதன் தனது குறுவாளால் ஓங்கி, யானையின் தலைக் காயத்தில் தெரிந்த குருத்தெலும்பைத் தனது பலம் முழுவதும் பிரயோகித்துக் குத்தினான்.

குருத்தெலும்பு பிளந்து, யானையின் மூளை வரை பாய்ந்து சென்றது அவனது குறுவாள்.

மறுவினாடி பெருங்கோட்டைச் சுவர் ஒன்று திடீர் என்று சரிந்தது போல், வேரற்ற மரம் ஒன்று வீழ்வதைப்

போல மதம் பிடித்த அந்த யானை மடேர் என்று பெருத்த ஓசையுடன் மண்ணில் வீழ்ந்தது.

இதனை எதிர்பார்த்த சொக்கநாதன் கடாக் களிறு மடேர் என்று சரியும் அதே நேரத்தில், யானையின் மீதிருந்து துள்ளிக் கீழே குதித்தான்.

யானையின் உடலில் இருந்து சற்றுத் தூரத்தில் அவர்கள் இருவரும் வந்து விழுந்தார்கள். அவர்கள் விழுந்த இடம் முழுவதும் புற்கள் வளர்ந்து இருந்ததால் சொக்கநாதனின் காலில் அடிபடாமல் போய்விட்டாலும், அவ்வளவு உயரத்தில் இருந்து உப்பு மூட்டை சுமந்தது போல் சந்திரவதனாவையும் முதுகில் சுமந்து கொண்டு குதித்ததால், அவன் நிலை சற்றுத் தடுமாறி மண்ணில் சாய்ந்தான்.

இதனால் இருவரும் சற்றுத் தூரம் மண்ணில் உருண்டார்கள். சந்திரவதனா கீழே விழுந்தவுடன், அவன் முதுகோடு விழுந்து உருண்டு, பின்னர் அவன் நெஞ்சோடு இறுக வந்து ஒட்டிக் கொண்டாள்.

சொக்கநாதன் தரையில் கிடக்க, அவன் நெஞ்சின் மீது படுத்தபடி சந்திரவதனா கிடந்தாள். இருவரும் சற்று நேரம் அப்படியே அசையாது படுத்துக் கிடந்தனர்.

சற்று நேரம் கழித்துத் தன்னுணர்வுக்கு வந்த சொக்கநாதன் தன் உடலின் மீது, தனது உடம்பு முழுவதையும் கிடத்திப் படுத்த நிலையில் இருக்கும் சந்திர வதனாவைக் கூர்ந்து பார்த்தான்.

அவள் மார்புகள் இரண்டும் அவனது மார்புடன் அழுத்தமாகப் பதிந்து கிடந்தன. அவள் கைகள் இரண்டும் தரையில் பரவிக் கிடந்தன. அவளது வயிறும் இடுப்பும் அவன் உடல் மீது பதிந்து கிடக்க அவள் கால்கள் சற்று மடிந்து, அவன் கால்கள் மீது படிந்து கிடந்தன.

சந்திரவதனாவின் முகம் அவன் கழுத்துக்குள் புதைந்து கிடந்தது, அவளது ஒரு பக்கக் கன்னம் சொக்கநாதனின் நாடியருகே அழுந்தி, அவள் இதழ்கள் அவன் கன்னத்தைத் தீண்டிக் கொண்டிருந்தன.

அவள் தலைமுடி அவன் முகத்தில் விழுந்து அவன் கண்களை மறைத்துக் கொண்டிருந்தது. தர்மசங்கடமான இந்த நிலையை உணர்ந்த சொக்கநாதன், தன் கரத்தை உயர்த்தி, சந்திரவதனாவின் முதுகைத் தட்டினான்.

"சந்திரவதனா... எழுந்திரு... யானை இறந்து விட்டது... பார்!"

சந்திரவதனா தன் கண்களை விழித்துப் பார்த்தாள். தான் அவன் மீது குப்புறப் படுத்திருப்பதை உணர்ந்து கைகளை ஊன்றி மெதுவாக எழ முயற்சி செய்தாள்.

இவ்வளவு நேரம் யானையின் கழுத்தில் இருந்து அலைக் கழிந்ததாலும், எல்லையற்ற பயத்தில் பீடிக்கப் பட்டு தன்னிலை மறந்து, பல தடவை அலறித் திகிலடைந் திருந்ததாலும், யானையின் மீது இருந்து தரையில்குதித்து உருண்ட அதிர்ச்சியினாலும் அவள் கண்கள் இருண்டன.

தலையைத் தூக்கிப் பார்த்த சந்திரவதனா, மறு வினாடியே அவன் முகத்தின் மீது பொத் என்று மயங்கி விழுந்தாள்.

விழுந்த வேகத்தில் அவளது இதழ்களும் ஒருமுறை அழுத்தமாக ஒட்டி, பிறகு விலகி அவளது இதழ்கள் அவனது கன்னத்தில் பதிந்து கிடந்தன.

சந்திரவதனா மயக்கமாகி விழுந்து விட்டதை உணர்ந்த சொக்கநாதன் அவசர அவசரமாகச் செயல்பட ஆரம்பித்தான்.

அவன் கரத்தில் ஒன்று இன்னமும் அவளது பின்னழகை வளைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்து,

அவசரமாக அதனை விலக்கித் தனது இரு கரத்தாலும் தன் முகத்தில் விழுந்து கிடக்கும் சந்திரவதனாவின் முகத்தை மட்டும் கவனமாகப் பற்றித் தோளருகே நகர்த்தினான்.

தன் கண்களை மறைத்தவாறு விழுந்து கிடந்த அவளது கூந்தலை ஒதுக்கி, அவள் முதுகின் மீது படற விட்டான். ஏராளமான அந்தக் கூந்தல் அவள் பின்னழகையும் தாண்டி மண்ணில் விழுந்து புரண்டது.

பின்னர் தனது இரண்டு கரங்களையும் அவள் இடுப்பில் கொடுத்து, சிற்றிடையை வளைத்து ஒரு கையால் அவள் முதுகைப் பற்றி, தன் மேல் படுத்துக் கிடந்த அவள் உடலை மெதுவாகப் புரட்டிச் சரித்துத் தரை மீது படுக்க வைத்தான்.

இவ்வளவு நேரம் அவன் மார்போடு அழுந்திக்கிடந்த சந்திரவதனாவின் மார்புகள் அவன் புரட்டிப் போட்டதும், அவன் உடலில் இருந்து வேண்டா வெறுப்பாகப் பிரிந்து பின்னர் சந்திரவதனா மண்ணில் மல்லாக்கப்படுத்ததும் எழுந்து நின்று சொக்கநாதனை ஏக்கத்துடன் பார்த்தன.

சொக்கநாதன் தரையில் கையூன்றி எழுந்து நின்றான் தன் உடலில் இருந்த தூசுகளைத் தட்டி விட்டு, மண்ணில் மயங்கியபடி படுத்திருக்கும் சந்திரவதனாவைக் கூர்ந்து பார்த்தான்.

புரட்டிப் போட்டதால் அவள் அணிந்திருந்த ஆடை முழங்கால் வரை விலகி இருந்தது செங்கதலித் தண்டுகளைப் போல் செழுமையாகத் திரண்டிருந்த அவளது தொடைகள், வெய்யோன் ஒளியில் மின்னின.

சொக்கநாதன் அவள் அழகைக் கூர்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வந்தான்.

அதே நேரம் தூரத்தில் உள்ள கங்கை கொண்ட சோழீஸ்வரர் ஆலய மாடத்தில் இருந்து இத்தனை

நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்த அச்சுதப்பனும் அவசரமாகக் கீழே இறங்கித் தனது படைகளைத் திரட்டிக் கொண்டு அந்த இடத்தை நோக்கி ஓடி வரத் தொடங்கினான்.

38

கங்கை கொண்ட சோமேஸ்வரர் கோயில் கோபுரத்தின் முதல் மாடத்தில் நின்று கொண்டு தூரத்தில் யானையின் மீது அமர்ந்து தத்தளிக்கும் இளவரசி சந்திரவதனாவைத் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அச்சுதப்பன்,

அவன் உடல் முழுவதும் நடுங்கிக் கொண்டிருந்தது. வியர்வை வெள்ளமாகப் பெருகி, அவன் அணிந்திருந்த ஆடை முழுவதையும் தொப்பல் தொப்பலாக நனைத்திருந்தது.

'எந்தச் சாமி புண்ணியமோ இன்று நான் பிழைத்தேன். யானை அடித்த அடி மட்டும் குதிரையின் வயிற்றில் படாமல் என் மீது விழுந்து இருந்தால், அந்த இடத்திலேயே செத்திருப்பேன். நல்ல வேளை, இந்த ஈஸ்வரன் தான் காப்பாற்றி இருக்கிறான்.'

அச்சுதப்பன் உடல் வெடவெடத்து மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன. மனதுக்குள் ஈஸ்வரனைத் தொழுது கொண்டான்.

மதயானை அடித்த அடியில் குதிரையும், அச்சுதப்பனும் துள்ளி விழுந்து, பிறகு இருவருமே எழுந்து ஓடத் தொடங்கியபொழுது அச்சுதப்பன், அவன் வாழ்நாளில் அப்படி ஒரு ஓட்டம் அவன் ஓடி வந்ததில்லை.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அசுர வேகத்தில் ஓடி வந்து, கோபுரத்தின் மாடிப்படிகளைத் தாவி ஏறி முதல் மாடத்திற்கு வந்ததும்தான் அவன் தன்னிலைக்கு வந்திருந்தான்.

இதயம் படபடத்து, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஒரு கணம் அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டான், அச்சுதப்பன். எங்கே மயக்கம் அடைந்து விடுவானோ என்ற பயத்தில், அருகில் இருந்த தஞ்சைப் படை வீரன் ஒருவன் ஓடி வந்து, அவனைத் தாங்கி, ஒரு குவளை நீரை அவன் வாயில் புகட்டினான்.

அதன் பிறகு தெம்பாக எழுந்து நின்ற அச்சுதப்பன் சுற்று முற்றும் பார்த்தான் அந்த மாடத்தில் தன்னைப் போலவே யானைக்குப் பயந்து ஓடி வந்த படை வீரர்கள் பலர் இருப்பதை அறிந்தான்

அவர்களைப் பார்த்ததும் அவனுக்குள் கோபம் பிறிட்டது.

"நீங்கள் எல்லாம் வீரர்களாடா? யானையை அடித்துக் கொல்வதை விட்டு விட்டு இப்படி ஓடி வந்து ஒளிந்திருக்கிறீர்களே. உங்களுக்கு வெட்கமாயில்லை? கோழைகளே!"

எல்லாரும் தலையைக் குனிந்து கொண்டார்கள். கூட்டத்தில் ஒருவன், 'இவர் ஓடி வந்தது மட்டும் வீரச் செயலாக்கும்!" என்று முனகுவது அச்சுதப்பன் காதுகளில் விழுந்தது.

மாடத்தின் உள்ளறை இருட்டாக இருந்ததாலும், அதற்குள் நிறைய மனிதர்கள் நிறைந்திருந்ததாலும், அதைச் சொன்னவன் யார் என்று அச்சுதப்பனால் உடனே கண்டு கொள்ள முடியவில்லை. அவனைத் தேடி பிடித்து உதைக்கலாம் என்ற ஆத்திரம் அவனுக்குள்

எழுந்த அதே சமயம் தூரத்தில் யானைப் பிளிறும் ஓசை கேட்டது.

அச்சுப்பன் வேகமாக ஓடி வந்து மாடத்தில் இருந்து பார்த்தான். தூரத்தில் யானை அங்கிருந்த பொருட்களை எல்லாம் துவம்சம் செய்து கொண்டிருந்தது. யானை மீதுள்ள அம்பாரிக்குள் இருந்து சந்திரவதனா அலறுவது கேட்டது.

அச்சுதப்பன் உடம்பு மறுபடியும் நடுங்கத் தொடங்கியது. இளவரசி உயிர் பிழைப்பது அரிது என்று அவன் மனது அடித்துக் கொண்டது.

"இந்த யானைக்கு என்னடா ஆயிற்று? சற்று நேரத்திற்கு முன்பு வரை நன்றாகத் தானே இருந்தது?" என்று நடுக்கத்துடன் புலம்பினான்.

"மதம் பிடித்திருக்கும் போல் தோன்றுகிறது தளபதியாரே! இது தெரியாமல் அதற்குக் கள்ளை வேறு ஊற்றிக் கொடுத்திருக்கிறார்கள் மடையர்கள்," என்று அருகில் இருந்தவன் சொன்னான்.

இதைக் கேட்டவுடன் அச்சுதப்பன் அவனை முறைத்துப் பார்த்தான் இடமும், நேரமும் சரியில்லை என்பதால் அச்சுதப்பன் கவனம் மறுபடியும் மாடத்தின் வழியாக வெளியே சென்றது.

இளவரசி தொடர்ந்து அலறிக் கொண்டிருக்க, மதயானை பிளிறியவாறு கால்களால் அந்த இடத்தில் இருந்த பொருட்களைச் சின்னா பின்னமாகச் சிதைத்துக் கொண்டிருந்தது.

இளவரசியைக் காப்பாற்றுவதற்கு எந்த வழியும் இல்லை. இனி அவள் உயிர் பிழைப்பதே அரிது. இந்தச் செய்தியைச் சுமந்து கொண்டு எப்படித் தஞ்சாவூர்

செல்வது என்று நினைத்துப் பார்க்கும் பொழுது அச்சுதப்பனின் நெஞ்சம் நடுங்கியது.

தந்தை சினந்து பேசுவார். அதை விடத் தஞ்சை மன்னர் என்னைக் தொன்றே போடுவார் என்ற நினைப்பில் அச்சுதப்பனின் உடல் நடுங்கி வியர்த்து ஒழுகியது. உடல் சிலிர்த்தது.

அப்பொழுது அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விதமாக யாரோ இருவர் புரவிகளில் ஓடி வருவது தெரிந்தது. அதில் ஒருவன் மட்டும் மதயானையை வலுக்கட்டாயமாக அழைப்பதைப் பார்த்தனர்.

மூளையில்லாத எவனோ ஒரு பயல் மதயானையின் முன் வலியச் சென்று உயிரை விடப் போகிறானே என்று அச்சத்துடன் அச்சுப்பனும் மற்றவர்களும் மூச்சு விடுவதைக் கூட மறந்து போய் கண்ணிமைக்காமல், அடுத்து அந்த மதயானை அந்தப் பைத்தியக்காரனைக் குதிரையில் இருந்து இழுத்துப் போட்டுக் கொல்லப் போகும் காட்சியைத் திகில் கலந்த ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து அந்த வீரன் யானையை முன்னும் பின்னுமாக அலைக்கழிப்பதைக் கண்ணுற்றார்கள்.

அச்சுதப்பன், குதிரை மீது அமர்ந்திருக்கும் சொக்கநாதனைக் கூர்ந்து பார்த்தான். இவனை எங்கோ பார்த்தது மாதிரித் தோன்றுகிறதே!

"யாரடா இந்தப் பைத்தியக்காரன்? மதயானையிடம் வலியச் சென்று மோதப்பார்க்கிறான்? மூளையைக் கழற்றி விட்டு வந்து முட்டாளாக இருப்பான் போல் தெரிகிறதே!" அச்சுதப்பன் முணுமுணுத்தான்.

"தளபதியாரே! இவன் யாரென்று தெரியவில்லையா? நேற்று இரவு நமது இளவரசியின் கூடாரத்தில்

நுழைந்தானே. அவன்தான்" என்று ஒருவன் பரபரப்புடன் கூறினான்.

"அவனா இவன்? ஆமாம். அவனேதான்! அற்புதமான வீரன்!'' என்று மற்றொருவன் வியந்து கூறினான்.

இதைக் கேட்டவுடன், அச்சுதப்பன் அவனை முறைத்துப் பார்த்து, அவன் கன்னத்தில் பளார் என்று அறைந்தான்.

அச்சுதப்பன் மறுபடியும் தூரத்தில் தெரியும் சொக்கநாதன் முகத்தை உன்னிப்பாகப் பார்த்தான். ஆம். அவனேதான்! இவன் யார்? யாராக இருந்தாலும் சரி. இவன் உயிர் இன்னும் சற்று நேரத்தில் உயரப் பறக்கப் போவது என்னவோ நிச்சயம்!

நேற்று இரவு இவன் என்னை என்னபாடு படுத்தி விட்டான்! இவனுக்கு வேண்டும்! மதயானையின் பிடியில் மாட்டிச் சிதறப் போகிறான்! ஆண்டவனாகப் பார்த்துத்தான், என் கண் முன்னால் இவனுக்கு இப்படி ஒரு தண்டனை அளித்திருக்கிறார்! சாகட்டும்?

அவர்கள் முற்றிலும் எதிர்பாராத விதமாகச் சொக்கநாதன் மதயானையை முன்னும் பின்னுமாக அலைக் கழித்துச் சோர்வடையச் செய்ததையும், அதன் பிறகு துணிச்சலாக அதன் எதிரில் சென்று அதன் தும்பிக்கையை வெட்டி விட்டு, அந்த வேகத்தில் அதன் முதுகு மீது ஏறி உட்கார்ந்ததையும் பிரமை பிடித்தவர்கள் போல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அதன்பிறகு அந்தக் கடாக்களிறு இருவரையும் சுமந்தவாறு கானகத்தை நோக்கி ஓடுவதையும், சொக்கநாதன் குறுவாளால் அதன் தலையை பிளப்பதையும் தொடர்ந்து யானை கீழே விழுந்ததையும் வியப்புடன் பார்த்தனர்!

இனி இளவரசியின் உயிருக்கு ஆபத்து இல்லை. ஆனால் அவனைச் சும்மா விடக்கூடாது.

அவனைச் சிறைப் பிடித்து தஞ்சாவூருக்குக் கூட்டிச் செல்ல வேண்டும். முதல் நாள் இளவரசியின் கூடாரத்திற்குள் நுழைந்து களவாட முயன்றான். மறுநாள் இளவரசியை யானையின்மீது கடத்தப் பார்த்தான். நான் தான் கஷ்டப்பட்டு சந்திரவதனாவைக் காப்பாற்றி இந்தக் கள்வனைச் சிறைப்பிடித்து அழைத்து வந்தேன் என்று மன்னனிடம் சொல்ல வேண்டும்.

இந்த எண்ணத்தில் அச்சுதப்பன் மாடத்தில் இருந்து வேகமாக இறங்கி, அங்குள்ள படை வீரர்களுக்கு ஆணையிட்டான்.

''சீக்கிரம் கிளம்புங்கள். இவ்வளவு களேபரங்களுக்கும் அந்தப் பயல்தான் காரணம். அவனைத் தப்ப விட்டு விடாதீர்கள். இளவரசியைக் கடத்திச் சென்று விடுவான். புறப்படுங்கள்."

படை வீரர்களுக்கு முன்பாக அச்சுதப்பன் குதிரை மீது ஏறிப் பறக்கத் தொடங்கினான்.

தன் மார்பின் மீது மயங்கிக் கிடந்த இளவரசி சந்திரவதனாவை ஒரு பூமாலையைப் போல் பதமாகக் கைகொடுத்துப் புரட்டிப் போட்டு, எழுந்து நின்றான் சொக்கநாதன்.

மண்ணின் மீது மயக்கம் தெளியாத நிலையில் மல்லாக்கப் படுத்திருக்கும் மங்கையைச் சற்றுநேரம் கூர்ந்து பார்த்தான்.

இந்த நிலையில் கூட எவ்வளவு அழகாக இருக்கிறாள்! இவளுக்கு ஈடு இணையான அழகியை நான் இதுவரைப் பார்த்ததே இல்லை என்று சொக்கநாதனின் மனம் புலம்பியது.

புரட்டிப் போட்டிருந்ததால் அவள் புடவை சற்றே விலகி முழங்கால் வரை ஏறிக் கிடந்தது. அதனால் அவள் தொடைகளின் கீழ்ப்பகுதி கொஞ்சம் தெரிந்து சொக்க நாதனின் மனதைப் படாதபாடு படுத்தியது.

அவளது இரண்டு பாதங்களும் விரிந்து, தாமரை மலர்களைப் போல் சிவந்து காணப்பட்டன. அவளது சதைப்பிடிப்பான கணுக்கால்களின் முடிவில் இருந்த தங்கக் கொலுசுகள் செங்கதிரோனின் ஒளியில் மினு மினுத்துக் கொண்டிருந்தன. வெள்ளை விரால் மீன்களின் வாலில் தங்கக் கணைகள் பூட்டியது போன்று தோற்றம் அளித்தது.

கொழுத்த இரண்டு வெண்ணிற தண்டுகளை முழங்கால் மூட்டுகளாக வைத்து, அதன் மீது வாழைத் தண்டுகளை ஒட்ட வைத்திருக்கிறார்களோ என்ற மயக்கத்தை, அரை குறையாக அவளது ஆடைகள் வழியே தெரிந்த தொடைகள் ஏற்படுத்தின.

கண்ணாடியாகப் பளபளத்த இடுப்பும், அதனைத் தொடர்ந்து எழுந்து நின்று விண்ணை முட்டத் துடிக்கும் அவளது முன்னழகுகளும் சொக்கநாதனின் மனதைப் படாதபாடு படுத்தின.

யானையின் முதுகில் இருக்கும் பொழுது எவ்வளவோ நெருக்கத்தில் இதுவரை வந்திருந்த பொழுதும், அப்பொழுது உணர்ச்சிகள் எதுவும் எழாது இருந்த சொக்கநாதன், இப்பொழுது வெறுந்தரையில் அவனிட மிருந்து சற்று தூரம் விலகிப்படுத்திருக்கும் அவள் அழகைப் பார்த்ததும் அவன் உணர்ச்சிகள் தடுமாற ஆரம்பித்தன.

அவள் முக அழகுதான் எவ்வளவு அற்புதமாக இருக்கிறது! ஒரு புறம் பார்த்தால் பச்சிளம் குழந்தை போல் காட்சி அளிக்கிறாள். மற்றொரு புறம்

பார்க்கையில் விண்ணுலக நங்கை போல் வியப்பை ஏற்படுத்துகிறாள்!

செக்கச் சிவந்த இவளது இதழ்களைப் பார்க்கும் பொழுது, இவளை அப்படியே வாரி எடுத்து அவற்றில் முத்தம் கொடுத்து, முழுவதுமாகப் பற்றிச் சுவைத்து, விழுங்கி விட வேண்டும் போல் தோன்றுகிறதே!

கண்ணாடித் துண்டுகளாகத் தெரியும் இவள் கன்னங்களோடு, கன்னம் சேர்த்து இழைத்தால் என் முகம் வழுக்கிக் கீழே விழுந்து விடுமோ! முயன்று பார்த்தால் என்ன!

சொக்கநாதனின் உடல் ஒரு கணம் சிலிர்த்தது! இவள் அழகு என்னை இப்படிப் பேதலிக்கச் செய்து விட்டதே! தனியாகக் கிடக்கும் ஒரு அபலைப் பெண்ணிடம் தரக்குறைவாக நடக்க முயலும் அளவுக்கு என்னைத் தடுமாற வைத்து விட்டதே!

சொக்கநாதன் அடுத்த வினாடியே தன்னைச் சுதாரித்துக் கொண்டு இளவரசியின் அருகே வந்து மண்டியிட்டு உட்கார்ந்தான். அவளைக் கூர்ந்து பார்த்தான்.

சந்திரவதனாவின் கண்கள் மூடிக் கிடந்தன.

''சந்திரவதனா எழுந்திரு.''

அவள் எழவில்லை.

"சந்திரவதனா! பார்! நமது ஆபத்து விலகி விட்டது. எழுந்து பார்."

அவள் கன்னத்தில் தட்டினான். இடுப்பைப் பிடித்து லேசாக அசைத்துப் பார்த்தான். இளவரசி கண்களைத் திறக்கவில்லை.

சொக்கநாதனின் மனதில் சற்றுப் பயம் எழலாயிற்று! யானையின் மீது இருந்து விழுந்த அதிர்ச்சியில் இவள் உயிர் போயிருக்குமோ!

திகிலுடன் அவளை மறுபடியும் உற்று நோக்கினான் இளவரசி கண்களை மூடி ஒரு குழந்தை தூங்குவதைப் போல் தோற்றம் அளித்தாள். அவள் மூச்சு விடுவதற் கேற்ப, அவளது மார்புகள் ஏறி இறங்கிக் கொண் டிருந்தன.

அவளது மூக்கின் அருகில் விரல்களை வைத்துப் பார்த்தான். லேசான வெப்பக்காற்று அவன் விரல்களில் பட்டது! மற்றொரு பக்கம் வேறு ஒரு ஐயமும் அவனுக்குள் எழுந்தது.

இது இவள் மூக்கில் இருந்து வரும் மூச்சுத்தானா, இல்லை வெளிக்காற்று என் விரல்கள் மீது பட்டதா ?

சொக்கநாதனுக்குப் பதற்றம் ஏற்பட்டது. இந்தப் பேரழகி இறந்து விட்டால், என் இதயமே வெடித்து விடுமே என்பது போன்ற படபடப்பு அவனுக்குள் அதிக மாகியது.

இளவரசி சந்திரவதனா மூச்சு விடுவதற்கேற்ப அவளது இளஞ்செண்டுகள் மார்பில் ஏறி இறங்குவதைக் கூட அவன் கண்கள் கவனிக்கவில்லை. பயம் தந்த படபடப்பில், அவளது இடது புற மார்பில் தலையை வைத்து, தனது காதை அவள் மார்பில் அழுத்திக் கவனமாகக் கேட்டான்.

இதயத் துடிப்பு மெலிதாகக் கேட்கத் தொடங்கியது. அதோடு சேர்ந்து அவன் இதயமும் துடிக்கத் தொடங் கியது.

நல்லவேளை! இவள் உயிர் இன்னும் நீங்கவில்லை! ஆழ்ந்த மயக்கத்தில் இருக்கிறாள்!

மறுகணம் சொக்கநாதனின் மனதில் மகிழ்ச்சிப் பொங்கத் தொடங்கியது. எழுந்து நின்று சுற்று முற்றும் பார்த்தான்.

சற்று தூரத்தில் காட்டுச் சுனை நீர் ஓரிடத்தில் தேங்கிக் கிடப்பது தெரிந்தது. அதனருகே ஏராளமான பறவைகள் வட்டம் அடித்துக் கொண்டிருந்தன.

அவ்வளவு தூரத்தில் இருந்து தண்ணீரை எப்படி எடுத்துக் கொண்டு வருவது? பாத்திரங்களோ, குவளைகளோ இல்லை!

துணியை நனைத்து எடுத்துக் கொண்டு வரலாம். அந்தத் தண்ணீர் போதுமானதாக இல்லாமல் இருந்து இளவரசியின் மயக்கம் தீராமல் இருந்தால், மறுபடியும் சுனையை நோக்கி ஓடவேண்டும்.

இவள் மயக்கத்தைச் சீக்கிரம் தெளிவிக்கவில்லை என்றால் உயிருக்கே ஆபத்தாகக்கூட போய்விடலாம். இவ்வளவு தூரம் இவளைக் காப்பாற்றியும் பலன் இல்லாமல் போய்விடும்.

பயம் மறுபடியும் எழ, சொக்கநாதன் மறுபடியும் இளவரசி சந்திரவதனாவின் மார்பில் தலைசாய்த்து, இதய ஒலியைக் கவனமாகக் கேட்டான். இதயத் துடிப்பு மிகவும் பலவீனமாகக் கேட்கத் தொடங்கியது.

இனித் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் இளவரசிக்கு ஆபத்து என்பதை உணர்ந்த சொக்கநாதன், மண்ணில் படுத்துக்கிடந்த மங்கையின் இடுப்பருகே மண்டியிட்டு அமர்ந்தான்.

முழங்கால்கள் வரை விலகிக் கிடந்த, அவளது வழுவழுப்பான தொடைகளின் நுனிவரை காட்டிக் கொண்டிருந்த அவளது சேலையை இழுத்துக் கால்கள் வரை நன்றாக மூடினான்.

அதன் பிறகு அவள் இடுப்புக்கு கீழாகக் கைகளைக் கொடுத்து, மண்ணில் கிடக்கும் மலர்மாலை ஒன்றைத் தூக்கி எடுப்பது போல் வெகு லாவகமாக, அவன் உடல்

நோகாமல், அப்படியே தூக்கி எடுத்துத் தன் மார்பில் போட்டான்.

அவளது எழிலான சதைப்பிடிப்பான, பந்து போல் திரண்டிருந்த அவளது பின்னழகுகளின் அடிப்புறத்தை அவனுடைய இடதுகை அணைத்துத் தாங்கிக் கொள்ள, அவனது வலது கை அவளது முதுகுப் புறத்தை வளைத்து, அவளது தோள் வரை பதிந்து, அவள் உடலைத் தன்னுடன் இறுக அணைத்துக் கொண்டது.

சந்திரவதனாவின் மார்புகள் சொக்கநாதனின் மார்போடு ஒட்டி, சற்றுப்பிதுங்கி அவன் தோளுக்கு மேல் எட்டிப் பார்க்க, அவளது முகம், சொக்கநாதனின் பிடரிமீது ஒட்டிச் சரிய, அவளது தலைமுடியும் இரண்டு கரங்களும் அவளது முதுகுக்குப் பின்னால் தொங்கிக் கிடந்தன. அவளது இரண்டு கால்களும் தொய்வாக அவனது தொடைகளின் மீது படிந்து கிடந்தன.

இப்படி ஒரு இசகுபிசகான நிலையில் இளவரசி சந்திரவதனாவைத் தூக்கிக் கொண்டு சொக்கநாதன் தூரத்தில் தெரியும் சுனைநீரை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தான்.

அதே நேரம் சொக்கநாதனின் தோழனான வெங்கடகிருஷ்ணன், சொக்கநாதன் விட்டுச் சென்ற குதிரையின் லகானை ஒரு கையால் பிடித்துக் கொண்டு, மற்றொரு கையால் தன்னுடைய குதிரையின் லகானைப் பிடித்துச் செலுத்தி, அவர்கள் இருக்கும் இடத்திற்கு ஓடிவரத் தொடங்கினான்.

அதே சமயத்தில் அச்சுதப்பனைத் தொடர்ந்து ஏராளமான படை வீரர்களும் ஓடி வந்து கொண்டிருந் தார்கள்.

தஞ்சைப் பெருநகரின் மத்தியில் அமைந்திருக்கும் பிரகதீஸ்வரர் கோயில் என்று அழைக்கப்பட்ட பெருவுடையார் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் பவழவீதிக்குள் இளவரசன் மன்னார்தாசன் குதிரை மேல் அமர்ந்தவாறு நுழையும் பொழுது இளங் காலையின் முதல் ஜாமம் முடியும் தறுவாயில் இருந்தது.

சோழப் பேரரசன் இராச இராசன் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டி முடித்தவுடன், கோயிலுக்குள் இறைப் பணி செய்யும் பொருட்டு, சோழ மண்டலத்திலிருந்த பல கோயில்களைச் சேர்ந்த பெண்கள் தஞ்சாவூருக்குக் கொண்டு வரப்பட்டு, அவர்கள் வசிப்பதற்காகத் தனியாக வீதி ஒன்றை உருவாக்கி, அதனைத் தளிச்சேரி என்று பெயர் சூட்டப்பட்ட அந்த வீதி காலமாற்றத்தினால் இப்பொழுது பவழவீதி என்று அழைக்கப்பட்டு வந்தது.

கணிகையர் என்றும் தாசியர் என்றும் வேசியர் என்றும் விலை மகளிர் என்றும் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழ்நிலைகளில் அழைக்கப்பட்டுப் பழிக்கப் பட்டும் வந்த தேவரடியார்கள் குடி இருக்கும் இந்த வீதி, பொழுது புலர்ந்து ஒரு ஜாமம் முடியப் போகும் இந்த நேரத்தில் கூட மந்தமாக, சுறுசுறுப்பின்றிக் காணப் பட்டது.

பவழவீதியின் ஆரம்பத்தில் சற்று எடுப்பாக, மற்ற வீடுகளைவிட உயரமாக, சுதை வேலைப்பாடுகளுடன்

அமைந்திருந்தது கலிதாயினி ரங்காஜம்மாவின் மாளிகை. அதன் வாயிலருகே இளவரசன் மன்னார்தாசன் குதிரை வந்து நின்றதும், அந்த வீதியே பரபரப்பு அடையத் தொடங்கியது.

பவழவீதியில் உள்ள இளம் பெண்கள் அனைவரும் சேதி தெரிந்து வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தார்கள். சிலர் அவசர வேலையாகச் செல்வது போன்ற பாவனையில் இளவரசனை நோக்கிப் பார்வையை வீசியவாறு வீதியில் வேகவேகமாகச் சென்றனர். மன்னார்தாசனின் கண்வீச்சு தங்கள் மேல் படாதா என்ற ஏக்கம் அவர்கள் முகங்களில் தென்பட்டன.

இவர்கள் செயல்கள் அனைத்தையும் உணர்ந்திருந்த இளவரசன் எவரையுமே ஏறிட்டுப் பார்க்காது, தனது குதிரையில் இருந்து கீழே குதித்து இறங்கினான். அவன் படித்திருந்த தமிழ் உலாப் பிரபந்தங்களில் மன்னனைப் பார்த்துப் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்று ஏழு பருவ மகளிரும் மையலுற்ற காட்சிதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

மனதுக்குள் சிரித்தவாறு ரங்காஜம்மாவின் மாளிகைக் குள் காலடி எடுத்து வைத்தான். இளவரசனைப் பார்த்ததும் ரங்காஜம்மா மகிழ்ச்சியுடன் அவனை எதிர் கொண்டு வரவேற்றாள்.

''நீண்ட நேரமாகக் காத்திருக்கிறீர்களா அன்னையே? இரண்டு நாழிகை நேரம் தாமதமாகி விட்டது. மன்னியுங்கள்,'' என்றவாறு அவளது காலடியில் விழுந்து வணங்கினான்.

ரங்காஜம்மா அவன் தோளைத் தொட்டுத் தூக்கி நிறுத்தி, உச்சந் தலையில் பாசத்துடன் முத்தமிட்டாள்.

"மைந்தன் வரவிற்காக எவ்வளவு நேரம் காத்திருந்தாலும் தாய்க்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கும் மன்னார்தாசா !"

இருவரும் மெதுவாக நடந்து விசாலமான ஒரு அறைக்குள் வந்து, அங்கிருந்த ஆசனங்களில் எதிர் எதிரே உட்கார்ந்தனர். பணிப்பெண் ஒருத்தி தோலும், விதைகளும் நீக்கப்பட்டுப் பதமாக வெட்டி வைக்கப் பட்டிருந்த பல்வேறு பழத்துண்டுகள் நிறைந்த குவளையையும், பானகங்கள் அடங்கிய பாத்திரங்களையும் கொண்டு வந்து அவர்கள் முன்னே வைத்துவிட்டு நகர்ந்தாள்.

கவிதாயினி ரங்காஜம்மாவிற்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும். அலைஅலையாகச் சுருண்ட கூந்தலில் ஆங்காங்கே கொத்துக் கொத்தாக நரைத்திருந்தது. அந்த வயதில் கூட அவள் முகம் மிக அழகாகக் காட்சி அளித்தது.

எளிமையான ஆடையையும், கழுத்தில் ஒரே ஒரு இரத்தின மாலையையும் தரித்திருந்தாள். ஒரே நேரத்தில் நூறு கவிதைகளை எளிதாக இயற்ற வல்லவள் என்பதற்காகச் சதவேஹினி என்ற பட்டம் பெற்றவளும், கவிச் சிறப்பிற்காகத் தன் தந்தையால் கனகாபிஷேகம் செய்யப் பட்டவளுமான ரங்காஜம்மா கர்வமின்றி எவ்வளவு எளிமையாக இருக்கிறார் என்று மன்னார்தாசன் அவளைப் பார்த்து மனதிற்குள் பெருமை அடைந்தான்.

"என்ன மன்னார்தாசா, என்ன முடிவு எடுத்திருக்கிறாய்? காவியம் இயற்றப் போகிறாயா; இல்லை நாடகம் எழுதப் போகிறாயா?' என்றாள் ரங்காஜம்மா.

"இன்னும் என்னால் ஒருமுடிவுக்கும் வர இயலவில்லை அன்னையே! எனது தாத்தா ரகுநாத நாயக்கனைக் காவிய நாயகனாக வைத்து ராமபத்ராம்பா என்ற

கவிதாயினி எழுதிய 'ரகுநாதப் யுதயம்' போன்று எனது தந்தை விஜயராகவ நாயக்கனைக் காவிய நாயகனாக வைத்து 'விஜயராகவாப்யுதயம்' என்று ஒரு காவியம் படைக்கலாமா என்ற எண்ணமும் இருக்கிறது அதற்கு முன்பு 'ஹேமாப்ஜ நாயிக சுயம்வர நாடகம்' என்று ஒரு நாடகம் இயற்றிப் பார்க்கலாமா என்ற ஆசையும் மனதில் எழுகிறது. இந்தக் குழப்பத்திலேயே நாட்கள் கடந்து கொண்டு செல்கின்றன."

"இதில் என்ன குழப்பம்? இரண்டுமே நல்ல எண்ணங்கள்தான். இதில் எதை முதலில் எழுதப் போகிறாய்?"

"அதில்தான் குழப்பம் அன்னையே! முதலில் காவியம் எழுதும் எண்ணமே இருக்கிறது. அதற்கு என்னை முற்றிலும் தகுதியுள்ளவனாக ஆக்கிக்கொள்ள வேண்டாமா? தங்களது மன்னாருதாச விலாசத்தையும், உஷா பரிணயத்தையும் படித்துப் படித்து உவந்தேன். என்ன அற்புதமாக எழுதியிருக்கிறீர்கள்! அதைப் போன்று என் கவித்திறனையும் வளர்த்துக் கொண்ட பிறகு காவியம் படைக்கலாமே என்று நினைக்கிறேன்."

"உனது கவித்திறனைப் பற்றி நீயே ஏன் குறைவாக மதிக்கிறாய்? நீ எழுதிய கவிதைகளை என்னிடம் காட்டியதை மறந்து விட்டாயா? கவிச்சிறப்பும் பொருட் செறிவும் நன்றாகவே கலந்திருக்கின்றன. அதுபோதும் உன் காவியம் நிச்சயம் சிறப்பாக அமையும்."

"இருந்தாலும் தங்களிடம் இன்னும் நிறையக் கற்றுக் கொண்ட பிறகு ஆரம்பிக்கலாம் என்று இருக்கிறேன்."

"எனக்குத் தெரிந்ததை எல்லாம் உனக்குக் கற்றுத் தந்துவிட்டேன் மகனே. இனி உனது ஆர்வம், முயற்சி இவற்றால் அறிந்து கொள்ள வேண்டியதுதான்.

தெலுங்கு மொழியில் ஆரம்பகால இலக்கியங்களைக் கற்றுக்கொள். அது உன் கவித்திறனைச் செம்மைப்படுத்த உதவும்."

"அந்த இலக்கியங்களைப் பற்றி நானும் ஓரளவு விஜயநகரத்தில் இருக்கும்பொழுதே கற்று இருக்கிறேன். இதில் எவை சிறப்பாக இருக்கும் என்று தங்களிடமும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன் அன்னையே!'

''தெலுங்கு மட்டுமின்றி தமிழ், சமஸ்கிருத இலக்கியங்களையும் கற்றுக் கொள் மகனே! அவற்றில் அளப்பரிய கவிச்சுவைகள் நிறைந்து இருக்கின்றன. தமிழில் உள்ள ஐம்பெருங் காவியங்கள் அற்புதமானவை.''

"அதனைப் போன்று தெலுங்கிலும் பஞ்சகாவியங்கள் இருப்பதாக எனக்குச் சொல்லி இருக்கிறார்கள்."

"ஆம் மைந்தா! அல்லசானி பெத்தன்னாவின் 'மனுச்சரித்திரம்'. பட்டு மூர்த்தின்னு சொல்றாங்களே அவரோட 'வசு சரித்திரம்' விஜயநகரப் பேரரசர் கிருஷ்ண தேவராயரின் 'ஆமுக்த மால்யத்', நந்தி திம்மன்னாவின் 'பாரிஜாத பஹரணம்', ஸ்ரீநாதர் இயற்றிய 'சிருங்கார நைஷதம்' என்ற இந்த ஐந்து நூல் களைத்தான் தெலுங்கு இலக்கியத்தில் உள்ள பஞ்ச காவியங்கள் என்று சொல்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பான காவியங்கள் என்பதில் ஐயமே இல்லை.''

"எனக்கு நீண்ட நாட்களாக ஒரு ஐயம் இருக்கிறது அன்னையே! அதனைப் பற்றித் தங்களிடம் கேட்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.''

"கேள் மகனே!"

''ஆமுக்த மால்யத'வை இயற்றியது கிருஷ்ண தேவராயர் இல்லை அவரது அவைக்களப் புலவரான அல்லசானி பெத்தன்னாதான் அதனை இயற்றியது என்று

சொல்கிறார்களே! அதனைப் பற்றித் தங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

இந்தக் கேள்விக்கு ரங்காஜம்மா பதில் சொல்வதற்காக வாயைத் திறந்த வேளையில் பணிப்பெண் ஒருத்தி அங்கு விரைந்து வந்தாள்.

''அம்மா, நமது அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் மகள் மதுரவாணி அம்மையார் தங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். முன்னறையில் அமர வைத்திருக்கிறேன்!" என்றாள்.

''மதுரவாணியா இங்கு என்னைத் தேடி வந்திருக்கிறாள்? அவளை உடனே இங்கு அழைத்து வா!" என்று மகிழ்ச்சியுடன் கட்டளை இட்டாள் ரங்காஜம்மா.

இதனைக் கேட்டவுடன் இளவரசன் மன்னார்தாசனின் முகத்தில் மாற்றம் தெரிந்தது. சற்று நேரம் எதையோ யோசித்தான்

பிறகு ஒரு முடிவுடன், ''அப்படியானால் நான் கிளம்புகிறேன் அன்னையே! பிறிதொருநாள் இதனைப் பற்றிப் பேசலாம்,'' என்றவாறு எழுந்து நின்றான்.

இளவரசி சந்திரவதனாவைத் தூக்கித் தன்னுடைய மார்போடு ஒரு பூமாலையைப் போலப் போட்டுக் கொண்டு சொக்கநாதன் தூரத்தில் தெரியும் சுனை நீரை நோக்கி ஓடத் தொடங்கினான்.

மயங்கிக் கிடந்த இளவரசியின் மொத்த உருவத்தையும் சுமந்து கொண்டு ஓடுவதற்கு அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அவளது திரண்ட பின்னழகுகளை அவனது இடக்கை தாங்கிக் கொள்ள, வலக்கையால் அவள் முதுகை வளைத்துப் பிடித்துத் தன் மார்போடு இறுக அணைத்துக் கொண்டிருந்த போதிலும், அவள்

அவன் உடல்மீது கிடந்த நிலை அவனது ஓட்டத்தை வெகுவாக தடை செய்தது.

சந்திரவதனாவின் கால்கள் இரண்டும் தொய்வாகத் தொங்கி அவன் ஓடும்பொழுது அவனது முழங்கால்களி லும், தொடைகளிலும் முட்டிக் கொண்டிருந்தன. அவள் முதுகை ஒட்டிச் சரிந்து விழுந்து கிடந்த கைகள் வேறு அவன் ஓடும்பொழுதெல்லாம் அவனது இடுப்பினை உரசி உரசி தர்ம சங்கடத்தை ஏற்படுத்தின.

இளவரசி அணிந்திருந்த விலையுயர்ந்த சீனத்துப் பட்டுப் புடவை அவன் கைகளை வழுக்கி, சந்திரவதனா வின் உடலை அவன் மார்பில் இருந்து கீழே இறக்கிக் கொண்டிருந்தது. இதனால் அவளது உடலை மறுபடியும் சரியான நிலையில் கிடத்துவதற்காக அவன், தனது ஓட்டத்தை நிறுத்தி, அவளது பின்னழகைப் பற்றி மறுபடி உயர்த்தித் தனது கையில் தாங்கி, அவள் முதுகை மறு கையால் பற்றி அவளது முன்னழகுகளைத் தன் தோளில் நிலைநிறுத்திக் கொண்டு, மீண்டும் ஓட வேண்டிய தாயிற்று.

இதனால் அவளது முன்னழகுகள் அவன் முகத்தில் மோதிப் பிறகு தோளில் அழுந்தப் பதிந்தது அவனுக்கு சங்கடமாக இருந்தது. அந்தச் சமயத்தில் அவளது உதடு கள் சொக்கநாதனின் காது மடல்களில் ஒத்தி அப்படியே இறங்கி, அவனது பிடரிப்பக்கம் வழித்துக் கொண்டு விழுவது வேறு அவனுக்குள் குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

இவ்வளவு சங்கடங்களையும் சமாளித்துக் கொண்டு சொக்கநாதன் ஒருவழியாகச் சுனைநீர் தேங்கிக் கிடக்கும் இடத்தருகே வந்து சேர்ந்தான்.

சுனைநீரின் கரையில் இருந்த புல்மேட்டில் இளவர சியை பத்திரமாக, மெதுவாக இறக்கிப் படுக்க வைத் தான். இளவரசியின் ஆடைகள் கலைந்து, அவளது

தொடைவரை விலகி இருந்ததை எடுத்துச் சரி செய்து, பாதங்கள் வரை மூடினான்.

மார்புச் சேலை முற்றிலுமாக விலகி, இரண்டு மார்பு களும் அண்ணாந்து நின்று சொக்கநாதனை ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன. அவள் அணிந்திருந்த பட்டு ரவிக்கை பகலவன் ஒளியில் பளபளத்து இரண்டு சிறிய வெண்ணைக் குன்றுகள், தங்கத் தட்டில் வைக்கப்பட்டிருந் ததைப் போல மின்னிக் கொண்டிருந்தன.

சொக்கநாதனைப் பார்த்து ஏக்கத்தில் எங்கே உருகிப் போய்விடுமோ என்பது போன்று, அந்த வெண்ணைக் குன்றுகள் பெருமூச்சு விட்டவாறு ஏறி இறங்கிக் கொண் டிருந்தன.

சொக்கநாதன் ஒருகணம் அந்த அழகுகளைத் தர்ம சங்கடத்துடன் பார்த்துவிட்டுப் பிறகு அவளது சேலைத் தலைப்பை எடுத்து அவளது முன்னழகுகளை நன்றாக மூடினான்.

பிறகு அவசரமாகச் சுனைநீருக்குள் இறங்கி, கைகளைக் கூப்பி நீரைச் சுமந்து வந்து சந்திரவதனாவின் முகத்தில் கொட்டினான் இப்படி நாலைந்து முறை செய்த பிறகு இளவரசிக்குக் கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் தெளிய ஆரம்பித்தது.

மெதுவாக கண்களைத் திறந்து பார்த்தாள்.

"சந்திரவதனா, மெதுவாக... மெதுவாக... எழுந்து உட்கார். உனக்கு ஒரு ஆபத்தும் இல்லை," என்றவாறு அவள் முகத்தில் படிந்த ஈரத்தைத் தனது மார்பில் இருந்த துணியால் துடைத்தவாறு சொன்னான் சொக்கநாதன்.

அவனை மலங்க மலங்கப் பார்த்தவாறு மெதுவாக எழுந்து உட்கார முயன்றாள் இளவரசி. மயக்கம் தெளிந்

திருந்தாலும், அயர்ச்சி அதிகமாக இருந்ததால் உட்கார முடியாமல், அவன் மார்பில் அப்படியே சரிந்தாள்.

அதே நேரம் சொக்கநாதனின் நண்பனான வெங்கட கிருஷ்ணன், இரண்டு குதிரைகளையும் நடத்திக் கொண்டு அவர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தான்.

"சொக்க..." என்று ஆரம்பித்தவனைப் பார்த்து 'உம்' என்று வாயில் விரலை வைத்து எச்சரித்த சொக்க நாதனின் சைகையைப் புரிந்து கொண்ட வெங்கட கிருஷ்ணன், உடனே சுதாரித்துக் கொண்டு...

"என்ன முத்து, இளவரசிக்கு என்ன ஆயிற்று?" என்றான்.

"யானை மீது இருந்த அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டாள்," என்றான் சொக்கநாதன், தன் மார்பில் விழுந்த இளவரசியை மறுபடி மண்ணில், படுக்க வைத்தவாறு.

"உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே? முகத்தில் தண்ணீர் தெளித்தாயா? இன்னும் ஏன் இப்படிக் கண்ணை மூடிக் கிடக்கிறாள்?"

"அயர்ச்சியாக இருப்பாள் என்று நினைக்கிறேன். ஒரு தேக்கு இலையைப் பறித்துக் குவளையாக்கி அதில் நீரைக் கொண்டு வா முருகா."

வெங்கடகிருஷ்ணன் மறுவினாடியே ஓடிப்போய் தேக்கு இலையில் நீரைக் கொண்டு வந்து கொடுத்தான் சொக்கநாதன் அதனை வாங்கி, இளவரசியின் தலையைத் தூக்கித் தனது மார்போடு சாய்த்துக் கொண்டு, நீரை வாய்க்குள் புகட்டினான்.

கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீர் அவள் வாய்க்குள் இறங்கியது. இளவரசி மெதுவாகக் கண் விழிக்கத் தொடங்கினாள்.

சொக்கநாதன் அவள் வாயைத் துடைத்து, அவளது இரு கன்னங்களையும் மெதுவாகத் தட்டினான்.

"சந்திரவதனா, சந்திரவதனா... பார்... இப்பொழுது எப்படி இருக்கிறது... உனக்கு ஒரு ஆபத்தும் இல்லை... இன்னும் கொஞ்சம் தண்ணீர் குடிக்கிறாயா ?"

இளவரசி அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள். தன்னைக் காப்பாற்றியவன் மார்பில் தான் சாய்ந்து கிடப்பதை உணர்ந்து, மெதுவாக நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"ரொம்ப நன்றி... நீங்கள்... யார்?" பேசுவதற்கே அவளுக்குச் சிரமமாக இருந்தது.

"நாங்கள் யார் என்பதை அப்புறம் சொல்கிறோம். இப்பொழுது உனக்கு எப்படி இருக்கிறது? மெதுவாக எழுந்து நில் !"

சந்திரவதனா மெதுவாக எழுந்து நின்றாள். தன் சேலைத் தலைப்பு நன்றாக மூடப்பட்டிருக்கிறதா என்று அந்த நிலைமையிலும் சரிபார்த்துக் கொண்டாள்.

எழுந்து நிற்கும்பொழுது மறுபடியும் தலை சுற்றியது.

"இல்லை... மயக்கமா..." என்றவாறு அருகில் இருந்த சொக்கநாதன் தோள்மீது சரிந்தாள். அவள் கண்கள் மறுபடியும் மூடிக் கொண்டன.

சந்திரவதனாவின் நிலைமையை உணர்ந்து கொண்ட சொக்கநாதன் தனது நண்பனைப் பார்த்தான். பிறகு சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் முகம் மலர ஆரம்பித்தது.

வெங்கடகிருஷ்ணன் சொக்கநாதனின் அருகே நெருங்கி அவன் காதோடு வாய் வைத்துச் சன்னமான குரலில் சொன்னான்

"சொக்கநாதா, இளவரசியின் உயிருக்கு ஒன்றும் ஆபத்து இல்லை. வெறும் மயக்கமும், அதிர்ச்சியும் தான் இதுதான் சரியான தருணம். அதோ தூரத்தில் கேட்கும் ஓசையை எண்ணிப் பார். தஞ்சைப் படைகள் இளவரசியைத் தேடி ஓடி வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் வருவதற்குள் முடிவு எடுக்க வேண்டும்."

"என்ன முடிவு?"

"விஜயராகவநாயக்கனுக்கு விருப்பமான பொருள் அவனது மகளான இந்தச் சந்திரவதனாதான். இவளை இப்பொழுதே, இப்படியே மதுரைக்குக் கடத்திச் சென்று விடலாம். இதைவிட்டால் சரியான வாய்ப்பு நமக்குக் கிடைக்காது. உம். சீக்கிரம், குதிரைகள் தயாராக இருக்கின்றன. இளவரசியைத் தூக்கிக் கொண்டு குதிரையில் ஏறு. மதுரைக்குச் சென்ற பிறகு இவளது மயக்கத்தைத் தெளிய வைத்துக் கொள்ளலாம். தாமதம் செய்யாதே!'

இதைக் கேட்ட சொக்கநாதன் ஏறிட்டுப்பார்த்தான். வெகுதூரத்தில் தஞ்சைப் படைகள் ஓடி வருவது தெரிந்தது அவன் முகம் மாறியது.

அதே நேரம் அவன் தாய் வையாம்பிகாதேவி அனுப்பி வைத்த ஓலையுடன் ஒற்றர் தலைவனான அழகப்ப நாயக்கன் திருச்சிராப்பள்ளியை நெருங்கிக் கொண்டிருந்தான்.

40

அமைச்சர் கோவிந்த திட்சிதரின் மகள் மதுரவாணி கவிதாயினி ரங்காஜம்மாவைத் தேடி வந்திருக்கிறாள்

என்று பணிப்பெண் சொன்ன செய்தியைக் கேள்விப் பட்டதும், இளவரசன் மன்னார்தாசனின் முகம் மாறியது.

தான் முதன் முதலாகத் தஞ்சை மண்ணில் காலடி வைத்ததும் நடந்த வரவேற்பு விழாவில் அவனுக்கு ஆரத்தி எடுத்து, வெற்றித்திலகம் இட்டபொழுது அவள் கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

'என்னை மறந்து விட்டீர்களா இளவரசே!'

அப்பொழுது அவளைப் பார்த்ததும், அதன்பிறகு அரண்மனைக்குள் நுழையும் பொழுது அவளை நலம் விசாரித்ததும் நினைவுக்கு வந்தன. அதன்பிறகு அவளை அவன் பார்க்கவில்லை. அவளைப் பற்றிய நினைவுகளை யும் அவன் அடியோடு மறந்து விட்டிருந்தான்.

இப்பொழுது மதுரவாணி எதற்காக ரங்காஜம்மா வைத் தேடி வந்திருக்கிறாள்?

சற்று நேரம் ஆழ்ந்து யோசித்தான். பிறகு ஒரு முடிவு டன் எழுந்து நின்றான்.

"அப்படியானால் நான் கிளம்புகிறேன் அன்னையே! பிறிதொருநாள் இதனைப் பற்றிப் பேசலாம்," என்று ரங்காஜம்மாவைப் பார்த்துப் பணிவுடன் கூறியவாறு கிளம்புவதற்கு முயன்றான்.

"இரு மகனே! எதற்கு அவசரப்படுகிறாய்? இப்பொழுது தானே ஏதோ ஒரு சந்தேகம் கேட்டாய்! அதைத் தெளிவு படுத்துவதற்குள் அப்படி என்ன அவசரம்?"

'அமைச்சர் மகள் தங்களைப் பார்ப்பதற்காக வந் திருக்கிறாள். தாங்கள் இருவரும் பேசுவதற்கு நான் இடையூறாக இருக்க வேண்டாம் என்று எண்ணுகிறேன்."

'இடையூறா?... நீயா?...'' கல கல என்று சிரித்த ரங்காஜம்மா, "நாங்கள் இருவரும் நமது நாட்டின் அரசியலைப்பற்றியா பேசப்போகிறோம். நீ இடையூறாக இருப்பதற்கு? இல்லை அடுக்களைக் காரியங்கள் பற்றி அலசப் போகிறோமா, நீ தர்ம சங்கடப்படுவதற்கு? மதுரவாணி இங்கு எதற்காக வந்திருக்கிறாள் தெரியுமா?" என்றாள்.

''எதற்கு?''

''அவள் பாகவதம் படிக்கிறாளாம். அதில் தத்துவார்த்தமான சில நுணுக்கங்கள் அவளுக்குப் புரிபடவில்லையாம். அதனை என்னிடம் கற்றுணர்ந்து கொள்ள ஆசைப்படுகிறாள் என்று அமைச்சர் நேற்றே எனக்குச் சேதி அனுப்பி இருந்தார்."

''அப்படியா!" என்றான் வியப்புடன்.

''மதுரவாணி மிகவும் புத்திசாலிப் பெண். பரத நாட்டியம் முறைப்படி கற்றுக் கொண்டிருக்கிறாள். கர்நாடக இசையிலும் அவளுக்கு நல்ல தேர்ச்சி உண்டு. மணியின் நாதம்போல அற்புதமான குரல் வளம். அமைச்சர் கோவிந்த தீட்சிதரின் பெண் அல்லவா! அந்தப் பரம்பரைக்கே உரிய கல்வி ஞானம் எப்படி இல்லாமல் போகும்? இந்த இளம் வயதில் பாகவதமும், பகவத்கீதையும் படிக்கிறாள் என்றால் அது அவளுக்குப் பரம்பரையாக வந்த ஞானம் என்றுதான் சொல்ல வேண்டும்."

இது மன்னார்தாசனுக்கு வியப்பு ஒன்றையும் ஏற்படுத்தவில்லை. இளம் வயதிலேயே அவளது புத்திசாலித்தனத்தையும், சாதுர்யத்தையும் பார்த்தவன்தானே!

ரங்காஜம்மா பேசி முடிக்கும் வேளையில் மதுரவாணி அவர்கள் இருக்கும் அறைக்குள் நுழைந்து கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்ததுமே. இளவரசன் அங்கு இருப்பதைத்தான் அவள் கண்கள் முதலில் கவனித்தன. மறு வினாடியே அவள் மனம் மட்டற்ற மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்துக் கூத்தாடியது.

ரங்காஜம்மாவும் அவனும் நின்றபடியே அளவளாவிக் கொண்டிருந்ததால் அவனது கம்பீரமான உருவம் அவள் இதயத்தைச் சிலிர்க்கச் செய்தது.

நான் எதிர் பார்த்தபடியே இளவரசர் இருக்கிறார். இனி இருவருடன் பேசி மகிழலாம் என்று பூரிப்பு எழ அவள முகம் இன்னும் சிவந்தது. அவன் அழகை அருகில் சென்று, அவனருகில் நின்று ஆசை தீரப் பருக வேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தாலும், ரங்காஜம்மா அங்கு இருக்கும் பொழுது ஆடவன் மேல் முழுப் பார்வையைச் செலுத்தி வருவதற்கும் அச்சமாக இருந்தது.

அதனால் உள்ளே நுழைந்து இளவரசன மன்னார் தாசனைப் பார்த்த மறுவிநாடியே அவள் கண்கள் ரங்காஜம்மா மீது திளைத்தபடி, அங்கு அவளைத் தவிர யாருமே இல்லாதது போல் ஒயிலாக நடந்து உள்ளே நுழைந்தாள். அதே நேரம் இளவரசன் தன்னைக் கவனிக்கிறானா அவன் முகத்தில் என்ன மாற்றம் தெரிகிறது என்று அவளது ஓரக்கண்கள் கவனிக்கவும் செய்தன.

இளவரசன் மன்னார்தாசனுக்கு மதுரவாணியைப் பார்த்ததும் முதலில் சற்று வியப்புத் தட்டுப்பட்டது. அன்று அவனுக்கான வரவேற்பு விழாவில் அவளைக் கூட்டத்தோடு பார்த்தவன், இன்று தன் கண் எதிரே தங்கள் அருகில் தனியாக அவள் நடந்து வரும்பொழுது அவளது முழு உருவமும் அவன் கண்களில் பதிந்தது.

இளம் வயதில் பார்த்ததற்கும் இப்பொழுது இவளைப் பார்ப்பதற்கும் எவ்வளவு வேறுபாடு !

முகத்தில் மட்டும் இன்னும் அதே குழந்தைத்தனம்! கல்வி கற்கும் பொழுது கிள்ளி விளையாடிய அந்த நிகழ்ச்சி அவனுக்குள் நிழலாடியது.

மதுரவாணி அன்றைய பொழுது புலர்ந்ததில் இருந்து ஆடை அலங்காரத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தி, ஒவ்வொன்றையும் தேர்ந்து எடுத்திருந்தபடியால் அவள் அழகு நன்றாக மிளிர்ந்து கொண்டிருந்தது.

எவ்வளவு உயரமாக, கோயில் சிலையைப் போல எழிலுடன் இருக்கிறாள் என்று நினைத்தான் மன்னார் தாசன்.

மதுரவாணி மிக ஒயிலாக, இளவரசன் தன்னை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை ஓரக்கண்ணால் உணர்ந்த காரணத்தினால் இடை எழிலாக அசைய, அவள் காலில் அணிந்திருந்த நூபுரங்கள் அவளது இதயத் துடிப்பைப் போல் 'ஜல் ஜல்' என்று ஒலிக்க, நாட்டியத் தாரகை போல் நளினமாக நடந்து ரங்காஜம்மா அருகில் வந்தாள். மன்னார் தாசனின் பக்கமே அவள் கண்கள் பதியவில்லை.

"வாடி பெண்ணே மதுரவாணி!" என்று மலர்ச்சியுடன் வரவேற்றாள் ரங்காஜம்மா.

மதுரவாணி அவளருகில் வந்தவுடன் "அன்னையின் பாதாரவிந்தங்களில் அடியவளின் பணிவான நமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கிறேன்," என்று ரங்காஜம்மாவின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

"வாழ்க பல்லாண்டு! உன் மனம் போல் மாங்கல்யம் கிட்டுவதற்கு மகேஸ்வரன் அருள் பாலிக்கட்டும்"! என்று வாழ்த்தியபடி ரங்காஜம்மா தனது கால்களில் விழுந்து வணங்கிய மதுரவாணியின் தோள்களைப் பற்றித் தூக்கி, உச்சந்தலையில் முத்தமிட்டாள்.

அடுத்த விநாடி மதுரவாணி அருகில் நிற்கும் இளவரசனை ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்கள் வியப்பில் விரிந்தன.

"இளவரசரா இங்கு நிற்கிறார்? நான் இத்தனை நேரம் கவனிக்கவே இல்லையே! இந்நாட்டின் இளவரசருக்கு இந்தச் சிறியவளின் பணிவான வணக்கங்கள்!" என்று மிகுந்த ஆச்சர்யத்தை முகத்தில் தேக்கிக் கண்கள் விரிய. இதழ்கள் புன்னகைக்க கைகளை கூப்பினாள்.

"வணக்கம்" என்று ஒற்றை வார்த்தையை மட்டும் மெதுவான குரலில் கூறியவாறு கும்பிட்டான். மன்னார்தாசன்.

"இந்நாட்டின் பெருமைக்குரிய இளவரசரை இவ்வளவு அருகில் பார்க்கும் வாய்ப்பு கிட்டியதற்கு இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். தாங்கள் பேசுவதற்கு இடையூறாக வந்து விட்டேனா? போய் விட்டுப் பிறிதொரு நாள் வரட்டுமா?"

"நன்றாக இருக்கிறது. நீ வருவது தெரிந்ததும், பெண்கள் பேசுவதற்கு இடையூறாக இருக்க வேண்டாம் என்று என் மைந்தன் கிளம்புகிறேன் என்று எழுந்தான். இப்பொழுது இளவரசனைப் பார்த்ததும் நீ கிளம்ப நினைக்கிறாய்! நீங்கள் இருவருமே இங்கு இருக்கலாம். மதுரவாணி! மைந்தா, இன்னும் ஏன் தயக்கம்? உட்கார்."

மதுரவாணியும், ரங்காஜம்மாவும் அருகருகில் இருக்கும் ஆசனங்களில் உட்கார்ந்து கொள்ள, மன்னார்தாசன் அவர்களுக்கு எதிரில் ஆசனத்தில் அமர்ந்தான்.

ரங்காஜம்மா மதுரவாணிக்காக கொஞ்சம் பழங்களும், பானகமும் கொண்டு வரச் சொல்வதற்காகப் பணிப்பெண்ணை அழைத்தாள் அடுத்த அறையில் இருந்த பணிப்பெண்ணின் காதில் அவள் அழைத்தது விழவில்லை. எனவே ரங்காஜம்மா எழுந்து செல்லத் தொடங்கினாள்.

இந்தச் சந்தர்ப்பத்தை உணர்ந்த மதுரவாணி, ரங்காஜம்மா அந்த அறையைக் கடந்ததும், இளவரசனைப் பார்த்து அவசரமாகக் கேட்டாள்.

''இளவரசருக்கு என்மீது ஏதாவது கோபமா? நான் வருவது தெரிந்ததும் கிளம்புவதற்கு யத்தனித்தீர்களாமே? என்னைப் பார்ப்பதற்குத் தங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

இதைக் கேட்டவுடன் மன்னார்தாசன் சற்றுத் தடுமாறி, ''அப்படி எல்லாம் இல்லை மதுரவாணி. நான் வந்து நீண்ட நேரம் ஆகிவிட்டது. எனக்கு வேறு சில அலுவல்கள் இருக்கின்றன. அதனால்தான்..." என்றவாறு இழுத்தான்.

''மிகச் சிறிய வயதில் நாம் இருவரும் என் தந்தையிடம் ஒன்றாகக் கல்வி பயின்று இருக்கிறோம். நான் தவறாது நாம் இருவரும் சேர்ந்து எத்தனையோ விளையாட்டுகள் விளையாடி இருக்கிறோம். அதன் பிறகு தாங்கள் பிரிந்து சென்று பல வருடங்கள் வெளிநாட்டில் இருந்திருக்கிறீர்கள். இத்தனை ஆண்டுகள் கழித்து வந்த பிறகு என்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இல்லையா? நான் இங்கு வருகிறேன் என்று

தெரிந்த பிறகும் என்னிடம் பேசுவதற்கு உங்களுக்கு விருப்பம் இல்லையா ? என்னைப்பார்க்காமல், என்னுடன் பேசாமல் இங்கிருந்து போகும் அளவுக்கு நான் அப்படி என்ன குற்றம் செய்து விட்டேன் இளவரசே ?" என்று மன்றாடும் குரலில் கேட்டாள் மதுரவாணி.

மன்னார்தாசன் இன்னும் தடுமாறினான். "நீ நினைப்பது போல் இல்லை மதுரவாணி. நான்... வந்து..."

"என்ன மதுரவாணி, இளவரசன் என்ன சொல்கிறான் ?" என்று கேட்டவாறு உள்ளே நுழைந்தாள் ரங்காஜம்மா. அவளைத் தொடர்ந்து பழம், பானகம் அடங்கிய குவளைகளைச் சுமந்தவாறு வந்த பணிப் பெண் அவற்றை மன்னார்தாசன் எதிரில் இருந்த ஆசனத்தில் வைத்து விட்டு வேகமாக அகன்றாள்.

"இளவரசர் தங்களிடம் என்ன கற்றுக் கொள்ள வந்திருக்கிறார் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். இளம் வயதில் இங்கு கற்றுக் கொண்ட விஷயங்கள், இத்தனை காலம் வெளி நாடுகளில் இருந்ததால் மறந்து போய்விட்டதா என்று கேட்டுக் கொண்டிருந்தேன்," என்றாள் மதுரவாணி சாதுர்யமாக மன்னார்தாசனைப் பார்த்தவாறு.

"என் மைந்தன் அவ்வளவு மந்த புத்தி உடையவன் என்றா நினைத்தாய் ? எதையும் அவ்வளவு சீக்கிரம் மறக்க மாட்டான். உன்னைப் போலவே அவனும் மகா புத்திசாலி ! காவியம் ஒன்றை இயற்ற நினைத்திருக் கிறான். அதற்கு முன் பழைய இலக்கியங்களை முற்றும்

உணர்ந்து கொள்வதற்காக என்னைத் தேடி வந்திருக்கிறான்."

"நான் கிளம்பட்டுமா அன்னையே? எனக்கு வேறு சில அலுவல்கள் காத்திருக்கின்றன," என்றவாறு மறுபடியும் எழுந்தான் மன்னார்தாசன்.

"இரு மைந்தா! ஏதோ ஒரு ஐயம் கேட்டாயே... ஆம்... ஆமுக்தமால்யத இயற்றியது யார் என்று! அதனைத் தெளிவுபடுத்திய பிறகு நீ செல்லலாம்."

மன்னார்தாசன் மறுபடியும் உட்கார்ந்தான். மதுரவாணியின் மனம் லேசாக வருத்தமடையத் தொடங்கியது.

"ஆமுக்தமால்யதவை ஸ்ரீகிருஷ்ண தேவராயர் இயற்றவில்லை. அவரது அவைக்களப் புலவரான அல்லசானி பெத்தன்னாதான் இயற்றியது என்ற கருத்து சமீப காலமாக உலவிக் கொண்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ண தேவராயர் மறைந்து நூற்றி ஐம்பது ஆண்டு காலங்கள் கடந்து விட்டதால் இப்படிச் சில குழப்பமான விவாதங்கள் எழுகின்றன."

"அதற்கு ஆதாரங்கள் இல்லாமல் இல்லையே! விஜய நகரத்தில் எனக்குச் சில சாடுவுகள் கிடைத்தன."

"தமிழில் அதற்குத் தனிப்பாடல்கள் என்று சொல்கிறார்கள்."

"அந்தச் சாடுவில் என்ன சொல்கிறது?"

"அல்லசானி பெத்தன்னாவைப் புகழ்ந்து ஒரு பாடல் 'கிருஷ்ணராயல பேரிடி நீவு ரசியின் சிதிவி தொல்த விஷ்ணு சித்தியமு" என்று கூறுகிறது. அதாவது கிருஷ்ண தேவராயரின் பெயரை வைத்து முதன் முதலில் 'விஷ்ணு சித்தியமு' என்ற நூலை நீ எழுதினாய் என்று சொல்கிறது. உங்களுக்குத்தான் நன்றாகத் தெரியுமே ஆமுக்த மால்யதவிற்கு விஷ்ணு சித்தியமு என்ற மற்றொரு பெயர் இருக்கிறது என்று. அது மட்டுமில்லை அன்னையே, தெனாலி ராமகிருஷ்ணர் எழுதிய மற்றொரு சாடுவு. அதனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?"

"நீயே சொல் மகனே!"

"கடினமான நடையினால் ஸ்ரீநாதகவி நைடதம் எழுதிக் கொடுத்தார். அதற்கு அப்பனாக அல்லசானி பெத்தன்னா முதுமையால் அறிவு மழுங்கி, 'ஆமுக்த மால்யத'வை இயற்றினார். புரிந்து கொள்ள முடியாத வகையில் மயக்கத்தைத் தரும் வண்ணம் பிங்களி சூரன்னா 'களாபூர்ணோதயம்' இயற்றினார். சிலேடையுடன் கூடிய சொற் சிலம்பாட்டத்தில் மூர்த்தி கவியாகிய ராமராஜ பூஷணர் 'வசுசரித்திரம்' எழுதினார். இப்படிக் கவிஞர்களின் வாயடைக்கும் வண்ணம் எனது புதுமையான முறையில் 'பாண்டுரங்க விஜயம்' எனும் நூலை வைணவ சமயத்தினனான ராமகிருஷ்ண கவியாகிய நான் இயற்றினேன்" என்று விஸ்தாரமாக தெனாலிராமன் விளக்குகிறார். இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது ஆமுக்த மால்யதவை அல்லசானி பெத்தன்னாதான் இயற்றி இருப்பாரோ என்ற ஐயம் எனக்குள் எழுகிறது அன்னையே! ஆண்டுகள் பல கடந்த பின்னர் விஜய

நகரப் பேரரசருக்குச் சிறப்புச் சேர்க்க வேண்டும் என்பதற்காகச் சிலர் பெயரை மாற்றி எழுதி இருக்கலாமோ என்று கூடத் தோன்றுகிறது."

"இதற்கு ஆதாரங்கள் இவ்வளவுதான் உன்னிடம் இருக்கிறதா மைந்தா?" என்று பரிவுடன் கேட்டாள் ரங்காஜம்மா.

தான் பெற்ற குழந்தை தான் முதன் முதலாகப் பார்க்கும் விஷயங்களைப் பற்றித் தாயிடம் துருவித் துருவிக் கேட்கும்பொழுது அந்தத் தாய்க்கு ஏற்படும் குதூகலத்தைப் போல, மன்னார்தாசனின் கேள்விகள் அவளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

மதுரவாணியோ வேறுசில உணர்ச்சிகளுக்கு உட்பட்டு மனதிற்குள் மறுகிக் கொண்டிருந்தாள்.

நான் அவ்வளவு தூரம் கெஞ்சிக் கேட்ட பிறகும் என்னிடம் பதில் சொல்வதற்கு எதற்கு அவ்வளவு தயங்குகிறார்? என்னைப் பார்ப்பதற்காக, என்னுடன் பேசுவதற்காகவாவது நீங்கள் இங்கு இருக்க வேண்டும் என்று மறைமுகமாகச் சொன்ன பிறகு கூட, ரங்காஜம்மா வந்தவுடன் கிளம்புகிறேன் என்று எழுந்தாரே, ஏன்?

என்னை அவருக்குப் பிடிக்கவில்லையா? என் மேல் அவருக்குக் காதல் இல்லையா? என்னைப் பார்ப்பதற்கு அவருக்கு வெறுப்பாக இருக்கிறதா? என்னுடன் பேசுவதற்கு மனம் ஒப்பவில்லையா? நான் அவ்வளவு அழகற்றவளாக இருக்கிறேனா?

மதுரவாணியின் மனம் உள்ளுக்குள் அழுது புலம்பி யதை வெளிக்காட்டாது, மன்னார்தாசனும் ரங்கா ஜம்மாவும் பேசுவதைத் தொடர்ந்து கேட்டுக் கொண் டிருந்தாள்.

அதே நேரம தஞ்சை மன்னன் விஜயராகவ நாயக் கன் தனது அரண்மனைக்குள் அமைந்திருந்த பொக்கிஷ அறைக்குள் புகுந்தான். அவனுடன் தளவாய் ரங்கப்ப நாயக்கனும் உடன் சென்றிருந்தான்.

"இறைப்பணிக்கு என்று ஒரு பகுதியை ஒதுக்கி வைத்திருந்தேனே அது எங்கிருக்கிறது ரங்கப்பா?" என்றான் தளவாயைப் பார்த்து.

"இதே ஈசான மூலையில் பதினாறு பெட்டிகள் இருக்கின்றனவே. இவைதான்" என்று தளவாய் காட்டி னான்.

"அவற்றைத் திறந்து பதினாயிரம் பொற் காசுகளை எடுத்து ராஜகோபால சுவாமி கோயிலுக்கு அனுப்பி விடு. நாளை அன்னதானத்திற்கு அனுப்புவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன்."

"இவற்றுக்கான திறவு கோல்களை இளவரசர்தான் வைத்திருக்கிறார் மன்னவா!"

"அப்படியா? உடனே நீ மன்னார்தாசனிடம் சென்று அவற்றை வாங்கிக் கொண்டு வா. மிக அவசரம்" இப்பொழுதே அனுப்ப வேண்டும்."

"இளவரசர் அந்தப்புரத்தில் இருக்கிறாரா?"

விஜயராகவ நாயக்கன் சற்று யோசித்து விட்டு, இந்நேரம் அங்கு இருக்கமாட்டான். தெலுங்கு இலக்கியம் பற்றி கற்றுக் கொள்வதற்காகப் பவழ வீதியில் உள்ள ரங்காஜம்மா வீட்டிற்குச் சென்றிருப்பான். நீ உடனே சென்று அவனைக் கையோடு அழைத்து வா."

தளவாய் ரங்கப்ப நாயக்கன் மறுவினாடியே குதிரையில் ஏறினான்.



சந்திரவதனா

1

எஸ்.பாலசுப்பிரமணியன்